தாய்வீடு

THAIVEEDU SEPTEMBER 2020 செப்ரெம்பர் HOME & LIVING One Dollar www.thaiveedu.com info@thaiveedu.com

ISSN 2369-3657

• வீடு • வாழ்வியல் • சமூகம் • இலக்கியம்

தாய்வீடு

THAIVEEDU SEPTEMBER 2020 செப்ரெம்பர் HOME & LIVING One Dollar www.thaiveedu.com info@thaiveedu.com



NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success
500+ Agents
VettyvelLaw
Selva Vettyvel
Broker of Record
Rishani Vettyvel
BARRISTER & SOLICITOR
Real Estate Law
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
416.261.1544

AEREN Thiyagarajah BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
suren@bonafidemortgage.ca,
Office. 416-548-7475 Fax: 416-548-7496
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...
Thana Yoganathan
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC. BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 456
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX Royal Properties Realty Ltd.,
Brokerage
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
PYRAMID GROUP

மீளுருக் கொள்கிறதா உயிரியற் போர்?

பல நூற்றாண்டுகளாகவே பல வடிவங்களில் உயிரியற் போர் இவ்வுலகில் நிகழ்ந்து வருகின்றது. நுண்மி, நுண்ணுயிரிகள் மூலம் நோய்களைப் பரப்பி மேற்கொள்ளப்படும் போர்களைப் போலவே தாவரங்களும் இவ்வாறான போர்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றனவா? என்ற வினா இப்போது எழத் தொடங்கியுள்ளது.

ஐரோப்பியர் கீழைத்தேய நாடுகளைக் கைப்பற்றிய போது, அந்நாடுகளில் வாழ்ந்த தேசிய இனங்களின் உணவுத் தாவரங்களின் ஒழுங்கமைவான இயங்குநிலையை மாற்றினர். தமது வணிகநலன் கருதிப் பணப்பயிர்களை அறிமுகப்படுத்தினர். இவையும் ஒரு வகையில் தாவர இயற்கைச் சமநிலைக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலே.

நீரைப் பெருவாரியாக உறிஞ்சும் கருவேல மரங்களின் வித்துக்கள் மைய அரசின் பரிந்துரையின் கீழ் தமிழ்நாடு எங்கும் விமானங்களிலிருந்து வீசப்பட்டமையும் ஈழம் வந்த இந்திய இராணுவம், பூர்வீகத் தாவர இனங்களின் சமநிலையைக் குலைக்கும் பார்த்தீனியம் செடியைத் தமிழர் பகுதிகளில் தெரிந்தோ தெரியாமலோ பரப்பியமையும் மக்களின் வாழ்வாதார ஒழுங்கில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின.

கடந்த இரு மாதங்களுக்கு மேலாக, பெரும்பாலும் சீனாவிலிருந்து அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய நாடுகளுக்கு கண்டறியப்பட முடியாதவர்களால் அனுப்பப்படும் விபரங்கள் ஏதுமற்ற மர்ம விதைகள் பற்றிய செய்திகள் உலக ஊடகங்களில் முதன்மை பெற்றுள்ளன.

அமெரிக்காவில் ஏறக்குறைய முப்பது மாநிலங்களில் உள்ளோர் இவ்வாறான விதைகளைப் பெற்றுள்ளனர். ஓகஸ்ட் முதல் வாரம் வரையில் கனடாவில் மட்டும் 750க்கு மேற்பட்டோருக்கு விதைகள் அனுப்பப்பட்டுள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் இவை அனுப்பப்பட்டுள்ளன. இந்த விதைகள் பற்றிய விபரங்களைத் தரும் போலி இணையத்தளங்களில் உள்ள பொய்யான பின்னூட்டங்கள், விதைகளை விதைக்க மக்களைத் தூண்டுகின்றன.

இவை யாரால் அனுப்பப்படுகின்றன என்பது ஒரு புறமிருக்க, இவ்வாறான விதைகள் ஏற்படுத்தும் பாதிப்புகள் குறித்தே பொதுமக்களாகிய நாம் அதிக அக்கறை கொள்ள வேண்டியிருக்கின்றது.

ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டின் நிலவமைவுகளுக்கும் பருவகாலங்களும் ஏற்ப இயற்கையே சிறந்த தாவரங்களைப் படைத்திருக்கின்றது. அந்த மண்ணிலே வாழும் உயிர்களுக்கும் அந்தத் தாவரங்களே உணவும் மருந்தும் ஆகின்றன.

இவ்வாறான தாவரங்களிடையே அந்தச் சூழலுக்குப் பொருத்தமற்ற ஆக்கிரமிப்புத் தாவரங்கள் வளருமானால், அவை பூர்வீகத் தாவரங்களின் இருப்பைச் சீர்குலைத்துவிடும். இவ்வாறான மர்மத் தாவரங்கள் இனம் தெரியாத நோய் பரப்பும் நுண்மிகளையும் உருவாக்கக் கூடும். இத்தாவரங்களை உண்ண முயலும் மனிதர்களும் கால்நடைகளும் நோய்களுக்கும் உள்ளாகக் கூடும்.

பொதுவாக ஒரு நிலத்துக்கே உரித்தான தாவர இயற்கைச் சமநிலையைச் சீர்குலைக்கவே இவ்வாறான விதைகள் அனுப்பப்படுகின்றன என்றே அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவு தெரிவிக்கின்றது.

இது தொடர்பில் மிக முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டியவர்கள் பொதுமக்களே. தெரிந்தோ தெரியாமலோ உலகம் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் புதிய போர்க்களங்களை நோக்கி நகர்வதாகவே தெரிகின்றது. கோவிட் 19 தொற்றின் பாரிய தாக்கம் இதற்குப் பெரிய சான்று.

அரசுகள் பொதுமக்களைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டாலும் இந்தப் போர்க்களங்களைத் திட்டமிடுவதும் நிகழ்த்துவதும் அரசுகளாகவே இருக்கின்றன. நாம் எம்மையும் பாதுகாத்துக் கொண்டு, மற்றவர்களையும் வழி நடத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். இது ஓர் உலகளாவிய அச்சுறுத்தல் என்பதை மனதில் கொள்வோம்.

■ ■ ■

முகப்பில்: ஓவியர் ஆசை இராசையா

Publisher & Editor : PJ. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜெ. டிலிப்குமார்

நிறுவன வரைகலைஞர் : கருணா

ஆலோசகர் குழு : அருண்மொழிவர்மன், சேரன், துஷி ஞானப்பிரகாசம், ஞானம் லெம்பட், கந்தசாமி கங்காதரன், பொன்னையா விவேகானந்தன், ரவிச்சந்திரிகா.

ஓவியங்கள் : ஆசை இராசையா (இலங்கை), டிராட்ஸ்கி மருது (இந்தியா), ஜீவா (இந்தியா), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), ரமணி (இலங்கை), சௌந்தர் (இங்கிலாந்து), றஷ்மி (இங்கிலாந்து). எஸ். தர்மதாஸ் - செல்வன் (இலங்கை),

புகைப்படங்கள் : K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), சர்வேசன், துசியந்தன் துரைரத்தினம்.

தட்டச்சு : சாம் டானியல்.

ஒப்புநோக்கல் : கௌரி, கந்தசாமி கங்காதரன்.

பொது உறவுத் தொடர்பு : குமணன் தம்பிஐயா

ரொறன்ரோ விநியோகம் : இராமநாதன் ரூபன், சசி, மெய்யழகன்.

மொன்றியால் தொடர்பு : சுகுமாரன் சின்னையா.

ஒட்டாவா தொடர்பு : அலெக்ஸ் சிவசம்பு: 1-613 -276-7253

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Tel : 416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

Printed on recycled paper

ஈழத்தின் பெருமைமிகு ஓவிய ஆளுமைகளுள் ஒருவரான ஆசை இராசையா நிரந்தர ஓய்வு தேடிப் போய்விட்டார்.

கமலா ஹாரிஸ்: அடுத்த அமெரிக்கத் துணை ஜனாதிபதி?

- கந்தசாமி கங்காதரன்

கமலா ஹாரிஸ் அமெரிக்கத் துணை ஜனாதிபதியாகும் முதலாவது பெண் ஆவாரா?

அகிலத்தை ஆட்டிப் படைக்கின்ற ஆதிக்கவாதம்!

- மா. சித்திவிநாயகம்

இன, மத, மொழி வன்முறைகளால் பாதிப்புற்றுத் தவிக்கும் பொதுமக்கள்.

உலகளாவிய தொழில்நுட்பத் தரங்களில் சீனாவின் நிலை?

- பொன். பாலராஜன்

தொழில்நுட்பப் போட்டிக்குள் சிக்குண்டு நிற்கும் வல்லரசுகள்.

அ. முத்துலிங்கத்தின் சிறுகதைகள் மீதான விமர்சன நோக்கு...

- அ. ரொனிராஜன்

எழுத்தாளர் அ. முத்துலிங்கத்தின் சிறுகதைகள் மீதான விமர்சனப் பார்வை.

வண்ணத் தூரிகை - ஆசை இராசையா 4
டிலிப்குமார்

அன்பிற்கினிய தூரிகை 5
டிராட்ஸ்கி மருது

தமிழீழ ஓவிய ஆளுமை ஆசை இராசையா 6
ஓவியர் புகழேந்தி

ஆளுமை மிகுந்த கலைஞர் ஆசை இராசையா 7
தெளிவத்தை ஜோசப்

இலங்கையில் புதிய ஆட்சியும் மாறாத பழைய மாற்றமும் 9
அ. கணபதிப்பிள்ளை

மாறிவரும் தேர்தல் கலாச்சாரம்: சில அவதானிப்புகள் 11
கண்ணன் ராஜ்

பண்பாட்டு அரசியல் / அரசியல் செயல்வாதம் 13
கிரிசாந்

மண்டியிட்டது அமெரிக்கா? 16
குகன் சங்கரப்பிள்ளை

மற்றுமோர் அலை! மாற்றமுடியுமா? 23
போல் ஜோசேப்

இந்தியாவில் புதிய தேசிய கல்விக் கொள்கை 25
நெல்லை ஜெயசிங்

முறையில் கல்வி 26
த. சிவபாலு

கற்பித்தலும் ஆசிரியர் வழிகாட்டியும் - இலங்கை 29
நா. கிருஷ்ணகுமார்

வளி கழிதல் 31
பாதுசா ஆனந்தநடராசா

குவலயம் ஆளும் குடிசார் பொறியியல் 34
அகணி சுரேஸ்

மேலும் ஆக்க விபரங்கள் 9ம் பக்கம்

Funded by the Government of Canada | Canada

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

வண்ணத் தூரிகை - ஆசை இராசையா

- டிலிப்குமார் -

ஓகஸ்ட் 29. காலையில் கண் விழித்தபோது காத்திருந்தது ஓவியர் ஆசை இராசையா அவர்களின் மறைவுச் செய்தி. கடந்த சில வாரங்களாக அவர் உடல் நலக்குறைவுற்று இருக்கின்றார் என்பதை அறிந்திருந்த போதும், இச்செய்தியை ஏற்றுக்கொள்ள மனம் மறுத்தது.

தாய்வீடு இதழில் வெளிவரும் பல படைப்புகளுக்கும் பொருத்தமுற ஓவியங்களை வரைவது வழமை. அவ்வாறான ஓவியங்களை வரைவதற்கு நாம் ஆசை இராசையா அவர்களை அணுகிய போது மனமுவந்து எமது கோரிக்கையை ஏற்றார். புகழ் பூத்த ஓவியர்களில் ஒருவரான ஆசை இராசையாவின் ஓவியங்களால் தாய்வீடு இதழ் பெருமையுற்றது.

ஈழத்தமிழரிடையே தோன்றிய அற்புதமான ஓவியப் படைப்பாளி ஆசை இராசையா. தூரிகை வழியே அன்றாட மக்களின் வாழ்வை வண்ணங்களாக இயல்பாய் வெளிக் கொணர்ந்தவர். ஓவியத்துறையை வணிக மாகக் கருதமால் கலையாகவே இறுதிவரை போற்றியவர். கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக தாய்வீடு இதழோடு இணைந்து பயணித்த நல்ல பண்பாளர். இவருடைய இழப்பு ஈழத்து ஓவியத்துறையில் பெரியதொரு வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

மாதந்தோறும் பல தடவை உரையாடுவோம். வார்த்தைகளுக்கு வலிக்காமல் பேசுகின்ற ஒரு குரல் இனி இல்லையே என நினைக்கும் போது உணர்வுகள் வலிக்கின்றன.

ஆசை இராசையா என்ற தலைசிறந்த ஓவியர் குறித்துப் பலரும் அறிந்திருந்தாலும் அவர் சார்ந்த பல ஆழமான பரப்புகளைப் பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இச் சிறிய கட்டுரையின் வழியே அவருடைய வாழ்வையும் நினைவுகளையும் தாய் வீடு பதிவு செய்து கொள்ள முனைகின்றது.

1946ம் ஆண்டு அச்சுவேலியில் பிறந்த ஆசை இராசையா அவர்கள், அச்சுவேலி மத்திய கல்லூரியில் கல்வி பயன்றார். ஓவியத்தையும் வடிவமைப்புக்கலையையும் ஒரு பாடமாகக் கொண்டிருந்தார். வடிவமைப்புக்கலையில் அதிக புள்ளிகள் கிடைத்ததனால் அதையே மேற்கொண்டு பயிலுமாறு பலர் கூறிய போதும் அவர் ஓவியம் பயிலவே விரும்பியிருந்தார்.

பொதுவாகவே யாழ்ப்பாணச் சமூகம் பொருளாதாரப் பயன் விளைவிக்காத கல்வித்துறைகளில் பிள்ளைகளை ஈடுபடுத்த விரும்புவதில்லை. வடக்கில் மேற்படிப்புக்கான (ஆடல், இசை தவிர்ந்த) கலைத் துறைகள் இன்றுவரை செல்வாக்குப் பெறாமைக்கு இதுவே காரணம்.

ஓவியத்தின் மேல் தீராக்காதல் கொண்ட ஆசை இராசையா, வீட்டாரின் எதிர்ப்பையும் மீறி, கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் (College of Art and Craft) இணைந்து 1966 தொடக்கம் 1969 வரை பயின்றார். அங்கு ஓவியத்தின் பல நுட்பங்களை தான் அறிந்ததாக அவர் குறிப்பிட்டாலும் கொழும்பு கலாபவனத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஓவியங்களைப் பார்த்து கற்றுக் கொண்டதே அதிகமென அவர் குறிப்பிட்டிருக்கின்றார். இலங்கையிலுள்ள முக்கிய மான கலைஞர்களின் படைப்புக்கள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டன.

அவர் குறிப்பிடும் மற்றுமொரு நிகழ்வு சுவையானது. நுண்கலைக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு ஓவியம் பயின்று கொண்டிருந்த வேளை தேசிய மட்டத்தில் நடைபெற்ற ஓவியப் போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசைப் பெற்றார். இதைத் தன் வாழ்வின் மகிழ்வான தருணம் எனக் குறிப்பிடும் அவர், தனக்கு முதற் பரிசு என அறிவிக்கப்பட்டபோதும், தனக்கு பரிசு வழங்கப்படவில்லை என ஆதங்கத்துடன் குறிப்பிடுகின்றார். ஓவியம் நிலைக்குத்தாக வரைய வேண்டும் என்ற விதியைக் கண்டு கொள்ளாமல் அவர் கிடைப்பாங்காக அதை வரைந்திருந்தார். இதனால் அந்தப் பரிசு கிடைக்காது போயிற்று.

எனினும், பாராட்டுப் பெற்ற அந்த ஓவியத்தின் சிறப்பைக் கருத்திற் கொண்டு, நடுவர்கள் இந்த ஓவியத்தை இலங்கை அரசு 1969இல் வெளியிட்ட நாட்காட்டியில் இடம்பெறச் செய்திருந்தனர். இதை ஓவிய ஆளுமைக்குக் கிடைத்த முதல் அங்கீகார மென ஆசை இராசையா குறிப்பிடுகின்றார்.

ஓவியக் கல்வியை நிறைவு செய்து, ஓர் ஓவிய ஆசிரியராகவே தன் பணியை அவர் ஆரம்பித்தார். வேலணை மத்திய கல்லூரியிலேயே இவருடைய ஆசிரியப் பணி தொடங்கியது. தொடர்ந்து பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்ற பின் இவருக்கு 1975இல் கொழும்பு றோயல் கல்லூரியில் ஓவிய ஆசிரியர் நியமனம் கிடைத்தது. அந்த நியமனம் குறித்து ஒரு செவ்வியில் ஆசை இராசையா கீழ் வருமாறு குறிப்பிடுகின்றார்.

'பலாலி ஆசிரியர் கலாசாலை பயிற்சி நிறைவில் நான் கொழும்பு றோயல் கல்லூரியில் ஓவிய ஆசிரியராகப் பணிக்கப்பட்டிருந்தேன். அது இலங்கையில் மிகப் பெரிய கல்லூரி. (1983ம் ஆண்டு இக்கலூரியின் மாணவர் தொகை 8,000. ஆசிரியர் தொகை 350.) அந்தக் கல்லூரி வளாகத்தில் கால் எடுத்து வைக்கவே உதறல் எடுக்கும். இக் கல்லூரியில் வாய்ப்புக் கிட்டியதே அதிர்ஷ்டம் என்று பலரும் வற்புறுத்தியதன் நிமித்தம், வேண்டா வெறுப்பாக ஏற்றுக் கொண்டேன். அங்கே சிரித்த முகத்துடன் என்னை வரவேற்றார் அநு.வை. நாகராஜன். பின்புதான் தெரிந்துகொண்டேன் அவர்தான் நான் அக்கல்லூரிக்கு ஆசிரியப்பணிக்கு வரக் காரணமானவரென்று'.

பின்னாட்களில் அநு.வை. நாகராஜன் எழுதிய காட்டில் ஒரு வாரம் என்ற நூலுக்கான ஓவியங்களை இவரே வரைந்திருந்தார்.

ஆசை இராசையா அவர்கள், 1983 இனவழிப்பு நடைபெறும்வரை றோயல் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். அதன்

பின்னர் ஊருக்குத் திரும்பிய அவர் அங்கேயே தங்கிவிட்டார். பின்னர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சித்திரமும் வடிவமைப்பும் என்ற துறையில் வருகைதரு விரிவுரையாளராகப் பணிபுரிந்தார்.



ஓவியம் சார்ந்து இவர் ஆற்றிய பணிகள் பல. நிலவுருக்கள், மெய்யுருக்களை (Portrait) வரையும் ஓவியராகப் புகழ் பெற்று விளங்கினார். Sketch என்று கூறப்படும் கோட்டோவியத்திலும் கை தேர்ந்தவராகத் திகழ்ந்தார். தைல வர்ணம், நீர் வர்ணம், பஸ்டல் என ஓவியக் கலைக்குரிய எவ்வூடகத்தையும் நேர்த்தியாகக் கையாளும் ஆளுமை இவருக்கு உண்டு. நிலக்காட்சி ஓவியங்களை வரைவதில் தனித்துவம் பெற்றுத் திகழ்ந்தார். அச்சுவேலிப் பிரதேசத்தின் இயற்கை அழகு, வல்லைப் பிரதேசக் நீரோடைக் காட்சிகள், பனைகளும் தாழமரப் பற்றைகளும் நிரம்பிய காட்சிகள் என இளமையில் தான் கண்டுணர்ந்த ஊரின் அழகை நிலக்காட்சி ஓவியங்களாக வரைந்து பெரும் புகழ் பெற்றிருந்தார்.

இவர் வரைந்த ஓவியங்கள் இலட்ச ரூபாய்க்கு மேலும் விலைப்பட்டிருந்தன என்பதை இங்கு சுட்டிக் காட்டுதல் வேண்டும். கொழும்பில் உள்ள தணியார் நிறுவனம் ஒன்று இவருடைய இரு ஓவியங்களை ஏறக்குறைய ஆறு இலட்ச ரூபாய்க்கு விற்றிருக்கின்றது.

இவர் வரைந்த மெய்யுரு ஓவியங்கள் பல மிகவும் புகழ் பெற்றவை. யாழ். பல்கலைக் கழகத்தில் உள்ள பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் மகேஸ்வரன் ஆகியோரின் மெய்யுருக்களும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உள்ள பசுபதிச் செட்டியார், நாகலிங்கச் செட்டியார் மற்றும் இந்துக் கல்லூரியின் அதிபர்களது மெய்யுருக்களும் இவரது கைவண்ணத்தில் உருவானவை என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் ஓவியராக மட்டுமன்றி, நூல் வடிவமைப்பாளராகவும் திகழ்ந்துள்ளார். நூற்றுக்கு மேற்பட்ட நூல்களுக்கு அட்டை ஓவியங்களும் வரைந்துள்ளார்.

இலங்கை அரசின் முத்திரைப் பணியகத்தில் முத்திரைகளை வடிவமைக்கும் ஓவியர்கள் குழுவில் ஆசை இராசையா அவர்களும் இணைந்திருந்தார் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

ஓவியத்துறை சார்ந்து இவர் பெற்ற விருதுகள் பல. கலைஞானச் சுடர் விருது, வடமாகாண ஆளுநர் விருது, கலாபூஷணம் விருது, கொழும்புத் தமிழ்ச் சங்க விருது, ஞானம் சஞ்சிகை விருது, ஓவியர் கிக்கோ தமிழியல் விருது, கலைஞானபூரணன் விருது, அச்சூர்க்குரிசில் விருது போன்ற சில விருதுகளைக் குறிப்பிடலாம்.

கலைஞராக வாழ்வோர் மூட நம்பிக்கைகளற்ற பகுத்தறிவு கொண்டவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு இருப்பவர்களாலேயே புதுமையும் ஆழப்பொருளும் மிக்க படைப்புகளை உருவாக்க முடியும் என்பதை வலிமையாக ஏற்றுக் கொண்டு அதன் வழியே வாழ்ந்தவர் ஆசை இராசையா அவர்கள்.

ஒரு கலைஞர் எப்படி இருக்க வேண்டும் என்பதை அவரே ஒரு செவ்வியில் குறிப்பிடுகின்றார்.

'உண்மையான கலைஞன் பகுத்திறவு வாதியாகவும். படைப்பாற்றல் உள்ளவனாகவும் இருக்க வேண்டும். குருவிடம் கற்றதை அப்படியே ஒப்பேற்றுவது ஒரு கலைஞனுடைய பணியல்ல. குருவிடம் கற்ற அடிப்படைக் கற்றலிலிருந்து புதிய கோணத்தில் சிந்தித்துப் படைக்க முற்படுபவன் எவனோ அவனே உண்மையான கலைஞன் என்று சொல்லத் தக்கவன்'.

இந்த வரைவிலக்கணத்துக்கு முற்றிலும் பொருந்தி வாழ்ந்தவர் திரு. ஆசை இராசையா அவர்கள் என்பதனால்த்தான் இக் கூற்றை அவரால் அழுத்தம் திருத்தமாகக் கூற முடிந்திருக்கின்றது.

திரு. ஆசை இராசையா அவர்களின் ஓவியங்களும் வாழ்வும் நமக்கு பல பாடங்களைக் கற்பித்து நிற்கின்றன. இறப்பால் அழிக்கமுடியாத கலைஞர் அவர்.

ஆசை இராசையா அவர்களின் இழப்பு தாய்வீடு இதழையும் கடுமையாகவே பாதித்திருக்கின்றது. கடந்த காலங்களில் அவரோடு கை கோர்த்து நடந்த தடங்களை தாய்வீடு பெருமையுடன் எண்ணிப்பார்க்கின்றது.

dilipkumar@thaiveedu.com

அன்பிற்கினிய தூரிகை

- ட்ராட்ஸ்கி மருது -

மானுடத்தின் ஒன்றுகூடல்' நிகழ்விற்கு ஈழத்திற்குச் சென்றிருந்தபோதுதான் நண்பர்கள் பேச்சின் ஊடாக ஓவியர் திரு. ஆசை இராசய்யா அவர்களை அறிய முடிந்தது.

பின்னர் அவரது ஓவியங்களைக் காணும் வாய்ப்பு ஏற்பட்டபோது, இயற்கையை வரைவதில் அவர் கொண்டிருந்த ஈடுபாடு என்னை வியக்க வைத்தது. தொடர்ந்து அவரது ஓவியங்களைப் பார்வையிட, அவர் மீதான மதிப்பும் எனக்கு இயல்பாகவே கூடியதுடன் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு கூடவேண்டும் என்று ஆர்வமும் ஏற்பட்டது.

நான் மூன்றாவது முறையாக 2015ல் திரைப்படத்துறை நண்பர் கவிதா பாரதி யுடன் யாழ்பாணம் சென்ற போது அந்த வாய்ப்புக் கிட்டியது. அந்தச் சந்திப்பு அவர் மீதான என் மதிப்பை அதிகரித்தது என்றே கூற வேண்டும்.

நான் ஏற்கனவே அவரது சில Portrait சித்திரங்களைக் கண்டிருந்ததுடன், நல்ல ஆற்றல் மிக்க ஓவியக் கலைஞராக அவர் இலங்கையில் இயங்கிக் கொண்டிருப்பவர் என்பது எனக்குத் தெரிந்திருந்ததால் அந்தச் சந்திப்பு அற்புதமாக அமைந்தது.

அவர் அங்கு பெரும் மதிப்பு பெற்ற ஆசிரியராக இருந்திருக்கிறார். 1983இல் கொழும்பில் தமிழர் கொல்லப்பட்டும் அகதிகளாயும் விரட்டப்பட்டபோது தப்பிப் பிழைத்து மீண்டும் யாழ்ப்பாணம் சென்ற டைந்தவர் தொழில் கருதி கொழும்புக்குத் திரும்பவில்லை. அவ்வேளை அவருக்குப் பொருளாதார நெருக்கடிகளும் இருந்திருக் கின்றன.

போர்ச் சூழலும் கால ஓட்டங்களும் சாதக மாக இல்லாத நிலையில் அவர் கற்றுத் தேர்ந்த கலை வாழ்வாதாரத்துக்கும் கலை வெளிப்பாட்டுக்கும் களம் கொடுக்க வில்லை.

நான் சந்தித்தபோதும் பின்னர் தொடர்ந்து என்னோடு தொலைபேசியில் உரையாடி வந்த காலங்களிலும் அவர் பேச்சில், அவர் இயங்கி வந்த கலைவெளி பற்றிய ஆழ மான புரிதலையும், குழப்பம் சிறிதுமற்ற தெளிவையும் காணக்கூடியதாக இருக்கும்.

சாதாரணமாகவே தமிழர்களுக்குக் காண் பியல் வெளியில் பெரும் பார்வையும் அதன் சிறப்பு பற்றிய புரிதலும் மிகக் குறைவு என்று நான் தொடர்ந்து கூறி வருகிறேன். ஆசை இராசையா அவர் களுக்குக் கிடைக்க வேண்டிய உயர்வும் சிறப்பும் வாழும்போது அவருக்கு முழுமை

கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் முறை யாக ஓவியம் கற்றவர் என்றும் பின்பு கொழும்பு றோயல் கல்லூரியில் ஓவியம் கற்பிக்கும் ஆசிரியராகவும் இருந்தார் என்றும் அறிந்தேன்.

யாகக் கிடைக்கவில்லை என்பதில் எனக்கு பெரும் மனவருத்தம் உள்ளது.

தமிழ் சமூகம் காண்பியல் வழிகளினூடாக உலகைத் தொடர்பு கொள்வதில் தங்கள் பார்வையை ஆழமாக விரிவுபடுத்த வேண் டும் என்பது என் வலிமையான கருத்து. வாழும் காலத்திலேயே வாழும் கலை ஞர்களைக் கொண்டாடி, அவர்களுடைய படைப்புகளைப் பாதுகாப்பதோடு, அவற் றைத் தொடர்ந்து காட்சிப்படுத்த வேண்டி

யதும் தமிழ் சமூகத்தின் கடமையாகும். இது வாழ்வியலை ஆவணப்படுத்தும் உயரிய சமூகப் பணிகளில் ஒன்று என் பதை அனைவரும் உணர வேண்டும்.

ஆசை இராசையா அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே அவரது ஓவியங்கள் பல தொகுக்கப்பட்டு நூலாக்கப்பட்டிருக்கின்றது என்பது குறைந்தபட்ச மன ஆறுதலைத் தருகின்றது. தொடர்ந்து அவருடைய ஓவியங்கள் பாதுகாக்கப்படுவதுடன், அவற் றின் மதிப்பீட்டுக்கமைய அவற்றை வாங்கு வோர் அல்லது பயன்படுத்துவோர் வழியே வரக்கூடிய வருவாய் அவருடைய குடும்பத் துக்குச் சென்று சேர வழிவகை செய்ய வேண்டும். ஒரு கட்டத்தில் ஓய்வூயத்தைப் பெறுவதற்கான வழியின்றியும் சிரமப்பட்டி ருக்கின்றார் என்று அறிகின்றோம்.

அவர், தான் வாழ்ந்த காலத்தில் கண்டு ணர்ந்த தமிழர் வாழ்பகுதிகளை நிலக் காட்சிகளாகத் (Landscapes) தீட்டிய ஓவியங் கள் யாழ்ப்பாணத் தமிழர் வாழ்வியலின் பெரும் சாட்சிகளாகத் திகழ்கின்றன. சக மனிதர்களை அவர் பிரியத்தோடு மெய் யுருக்களாகப் (Portrait) பதிவு செய்திருக் கின்றார். இலங்கை அரசு வெளியிட்ட தபால் தலைகளில் பல ஓவியங்களை வரைந்திருக்கின்றார். ஓர் ஓவியர் என்பதற்கு அப்பால் நல்ல வடிவமைப்பாளராகவும் திகழ்ந்திருக்கின்றார். இவை யாவும் என் மனதில் நிழலாடிக் கொண்டிருக்கின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக அவரது சமன் பட்ட அமைதியைச் சொல்லும் நிலக்காட்சி களுக்கு நடுவில், அவர் வரைந்த சுய சித்திரம் கூர்மையுடனும் தீர்க்கத்துடனும் கொண்ட எளிய வாழ்வின் வழியே எதிர் நிற்கிற தமிழரைத் தொடர்ந்து வினாக் களைக் கேட்டுக் கொண்டேயிருக்கும்.

அவர் வாழ்ந்த காலத்தில் ஓர் ஓவியப் பார்வையின் சாட்சியாக வாழ்ந்திருக்கின் றார். அது ஏற்படுத்திய துயருக்கும் அவரே சாட்சியாகவும் அறியப்படுவார்.

எனது இனிய நண்பர் இனி என் அருகே இல்லை. எனினும் அவருடைய சித்திரங் களே அவர்
இருப்பைச் சொல்லும்

trotskymarudu@thaiveedu.com



தமிழீழ ஓவிய ஆளுமை ஆசை இராசையா

- ஓவியர் புகழேந்தி -

தமிழீழத்தில் 2005ஆம் ஆண்டு என்னுடைய 'புயலின் நிறங்கள்' ஓவியக் காட்சி நடத்துவதற்காக சென்றபோது, தலைவர் அண்ணன் பிரபாகரன் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சு.ப. தமிழ்ச்செல்வன் முயற்சியால் தமிழீழ நுண்கலைக் கல்லூரிப் பொறுப்பாளர் கண்ணதாசன் அவர்கள், என்னுடனான ஓவியர்கள் சந்திப்பு ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஓவியர்கள் ஆ.இராசையா, இரமணி எழுத்தாளர் ந.சத்தியபாலன் முல்லைத்தீவிலிருந்து ஓவியர் இராசன் ஆகியோரும் வந்திருந்தனர். அன்றுதான் ஓவியர் ஆசை இராசையா அவர்களை முதன் முதலில் சந்தித்தேன்.

கிளிநொச்சி சமாதான செயலகத்தில் அச்சந்திப்பு நடைபெற்றது. அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையில் அச்சந்திப்பு நடைபெற்றது. நீண்ட நேரம் நடைபெற்ற அச்சந்திப்பில் தமிழீழத்தில் ஓவியக் கலை வளர்ச்சிக்கு என்ன செய்வது, ஓவியர்களுடைய வாழ்க்கை நிலை எவ்வாறு உள்ளது, ஓவியக் கலையில் ஆர்வமும் ஈடுபாடும் உள்ளவர்களுக்கு எந்த வகையில் நம்மால் உதவ முடியும், ஓவியர்களின் வாழ்வாதாரத்தை எவ்வாறு மேம்படுத்த முடியும் என பல நிலைகளில் கலந்துரையாடல் அமைந்தது.

திரு ஆ.இராசையா அவர்கள் அவருடன் அவருடைய சில ஓவியங்களையும் எடுத்து வந்திருந்தார். கித்தானில் செய்யப்பட்ட எண்ணெய் வண்ண ஓவியங்கள் அவை. ஈழத்து இயற்கைக் காட்சியை இம்பிரசனிச பாணியில் செய்யப்பட்ட ஓவியங்கள் மிகவும் நன்றாக இருந்தது. அவருடைய ஓவியத்தில் திறன் மிக நன்றாக வெளிப்பட்டிருந்தது.

நான் தங்கியிருந்த டாங்க் வியூ விடுதியில் தான் அவர்களும் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். அதனால் அன்றைய இரவுப் பொழுதில் மாமரம் சூழ்ந்த திறந்த வெளியில் அமர்ந்து கோடைக் காற்று எங்கள் கலந்துரையாடலுக்கு இதம் சேர்க்க எங்கள் கருத்துகளை பகிந்து கொண்டோம்.

என்னுடைய நூல்கள் அனைத்தையும் ஆ.இராசையா அவர்கள் மிகவும் ஆர்வமாகப் பார்த்தார். 'ஒரு ஓவியனுக்கு இவ்வளவு நூல்களா' என்று வியந்தார்.

'உங்களுக்கு நல்ல அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. இங்கே எங்களுக்கு எந்த அங்கீகாரமும் இல்லை. சந்தையும் இல்லை. ஓவியர்களுக்குள் ஒரு ஒற்றுமை யுணர்வும் இல்லை. நான் மிகவும் சோர்வடைந்துவிட்டேன்' என்று ஆதங்கப்பட்டார்.

'உங்களுக்கு நல்ல திறன் இருக்கிறது. அற்புதமாக வெளிப்படுத்துகிறீர்கள். போராட்ட மண்ணில் நிற்கின்ற நீங்கள் உங்கள் ஓவியங்களில் அந்தப் போராட்டத்தை வெளிப்படுத்தியிருந்தால் மக்கள் உங்களை அங்கீகரித்திருப்பார்கள். நாம் மக்களைப் பற்றி சிந்திக்கும் போதுதான் மக்கள் நம்மைப் பற்றிக் கவலைப்படுவார்கள். அது இல்லாத போது நாம் யாரோ, அவர்கள் யாரோ என்றுதான் நினைப்பார்கள். அப்படி நீங்கள் செய்திருந்தால் இந்த சோர்வு உங்களுக்கு வந்திருக்காது. மாறாக, உற்சாகத்தோடும் இருந்திருப்பீர்கள்' என்று அவரிடம் சொன்னேன். (தமிழீழம்: நான் கண்டதும் என்னைக் கண்டதும் நூலில் இதை பதிவு செய்துள்ளேன்) நள்ளிரவைக் கடந்தும் எங்கள் உரையாடல் நீண்டது. அன்றே நீங்கள் யாழ்ப்பாணம் வரும்போது எங்கள் இல்லத்திற்கு வரவேண்டும் என்று எனக்கு அழைப்பும் விடுத்தார்.

2005ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7 அன்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 'புயலின் நிறங்கள்' ஓவியக் காட்சி தொடக்க நிகழ்விலும் பங்கெடுத்து சிறப்பித்தார். அந்த பயணத்தின் போது அவர் இல்லத்திற்கு என்னை அழைத்து இரவு விருந்தளித்தார். அன்றும் எங்கள் உரையாடல் தொடந்தது.

அதன் பிறகும் அவர் தொலைபேசி வழியாக தொடர்பிலிருந்தார். அவர் மகள் திருச்சி கலைக் காவேரி கல்லூரியில் நடனம் பயின்றார். அதனாலும் அத் தொடர்பு நீடித்தது என்றே சொல்லவேண்டும். விடுதலைப் போர் உச்சகட்டம் அடைந்து போர் முடிவுற்ற நிலையில் தொடர்பு விடுபட்டு, மீண்டும் முகநூல் வழியாக 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி

மாதம் 14 ஆம் நாள் தொடர்பில் வந்தார்.

2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 அன்று 'என்னுடைய ஓவிய நூல் ஒன்றும் விரைவில் வெளிவர இருக்கிறது. உங்களுக்கும் ஒரு பிரதி அனுப்பிவைப்பேன்' என்று செய்தி அனுப்பினார். நவம்பர் மாதம் என்னுடைய நூல்கள் சிலவற்றை முன்னாள் போராளி ஒருவரின் உதவியுடன் அவருக்குக் கொடுத்தனுப்பினேன்.

நூலைப் பெற்றுக்கொண்ட பிறகு, 'கலைஞன் ஆவதற்கு மனிதனாக இருப்பது முக்கியம்' என்றக் கருத்தில் என்றும் நான் உறுதியாக இருப்பவன். அந்த வழியில் வாழ்பவன் என்ற வகையில் உங்கள் பதிவும் இருப்பது மனதுக்கு நிறைவாக இருக்கிறது. மனிதம் காத்து வாழும் உங்களுக்கு என் சிரம் தாழ்த்திய வணக்கம். சென்னை வெள்ளம் உங்கள் மென்மையான மனதுக்கு ஒரு வடிகால். உங்கள் பேட்டியைத் தற்சமயம் மேலோட்டமாகப் பார்த்தேன். நேரமின்மையால் ஊன்றிப் படிக்க முடியவில்லை. உடல் வருத்தம் காரணமாக ஒரு மாத காலம் வைத்திய சாலை விடுதியில் தங்க வேண்டியுள்ளது. அவ்வமையம் உங்கள் எல்லா நூல்களையும் படிக்கும் வாய்ப்பு உண்டு. படித்த பின் என் கருத்தைப் பதிவேன். பெறுமதியான பல நூல்களை எனக்கு அன்பளிப்பு செய்ததற்கு அளப்பரிய நன்றிகள். நீங்கள் கொடுத்துவிட்ட நூல்களுள் பெரிய நூல் அதன் உள்ளடக்கம் காரணமாக இங்கே கொண்டு வரமுடியவில்லை. நாங்கள் எப்படியான சூழலில் வாழ்கிறோம் என்பது நீங்கள் அறியாததல்ல. பின்னர் விபரமாக எழுதுவேன்' என்று 17.11.2017 அன்று செய்தி அனுப்பினார்.

2018 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்திய முதல் 'தமிழமுதம்' நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக அழைக்கப்பட்திருந்தேன். 16.09.2018 அன்று மாலை யாழ்ப்பாணத்தில் நான் தங்கியிருந்த விடுதிக்கு வருகை தந்து, என்னைச் சந்தித்து நீண்ட நேரம் என்னுடைய மற்றும் அவருடைய ஓவியப் படைப்புகள் குறித்தும், என்னுடைய எழுத்துகள் மற்றும் செயல்பாடுகள் குறித்தும், பொதுவான சில செய்திகள் குறித்தும் உரையாடிச் சென்றார். அப்போதே சற்று உடல் நலம் பாதிக்கப் பட்டிருந்தார். ஆனால் அதுதான் எங்கள் இறுதிச் சந்திப்பு என்று அப்போது நான் கருதவில்லை. நினைவில் நீங்கா சந்திப்பாகவும் உரையாடலாகவும் அது அமைந்துவிட்டது.

சில ஆண்டு கால முயற்சிக்குப் பிறகு 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அவரது ஓவிய நூல் 'விம்பம்' வெளிவந்த செய்தியறிந்து அவருக்கு வாழ்த்துச் சொன்னேன்.

'புகழ், விரைவில் எனது நூலில் மூன்றை உங்கள் விலாசத்துக்கு அனுப்பவுள்ளேன். நீங்கள் ஒன்றை எடுத்துக் கொண்டு ஒன்றை மருதுவுக்கும் இன்னொன்றை கவிஞர் ஜெயபாலனுக்கும் சேர்ப்பிக்க வேண்டும்' 2020 பிப்ரவரி 10 அன்று செய்தி அனுப்பினார். அனுப்பிய பின் தெரியப் படுத்துகிறேன் என்றும் சொன்னார். அதன் பிறகு அவரிடமிருந்து எந்த செய்தியுமில்லை.

அன்றே, போர்முகங்கள்: ஈழப் போர் ஓவியங்கள் நூலாகி இருப்பது குறித்த செய்தி தமிழ் இந்துவில் வெளிவந்திருந்ததை அறிந்து, 'நல்ல முயற்சி. எங்கள் பிரச்சினைகளை இந்த மண்ணிலிருந்து நாங்கள் வரையமுடியாத சூழ்நிலை நீங்கள் அறிவீர்கள். அந்தப் பணியை நீங்கள் ஒருவரே ஆற்றிக்கொண்டிருக்கிறீர்கள். ஒட்டுமொத்த தமிழினமே உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம். உங்கள் நற் பணித் தொடரட்டும். அதன் மூலமாயினும் எங்களுக்கு ஒரு விடிவு ஏற்படாதா என்று ஏங்குகிறோம். நன்றி. வாழ்க' என்று செய்தியனுப்பினார். அதன் பிறகு அவரிடமிருந்து தொடர்பும் இல்லை செய்தியும் இல்லை.

கித்தானில் எண்ணெய் வண்ணத்தில் (Oil on Canvas) செய்யப்பட்ட அவருடைய மூல ஓவியப் படைப்புகள் சிலவற்றை நேரிடையாகவே பார்த்திருக்கிறேன். அவை மிகவும் காத்திரமானவை. வேறு சில ஓவியங்களையும் நகல்களாக பார்த்திருக்கின்றேன். அவர் கையாளும் ஊடு பொருளை (Medium) பொறுத்தவரை எண்ணெய் வண்ணத்தில் (Oil Colour) மட்டுமல்லாமல் நீர் வண்ணத்திலும் (Water Colour) மிகவும் திறன் பெற்றவராக விளங்கினார். இது எல்லா ஓவியர்களுக்கும் வாய்ப்பதல்ல. இதை அவருடைய தனித்துவம் சார்ந்த ஒன்றாகவே நான் பார்க்கிறேன்.

அவர் ஓவியங்களைப் பொறுத்தவரை அனைத்தும் உருவ வெளிப்பாடுகளாகவே அமைந்துள்ளன. அவர் செய்திருக்கின்ற உருவ ஓவியங்கள் (Portrait Paintings), அவர் பெற்றிருக்கின்ற திறனையும் புரிதலையும் அழுத்தத்தையும் வலிமையையும் நமக்கு உணர்த்துகின்றது. அதே போல் தூரிகைக் கீறல்கள் மூலம் வண்ணத்தைக் கையாளுவதிலும் தனக்கென தனி பாணியை (Style) வகுத்துக்கொண்டு நீண்ட காலம் பயணித்திருக்கின்றார்.

ஓவியத்தின் கருப்பொருள்களாக, தன்னைச் சுற்றியுள்ள நிலக் காட்சிகள், மனிதர்கள், மனிதர்களின் உணர்சிகள், தமிழர்களின் வாழ்க்கை சூழல்கள் என பல்வேறு நிலைகளில் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

அவருடைய உருவ ஓவியங்கள் மற்றும் பிற கூட்டமைவு சார்ந்த படைப்பாக்க ஓவியங்கள் அனைத்தும் மிகவும் தனித்துவமானவை.

info@thaiveedu.com

ஆளுமை மிகுந்த கலைஞர் ஆசை இராசையா

ஓவியர் ஆசை இராசையா அவர்களைப் பற்றிய கட்டுரை, ஆழத்து முத்துக்கள் பகுதியில் ஜூலை 2015இல் வெளியாகியிருந்தது. ஓவியரின் மறைவையொட்டி இக்கட்டுரை மீள வெளியிடப்படுகின்றது.

- தெளிவத்தை ஜோசப் -

ஈழத்தின் முக்கியமான ஓவியர்களில் ஒருவராகத் திகழ்பவர் ஆசை இராசையா அவர்கள். ஆசை என்பது ஓவியரின் தந்தையின் பெயர். அகவெளியினூடாகப் பயணிப்பதில் ஆர்வம் மிகுந்த, வித்தியாசமான ஓவியர் இராசையாவைப் போல் அவருடைய தந்தையின் பெயரும்



வித்தியாசமானதுதான்.

யாழ்ப்பாணத்தின் அச்சுவேலிக் கிராமத்தில் ஆசை – செல்லம்மா தம்பதிகளின் மூத்த மகனாக 16.08.1946ல் பிறந்தவர் இந்த ஓவியர். சிறுவயதிலிருந்தே படம் வரைவதில் ஆர்வம் கொண்டிருந்த இவருக்கு தையற் கலையில் வல்லவரான தாயார் செல்லம்மாவின் 'கண் பார்த்தால் கை செய்ய வேண்டும்' என்னும் கலையுணர்வு உற்சாகம் தருவதாக அமைந்தது. கண் பார்த்த சகலதையும் இவரது கை ஓவியமாகச் செய்யத் தொடங்கியது. பாடசாலைக் காலங்களில் எப்பொழுதும் எதையாவது வரைந்து கொண்டே இருப்பாராம். சித்திரமும் கைப் பழக்கம் என்பதற்கொப்ப பாடசாலைப் பரீட்சைகளில் சித்திரப்பாடத்துக்கான இவரது புள்ளிகள் உயரத்தில் இருந்தன. G.C.E. சாதாரணத் தரப் பரீட்சையில் Geometrical and Mechanical drawing என்னும் பாடத்தில் அதிசிறந்த பெறுபேற்றைப் பெற்றார்.

இவரது பாடசாலைக் காலங்களில் ஓவியக்கலைப் பயில்வுக்கான ஒழுங்கான வழிகாட்டல்கள் இருக்கவில்லை என்றாலும் கண்பார்த்தால் கை செய்ய வேண்டும் என்னும் காண்பியல் கலையுணர்வு கொண்ட சுய ஊக்கத்துடன் தனது தனித்துவத்தை வளர்த்துக் கொண்டார்.

GCE பரீட்சை பெறுபேற்றின் துணையுடன் அப்போது கொழும்பில் மட்டுமே இயங்கிய நுண்கலைக் கல்லூரியில் இணைந்து பயிலத் தொடங்கினார். (College of Art and Craft) இந்த நுண்கலைக் கல்லூரி இப்போது களனி பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டு பட்ட மேற்படிப்பு மேற்கொள்ளப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

1966லிருந்து 1969 வரையிலான தனது மூன்று வருடகால நுண்கலைக் கல்லூரிக் காலத்தை ஒரு பொன்னான காலமாக நினைவு கூர்கின்றார் ஆசை இராசையா அவர்கள்.

'ஒரு மனிதனை முன் நிறுத்தி அவரைப் பார்த்து வரைவது எமக்குப் புதுமையாக இருந்தது. ஒரு ஓவியன் முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய உடற் கூற்றியல் பற்றிய அறிவை அங்கேதான் பெற்றுக் கொண்டேன்' என்கின்றார் இவர்.

இந்த மூன்று வருட கற்கை நெறியில் எண்ணெய் வர்ணப் பயிற்சி நெறி இல்லாமை அவருக்கு ஒரு ஏமாற்றத்தை அளித்தது. Oil painting என்னும் எண்ணெய் வர்ணப் படைப்பாக்கத்தில் தனது திறமையை வளர்த்துக் கொள்ள ஆர்வமாக இருந்த இவருக்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது கொழும்பு கலாபவனம் மட்டுமே. மூத்த படைப்பாளிகளின் ஓவியங்களால் நிரம்பி இருந்த கலாபவனம் தனக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்கின்றார் இவர்.

ஓவியக்கலை பயில்வில் தனது ரசனைக்கும் பயில்வுக்கும் ஒரு சக்தியாக, தூண்டுகோலாக வாய்த்த கலாபவனமே, நுண்கலைக் கல்லூரியில் அவர் கற்ற மூன்றாண்டு காலத்தில் கூடுதலான அவரது நேரத்தை எடுத்துக் கொண்ட இடமாகும்.

கலாபவனத்தில் காட்சிபடுத்தப்பட்டிருந்த இலங்கையின் புகழ்பூத்த ஓவியர்களின் படைப்புக்களைப் பார்த்துப் பார்த்து அவர்களுடைய தொகுப்பமைவுகள், கலை வர்ண நுட்பங்கள் போன்றவற்றை கிரகித்து கிரகித்து சுய பயிற்சியூடாகத் தன்னையும் தனது தனித்துவத்தினையும் வளர்த்துக் கொண்டவர் இவர்.

A.C.G.S. Amarasekara, Lankatilake, G.S. Fernando Stanly Abeyasinge, J.D.A Perera, David Pynter போன்ற ஈழத்தின் பிரபல ஓவியர்களின் படைப்புக்கள் அணிவகுத்திருந்தாலும் அமரசேகராவின் படைப்புக்களே இவரை மிகவும் கவர்ந்தவையாகும்.

ஆசை இராசையாவின் ஆரம்பகாலப் படைப்புக்களான ஏழ்மை 1970, வீழ்ந்த சருகுகள் 1971 போன்ற எண்ணெய் வர்ண ஓவியங்கள் அமரசேகரா அவர்களின் ஓவியங்களை நினைவூட்டுபவை அல்லது அவருடையதைத் தழுவியவை என்று குறிப்பிடுகின்றனர், ஆசை இராசையாவின் கலை ஆளுமை பற்றி எழுதியுள்ளவர்கள்.

கொழும்பு நுண்கலைக் கல்லூரி வாழ்க்கையின் பின் 1971ல் வேலனை மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பதவியேற்றார். சித்திரத்துறையில், பல குறை பாடுகளுக்கு மத்தியிலும் மாணவர்களை வழி நடத்தும் சிறந்த ஆசானாக விளங்கினார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிலுனராக இணைந்திருந்த காலத்தில் அக்கல்லூரி நடத்திய முத்தமிழ் விழா ஓவியக் கண்காட்சியிலும், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் ஓவியக் கண்காட்சியிலும் தனது ஓவியங்களைக் காட்சிப்படுத்தினார்.

1975ல் கொழும்பு றோயல் கல்லூரியில் ஆசிரிய நியமனம் பெற்று மீண்டும் கொழும்புக்கு வந்து சேர்ந்தார்.

கொழும்பு றோயலில் பணியாற்றிய காலத்தில், கொழும்பு கலாபவனம் நடத்திய ஓவியக் கண்காட்சியில் பங்கு பற்றியதுடன் சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் என்னும் யானை மார்க் குளிர்பான ஸ்தாபனம் நடத்திய தைல வர்ண ஓவியப்போட்டியில் கலந்து கொண்டார்.

இவரது ஓவியம் தெரிவு செய்யப்பட்டு அந்த வருட நாட்காட்டி (கலண்டர்)ல் பிரசுரம் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இக்காலகட்டங்களில் இவர் இலங்கை முத்திரைப் பணியகத்தின் ஓவியர் குழுவிலும் கடமை புரிந்துள்ளார்.

'சேர்.பொன்.ராமநாதன்', 'சேர்.பொன். அருணாசலம்', 'சேர். ஜோன். கொத்தலாவை', 'சேர். டி.பி. மலலசேகர', 'சேர். வைத்திலிங்கம் துரைசாமி', 'ஜோர்ஸ் ஈ.டி. சில்வா', 'இலங்கையின் முதல் புகைவண்டி', 'தவலம்' ஆகிய எட்டு முத்திரைகள் இவரால் வடிவமைக்கப்பட்டுள்ளன.

Portrait என்னும் இவருடைய பிரதிமை ஓவியங்கள் மிகவும் முக்கியத்துவம் கொள்பவை. அவருடைய தனித்துவத்தை அடையாளப்படுத்தும் வகையில், வித்தியாசம், வித்தியாமான பரீட்சார்த்த முயல்வுகளால் இப்பிரதிமை ஓவியங்களை முக்கியமான வைகளாக்கித் தந்துள்ளார் ஓவியர் ஆசை இராசையா அவர்கள்.

இந்தப் பிரதிமை ஓவியங்கள் பற்றிக் குறிப்பிடும்போது 'அநேகமானவை நானாக விரும்பி வரைந்தவை அல்ல. வாய்ப்புக்கள் வந்தன. பொருளாதார நிலையும் 'சரி செய்' என்றது, செய்து கொடுத்தேன் என்கின்றார். ஆனாலும், அவைகள் சோடை போகவில்லை. ஆசை இராசையா என்னும் ஓவிய ஆளுமைக்கு சான்று பகர்வனவாகவே அமைந்துள்ளன.

குறிப்பாக இந்த வரிசையில் யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன், போராசிரியர் மகேஸ்வரன், பேராசிரியர் கா. சிவத்தம்பி, யாழ் ஆயர் தியோகுப்பிள்ளை, தமிழ்த்தூது தனி நாயகம் அடிகள், கலைத்தூது மரிய சேவியர் அடிகள், பேராசிரியர் செல்வா கனகநாயகம் மற்றும் யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர்கள் இருபது பேர், ஸ்தாபகர்கள் இருவர் என்று பட்டியல் நீளும்.

1890ல் அரச பாட நூல் நிறுவன இந்து சமய நூல்களுக்கான ஓவியங்களையும் ஆசை இராசையா வரைந்துள்ளார்.

1975 லிருந்து 1983 வரை றோயல் கல்லூரியில் ஆசிரியப் பணிபுரிந்த இவரை 1983ன் இனக்கலவரம் யாழ் திரும்ப நிர்ப்பந்தித்து விட்டது.

புகைப்படக் கலையின் மீதான ஆர்வம் காரணமாக புகைப்படக்கலை புத்தகங்கள் வாயிலாக கேமரா நுட்பங்களைக் கற்று ணர்ந்து ஒரு சிறந்த புகைப்படக் கலைஞராகவும் தன்னை தாபித்துக் கொண்டுள்ள இவர் 1993ல் உள்ளூராட்சித் திணைக்களத்தினரால் நடத்தப்பட்ட புகைப்படப் போட்டியில் முதல் பரிசினையும், 1994ல் யாழ்.

ஓவியர் வரைந்த முத்திரைகள்

ரோட்டரிக் கழகம் நடத்திய புகைப்படப் போட்டியில் சிறந்த புகைப்படக் கலைஞருக்கான விருதினையும் பெற்றுள்ளார்.

தாய்வீடு சஞ்சிகையின் முக்கியமான ஓவியர்களில் ஒருவராகவும் இருக்கும் ஆசை இராசையாவின் ஓவியங்கள் தாய்வீட்டின் கனதிகளில் ஒன்று.

ஈழத்து ஓவிய ஆளுமைகளை புலம் பெயர் தமிழ் உலகிற்கு அறிமுகம் செய்யும் நோக்கில் தாய்வீடு வெளியிட்ட ஓவியர் ஆசை இராசையா அவர்களின் வாழ்த்து மடல்கள் விசேட கவனம் கொள்பவை.

இலங்கை கலைக்கழக உறுப்பினராகவும், இராமநாதன் நுண்கலைப்பிரிவில் 'சித்திரமும் வடிவமைப்பும்' துறையில் வருகை விரிவுரையாளராகவும் கடமையாற்றும் இவர் தனது கலைப் பயணத்தினூடாக விருதுகள் பல பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- நல்லூர் உதவி அரசாங்கக் கலாசாரப் பிரிவு வழங்கிய கலைஞானச்சுடர் விருது – 2008
- வடமாகாண ஆளுனர் விருது – 2008
- தேசிய கலாபூஷணம் விருது – 2008
- கொழும்பு தமிழ்ச்சங்க விருது – 2012
- ஞானம் சஞ்சிகை வழங்கிய ஓவியக் கலாகீர்த்தி விருது 2012

மனைவி ஞானாம்பிகை மகள் காயத்ரி ஆகியோருடன் அமைதியான வாழ்க்கை நடத்தும் ஓவியரின் கலைப் பணிகள் மேலும் சிறக்க தாய்வீட்டினூடாக எமது வாழ்த்துகள்.

theliwathai.joseph@thaiveedu.com

நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

Your Trusted Realtor
Buying Selling Leasing Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
25 Karachi Drive #15, Markham ON L3S 0B5 - Office 905-209-8080
Cell 416.803.7344
www.reon.ca

விசேட சலுகை விலையில்
SMART HOME MONITORING
SAVE UP TO $1350
UNLIMITED INTERNET
TV - HOME PHONE
416.908.6845
ROGERS

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,

www.inayam.net
416-400-6406
முற்றிலும் இலவசம்
தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்

MLT
RENTALS FOR HOUSEPARTY
416-625-1826
647-955-1721
Chair, Round Table, Tent, Square Table
Cake Table & Etc.

SRI NADARAJASUNDARAM
Sales Representative
416-276-6666
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

Dr. Rajkumar Arulthasan
Forestbrook Pet Hospital
3-1105 Finch Ave, Pickering, ON L1V 1J7
Phone: 905-831-1118
Fax: 905-831-4119
info@forestbrookpethospital.com
www.forestbrookpethospital.com

RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375
(திங்கள் முதல் வெள்ளி 9:00மணி முதல் 5:00மணி வரை)

VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residential Commercial Investment

Maliny Bridal
Bridal makeup, Arangretram makeup
And for all your makeup needs
for auspicious ceremonies
Maliny Bridal
H 416 497 0052 | C 416 670 6942
malinyb@hotmail.com
Specialized in saree pleating
Professional makeup expert with 25 years

"It's your Journey. I am Here to Help."
Ragu Mahesu
Cell 416-450-6833
Home Life Top Star
Realty Inc. Brokerage
PHONE 905-209-1400 FAX 905-209-1405

MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic: M08008759
1193A Brimley Rd. #7
Toronto, Ontario, M1C 5G3
T: 416.939.8789
F: 416.439.1965
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com

Uthayan Iyampillai
Sales Representative
Dir. : 416-827-1366
E-Mail : luk2410@gmail.com
Website : www.iyamhomes.com
Century 21
Century 21 Green Realty Inc.,
Off : 905-565-9565 Fax : 905-565-9522

Nadodi
EVENTS & TOURISM (India)
இந்தியாவில் உங்கள் இல்லதிருமணநிகழ்வு மற்றும் அனைத்து கலந்தாய்வு சம்பந்தமான தேவைகள்
உள்ளகற்றுல ஆலோசனை! மருத்துவ உதவிகள் வழி காட்டல்கள்
அனைத்துவிதமானசுற்றுலா சுழற்சிகளுடன் கூடிய தங்குமிடம் மற்றும் வாகனசேவைகள்
இவை அனைத்தும் உங்கள் நிதிநிலைக்குற்பட்ட போல்
பிரித்தமுறையில் செய்துதரப்படும்.
- Thusiyanthan K
+91 9677089577
+91 9941030100
- nadodiind@gmail.com
உங்கள் தேவைகள் அனைத்தும் எங்கள் சேவைகளில்
மிளிரட்டும்

நம்பி வாங்க தம்பி பிரபாவிடம்
திரும்பி சந்தோசமா போங்க...
வங்கிகளில் MORTGAGE பெற்றுக்கொள்ள அழையுங்கள்
தம்பி பிரபா (416) 645 3027
அதிகுறைந்த வட்டி விதத்தில் ஆரம்பித்து
over $1 Million
வரை பெற்றுக்கொள்ளலாம்
TD Canada Trust
NATIONAL BANK
Manulife Bank
ICICI Bank
Scotiabank
B2B BANK
HomeEquity Bank
EQUITABLE BANK
MATRIX MORTGAGE GLOBAL LIC# 11105

இலங்கையில் புதிய ஆட்சியும் மாறாத பழைய மாற்றமும்

- அ. கணபதிப்பிள்ளை -

இலங்கையில் தேர்தற்புயல டித்து ஓய்ந்துவிட்டது. புதுப் புயலை எதிர்கொள்ளமுடி யாத பழைய மரங்கள் பல வேரோடு சாய்ந்து விட்டன. புதுமரங்களும் இனவா தக் காற்றொதுக்கில் இருந்த பெருமரங் களும் ஒட்டுண்ணித் தாவரங்களும் இம் முறை தப்பிப்பிழைத்து புயலோய்ந்த இன் பத்தினை அனுபவித்துக் கொண்டிருக்கின் றன. இது இயற்கையின் களிப்பு. இம் முறைத் தேர்தலோ புதிய ஆட்சிக்குக் கிடைத்த பெருமகிழ்ச்சி.

இலங்கையில் பெரும்பான்மைச் சிங்கள வர்களது தனியாட்சி ஒன்று மீண்டும் இம் முறை உதயமாகியிருக்கிறது. 1970ல் சிறி-லங்கா சுதந்திரக் கட்சியின் சிறிமாவோ பண்டாரநாயக்கா அலை எவ்வாறு டட்லி சேனநாயக்கா அரசாங்கத்தினைக் கவிழ்த் ததோ அதுபோல இம்முறையும் நடந்திருக் கிறது. இதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

1965ல் டட்லியின் அரசில் பங்காளியாக மாறிய தமிழரசுக்கட்சி உள்ளூராட்சியமைச் சராகவிருந்த மு. திருச்செல்வம் மாவட்ட சபை மசோதாவை முன்னெடுத்திருந்தார். வழக்கம்போலவே சிங்கள அரசு காலந் தாழ்த்திக் கொண்டு வந்ததால் தேர்த லொன்றுக்கு ஐக்கிய தேசியக்கட்சி முகங் கொடுக்க வேண்டியேற்பட்டது. அன்றும் தமிழினத்தின் உரிமையினை மையமாக வைத்த சிங்கள இனவாதம் தனது கைவரி சையினைக் காட்டியிருந்தது. முடிவில் இடதுசாரிகளையும் இணைத்துக் கொண்ட பேரினவாத அரசானது 1972ல் புதிய அரசியற்திட்டத்தை உருவாக்கி, இலங்கை யினைச் சிங்கள பௌத்த குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டது.

1977ல் தனியாகச் சிங்களப் பெரும்பான் மையுடன் ஆட்சிக்குவந்த ஜே.ஆர் ஜெய-வர்த்தனா 1970ல் ஐக்கிய தேசியக்கட்சி யின் பாரிய தோல்வியைக் கருத்திற் கொண்டு 1978ம் ஆண்டின் புதிய அரசியற் திட்டத்தையும் புதிய விகிதாசாரப் பிரதி நிதித்துவத் தேர்தல் முறையினையும் அறி முகப்படுத்தியிருந்தார். அதன்மூலம் சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதியால் சிங்களப் பெரும்பான்மையின் உதவியுடன் பௌத்த மதத்தையும் சிங்களத்தையும் ஆட்சியில் வைத்துப் பாதுகாப்பதுடன் சிறு பான்மையினர் ஒருபோதும் எந்தவழியிலே னும் உரிமைகள் என்ற பெயரில் ஒற்றை யாட்சி முறையினை மாற்றியமைத்து விட முடியாதெனவும் நம்பியிருந்தார்.

விடுதலைப்புலிகளது உருவாக்கமும் அவர் களது அழிப்பும் இந்தியாவின் அரசியல் நாடகத்தின் ஒரங்கமாகச் சொல்லப்பட்டா லும் 1983இன் தமிழின அழிப்பையும் 2019ன் தமிழின அழிப்பையும் இந்தியா வால் தடுத்து நிறுத்தியிருக்க முடியுமாயி ருப்பினும் இந்தியா ஏன் அவ்வாறு செய்ய வில்லை என்பது விளக்கப்படாத புதிரா கவே இன்றுவரையில் இருந்துவருகிறது.

அதில் தமிழர்களின் தலையீடுதான் மறை முகமாக இருந்ததாகப் பலரும் அன்று பேசிக் கொண்டிருந்ததனைக் காணமுடிந் தது.

இவ்வாறு ஒற்றுமையில்லாத தமிழ்த் தலை மைகளுக்குப் பாடம் புகட்டுவது போல 2015ல் தேசியஅரசாங்கம் உருவாக்கப் பட்டது. சிங்களப் பாராளுமன்ற உறுப்பி னர்களும் சிறுபான்மையினரின் முழுஅதர வுடன் பதவியேற்ற ஜனாதிபதியும் பிரத மரும் நாலரையாண்டின் முடிவு வரை யில் போர்க் குற்ற விசாரணைகளுக்குக் காலஅவகாசம் கேட்டும் தமிழருக்கான தீர்வுத்திட்டத்தினைக் காலந்தாழ்த்தியும் தமிழ்த் தலைவர்களை ஏமாற்றியிருக்கிறார் கள் என்பதனை தமிழர்கள் நன்கு புரிந்து கொண்டார்கள்.

இம்முறை நடந்தேறிய தேர்தலில் ராஜ-பக்சாக்களின் குடும்ப அரசியலை மக்கள் தேர்ந்தெடுத்துவிட்டார்கள் என எதிர்க்கட்சி கள் கூக்குரலிட்டாலும், சிங்கள மேலா திக்கத் தலைமையும் பௌத்த பிக்குகளை அரசியலில் அணைத்துப் போகக்கூடிய பலம்மிக்க பௌத்தமத காவலர்களுமே தமக்குத் தேவை என்பதனைச் சிங்களப் பெரும்பான்மை மக்கள் ஒழிவுமறைவின் றித் தெரிவித்திருக்கிறார்கள்.

இதற்கு ஜனாதிபதி கோத்தபாயவின் குறு கிய ஆட்சிக்காலத்துள் நிகழ்ந்த இராணுவ முன்னெடுப்புடன் கூடிய சிங்கள பௌத்த பாதுகாவல் நடவடிக்கைகளும் மகிந்தவின தும் கோத்தாவினதும் இந்திய எதிர்ப்பு சார்பான பேச்சுக்களும் சிங்களமக்களுக் குச் சிறுபான்மையினரிடம் இந்த அரசாங் கம் அடிபணியப் போவதில்லை என்ற நம்பிக்கையைக் கொடுத்திருந்ததும் குறிப் பிடத்தக்கது. கடந்த காலங்களைப்போல் இதுவே சிறுபான்மையினரைத் தாங்களே அடக்கமுடியும் என்று சட்டத்துக்குப்புறம் மான நடவடிக்கைகளில் சிங்களவர்கள் குதிப்பதற்கும் வழியேற்படுத்திக் கொடுத்து விடும்.

சிறுபான்மையினரை ஓரங்கட்டும் போக் கானது அரசாங்கத்தின் தேர்தலின் பின் னைய மந்திரிசபை அமைப்பு நடவடிக் கைகளில் தெளிவாகத் தெரிகிறது. மேலும் அரசாங்கத்தின் உடனடித் தேவையான அரசியல் திட்டத்தின் 19வது திருத்தத்தினை காலாவதியாகச் செய்வதற்கான விசுவாசி களைச் சிதறவிடாமற் காப்பாற்றிவைக்கும் உபாயங்களையே முன்னெடுத்திருக்கிறது. கடந்த அரசாங்க காலத்தில் தலைமை யைத் தீர்மானித்த சந்திரிகா மங்கசமரவீர போன்றோரது உபாயங்கள் இம்முறையும் பலிக்கும் என்று சொல்லிவிடமுடியாது.

கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாகத் தமி ழர்களின் ஏகபிரதிநிதிகளின் ஏகோபித்த குரல் எதனை இதுவரையில் சாதித்திருக் கிறது என்ற வினாவினை இம்முறை தேர் தலில் கேட்டிருந்த தமிழ்மக்கள் தொடர்ந் தும் சிங்கள அரசாங்கம் கொடுக்கப் போ கும் தமிழருக்கான தீர்வுத்திட்டத்தில் அக் கறை கொண்டவர்களாகத் தம்மைக் காட் டிக் கொள்ளவில்லை என்பதனை தமிழர் பிரதேசத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டியிருந்தன.

தமிழர்களது வாக்குகள் தமிழ்த் தேசியம் பேசுபவர்களிடையே பகிரப்பட்டுவிட்டதென ஒருவரும் சமாதானமடைந்து விடமுடியாது. போர் கொடுத்த வலிகளும் போரின் பின் னைய பத்து வருடங்களில் தமிழினம் பட் டுக் கொண்டிருக்கும் வேதனைகளும் இம் முறை தேர்தலில் பிரதிபலித்திருக்கிறது. இதற்கு ஆதாரமாகக் காட்டக் கூடியதாகச் சலுகைஅரசியலை நோக்கிய தமிழ் மக் களது போக்கானது துலாம்பரப் படுத்தி யிருக்கிறது.

தமிழர்கள் ராஜபக்ச சுகோதரர்களிடமிருந்து எதனை எதிர்பார்க்கிறார்கள் என்பது அரசி யலில் அடுத்தகட்டத்துக்கான நகர்வாகக் கொள்ளப்படவேண்டும். ஏற்கனவே ஜனாதி-பதியால் கூறப்பட்டதுபோலவே தென்னி லங்கை மக்களது நிலத்தேவையினையும் வீட்டுத்தேவையினையும் தீர்த்து வைப்பது வும் நாடுமுழுவதும் ஒருஇலட்சம் வேலை வாய்புகளை வழங்கவிருப்பதுவும் சிங்கள மக்களது உடனடித் தேவையினைத் தீர்க் கப் போதுமானதாகிவிடும். வழக்கம்போலத் தமிழர்பிரதேச வேலைவாய்ப்புக்களை விற் றுப் பணமாக்கும் முகவர்களும் முளைத் தெழுந்து விடுவார்கள். இவற்றையெல்லாம் இனப்பாகுபாட்டைத் தவிர்த்து எவ்வாறு அரசாங்கம் கையாளப் போகிறது என் பதில்தான் புதிய ஆட்சியின் மீதான தமிழர் களின் நம்பிக்கை கட்டியெழுப்பப்படும்.

பிரதமர் மகிந்த ராஜபக்ச இந்தியாவுக்கு அடிக்கடி வாக்களித்து வருவதுபோல மூன் றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட் சிக்கு வந்த இந்த அரசாங்கம் புதிதாக உருவாக்கவிருக்கும் அரசியல்திட்டத்தின் மூலமாக 13 பிளஸ் என்ற புதிய அதிகாரப் பகிர்வு முறையினைத் தமிழர்களுக்கு அறி முகம் செய்துவைக்குமா என்பதனைத் தமிழர்கள் உன்னிப்பாகக் கவனிக்கவேண் டியவர்களாக இருக்கிறார்கள்.

சமகால அரசியற்திட்டத்தில் காணப்படும் 13வது திருத்தம் அகற்றப்படமாட்டாது என மகிந்தவால் கொடுக்கப்பட்ட வாக்குறுதி யை ஒருவேளை இந்த அரசாங்கம் மீறு மாகவிருந்தால் இம்முறை பேரம்பேசும் சக்தியை மக்கள் தமக்குத்தரவில்லை என தமிழரணி வாளாவிருந்துவிடமுடியுமா அல் லது மாகாணசபையின் பாதுகாவலனாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரசாங்கத்தைக் எவ்வகையில் கண்டிப்பார் என்பதெல்லாம் ஊகத்தின்பாற்பட்டவையாக இருக்கட்டும்.

புதிய ஆட்சியுடாக மாற்றம் ஏற்படுமெனத் தமிழர்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார் கள். வழக்கம் போல அவர்களை ஏமாற்று வதற்காகத் தேசியம் பேசும் தமிழ்தலைவர் கள் மீது பழியினைப் போட்டுத் தப்பிக்க முனையும் தமிழ்ப் பிரதிநிதிகளை அடை யாளங்காணும் வாய்ப்பினை இம்முறை தமிழ் மக்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார் கள் என்பது இம்முறை தேர்தலளித்த வர மாகப் பார்க்கவேண்டும்.

தேர்தற்காலத்தில் தன்னாட்சி, தேசியம், சமஸ்டி என்பனவற்றைப் பேசிக்கொண்டும் பாராளுமன்றத்தில் இணக்கஅரசியலையும் சிங்கள மக்களது ஏகோபித்த மனமாற்றத் தினையும் எதிரபார்த்துக் கொண்டேயிருந்த கூட்டணியினரது அரசியல் பொய்த்துப் போய்விட்ட நிலையில் இணக்கஅரசியலில் ஊறிப்போன அரசியற்தமிழர்கள் அரசாங் கப் பங்காளர்களாக மாறியிருப்பது மாற்றத் தின் அறிகுறியாகக் கொள்வோமானால் தேர்தல் காலங்களில் அவர்கள் கொடுத்த உரிமையோடு கூடிய அபிவிருத்தி போன்ற வாக்குறுதிகளை அவர்களே அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

kanapathipillai.a@thaiveedu.com

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594
Tel: 416-646-3422

வீட்டினுள்ளே...

வீட்டுப் பரிசோதனை என்பது அவசியமா? 36
வேலா சுப்ரமணியம்

30,000 தீவுகளைக் கொண்ட ஜோர்ஜியன் குடா 39
குரு அரவிந்தன்

செய்யுள் இலக்கியம் செழித்த கதை 42
மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

இலெமூறியா அல்லது குமரிக் கண்டம் 44
அ. கணபதிப்பிள்ளை

செம்மொழி காக்க! 46
சர்வேசுவரி சோமசுந்தரம்

தொல் தமிழகத்தில் இரும்பின் தடம் 48
செல்வநாயகி ஸ்ரீதாஸ்

மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி 53
மல்லியப்புசந்தி திலகர்

முகவடு 55
குமார் புனிதவேல்

It so long 56
சாம்ராஜ்

இலங்கைத் தமிழர் வரலாறு: கிழக்கிலங்கையில் நாகரும் தமிழரும் 58
சி. பத்மநாதன்

அரசியல் சூதாட்டத்தில் அலைவுறும் பாமரரின் வாழ்வு 'வாழ்க வாழ்க' நூல் மதிப்புரை 60
நர்மதா குப்புசாமி

இலக்கிய ஆளுமை பண்டிதர் க. சச்சிதானந்தன் 62
வே. விவேகானந்தன்

அண்ணாவியார் சவரிமுத்து மிக்கேல்தாஸ் 68
ப. ஸ்ரீஸ்கந்தன்

சிக்மன்ட் பிராய்ட்: உளவியலின் தந்தை 69
எஸ். பத்மநாதன்

ஆய்வறிஞரும் மார்க்சிய விமர்சகருமான கோவை ஞானி 71
தெளிவத்தை ஜோசப்

தொலைக்காட்சியில் மேடை நாடகங்கள் 74
P. பிக்கினேஸ்வரன்

கவிஞர் நெருடாவும் பணிப்பெண் தங்கம்மாவும் 79
- திருமதி ரொபினா பி. மார்க்ஸ்
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

ஆதியும் அந்தமும் தேடி... 81
குகன் சங்கரப்பிள்ளை

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் வடபுலச் செய்திகள் 85
பால. சிவகடாட்சம்

தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 87
நா. சுப்பிரமணியன்

இனத் தேசிய அரசியலின் நாலாவது கட்டம் 90
ந. இரவீந்திரன்

காலனித்துவ காலத்து இலங்கை வரலாற்று நூல்களும் கடந்தகாலம் பற்றிய படிமங்களும் 92
க. சண்முகலிங்கம்

மலையகக் கூத்துகள் 95
ஞானம் லெம்பட்

அம்மா வந்தாள் 97
சாம்ராஜ்

வீதிக்கு வந்தவன் 100
த. சார்ள்ஸ் குணநாயகம்

நினைவேற்றம்: மூலைக் கல் 103
தேவகாந்தன்

விளையாட்டு விதிகள் 107
அமி ரான்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

மனிதன் படைத்த குரங்கு 113
வல்லிபுரம் சுகந்தன்

பனி விழும் பனை வனம் 117
செல்வம் அருளானந்தம்

COMMITTED TO EXCELLENCE

Call me now to get your **HOME SOLD** 416-725-7284

CENTURY 21
Percy Fulton Ltd.

MASTERS Hall of Fame
Century 21 Canada Winner
1999-2019

2911 Kennedy Rd. Toronto, ON M1V 1S8 Office 416.298.8200

Ravi Kana
Broker
Cell 416.725.7284 (RAVI)
ravikana33@gmail.com
www.ravikana.com

பிராணஜீவ
சர்வ ரோக நிவாரணி

200 வருடங்களுக்கு மேலான மரபார்ந்த மூலிகை மருந்து. இதய வியாதிகள், சலரோகம், உயர் இரத்த அழுத்தம், புற்றுநோய் போன்ற வியாதிகளுக்கான நிவாரணியாகவுள்ளது.

Pranajeewa is a traditional herbal medicine that has passed down from generation to generation. It is over 200 years old and is a proven cure for many kinds of diseases including Heart disease, Diabetes, hypertension, Cholesterol and Cancer. Sethuwa Pranajeewa's miraculous properties has made it the ideal cure for a multitude of other ailments and conditions, known among them are paralysis, Asthma, Catarrh, Skin diseases.

எலும்பு, மூட்டு ஆரோக்கியத்திற்கு!!

NanoCal is a supplement that has been approved by the US FDA as a **CURE for osteoporosis and osteoarthritis.**
NanoCal can actually reverse and cure these conditions!

The **ERVAMATIN™**

முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது. சுபாளத்தில் பொடுகைப் போக்குவதுடன் முடியை செழிப்பாக வைத்திருக்க எவமாட்டின் மூலிகைக் கலவை உதவுகிறது.

மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட தலைமுடி மை.

Dreamron Semi-Permanent **Eco Hair Color** is the newest innovation that is specially formulated for the people who are allergic to normal oxidative hair colorants which contain PPD & Ammonia. This is a gentle blend of unique herbal powders with HC colorants.

Amazon Organic Shampoo is for all hair types is rich yet mild, cleans well and leaves hair full bodied lustrous and manageable. முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.

Turmeric & Sandalwood Day Cream
Turmeric & Sandalwood Day Cream Whiter and Beautiful Skin. Protects the skin year round from the elements Prevents pimples and acne Removes blemishes and evens skin tone. Brightens skin Works as an antiseptic.
சருமத்தை பாதுகாப்பாகவும் பொலிவாகவும் பேண நம் முதாதையர் பாரம்பரியமாக பயன்படுத்திய கஸ்தூரி மஞ்சள் கொண்டு தயாரிக்கப்பட்ட முக சரும பராமரிப்பு!

SABONA & Gift

2466, Eglinton Ave East Unit 12A (@ Midland) Scarborough, ON. www.sabona.ca 416•264•8787

மாறிவரும் தேர்தல் கலாச்சாரம்: சில அவதானிப்புகள்

- கண்ணன் ராஜ் -

நடந்து முடிந்த 2020 பாராளுமன்ற தேர்தலில் பொது ஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்து, அமைச்சரவையும் அறிவிக்கப் பட்டுவிட்டது. இனி இவர்களின் ஆட்சியில் பலவீனம் அடைந்துவிட்ட எதிர்த்தரப்புகள் என்ன மாதிரியான காய் நகர்த்தல்களைச் செய்ய முடியும் என்று தெரியவில்லை. பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இந்த நிலையில் இவர்களின் எதிர்கால நடவடிக்கைகள் எத்தகையதாய் இருக்கும் என்பதனை தேர்தல் காலத்தில் இவர்கள் நடந்து கொண்ட முறைகளையும், பின் பற்றிய உத்திகளையும் வைத்து ஓரளவு ஊகிக்கலாம். பல்வேறு புதிய மற்றும் பிரமாண்டமான வழிமுறைகள் திரட்சியான வகையில் அறிமுகமாகியிருக்கும் இந்தத் தேர்தல் காலத்தை நாம் கவனமாகப் பார்க்க வேண்டும்.

தேர்தல் கலாசாரத்தில் மாற்றங்கள்:

இந்தத் தேர்தலைப் பொறுத்த மட்டில்... முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின் நாம் எதிர்கொள்ளும், இறுக்கமான இனவாதம் வளர்ந்து வரும் நாட்டின் தேர்தலாகும். இதில் பெரும்பான்மை வெற்றி என்பது கடந்த பாராளுமன்றின் நடவடிக்கைகளின் விளைச்சல்களில் ஒன்று. இதில் தேசியக் கட்சிகள் தவிர்ந்த அதிகளவிலான சுயேட்சைக் குழுக்கள் களமிறங்கின. குறிப்பாகத் தமிழ்ப் பிரதேசங்களை வைத்துப் பார்த்தால் இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் தனிக் குழுக்களாகக் களமிறங்கிய கட்சிகள் சில ஆசனங்களைப் பெற்றிருக்கின்றன. வழமையான ஏக பிரதிநிதித்துவம் என்ற வார்த்தை முடிவுக்கு வந்து விட்டதை சிங்களத் தரப்புகள்கூட சுட்டிக் காட்டியிருந்தன. பல கட்சிகள் உள்ள ஜனநாயகத் தேர்தல் வெளியாக தமிழ்ப் பரப்பு மாறிவருகிறது. உரிமை என்ற கோஷமும் அபிவிருத்தி என்ற கோஷமும் பெருமளவில் முழங்கின. ஆனால் மக்களோ இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யாமல் இரண்டிற் குமே ஆணையை வழங்கியிருக்கிறார்கள்.

உரிமை என்ற பேச்சுடன் களத்திற்குள் புதிதாக வந்தவர்கள் உட்பட ஏற்கனவே அவற்றை பேசி வருபவர்களும் கூட சில மையப் படுத்தப்பட்ட வேட்பாளர்களை முன்னிறுத்தி கடுமையான விமர்சனங்களை வைப்பதை வைத்தே பெரும்பாலான அரசியல் உரையாடல்கள் நடந்தன.

இந்தத் தேர்தலில் கவனிக்க வேண்டிய மற்றொரு விடயம் தேர்தலுக்கான வேட்பாளர்களை மக்களிடம் கொண்டு சேர்க்கப் பயன்படுத்திய உத்திகள்.

- சிறிய பொக்கெற் கலண்டர் அளவிலான, வேட்பாளர்களின் பெயர் மற்றும் விருப்ப எண் அடங்கிய அட்டைகளை பலரும் விநியோகித்திருந்தனர். கட்சிகளின் தொண்டர்கள் விசிட்டிங் கார்ட் போல அவற்றைப் பயன்படுத்தினர்.
- வண்ணக் கலர்ப்படங்கள் அடங்கிய தமது கட்சியின் வரலாறு அல்லது வேட்பாளர்கள் பற்றிய வரலாறு போன்றவற்றை அச்சிட்டிருந்தார்கள். தமக்குத் தமக்கென்று இருக்கும் பண வசதியைப் பொறுத்துப் பல வகைகளிலும் இந்தச் சிறு பிரசுரங்கள் ஏராளமாய் புழக்கத்திலிருந்தன. பல பிரசுரங்களை மக்கள் ஆர்வமாய் வாங்கிப் பார்த்தனர், பெரும் பாலானவர்கள் தங்களுக்கு ஏன் வாக்களிக்க வேண்டும் என்று கேட்ட காரணங்களும் அவர்களின் கடந்த கால வீர வரலாறுகளும் வாய்விட்டுச் சிரிக்கு மளவுக்கு இருந்தன. இரண்டு உதாரணங்களைப் பார்க்கலாம்.

ஒரு வேட்பாளர் தன்னுடைய பாட்டனாரில் தொடங்கி தனது மனைவியின் அப்பா வரை விட்டு வைக்காமல் ஊரில் கொஞ்சம் பிரபலமாகவும் பேர் சொல்லும் படியு மிருந்த உறவினர்கள் பெயர் எல்லாம் போட்டு நான் இன்னாருடைய பேரன், இன்னாருடைய மருமகன், அவர்கள் அப்படி... இப்படி... என்று குடும்ப வரலாறு எழுதி வைத்திருந்தார்.

இன்னொருவர் ஒரு படி மேலே போய், தான் மக்களுக்காகச் செய்த சேவைகளை பட்டியலிடும் போது தான் ஒரு மாணவர் பிரச்சினையின் போது அவர்களுக்காக அங்கு சென்றதாகவும் அதன் போது தனது காருக்குக் கல்லால் எறிந்து விட்டார்கள் என்று போட்டிருந்தார். இவர்கள் இருவரும் ஒரு பிரபலமான கட்சியின் வேட்பாளர்களாக இருந்தவர்கள். என்ன தான் சொல்லியும் மக்கள் கேட்கவில்லையென்று நினைக்கிறேன், தோற்று விட்டார்கள்.

- வாகனங்களில் வேட்பாளர்களின் உருவங்களையும் அவர்களுடைய கட்சி சின்னம் மற்றும் எண்கள் கொண்ட 'ஸ்டிக்கர்'களை பெரியளவில் அடித்த ஹயஸ் வாகனங்கள், கார்கள் என்று ஊரெல்லாம் சுற்ற வைத்தார்கள்.
- பிரச்சார மேடைகள் இந்தத் தேர்தலில் பல்கிப் பெருகியிருந்தன. நிறையக் குழுக்கள் இந்தத் தேர்தலில் போட்டியிட்டதால், போட்டி போட்டுக்கொண்டு மேடைகளை அமைத்தார்கள், பிரச்சார இறுதி நாட்களில் 'எங்கெங்கு காணினும் மேடையடா' என்று எண்ணுமளவுக்கு சந்திக்குச் சாந்தி தேர்தல் மேடைகள் போடப்பட்டிருந்தன. தொலைக்காட்சி நாடகம் தொடங்கும் நேரத்திற்கு மேல் கூட்டங்கள் நடந்த போது பெருமளவான மக்கள் வீடு திரும்பியிருந்தனர். கோயில் திருவிழாக்களில் சாமிகளினால் கூட கட்டுப்படுத்த முடியாத மக்களின் ஆர்வத்தை திசை திருப்புமளவுக்கு யார் தான் பேசப் போகிறார்கள். ஆகவே மக்கள் வீடுகளுக்குச் செல்லத் தொடங்கியதும் ஒலிபெருக்கிகளை வீடுகளை நோக்கித் திருப்பினார்கள். அதை மட்டும் தான் திருப்ப முடிந்தது.

மது: பணம்: சாப்பாடு மற்றும் அதிகாரம்.

பெரும்பான்மை பெற்றிருக்கக்கூடிய கட்சியும் ஏனைய சில கட்சிகளும் வழமையாகச் செலவு செய்வதை விட அளவுக்கதிகமான பணத்தினை நாடு முழுவதும் செலவு செய்திருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் நாடு முழுவதும் பணத்திற் காகவும் மதுவிற்காகவும் இந்தத் தேர்தலில் வேலை செய்திருக்கிறார்கள். இது ஆய்வு அடிப்படையிலான முடிவு அல்ல. ஆனால், பரவலாக பெற்ற கருத்துக்களின் அவதானிப்பின் அடிப்படையில் இதை உறுதியாகச் சொல்ல முடியும். தமிழ்ப் பகுதிகளில் சில கட்சிகளுக்கு வேலை செய்த இளைஞர்களுடன் உரையாடினேன். உரையாடலின் போது அவர் ரோட்டுப் போட்டுத் தருவார், கழகத்திற்கு கதிரை வாங்கித் தருவார் அதுதான் அவருக்கு வாக்குச் சேகரிக்கப் போனோம் என்றார்கள். இன்னும் சிலர் தமிழ்க் கட்சிகள் பெரும் பாலானவை, ஒன்றோ இரண்டோ வாகனங்களைப் பிடித்து அதில் எல்லோரையும் அடைந்து ஏற்றி ஓரிடத்தில் இறக்கி விட்டு நடந்து சென்று வாக்குக் கேட்பார்கள், பெரும்பாலானவர்கள் வயோதிபர்கள் வேறு. ஆனால் குறித்த பணமும் அதிகாரமும் உள்ள கட்சிகளுக்கு வேலை செய்தால் வீடு வீடாக வாகனத்தை நிறுத்தி வாக்குக் கேட்க முடியும், வேலை முடிந்ததும் ஒவ்வொருவரையும் வீடு வீடாக இறக்கி விடுவார்கள், சாப்பாடு, சோடா, இளம் ஆட்கள் என்று கலகலப்பாக இருக்கும்... ஆகவே போனேன் என்றெல்லாம் பெரிய பட்டியல்களுடன் வருவார்கள். சரியென்று எல்லாம் கேட்டபின் எல்லோரிடமும் நீங்கள் வாக்குக் கேட்ட கட்சியின் பெயர் தெரியுமா என்று கேட்டேன். சிலர் திக்கித் திணறி ஏதோவொரு பெயரைச் சொன்னார்கள். பலருக்கு அப்போது தான் அப்படி ஒரு விடயமே இருப்பது உறைத்தது, பலருக்குத் தெரியவில்லை. வெறும் சின்னத்தைப் பார்த்து ஆளைப் பார்த்து வாக்குக் கேட்கச் சென்றிருக்கும் இந்த இளம் தலை முறையின் ஒரு பகுதியினரை நாம் எங்கோ தவறவிடுகிறோம்?

தமிழ்நாடும் இந்தியாவும் பல்வேறு வகைகளில் இலங்கையின் மீது பண்பாட்டுச் செல்வாக்கு மிக்கவை. தேர்தல் அரசியலிலும் இன்னமும் பெரியளவில் மதுவிற்கும் பணத்திற்கும் தேர்தல் வேலை செய்யும் கூட்டம் இதற்கு முன்னர் இந்த அளவில் உருவாகி இருக்கவில்லை. எதிர் காலத்தில் கட்சியின் தொண்டர்கள் எனும் பெயரில் சலுகைகளுக்காகச் சேரும் பெருங் கூட்டமொன்றின் அராஜகத்திற்குள் நமது ஜனநாயகம் என்ன பாடுபடப்போகிறதோ தெரியவில்லை.

அடுத்தது என்ன?

அன்றாட உரையாடல்களில் சும்மா வாக்குப் போடுவதற்குப் பதில் காசு தந்தாலாவது போடலாம் என்ற உரையாடல் சாதாரணமாகிவிட்டது. மக்களில் ஒரு பகுதியினர் சினிமா மூலமாகவும் தொலைக்காட்சி மூல மாகவும் தங்களது வாக்கை விற்கக் கூடாதென்பதைவிட வாக்கை விற்க முடியுமா? என்று சிந்திக்கத் தொடங்கி விட்டனர். இந்தளவு சீரழிவு நிலைக்கு ஜனநாயகத்தின் பேரில் பாராளுமன்றம் செல்பவர்கள் மக்களை எப்படி நடத்துகிறார்கள், அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எவ்வளவு வேலை செய்திருக்கிறார்கள் என்பதும் முக்கியமானதொரு காரணம்.

ஆனால் எந்தக் காலத்திலும் காசுக்கு வாக்குகளை விற்கும் நிலைக்கு மக்களை கை விடக் கூடாது. அதே நேரம் மக்கள் வாக்கு என்பதின் வலிமையை சரியாக உணர்வதும், அதைச் சரியாகப் பயன்படுத்தப் பழகுவதும் அவசியம். காசிற்காகவோ சலுகைகளுக்காகவோ தங்கள் வாக்குகளை விற்பவர்கள் தங்கள் தலையில் தாங்களே மண்ணை வாரி இறைத்துக் கொள்கிறார்கள். இப்படியானவர்கள் கொள்ளைக்காரர்கள். தாம் கொள்ளையடித்தவற்றிலிருந்தே உங்களுடைய பங்கை வழங்குகிறார்கள். அவரது திருட்டை ஏற்று அவருக்கே வாக்களிக்கிறீர்கள் என்றால்... நீங்கள் அவருடைய திருட்டில் பங்காளிகள் தானே.

- வடக்கில் புதிய கலாசாரம் ஒன்றும் தோன்றியிருக்கிறது, அது தேர்தல் வெற்றியின் பின் சில புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் உருவாக்கியிருப்பது. அதாவது முள்ளிவாய்க்கால் முற்றத்தில் சென்று சத்தியப் பிரமாணம் செய்வது. ஏற்கனவே தேர்தல் முழுவதும் கடந்த காலத்தில் மக்களுக்கு நிகழ்ந்தவற்றுக்கு தீர்வு வாங்கித் தருவோம் என்ற உறுதி மொழியுடன் கடும் தேசியவாதிகளாகத் தங்களைக் காட்டிக் கொண்டவர்கள், தெற்கில் சிங்களக் கட்சிகள் குறியீடாக பதவியேற்புகளைச் செய்வது போல வடக்கில் இவர்கள் இதைத் துவங்கியிருக்கிறார்கள். உதாரணத்திற்கு இந்த முறை கண்டியில் நிகழ்ந்த அமைச்சுக்களின் பதவியேற்பு நிகழ்வின் போது கண்டியின் பல இடங்களில் தனிச் சிங்கக் கொடி பறக்க விடப்பட்டமை.

இந்தக் குறியீட்டு நிகழ்வுகள் சரி, ஆனால் இவை இந்த நாடகத்தை மேலும் உணர்ச்சிகரமான காட்சிகளால் நிரப்பும் தோற்றத்தைத் தருபவையாகவே உள்ளது. பாராளுமன்றம் செல்ல முதலே குறித்த கட்சிகளுக்குள் பாரிய பிளவுகள் நடக்கின்றன, ஒருவரையொருவர் கடித்துத் தின்பது போல் செயலாற்றுகிறார்கள். எனக்கென்னவோ இவர்கள் உட்பட இங்குள்ள பல தமிழ்க் கட்சிகளில் வேட்பாளர்கள் பிடித்த சண்டைகளைப் பார்த்ததும் தேர்தலில் வாக்குகளை வாங்கி வெற்றி பெற்று இந்த மக்களைக் காப்பாற்றியே தீருவேன் என்ற இவர்களின் கடுமையான மக்கள் பற்றை நினைத்துக் கண்ணீர் வந்து விட்டது.

kannan@thaiveedu.com

■ ■ ■

STAY ONE STEP AHEAD OF CRA

SARVAA CPA
PROFESSIONAL CORPORATION

Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2010 - 2019)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

X-CRA Officers are on staff.

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM

VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272

mia sarees
Timeless Elegance
Unique Collections
Latest Trends
Bridal Selections Pure Silk Sarees Soft Silks Casual & Fancy Sarees

25 Karachi Drive, unit 18
Markham, ON
Tel: 647-339-4642
www.miasarees.com
miasarees

TRUE HAIR
REPLACEMENT
LET US MAKE YOU FEEL
YOUNGER AND MORE CONFIDENT
WITH VISIBLE RESULTS FOR YOUR HAIR LOSS.
WE USE ONLY TOP-QUALITY HUMAN HAIR
BEING IN THE BUSINESS OVER 30 YEARS WE TAKE GREAT PRIDE IN OUR WORK.
LET US TRANSFORM YOUR LOOK!!!
பண்டிகைக் காலப் பரிசாக உங்கள்
அன்புக்குரியவர்களுக்கு பரிசளியுங்கள்.
CALL US TO BOOK YOUR FREE CONSULTATION
416-492-7873

பண்பாட்டு அரசியல் / அரசியல் செயல்வாதம்

- கிரிசாந் -

பண்பாட்டு அரசியலையும் தேர்தல் அரசியலையும் பிரித்துப் பார்க்கப் பழக வேண்டிய தேவையும் அவசியமும் பொதுமக்களுக்கு உண்டு. அதே நேரம் இன்று பண்பாட்டு அமைப்புகளாக இருக்கும் பல அமைப்புகள் தங்களது அரசியல் நிலைப்பாடுகளிலிருந்து சமூகத்தை நோக்கி விரிந்து செல்லும் போது தாம் தேர்வு செய்து கொண்ட கருத்தியல் உள்ளடக்கத்தை சகல தளங்களிலும் பேச வேண்டிய தேவையும் இருக்கிறது. மக்களை அரசியல்மயப்படுத்த வேண்டியிருக்கிறது.

பண்பாட்டு அமைப்புகள் எவை? அவை ஏன் தேர்தல் அரசியலிலிருந்து மாறுபடுகிறது?

பண்பாடு அமைப்புகள் என்றதும் பொதுப் பார்வையில் தோன்றக் கூடியது - ஏற்கனவே உள்ள வழமைகளை, பழக்க வழக்கங்களை, அடையாளங்களை அப்படியே பேணிப் பாதுகாக்கும் அமைப்புகள் என்பதாகும். ஆனால் உண்மையில் ஏற்கனவே பண்பாட்டில் உள்ள ஒடுக்குமுறைகளுக்கும் அசமத்துவங்களிற்கும் எதிரான சிந்தனைகளையும், அதே நேரம் பண்பாட்டில் பழக்கத்தில் உள்ள அமைப்பு மற்றும் சிந்தனை முறைகளின் இடைவெளிகளில் உள்ள பற்றாக் குறைகளை இட்டு நிரப்பத் தேவையான சிந்தனைகளை உள்வாங்கிப் பரவலடையச் செய்ய வேண்டியவையே பண்பாட்டு இயக்கங்கள்.

உதாரணத்திற்கு மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு இயக்கம் என்றால் அது மரபை அப்படியே பேணுவதற்கான ஒரு பழமைவாத சிந்தனையை உண்டாக்கும் அமைப்பல்ல, மரபில் உள்ள முற்போக்கான சமூகத்திற்கு இன்றும் பயனளிக்கக் கூடியவற்றை பாதுகாத்தலும் மீண்டும் அவற்றைப் பொதுவெளிக்கு உரையாடலுக்கு கொண்டு வர வேண்டியதுமான பணியை ஆற்றும் இயக்கங்களே முற்போக்கானவை.

உதாரணத்திற்குச் சாதித் தொழில்களை அப்படியே பேணுவது மரபுரிமையல்ல. அதற்குள் உள்ள அசமத்துவங்களை வெளிக்கொண்டு வருவதும், சாதியைக் கடந்த சமூக அமைப்பை நோக்கியதுமான பயணத்தில் மரபின் பெயரில் நிகழ்த்தப்படும் ஒடுக்குமுறைகளுக்கெதிரான பொதுமக்களின் கவனத்தைக் குவிக்கச் செய்யவும் மரபுரிமை என்ற சட்டகம் பயன்படுத்தப்படுகிறது.

சில அமைப்புகள் மரபுகளை அப்படியே பேண வேண்டும். அவை மாற்றப்பட முடியாதவை என்பதான கருத்துக்களைக் கொண்டிருப்பவை. அவை ஒரு வகையில் 'கலாசாரக் காவல்' அமைப்புகள் என்பதாக ஆகிவிடுமே ஒழிய, அவை ஒரு பண்பாட்டு இயக்கமோ அமைப்போ அல்ல. அவற்றை அழைக்க வேண்டிய பெயர் பழமைவாத அமைப்புகள். உதாரணத்திற்கு பெரும்பாலான ஊர்களில் உள்ள தமிழ்ச் சங்கங்கள் என்ன வகையான பணியை ஆற்றுகின்றது என்று பார்த்தால் தெரிந்துவிடும். தமிழ்ச் சங்கத்தை முதன் முதலில் தமிழர்கள் தொடங்கிய காலத்திலிருந்த பழக்க வழக்கங்களிலிருந்து சில மாறுபாடுகளுடன் இன்னமும் பழமையைப் பேணும் அமைப்புகளாகவே இயங்கி வருகின்றன. அவற்றில் புதியதான சிந்தனைகளோ, மக்கள் நலன் சார்ந்த அறிவுழைப்புள்ள செயல்வாதங்களோ நிகழ்வதில்லை. அங்கு பெரும்பாலும் நடப்பவை என்ன? அதே பழைய கம்பன், அதே பழைய பாரதி. அதே மாலைகள், அதே பொன்னாடைகள், அதே பாராட்டுக்கள்.

மேலும் பெண்கள் தொடர்பில், சமூக நம்பிக்கைகள் தொடர்பில் பெரும்பாலான சங்கங்கள் பிற்போக்கான கருத்துக்களையே தங்கள் மூளைக்குள் வைத்திருக்கின்றன. இவற்றை மாற்றுவதற்கும் தற்காலத்தின் முன்னேறிய அறிவை அல்லது வாழ்க்கை முறையை மற்றவர்களுடன் உரையாடவே பண்பாட்டு இயக்கங்கள் தேவை.

சிந்தனையில் உள்ள கருத்துக்களைப் பரவலடையச் செய்யவே பண்பாட்டு அமைப்புகள் பல்வேறு வடிவங்களை அல்லது கருவிகளைக் கையாள்கின்றன. உதாரணத்திற்குப் பால் புதுமையினருக்கான பண்பாட்டு அமைப்பு சுயமரியாதை நடையை ஒழுங்கமைக்கிறது என்றால், பொது வெளியில் உண்டாகும் கவனக்குவிப்பும் குறித்த அமைப்பின் உரிமைகள் சார்ந்த உரையாடலும் பொதுமக்களின் கண்களின் முன் நிகழும், ஊடகங்களின் ஊடாக அது பரவலடையும். பொது விழிப்புணர்வை நோக்கிய பயணத்திற்கு அதுவொரு கருவி, பிரசுரங்கள், கலைகள், பேச்சுக்கள், கலந்துரையாடல்கள் என்று எல்லா வடிவங்களையும் தமது நோக்கங்களினைப் பரவலடையச் செய்யப் பண்பாட்டு இயக்கங்கள் பயன்படுத்தும்.

> **"பள்ளிக்கூடங்களில் உரையாடல் கழகங்கள் உருவாக்கப்பட வேண்டும். மாணவர்கள் 'கண்ணகியா சீதையா கற்பில் சிறந்தவள்' போன்ற பிற்போக்கு தலைப்புகளை இன்னமும் காவித் திரிவதை விடுத்து, புதிய விடயங்களை உரையாடித் தெளியும் வடிவத்தைப் பழகவேண்டும்."**

அதே நேரம், இரண்டு தற்பாலீர்ப்புக் கொண்டவர்களின் இணையேற்பு நிகழும் போது, பண்பாட்டின் அமைப்பு மற்றும் சிந்தனை முறைகளில் உள்ள குறைபாடுகளை இட்டு நிரப்பும் பணி அது. சுயமரியாதை நடை சிந்தனை நோக்கிய ஒரு வடிவம், இணையேற்பு குடும்ப அமைப்பு முறைகளில் ஏற்பட வேண்டிய மாற்றம் தொடர்பான நடைமுறை மாற்றம். சட்ட ரீதியாக இலங்கையில் இன்னமும் இது சாத்தியமில்லையாயினும் உலகின் பல முன்னேறிய நாடுகள் தற்பாலிர்ப்பாளர்களின் இணையேற்புத் தொடர்பில் சட்டங்களை உருவாக்குகின்றன. இந்தியாவில் தற்பாலீர்ப்பு தண்டனைக்குரிய குற்றமாக இருந்தமை நீக்கப்பட்டது அண்மையில் தான். இப்படிப் படிப்படியாக நிகழும் மாற்றங்களை நமது சமூகமும் அடைந்து முன்னேறிய சமூகமாக, மேலும் மற்றவர்களின் தேர்வுகளை மற்றும் உரிமைகளை மதிக்கின்ற மனிதர்களாக மாறுவதற்கு மக்கள் அமைப்பாய்த் திரள்வதும் அதனூடாக அரசியல்மயப்படுத்தலை நோக்கமாக கொண்ட பண்பாட்டு இயக்கங்களை நோக்கி அணிதிரள்வதும் அவசியமானது.

தேர்தல் அரசியலிலிருந்து பண்பாட்டு அமைப்புகள் மற்றும் இயக்கங்கள் மாறுபடும் எல்லைகளை விளங்கிக் கொள்வது தான் இங்கு மிக முக்கியமானது.

முற்போக்கான பண்பாட்டு அமைப்புகள் / இயக்கங்கள் உரையாடும் விடயங்கள் தொடர்பில் அவற்றுக்கான சட்ட ரீதியான பாதுகாப்பை வழங்குவதும், அவற்றை ஏற்கனவே உள்ள சமூக மட்ட அமைப்புகளின் ஊடாக சமூகப் பரவலாக்கம் செய்வதற்கும் தேர்தல் அரசியல் மூலம் கிடைக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும். மக்கள் மத்தியில் மேலிருந்து கீழ் நோக்கி வரும் சட்டங்களையோ கட்டுப்பாடுகளையோ மட்டும் அடிப்படையாக வைத்துப் பண்பாட்டு மாற்றங்களை ஆழமாக முன் நகர்த்த இயலாது. ஆகவே தான் பண்பாட்டு அமைப்புகள் தேர்தல் அரசியல் மூலமான அதிகாரத்தை அடைவதை விட மக்களிடம் கருத்தியல் ரீதியிலான சிந்தனை மாற்றத்தையும் பகுத்தறிவையும் உண்டாக்க வேண்டியவை. அதற்கு மாற்றீடாக மக்கள் அதிகாரத்தை அடைய வேண்டியவை.

பண்பாட்டு அமைப்புகள் தாம் முன்வைக்கும் கருத்தை நோக்கி மக்களைக் கொண்டு சேர்க்க இயங்குபவை. அதே நேரம் தமது நம்பிக்கைகளை மட்டுமே சரியென்று கருதுபவை அல்ல. பண்பாட்டு இயக்கங்கள் அடிப்படையில் உரையாடல் தன்மை வாய்ந்தவை. அவை விவாத மன்றங்கள் அல்ல. விவாத மேடைகளின் அடைப் படைத் தர்க்கம் என்ன? தான் நிற்கும் தரப்பே சரியானதென்று வாதிடுதல். அதற்குத் தன் தர்க்கங்களையும் ஆற்றலையும் செலவளித்தல். திருடர்களை அயோக்கியர்களையும் காப்பாற்றும் சட்டத்தரணிகளுக்குத் தேவையான திறமை இது. ஆனால் மறுவளமாக பண்பாட்டு இயக்கங்கள் உருவாக்க நினைப்பவை உரையாடல்கள், அவை எது சரியானது என்பதைக் கண்டுபிடிக்க அதை நோக்கிய பல்வேறு தர்க்கங்களின், நியாயங்களின் தொகுப்பாக இருப்பவை. இது தான் அடிப் படை வேறுபாடு. நமது பள்ளிக்கூடங்களும் தமிழ்ச் சங்கங்களும் விவாதிகள் கழகங்களும் இத்தனையாண்டு காலமும் கொண்டிழுப்பது இந்த வடிவத்தைத் தான். மக்கள் தான் நம்புவதைச் சரியென்று நிரூபிப்பதற்கான கெட்டிக்காரத்தனமான வாதங்களையே கைகொட்டி ரசிக்கப் பழகிவிட்டார்கள். இவர்களும் பழக்கி விட்டார்கள்.

நமது பள்ளிக்கூடங்களும் பொது அரங்குகளும் உருவாக்க வேண்டிய வடிவம் உரையாடல் என்பதே. பள்ளிக்கூடங்களில் உரையாடல் கழகங்கள் உருவாக்கப்பட வேண்டும். மாணவர்கள் 'கண்ணகியா சீதையா கற்பில் சிறந்தவள்' போன்ற பிற்போக்கு தலைப்புகளை இன்னமும் காவித் திரிவதை விடுத்து, புதிய விடயங்களை உரையாடித் தெளியும் வடிவத்தைப் பழகவேண்டும். அங்கு வெற்றி என்பது சரியான முடிவை நோக்கி நகர்வது மட்டும் தான். அங்கு எந்தத் தனிநபரும் வெற்றி பெறப் போவதில்லை. ஒரு சிக்கலான பிரச்சினைக்கெதிரான சரியான தீர்வே வெற்றி. அதுவே நம் குழந்தைகளுக்கு நாம் கற்றுத் தரவேண்டிய பண்பு மாற்றம். அதுவே அவர்களை அரசியல்மயப்படுத்தும். சமூகத்தின் பல்வேறு பிரச்சினைகளை எடுத்து அவற்றை எப்படித் தீர்ப்பதென்று உரையாட வேண்டும். நான் பெரிதா நீ பெரிதா என்பதல்ல அதன் உளவியல், நாம் எல்லோரும் சேர்ந்து சரியானதைக் கண்டுபிடிக்க அல்லது மேம்பட்ட தீர்வைக் கண்டுபிடிக்க உழைப்பதே அதன் உளவியல். தனி எதிர் கூட்டு என்ற நிலை மாற்றம் தேவை, அதுவே நம் பண்பாட்டின் எல்லாத் தளங்களிலும் நிகழ வேண்டிய மாற்றம். குடும்பங்களுக்குள் உரையாடல் வற்றிவிட்டது. அல்லது ஏற்கனவே இருக்கும் உரையாடல் என்பது ஒரு சிறிய வட்டத்திற்குள் திரும்பத் திரும்பச் சுழல்வதாகவே இருக்கிறது.

இதன் பின்னனியில், தேர்தல் அரசியலோ மக்களின், ஏற்கனவே உள்ள விருப்பங்களுக்கும் நம்பிக்கைகளுக்கும் நடைமுறைகளுக்கும் ஏற்ப இயங்குபவை. அவற்றை பகுதியளவில் மாற்றக் கூடிய கட்சிகள் இருக்கின்றன. ஆனால் சிந்தனை மாற்றமும் பண்பு மாற்றமும் தீவிரமாக நிகழாத பண்பாட்டு வெளியில் மக்களின் தேர்தல் மூலமான அதிகாரம் அக்கட்சிகளுக்குக் கிடைப்பதற்கு சாத்தியமில்லை. இலங்கையில் தொடர்ந்து செயலாற்றும் தனித்த பண்பாட்டு இயக்கங்கள் என்பதற்கு எந்த முன்னுதாரணங்களுமில்லை. ஆகவே தான் இன்னும் இன்னும் தேவையெழுகிறது.

பெரியார் தமிழ்நாட்டில் உருவாக்கிய சுயமரியாதை இயக்கம் தமிழ் வரலாற்றைப் பொறுத்த மட்டில் மிகுந்த முன்னோடித் தன்மை வாய்ந்தது. சுயமரியாதை - சமதர்மம் என்ற அடிப்படைகளைக் கொண்டு அவர் உருவாக்கிய இயக்கம் முழுமையான அளவில் பண்பாட்டு இயக்கங்களை உருவாக்க இலங்கையில் உழைப்பவர்கள் கற்க வேண்டியது.

இறுதியாக தேர்தல் அரசியல் கட்சிகளிடமிருந்து பண்பாட்டு இயக்கங்கள் பிரிந்து நின்று உழைக்க வேண்டிய தேவை அதிகமுள்ள காலப்பகுதியில் கட்சி சார்புகளினால் மக்கள் நம்பிக்கையை இழக்க நேரிடும். அதே நேரம் கட்சிகளும் பண்பாட்டு இயக்கங்கள் உருவாக்கிய மக்கள் நம்பிக்கை என்ற விளைச்சலை வாக்குகளாக மாற்றிவிட்டு அதிகாரத்திற்கு நகர்ந்துவிடக் கூடியவை. ஆகவே நமது காலத்தைப் பொறுத்த வரையில் கட்சி சார்பற்ற அனைத்து மக்களினதும் நலன் சார்ந்த உரையாடல்களை உண்டாக்கக் கூடிய பண்பாட்டு இயக்கங்கள் உருவாக வேண்டும். அவற்றைப் பொதுமக்கள் அடையாளம் கண்டு ஊக்குவிக்க வேண்டும்.

பண்பாட்டு அமைப்புகளோ அல்லது இயக்கங்களோ மக்களிடம் உண்டாக்கும் உரையாடல்களுக்கும் சிந்தனை மற்றும் அமைப்பு மாற்றக் கோரிக்கைகளுக்குப் பதிலாகத் தேர்தல் அதிகாரத்தைக் கோரினால் அது வொரு வகையிலான கொடுக்கல் வாங்கலாக மாறிவிடும். தமது நம்பிக்கைகளை மாற்றுவதற்கும் அமைப்பு முறை மாற்றத்திற்கும் இயங்கும் பண்பாட்டு அமைப்புகளும் ஆற்ற வேண்டிய பணி முதன்மையானது. அவற்றை பாதுகாப்பதும் நடைமுறைப்படுத்த இயங்குவதும் தேர்தல் அரசியலில் ஈடுபடுபவர்கள் செய்ய வேண்டியது.

மக்கள் தாங்கள் ஏற்கனவே கொண்டிருக்கும் நம்பிக்கைகளுக்கு உருவேற்றுபவர்களை விட்டுவிட்டு, தங்களை நோக்கிக் கேள்விகளோடும் விமர்சனங்களோடும் வருபவர்களை நோக்கிக் காதுகளைத் திறந்து கொள்ள வேண்டும். புத்தர் சொல்வது போல, வள்ளுவர் சொல்வது போல, பெரியாரும் சொல்வது போல, 'எங்கு எதில் என்ன சொல்லியிருந்தாலும், நானே சொன்னாலும் உனது புத்திக்கும் பகுத்தறிவுக்கும் பொருந்தாத எதையும் நம்பாதே.' ஆகவே திறந்த மனதுடன் பண்பாட்டு இயக்கங்களின் உரையாடல்களில் பங்கு பற்றவும் அரசியல்மயப்பட வேண்டியதுமான தேவை நம் காலத்தில் நமக்கு முன்னுள்ளது.

kirishanth@thaiveedu.com

■ ■ ■

கமலா ஹாரிஸ்: அடுத்த அமெரிக்கத் துணை ஜனாதிபதி?

- கந்தசாமி கங்காதரன் -

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நெருங்குகின்றது. ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடன், தான் வெற்றி பெற்றால், துணை ஜனாதிபதியாக கமலா ஹாரிஸ் இருப்பார் என்று ஒகஸ்ட் நடுப் பகுதியில் அறிவித்தார்.

சூடுபிடித்தது அமெரிக்க அரசியல் களம்.

கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்க அரசியலில் அடிக்கடி கவனத்தை ஈர்த்த பெயர் கமலா ஹாரிஸ். Donald J.Harris என்ற ஜமைக்காவில் பிறந்த கறுப்பினத்த வருக்கும் சியாமளா கோபாலன் என்ற தமிழ்நாடு, இந்தியாவில் பிறந்த பெண்ணுக் கும் அமெரிக்காவில் பிறந்தவர்கள் கமலா, மாயா ஆகியோர். அரசியல், பொருளியல், சட்டம் ஆகியவற்றில் மூத்தவர் கமலா பட்டம் பெற்றார். ஹாவார்ட் பல்கலைக் கழத்திலும் கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்திலும் கற்ற கமலா கலிபோர்னியா மாநிலச் சட்டத்துறையிலேயே பணியாற்றத் தொடங்கினார். படிப்படியாகப் பதவி உயர் வுகள் பெற்று, கலிபோர்னியா மாநிலச் சட்டமா அதிபராக 2010இல் தெரிவானார். கலிபோர்னியா மாநிலத்தில் அடைமானக் கடன் வழங்குநர்களின் முறையற்ற செயற் பாடுகளை, அப்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நிர்வாகத்திலிருந்து வந்த அழுத்தங்களையும் தாண்டிக் கட்டுப்படுத் தினார். பாதிக்கப்பட்டவர்களுக்காகப் போ ராடி பாரிய இழப்பீட்டுத் தொகையையும் பெற்றுக் கொடுத்தார்.

2012இல் ஜனநாயகக் கட்சியின் தேசிய மா நாட்டில் உரையாற்றியதன் மூலம் பாரிய கவனம் பெற்றார். 2016ம் ஆண்டு, அமெ ரிக்க மேலவை உறுப்பினராக வெற்றி பெற்றார். 2017இல் பதவியேற்றார். அமெ-ரிக்க மேலவை உறுப்பினராக வெற்றி பெற்ற இரண்டாவது ஆபிரிக்க அமெரிக்-கப் பெண்ணும் முதலாவது தென்னாசியர் என்றும் வரலாற்றில் இடம்பெற்றார். 2016 இல் நடந்த அமெரிக்கத் தேர்தலில் ரஷ்யத் தலையீடு தொடர்பில் புலனாய்வுக் குழு வின் முன் சாட்சியமளித்த அமெரிக்கச் சட்டமா அதிபர் Jeff Sessions ஐ கேள்விக் கணைகளால் திணறடித்தார்.

விவாதங்களில் அவரை வெல்வது கடினம். தப்பிக்க முடியாத கூர்மையான கேள்வி களைக் கேட்பவர் என்ற பெயர் அவருக் குண்டு.

2019இல், 2020க்கான ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்கான போட்டியில் களமிறங்கினார். குறுகிய காலத்தில் பாரிய ஆதரவுத் தளத்தை உருவாக்கிக்கொண் டார். சக வேட்பாளரான ஜோ பைடன் 1970, 1980களில் பள்ளிப் பேருந்து சேவை களை எதிர்த்தமையைக் கேள்வியாக்கி, ஜோ பைடன் ஓர் இனவாதியோ என்ற கேள்வி எழ வைத்தார். தொடக்கத்திலே ஆதரவு அதிகரித்தாலும் பின்னர் தொ டர்ந்த நெருக்கடிகளால் 2019 டிசம்பரில் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட் பாளருக்கான போட்டியிலிருந்து விலகிக் கொண்டார். நிதி நிலைமையும் விலகு வதற்கான காரணமாகும்.

2020 மேயில் காவற்துறை அதிகாரி ஒரு வர் முழங்காலால் அழுத்தி வைத்திருந்த தில் கறுப்பினத்தவர் George Floyd மரண மானதைத் தொடர்ந்து, சமூக நீதித் சீர் திருத்தம் வேண்டியும் தனது செயற்பாடு களைத் தீவிரப்படுத்தினார்.

இந்நிலையில், 'கறுப்பினத்தவரின் உயிர் களும் முக்கியமானவையே' (Black Lives Matter) போராட்டங்கள் தீவிரம் பெற்று இனச்சமத்துவமின்மை இன்னமும் அமெரிக்-காவில் வலுவாகக் காலூன்றி இருக்கின்றது என்ற வாதமும் முன்வைக்கப்பட, ஓர் ஆபி-ரிக்க அமெரிக்கர்... அதிலும் பெண் ஒரு வர் ஜனநாயகக் கட்சி சார்பில் துணை ஜனாதிபதியாக வரவேண்டும் என்ற வேண் டுகோள் பலமாக முன்வைக்கப்பட்டது. பல கறுப்பின அரசியல்வாதிகளும் பிரமுகர் களும்கூட அழுத்தம் கொடுக்க, கமலா ஹாரிஸ் வருங்காலத் துணை ஜனாதிபதி யாகும் வாய்ப்பைப் பெற்றார்.

கமலா ஹாரிஸ் தந்தை வழியாகக் கறுப் பினத்தவர், ஜமைக்கர். தாய்வழி இந்தியர், தமிழர். தென்னாசியர். ஆகவே அமெரிக்-காவின் துணை ஜனாதிபதியாகக் கூடிய முதலாவது கறுப்பினத்தவர், தென்னாசியர், இந்தியர், தமிழர் ஆகின்றார் கமலா ஹா-ரிஸ். அதே வேளை, ஒரே கட்சிக்குள் ஒரே பதவிக்கான வேட்பாளர்களாகப் போட்டியிட் டுத் தன்மீதான குற்றச்சாட்டுகளின் மீது நெகிழ்ந்திருக்கிறார் கமலா.

ஆனால், அமெரிக்க மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் படிவத்தில் தன்னுடைய பூர்வீகம் 'ஆபிரிக்க அமெரிக்கர்' என்றே குறிப்பிட்டாராம் கமலா. தென்னாசிய, இந்-திய, தமிழ்ப் பூர்வீகத்தையும் அன்னையை யும் மறந்து ஆபிரிக்க அமெரிக்க அடை யாளத்தையே கமலா முன்நிறுத்துகிறார் என்றும் பொங்கியது Toronto Sun.

இந்தியப் பூர்வீகத்தை விடுத்து தந்தை யின் ஜமைக்கா அடையாளத்தை முன்னி றுத்தும் கமலாவிடம் தந்தைப்பற்றி அதிகம் சொல்வதற்கில்லையாம். கூடவே தந்தை

கடுமையான வாதப்பிரதிவாதங்களை முன் வைத்த கமலா ஹாரிஸ் அவர்களைத் தனது துணை ஜனாதிபதியாக வரப்போ கின்றவர் என்று அறிவிக்கின்றார் ஜோ-பைடன். மேற்குலகின் பல நாடுகளில் நிலவும் அரசியல் நாகரிகம் இது. இவ் வேளையில், உலகில் எங்கு வாழ்ந்தா லும் ஒரு கட்சியின் ஒரு தொகுதிக்கான வேட்பாளராக முனைந்த இரு தமிழர்கள், அந்தப் போட்டி முடித்த பின்பும் தீராப்ப கையோடு இருப்பதையும் சங்கடத்தோடு நினைவிற் கொள்ளவேண்டியிருக்கிறது.

ஜோ பைடன் வெற்றி பெற்றால்; அமெரிக்-காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதி யின் உப ஜனாதிபதியாக பணியாற்றியவர் ஜனாதிபதியாகும் போது, அமெரிக்காவின் முதலாவது கறுப்பின உப ஜனாதிபதி யும் பதவியேற்பார். கமலா ஹாரிஸின் பெயர் அறிவிக்கப்பட்டது. அமெரிக்க ஊட கங்கள் பலவும் 'உப ஜனாதிபதியாகக் கூடிய முதலாவது கறுப்பினப் பெண்மணி' என்ற வகையில் முழங்கின. அவரைக் கறுப்பினப்பெண் என்கிறார்கள். ஆனால் அவருடைய இந்து மத, தமிழ் அடையா ளங்கள் எங்கும் பேசப்படவில்லை என்று பற்றவைக்கிறது Toronto Sun.

2014இல் சட்டவாளர் Doug Emhoffஐத் திரு மணம் செய்தார். குடியரசுக் கட்சித் தரப்பி லிருந்து, கமலா ஹாரிஸ் ஒரு யூதரைத் திருமணம் செய்தவர் என்று ஈனஸ்வரத் தில் ஒரு விமர்சனம் எழுந்து காற்றில் கரைந்துபோனது.

கமலாவுக்கு 7 வயதாக இருக்கும் போது தந்தை மணவிலக்குப் பெற்றுப் பிரிந்து செல்ல, அம்மா சியாமளா கோபாலன் ஹாரிஸ் மொன்றியாலுக்குக் குடிபெயர்ந் தார் அங்கேயே மார்பகப் புற்றுநோய் நிபுணராக யூதப் பொது மருத்துவமனை யில் பணியாற்றியவாறே McGill பல்கலைக் கழகத்திலும் கற்பித்தார்.

"எனக்கு எல்லாமே அம்மாதான். சியாமளா கோபாலன் ஹாரிஸின் மகள் என்பதைவிட எனக்கு இந்தப் பூமியில் வேறெந்தப் பெயரோ புகழோ தேவையில்லை" என்று யின் கோபத்தையும் கமலா சம்பாதித்து வைத்திருக்கிறாராம். "எப்போதாவது கஞ்சா புகைத்திருக்கிறீர்களா?" என்று ஊடகர் களால் கேட்கப்பட்ட போது, "என்ன பகிடி விடுகிறீர்களா? என் பாதி குடும்பம் ஜமைக் காவிலிருந்து வருகிறது." என்றிருக்கிறார் கமலா.

கறுப்பின ஜமைக்கர்கள் எப்போதுமே கஞ்சா புகைப்பவர்கள் என்னும் பொருள் பட கமலா கூறிவிட்டாரென்று கமலாவின் தந்தை Donald J. Harris ஜமைக்காப் பத்திரிகையொன்றில் ஒரு சிறு குறிப்பு வரைந்தார். அரசியலுக்காகவோ நகைச் சுவையாகவோ ஜமைக்கா அடையாளம், கஞ்சா ஆகிப்போனது குறித்து, காலமாகி விட்ட தனது பெற்றோரிடமும் தாத்தா பாட் டியிடமும் மன்னிப்புக்கோரியது அந்தக் குறிப்பு.

கமலாவின் இந்தக் கஞ்சாக்கதை பல கறுப் பினத்தவர்களைக் கோபப்படுத்தியதை மறுக்கமுடியாது. கறுப்பினத்தவர் தரப்பு இப்படியென்றால் அமெரிக்காவில் வாழும் இந்தியர்களிலும் பலர் கமலா ஹாரிஸ் மீது வெறுப்பைக் கக்குகிறார்கள்.

ஜோ பைடன், கமலா ஹாரிஸின் பெயரை அறிவித்த போது பல இந்தியர்கள் வடக் குத் தெற்கு வேறுபாடின்றிக் கொண்டாடி னார்கள். அதன்பிறகு, கமலா ஹாரிஸ் காஷ்மீர் விடயத்தில் இந்தியாவுக்கு ஆதர வாக இல்லையென்று எதிர்க்கிறார்கள். தன்னை இந்தியராக அடையாளப்படுத் தாததால் இந்தியப் பூர்வீகம் கொண்ட குடியரசுக்கட்சி ஆதரவாளர்களும் இன்ன மும் முடிவெடுக்காத கணிசமான வாக் காளரும் கமலாவை எதிர்க்கிறார்கள்.

இந்து, இந்தியர், போன்ற அடையாளங் களை அவர் மறைக்கிறார் என்பதும், காஷ்-மீர் தொடர்பிலான அவரது நிலைப்பாடும் அமெரிக்காவில் வாழும் பல இந்தியர்களி டம் ஆதரவு இல்லாதமைக்கும் காரணங் கள்.

ஆனால், இந்திய - அமெரிக்கர்களுக்காக அவர் ஆற்றிய உரையில் தனது சென்னை அனுபவங்களையும் இட்லி விருப்பையும் நினைவு கூர்ந்தார் கமலா. தனது உப ஜனாதிபதி வாய்ப்புக்கான அறிவிப்பை ஏற்றுக்கொண்டு அமெரிக்கர்களுக்கு ஆற் றிய உரையில் தனது குடும்பம் என்று வரும்போது "Family is my Uncles, My aunts and My Chithis" என்று ஆங்கில உரையில் தமிழ்ச்சொல்லைச் சேர்த்துக் கமலா ஹாரிஸ் சொல்ல, Washington Post, New York Times, NBC போன்ற முன் னணி அமெரிக்க ஊடகங்கள் பலவும், 'சித்தி' எனும் சொல்லை ஆராய்ந்துதள்ளி விட்டன.

அமெரிக்காவில் வாழும் 3.9 மில்லியன் இந்தியர்களுள் 300,000 பேர் தமிழர்கள். இந்திய அமெரிக்கர், தென்னாசிய அமெரிக் கர் என்றுதான் பலரும் அடையாளப்படுத்து வர். கனடாவில் தமிழ்க்கனடியர் என்பது போல தமிழ் அமெரிக்கர் என்று சொல் வது அரிது. ஆனால் இப்போது, கமலா ஹாரிஸின் உப ஜனாதிபதி வாய்ப்பும் அவர் சொன்ன 'சித்தி'யும் பலரையும் 'நானும் தமிழ் அமெரிக்கர்' என்று சொல்ல வைத்திருக்கிறது. Washington Post சித்தி பற்றிய ஆராய்ச்சியில் 'சித்தி' என்று தமி ழிலேயே அச்சிட்டிருந்தது. மொத்தத்தில் சித்தி என்ற சொல் பல தமிழர்களை நாமும் தமிழர்கள் என்று சொல்ல வைத்திருக்கிறது.

இந்தச் சர்ச்சைகள், ஆரவாரங்கள் ஒரு புற மிருக்க ஒக்ரோபர் 7ம் நாள் குடியரசுக் கட்சியின் சார்பில் உப ஜனாதிபதி பத விக்காக அறிவிக்கப்பட்டுள்ள Mike Penceக் கும் கமலா ஹாரிஸுக்கும் ஒரு விவா தம் நடக்கவுள்ளது. 'கூர்மையான, அடுக் கடுக்கான கேள்விகளால் துளைக்கெடுக் கும் கமலா ஹாரிஸிடம் Mike Pence மாட்டிக்கொள்ளப்போகிறாரா இல்லையா' என்று குடியரசு ஆதரவாளர்கள் தங்களுக் குள் பேசிக்கொள்கிறார்கள். ஓகஸ்ட் பிற் பகுதி நிலைவரப்படி, டொனால்ட் ட்ரம்பி லும் ஜோ பைடன் 10 - 11% மேலதிக ஆதரவோடு முன்னிலையில் இருப்பதாகச் சொல்லப்பட்டது. கருத்துக் கணிப்புகள் வாக்குகளாக மாறும்போது அல்லது மாறி னால் அமெரிக்காவின் வரலாற்றில் ஓர் ஆபிரிக்க அமெரிக்கர், இந்திய அமெரிக்-கர், தென்னாசிய அமெரிக்கர், தமிழ் அமெரிக்கர், எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு பெண் முதற்தடவையாக அமெரிக்க உப ஜனாதிபதியாவார்.

gangatharan.k@thaiveedu.com

Lower rates.
Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

Senthooran Punithavel

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

797 Milner Avenue, Unit 200
Scarborough, ON M1B 3C3

குறைந்த கட்டணங்கள்
பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators®
A Better Place For You®

மண்டியிட்டது அமெரிக்கா?

- குகன் சங்கரப்பிள்ளை -

எப்படி இது நடந்திருக்க முடியும்? தூசை விட பத்தாயிரம் மடங்கு மிகச்சிறிய, உயிரினம் என்று கூட சொல்லமுடியாத ஒன்று, இந்த பூமியில் உள்ள மிக பெரிய வல்லரசை எப்படி மண்டியிட வைத்துவிட்டது. உன்னதமான மருத்துவமனைகள், நிபுணத்துவம் மிகுந்த வைத்தியர்கள், பிரமிக்க வைக்கும் தொழில் நுட்பம், அதிக அளவு பணக்காரர்கள்... இவை யாவற்றையும் தன்னகத்தே கொண்ட அமெரிக்கா, இந்த கொரோன வைரசின் பிடியில் ஏன் சிக்கி தவிக்க வேண்டும். உலக சனத்தொகையில் ஆக 4 விகிதமான மக்களே அமெரிக்காவில் வசிக்கிறார்கள், இருந்தும் கெரோனா வைரசினால் இது வரை இறந்த மக்களில் 25 விகிதமானவர்கள் அமெரிக்கர்கள். இந்தக்கட்டுரை எழுதி கொண்டிருக்கும் இந்த கணத்திலும் ஆயிரத்துக்கும் அதிகமானோர் தினமும் இறந்து கொண்டிருக்கின்றனர், உலகளவில் 5.7 மில்லியன் மக்கள் கொரோனா தொற்று நோய்க்கு ஆளாகி உள்ளனர். அவலம் என்னவெனில் இது உத்தியோகபூர்வ கணக்கீடு. உண்மையாக கொரோனாவால் நோய்வாய் பட்டவர்களினதும், இறந்தவர்களினதும் எண்ணிக்கை, இதை விட பல மடங்கு அதிகமாகவே இருக்கலாம் என்று நியூ யார்க் டைம்ஸ் பத்திரிகை குறிப்பிடுகின்றது.

முதலில் சீனாவின் வூஹான் (Wohung) மாகாணத்தில் சீனா அரசாங்கத்தின் இறுக்கமான கட்டுப்பாடுகளை அமுல்படுத்திய காணொளிகளை ABC (Australian Broadcasting Corporation) தொலைகாட்சி நிறுவனம் ஒளிபரப்பியபோது, மேற்குலக நாடுகள் ஒரு வகை சந்தேக கண்ணோட்டத்துடன் சீனாவை பார்த்தார்கள். கம்யூனிச சீனா தனது அதிகாரத்தை மூர்க்கமாக மக்கள் மீது பிரயோகிக்கிறதா என்று கேள்வி எழுப்பப்பட்டது. சீனாவும் இந்த வைரஸ் நோய் பரவும் வேகம் பற்றி முற்றுமுழுதாக உலக சுகாதார நிறுவனத்துக்கோ, உலக நாடுகளுக்கோ அறிவிக்க வில்லை. சீனாவில் பரவிய வைரசின் தாக்கங்களை முழுமையாக புரிந்து, தங்கள் நாடுகளில் இப்படி ஒரு வைரஸ் வருமாயின் என்ன செய்யலாம் என்று திட்டமிடுவதை விடுத்து, அமெரிக்கா உட்பட பல நாடுகள் சீனாவை குறை கூறுவதிலேயே காலத்தை கடத்தினார்கள்.

கொரோனா வைரசு உலகெங்கும் பரவி இத்தாலியிலும் ஸ்பெய்னிலும் ஆயிரக் கணக்கான மக்களை பலி எடுத்த போது, உலகெங்கும் உள்ள பல வளர்ந்த, பணக்கார நாடுகள் உசாரடைந்து கட்டுப்படுத்தும் காரியங்களில் இறங்கி வெற்றி பெற்றன. கனடா போன்ற நாடுகள் இந்த நடவடிக்கைகளில் தாமதமாக தொடங்கினாலும், இத்தாலி, ஸ்பெய்ன், நியூயார்க் நகர் போன்ற இடங்களில் ஏற்பட்டது போல ஒரு மோசமான நிலைமையினை தவிர்த்துக் கொண்டன. இந்த வருடம் பங்குனி மாதம் பல நாடுகளில் கொரோனாவின் பரவல் உச்ச நிலையில் இருந்தது. பின்னர் கோடை காலத்தின் தொடக்கத்தில் பரவலின் விகிதம் குறைய தொடங்கின. அமெரிக்காவில் கூட ஆரம்பத்தில் சிறிது குறைய தொடங்கியது. ஆனால் அமெரிக்காவில் சில வாரங்களில் மீண்டும் பரவலின் வேகம் கட்டுக்கடங்காமல் அதிகரிக்க ஆரம்பித்து இன்று வரை தொடர்கின்றது. அமெரிக்கா உண்மையாகவே கொரோனா வைரசின் முன் மண்டியிட்டுள்ளது. இதற்கு சகல அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்ட அமெரிக்க அதிபர் - டோனல் ட்ரம்பு, கடந்த 50 வருடங்களாக அமெரிக்காவின் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள், சோரம் போன அரசியல்வாதிகள், சீரழிந்து போன பொது நிறுவனங்கள், கற்பிதங்களின் பிரமையில் வாழும் பிற்போக்கு மத தலைமைகள், இவற்றுடன் அமெரிக்க சமூகத்தில் புரையோடி இருக்கும் தானும் தனது வட்டமும் என்ற குறுகிய தன்னாதிக்க மனோபாவம் (individualism) என பல முக்கிய காரணங்கள் அடங்குகின்றன.

எச்சரிக்கைகள் சில மாதங்களுக்கு முன்னரே தெரிய ஆரம்பித்து விட்டன, சகல விதமான வளங்களும் கைவசம் இருந்தன, ஆலோசனை தருவதற்கும் வழிகாட்டுவதற்கும் தகுதிவாயிந்த அதிகாரிகள் பொறுப்பில் இருந்தார்கள். இருந்தும், டொனால்ட் டிரம்ப்பின் அரசின் தான் தோன்றி தனமான நடவடிக்கைகள், ஒரு மூன்று மாத காலத்தில் மட்டும் 200,000 மக்கள் இறப்பதற்கும் பல மில்லியன் கணக்கானோர் வேலை இழப்பதற்கும் காரணமாக இருக்கின்றது. முதலில் நோய் ஒருவருக்கு இருக்கின்றதா என்பதை பரிசோதித்து பார்க்கும் தவறான பரிசோதனை உபகரணங்களை அமெரிக்காவின் தொற்று நோய் பரவல் தடுப்பு நிறுவனம் (CDC) அறிமுகப் படுத்தியதுடன் குழப்பம் ஆரம்பமாகியது. இதே மாதிரி நோய் இருப்பதை சரியாக கண்டறியும் உபகரணம் ஏற்கனவே ஜெர்மனியில் பாவனையில் இருந்தது. இருந்தும், அமெரிக்க அரசு இயந்திரத்தின் (bureaucracy) மெத்தன போக்கால் இந்த உபகரணங்களை அமெரிக்காவில் யாராலும் இறக்குமதி செய்ய முடியவில்லை. நோய் மின்னல் வேகத்தில் அமெரிக்காவில் பரவத்தொடங்கிய பின்னரும் கூட ஒரு உருப்படியான நோய் தொற்றை கண்டறியும் உபகரணத்தை அமெரிக்காவின் CDCனாலோ, அல்லது தனியார் நிறுவனங்களாலோ உருவாக்க முடியவில்லை. சரியான உபகரணங்கள் தயாரான போது வெள்ளம் தலைக்கு மேல் போய் விட்டது. உலகின் வர்த்தக தலைநகர் நியூ யோர்க் ஆடிப்போய்விட்டது. இங்கு வைத்தியசாலைகளில் கோவிட் நோய்யாளிகளால் நிறைந்து வழிந்தது. வைத்திய சாலைகளில் உள்ள பிரேத அறைகள் இறந்து போன மனிதர்களின் உடல்களினால் நிரம்பின, வைத்திய சாலைக்கு வெளியே குளிரூட்டிய சரக்கு பெட்டிகளில் (containers) பிரேதங்கள் குவிக்கப்பட்டன, இறந்து போன நோயாளிகளின் உடலை கூட புதைப்பதற்கு மாயனங்களில் இட மில்லை. இறுதியில் ஆறடி மண் கூட சொந்தமில்லை. ஒரே நீண்ட புதை குழியில் பல உடல்களை ஒன்றாக புதைக்கும் அவலம். இவற்றை தொலை காட்சியில் பார்க்கும் போது இதெலாம் உண்மையாக இருக்குமா என்ற ஐயம் ஏற்பட்டது.

இனத்துவேசம் என்பது நீண்டகாலமாக அமெரிக்க அரச இயந்திரத்துடன் ஒன்றுகலந்து இருக்கின்றது. உதாரணமாக முதல் முதலில் அமெரிக்காவின் போலீஸ் படை உருவானதே மோசமாக சூழலில் இருந்து தப்பியோடும் அடிமைகளாக இருந்த கறுப்பின மக்களை பிடிப்பதற்கே.

கறுப்பு, ஸ்பானிய, மற்றும் பூர்வீகக்குடி மக்களுக்கு மேலான இனத்துவேசம் ட்ரம்பின் அரசியல் பிரவேசத்துடன் உச்ச கட்டத்துக்கு சென்றது. ஏற்கனவே இவர்கள் மிக மோசமான நிலைமையிலே இங்கு வாழ்கின்றனர். இவர்கள் வாழும் பல பகுதிகள் இன்றும் மூன்றாம் உலக நாடுகளின் வாழ்கை தரத்துடன் ஒப்பாகவே இருக்கின்றன. குடிப்பதற்கு சுத்தமான தண்ணீர் கூட இந்த பகுதிகளில் கிடைப்பதில்லை. தகுந்த மருத்துவ வசதிகள், நல்ல கல்வி நிலையங்கள் இவை ஒன்றுமே இல்லை. அண்மை காலங்கள் வரை (2000 ஆண்டு வரை) பொது ஊடகங்கள் இந்த மக்களை மறைமுகமாக சோம்பேறிகள், திருடர் என்று செய்திகளில் சித்தரித்தார்கள். பொலிஸினதும் நீதி துறையினதும் பராபட்சமான நடவடிக்கைகள் இவர்களை வாழ்க்கையின் விளிம்பிற்கே தள்ளியதெனலாம். வளர்ந்த நாடுகளில் அதிகமானவர்களை சிறையில் அடைப்பதில் முன்னணி வகிப்பது அமெரிக்கா. இந்தச்சிறைகளில் இருப்பவர்களில் பெரும்பாலானோர் கறுப்பினத்தவர்கள். அண்மையில் கூட பதினேழு வயதில் ஒரு சோடி செருப்பை களவாடியதற்காக 20 வருடங்கள் சிறையில் வாடும் ஒரு கறுப்பின சிறையாளியை வெளிவிடப்போவதில்லை என்று அலபாமா (Alabama) உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அவலம் என்னவெனில் கோவிட்-19 இந்த மக்களை மிக மோசமாக பாதித்தது. கோவிட்-19 பரவலால் இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் இவர்கள்.

> **மனிதர் பிடித்து உண்ணும் விலங்கினங்களில் மட்டும் வாழும் 40,000 மேற்பட்ட வைரசுகள் திரிபடைந்து மனிதருக்கு பரவக்கூடும் அபாயம் இருக்கின்றதென்று சமீபத்திய ஆய்வுகள் கூறுகின்றன. இப்படி உருவாகும் நோய்களுக்கெல்லாம் தடுப்பூசியோ அல்லது வேறு வகை மருந்துகளோ புதுசு புதிசாக கண்டுபிடிக்க முடியாது. புத்திசாலித்தனமாக கட்டுப்புடுத்துவதென்பது நோய் தொடங்கும் இடத்திலேயே அதன் பரவலை மட்டுப்படுத்துவது.**

ட்ரம்ப் அரசியலுக்கு வருவதற்கு முன் ஒரு மோசமான பணக்காரர். இவர் 6 தடவைகள் வங்குரோத்து கோரி இருந்தார். சொந்தமான சூதாட்ட விடுதியை கூட வங்குரோத்துக்கு தள்ளியவர். இருந்தும் தனது வாய்சவாடலினால் இனத்துவேசத்தை கக்கி பிரசாரத்தை தொடங்கினார். அமெரிக்காவில் இருக்கும் சில மாநிலங்களில் வயது கூடிய வெள்ளை வாக்காளர்களின் மனத்தை மாற்றி பெரும்பான்மை வாக்குகள் பெறாத அமெரிக்க அதிபராக உயந்தார். கோவிட்-19 அமெரிக்காவின் வாசலில் வந்த போதும், இந்த வைரசுவையும் தனது வாய் வல்லமையினால் வெல்லலாம் என்று எண்ணினார். விளைவு இவர் வெள்ளை மாளிகையில் நடத்தும் கோவிட்-19 பரவல் தொடர்பான பத்திரிகையாளர்கள் சந்திப்புகள் யாவும் இவரின் வெறும் உளறல்கள். உலக நாடுகளிலே இவர் பேச்சுக்கள் எள்ளிநகையாடும் ஒரு விடயமாக மாறிவிட்டது. அமெரிக்க சுகாதார துறையும், CDC போன்ற நிறுவனங்களும் முக கவசம் அணிய வேண்டிய அவசியத்தை வலியுறுத்திய போது அதனை உதாசீனம் செய்தார். விஞ்ஞானிகள், மருத்துவர்களின் அறிவுரைகளை எதிர்த்து twitter போன்ற சமூக ஊடகங்களில் இரவு நேரங்களில் அறிக்கை விட்டார். கோவிட்-19 நியூ யோர்க் நகரில் மோசமாக பரவி ஆயிரக்கணக்கான மக்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கபட்டபோது வைத்தியசாலைகள் போதிய முக கவசம், தற்காப்பு அங்கிகள், நோய்யாளிகளுக்கான கட்டில்கள் இல்லாது தவித்தன. இருந்தும் ட்ரம்ப் அவசர நிலைமையை அறிவித்து மிக பெரிய தொழில் நிறுவனங்களை இவற்றை உற்பத்தி செய்ய உத்தரவிடாமல் காலத்தை கடத்தினார். உலகின் பணக்கார நாடான அமெரிக்காவின் பணக்கார நகரான நியூயார்க் நகரில் பணிபுரியும் வைத்தியர்கள், தாதிகள் போன்றோர் பொதுமக்களிடம் தங்களுக்கான முக கவசங்களை செய்து தரும்படி கேக்கும் சோகம். நியூயார்க் நகர வைத்தியர்கள், தாதிகள் மற்றும் ஊழியர்கள் யாவரும் தமது உயிரை பயணம் வைத்து கோவிட்-19 தொற்று ஏற்பட்ட நோயாளிகளை பாதுகாக்க போராடினார்கள். போதிய முககவசம், தற்காப்பு அங்கிகள், போன்றவற்றை இவர்கள் களவாடி இருப்பதால் தான் இவற்றிற்கு தட்டுபாடாக இருக்கலாம் என்று கூறினார். கோவிட்-19 பரவல் வேகமாக பரவியபோது ட்ரம்பின் நடவடிக்கைகள் யாவும் இதில் தானும் தனது குடும்பமும் எவ்வாறு பயனடையலாம் என்பதை நோக்கியே இருந்தது. எரியிற வீட்டில் பிடுங்குவது லாபம் என் பார்களே அதுபோலத்தான்.

ஒருகாலத்தில் தாம் உற்பத்தி செய்யும் பொருட்களின் தரத்தையும் வல்லமையை

தொடர்தல் 17ம் பக்கம்

www.inayam.net

தமிழ் நிகழ்வுகளின் சங்கமம்

மண்டியிட்டது...

16ம் பக்கத் தொடர்ச்சி...

யும் பறைசாற்றி சந்தையில் முதலிடத்தை பிடித்த அமெரிக்க தொழில் நிறுவனகள். இன்று தாம் குறுகிய காலத்தில் எவ் வளவு தூரம் லாபம் சம்பாதிக்கின்றோம் என்பதிலேயே குறியாக இருக்கின்றன. இன்றைய பெரும் தொழில் நிறுவனங்களின் தலைமை - திறமையான பொறியாளர், பொருட்களை வடிவமைப்பவர்கள் என்பவர் கள் கைகளில் இருந்தும், கணக்கு வித்தை காட்டும் வல்லுநர்களின் (bean counters) கைகளில் சென்றுவிட்டது. விளைவு கடந்த 20 வருடங்களில் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் இருந்த தமது தொழில் நிறுவனங்களை அதன் தலைமைகள் தொழிலார்களுக்கு குறைந்த ஊதியம் வழங்கும் 3ஆம் உலக நாடுகளுக்கும், சீனா போன்ற நாடுகளுக்கும் நகர்த்தின. இன்று மருத்துவ உலகின் அத்தியாவசிய மான பரிசோதனை குழாய்கள், மருந்து பாட்டில்கள், முகக்கவசங்கள் போன்ற பல பொருள்களின் உற்பத்தி சீனாவின் கை களில். அமெரிக்கா, கனடா போன்ற நாடு கள் சீனாவுடன் போர் வந்தாலோ அல் லது அங்கு எதாவது வகையில் உற் பத்தி தடைப்பட்டால் என்ன செய்யலாம் என்று ஒரு திட்டத்தையும் கைவசம் வைத் திருக்கவில்லை. கோவிட்-19ன் பரவலின் போதுதான் இந்த அவலத்தை அரசுகள் உணர்ந்து கொண்டன. கனடிய அரசு இவற்றை கொள்வனவு செய்யும் முயற்சி யினை முதன்மைபடுத்தி எந்த மாநிலங் களில் நோய் அதிகம் பரவுகின்றனவோ அவற்றிக்குக்கு முன்னுரிமை அளித்தது. ஆனால் அமெரிக்காவிலோ, நிலைமை தலை கீழாக இருந்தது. இவற்றை கொள் வனவு செய்வதில் மாநிலங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டிபோட்டன. ட்ரம்பின் அரசு இதில் கூட அரசியல் வியாபாரம் செய் தது. ட்ரம்பு தனக்கு வாக்கு கூட விழுந்த மாநிலங்களுக்கும், குடியரசுகட்சி முதல் வர்கள் ஆட்சி செய்யும் மாநிலங்களுக்கும் அவற்றின் தேவைக்கு மீறியே முகக்கவ சங்கள் போன்றவற்றை அனுப்பி வைத்தது.

கடந்த 50 வருடங்களாக அலட்சியப் படுத்தப்பட்ட பொது சுகாதார - மருத் துவ துறை, இந்த நிறுவனங்களுக்கு திட்டமிட்டு துண்டிக்க பட்ட நிதி ஒதுக் கீடுகள், கறுப்பின மக்களுக்கும் மற்றும் சிறுபான்மை மக்களுக்கும் எதிராக நீண்ட காலமாக துவேசம் நிரம்பிய நடவெடிக் கைகளும் சட்டங்களும், கட்டுக்கடங்கா மல் முழுக்க முழுக்க லாபநோக்கத்தில் இயங்கும் மருந்து உற்பத்தி நிறுவனங் கள், வதந்திகளை பரப்பும் சமூக ஊட கங்கள், எல்லாவருக்கும் மேலாக பனை யால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல டொனால்ட் ட்ரம்பினதும் பழமை வாத குடியரசு கட்சியின் கைகளில் அர சாட்சி. விளைவு கொரோனா அமெரிக்-காவின் வாசலில் எட்டி பார்த்தபோதே அமெரிக்கா கைகளை தூக்கியபடி அதன் கால்களில் விழுந்துவிட்டது. அறிவுலகம் வெகு காலத்திற்கு முன்னரே இப்படி ஒரு வேகமாக பரவும் தொற்று நோய் வரக் கூடிய சாத்தியக்கூறுகளை, அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு எச்சரித்து கொண்டே வந்திருக்கின்றது. யார் கேட்டார்கள்? கடந்த 20 வருடங்களில் மட்டும் SARS, MERS, Ebola, H1N1, Zika மற்றும் monkeyfox போன்ற தொற்றுநோய்களின் பரவல், தொற்று நோய் பற்றிய ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்தது. மேல்கூறிய தொற்று நோய்களில் எதாவது ஒன்று கோவிட் 19 போல பரவக்கூடிய ஆபத்தை கொண்டி ருந்தது. இந்த ஆபத்துகள் பற்றி ஆய்வா ளர்கள் எழுப்பிய குரல்கள் ஒன்றுமே அரசியல்வாதிகளின் காதுகளுக்கு எட்ட வில்லை. இறுதியாக 2014ஆம் ஆண்டு பரவிய Ebola நோயின் விளைவாக அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா உலகளாவிய அளவில் உருவாகும் தொற்று நோய்களை தடுக்கும் படையினை (குழுவினை), அமெரிக்கா அரசின் தேசிய பாதுகாப்பில் ஒரு அங்கமாக நியமித் திருந்தார். 2018ஆம் ஆண்டு டொனால்டு ட்ரம்ப் இந்த அமைப்பை எந்த காரணங் களும் இல்லாமல், பணத்தை விரயமாக் கும் முயற்சி என்று கூறி கலைத்து விட்டார். விளைவு மிக வேகமாக பரவும் தொற்று நோய் அமெரிக்காவில் கட்டுக் கடங்காமல் பரவியபோது அதனை கை யாள்வதற்க்கு தேசிய அளவில் ஒரு அமைப்பு இருக்கவில்லை.

மனிதர் பிடித்து உண்ணும் விலங்கினங் களில் (wild animals) மட்டும் வாழும் 40,000 மேற்பட்ட வைரசுகள் திரிபடைந்து மனிதருக்கு பரவக்கூடும் அபாயம் இருக் கின்றதென்று சமீபத்திய ஆய்வுகள் கூறு கின்றன. இப்படி உருவாகும் நோய் களுக்கெல்லாம் தடுப்பூசியோ அல்லது வேறு வகை மருந்துகளோ புதுசு புதிசாக கண்டுபிடிக்க முடியாது. புத்திசாலித்தன மாக கட்டுப்புடுத்துவதென்பது நோய் தொடங்கும் இடத்திலேயே அதன் பர வலை மட்டுப்படுத்துவது, என்ன காரணங் களால் இப்படியான நோய்கள் மனித ருக்கு பரவுகின்றனவோ அதனை இல்லா மல் ஒழிப்பது. இதற்கு சர்வதேச ஒத்து ழைப்பு அவசியம். வெறும் ஒரு நாட்டை மட்டும் குறை கூறி ஒரு பயனும் இல்லை.

அமெரிக்க தொற்று நோய் பரவலை கட்டுப்படுத்தும் நிறுவனமான CDCயை சேர்ந்த 40க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் சீனாவில் இருக்கும் வைரசு ஆய்வு நிறு வனத்தில் சீனா விஞ்ஞானிகளுடன் ஆய்வு களை மேற்கொண்டனர். 2017ஆம் ஆண்டு டொனால்ட் ரம்பின் அரசு இந்த விஞ்ஞா னிகளுக்குக்கான பட்ஜெட்ஐ ரத்து செய் தது. இவர்கள் சீனாவில் தொடர்ந்து இருந் திருப்பார்களாயின் COVID-19 தொற்று பற்றிய உண்மை நிலையினை அமெரிக்கா வுக்கு எச்சரித்து இருப்பார்கள்.

SARS - கோவிட்-19 வைரசு மிகச்சிக்கலா னது. வெகு இலகுவாக பரவுகின்றது. இலச் சக்கணக்கானோரை கொல்கின்றது. இருந் தும் சில வேளைகளில் தொற்று உள்ள பலரில் எந்த விதமான நோய் அறிகுறி களையும் காண்பிப்பதில்லை. நோய் பர வலை கட்டுப்படுத்துவது மிகச்சிக்கலாக்க இருக்கின்றது. இன்று கோவிட்- 19 என் பது உலகளாவிய பரவலை கொண்டி ருக்கின்றது. இதற்கு உலகமே சேர்ந்து போராடவேண்டிய சூழ்நிலை. மனித குலத் தின் உன்னத ஆளுமைகள் இங்கு தேவைப்படுகின்றனர். உலக சுகாதார நிறுவனம் அதிகாரம் பொருந்திய உறு திமிக்க நிறுவனமாக இருப்பதற்கு உலக மக்கள் ஒன்றுதிரளவேண்டும். ஆனால் இந்த இக்கட்டான சூழலில் உலக சுகா தார நிறுவனத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறும் தீர்மானத்தை ட்ரம்ப் அறிவித் தார். இந்த தீர்மானத்துக்கு முக்கிய கார ணம் பழியை யார் மீதாவது போட்டு தான் தப்பித்து கொள்ளலாம் என்பதை தவிர ட்ரம்ப்பின் நோக்கம் வேறொன்றுமில்லை. உலக சுகாதார நிறுவனத்தின் உயர் செயல் குழுவில் (executive board) அமெரிக்கா வுக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. ட்ரம்பின் அரசு இரண்டு வருடங்களாக காலியாகவே இந்த இடத்தை வைத்தி ருந்தது. ரோம பேரரசு ஒரு நாளில் விழுந்து விடவில்லை என்று வரலாற்று அறிஞர் கள் கூறுவதுண்டு. ட்ரம்பின் ஆட்சி இன் னும் 4 வருடங்கள் தொடருமாயின் அமெ-ரிக்க வல்லரசின் முடிவு ஒரு அதிபரால் முடிந்த அவலத்தை எண்ணி ஏதிர்கா லத்து சந்ததி வியப்படையும். டொனால்ட் ட்ரம்பின் கூச்சலான 'அமெரிக்காவுக்கு முதல்' (America first) என்பது உண்மை யில் 'அமெரிக்காவுக்கு முடிவு' என்றாகி விடும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

உசாத்துணை:

• ஓகஸ்ட் 4ஆம் திகதி 'The Atlantic' பத்திரிகை

kugan.s@thaiveedu.com

■ ■ ■

Sky Route Courier Services

Worldwide & Domestic Courier Service

◙ Compare ◙ Save ◙ Send

♦LOCAL ♦PROVINCIAL ♦NATIONAL ♦INTERNATIONAL

" Lot Cheaper Than You Think"

upto 70% Discount from Major Courier Companies

416.297.7368

www.skyroutecourier.com

Affordable Courier Rates For Individuals and Businesss

285 Milliken Blvd, unit 30
Scarborough, ON
Off: 416-297-7368

EXPRESS DELIVERY

அகிலத்தை ஆட்டிப் படைக்கின்ற ஆதிக்கவாதம்!

- மா. சித்திவிநாயகம் -

உலகின் அழகு தேசங்களில் ஒன்றான நியூசிலாந்து நாட்டின் கிழக்குக் கரை நகரமான 'கிரைஸ்ட்சேர்ச்' 2019 மார்ச் 15 அன்று முகமதியர்களின் இரத்தத்தால் குளிபாட்டப்பட்டிருந்தது. முகமதியர்களின் இரண்டு மசூதிகளில் துப்பாக்கிதாரியான வெள்ளைய இன 'பிரென்டன் டாரண்ட்' நடத்திய கோரத்தாக்குதலில் தொழுகையிலிருந்த அப்பாவிகள் 51 பேர் கொல்லப்பட்டும் பலர் படுகாயமுற்றும் போனார்கள் என்பது மற்றுமொரு திகிலூட்டும் செய்தியாய் கடந்திருந்தது. 150ற்கு மேற்பட்ட மொழி பேசுகின்ற மதம், சாதி, நிறம், தேசங்கள் என்று எவ்விதபாகுபாடுமற்ற கருணையும், பரிவும், கனிவும் வழிந்தோடும் நற்பண்பாளர்கள் வாழும் இத்தேசத்தில் இந்த அனர்த்தம், இந்த பேரவலம் நிகழ்ந்த 'இந்தக் கொடிய நாள் நியூசிலாந்தின் கரிய நாள்' என்று கண்ணீர்மல்கிக் கலங்கித் துடித்தார் அந்நாட்டுப் பிரதமர் அம்மையார் 'ஜெசிந்தா' அவர்கள். அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த 29 வயது பிரென்டன் டாரண்ட், தான் புரிந்த கொடூரக் கொலைகளை நேரடியாக, காணொளிகளில் 17 நிமிடம்வரை பொதுவெளியில் பரவ விட்டதாக ஊடகங்கள் தெரிவித்திருந்தன. நியூசிலாந்தின் பாதுகாப்புப்பிரிவு மற்றும் சமூகவலை ஊடக நிறுவனங்களை மட்டுறுத்தும் முகாமை போன்றவற்றால் அந்தக் காணொளியை நிறுத்தமுடியவில்லை என்பது, உள்நாட்டு வெளிநாட்டுப் பாதுகாப்பை மீளவும் பலத்த சர்ச்சைக் குள்ளாக்கியிருந்தது.

அன்றைய நாட்களில் முஸ்லிம்களுக்கு எதிராக தன் தேர்தல் பரப்புரையை முடுக்கிவிட்ட அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவர்களை நேசித்து தன் மானசீக குருவாக அவரை ஏற்றுக் கொண்டவரான அக் கொலைகார இளைஞர், தான் குடிவரவாளர்களை மிகவெறுப்பதாக தன் பலபக்க விஞ்ஞாபன செய்தியில் குறிப்பிட்டிருந்தார். அது மட்டுமன்றி கனடாவின் கியூபெக் நகரில் இஸ்லாமிய கலாச்சார மையத்தில் 2017ல் இடம்பெற்ற துப்பாக்கிதாரிகளின் கொலைகள் ட்ரம்பின் தேர்தல் பரப்புரையின் பின்னணி என்று பல செய்தி ஊடகங்கள் அன்று தெரிவித்திருந்தன.

இதை எழுதிக் கொண்டிருக்கின்ற இந்த தருணத்தில் பல கறுப்பு இன மக்கள் அனாதரவாக அமெரிக்க ஆதிக்கவாதிகளால் அமெரிக்க வீதிகளில் சுட்டு வீழ்த்தப் படுகின்றார்கள். கறுப்பு இனத் தந்தை ஒருவர் தன் மூன்று புதல்வர்களின் முன்னால் 7 தடவை சுடப்பட்டுக் கொல்லப் படுகின்றார். இவ்வாறுதான் பயங்கரவாதத்தை முடுக்கி விடும் அதிகார சக்திகள் பெரு மதிப்புடைய தலைவர்களாகின்றார்கள். அத்தகு தலைவர்களினால் செயல் வடிவில் தூண்டி அந்த பயங்கரத்தை நிகழ்த்துவோர் பயங்கரவாதிகள் என்று பெயர் சூட்டப்பட்டு சிறைகளில் அடைக்கப்படுவதாகப் பாவனை செய்யப் படுகின்றார்கள். இத்தகு ராஜ தந்திரமே இன்றைய உலகை ஆள்கின்றது.

இந்நிலையில்தான் நியுசிலாந்துக் கொலையாளியான 'பிரென்டன் டாரண்டு'க்கு ஒன்

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594
Tel: 416-646-3422

றரை வருடவிசாரணைகளுக்குப் பிறகு சென்ற வியாழக்கிழமை (ஆகஸ்ட் 27) பரோல் இல்லாத ஆயுள் தண்டனை வழங்கி நியூசிலாந்து நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்ப்பினால் மகிழ்வதா, அழுவதா என்று நானறியேன். ஆதிக்க வாதமெனும் எய்பவர்கள் இருக்கும்வரை அழிக்கின்ற அம்புகள் புதுப்புது உருவில் உருவாகிக் கொண்டே இருக்கும் என்கிற உண்மையை யாரும் கண்டு கொள்வதில்லை. கண்டு கொள்ள விரும்புவதுமில்லை.

'சந்தன மரம் வெட்டுபவன் திருடன்
சந்தனப்பொட்டோடு - திருடன் வெட்டிய
சந்தனமரச் சாய்மனையில்
சாய்ந்திருப்பவன் நீதிமான்

என்பதாகவே நாம் காணும் நீதி இங்கு கோலோச்சுகின்றது.

நியூசிலாந்தின் 'கிரைஸ்ட்சேர்ச்'சில் அந்தக் கொடுவன்முறை நடந்து ஒரு மாதங்களாவதற்குள் இலங்கையில் 2019 ஏப்ரல் மாதம் 21-ஆம் தேதி ஈஸ்டர் தினத்தன்று 3 தேவாலயங்கள் மற்றும் நட்சத்திரவிடுதிகளில் தொடர் குண்டுவெடிப்பு நிகழ்த்தப்பட்டது. ஐஎஸ் பயங்கரவாதிகளுடன் தொடர்புள்ள 'தேசிய தவ்ஹீத் ஜமாத்' பயங்கரவாத குழு நடத்தியதாகச் சொல்லப்படுகின்ற இந்தத் தற்கொலை தாக்குதலில் வெளிநாட்டவர், உள்நாட்டவர், பெண்கள், குழந்தைகள், ஆண்களென அப்பாவிகள் 258 பேரிற்கு அதிகமானோர் உயிரிழந்தனர்.

பயங்கரவாதம் என்பதற்குச் சரியான வரைவிலக்கணத்தை வரையறை செய்வதென்பது மிகக்கடினமானது. அதற்கான நுட்பமான நிபுணத்துவம் வாய்ந்த வரையறையை யாராலும் இதுவரை செய்ய முடியவில்லை. செய்யவும் முடியாது. பயங்கரவாதத்தை 'மரபு சாராத போர்' அல்லது ஓர் 'உளவியல் போர்' என்று பகுப்பாய்வுசெய்கின்ற வாதங்கள் இன்றும் தொடர்கின்றன. இன்றைய உலகில் அதிகம் பேசப்படுகிற சொற்சிலம்பம் இது. வென்றவன் தோற்றவனையும், தோற்றவன் வென்றவனையும் வெறியோடு மாறிமாறி விழிக்கின்ற வீர வாக்கியம் இது. பயங்கர வாதத்தால் தம்மைத் தக்கவைக்க பல அரசுகள் பயங்கர வாதத்தையே தம் கையிலெடுத்திருக்கின்றன. அரசியல் இயக்கங்கள், மதக்குழுக்கள், மடாதிபதிகள், மாணவர்கள், இடதுசாரிகள், வலது சாரிகள் புரட்சியாளர்கள் என்று சகட்டு மேனிக்குப் பலரும் இந்தப் பயங்கரவாதப் பதத்திற்குள் அடங்கிப் போவது பரிதாபத்திற்குரியது. கொன்றவனும் புனிதனாகிற, கொல்லப்பட்டவனும் புனிதனாகிற சிருங்கார வார்த்தை இது. அரசுகளின் அனுசரணையற்ற, அப்பாவிக் குழுக்களின் நியாயமானபோராட்டங்கள், பலசந்தர்பங்களில் பயங்கரவாத முத்திரையோடு அழித்து நிர்மூலமாக்கப் பட்டிருக்கின்றன. பயங்கரவாதிகள், தீவிரவாதிகள், போராளிகள், அடைப்படைவாதிகள், புரட்சியாளார்கள், கிளர்ச்சியாளர்கள் என்பன வெல்லாம் பயங்கரவாத மரத்தின் கிளைகளாக இன்று பிரகடனப்படுத்துகின்றார்கள். பயங்கரவாதமென்னும் பெயரில் ஈழத் தமிழர்கள் இழந்தது கொஞ்ச நஞ்சமல்ல. கொன்றவன் பயங்கரவாதியா? தோற்றவன் பாயங்கரவாதியா? செத்தவன் பயங்கரவாதியா? என்று குளம் கலக்கி ஆதிக்க வல்லூறுகள் தந்திரமாக மீன் பிடிக்கின்றன. கொடிய அடக்குமுறைகளினால் நம்பிக்கை பிறழ்தல், ஏமாற்றம், விரக்தி, அநீதி என்று பல காரணங்களினால் தீவிரவாதம் அல்லது புரட்சிதோன்றுகின்றது. அவ்வாறாயின் பலமானவர்களுக்கும் பலவீனமானவர்கட்கும் இடையிலான போராட்டம்தான் பயங்கரவாதமா?

தமது கருத்தையே பிறரும் பேணி நடக்க வேண்டுமென்னும் வன்முறை சார்ந்த அதிகாரம் தான் மற்றவர்களுக்கு அச்சமூட்டுவது. இதுவே பயங்கரவாதத்தின் தோற்றுவாய். இத்தகு அச்ச நிலைமையினுள் அகப்பட்டு நாளும்பொறுத்துப் பொறுத்துப் போகும் ஜீவராசிகள், தங்களால் தாங்கா முடியா நிலையில் போராடத் துணிகின்றன. அவை போராடாவிட்டால் வாழ்வில்லை என்பதே புவிசார் விதியாக இருக்கின்றது.

ஒரு மனிதரின் பார்வையில் பயங்கரவாதியாக தென்படுபவர் இன்னொரு மனிதரின் பார்வையில் விடுதலைப்போராளியாக, தேசிய வாதியாகத் தென்படுவார். சரியாக சொல்லப் போனால் பயங்கரவாதம் என்பது ஒருவர் பார்க்கும்பார்வையில் உள்ள அரசியல் கருத்தேயன்றி வேறல்ல. இந்தவகையில் பலஸ்தீனத்தை கொஞ்சம்கொஞ்சமாக விழுங்கும் இஸ்ரேல் அமெரிக்காவின் உற்ற தோழனாகவும், நமக்கு பயங்கரவாதியாகவும் தோன்றுவது ஒன்றும் காட்சிப்பிழையல்ல.

கடந்த 200 வருடங்களில், அமெரிக்கா செய்த பயங்கரவாதச் செயல்கள் கணக்கிலடங்கா. லட்சக்கணக்கில் அமெரிக்க ஆதிகுடிமக்களை வெளியேற்றினார்கள், கொன்றொழித்தார்கள். நோயும் நஞ்சும் கொடுத்தார்கள். மெக்ஸிகோவை கையகப் படுத்தினார்கள். கரீபியன் மற்றும் மத்திய அமெரிக்காவின் பெரும் பகுதிகளில் அழிவும், அட்டூழியமும் ஏற்படுத்தினார்கள். ஹவாய்த்தீவை பிடித்தடக்கி நவீன அடிமைகள் ஆக்கினார்கள். பிலிப்பைன்ஸ் போரில் 1,00,000-க்கும் மேற்பட்ட பிலிப்பைன்சியர்களை கொன்றார்கள். இன்றைவரை இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு உலகம் முழுமையும் சுற்றிப் பெரும் போர் செய்வது அமெரிக்காதான். இந்நிலையில்தான் நிகராகுவாவின் மக்கள் தங்களுக்கு இழைத்த கொடுமைகளுக்காக அமெரிக்காவை தலை குனியவைத்து உலக நீதிமன்றில் நிற்க வைத்தார்கள். ஆனாலும், இன்றுவரை அவர்கள் பயங்கரவாதிகள் என்று வேற்று நாட்டவர்களையே சொல்லி வருகின்றார்கள். இந்நிலையில்தான் அமெரிக்காவின் வர்த்தக மையக் கட்டடங்கள் மற்றும் இராணுவ தலைமையகம் (பென்டகன்) ஆகியன தீவிரவாதிகளால் கடந்தகாலம் மோதி அழிக்கப்பட்டது. இது கூட அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உருவாக்கத்திலிருந்து பிறந்த குழந்தைகளால் ஏற்படுத்தப்பட்ட பேரழிவுதான். இதற்குப் பிறகு பயங்கரவாதம் என்பதை அமெரிக்கா மிகப்பெரிய பேசுபொருளாக்கியது.

'ஜனநாயக அரசுகள் என்று அழைக்கப் படுகின்ற அரசுகள், அரச பயங்கரவாதச் செயல்களைப் புரியும்போது அவற்றை பயங்கரவாதம்' என்று துணிவாகக் கூறுவதற்கும் மறுத்துரைப்பதற்கும் எவருக்கும் திராணியில்லாதிருக்கின்றது. அரச பயங்கரவாதப் பட்டியலில் இடம் பெற்றிருக்கின்ற கொடிய பயங்கரவாத நாடுகள் தான் இன்றைக்கு மிகப்பெரும் சமாதானவாதிகளாக உலகில் பவனி வருகின்றன. சர்வதேச பயங்கர வாதத்திற்காக உலக நீதி மன்றத்தால் குற்றம் சாட்டப்பட்ட மிகப் பெரிய வல்லரசாக அமெரிக்கா இருந்த போதும் ஈராக், சூடான், சிரியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நைஜீரியா என்று மத்திய கிழக்கினைத்தான் தீவிர, பயங்கரவாத மையங்கள் என்று உலகம் எப்பொழுதும் அவர்களை நோக்கியே கைகளை உயர்த்துகின்றது. இவ்வாறான கண்துடைப்பு நாடகமே இவ்வுலகின் இன்றைய அரசியல்.

கொள்கை பரப்புச் சாதனங்களை எவன் தன் கையகப்படுத்தி வைத்துள்ளானோ அவனது கொடுமையும், பயங்கரமும், பயங்கரவாதமாய் எண்ணப்படுவதில்லை. வன்முறையை ஏவி, பயமூட்டி, பலவந்தமாய்க் கீழ்ப்படிய வைக்கின்ற பல அரசுகளின் நடவடிக்கைகள், பல மத நிறுவகங்களின் நடவடிக்கைகள் பயங்கரமாய்க்

தொடர்தல் 19ம் பக்கம்

அகிலத்தை ஆட்டிப்...

18ம் பக்கத் தொடர்ச்சி...

கொள்ளப்படுவதில்லை. இத்தகு முரண்களுக்கு இடையே தீவிரவாதத்தை உடைத்தெறிந்து சமாதானத்தை உருவாக்கல் என்பது சாத்தியம் தானா? என்கின்ற கேள்வி இயல்பானது. இன்றைக்கு மிகப் பூதாகரமாக உருவெடுத்திருக்கின்ற மத தீவிரவாதத்தின் மூலம் எது? மூலகர்த்தா யார்? பன்னெடுங்காலமாய் பாலஸ்தீனரை விரட்டுகின்ற யூதர்களா? சிலுவை யுத்தங்களை நடத்தி முடித்திருக்கின்ற கிறிஸ்தவர்களா? சாதிய வர்ணாச்சிரம சீர்கேட்டால் சமூகத்தை பிரித்தழித்த இந்துக்களா? ஆர்மீனியாவின் மொத்த அஸ்ஸீரிய மக்களையும் தம்மவர்களாக்கிய அராபியர்களா? ஈழத்தையும், மியான்மாரையும் இரத்தக் காடாக்கித் தன் குரூரமான கொடிய சாட்சிகளாகப் பதிந்து வைத்திருக்கிற பௌத்தமா? தாய் ஏற்படுத்தப்பட்ட அனைத்து மதங்களும் பயங்கரவாதத்தின் முகத்தையே கொண்டுள்ள நிலையில் 'எல்லா முஸ்லிம்களும் பயங்கரவாதிகள் அல்லர். ஆனால், பயங்கரவாதிகள் எல்லோரும் முஸ்லிம்களே' என்று ஒரு மதத்தை நோக்கி இந்துத்துவ அடிப்படைவாதிகள் கூக்குரல் இடுவது மிகக் கேவலமானது. இந்தியாவில் இந்துத்துவ சாதியக் கட்டமைப்பும், வர்ணாச்சிரம கோட்பாடும் ஏற்படுத்தியுள்ள பயங்கரம் சொல்லும் தரமன்று. தங்கள் தவறுகளைக் கண்டு கொள்ளாது, ஒரு மதத்திற்கு மட்டுமே வன்முறை மற்றும் தீவிரவாதம் இந்த உலகில் பொருந்திப் போகிறதென்கிற கருத்தியல் மிக இழிவானது. உலக மக்கள் அனைவரையும் ஒருவர் கொலை செய்ய முற்பட்டாலும் அவன் முஸ்லிமாக இருந்தால் மட்டுமே தீவிரவாதியாக அறிவிக்கின்ற பரிதாபத்தில் இன்று ஊடகங்கள் இயங்குகின்றன. அதே போன்ற துர்பாக்கியத்தில் தான் இன்றைய அமெரிக்காவின் கருப்பு இன மக்களின் நிலையும்.

இப்போதெல்லாம் கையில் துப்பாக்கி, வெடிகுண்டுகள், ஆட்கடத்தல், மிரட்டல், அச்சுறுத்தல் என்கின்ற எல்லாவற்றையும் தாண்டி அந்தராக்ஸ் மற்றம் விசவாயுக்கள், வைரஸ்கள் என உலகின் ஒட்டு மொத்த உயிர்களையும் சிலமணி நேரத்தில் உக்கிரத்தோடு அழிக்கின்ற பல நவீன கொலைச் சாதனங்கள் உலாவருகின்ற

வேளை இது. நுண்ணுயிரிகள், இரசாயன கதிரியக்க பொருள்களினால் இவ்வுலகம் இன்று மிக அச்சுறுத்தப்படுகின்றது. சைபர் பயங்கரவாதம், உயிரியல் பயங்கரவாதம் சூழியல் பயங்கரவாதம் என தீவிரவாதம் தொழில் நுட்பங்களோடும் புதுப்புது வார்த்தை யாலங்களோடும் வலம் வருகின்றது. என்றுமிலா வகையில் இன்று சமூக வலை ஊடகங்கள் பயங்கரவாதப் பகலவனாகப் பிரகாசிக்கத் தொடங்கியுள்ளன. தீவிரவாத எண்ணங்களை வளர்க்கும் இணையதளங்கள் தீவிரமாகக் கண்காணிக்கப் படுவதாகச் சொல்லப்படுகின்றது. ஆயினும் என்ன? இவற்றை தடுப்பதற்கும் எதிர்த்துச் சண்டையிடுவதற்குமான தொழில்நுட்ப வல்லமைகள் கூட அருகிப்போன அவல நிலைமை உருவாகியுள்ள அச்சம்தரும் வேளை இது. கலப்படம் செய்கின்ற உள்ளூர் வியாபாரி முதல் உலக வர்த்தகப் பெருமையங்கள் அனைத்துமே பயங்கரமானவையாகவே உள்ளன. பொள்ளாச்சி விவகாரமும் சாதிவெறிச் சண்டைகளும், அமெரிக்க இனவெறியும், ஆணவக் கொலைகளும், அரசியல் குத்து வெட்டுக்களும் மதம்சார் ஏமாற்றும் இதற்கு விதிவிலக்கல்ல.

பயங்கரவாதம் என்பதில் பெரிது, சிறிது என்று உண்டா?

அதிகம் பேரைக் கொலை செய்வதன் மூலம் தன்மீது கவனத்தை திருப்பி, தன்னைப் பயங்கரவாதியாகப் பிரகடனப் படுத்தும் ஒருவன், தன் வீட்டில் இருந்த படியே உலகை ஆட்டிப்படைக்கும் செயல் திறமைகொண்டவனாக இருக்கின்றான் என்பதில் மகிழ்வதா? கவலையுறுவதா? என்பது மிகமிக அச்சம் தரும் ஒருகேள்வி.

அமைதியில் மிகச்சிறந்தது மன அமைதியாகும். அதை நாம் அறவே இழந்து விடும் அபாயத்தில் உள்ளோம். உலகம் என்றால் இயற்கை, அழகு, பசுமை, உன்னதம் என்றிருந்த கருத்து நிலைமாறி, உலகமென்பது துப்பாக்கி, குண்டுவெடிப்பு, இரத்தம், கலவரம், ஊரடங்கு, பதற்றம், இனவெறி என்று அச்சத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றோம். நாடுகள் யாவும் ஒன்றோடு ஒன்று 'பகைவனுக்கு பகைவன் நண்பன்' என்கின்ற பஞ்ச தந்திரத்தோடும், பகையோடும் பழகுகின்றன. அகதியாக்கப்பட்டு, அவமதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டு நிர்கதியாக்கப்பட்டு நிற்றலே சாமானியர்களின் கதியாக இன்றைய உலகம் மாறி வருகின்ற அபாயம். எம்மைச் சுற்றி என்ன நடக்கிறதென்பதை அறிய முடியாதவர்களாக எம்மை வைத்திருப்பதில் தான் பயங்கரவாதம் முழு வெற்றி அடைகின்றது. 'இறைவன் கண்ணியப் படுத்தியுள்ள எவ்வுயிரையும் நியாயமின்றிக்கொல்ல எவருக்கும் உரிமையில்லை' என்கின்ற குரானின் வார்த்தையைத்தான் நாம் மீளவும் இங்கு நினைவுகூர வேண்டியுள்ளது.

sithivinayagam@thaiveedu.com

RESIDENTIAL SECOND MORTGAGES
FROM 8.99% QUICKLY AND EFFICIENTLY

Residential 1st & 2nd Mortgages
Commercial 1st & 2nd Mortgages
Refinance & Home Equity Line of Credit
Renovation and Debt Consolidation Loan

DON'T FORGET, WE CAN CLOSE YOUR RESIDENTIAL MORTGAGE WITHIN 48 HOURS

PURCHASE AND REFINANCE

- ✓ Gas Stations, Restaurants and Retail Plazas, Auto Body Shop, Churches, Motels and Cottages
- ✓ Business Loan for Existing and New Business
- ✓ Start up Business and Business Line of Credit
- ✓ Construction Financing for Commercial and Residential
- ✓ Store with Apartment, Duplex, Triplex and Rental Properties
- ✓ Vacant Land & Farm Financing and more...

We can arrange COMMERCIAL MORTGAGES with 10% down (some conditions may apply)

"Every great business is built on friendship"
CALL FOR FREE CONSULTATION OR VISIT MY OFFICE

T. Antony Ponrajah
Mortgage Agent License: M08004007
Brokerage License# 10216

416.457.0651
Email: antonyres@gmail.com

40 New Delhi Dr. Unit 107A, Markham ON, L3S 0B5
Tel: 416.431.5115

BUYING OR SELLING

Residential, Commercial, Land & Investment Properties

For Sellers:

- Free Market Evaluation Available
- Competitive Commission Packages Available
- Will pay for Staging & Condition
- WIll pay the Professional Photographer
- Virtual Tour
- Color Brochure
- Will do open house until house get sold
- Will market your home with social medias

SATHY & NITHY REAL ESTATE TEAM

For Buyers:

- Will find the home in any area within your budget
- Get you the lowest mortgage. rate

NITHY
SATHYAKUMAR
Sales Representative
Dir: 416.728.2454
Email: realtornithy@gmail.com

SATHY
SIVASUBRAMANIAM
Broker
Dir: 416.624.5044
Email: realtorsathy@gmail.com

16th Avenue / 9th Line $1,550

FOR LEASE — BEDROOMS:2 WASHROOMS:1

Morningside / Finch $1,200

FOR LEASE — BEDROOMS:1+1 WASHROOMS:1

Pharmacy Ave/Lawrence Ave $1,600

FOR LEASE — BEDROOMS:3 WASHROOMS:1

Victoria Park / Ellesmere $2,000

FOR LEASE — BEDROOMS:2 WASHROOMS:1

Rossland/Wilson $599,900

FOR SALE — BEDROOMS:3+2 WASHROOMS:2

Crowder Blvd / Leslie St $549,900

FOR SALE — BEDROOMS:3+1 WASHROOMS:2

Simcoe/Britannia $509,000

FOR SALE — BEDROOMS:4 WASHROOMS:3

Yonge/Front $659,000

FOR SALE — BEDROOMS:1+1 WASHROOMS:1

King/Blue Jays $699,000

FOR SALE — BEDROOMS:1 WASHROOMS:1

Lawrence Ave E/Orton Park $699,000

FOR SALE — BEDROOMS:3+1 WASHROOMS:3

Finch / Victoria Park $759,000

FOR SALE — BEDROOMS:3 WASHROOMS:2

Hoover Park/Tenth Line $769,900

FOR SALE — BEDROOMS:3+1 WASHROOMS:3

Brock/Hwy 2 $799,000

FOR SALE — BEDROOMS:3 WASHROOMS:4

Dufferin/Summeridge $889,000

FOR SALE — BEDROOMS:3 WASHROOMS:4

Markham/Sheppard $799,000

FOR SALE — BEDROOMS:4+2 WASHROOMS:3

Pharmacy/N.Eglinton $838,000

FOR SALE — BEDROOMS:3+2 WASHROOMS:2

RE/MAX Remax Realtron Realty Inc., Brokerage
Independently Owned And Operated
Bus: 905 470 9800

Web: realtorsathy.com

உலகளாவிய தொழில்நுட்பத் தரங்களில் சீனாவின் நிலை?

- பொன். பாலராஜன் -

தொழில்நுட்ப ஆட்சி, அமைவு, விதி மூலோபாயத்தை வரை தல் என, சீனா முன்னோக்கி நகர்கிறதா? உலகளாவிய தரங்களில் சீனா முன்னணி யில் உள்ளதா?

சீனாவின் ஹவாய் தொழில்நுட்பம் 5G தரநிர்ணய அத்தியாவசிய காப்புரிமைக ளின் முன்னணி வரைவாளராக மாறியுள் ளது. அத்துடன், வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களுக்கான சர்வதேச விதிகளை எழுதுவதில் சீனா ஒரு மைய நாடாக மாறி வருகிறது. குறிப்பாக ஐந்தாவது தமுறை 5G வயர்லெஸ், அதன் ஆதரவு தளமாக் குவது சீனாவின் ஒரு தேசிய முயற்சியின் ஒரு பகுதியாகும்.

'சீனாவின் தயாரிப்புகள் 2025 ஐ நோக்கி' தொழில்துறை நவீனமயமாக்கல் திட்டத்தை பூர்த்தி செய்யும் வகையில்' சீனா தரங்கள் 2035' (China Standards 2035) என்ற ஒரு நடுத்தர கால மூலோபாயத்தை அந்நாடு தயாரித்து வருவதாக கூறப்படுகிறது, இதன் கீழ் 5ஜி மற்றும் செயற்கை நுண்ணறிவு (artificial intelligence) போன்ற துறைகளில் அது விரிவாக்கம் செய்து வருகிறது. ஆ னால் சீனா மீதான அவநம்பிக்கை பெருகி-வரும் நிலையில், தரநிர்ணயம் மீதான விவாதம் சீனாவின் பெருகிய ஆதிக்கம் மேற்குலகுடனான மோதலுக்கான மற்றொரு அத்தியாமாக மாறும் அபாயத்தைக் கொண் டுள்ளது.

சீனா கடந்த ஆண்டு சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியத்திற்கு கம்பித் தொடர்பு விவரக்குறிப்புகள் தொடர்பான 830 தொழி ல்நுட்ப தரநிர்ணய ஆவணங்களை சமர்ப் பித்தது, இது தென் கொரியா, அமெரிக் கா மற்றும் ஜப்பான் ஆகிய மூன்றும் கூட் டாக சமர்ப்பித்ததைவிட கூடுதலனவை என ஒரு தொழில்துறை குழு கூறுகிறது. இத்த கைய ஆவணங்கள் புதிய தரநிலைகளின் மீதான விவாதத்திற்கான அடிப்படையாக செயல்படுகின்றன, மேலும் அதிகமான ஆ வணங்கள் சீனாவின் வலு நிலையைக் கு றிக்கிறது.

International Telecommunication Union (ITU - சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம்) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களுக்கான ஐக்கிய நாடு கள் அமைப்பின் விசேட நிறுவமாகும். தகவல் தொடர்பு வலைப்பின்னல்களில் சர்வதேச இணைப்புவசதிக்காக நிறுவப் பட்ட, உலகளாவிய வனொலி, செல் பேசி, மற்றும் செயற்கைக்கோள் தொடர் பும் சுற்றுப்பாதைகளை ஒதுக்கீடு செய்வ தும், இணையத் தொழில்நுட்பங்களை தை-டயின்றி இணைக்கும் தொழில்நுட்ப தரங் களை உருவாக்குவதும் இந்த ஐ.நா நிறுவ னத்தைப் பொறுப்பாகும்.

ITU வின் வரவு-செலவுதிட்டத்தில் சீனா ஐந்தாவது பெரிய பங்களிப்பாளராக உள் ளது. அந்த அமைப்பின் சீனத் தலைவர், தலைமைச் செயலாளர் ஜாவோ ஹவுலின் (Secretary-General Zhao Houlin), சீன அரசாங்கத்திற்கான தொலைத்தொடர்பு தரங்களை அபிவிருத்தி செய்வதில் முன் னர் ஈடுபட்டிருந்தார், சீனாவின் 'பட்டிக ளும் சாலைகளும்' (Belt and Road) உள் கட்டமைப்பு முன்முயற்சியுடன் ஒத்து ழைப்பை மேம்படுத்துவதற்கு உறுதி யளித்துள்ளார்.

தொலைத்தொடர்பு தவிர, சீனா 2014 முதல் தரப்படுத்தலுக்கான சர்வதேச அமை ப்பு மற்றும் சர்வதேச மின் தொழில்நுட்ப ஆணையத்தில் புதிய தொழில்நுட்ப குழுக் களுக்கான 65 முன்மொழிவுகளில் 16க்கு மேற்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பித்துள் ளது. 2014 இற்குப்பின்னர்தான் ஐப்பானிய



தொழில்துறை தரநிர்ணய குழு உருவாக் கியது. இந்த குழுக்கள் குறிப்பிட்ட துறை களுக்கு விவரக்குறிப்புகளை சமர்ப்பிக்கும்.

யார் இந்த சூ யின்பியாவோ (Shu Yinbiao):

சூ யின்பியாவோ Wuhan பல்கலைக் கழகத்தில் இருந்து மின்சார சக்தி அமைப் புகள் மற்றும் தானியங்கி automation துறையில் Ph.D பட்டம் பெற்றார், 2007, அவர் சீன கிரிட் கார்ப்பரேஷன் (SGCC) இன் சிரேஷ்ட பேராசிரியர், பொறியியல் ஆலோசகர், பிரமாண்டமான மின்வாரியத் திட்டமிடல் பொறியியல், மின் வளங்கள் மற்றும் இயக்குதல் ஆகிய தொழில்நுட்ப ஆராய்ச்சி மேலாண்மையில் பரவலாக ஈடுபட்ட அனுபவமுள்ளவர். சக்தி கட்ட மைப்பு திட்டமிடல் தொழில்நுட்பம், தீவிர உயர் மின்னழுத்த சக்தி பரிமாற்ற தொழில்நுட்பம், மற்றும் Complex Grid செயல்பாடு மற்றும் கட்டுப்பாடு ஆகிய வற்றின் வளர்ச்சி மற்றும் பயன்பாட்டிற்கு பங்களித்துள்ளார். காற்றாலை மின்சாரம், சூரிய சக்தி மற்றும் பிற புதிய எரிசக்தி ஆதாரங்களை கிரிட் தொழில்நுட்பம் மற் றும் ஸ்மார்ட்-கிரிட் தரப்படுத்தல் ஆகிய துறைகளை ஒருங்கிணைப்பதில் அனுப வமுள்ளவர்

International Electrotechnical Commission (IEC) சர்வதேச மின் தொழில்நுட்ப ஆணைக்குழு:

ஜனவரியில் இருந்து சீனாவின் சூ யின்பி யாவோ (Shu Yinbiao) சர்வதேச மின் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் தலை மைப் பொறுப்பை ஏற்ற பின்னர் சீனா இப்போது IECஐ யும் வழிநடத்துகிறது.

சீனா அதி நவீன நுட்ப விதிகளை (Technical Standards) எழுதக்கூடும் என்ற அச் சத்தில் அமெரிக்கா. இதனால் சீனாவின் தொழில்நுட்ப நிறுவனங்களை அமெரிக்க வணிகத்திலிருந்து நீக்கியுள்ளது பாது காப்பு காரணங்களை காட்டி? ஹவாய் தொழில் நுட்பத்தைத் தடை செய்து, அத னுடனான தொடர்ப்பை நோரடியாகவோ மறைமுகமாவோ செய்வதை நிறுத்துமாறு அமெரிக்க நிறுவனங்களுக்கும், ஏனைய மேற்குலக நட்பு நாடுகளுக்கும் வாஷிங் டன் கடந்த ஆண்டு கடுமையான உத்த ரவுபோட்டது. பிரித்தானியாவும் பிரான்சும் ஹவாய் மீது கடுமையான நிலைப் பாட்டை எடுக்கத் தொடங்கியிருக்கிறது. இருப்பினும், அத்தகைய நகர்வுகள் 5G இல் சீனாவின் செல்வாக்கை முற்றிலு மாக அகற்றமுடியாது.

டோக்கியோவில் அமைந்துள்ள சைபர் கிரியேட்டிவ் நிறுவனத்தின் தகவலின்படி, 5G க்கான நிலையான - அத்தியாவசிய காப்புரிமைகளின் 20% மேல் ஹவாயிடம் கோப்புரிமம் உள்ளது, 3வது தலைமுறை கூட்டு திட்டம் (3Rd Generation Partnership Project -3GPP)என்பது மொபைல் தொலைத் தொடர்புகளுக்கான நெறிமுறைகளை உரு வாக்கும் பல தரநிலை நிறுவனங் களுக்கான ஒருகுடை நிறுவனம். 3GPPக்கு 5G தொடர்பான பங்களிப்புகளில் ஹவாய் முன்னணி வகிக்கிறது, இது தொலைத்தொ டர்பு தரங்களை அபிவிருத்தி செய்யும் ஒரு சர்வதேச அமைப்பான, ஐரோப்பிய போட்டி யாளர்கள் மற்றும் அமெரிக்காவை தளமா கக் கொண்ட குவால்காம் (Qualcomm) ஆகியவற்றை பின்தள்ளி ஹவாய் முன்ன ணியில் நிற்பதைக் காட்டுகிறது.

சீன நிறுவனம் - 4G இல் கூட ஒரு முன்னோடிதான் - அமெரிக்க வயர்லெஸ் கேரியர் சீனவின் காப்புரிமைகளை மீறுவ தாக குற்றம் சாட்டி, பெப்பிரவரி மாதம் வெரிசோன் கம்யூனிகேஷன்ஸ் மீது வழக் குத்தாக்கல் செய்தது.

'ஹவாய் 5G வலையமைப்பிலிருந்து தடுக் கப்பட்டாலும், தொழில் தரங்களின் ஒரு பகுதியாகிய காப்புரிமைகளைப் பயன்ப டுத்துவதற்கு நிறுவனங்கள் மானியங்கள் செலுத்த வேண்டியிருக்கும்,' என்பது அறிவுசார் சொத்து விவகாரங்களின் நிபு ணத்துவ வழக்கறிஞர்களின் கருத்தாகும்.

சீனாவிற்கெதிரான பொருளாதாரத் தடை-களின் தாக்கத்தை குறைகும் வகையில் சீனா புதிய வியூகங்களை வகுக்கலாம். சர்வதேச 5G விவரக்குறிப்புகளை உரு வாக்கும் சூழலில், இந்த செயல்முறை யில் இருந்து அமெரிக்கா வெளியேற லாம். ஆனால் பல நிறுவனங்கள் கறுப் புப் பட்டியலிடப்பட்ட ஹவாய் நிறுவனத் துடன் தொழில்நுட்ப தகவல்களைப் பரி-மாறிக் கொள்ள அனுமதிக்கும் வழக்கத் திற்கு மாறான நடவடிக்கையை அமெரிக்க கருவூலத்துறை (U.S. Treasury Department) கடந்த மாதம் எடுத்தது.

சீனா 5G தரங்கள் மேம்பாட்டு முயற்சியை வெற்றிகரமாகக் கைப்பற்றினால், சீன தொ ழில்நிறுவனங்கள் 5G- தராதரதிற்கான தொ லைபேசிகளுக்கான chips மற்றும் மென் பொருளை உருவாக்குவதில் வாய்ப்பைப் பெறுவார்கள். இது வெறும் கருவிகளை உ திரியிலிருந்து பொருத்தி செய்யும் வேலை யைவிட முக்கியத் துவம் வாய்ந்தது. இது சீனாவின் தொழில் நுட்ப செல்வாக்கை கட் டுப்படுத்தும் யு.எஸ் மூலோபாயத்திற்கு மற் றொரு தடையை ஏற்படுத்தும்.

இந்த போக்கு டோக்கியோவில் மேற்கு நா டுகளையும் கவலைக்கு உள்ளாக்கும்.

முதலில் சீனா அதன் சொந்த உள் நாட்டு தரங்களை சர்வதேச தரத்திற்கு மாற்றும். பின்னர் அந்த விவரக்குறிப்புகளை பூர்த்தி செய்யும் முழுமையான சீன அமைப்புகளை ஏற்றுமதி செய்யும்.

திறன் நகரங்கள், smart cities வீடுகள் மற்றும் போக்குவரத்து, சுகாதாரம் உட் பட பரந்த அளவிலான தொழில்துறைகளை தொடலாம். மற்றும், புதிய விதிகள் மற்ற நாட்டு வணிகங்களை பாதிக்கலாம். முக அங்கீகாரம் போன்ற தொழில்நுட்பங்க ளின் மூலம் சேகரிக்கப்பட்ட தனிப்பட்ட தரவை சீனா அணுகுவதற்கான கவலை-களையும் கொண்டிருக்கிறது. சீனா ISO விற்கு சமர்ப்பித்த திறன் நகரங்களுக்கான (proposed standards for smart cities) முன்மொழியப்பட்ட தரங்களை ஜப்பான், இந்தியா உட்பட மேற்கு நாடுகளும் உன் னிப்பாக கவனித்து வருகிறது.

pon.balarajan@thaiveedu.com

நியூ
ரங்கனாஸ் நகைமாடம்

சிங்கப்பூர் நகைகளை மிகக் குறைவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

பழைய தங்க நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்

தங்க நகை அடகு சேவை குறைந்த வட்டி வீதம்

புதிய தங்க நகை சேமிப்பு திட்டம் ஆரம்பம்

647-702-2159 | MARKHAM & STEELES YELLOW BUILING

6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6

அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!

முற்றிலும் இலவசமான சேவை!

12வருடத்திற்கு மேற்பட்ட

உங்கள் Gas Furnace இற்கான CO அளவீடு

வீட்டிற்கு வந்து பரிசோதிக்கப்படும்.

AATEK
HEATING & COOLING

$2100 Rebate Available Now
call us 416-414-2280

- FREE Inspection in GTA
- Over 10 yrs in Business Experience
- Flat Rate Pricing
- Parts and Labour guarantee
- Guaranteed Repairs
- Professional Service
- Fully Insured

10 வருடங்களுக்கு மேலாக ரொரண்டோவின் முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவத்துடன்

Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install

Licensed Technician | ELENGO THIYAGARAJAH

ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com

We Are Specialists in customs homes Ductwork System

We Are Professional trouble shooters for all major gas appliances

416.414.2280

மற்றுமோர் அலை! மாற்றமுடியுமா?

- போல் யோசேப் -

பல நாடுகளில், 'மீண்டும் பள்ளிக்குப் போகலாம்' என்ற உத்தரவுகளைப் பிறப்பிக்க அரசுகள் தொடங்கியிருக்கின்றன.

பெற்றோருக்கு... 'வேலைக்கும் போகத் தொடங்கலாம்' என்று நிம்மதிப் பெருமூச்சும், 'எப்படி எங்கட பிள்ளையள இந்தக் கொரோனாவுக்குள அனுப்புறது' என்ற ஏக்கப் பெருமூச்சும், 'இதுகள எவ்வளவு நாளுக்குத் தான் வீட்டுக்குள் அடைச்சு வைச்சுக் கொண்டிருக்கிறது, பார்த்தா பாவமாக்கிடக்குது' என்ற பாசப் பெருமூச்சும்... பெற்றோரை திக்குமுக்காட வைக்கின்றது.

இந்த மாதத்தோட எங்கட மவராசன் ஜஸ்ரின் ரூடோ தந்த இரண்டாயிரமும் முடியுது, பழைய படி பிழைப்பைத் தேடிச் சென்றுதான் ஆகவேண்டும் என்ற நிலை. அதனால பிள்ளைகளைத் தனியாக வீட்டில் விட்டுச் செல்லமுடியாத காரணங்கள். இப்படிப் பெற்றோருக்கும் சமூகத்திற்கும் பிள்ளைகள் தொடர்ச்சியாக வீட்டில் இருப்பதால் பல்வேறு நிலைகளில் பல பிரச்சினைகள்.

பாடசாலைகளில் மாணவர்களுக்கான சிறப்பு ஏற்பாடுகளுக்கான வழிகாட்டல் முறைகள் அரசால் வகுக்கப்பட்டு, வரைமுறைகள் அனைத்தும் தெளிவாக விளக்கப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும், பணியாளர்களுக்குமான சுகாதார நல பாதுகாப்பு முறைகள், அவை பேணப்படும் முறைகள் எல்லாம் முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

பாடசாலை என்பது மாணவர்களுக்கான கற்றல் மற்றும் இணைந்து வாழும் சூழலை உருவாக்குவதற்கான ஒரு நிறுவன மயப்படுத்தப்பட்ட அமைப்பாகும். அதை விடுத்து கற்றல் முறைகளில் மாற்றம் தேவை என்று இணைய வழிக்கல்விக்கு முண்டு கொடுப்போம் என்றால் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி அவர்களுக்கு மனநல மருத்துவர்கள் முண்டு கொடுக்கும் காலம் வந்துவிடும். இணைய வழிக்கல்வி என்பது அறிவின் பரிமாற்றமே தவிர 'கற்றல்' அல்ல.

Learning is the process of acquiring new under standing knowledge, intelleet, behaviors, skills, values, attitudes and preferences. Which can be beneficial to an individual and community.

கற்றல் என்பது அறிவை, புத்தியை, பழக்க வழக்கங்கள் - நடத்தை, திறன்கள், மதிப்பீடுகள், அணுகுமுறை, முன்னுரிமை போன்றவற்றை அறிந்து கொள்ளுவதற்கான செயன்முறையும் புதிதாக தெரிந்து பெற்றுக் கொண்டவற்றை மெருகூட்டல் அல்லது வலுவூட்டல் என்பதாகும்.

எனவே நிறுவனத்தில் நேரடியான கல்வியும், பயிற்சி முறைகளும் அதோடு தொடர் புடைய பல்வேறு வழிமுறைகள் தான் முழுமையான கல்வி கற்றலை வழங்க முடியும். சில காரணங்களால் சில காலங்கள் இவை தடைப்படலாம். மீண்டும் அவற்றை கட்டி எழுப்புவதில் சுமூகமாக நம் எல்லோரின் பங்களிப்பும் அவசியமாகிறது. யுத்த காலங்களில் இது போன்ற நீண்ட கால தடைகளையெல்லாம் தாண்டி, மீண்டு வந்த சமூகம் என்பதில்... நமக்கு இதில் ஏற்கனவே அனுபவரீதியான அணுகுமுறைகள் ஒன்றும் புதிதல்ல. ஆனால், இங்கு பிறந்து வளர்ந்த பிள்ளைகளும் மாற்று இனத்தவர்க்கும் புதிய அனுபவம் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது.

கடந்த காலத்தில் மாணவர்கள் வீடுகளுக்குள் முடங்கிப் போயிருந்ததால் அவர்களின் மனநலத்திலும் உடல் நலத்திலும் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதாக ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. ஒருவித இனம்புரியாத பயம், கவலை, பதட்டமான மனநிலை, எதிர்காலம் பற்றிய அச்சம், மனச் சோர்வு, மன அழுத்தம் போன்ற அறிகுறிகள் காணப்படுகிறது. மேலும் தூக்கமின்மை, உணவு உட்கொள்ளும் பழக்கத்தில் மாற்றம், உடல் அசைவு இல்லாமல் அதனால் உடல் பருமன் அதிகரித்தல் போன்ற பல பிரச்சினைகளுக்கு ஆளாகிவருகின்றனர். மேற்படியான காரணிகளாலுண்டான பல வியாதிகளுக்காக மருத்தவ உதவியை நாடியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் போதைப் பழக்கங்களுக்கு தொடர்ச்சியாக அடிமையாகி, பல மாணவர்கள் மருத்துவ உதவியை நாடியுள்ளதாகவும்

ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அது மட்டுமல்ல தொடர்ச்சியான தொலைபேசிப் பயன்பாடு, நீண்ட நேரம் போனை நோண்டுவது (Phone Addiction) தொலைகாட்சி பார்த்தல், 'வீடியோ கேம்' அடிமைத்தனம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு, தூக்கமின்மை, மைக்ரேன் என்ற ஒற்றைத் தலைவலி, கழுத்துவலி போன்ற காரணங்களுக்காக மருத்துவ உதவிகளை பெரும்பாலான மாணவர்கள் நாடியுள்ளனர்.

முறையற்ற உணவு, உறக்கம், உடலுழைப்பு இன்மை போன்றவற்றால் உடற் பருமன் அதிகமாகி ஆரம்ப இதய நோய்களுக்கு உள்ளான பலர் அதன் அறிகுறிகளோடு மருத்துவ சேவையைப் பெற்றுள்ளனர்.

இனிவரும் தகவல்கள் அதிகார பூர்வமானதும் ஆதார பூர்வமானது மட்டுமல்ல சற்று அதிர்ச்சி தருவதாகவும் அமையலாம். அமெரிக்காவின் CDC என்ற நோய்த் தடுப்பு மருத்துவ அமைப்பு, APA என்ற அமெரிக்க உளவியல் அமைப்பு மற்றும் சில பல்கலைக்கழகங்கள் பல ஆயிரக்கான மாணவர்களில் கடந்த சில மாதங்களில் மேற்கொண்ட தீவிர ஆய்வுகளில் 41 வீதமான மாணவர்களில் எதிர்மறையான மன உணர்வுகளும் அதனால் மன அழுத்தங்களும் மட்டுமல்ல 25 வீதமான கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களில் தற்கொலை எண்ணங்களும் அதற்கான முயற்சிகளும் நடைபெற்றுள்ள அதிர்ச்சியான தகவல்கள் ஆகஸ்ட் 14, 2020 இல் வெளியான ஆய்வறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.

எனவே இனியும் இந்நிலை தொடராமல் இருக்க சமூகமாக பொறுப்புணர்வோடும் விழிப்புணர்வோடும் செயற்படுவது இன்றைய அவசரத் தேவையாகவுள்ளது.

உலக சுகாதார நிறுவனமும் மற்றும் பல இது தொடர்பான ஆய்வுகளும் சொல்லும் தகவல், இந்த தொற்று ஓரளவு திருப்தியான அளவுக்கு குறைந்து சற்றுச் சுமுகமான நிலை ஏற்படக் குறைந்தது இன்னும் இரண்டு ஆண்டுகளாகும் என்பதாகும்.

ஒரு சில சிறுவனங்களால் தற்காலிக தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டாலும், முழுமை ஆய்வுக்குப்பின்பு செயற்பாட்டுக்கு வரவும், எல்லாருக்கும் கிடைக்கும் நிலை உண்டாகவும் குறைந்தது இன்னும் பதினெட்டு மாதங்களாவது ஆகும் என்பதுதான் நிபுணர்களின் கருத்து.

அதுவரை தொடர்ச்சியான லொக்டவுண் என்பதும், தற்போதைய நடைமுறைகளின் தொடர்ச்சி என்பதும் முடியாத காரியமாகும். அதற்கான அடுத்தடுத்த முன்னெடுப்புகளையும் புதிய அணுகுமுறைகளையும் கண்டறிந்து செயற்படவேண்டிய கட்டாயத்திலிருக்கிறோம். ஏனென்றால் மனித சமூகத்தைப் பொறுத்தவரை இந்த தொற்று முற்றிலும் புதிய நோய் என்பதாலும் கொரோனா பூமிக்குப் பழையவர் என்றாலும் மனிதருக்குள்ளே மிகவும் புதியவர் என்பதால் அவரின் செயற்பாடுகளும் தாக்குதலும் நம்மால் இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்ள நீண்ட காலமாகலாம்.

ஓகஸ்ட் 24, 2020 இன்படி உலக அளவில் 2 கோடியே 34 லட்சம் பேர் தொற்றுக்கு ஆளாகியிருந்தும், ஒரு கோடியே அறுபது லட்சம் பேர் முழுமையாக குணம் பெற்று நலமாகி இருக்கின்றனர் என்பது மிக ஆறுதலான செய்தியாகும். சுமார் எட்டுலட்சம் பேர் மரணமடைந்துள்ளனர். ஆனால் எந்த குணங்குறிகளுமின்றி பரிசோதனை எதுவும் செய்யாமல் 'நோய்க்காவிகளாக' இருக்கும் பல லட்சம் பேர் கணக்கில் வராத தொகையாகும் என்பது பலருக்கும் தெரியாத புதிரான விடயமாகும்.

தற்போது அமெரிக்காவிலும் பிரேசில் நாட்டிலும் இந்தியாவிலும், ரஷ்யாவிலும் அதிக தொற்றுக்களும் இறப்புகளும் காணப்படுகிறது. சற்றுக்குறைவான எண்ணிக்கையில் மற்ற நாடுகளிலும் தொற்றுத் தொடர்கிறது.

இதில் குறிப்பாக இந்தியாவில் சுமார் இரண்டு மாதங்களுக்கு மேலாக முழுமையான லொக்டவுண் என்ற ஊரடங்கு தீவிரமாக கடைப்பிடிக்கப்பட்டும் தொற்று கட்டுக் கடங்காமல் பரவி வருகிறது என்பது ஆச்சரியம்தான். நோய்ப்பரம்பலையும் அதன் சங்கிலித் தொடரையும் உடைக்க ஊரடங்கு மட்டுமல்ல முக்கவாய்க்கவசம் அணிவது தனிமனித இடைவெளி பேணுவது, தன்சுத்தம் பேணுவது போன்ற பல முறைகளின் கூட்டுத் தொகுப்பான நடைமுறையாலும் பரிசோதனைகளை அதிகப்படுத்துவதும் மற்றும் தொற்றாளர்களை தனிமைப்படுத்தல், அவர்களோடு தொடர்புடையவர்களை அடையாளம் கண்டு பரிசோதித்து தனிமைப்படுத்துதல் என்று பல படிகள் இதன் பின்புலத்தில் உள்ளது.

இவை எல்லாவற்றையும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தும் அரசுகளும், மருத்துவர்களும் ஒரு முக்கியமான செய்தியை மக்கள் மத்தியில் பரப்ப தவறுவதுதான் கவலையை அளிக்கிறது. ஆம். அது, நமது நோய் எதிர்ப்பாற்றலை அதிகரித்தல்.

நமது நோய் எதிர்ப்பாற்றலை அதிகரித்து வைரசோடு போராடும் வலுவினைப் பெற்று, வைரஸ் உள்ளே நுழைந்தாலும் ஏழு நாட்கள் கொரோனா வைரசை உள்ளே வைத்து 'நங்கு நங்கு' என்று குத்திக்குலையை பிடுங்கி எறியும் டெக்னிக் பற்றி யூன் மாத தாய்வீடு இதழில் 'வைரசோடு வாழப் பழகலாம் வாங்க' என்ற கட்டுரையில் தெளிவாக எழுதியுள்ளேன் தயவு செய்து வாசியுங்கள் அல்லது ஒலி வடிவில் கேளுங்கள்.

தொடர்தல் 24ம் பக்கம்

மற்றுமொரு அலை...

23ம் பக்கத் தொடர்ச்சி...

அந்த எழு நாட்கள் நம் வெள்ளை அணுக்களான போர் வீரர்கள், சிறப்பு வெள்ளை அணுத் தற்கொலைப் போராளிகள் போன்றவர்களால் வைரசை முழுமையாக அழிக்கும் ஆற்றல் இருந்தால், எந்த நோய் அறிகுறியுமின்றி முற்றிலும் தப்பி வாழ முடியும். அதுமட்டுமல்ல மீண்டும் வைரஸ் எத்தனை தடவைகள் உள்ளே நுழைந்தாலும் முதல் தொற்றின் போது உருவான கொரோனா வைரசுக்கு எதிரான Antibodies என்ற நோய் எதிர்ப்பான் புரதங்கள் உடலுக்குள்ளே எப்போதும் இருப்பதால் அவை இந்த வைரஸ் எப்ப நுழைந்தாலும் ஒரே அடியில் வைரசை காலி பண்ணும் திறன் கொண்டவையாக இருப்பதால் எப்போதும் கவலைப்படத் தேவையுமில்லை பயமுமில்லை என்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். ஆம் அதற்குத்தான் நோய் எதிர்ப்பாற்றல் அதிகரிக்கும் வழிமுறைகள் என 'யூன் மாத தாய்வீடு' கட்டுரை குறிப்பிடுகிறது.

சரி, இனி பாடசாலைகளில் எல்லா ஆயத்தப்பணிகளும் படுமும்முரமாக நடைபெறுகிறது. ஆசிரியர் மற்றும் பணியாளர்களுக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன. செப்ரம்பர் 8, பள்ளிகள் தொடங்கியே ஆக வேண்டும். மாநில அரசும் மத்திய அரசும் 350 மில்லியன் டொலர் முதல் கட்டமான சிறப்பு நிதியை வழங்கியிருக்கிறார்கள். பாடசாலைக்களுக்கென்றே பிரத்தியேகமான பொது சுகாதார செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மாற்றல் (Shift) முறையில் வகுப்புகள் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களோடு நடப்பதால் புதிய ஆசிரியர்கள் மேலதிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர். 4ஆம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்கள் அவசியம் 'மூக்குவாய்க் கவசம்' அணிவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைப் பணியாளர்கள் மற்றும் பேருந்து சாரதிகள் போன்றோர்க்கு P.P.E. சுய பாதுகாப்பு உபகரணங்கள் வழக்கப்படவுள்ளது. ஒவ்வொரு நாளும் காலையில் உள்ளே நுழையும்போது வெப்ப நிலைப் பரிசோதனை செய்யப்படும். தேவை ஏற்படின் செவிலியர்களால் மற்றப் பரிசோதனைகளும் செய்யப்படும். Shift முறையில் நடப்பதால் நேர அட்டவணைகளில், பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது. சில வகுப்புகள் இணைய வழியிலும் நடத்த ஒழுங்குகள் செய்யப்படவுள்ளது.

மருத்துவ ரீதியாக ஏற்கனவே பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மருத்துவர்களின் ஆலோசனையின்படி சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படும்.

உணவுகளைப் பரிமாறிக் கொள்வது, நூல்களைப் பரிமாறிக்கொள்வது, விளையாட்டுப் பொருட்கள் பரிமாற்றம் போன்றவையும் அணைத்தல், கைகுலுக்குதல் போன்றவை தடைசெய்யப்பட்டுள்ளது.

பெற்றோர்கள், மாணவர்களுக்கு சீரான சத்தான உணவுகளை - ஆரோக்கியமான உணவுகளை வழங்குவது முக்கியமான தாகும். துரித உணவுகள், அளவுக்கு அதிகமான கொழுப்பு, இனிப்பு, மாமிச உணவுகள் முடிந்தவரை தவிர்த்து பிள்ளைகளில் உடற்பருமன் அதிகரிக்காமால் பாதுகாப்பது அவசியம்.

மருத்துவர்கள் குறிப்பிடும் 'High risk Children' - ஆம், அமெரிக்காவிலும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களில் பெரும்பாலான சிறுவர் மற்றும் இளையோர் Obesity எனும் உடற்பருமன் கொண்டவர்கள். அதற்குக் காரணம் பலருக்கு இருந்த உணவுப்பழக்கமும் உடற்பயிற்சியின்மையும் அதனால் நோய் எதிர்ப்பாற்றல் குறைந்து போனதும்தான் என்கிறது ஆய்வுகள். மேலும் டயபிற்றிக், அஸ்மா, இரத்த சோகை, நாட்பட்ட சுவாச மற்றும் இதய நோய்கள், சிறுநீரக நோய்கள், நோய் எதிர்ப்பாற்றல் தொடர்பான வருத்தங்கள், இப்படி பல நோய்களுக்காக மருந்து மாத்திரைகள் உட்கொள்ளும் சிறுவர் மற்றும் இளையோர் மிக கவனமாக இருக்கவேண்டியது அவசியம் என்பதும் பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங்களுக்குச் செல்ல முன்பு என்ன மாதிரியான தடுப்புமுறைகள் என்பது குறித்து தகுந்த மருத்துவர்களிடம் மருத்துவ ஆலோசனைகள் பெறுவது அவசியமாகும். இதை பெற்றோர் கவனத்திற்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல புகை, மது, போதைப் பழக்க முள்ள மாணவர்களுக்கும் அவர்களின் நோய் எதிர்ப்பாற்றல் ஏற்கனவே குறைவு, அவர்களின் நுரையீரல், மற்றும் கல்லீரல் என்பன பாதிப்புக்குள்ளாகியிருக்கும் என்பதால் அந்த பழக்கத்திலிருந்து விடுபட்டு வெளியே வருவதே இந்தக் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்க ஒரே வழி.

ஓகஸ்ட் 14, 2020 வெளியான மருத்துவத் தகவல்களில் அடிப்படையில் 16 சதவீத மான சிறுவர் மற்றும் இளையோரில் நோய் தொற்று இருந்தும் அவர்கள் Asymptomatic அதாவது அறிகுறிகள் ஏதுமின்றியே முற்றிலும் சுகமாகிவிட்டனர் என்பதாகும். பாதிக்கப்பட்டவர்களில் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்ட சிறுவர்கள் பெரியோருடன் ஒப்பிடும் போது மிக குறைந்த அளவுதான். சிறுவர்களின் மற்றும் இளையோரின் மூக்கு மற்றும் தொண்டைப்பகுதியில் தான் குணங் குறிகள் ஏதுமற்ற 'Viral Load' மிக அதிகமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்படியான தொற்றுக்குள்ளாகி குணங் குறிகளற்ற காவிகளான சிறுவர் மற்றும் இளையோரின் எண்ணிக்கை இனி கல்வி நிறுவனங்களின் மீள் திறப்பால் அதிகரிக்க வாய்ப்புகளுண்டு. இப்படியானவர்களுக்கு மீண்டும் மீண்டும் தொற்று ஏற்பட்டாலும் அவர்களுக்குள்ளே Antibodies என்கிற நோய் எதிர்ப்பாற்றல் புரதங்கள் நிறைய இருப்பதால் COVID - 19 என்ற நோய் உண்டாக வாய்பில்லை, இயற்கையாகவே தப்பித்துக் கொண்ட 'இயற்கை நோய் எதிர்ப்பாற்றல்' கொண்டவர்கள். இனி எங்கே சிக்கல் என்றால் இவர்களில் மூக்கிலும் தொண்டையிலும் சில நாட்கள் (தொற்று ஏற்பட்ட 7 முதல் 10 நாட்கள்) வைரல் லோட் அதிகமாக இருப்பதால் வீட்டிலுள்ள மற்றவர்களுக்கு நோயை இலகுவாகப் பரப்பக்கூடிய காவிகளாக மட்டுமே இருப்பர். இதில் வீட்டிலிருக்கும் பல நோய்களினால் பாதிக்கப்பட்டு High Risk நிலையிலிருக்கும் மற்றவர்களும், நோய் ஏதுமற்ற மூத்த குடிமக்களும் அதிகமாக பாதிக்கப்பட வாய்ப்புகளுண்டு.

இவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வது மட்டுமே ஒரேவழி. அதற்காக தற்போது அரசாலும் மருத்துவர்களினாலும் பரிந்துரைக்கப்படும் விதிமுறைகளை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கும் மேலாக நோய் எதிர்ப்பாற்றலை நல்ல நிலையில் வைத்துக்கொள்வது மட்டுமே நோய்த்தடுப்பு மருந்து (Vaccine) வரும் வரை Maximum பாதுகாப்போடு வாழலாம்.

ஓகஸ்ட் 23, 2020 வெளியான இன்னொரு தகவலையும் இங்கு பதிவு செய்து கட்டுரையை நிறைவு செய்யலாம். 140 ஆண்டுகளுக்கு முன்பு Emilvon Behring என்ற (Physiologist) ஜேர்மன் உடல் இயங்கியல் மருத்துவ ஆய்வாளர் கண்டுபிடித்த ஒரு புதிய முறைமூலம் டிப்தீரியா என்ற தொண்டை அடைப்பான் என்ற தொற்று நோயிலிருந்து பல லட்சம் குழந்தைகளைப் பாதுகாத்தார். அதனால், 1901 ஆண்டு நோபல் பரிசும் 'குழந்தைகளின் மீட்பர்' ('Saviour of Children') என்ற பட்டமும் பெற்றார்.

அன்று அவர் கண்டுபிடித்ததுதான் 'Convalescent Plasma therapy' என்ற Passive Immunisation முறையாகும். இதை, ஏதோ தாங்கள் தான் கண்டுபிடித்ததுபோல... இப்ப தான் FDA அங்கீகாரம் வழங்கியதுபோல்... ஓகஸ்ட் 23இல் அமெரிக்க அதிபர் இதனை வெளியிட்டார்.

இதே முறை 1918 முதல் 1920களில் உலகத் தொற்றாக இருந்த ஸ்பானிஸ்ஃபுளூ காலத்திலும் பல லட்சக்கணக்கான மனித உயிர்களைக் காத்தது. அதே போல SARS, MERS, H1N1 (பறவைக் காய்ச்சல்) போன்றவை மட்டுமல்ல, அமெரிக்காவில் சில ஆண்டுகளுக்கு முன்பு பரவிய எபோலா போன்ற கொடிய தொற்று நோய்களின் போதும் இந்து பிளாஸ்மா சிகிச்சை முறை வெற்றிகண்டது.

அமெரிக்காவில் கடந்த ஆண்டுகளாக சுமார் எழுபதாயிரத்திற்கு மேற்பட்ட நோயாளிகளில் பல்வேறு தொற்று நோய்களுக்காக இந்த முறை பயன்படுத்தப்பட்டு பயனளித்துள்ளது என்பதை Mayo Clinic மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் உறுதியும் செய்துள்ளது.

அதுமட்டுமல்ல, பல நாடுகளில் ஏற்கனவே இந்த சிகிச்சைமுறை பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது. நான் இந்தியாவில் பணியாற்றியபோது பல நோயாளிகளில் இந்தமுறை பயன்படுத்தப்பட்டதையும் அவர்கள் காப்பாற்றப்பட்டதையும் நான் பணியாற்றிய மருத்துவமை மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் கண்கூடாக கண்ட நேரடி அனுபவம் உண்டு.

பிளாஸ்மா தெரபி என்பது ஏற்கனவே நோய்தொற்றால் பாதிக்கப்பட்டு குணமான நோயாளியின் குருதியில் உள்ள Antibodies என்ற குறிப்பிட்ட நோய்க்குரிய நோய் எதிர்ப்புப் புரதங்களை எடுத்து நோய் தொற்று ஏற்பட்டு குணங்குறிகளோடு இருக்கும் நோயாளிக்கு குருதியில் செலுத்தி விடுதல். இது, நோயற்ற ஒருவருக்கு முன்னதாக வாக்சினாக செலுத்தமுடியாது. தொற்று ஏற்பட்ட நோயாளிக்கு மட்டுமே செலுத்துவதால் இந்த நோய் எதிர்ப்புப் புரதங்கள் ஏற்கனவே உள்ளேயுள்ள வைரசின் செயற்பாட்டை அழித்து நோயிலிருந்து பாதுகாக்கும் முறையாகும் இதை Passive Immunisation Therapy என்றும் அழைக்கலாம். இதைப்பற்றிய மேலும் தகவல்களை பிறிதொரு கட்டுரைகளில் பார்க்கலாம்.

அமெரிக்க Mayo Clinic மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் கோவிட் - 19 நோயாளிகள் 3,500 பேருக்கு ஏற்கனவே இந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வெற்றிகரமாக நோயாளிகள் நலமடைந்துள்ளனர். சிலர் மட்டுமே வேறு பல காரணங்களால் குணமடையவில்லை. ஆனால், இந்த சிகிச்சை முறையினால் அவர்களுக்கு எந்த பின்விளைவுகளும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்படி நூறாண்டுகளுக்கு மேலாக உள்ள சிகிச்சை முறையினை முன்னரே அமெரிக்காவில் பல நோயாளிகளுக்கு சரியான முறையில் பயன்படுத்தி இருந்தால் லட்சம் உயிரிழப்புகளை தடுத்திருக்கமுடியும். மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள், தலைமைப் பொறுப்பிலுள்ள சீனியர் மற்றும் யூனியர் மருத்துவர்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்றவற்றிற்கிடையான கருத்து முரண்பாடு அரசியலால்தான் நிலைமை மோசமானதோ என்று எண்ணத் தோன்றுகிறது. மக்களின் உயிர் காக்க இப்போதாவது FDA அங்கீகரித்துள்ளது வரவேற்கத்தக்கது.

paul.joseph@thaiveedu.com

இந்தியாவில் புதிய தேசிய கல்விக் கொள்கை

- நெல்லை ஜெயசிங் -

ஒரு நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் தனி மனித மேம்பாட்டுக்கும் அடித்தளமாக அமைவது கல்வியாகும். அக் கல்வியானது பாரபட்சம் அற்றதாக, அனைவருக்குமானதாக, அடித்தட்டு மக்கள் வரை பயனடையக் கூடியதாக அமைய வேண்டும். அறிவுசார் தளங்களின் உலகமானது மிக விரைவான மாற்றங்களை எதிர் கொண்டு வருகிறது. ஆதலால், அதற் கேற்ப நாட்டின் கல்வி முறையிலும் மாற் றங்களை செய்திட வேண்டியது அவசியமா கிறது. அதனடிப்படையில் இந்திய தேசத் தில் 35 வருடங்களுக்குப் பிறகு நடை முறையில் இருக்கின்ற கல்வி முறையில் பல மாற்றங்கள் செய்திட வேண்டும் என்ற எண்ணத்துடன் கொண்டு வரப்பட்டதே புதிய கல்விக் கொள்கையாகும். இந்திரா காந்தி அரசாங்கம் 1968இல் கல்விக்கான முதல் தேசிய கொள்கையை அறிவித்தது. பின்பு 1986இல் ராஜிவ்காந்தி அரசாங் கத்தால் புதிய தேசிய கல்விக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் பின் 2017இல் தேசிய கல்விக் கொள்கைக்கான அறிவிப்பு வெளியாகி 2019இல் வரைவு அறிக்கை வெளியிடப் பட்டு 2020இல் அது இறுதிப்படுத்தப்பட்டு மக்கள்முன் வைக்கப்பட்டுள்ளது. இந்திய வானவியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் முன் னாள் தலைவர் திரு. கஸ்தூரி ரங்கன் தலைமையில் ஒன்பது பேர் கொண்ட குழு இறுதி அறிக்கையை அரசிடம் சமர்ப்பித் துள்ளது. 2014 முதல் ஆட்சியில் இருக்கும் பா.ஜ.க. அரசானது RSS அமைப்பின் வழி காட்டுதலில் செயல்படுவதால், இக் குழுவின் அறிக்கை கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறது. நாடும் சமூகமும் மேம்பட கொண்டுவரப்படும் புதிய கல்வி கொள்கையானது இன, மத, மொழி சார்ந் ததாக இருக்கக் கூடாது என கல்வி யாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இன்றைய புதிய தேசிய கல்விக் கொள் கையானது தற்போது நடைமுறையில் இருக்கும் 10 + 2 முறைக்கு மாற்றாக 5 + 3 + 3 + 4 என்ற புதிய முறையை அறிமு கப் படுத்துகிறது. இவ் அறிக்கை ஆரம்ப கல்வியானது 3 வயது முதலே தொடங் கப்பட வேண்டும் என்கிறது. இதன்படி 3 முதல் 6 வயது வரை பாலர் பள்ளி நடை பெறும். ஆறு வயதுக்கு பின் 8 வயது வரை 1ம் 2ம் வகுப்புகளில் சேர்க்கப்படு வார்கள். எனவே இதன்படி அடிப்படைக் கல்விக்கு ஐந்தாண்டு என வரையறுக் கப்படுகிறது. இதன் அடுத்த கட்டம் ஆயத் தக் கல்வியாகும். இங்கு மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை கற்பிக் கப்படும். இதன் அடுத்த நிலை நடு நிலைக் கல்வியாகும். இங்கு ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை இருக் கும். இறுதியில் ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான கல்வி உயர் நிலைக் கல்வி என கட்டமைக்கப் படுவதாக புதிய கல்விக் கொள்கையின் அறிக்கை தெளிவு படுத்துகிறது. இவ் அறிக்கையில் ஆறு வயதிற்கு முன்பே மூளை வளர்ச்சி ஏற்பட்டுவிடுவதாக நம்பப் பட்டு மூன்று வயதிலேயே பாலர் பள்ளிக்கு அனுப்ப வேண்டுமென அறிவுறுத்துவது கல்வியாளர்களை திகைப்படைய வைத் துள்ளது. வளர்ச்சி அடைந்த ஐரோப்பிய நாடுகளில் 6 அல்லது 7 வயதிலேயே பாலர் கல்வி தொடங்குவதை குழு கவ னத்தில் கொள்ளவில்லை. மேலும் கோடிக் கணக்கான குழந்தைகள் அடிப்படை கல் விக்கான வாய்ப்பு இன்றி இருக்கும் அவல நிலை எவ்வாறு தீர்க்கப்படும் என்று தெரிய வில்லை. குழந்தை தொழிலாளர்கள் அதி கம் உள்ள நாடு இந்தியா. 11 குழந்தை களில் ஒருவர் குழந்தை தொழிலாளியாக இருக்கும் போது அனைத்து குழந்தை களுக்குமான கல்வி எவ்வாறு சாத்தியமா கும். முதலில் ஒரு குழந்தை, ஏன் குழந்தை தொழிலாளியாக மாறுகிறது என்பதை கண் டறிந்து முற்றுமாக களையப்பட்டு அதன் பின் கட்டாயக் கல்வியை நடைமுறைப் படுத்த வேண்டும். தாழ்த்தப்பட்டோர், பழங் குடி என... எந்த குழந்தையும் கல்வி கற் கும் வாய்ப்பை இழந்து விடக்கூடாது.

இதனடிப்படையில் 2030க்குள் அனைவருக் கும் தரமான கல்வியை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இலக்கு வரவேற் கத் தக்கது. அதனை அடைவதற்கான வழிமுறையில் தெளிவிருப்பதாக தெரிய வில்லை. போதிய மாணவர்கள் இல்லாத கிராமங்கள் குக்கிராமங்களில் பல அரசுப் பள்ளிகள் மூடப்பட்டு தொலைவில் இயங் கிக்கொண்டிருக்கும் மேல்நிலைப் பள்ளி

களோடு இணைக்கப்பட்டு, பாலர் கல்வி முதல் 12 வகுப்பு வரை ஒரே இடத்தில் நடைபெறும் வகையில் பள்ளி வளாக முறை செயல்படுத்தப்படுமாம். இவ்வாறு பள்ளிகள் மூடப்படும் நிலையால் சிறு பிள்ளைகள் தொலை தூரம் சென்று படிக்க இயலாத நிலை ஏற்படும். இதனால் இடை நிற்றல் அதிகரிக்கும். குறிப்பாக பெண் கல்வி பெரிதும் பாதிக்கப்படும். எனவே அனைவருக்கும் கல்வி என்ற மகாத்தான கோட்பாடு சிதைந்து போகும்.

இந்தியாவின் கல்வி மொழிக் கொள்கை:

இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட 22 மொழி கள் உள்ள நிலையில் பள்ளிக்குழந்தை கள் 3 மொழிகளை கற்க வேண்டும் என தேசிய கல்விக் கொள்கை வலியுறுத்து கிறது. அவற்றில் இரண்டு இந்திய மொழி களாகவும் ஒன்று வெளிநாட்டு மொழி யாகவும் இருக்க வேண்டுமெனவும் விவரிக் கிறது. இந்தி பேசாத மாநிலங்கள் குறிப் பாக தமிழகம் இதனை கடுமையாக எதிர்க் கிறது. சுதந்திரம் பெற்றது முதல் தமிழ் ஆங்கிலம் என இரு மொழிக் கொள்கை தமிழ் நாட்டில் நிலவி வருகிறது.

5ம் வகுப்பு வரை தாய் மொழியில் கற்க பரிந்துரைக்கும் கஸ்தூரி ரங்கன் குழு 6 முதல் 8 வகுப்பு வரையிலான நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு சமஸ்கிருத இலக் கணம் அறிமுகப்படுத்தப்படும் என்கிறது. அதாவது மும்மொழிக் கொள்கை வாயி லாக சமஸ்கிருதத்தையும் நுழைக்க முயற் சிக்கிறது. இதற்காக நாடு முழுவதும் சமஸ்கிருத ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார் கள் எனவும் கூறப்படுகிறது. சமஸ்கிருதத் தில் ஆய்வுக்குரிய பல நூல்கள் உள்ளன. ஆனால், அதனை ஆராய்ச்சிக்காக மட்டும் படித்தால் போதும் என்ற நிலை வர வேண்டுமேயன்றி பள்ளிக்கல்விக்கு அவசி யம் இல்லை. சமஸ்கிருதம் பேசும் மாநிலம் இந்தியாவில் எதுவும் இல்லை. சமஸ்கிரு தம் பேசுபவர்கள் சில ஆயிரம் பேர் மட்டு மே இருக்கும் நிலையில் மத கண்ணோட் டத்துடன் பல கோடி செலவில் கல்வியில் புகுத்த முயல்வது பெரும் அபத்தமாகும்.

மூன்றாவது மொழியாக ஏதாவது ஒரு இந்திய மொழி கற்க வேண்டும் என கூறப் படுவதை மேலோட்டமாக பார்க்கும் போது அதில் ஜனநாயகத் தன்மை இருப்பதைப் போல் தெரியும். ஆனால், உண்மை அது அல்ல. அரசமைப்பு சட்டத்தில் உள்ள 22 மொழிகளுக்கும் தனித்தனி ஆசிரியர் கள் நியமிக்கப்படுவார்களா என்றால் நிச் சயம் அது நடக்காது. நடை முறையில் ஆட்சியாளர்கள் விரும்பும் இந்தி மொழி யை கற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே மும்மொழிக் கொள்கை என்பது தமிழை அழித்து இந்தியையும் சமஸ்கிரு தத்தையும் உள்ளே நுழைக்கும் திட்டமே இது என் தமிழக கல்வியாளர்கள் எதிர்க் கின்றனர். கட்டாய மும்மொழிக் கொள்கை எந்தவொரு நாட்டிலும் இல்லை என்கின் றனர். 3 வயது முதலே மும்மொழியை பயில வேண்டும் என கூறுவது குழந்தை கள் மீதான வன்முறை தாக்குதலாகும் எனவும் கூறுகின்றனர். பன்முகத்தன்மையே இந்தியாவின் பலம். பல இன, மத, மொழி மக்கள் வாழும் இந்திய தேசத்தில் குறிப் பிட்ட ஒரு மொழியை, மதத்தை திணிக்க முயல்வது ஏற்புடையதல்ல. இதனை நிறை வேற்றிக் கொள்வதற்காக ஒன்றிய அரசு முழுக் கட்டுப்பாட்டையும் தன் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர முயல்கிறது.

பல விதமான தேர்வு முறைகள்:

மாணவர்கள் ஆசிரியர்கள் இருவருக்குமான தேர்வு முறைகளை புதிய கல்விக் கொள் கை அறிமுகப்படுத்துகிறது. முன்பு பட்டப் படிப்புக்கு முன்னதாக 10, 12க்கான பொ-துத் தேர்வு முறை இருந்தது. தற்போது அவற்றுடன் 3, 5, 8, வகுப்புகளுக்கும் பொதுத்தேர்வு நடத்தப்படும் என கூறு வது மிகப்பெரும் வன்முறையாகும். குழந் தைகளை மட்டுமல்லாமல் பெற்றோர்களும் பதட்டத்துடனேயே வாழ வேண்டிய சூழ் நிலை உருவாகும். தேர்ச்சி அடையாதோர் பாடசாலை விட்டு வெளியேறும் அபாயகர மான நிலை உருவாகும். இதனால் மிகவும் பாதிக்கப்பட போவது தின கூலிகளாக இருக்கும் ஒடுக்கப்பட்ட மலைவாழ் மக்க ளேயன்றி மேல்தட்டு மக்களல்ல.

நுழைவுத் தேர்வு:

தற்போது மருத்துவம், பொறியியல், சட்டம் உள்ளிட்ட உயர் நிலை கல்வி நிலை யங்களில் படிப்பதற்கு மட்டுமே தகுதித் தேர்வுகள் நடத்தப்பட்டு வந்துள்ளன. ஆனால் புதிய கல்வி கொள்கையில் கல் லூரிகளில் அறிவியல், கலை, மொழி, நுண்கலைகள், தொழிற்கல்வி பாடங்களை படிப்பதற்குத் தேசிய அளவில் நடத்தப் படும் நுழைவுத் தேர்வில் தகுதி பெற வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள் ளது. ஏற்கனவே மருத்துவ படிப்பிற்கான நீட் நுழைவுத்தேர்வு முறையால் தமிழகம் பெரும் பின்னடைவைச் சந்தித்து வருகிறது. இதனால் கிராமப்புற, அரசு பாடசாலை மாணவர்களுக்கு மருத்துவ படிப்பு வெறும் கனவாகவே இருந்து வருகிறது. மேலும் பெருகி வரும் நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி கூடங்களுக்கு பல இலட்சங்களை செலவழிக்க வசதியற்ற மேற்படி ஏழை மாணவர்களே பெரிதும் பாதிக்கப்படுவர். 15 வருடம் பள்ளியில் படிப்பை முடித்து அங்கே பல தேர்ச்சிகளையும் பெற்ற ஒரு மாணவரை நுழைவுத் தேர்வு மூலம் எடை போடுவது என்பது பள்ளிக் கல்வியின் தரத்தை கேள்விக்குறியாக்குகிறது. இதனால் இங்கும் குறிப்பிட்ட வசதிபடைத்த மேற் தட்டு மாணவர்கள் மட்டும் உயர் கல்வி பெற மற்றவர்கள் கூலித்தொழிலுக்கு தள் ளப்படும் நிலை உருவாகும்.

ஆசிரியர் தேர்வு:

புதிய கல்விக் கொள்கையில் ஆசிரியர் களின் பங்களிப்பு மிகவும் பிரதானம் என கருதப்படுகிறது. எனவே ஆசிரியர்களுக் கான தகுதியும் புதிய வரையறைக்குள் உட்படுத்த வேண்டும் என புதிய கல்விக் கொள்கை வலியுறுத்துகிறது. தற்போது ஆசிரியர்கள் பணிக்கு சேர்வதற்கு மட்டுமே தகுதித் தேர்வு நடத்தப்படுகிறது. இனி எதிர்காலத்தில் ஆசிரிய தகுதித் தேர்வில் தேர்வு பெற்றவர்களே ஆசிரிய பயிற்சி படிப்பில் சேர முடியும் என்ற விதிமுறை அமுல்ப்படுத்தப்படுமென கூறப்படுகிறது. ஆசிரிய பயிற்சிக்கான தேசிய பாடத் திட்டம் உருவாக்கப்படும் என்றும், ஆசிரி யர்களுக்கான தேர்வு 4 ஆண்டு கால படிப்பாக இருக்கும் எனவும் கூறப்பட்டுள் ளது. இதன் மூலம் தகுதியான காலத்திற்கு ஏற்ற ஆசிரியர்களை பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு கல்வித்துறையில் செய்திட வேண் டிய பல்வேறு மாற்றங்களைப் பற்றி கஸ் தூரி ரங்கன் குழு மிக நீண்ட அறிக்கை யை வெளியிட்டுள்ளது. எல்லா அம்சங் களையும் அது விவரிக்கிறது. சுருக்கமாக அவற்றை கூறுவதாயின்,

- தொழிற் கல்வி பற்றி கூறும் போது நடு நிலை உயர் நிலை பள்ளிகளில் தொ ழிற்கல்வி அறிமுகப்படுத்தப்படும் என் கிறது. அதே நேரம் இத்திட்டத்தில் குலக் கல்வி வந்துவிடும் என்ற அச்சம் சில ருக்கு உண்டு.
- அலோபதி எனப்படும் ஆங்கில மருத் துவக் கல்வியில் பாரம்பரிய மருத்துவ முறையும் அறிமுகப்படுத்தப்படும்.
- தனியார் கல்வி நிறுவனங்கள் அதிகபட்ச கட்டணங்களை வசூலித்திட அனுமதிக் கிறது. இது ஏழைப் பெற்றோர்களை கடுமையாக பாதிக்கும் செயலாகும்.
- குறைந்த பட்சம் ஐந்தாம் வகுப்பு வரை தாய் மொழிக் கல்வி அறிமுகமாகும்.
- பள்ளிக்கூட பாடத்திட்டம் ஒட்டு மொத்த வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் மாற்றி அமைக்கப்படும்.
- உயர் கல்விக்கான ஆணையம் அமைக் கப்படும்.
- திறந்த வெளி மற்றும் தொலை தூரக் கல்வி விரிவு படுத்தப்படும்.
- இணையவழிக் கல்வி மற்றும் டிஜிட்டல் கல்வி முறை அறிமுகப்படுத்தப்படும்.
- தேசிய வருமானத்தில் 6 வீதம் கல்விக் காக செலவிடப்படும். தற்போது 2.6 வீதம் மட்டுமே செலவிடப்படுகிறது.

இவ்வாறு பல்வேறு சீர் திருத்தங்களை கஸ் தூரி ரங்கன் குழு முன் மொழிந்துள்ளது.

jeyasingh@thaiveedu.com

முறையில் கல்வி

- த. சிவபாலு -

கடந்த கட்டுரையில் முறை சார் கல்வி (formal), முறை சாராக் கல்வி (informal) பற்றிப் பார்த்தோம். இந்தக் கட்டுரை முறையில் கல்வி (non-formal education) பற்றியதாகும். முறைமைக் கல்வி என்பதும் முறைசாராக் கல்வி என்பதும் ஏதோ ஒரு வகையில் நிறுவன மயப்படுத்தப்பட்ட கல்வியமைப்பைக் கொண்டவை.

நிறுவனமயப்படுத்தப்பட்ட கற்றல் நியமங்களுக்கு வெளியே நடத்தைகள், விதி முறைகள் மற்றும் மதிப்புகள் பற்றிய திட்டமிடப்படாத - மற்றும் தன்னிச்சையாகக் கற்றல் நடத்தையை, முறையில் கல்வி குறிக்கும். இது சாதாரண பள்ளி அமைப்புக்களுக்கு வெளியே நிகழ்கிறது. இது முறைசார் கல்விக்கு எதிர்மாறானது. பள்ளிக் கட்டமைப்புக்கள் கருத்தியல் ரீதியாகவும் கலாச்சாரரீதியாகவும் சித்தாந்த முறையில் தெளிவாக விளக்க முடியாததாகவும் சிக்கலானவையாக உள்ளன. இது இப்படித்தான் கற்க வேண்டும், இப்படித்தான் உள்ளது என்பதனை எந்தவொரு கொள்கைரீதியாகவும் விளக்க முடியாதது.

முறையில் கல்விக்கு முறைமைகள் அற்ற, நிறுவனமயப்படுத்தப்படாது, எந்த வித கட்டுப்பாடுகளும் அற்ற கல்வி என்பது பொருளாகும். ஒரு இனத்தின் பண்பாட்டுக் கலாச்சார விழுமியங்களை அந்த மொழிக்கு வெளியே புரிந்து கொள்ள முடியாதோ, அதனை எப்படி வேற்று இனக் கலாச்சார பண்பாட்டாளர்களால் புரிந்து கொள்ள முடியாதோ அவ்தவிதமே முறையில் கல்வி மூலம் கற்றுக்கொள்ளும் நடத்தைகள், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், குடும்ப விழுமியங்கள் என்பன உள்ளன. எடுத்துக் காட்டாக சடங்குகள், சம்பிரதாயங்களை நாம் ஒருவரும் வகுப்பு வைத்துக் கற்றுக் கொள்வதில்லை. ஆனால் அவற்றை அறிந்து கொள்கின்றோம். நிறுவன அமைப்பு அற்றவகையில் படிப்பினைகளை பெற்றுக்கொள்ளும் கல்வியை முறையில் கல்வி எனலாம்.

பண்டைய சமூக அமைப்பில் முறையில் கல்வி பரவலாகக் காணப்பட்டுள்ளது. சமூகப்பெரியவர்கள், பெற்றோர், மதகுருமார், தொழில் செய்வோர் போன்றோரிடமிருந்து அறிந்து அறிவை விருத்திசெய்யும் முறைகளை இதனுள் அடக்கலாம்.

இன்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் பாடசாலைக் கல்வியைப் பெறமுடியாத மக்கள் வாழத்தான் செய்கின்றார்கள். பொதுவாகப் பழங்குடியினர் இவ்வித வாழ்வியலையே கொண்டுள்ளனர். கனடாவில் இன்றும் பாடசாலைக்குச் செல்லாத, செல்ல முடியாத பிள்ளைகளைப் பழங்குடியினரிடையே காணமுடியும். அவ்விதமே இலங்கையில் இன்றும் மகியங்கணை போன்ற பிரதேசங்களில் வாழும் வேட்டுவ வம்சத்தினர் கல்வியைப் பொருட்டாகக் கொள்வதே இல்லை. இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் இந்த நிலை உண்டு. தமிழ்நாட்டில் மலைவாழ் மக்கள் கல்வி வாய்ப்புக்கள் அற்றவர்களாக இன்றும் வாழ்ந்து வருவது கண்கூடு. அவுஸ்திரேலியாவில் பழங்குடியினரும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்லர். எனவே இவர்கள் தங்கள் பண்பாடு, பழக்கவழக்கங்கள், ஒழுக்கமரபுகளை யாரிடமிருந்து கற்றுக் கொள்ளுகின்றார்கள் என்பது எம்முன் எழுகின்ற கேள்வியாகவே உள்ளது.

இப்பிள்ளைகள் பெற்றோரிடமிருந்தும் முன்னனுபவமுள்ளவர்களிடமிருந்தும் முதியவர்களிடமிருந்தும் வாழ்வியலைக் கேட்டும், பார்த்தும், செயல்களைச் செய்தும் பழகிக் கொள்கின்றார்கள் என்பது இன்றும் தொடர்கின்றது. அப்பிள்ளைகள் பெற்றுக்கொள்ளும் அறிவு விருத்தி என்பது முறையில் கல்வியாகவே உள்ளது என்பது வெளிப்படை. ஒரு குழந்தை கேட்டு, பார்த்து அறிந்து கற்றுக் கொள்வது இப்படித் தான் கற்கவேண்டும் என்ற நியதியற்ற தாக உள்ளது. குழந்தையின் வளர்ச்சிப் பருவத்தில் கற்றுக் கொள்ளுவதே அதிகம். குழந்தை தொட்டிலில் இருந்து பாட சாலைக்குச் செல்லும் வரை கற்றுக் கொண்டு மூளையை விருத்தி செய்கின்றது. இந்தப் பருவத்தில் பெற்றோர், சகோதர், உறவினர் போன்றோரிடமிருந்து கற்றுக் கொள்ளுவது முறையில் கல்வியின் பாற் பட்டது. இலங்கையில் 15-20 மைல்கள் நடந்து சென்று கற்கும் நிலை பிள்ளைகளுக்கு உண்டு. அவர்களுக்கான பாட சாலை அணியுடையினைப் பெற்றோரால் பெற்றுத் தரமுடியாத நிலையும் உண்டு எனில், அவர்கள் எவ்விதம் நிறுவனமயப் பட்ட பாடசாலைக் கல்வியைப் பெற்றுக் கொள்ள முடியும்? இலங்கையில் 14 வயது வரையும் கட்டாயக் கல்வி எனச்

சட்டம் வகுக்கப்பட்டிருந்தாலும் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படுவதில்லை என்பதும் உண்மை.

கல்வி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று ஐ.நா. சபையின் மனித அடிப்படை உரிமை பட்டயம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. யார், யார், கற்கவேண்டும், எப்படிக் கற்கவேண்டும், எங்கே கற்க வேண்டும் என்பது எம்முன்னே எழுகின்ற கேள்விகள். இவ்விடத்தில் முறைசார்கல்வி, முறை சாராக் கல்வி, முறையில் கல்வி என்பதற்கான வேறுபாடுகளை அறிந்துகொள்ளுதல் அவசியமாகின்றது.

கற்பித்தல் என்பது அறிவு, திறன், உளப் பாங்கு என்பவற்றைக் கற்றுக் கொள்வதற்காகவே. இதன் அடிப்படையில் முறை சார் கல்வி என்பது ஒரு நீண்டகால தொடர்ச்சியான செயற்பாடாக உள்ளது. அதில் மாணாக்கர்கள் கற்றுக்கொண்டதை அளவீடு செய்யும் முறைமையும் உள்ளது. முறையில் கல்வி 1960களின் ஆரம்பத்திலும் 1970 களிலும் தொடர்ந்து அதன் வழி வாழ்க்கையின் முழுமையும் கற்க வேண்டிய நிலையை உணரத் தலைப் பட்டது. இதனால் முறையில் கல்வி இடம் பெறும் தன்மை, நோக்கம், கல்வி தருநர், பெறுவோர் போன்றவற்றில் கருத்தூன்றி கவனம் செலுத்தப்பட்டதோடு இன்றும் பல் வேறு முன்னேற்றங்களைக் கண்டு வருகின்றது.

முன்னேற்றம் காணப்படாத நிலையில் அல்லது வாய்ப்புக்கள் அற்றவர்களைக் கருத்திற் கொள்வதாக முறையில் கல்வி அமைந் திருந்தது. அது சமுகரீதியாக இடம்பெறுகின்றது. முறையில் கல்வியில் பரீட்சை முறைகள் இல்லாதது, உத்தியோகத்தை நோக்கமாகக் கொண்டதாக இல்லை. அது சமூகக் கல்வியாக அமைகின்றது. தொன்று தொட்டு ஆலயங்களில் இவ்வித கல்வி முறையில் அமைந்த கதாப்பிரசங்கங்கள், உரைகள், கூத்துக்கள் போன்றவற்றால் அறிவை விருத்தி செய்யும் முறை காணப் பட்டது. இது பாடசாலை செல்லாத சமூகத்தவர்கள் அறிவைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பாக அமைந்தது. இன்றும் பட்டி மன்றங்கள், கருத்தரங்கங்கள் போன்றன இத்தகைய முறையில் கல்வியைத் தருவன வாக உள்ளன.

இன்று உலகம் கல்வியில் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை முறையில் கல்வி கொண்டிருக்கவில்லை. முறையில் கல்வியின் முக்கியமான பண்பு திட்டமிடப்பட்ட கற்பித்தல் - கற்றல் முறைகள் எவையும் இல்லாததே. இன்றைய கல்விமுறையில் எதிர்பார்க்கப் படும் தொழில் வாய்ப்புக்களை முறையில் கல்வி கொண்டிருக்கவில்லை. அது வாழ்க்கைக்கான வழிகாட்டலாக அறநெறிகளைப் பின்பற்றி சமூக ஒழுக்கத்தை மேம்படுத்துவதாக அமைகின்றது. முறைசார் கல்வியில் எதிர்பார்க்கப்படும் கலந்துரையாடல், பிரச்சினைகள் விடுவித்தல், கட்டுப்பாட்டோடு கற்றல் போன்ற கெடுபிடிகள் அற்றதாக சுயாதீனமாகக் கற்றுக்கொள்ளும் தன்மையைக் கொண்டுள்ளது.

முறைசார் கல்வியில் ஆசிரியர் எதனை விரும்புகின்றாரோ அல்லது கல்வி நிறுவனம் எதனை விரும்புகின்றதோ அதனைத் திட்டமிட்டு மாணவர்களுக்கு வழங்குதல் முதன்மை பெறுகின்றது. ஆனால் முறையில் கல்வியில் ஆசிரியர்-மாணவர் என்ற தொடர்போ ஈடுபாடோ இல்லாத நிலையில் கல்வி இடம்பெறுகின்றது. முறையில் கல்வியில் தாம் விரும்பிக் கற்றுக்கொள்ளும் நிலை முன்னுரிமை பெறுகின்றது. இதில் கற்போர் பாடசாலை மாணவரைப்போன்று முக்கியம் பெறுவதில்லை. யாரும் தாம் விரும்பியவாறு கற்கலாம்.

கத்தோலிக்கத் தேவாலயங்கள், இந்துமத ஆலயங்கள், இஸ்லாமிய வழிபாட்டிடங்கள் என்பன இத்தகைய முறையில் கல்வியைத் தருகின்றன. வழிபட வருவோருக்கு வயது, பால், இனம் என்ற பாகுபாடு இன்றி சமய அறிவைத் தருகின்றன. அதன் வழி சமுதாயத்திற்குத் தேவையான நல்லொழுக்கப் பண்புகளை வளர்த்தெடுக்கின்றன. வாழ்க்கை இப்படித்தான் இருக்க வேண்டும், எவற்றைப் பின்பற்ற வேண்டும் என்பன போன்ற அறநெறிக் கருத்துக்கள் மக்களுக்கு போதிக்கப் படுகின்றன. பாடசாலைகளுக்கு மேலாக சமயக் கல்வியையும் ஒழுக்க நெறிகளையும் சமுதாயத்தில் வழிபாட்டுத் தலங்கள் மேற்கொண்டு வந்துள்ளன.

முறையில் கல்வியில் முயன்று தவறிக் கற்றல் முக்கியமானதாக அமைந்துள்ளது. திரும்பதத் திரும்பச் செய்து பார்த்து அதன்வழி அறிவை விருத்திசெய்தல் பன்னெடுங்காலமாக சமூகத்தில் காணப்படும் கற்றல் முறையாகும். முறையில் கல்வியில் கற்பதற்கான ஊக்குவிப்பு அல்லது கட்டுப்பாடு கிடையாது. ஆனால் கட்டுப்பாட்டோடு சில பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்ளவும், பின்பற்றவும் அறிவுரைகள் செவிமடுக்கப்படுகின்றன. பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இடம் பெறும் வாசிப்பு, எழுத்து, பயிற்சி, கலந்துரையாடல், விரிவுரைகள் என்பன முறைசார் கல்வியின் பாற்படும். ஆனால் இவ்வித வகையிலன்றி தாம் விரும்பும் எதையாவது கற்றுத் தங்கள் அறிவை விருத்தி செய்தல் முறையில் கல்வி ஆகும். புதினப் பத்திரிகைகள் வாசித்தல், கதை, நவீனம் ஆகியவற்றை வாசித்தல் என்பனவும் முறையில் கல்வியின் பாற்படும்.

இன்று ஊடகங்கள் மற்றும் வெள்ளித்திரைகள், தொலைக்காட்சி, இணையத்தளம் என்பன முறையில் கல்வியில் முக்கிய பங்களிப்பைச் செய்து வருவதைக் காண முடியும். உலகமெலாம் கோவிட்-19 நோயினால் பாதிக்கப்பட்டு வீட்டினுள் முடங்கிக் கிடக்கும் இவ்வேளையில் பிள்ளைகள் தொலைநிலைக் கல்வி மூலம் கற்கிறார்கள். தொலைநிலைக் கல்வி நியமமான முறையிலும் நியமமற்ற முறையிலும் இடம் பெறுகின்றது. பிள்ளைகள் ஓய்வாக இருக்கும் இவ்வேளையில் உறவினர்களோடு உறவாடவும், உரையாடவும் தூண்டப்படுகின்றார்கள். இவ்வுரையாடல்கள் உறவு முறைகள், அவர்கள் வாழும் ஊர்கள் கிராமங்கள் பற்றி அறிந்துகொள்ள உத்வேகமளிக்கப்படுவதோடு தங்கள் தங்கள் குடும்பப் பாரம்பரியங்களையும் விழுமியங்களையும் கற்றுக்கொள்ள வழிவகுக்கிறது. இவ்விதமே திருமணம், ஆலய விழாக்கள், நடன அரங்கேற்றம், இசை விழாக்கள் போன்றன முறையில் கல்வியாக பல விடயங்களைக் கற்றுக்கொள்ள வைப்பதோடு, குடும்ப பிணைப்பையும் அதிகரிக்கிறது. இதனைப் பெற்றோர் உணர்ந்து அவர்களை ஊக்குவிப்பதோடு தங்கள் பாரம்பரிய விழுமியங்கள் பற்றி அறிந்து கொள்ள வைப்பது முறையில் கல்வியையே சாரும்.

Tony Jeffs, Mark Smith என்போர் கல்வி கற்றலில் காணப்படும் குழப்பங்கள் வழியாக கற்றுக்கொள்வதற்கான பாதையைத் திறந்து விட்டார்கள். மக்கள் கற்றுக்கொள்ள உதவும் தன்னிச்சையான செயல்களை ஊக்குவிப்பதாக முறையில் கல்வியை அவர்கள் பரிந்துரைக்கின்றார்கள். உரையாடலின் மூலம் அறிவை விருத்தி செய்ய விழைகின்றார்கள். அனுபவத்தை ஆராய்ந்து அதனை விரிவுபடுத்தி அதன்வழி கற்றுக் கொள்ளும் வாய்ப்பினை முறையில் கல்வி தருகின்றது என்பதை உணரவைத்து செயற்படுத்தத் தூண்டுகின்றார்கள். மக்களிடம் இருந்து மக்களுக்குக் அறிவு விருத்தி பெற குடும்பங்கள், சமூகங்கள், சங்கங்கள் மற்றும் உறவுகளையும் தொடர்புகளையும் அதிகரிப்பதனால் நல்ல சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதே அவர்களின் முடிவாகும். முறையில் கல்வி சமூகத்திற்கும் தனிமனிதருக்கும் நலன் விளைவிப்பதாக அமைதல் வேண்டும் என்பதே அதன் நோக்கமாகும். இதனையே அனைத்துச் சமூகங்களும் பின்பற்றி வந்துள்ளன. இதனை ஐ.நா. சபை ஊக்குவித்து வருவதும் கண்கூடு.

உசாத்துணை:

• *Using informal education An alternative to casework, teaching and control? https://infed.org/mobi/using-informal-education-an-alternative-to-casework-teaching-and-control/*

sivapalu@thaiveedu.com

வீட்டுக்கடன், வியாபாரக்கடன், தனிப்பட்டகடன் தேவைகளுக்கு என்னை முதலில் அழையுங்கள்

வருமான உத்தரவாதம் இல்லாமலே பெற்றுக் கொடுக்கப்படும்

Mortgage for:

- Self Employed
- New Immigrant
- Investment
- Transfer between family
- Bad Credit
- Second Mortgages

Business Mortgage & Loan :

Personal Line of Credit & Loan

* some conditions apply

KAPITAL CARE MORTGAGE INC. Lic:-12623

416.873.5780

கேதீஸ்

சிவசுப்பிரமணியம்

Mortgage Agent - (Lic # M08006105)

5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட் (HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

MORTGAGE IN ANY SITUATION

⇒ **Private 1st Mortgage** (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC

www.mortgageclinic canada.com

Cell : 416-624- 4843

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை
MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3 Corp office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4

கற்பித்தலும் ஆசிரியர் வழிகாட்டியும் - இலங்கை

- என். கிருஷ்ணகுமார் -

அறிமுகம்:

எமது பிள்ளைகள் பாடசாலைக் கல்வியில் பெற்றுக்கொள்ள வேண்டிய மிக அடிப்படையான ஆற்றல்தான் வாசிப்பு. நன்றாக வாசிக்கக்கூடிய பிள்ளைகளே நன்றாக எழுதுவார்கள். இதன் கருத்து யாதெனில் வாசிப்புத் திறனில்தான் எழுத்துத் திறன் தங்கியுள்ளது. எனவேதான் ஆரம்பக்கல்விக் கலைத்திட்டத்தில் வாசிப்பு உள்ளீட்டுத் திறனாகவும் எழுத்துச் செயற்பாட்டுடன் தொடர்புடையவை வெளியீட்டுத் திறனாகவும் கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. காலத்தின் தேவைக் கருதி ஆரம்பக்கல்வி கலைத்திட்டத்தில் வாசிப்பிற்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம் மற்றும் வாசிப்புத் திறனில் பிள்ளைகளின் அடைவுகள் என்பனவற்றைப் பற்றி சுருக்கமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாடசாலைக் கல்வியில் ஆரம்ப வகுப்புகளான தரம் 01 மற்றும் 02 (முதன்மை நிலை ஒன்று) ஆகிய வகுப்புகளில்தான் பிள்ளைகளுக்கு கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய நான்கு மொழித்திறன்களும் கற்பிக்கப்படுகின்றன. இத்திறன்களில் பிள்ளைகள் நன்கு தேர்ச்சியடைய வேண்டும் என்றே கலைத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது அடிப்படைத் தேர்ச்சிகளில் முதலாவது தேர்ச்சியான தொடர்பாடல் தேர்ச்சியின் துணைத் தூண்களில் ஒன்றான எழுத்தறிவின் பிரதான அம்சங்களாக பின்வருவன குறிப்பிடப்படுகின்றன.

- கவனமாக செவிமடுத்தல்,
- தெளிவாகப் பேசுதல்,
- கருத்தறிய வாசித்தல்,
- சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல்,
- பயன்தரும் வகையிலான கருத்துப் பரிமாற்றம்.

இவற்றுள் 'கருத்தறிய வாசித்தல்' என்பது சரளமாக வாசிப்பதையும் கிரகித்தலையும் குறிக்கிறது. அதாவது எல்லா பிள்ளைகளும் சரளமாக வாசிக்க வேண்டும் என்பதே இதன் எதிர்பார்ப்பாகும். சரளமாக வாசிக்கும் பிள்ளைகள் இலகுவாக கிரகித்துக்கொள்வார்கள் என்பது இதன் மூலம் புரிந்துக்கொள்ள முடிகிறது. சரளமாக வாசித்தல் என்றால் என்ன என்றொரு வினா எமக்கு எழலாம். சரளமான வாசித்தல் என்பதை 'சரியாகவும் வேகமாகவும் தொனியேற்ற இறக்கத்துடனும் வாசிப்பதே சரளமான வாசிப்பாகும்' என நாம் வரைவிலக்கணப்படுத்திக்கொள்ளலாம்.

ஒரு வகுப்பில் கற்கும் அனைத்து பிள்ளைகளையும் சரள வாசிப்பாளராக மாற்றுவது என்பது தற்காலத்தில் பெரும்பாலான வகுப்புகளில் முடியாத விடயமாகக் காணப்படுகிறது. இதற்கு எழுத்துக் கற்பித்தல் தொடர்பாக ஆசிரியர் வழிகாட்டியில் காணப்படும் தெளிவின்மையே முக்கிய காரணமாகும். எனவே வாசிப்புக் கற்பித்தல் தொடர்பில் தரம் 01 ஆசிரியர் வழிகாட்டி எவ்வாறு ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது என்பது தொடர்பாக அடுத்து நோக்கலாம்.

தரம் 01 ஆசிரிய வழிகாட்டியில் எழுத்துக் கற்பித்தல்:

செயற்பாடு - VI இல் எழுத்துக் கற்பித்தல் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

செயற்பாடு - VI

மாணவர்கள் எழுத்துக்களை படிமுறையாக வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் வழிப்படுத்துக. (வரிவடிவத்தை எழுதத் தொடங்குவதற்கு முன்னர் ஆசிரியர் பின்வரும் படிமுறைகளில் வரிவடிவத்தை எழுதிக்காட்டவேண்டும், என்பதனை நினைவில் கொள்ளுங்கள்.
(முதல் எழுத்துக்கள் 30)

1 - ட ப ய ம ழ
2 - ஈ ர ச க த
3 - ந ங
4 - அ ஆ இ
5 - எ ஏ ஞ
6 - வ ல
7 - ற ஐ
8 - ள ன ண
9 - ஒ ஓ ஔ
10 - உ ஊ

'மாணவர்கள் எழுத்துகளை படிமுறையாக வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் வழிப்படுத்துக. (வரிவடிவத்தை எழுதத் தொடங்குவதற்கு முன்னர் ஆசிரியர் பின்வரும் படிமுறைகளில் வரிவடிவத்தை எழுதிக்காட்ட வேண்டும் என்பதனை நினைவில் கொள்ளுங்கள். (முதல் எழுத்துக்கள் 30)'

தொடர்ந்து எழுத்துக்களை எழுதும் முறை தொடர்பாக குறிப்புப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் எழுதப்படும் வடிவமைப்பைக் கொண்டு எழுத்துகள் நடுப்பகுதி எழுத்துக்கள், நடுக் கீழ்ப் பகுதி எழுத்துக்கள், நடு மேற்பகுதி எழுத்துக்கள், முப்பகுதியையும் தேர்ந்த எழுத்துக்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (குறிப்பிட்ட இந்த வகைப்படுத்தல் தொடர்பாக கல்வி புலம்சார் சமூகம் கருத்துரையாடல்களை முன்னெடுக்க வேண்டும்). எழுத்துக் கற்பித்தல் தொடர்பில் இச் செயற்பாட்டைத் தவிர வேறெங்கும் குறிப்பிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக ஒரே நாளில் மேற்குறிப்பிட்ட 30 எழுத்துக்களையும் கற்பிக்க வேண்டுமா? அல்லது ஒரு நாளில் ஓர் எழுத்து மட்டும் அறிமுகப்படுத்த வேண்டுமா? என்றொரு குழப்பம் காணப்படுகிறது. அது மட்டுமன்றி, மேற்குறிப்பிட்ட எழுத்துக்களை மட்டும் கற்பித்தால் ஒரு மாணவரிடத்தில் வாசிக்கும் ஆற்றலை ஏற்படுத்தி விடமுடியுமா என்ற இன்னொரு விடை தெரியாத வினாவும் எழுகின்றது.

மேற்குறிப்பிட்டவாறு, எழுத்துக் கற்பித்தல் தொடர்பாக தரம் 1 இற்கான ஆசிரியர் வழிகாட்டியில், முதலாம் தேர்ச்சியில் வாசிப்பு மற்றும் எழுத்து கற்பித்தலுக்குரிய பகுதியில் ஆறாம் செயற்பாட்டு தவிர, எழுத்துக் கற்பித்தல் பற்றி ஆசிரியர் வழிகாட்டியில் வேறு எந்த இடத்திலும் குறிப்பிடப்படாத நிலையில், குறிப்பிட்ட 6வது செயற்பாட்டை மேற்கொள்ளும் ஒரு நாளில் மொழிப் பாடத்திற்காக 60 நிமிடங்களே ஒதுக்கப்பட்டுள்ளது. அதேநேரம் ஒவ்வொரு நாளும் 60 நிமிடங்களே செலவிடக்கூடிய வகையில் ஆசிரியர் வழிகாட்டி அறிவுறுத்துகின்றது. ஆசிரியர்களும் குறிப்பிட்ட அந்நேர அளவையே பின்பற்ற வேண்டும் என கலைத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்துவரும் ஏழாம் நாளுக்குரிய செயற்பாடும் 60 நிமிடங்களுக்குரியது. அது பின்வருமாறு குறிப்பிடுகிறது.

'செயற்பாடு VII (எழுத்துக் கற்பித்தலில் இரண்டாம் நாள்)

மாணவர்களை குறில், நெடில் எழுத்துக்களை வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கிக் குறில் எழுத்துக்கள் ஐந்தினையும் நெடில் எழுத்துக்கள் ஐந்தினையும் தனித்தனி அட்டைகளில் எழுதி ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள். அதில் குறில் எழுத்துக்களுக்குப் பொருத்தமான நெடில் அட்டைகளை தெரிவு செய்து வாசிக்கவும், அவற்றை எழுதவும் வழிப்படுத்துங்கள்.

ஆறாவது செயற்பாட்டில் 30 எழுத்துக்களை கற்பிப்பதற்கான அறிவுறுத்தலை வழங்கியபின் ஏழாவது செயற்பாட்டில் 5 குறில் எழுத்துக்கள், 5 நெடில் எழுத்துக்களை மாணவர்களுக்கு வழங்கி, அவற்றை இனங்கண்டு வாசிக்கச் செய்வது நடைமுறை சாத்தியமானதா? நெடில் எழுத்துகளை கற்பிக்க எதுவித அறிவுறுத்தலையும் ஆசிரியர் வழிகாட்டி வழங்கவில்லை. அவ்வாறான நிலையில் எழுத்துக்களை அறிமுகப்படுத்த ஆரம்பித்த அடுத்த நாளே நெடில் எழுத்துக்களை பிள்ளைகள் வாசிக்க வேண்டுமென எதிர்பார்ப்பது பொறுத்தமானதா? இது தொடர்பாக கலைத்திட்ட வடிவமைப்பாளர்களும் கல்வித்துறை சார்ந்தவர்களும் சிந்திக்க வேண்டும்.

அதனைத் தொடர்ந்துவரும் 8 ஆவது செயற்பாட்டில் (எழுத்துக் கற்பித்தலில் மூன்றாம் நாள்) உயிர்க்குறிகள் சேர்ந்து வரும் சொற்களை வாசிக்க வழங்குமாறு, அதாவது மூக்கு, ஆந்தை, சூரியன், காளான், விசிறி போன்ற சொற்களை வாசிக்க வழங்குமாறு ஆசிரியர் வழிகாட்டி அறிவுறுத்துகின்றது. இலங்கையில் குறிப்பாக தமிழ்மொழியில் தரம் ஒன்றுக்கு கல்வி கற்க வருகின்ற பெரும்பாலான பிள்ளைகள் எழுத்துக்கள் தெரியாமலே பாடசாலைக்கு வருகிறார்கள். அவ்வாறான பிள்ளைகளுக்கு எழுத்துக்களைக் கற்பிக்க ஆரம்பித்த மூன்றாம் நாளிலேயே உயிர்க் குறிகளுடனான எழுத்துக்கள் சேர்ந்து வரும் சொற்களை வாசிக்க வழங்க வேண்டுமென ஆசிரியர் வழிகாட்டி அறிவுறுத்துகிறது.

இங்குதான் ஒரு நாளில் தரம் 1 பிள்ளைகளுக்கு எத்தனை எழுத்துக்களை அறிமுகப்படுத்தலாம்? எழுத்துக்களை வினைத்திறனாகக் கற்பிக்க வேண்டுமாயின் என்னென்ன படிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்? போன்ற வினாக்கள் எழுகின்றது.

உயிர்க்குறிகளை வாசிப்பதிலேதான் பிள்ளைகள் அதிகம் இடர்படுகிறார்கள். ஆனால், உயிர்க்குறிகளை கற்பிப்பதற்கான எதுவித அறிவுறுத்தல்களும் ஆசிரியர் வழி காட்டியில் உள்ளடக்கப்படவில்லை. எனவே, உயிர்க்குறிகளைக் கற்பிக்காமலே அவற்றை பிள்ளைகள் வாசிக்க வேண்டுமென எதிர்பார்ப்பது சரியா? உயரிக் குறிகள் சேர்ந்துவரும் எழுத்துக்களை பிள்ளைகள் எவ்வாறு கற்றுக்கொள்வார்கள்? எழுத்தொலிகளை சேர்த்து சொற்களாக வாசிக்கும் முறையொன்று கற்பிக்கப்படாமலே பிள்ளைகள் சொற்களை வாசிப்பார்களா? இதுபோல இன்னும் பல வினாக்கள் எமக்குள் எழுகின்றது.

வாசிப்புக் கற்பித்தலில் காணப்படும் இது போன்ற குறைபாடுகள் காரணமாக பிள்ளைகளால் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த சா.த பரீட்சை என்பனவற்றில் வெற்றியடைய முடியாமல் போகிறது என்ற உண்மை எல்லாருக்கும் தெரிந்ததே. அதேநேரம் சிங்கள மொழிமூலதரம் 01 ஆசிரியர் வழிகாட்டி என்ன கூறுகிறது என்று ஒப்பிட்டுப் பார்ப்பதும் இங்கு சாலப் பொருத்தமானதாக இருக்கும்.

எழுத்துக் கற்பித்தலில் சிங்கள மொழிமூல ஆசிரியர் வழிகாட்டி:

சிங்கள மொழிமூல ஆசிரியர் வழிகாட்டியானது எழுத்து, வாசிப்புக் கற்பித்தலில் தமிழ் மொழிமூல ஆசிரியர் வழிகாட்டியை விட சற்று மேம்பட்டதாகவே தெரிகிறது. காரணம் எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி ஓர் அட்டவணை வழங்கப்பட்டுள்ளது. இவ்வட்டவணையில் முதலாம் தவணையில் 8 எழுத்துக்களே கற்பிக்கப்படல் வேண்டும் என்றும், அவை என்னென்ன எழுத்துக்கள் என்றும் வரிசைப்படுத்தி வழங்கப்பட்டுள்ளமையினைக் காணலாம். முறையே இரண்டாம் தவணை, மூன்றாம் தவணையில் கற்பிக்கப்பட வேண்டிய எழுத்துகளையும் வாசிப்பு எழுத்துச் செயற்பாடுகள் நடைபெறும் நாட்களுக்கேற்ப ஒழுங்குபடுத்தி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒழுங்குபடுத்தலில் உச்சரிக்க கடினமான எழுத்

தொடர்தல் 30ம் பக்கம்

கற்பித்தலும் ஆசிரியர்...

29ம் பக்கத் தொடர்ச்சி...

துக்களை தரம் இரண்டில் கற்பிக்கவும் ஆசிரியர் வழிகாட்டி அறிவுறுத்துகிறது. ஆகவே ஒவ்வொரு நாளும் என்னென்ன எழுத்துகள் கற்பிக்க வேண்டும் என்று தெளிவாக ஒழுங்குபடுத்தியிருப்பதை அவ தானிக்க முடிகிறது.

ரியர் வழிகாட்டியில் எழுத்துக்களை கற் பிக்க வேண்டிய ஒழுங்கு, எழுத்துக்களை கற்பிக்கும்போது பின்பற்ற வேண்டிய படி முறைகள், சொற்களை வாசிக்க வழங்க வேண்டிய பயிற்சி என்பன தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. இதுவரை காலமும் பயன் படுத்தப்பட்ட ஆசிரியர் வழிகாட்டிகளில் எழுத்துக் கற்பித்தலில் ஒரு மேம்பட்ட



செயற்பாடு - VII

மாணவர்களைக் குறில், நெடில் எழுத்துக்கள் வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கிக் குறில் எழுத்துக்கள் ஐந்தினையும் நெடில் எழுத்துக்கள் ஐந்தினையும் தனித்தனி அட்டைகளில் எழுதி ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள். குறில் எழுத்து அட்டைகளுக்குப் பொருத்தமான நெடில் அட்டைகளை தெரிவு செய்து வாசிக்கவும் அவற்றை எழுதவும் வழிப்படுத்துங்கள்.

எழுத்துக்கள்

குறில் எழுத்துக்கள்

நெடில் எழுத்துக்கள்

குழுவில் உள்ள மாணவர்கள் சரியாக வாசிப்பதனையும் சரியாக எழுதுவதனையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.

அதேபோல் வாசிப்பு மற்றும் எழுத்து கற் பிக்கப்படும் எல்லா நாட்களிலும் எழுத் துக்களை அறிமுகப்படுத்துவதற்கான அறி வுறுத்தலை ஒவ்வொரு செயற்பாட்டிலும் உள்ளடக்கியுள்ளது. அத்துடன் எழுத்துக் களை அறிமுகப்படுத்தும்போது ஆசிரி யர்கள் பின்பற்ற வேண்டிய படிமுறை களையும் வழங்கியுள்ளது. அதுமட்டு மன்றி கற்பித்த எழுத்துக்கள் சேர்ந்து வரும் சொற்களை பிள்ளைகளிடத்தில் வாசிக்க வழங்க வேண்டுமெனவும் இவ் வழிகாட்டி அறிவுறுத்துகிறது. அதாவது, கற்பிக்காத எழுத்துக்களால் ஆன சொற் களை வழங்க வேண்டாம் என்பதே இதன் பொருள். ஆக, சிங்கள மொழிமூல ஆசி

நிலையினை 2015 ஆம் ஆண்டு அறிமு கப்படுத்தப்பட்ட தரம் 01 சிங்கள மொழி மூல ஆசிரியர் வழிகாட்டி அடைந்துள்ள மையினை அவதானிக்க முடிகிறது. இவ் வாறான மாற்றங்கள் தமிழ்மொழிமூல ஆசி ரியர்களுக்கான வழிகாட்டியில் இடம்பெறா தது கவலைக்குரியதே. அதேநேரம் இந்த முரண்நிலை தொடர்பில் கல்விபுலம் சார்ந் தவர்கள் பாராமுகமாக இருப்பது இன் னும் கவலைக்குரியதே.

முடிவாக...

தமிழ்மொழிமூல மாணவர்களின் வாசிப்புத் தொடர்பில் அதிக அக்கறையுடன் செயற் பட வேண்டியது மிக முக்கியமானது. உதாரணமாக: க.பொ.த சாதாரணதர பரீட் சையில் 2017 ஆம் ஆண்டு 7620 மாண வர்களும் 2018 ஆம் ஆண்டு 6551 மாண வர்களும் தாய்மொழியில் சித்தியடைய வில்லை. தவிரவும், தமிழ்மொழி மூல மாணவர்களில் 2017 ஆம் ஆண்டு 84.2% ஆன மாணவர்களும் 2019 ஆம் ஆண்டு 83.4% ஆன மாணவர்களும் ஒரு பந்தி யை வாசித்து அது தொடர்பாக கேட்கப் பட்ட 6 வினாக்களில் ஒன்றுக்கேனும் சரி யாக விடையளிக்கத் தவறியுள்ளனர். இதற் கான காரணம் வாசிப்பில் பிள்ளைகள் இடர்படுகின்றமையே என்பது யாவரும் அறிந்ததே.

நிறைவாக இரண்டு முக்கிய விடயங்களை இங்கு பரிந்துரை செய்யலாமென நினைக் கின்றேன்.

- முதலாவது, ஆசிரியர் வழிகாட்டி தயா ரிக்கும்போது மிகச் சிறந்த உதாரணங் களையும் சிறந்த அனுபவமிக்கவர்களின் ஆலோசனையையும் கருத்திற்கொண்டு தயாரிக்க வேண்டும்.
- இரண்டாவது, ஆசிரியர் வழிகாட்டியில் எழுத்துக் கற்பித்தலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். அதற்கேற்ப நன்கு திட்டமிட்டு, தெளிவான அறிவு றுத்தல்களுடன் அதனை உருவாக்க வேண்டும். அப்போதே அதனை பின் பற்றி கற்பிக்கும் ஆசிரியர்கள் சிறப் பாகக் கற்பிப்பார்கள். அதன் விளை வாக எல்லா மாணவர்களும் நன்றாக வாசிப்பவர்களாக உருவாகுவார்கள்.

krishnakumar.n@thaiveedu.com

‘கற்க கணிதம் கசடற’

மாணவர்களின்
வீட்டுக்கு வருகைதந்து
தனித்தனி வகுப்புகள் எடுக்கப்படும்.

CALCULUS, VECTORS, ADVANCED FUNCTION,
TRIGONOMETRY Etc. Etc.

Math Tutoring
A. Puranthagan (Puran) BSc. Eng.
Specializing in tutoring Math from Gr. 10 - 12.
Available for home visits and one-on-one sessions.
C: 416-819-7923
1629 Winville Rd.,
Pickering, ON L1X 0C8

JM ACCOUNTING AND FINANCIAL SOLUTION INC.
“We provide reliable year around Tax and Accounting services.”

Our Services included:
* E- file
* Personal Tax Returns (T1)
* Self-Employed Tax Returns
* Business, HST and Payroll Registrations & Bookkeeping
* Corporate Tax Returns (T2)
* Canada Revenue Agency’s Audit assistance

Starting from
$24.90 Plus tax

Phone: (647)- 351- 5622 / (416)- 722-5338 Fax: (647)- 351- 5620
1193A, Brimley Road, Suite 5, Scarborough, ON, M1P 3G5
jmaccfinancial@gmail.com

வளி கழிதல்

- பாதுசா ஆனந்தநடராசா -

உடல் நலனே வாழ்வின் அடிப்படை. உடல் நலன் ஆனது எமது வயிற்றுப் பகுதியில் இருக்கும் உள்ளுறுப்புகளின் ஒழுங்கான செயல்பாட்டை அடிப்படையாக கொண்டது. உள்ளுறுப்புகளின் ஒழுங்கான செயல்பாடு ஆனது உணவு சமிபாட்டு திறனை துரிதமாகவும் வீரியத்துடனும் வைத்து இருப்பதிலேயே உள்ளது. உடலின் ஒழுங்கான வளர்ச்சி மற்றும் செயல் பாட்டை உறுதி செய்வதன் மூலம் உடல் நலத்தைப் பேண முடியும். உடல் நலத்தை பேணுவதற்கும் நோய் வராமல் தடுப்பதற்கும் செய்யக்கூடிய ஆசனப் பயிற்சிகளில் முதன்மையான ஆசனங்களில் முக்கியமான ஆசனமாக வளி கழிதல் நிலையை கருதலாம்.

இந்த ஆசனமானது வயிற்றுப் பகுதியில் உள்ள உறுப்புகளின் சீரான செயல் பாட்டை உறுதி செய்வதுடன், மனதின் ஓர் நிலைப்படுத்தப்பட்ட செயல்பாட்டிற் கும், மற்றும் முன்னேற்ற நிலை ஆசனப் பயிற்சிகளுக்கும் அடிப்படை ஆசனமாக விளங்குகின்றது. வளிகழிதல் நிலைக்கு சமஸ்கிருதத்தில் உள்ள பெயர் பவனமுக் தாசனம் ஆகும்.

மிக எளிமையாக செய்யக்கூடிய வளிகழி தல் நிலை, உடலைப் பற்றின புரிதலை வளர்த்துக் கொள்வதற்கும் உடலின் செயல் பாடு மற்றும் உடல் அசைவுகளின் தன் மையை விளங்கிக் கொள்ளவும் உதவி யாக இருக்கும். மேம்பட்ட பயிற்சிகளை செய்வதற்கு ஆயத்த நிலை பயிற்சியாக இவ்வாசனத்தை செய்வது மூட்டுகளில் முடங்கி இருக்கக்கூடிய வாதத்தையும், மூட்டுகளில் உயிர் சக்தி குறைந்த செயல் பாட்டை போக்குவதற்கும் பயனுள்ள ஒரு பயிற்சி ஆகும். 'வளி' என்பதன் பொருள் காற்று ஆகும் 'கழிதல்' என்பது வெளியேற் றுதல் என்பதைக் குறிக்கின்றது. அதாவது உடலில் அதிகமாக இருக்கும் ஐம்பெரும் ஆற்றல்களில் ஒன்றான காற்றை வெளி யேற்றுவதற்கும், காற்றின் சீரான ஆற்றலை உடல் மற்றும் மனதளவிலும் ஒழுங்குபடுத் தவும் இந்த ஆசனம் உதவும்.

இந்த ஆசனம் நமது உடலில் மூன்று நிலைகளில் செயல்பட்டு அதற்கான பயன் களைத் தருகின்றது எனலாம்.

- சக்தி ஓட்டத் தடைகள் அகற்றப்படு கின்றன.
- மூட்டு வாதத்திற்கு எதிராக செயல்படு கின்றது.
- வயிற்று சமிபாட்டு பகுதியில் செயல்படு கின்றது.

இவ்வாறாக வளிகழிதல் நிலையை பயிற்சி செய்வதன் மூலம் எமது உடலின் நேர்த்தி யான அசைவுகளைப் பேணவும், உணவு சமிபாட்டில் மந்தநிலை ஏற்படாமல் தவிர்க் கவும், சீரான உயிர்ச்சக்தியின் செயல் பாட்டை உறுதி செய்யவும் பின்வரும் பயிற் சிகள் உதவும்.

பயிற்சிக்கு தயார்படுத்தல்:

நிலத்திலே படுத்து தலையை நேராக வைத்துக் கொண்டு, கால்களை அகட்டி வைத்து, கைகளை உடம்பை விட்டு 45 பாகை விலத்தி வைத்த படியும், உள்ளங் கைகளை மேல்ப்பக்கமாக வைத்து விரல் களை தளர்வாக வைத்தபடி படுத்திருக் கும் நிலை சவாசனம் எனப்படும். இந்த நிலையில் பிடரி நிலத்தில் வைத்தபடி கழுத்து மற்றும் முள்ளந்தண்டு நேராக வும் தோள்கள் தளர்ந்தும் இருப்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இந்த ஆசன நிலையில் இருந்தபடி மூச்சில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கவும். இந்நிலையிலிருந்து உடலை தளர்த்தி, மனதை ஆறுதல் படுத்தி, மூச்சு நிலை சீராகும் வரை நிலத்தில் படுத்த நிலை யில் இருக்கவும். இந்நிலையே வழி கழி தல் நிலைக்குள் செல்வதற்கு தயார்படுத் தும் நிலையாகும்.

ஆசனத்திற்கு செல்லும் முறை:

சவாசன நிலையிலிருந்து கால்களை ஒன் றாக சேர்த்து கைகளை உடம்புக்கு பக்கத் திலே கொண்டு வந்து உள்ளங்கைகளை நிலத்தில் அழுத்தி வைத்துக் கொள்ளவும்.

பயிற்சியை எளிமைப் படுத்தும் விதமாக வளிகழிதல் நிலையை இரண்டு நிலைக ளாக பயிற்சி செய்யலாம். முதலாவது நிலையில் ஒவ்வொரு காலாக மடித்து ஆச னத்திற்கு வரும் முறையையும், பின்னர் இரண்டாவது நிலையில் இரண்டு கால்க ளையும் மடித்து பயிற்சி செய்யும் முறை யையும் விளக்கமாக காணலாம்.

முதலாவது நிலை:

மேற்குறிப்பிட்டவாறு தரையில் நேராக படுத்த நிலையில் கால்களை ஒன்றாக சேர்த்து வைத்திருக்கவும். வலதுபக்க முழங் காலை மடித்து வலது தொடைப் பகுதியை நெஞ்சிற்கு நேராக இருக்கும் படி கொண்டு செல்லவும். கை விரல்களை ஒன்றோ டொன்று கோர்த்த நிலையில் வலது முழங் காலுக்கு சற்று கீழாக வைக்கவும். இடது கால் நேராக நீட்டிய நிலையில் நிலத்தில் இருக்க வேண்டும். இந்த நிலையில் மூச் சை ஆழமாக உள்ளே எடுக்க வேண்டும். மூச்சை வெளியே விட்டவாறு தலைப் பகு தியையும், தோள்களையும் நிலத்தை விட்டு மேலே தூக்கி மூக்கினால் வலது முழங்கா லைத் தொடவும். மூச்சை வெளிவிட்டு வளி அகன்ற இந்நிலையில் சில வினாடிகள் நிலை கொள்ளவும். பின் மெதுவாக மூச் சை உள்ளே எடுத்தவாறு தலையையும் தோள்களையும் நிலத்தில் வைத்து வலது காலை நேராக நீட்டி இடது காலுக்குப் பக் கத்தில் வைக்கவும். மூன்று தடவைகள் வலது காலில் இப்பயிற்சியை திரும்பவும் செய்யலாம்.

வலது காலில் இப்பயிற்சியை செய்து முடித்த பின் இடது காலிலும் இதே முறைப்படி பயிற்சியை செய்யவும்.

இரண்டாவது நிலை:

முதல்நிலை ஆசனத்தில் ஒவ்வொரு காலாக பயிற்சி செய்து முடித்தபின் இரண்டாவது நிலை ஆசனத்தை செய்ய வேண்டும். இதற்கு முன்பு குறிப்பிட்ட சவாசன நிலை யில் உடலைத் தளர்த்தி ஆறுதல் படுத்த வும். இரண்டாவது நிலை பயிற்சியில் இரண்டு முழங்கால்களையும் ஒன்று சேர்த்து மடித்து தொடைகளை நெஞ்சுப் பகுதிக்கு நேராக வைக்கவும். கை விரல்களை ஒன் றோடொன்று கோர்த்த நிலையில் முழங் கால்களுக்கு சற்று கீழாக வைக்கவும். இந்த நிலையில் மூச்சை ஆழமாக உள் ளெடுக்க வேண்டும். மூச்சை வெளி விட் டவாறு தலை, தோள்களை மேலே தூக்கி மூக்கினை இரு முழங்கால்களுக் கும் நடுவில் கொண்டுவரவும். மூச்சை வெளிவிட்டு வளி அகன்ற இந்நிலையில் சில வினாடிகள் நிலை கொள்ளவும். பின்பு மூச்சை உள்ளே இழுத்தவாறு மெதுவாக தலை, தோள் பகுதியை நிலத்திற்கு கொண்டு வந்து கால்களையும் நீட்டி நே ராக வைக்கவும். மூன்று தடவைகள் திரும் பவும் இந்தப் பயிற்சியைச் செய்யலாம்.

ஆசனத்தில் நிலை கொள்ளல்:

இந்த ஆசன நிலையில் வயிற்றுப்பகுதி அழுத்தம் பெற்று மூச்சு நிலையை வயிற் றுப்பகுதியில் உணரக்கூடியதாக இருக்கும். நாடி பகுதித் தாடைஎலும்பு முழங்காலுக்கு சிறிது கீழாக இருக்கும். கோர்க்கப்பட்ட கை விரல்களை முழங்கால்களுக்கு அழுத்தம் கொடுக்காது அவற்றை மடித்து நிலை கொள்வதற்கு ஆதரவாக வைத்திருக்கவும். மூக்கு முழங்காலில் தொடும்படியாக வைத் திருக்கவும். வலது முழங்காலை தூக்கும் பொழுது இடது கால் நிலத்தில் நேராக நீட்டிய நிலையில் இருக்க வேண்டும். இரண்டாவது நிலை ஆசனத்தில் இரண்டு முழங்கால்களையும் தூக்கும் பொழுது மூக்கு இரண்டு முழங்கால்களுக்கும் நடு வில் இருக்கும்.

ஆசனத்தை விட்டு வெளிவரும் முறை:

மூச்சை உள்ளே இழுத்தவாறு தலையை யும் தோள்களையும் நிலத்தில் வைத்து பின் மூச்சை வெளியே விட்டவாறு கால் களை நேராக நீட்டி மெதுவாக நிலத் திற்கு கொண்டுவந்து வைக்கவும். கைக ளை உடம்பிற்கு அருகாமையில் இருபக்க மும் இருக்கும்படி வைக்கவும். நேராக படுத்த நிலையில் உடலைத் தளர்த்தி மூச் சை ஆறுதல் படுத்தி சவாசன நிலைக்கு வரவும்.

மூச்சின் தன்மை:

தொடர்தல் 32ம் பக்கம்

வளி கழிதல்...

31ம் பக்கத் தொடர்ச்சி...

ஆசனத்திற்கு செல்லும் முன்பு ஆறுத லான மூச்சுடன் நேராக நிலத்தில் படுக்க வும். பின்பு ஆழமாக மூச்சை உள்ளே இழுத்து ஒரு முழங்காலை மடித்து மறு காலை நீட்டிய நிலையில் நிலத்தில் வைத் திருக்கவும். தலையையும் தோள்களையும் தூக்கி ஆசனத்துக்கு செல்லும்பொழுது மூச்சை ஆழமாக வெளியே விட்டவாறு செல்ல வேண்டும். ஆசனத்தை விட்டு வெளிவரும் பொழுது மெதுவாக மூச்சை உள்ளே இழுத்து ஆரம்ப நிலைக்கு வர வும். இரண்டாவது நிலை ஆசனத்திலும் இதே மாதிரி மூச்சுவிடும் முறையை பின் பற்ற வேண்டும்.

பயிற்சியின் கால அளவு:

ஆசன நிலையில் சில வினாடிகள் இருக் கலாம். முடிந்தவரை இப்பயிற்சியின் கால அளவை நீட்டிக்கலாம். இப்பயிற்சியை திரும்பவும் மூன்று தடவைகள் செய்யலாம்.

பொதுவான தவறுகள்:

- இந்த ஆசனத்தில் முழங்கால்கள் மடிக்கப்பட்டு இருக்கின்றன, மேலதிக மான அழுத்தத்தை முழங்கால்களுக்கு கொடுத்தால் கால்களில் வாத பிடிப்பு ஏற்பட காரணமாகிவிடும்.
- ஆசனத்தில் நிலை கொள்ளும் பொழுது, தொடைகள் வயிற்றுப் பகுதியில் இருந்து விலகி, உடம்புக்கு பக்கவாட்டில் அகன்ற நிலையில் இருக்கக்கூடாது.
- அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்கள் இந்த ஆசனத்தைச் செய்யும் பொழுது மிகுந்த கவனத்துடன் செய்ய வேண்டும். இரத்த அழுத்தம் அதிகமாக இருக்கும் பொழுது, இந்த ஆசனத்தை பயிற்சி செய்வதை தவிர்த்துக் கொள்ளலாம்.
- கடுமையான முதுகுவலியில் அவதிப்படு பவர்கள் இந்த ஆசனத்தைச் செய்யும் பொழுது மேலதிகமான கவனத்துடன் செய்ய வேண்டும்
- முதுகெலும்புக்கு நடுவில் உள்ள டிஸ்க் விலகிய நிலையில் அவதிப்படுபவர்கள் இந்த ஆசனத்தைச் செய்யும் பொழுது மேலதிகமான கவனத்துடனும் மருத்துவ ரின் ஆலோசனையுடனும் செய்யலாம்.
- இடுப்புப் பகுதியில் உள்ள நரம்புகள் அழுத்தம் பெற்று இதனால் பின்கால் கள் முதல் குதிகால்கள் வரை வலி இருப்பவர்கள் இந்த ஆசனத்தைச் செய் யும் பொழுது கால்களுக்கு மேல் அதிக மான அழுத்தத்தை கொடுக்கக்கூடாது.
- மாரடைப்பு, இதயப் பாதிப்பு உடைய வர்களும் தகுந்த ஆலோசனையுடன் இந்த ஆசனத்தைச் செய்ய வேண்டும்.

ஆசனத்தின் பயன்கள்:

- தசைகளின் இயக்கத்தை பொறுத்தவரை யில் கீழ் முதுகுப் பகுதி தசைகள் வயிற் றுப் பகுதி தசைகள் அழுத்தம் பெறுகின் றன. தொடைப்பகுதி, கால் பகுதி, கை கள் இவற்றின் தசைப்பகுதி நீட்டி இழுக் கப்படுவதால் இயக்கம் பெறுகின்றன.
- அடிவயிறு, இடுப்பு எலும்பு பகுதி செயல்படுத்தப் படுவதனால் அடிவயிற்று தசைகள் அழுத்தம் பெறுவதுடன், சக்தி ஓட்டம் சீர் செய்யப்பட்டு ஆண் பெண் இவர்களின் மலட்டுத்தன்மையை போக் குகிறது. மாதவிடாய் சம்பந்தமான பிரச் சினைகளுக்கு தீர்வளிக்கிறது.
- வயிற்றுப்பகுதியில் உள்ளுறுப்புகள் தூண்டப் பெற்று அவற்றின் செயல்பாடு இயல்பாகவே ஒழுங்காக்கப்படுகின்றன. மூச்சை உள்ளே இழுத்து வெளியே விடும்பொழுது வயிற்றுப்பகுதியில் ஏற் படும் அழுத்தத்தால் இரத்த ஓட்டத்தில் மாற்றங்கள் ஏற்பட்டு இவ்வாறான தூண் டுதல் ஏற்படுகின்றது.
- பெருங்குடல் பகுதியில் மந்தத் தன்மை யால் பிடிபட்டு இருக்கக்கூடிய காற்றால் ஏற்படக்கூடிய செயல்பாட்டு குறைவு, இதனால் ஏற்படக்கூடிய சங்கடமான உடல்நிலை எல்லோரும் அறிந்ததே. ஆசனத்தை பயிற்சி செய்வதால் பெருங்குடலில் பிடிபட்டு இருக்கக்கூடிய காற்றை வெளி ஏற்ற முடிகின்றது.
- இரத்தத்தில் சக்கரையை ஒழுங்கு படுத்துகின்றது.
- முள்ளெலும்புகள் யாவும் அழுத்தம் பெறுகின்றன. கால்கள் கைகள் நீட்டி மடக்கி செயற்படுவதனால் மூட்டுக்களில் இருக்கும் வாயுக்கள் அகற்றப்பட்டு மூட் டுக்களின் வீக்கம் மற்றும் வலிகளைக் குறைப்பதோடு உயிர் சக்தி ஓட்ட தடை கள் நீக்கப்படுகின்றன.
- நரம்புகள் நீட்டி இழுக்கப்பட்டு முக்கிய நரம்புகளின் செயல்பாடுகள் தூண்டப் படுகின்றன.
- முதுகுப் பகுதியை நிலத்துடன் நேரடி யான தொடர்பில் வைத்து செய்யக்கூடிய பயிற்சி ஆகையால் ஆறுதலான முறை யில் முதுகுத் தசைகள் நீட்டிக்கப் பெறு கின்றன, இதனால் முள் எலும்புகளுக்கு இடையில் உள்ள தசைகள் நீட்டிக்கப் பெறுவதாலும் மத்திய நரம்பு மண்டலத் தின் செயல்பாடு மென்மையாக தூண்டப் படுகின்றது. இவ்வாறாக இவ்வாசனம் சூட்சுமமாக உடலின் செயல்பாட்டைத் தூண்டி ஒழுங்குபடுத்துவதுடன் உடலை யும் மனதையும் ஆறுதல் படுத்தவும் செய்கின்றது.
- உயிர்ச்சக்தியின் மையப் பகுதியில் அழுத்தம் கிடைப்பதனால், இந்த ஆச னப் பயிற்சிக்குப் பின் சக்தியின் செயல் பாடு வீரியம் அடைகின்றது இதனால் இயல்பாகவே உயிர்ச்சக்தியின் செயல் பாடு வீரியம் அடைந்தும் தேக்க நிலை யிலிருந்து விடுபட்டும், உடல் நலனைப் பேண உதவுகின்றது.
- உயிர்ச்சக்தியின் செயல்பாடு நாடிகளின் மூலமாகவே நடைபெறுகின்றது, இந்த சக்தியின் ஓட்டப் பாதைகளில் ஏற்படும் தடைகள் நீக்கப் பெற்று சீர் அமைக்கப் படுகின்றது.
- முக்கியமாக உடம்பின் கீழ்நோக்கிய செயல்பாடுகளுக்கு காரணமான அபான வாயு எனப்படும் கீழ் நோக்கிய உயிர்ச் சக்தியின் செயல்பாட்டில் ஏற்படும் மந் தத் தன்மையும், தேக்கநிலை தன்மை யும், செயல்பாட்டு பற்றாக்குறையும் சீர் அமைக்கப்படுகின்றது.
- கீல்வாதம், மூட்டு வாதம், மூட்டு வலி அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்களா லும் இதயப் பாதிப்பு உள்ளவர்களா லும் சுறுசுறுப்பாகவும் உறுதியாகவும் ஆசனங்களைச் செய்ய முடியாது.
- சமநிலையற்ற வாழ்க்கைமுறை, இவற்றினால் ஏற்படும் மனக்குழப் பங்கள், உடல் சம்பந்தப்பட்ட பிரச்சி னைகள், இவற்றினால் ஏற்படும் இறுக்க மான நிலை, ஒழுங்கற்ற இரத்த ஓட் டம் இதனால் உடலின் செயல்பாடுக ளில் பாதிப்பு ஏற்படும். இந்த பாதிப்பு களினால் உடல் பாகங்கள், மூட்டுக் கள், உடல் திசுக்களின் பாதிப்புகள் ஏற் பட்டு நோய்களை ஏற்படுத்தும். நாள் தோறும் இந்த ஆசனத்தைச் செய்வதன் மூலம் புத்துணர்வையும், சீரான உடல் இயக்கத்தையும் ஏற்படுத்துகின்றது.
- கீழ் கால் பகுதி இரத்தக்குழாய்களில் ஏற்படக்கூடிய இரத்த ஓட்டத் தடை களை நீக்கி, வீக்கத்தைக் குறைக்க வும், இதனால் ஏற்படக்கூடிய வலியை குறைக்கவும் இந்த ஆசனம் உதவி யாக இருக்கும்.

மனதின் பயன்கள்:

மூளையின் செயல்பாட்டுக்கும் கீழ் வயிற் றுப் பகுதியின் செயல்பாட்டிற்கும் முக்கிய மாக பெருங்குடலின் செயல்பாட்டிற்கும் நேரடியான தொடர்புகள் உள்ளதால், வளி கழிதல் நிலையை பயிற்சி செய்வதன் மூலம் மூளையின் செயல்பாட்டு திறனை அதிகரிக்க முடிகிறது. மனதின் ஒருங்கி ணைக்கப்பட்ட செயல்பாட்டுக்கும், கூர்மை யான புத்தியின் செயல்பாட்டுக்கும் வயிற் றுப் பகுதியில் அடைபட்டு இருக்கக்கூடிய கெட்ட காற்று தடையை ஏற்படுத்தும். இவ்வாறு மேலதிகமாக அடைபெற்றிருக்கக் கூடிய காற்றை வெளியேற்றுவதன் மூலம் மனதை ஒரு நிலைப்படுத்தும் தன்மையை யும், நினைவாற்றலையும், கூர்மையான புத்தியின் செயல்பாட்டு தன்மையையும் பெறமுடிகிறது. இது தியான பயிற்சிக் கும் உதவியாக இருக்கும். இதேபோல் மேலதிகமான உணர்ச்சியை கட்டுப்படுத்த வும் இந்த ஆசனம் உதவும்.

உடல்நலம் கருதி செய்ய வேண் டியவை:

- பொதுவாகவே ஆசன பயிற்சிகளை மேற்கொள்வதற்கு முன் மூட்டுகளின் செயல்பாட்டை இலகுபடுத்தக்கூடிய பயிற்சிகளையும், இரத்த ஓட்டத்தைத் துரிதப்படுத்தி தசைகளின் செயல்பாட் டுத் திறனை தூண்டிய பிறகும் ஆசன பயிற்சிகளை மேற்கொண்டால் நல்லது. இதற்கு மூட்டுப் பயிற்சிகள் போன்ற எளிய உடற்பயிற்சிகளை செய்வதன் மூலமோ அல்லது தேர்ச்சி பெற்ற பயிற் சியாளர்கள் செய்யக்கூடிய சூரிய வணக் கம் பயிற்சி போன்ற பயிற்சிகளை செய்து உடலைத் தயார் படுத்திய பின் இந்த ஆசனத்தைச் செய்தால் மேலதிக மான பயனை பெறலாம்.
- உணவின் பின் நான்கு மணிநேர இடை வெளியும், சிற்றுண்டியின் பின் இரண்டு மணி நேர இடைவெளிக்குப் பின்னரே பயிற்சிகளைச் செய்ய வேண்டும்.
- பயிற்சிகளை செய்வதற்கு முன் சலத் தையும் மலத்தையும் வெளியேற்றிய பின்னரே பயிற்சியைச் செய்ய வேண் டும். மலச்சிக்கல் இருப்பவர்களுக்கு பெரும்பாலும் பயிற்சிகளை செய்த பின் னரே மலத்தை வெளியேற்ற இயலும்.
- சவாசன நிலையிலிருந்து உடலையும், மனதையும், மூச்சையும் ஆறுதல் படுத்தி அதன்பின் பயிற்சிகளைச் செய்ய வேண் டும்.

கழுத்து, தோள்கள், முழங்கைகள், மணிக் கட்டு, விரல் மூட்டுகள், முதுகெலும்புக ளுக்கு இடைப்பட்ட பகுதிகள், கால் களை இடுப்பில் இணைக்கும் பகுதிகள், முழங்கால் மூட்டுக்கள், கணுக்கால் மூட் டுக்கள் ஆகியனவற்றை அவற்றின் இயல் பான இயக்கத்துக்கு ஏற்ப, சீரான ஒரு வேகத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட அசைவு களை செய்வதே மூட்டு பயிற்சிகளாகும். எடுத்துக்காட்டுக்கு தலையை வலது மற் றும் இடது பக்கவாட்டில் திருப்புதல், மேலும் கீழுமாக அசைத்தல், தோள்கள், முழங்கைகள், மற்றும் கணுக்கால்களை ஒவ்வொரு மூட்டு பகுதிகளாக முன்னும் பின்னுமாக ஆறு முறை சுழற்றுதல், இடுப்பை சுழற்றுதல், முழங்கால்களை மடித்து நீட்டுதல், கணுக்கால் சுழற்சி ஆகி யவை வெளியே மூட்டு பயிற்சிகள் ஆகும். முதுகை முன்னால் வளைத்தும், பின்னால் வளைத்தும் செய்யக்கூடிய சில பயிற்சிக ளையும் செய்தபிறகு வளி கழிதல் நிலை என்னும் பயிற்சியை மேற்கொள்வது பயிற் சியால் கிடைக்கக்கூடிய நன்மைகளை அதிகப்படுத்தும்.

மிக எளிமையான இப்பயிற்சிகளை ஒழுங் காக நாளும் செய்வதன் மூலமே இப்பயிற் சியால் ஏற்படக்கூடிய ஆழமான நன்மை களை எம்மால் விளங்கிக் கொள்ள முடி யும். நாம் வாசித்து தெரிந்து கொள்ளக் கூடிய யோகக்கலை பயிற்சிகளைப் பற் றிய பல விடயங்களை வெறும் வாசித்தல் மூலமே எம்மால் உணர்ந்து விட முடியாது ஆனால் நாள்தோறும் குறிப்பிட்ட அளவு நேரத்தை ஒதுக்கி பயிற்சிகளை மேற்கொள் வதன் மூலமே எம்மால் பயிற்சிகளால் ஏற்ப டக்கூடிய பல நன்மைகளை உணர்ந்து அறிய முடிகின்றது. இலகுவான முறையில் எல்லோராலும் செய்யக்கூடிய இப்பயிற்சி களை நாள்தோறும் சில நிமிடங்கள் செய் வதால் பல நன்மைகளைப் பெற முடியும் என்பதில் ஐயமில்லை.

■ ■ ■



மோட்கேஜ்

புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

MORTGAGE

NESAN
416-908-5656

Residential / Commercial / Industrial / Investment Properties

1st, 2nd and 3rd Mortgages · Refinance · Secured Line of Credit
New House Commitment, Pre-approval · Home Equity Loan

1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
698,000	659.62	1319.25	1429.19	2858.37
546,000	515.98	1031.96	1117.96	2235.92

1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
698,000	765.04	1530.08	1657.59	3315.17
546,000	598.44	1196.88	1296.62	2593.24

Private Mortgage ('C' lender) Private lender

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
698,000	1059.81	2119.62	2296.26	4592.52

2nd Mortgage ('D' lender) Private lender

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
98,000	179.15	358.29	388.15	776.30

3rd Mortgage ('E' lender) Private lender

Mortgage Amount	Weekly	Bi Weekly	Semi Month	Month
49,000	113.72	227.43	246.39	492.77

Secure Line of Credit & Loan

Mortgage Amount	Secure Line of Credit	Home Equity Loan
225,000	1005.95 / per month	1276.51 / per month

MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099

குவலயம் ஆளும் குடிசார் பொறியியல்

- அகணி சுரேஸ் -

இலங்கை

இலங்கையில் விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்திற்காகப் பல அபிவிருத்தி வேலைகள் நீண்டகாலமாக நடைபெற்று வருகின்றது. இந்த அபிவிருத்தி வேலை களில் குடிசார் பொறியியல் துறைசார் உள்கட்டமைப்பு (Infrastructure) முக்கிய மானவை. இந்த இதழில் விளையாட்டு அபிவிருத்திக்கான குடிசார் பொறியியல் திட்டம் பற்றி உரையாடுவோம்.

சுகததாச விளையாட்டு வெளியக, உள்ளக அரங்கங்களின் உள்கட்டமைப்பு உருவாக் கம் முக்கியமான குடிசார் பொறியியல் திட்டமாகும்.

சுகததாச விளையாட்டு அரங்கம்:

கொழும்பு, பிரின்வேல்ஸ் வீதியில் அமைந் துள்ள சுகததாச விளையாட்டு அரங்கம் பல்வேறு பயன்பாடுகளைக் கொண்ட அரங் கமாக உள்ளது. இந்த அரங்கம் உதை பந்தாட்டம், ரக்பி, தடகள போன்ற பல விளையாட்டுகளுக்குப் பயன்படுத்தப்படு கின்றது. 25,000 பார்வையாளர்கள் இருந்து பார்க்கக்கூடியதாக இந்த அரங்கம் உள்

பகுதி: 12

ளது. இங்கே விளையாட்டு வீரர்கள் தங்கு வதற்கான விடுதியும் அமைந்துள்ளது சிறப் பம்சமாகும். இந்த வெளியரங்கம் 1972ஆம் ஆண்டு திறக்கப்பபட்டது. சுகததாச அரங் கத்தின் அரச சார்பான உரிமையாளராக சுகததாச தேசிய விளையாட்டுப் பல்தொ குதி அதிகார சபை (Sugathasa National Sports Complex Authority) விளங்குகிறது. இந்த நிறுவனம் இலங்கைப் பாராளு மன்றச் சட்ட விதி 17 இன் கீழ் 1999 ஆம் ஆண்டில் சட்டரீதியான அங்கீகாரம் கொண் டதாக நிறுவப்பட்டது. தேவையான விளை யாட்டு வசதிகளையும், விளையாட்டு அபி விருத்தி வேலைகளையும் செய்வதன் ஊடாக ஆசியாவில் சர்வதேசத் தரமான விளையாட்டு வசதிகளைக் கொண்டதாக இருக்கச் செய்வது இந்த நிறுவனத்தின் தூரநோக்குப் பார்வையாக (Vision) அமைந் திருந்தது. இந்நிறுவனத்தின் பணியாக (Mission) இலங்கையில் விளையாட்டுத் துறையில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளுதலும், இலங்கையில் உள்ள விளையாட்டு வசதிகளை சர்வதேச தரத் தில் பேணி, இலங்கையில் உள்ள விளை யாட்டு வீரர்களுக்கு ஒளிமயமான வாய்ப் புக்களை அளித்தலும் ஆகும். சுகததாச விளையாட்டு அரங்கத்தை, சுகததாச தேசிய விளையாட்டுப் பல்தொகுதி அதி கார சபை விளையாட்டு அமைச்சில் இருந்து 1995ஆம் ஆண்டு பொறுப்பேற்றது.

சுகததாச வெளி விளையாட்டரங்கத்திற் கான திட்டமிடல் 1956 தொடக்கம் 1957 வரையிலும், 1963 தொடக்கம் 1965 வரை யிலும் கொழும்பு மேயராகவும், 1966ஆம் ஆண்டு தொடக்கம் 1970ஆம் ஆண்டு வரை விளையாட்டமைச்சராகவும், தேசிய ஒலிம்பிக் மற்றும் கொமன்வெல்த் விளை யாட்டுக்குழுவின் தலைவராகவும் கடமை புரிந்த V.A. சுகததாச அவர்களால் ஆரம் பிக்கப்பட்டது. இதற்குரிய காணியும் V.A. சுகததாச அவர்களால் வழங்கப்பட்டது.

சுகததாச வெளியரங்க வேலைகள் நீண்ட காலம் படிப்படியாக நடைபெற்று வந் தது. ஓட்டப் பாதைகளின் உருவாக் கங்களில் கூட பல குடிசார்பொறியியல் தொழில்நுட்பங்கள் கையாளப்பட்டுள்ளன என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். நான் தேசிய கட்டட ஆராய்ச்சி

நிறுவனத்தில் பணிபுரிந்த காலத்தில் சுக ததாச வெளியரங்க அபிவிருத்தி வேலை களில் புவித்தொழில் நுட்ப பொறியியல் (Geotechnical Engineering) சார்ந்த பல வேலைகளை இந்த நிறுவனம் ஈடுபட்டி ருந்ததை நன்கு அறிந்திருந்தேன். எண்ப துகளில் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் இயங்கிய தேசிய கட்டட ஆய்வுப் பணி யகம் (National building Research Organization) இப்பொழுது பாதுகாப்பு அமைச் சின் கீழ் இயங்குகிறது. இந்த நிறுவனம் பல்வேறு குடிசார் பொறியியல் சேவை களை இலங்கையில் உள்ள அரச நிறு வனங்களுக்கும், தனியார் நிறுவனங்களுக் கும் வழங்கி வருகின்றது. இவற்றில் புவித் தொழில் நுட்பப் பொறியியல் சார்ந்த சேவைகள் மிகவும் பிரபல்யமானதாக உள் ளன. புவித்தொழில் நுட்பப் பொறியிய லில் மண்ணியக்கவியலின் (Soil Mechanics) அடிப்படைகளைப் பயன்படுத்தி நிலத் தின் துணை மேற்பரப்புக்களில் (Sub Surface) உள்ள பொருட்களின் பௌதீக, இரா சயன பண்புகளை ஆய்வு செய்யப்படு கின்றது. இந்தப் பண்புகளையும், மண்ணி யக்கவியல் அடிப்படைகளையும் பயன் படுத்தி புவித்தொழில் நுட்பப் பொறியிய லாளர்கள் உள்கட்டமைப்பு உருவாக்கல் திட்டங்களுக்கு தமது ஆலோசனைகளை வழங்குவார்கள். ஓட்டப்பாதைகள் அமைக் கும் திட்டங்களில் புவித்தொழில்நுட்பப் பொறியியலாளர்களின் பணிகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. ஒவ்வொரு திட்டத் திற்கும் வேண்டிய மண்ணாய்வு (Soil Investigations) வேலையைச் செய்து மண் ணாய்வு அறிக்கையை புவித்தொழில் நுட் பப் பொறியியலாளர்கள் வழங்குவது வழக் கம். உதாரணமாக கொழும்பு வைத்திய சாலையில் 150,000 கலன் கொள்ளளவு கொண்ட நீர்த்தாங்கி கட்டப்படுவதற்கு முன் னர் அதற்கான மண்ணாய்வு வேலைகளைச் செய்து அதற்கான அறிக்கையைச் சமர்ப் பித்து இருந்தோம். இதுபோன்றே சுகத தாச விளையாட்டு அரங்கத் திடலில் நடைபெற்ற பல்வேறு அபிவிருத்தி வேலை களுக்கும் புவித்தொழில் நுட்பப் பொறியி யலாளர்கள் மண்ணாய்வு அறிக்கையை வழங்கினார்கள்.

ஒரு மண்ணாய்வு அறிக்கையில் காணப் படும் பொதுவான விடயங்கள் பற்றி இப் பொழுது கவனிப்போம். இந்த அறிக்க கையில் ஒரு அறிமுகப் பகுதி (Introduction) இருக்கும். இந்தப் பகுதியில் இந்த ஆய்வுக்கான கோரிக்கையை யார், எந்த நிறுவனம், எப்பொழுது வழங்கியது, இந்த ஆய்விற்கான கள வேலைகள் (Field Works) நடைபெற்ற காலம், ஆய்விற்குப் பயன் படுத்தப்பட்ட விடயங்கள், ஆய்வில் செய் யப்பட்ட ஆய்வுகூடப் பரிசோதனைகள் பற் றிய குறிப்புக்கள் போன்றவை இருக்கும். அடுத்து நோக்கம் (Objective) பகுதியில் அகலம், நீளம், நிலத்தின் மீது வழங்கும் சுமை போன்ற விபரங்கள் இந்தப் பகுதி யில் கொடுக்கப்படும். இதனை அடுத்து தள நிலவரம் (Site Reconnissance) பற்றிய விபரங்கள் இந்த அறிக்கையில் இடம் பெறும். அந்த தளத்தில் உள்ள நிலம் பற்றிய விபரங்கள், சுற்றாடலில் உள்ள கட்டுமானங்கள் பற்றிய விபரங்கள் போன்ற விடயங்கள் இந்தப் பகுதியில் இடம்பெறும்.

இந்த அறிக்கையில் அடுத்ததாக கள வேலைகள், ஆய்வுகூடப் பரிசோதனைகள் பற்றிய விபரங்கள் இடம்பெறும். எத்தனை துளைத் துவாரங்கள் (Bore Holes), அவற் றின் இடங்களைக் காட்டும் படங்கள் ஆகி யவை இடம்பெறும். தளத்தில் உள்ள மண் பற்றிய பரிசோதனைகளுக்காக நிலத் தை துளைத்து மண்மாதிரிகள் எடுக்கப் பட்டு ஆய்வுகூடப் பரிசோதனைகள் நடத் தப்படுவது வழக்கம். பரிசோதனைகளின் பெறுபேறுகள் பற்றிய விபரங்கள் துளைத் துவார ஆழத்துடன் பட்டியலிட்டுக் கொடுக்

தொடர்தல் 21ம் பக்கம்

திருமணம், பூப்புனிதநீராட்டுவிழா, பிறந்தநாள் அழைப்பிதழ்கள்
அச்சிட தொரன்ரோவில் புதிய காட்சியறையுடன்
MENAKA CARD
மேனகா அழைப்பிதழ்
Invitations for all occasions
80 Nashdene Road, Suite 113, (E Block), Toronto, Ontario, M1V 5E4. Tel : 416.335.1155

குவலயம் ஆளும்

20ம் பக்கத் தொடர்ச்சி...

கப்பட்டிருக்கும்.

அறிக்கையின் இறுதிப்பகுதியில் புவித்தொழில் நுட்பப் பொறியியலாளர்களின் சிபார்சுகள் (Recommendations) கொடுக்கப்படும். அறிக்கையின் பிற்சேர்க்கையாக எல்லாப் பரிசோதனைகளின் விரிவான விபரங்கள் கொடுக்கப்படும். முக்கியமாக கட்டுமானத் திற்குப் பொருத்தமான அடித்தளங்கள் பற்றிய சிபார்சுகள் இந்த அறிக்கையில் இடம்பெறும்.

1991ஆம் ஆண்டில் தென்னாசிய விளையாட்டு நிகழ்விற்காக உள்ளக விளையாட்டரங்கம் ஜப்பானிய நிறுவனமான மிற்சுயி (Mitsui) நிறுவனத்தால் கட்டப்பட்டது. 1991ஆம் ஆண்டிலும், 2006ஆம் ஆண்டிலும், தென்னாசிய விளையாட்டு நிகழ்வுகள் இந்த விளையாட்டரங்கில் நடைபெற்றது. உள்ளக வியாட்டரங்கத்தின் கட்டுமான வேலைகளின் கட்டடக்கலை சார்ந்த மேற்பார்வை வேலைகளை நகர அபிவிருத்திச் சபை (Urban Development Authority) செய்தது. குடிசார் பொறியியல் வேலைகளின் மேற்பார்வையை தேசிய கட்டட ஆய்வுப் பணியகம் (National building Research Organization) செய்தது. இந்தக் கட்டுமானப் பணிகளை மேற்பார்வை செய்த தேசிய கட்டட ஆய்வுப் பணியகம் சார்பில் வதிவிடப் பொறியியலாளராக கடமையாற்றியிருந்தேன். இந்தக் கட்டுமானப் பணிகள் திரு. பிரேமதாச அவர்கள் பிரதம மந்திரியாகக் கடமையாற்றியிருந்த காலத்தில் நடைபெற்றன. 2010ஆம் ஆண்டு AFC Challenge Cup போட்டிகள் இந்த அரங்கில் நடைபெற்றன. 2002ஆம் ஆண்டில் Asian Athletics Championship இங்கு நடைபெற்றன.

சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கின் கட்டுமானப் பணிகளின் கூறுகளாக சுகததாச உள்ளக அரங்கம், விளையாட்டு வீரர்களின் தங்கும் விடுதிகள், நீச்சல் குளம் போன்றவை அமைக்கப்பட்டன. 35 மீற்றர் அகலமும், 40 மீற்றர் நீளமும், 5004 இருக்கைகளையும் கொண்ட குளிரூட்டப்பட்ட உள்ளக அரங்கம் அமைக்கப்பட்டது.

இந்த அரங்கத்தின் கூரை எந்த தூண்களும் இன்றிக் கட்டப்பட்டது மிகவும் முக்கியமான விடயமாகும். கூரையின் வடிவமைப்பு சுற்றியுள்ள சுவர்களிலும் சுவரோடு இணைந்த தூண்களில் மட்டும் தாங்கப்பட்டுள்ளதால் அரங்கத்தின் நடுவே எந்த தூண்களும் இல்லை. இந்த உள்ளக அரங்கு 7,000 பார்வையாளர்களை உள்ளடக்கக் கூடியது.

சுகததாச உள்ளக அரங்கத்தில் நான்கு நீச்சல் தடாகங்கள் உள்ளன. பிரதான நீச்சல் தடாகம், சுழியோடல் நீச்சல் தடாகம், சிறுவர்களுக்கான நீச்சல் தடாகம், பயிற்சிக்கான நீச்சல் தடாகம் போன்ற நான்கு நீச்சல் தடாகங்கள் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்டன. துல்லியமாக நேரம் அமைக்கப்படும் மின்னணுவியல் கருவிகள் நீச்சல் தடாகத்தில் பொருத்தப்பட்டன. இந்த நீச்சல் தடாகங்கள் இரவு பகல் நேரங்களில் பயன்படுத்தப்படக்கூடிய விதத்தில் மின்சார வெளிச்சம் கொடுக்க உயரழுத்த மின்கோபுரங்கள் அமைக்கப்பட்டன. இந்த நீச்சல் தடாகங்கள் பாடசாலைச் சிறுவர்களும் குறைந்தளவு கட்டணத்துடன் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டதால் பல பாடசாலைச் சிறுவர்களுக்கு பெரும் வாய்ப்பாகவும் அமைந்திருந்தது. இந்த நீச்சல் தடாகங்களில் போட்டிகள் நடத்தப்படும் பொழுது 2,500 பார்வையாளர்கள் இருந்து பார்க்கக் கூடிய இருக்கைகள் உள்ளன. தண்ணீர் பந்தாட்ட (Water Polo) விளையாட்டுக்களும் இங்கே நடத்தப்பட்டன. முழுமையான வசதிகள் கொண்ட உடற் பயிற்சி நிலையங்கள் இந்த அரங்கத்தில் உள்ளன.

சுகததாச அரங்கத்தில் கட்டப்பட்ட விளையாட்டு வீரர்களின் விடுதியில் இரண்டு மாநாட்டு மண்டபங்கள், ஆறு தனி அறைகள், 14 இரட்டை அறைகள், 4 குளிரூட்டப்பட்ட அறைகள், 18 தங்குமிடங்கள் போன்றன அமைக்கப்பட்டன. இந்த விடுதியில் மொத்தம் 150 விளையாட்டு வீரர்கள் தங்கமுடியும். 1991ஆம் ஆண்டளவில் கட்டப்பட்ட நீச்சல் தடாகங்கள், உள்ளக அரங்கம், விளையாட்டு வீரர்களின் விடுதிகள் போன்றவற்றைக் கொண்ட பிரமாண்டமான சுகததாச உள்ளரங்கம் பல குடிசார் பொறியியல் தொழில்நுட்பங்களை உள்ளடக்கியதாக அமைந்தது. நீச்சல் தடாகங்களில் பேணப்பட்ட நீர் ஆதார (Water Proof) தொழில்நுட்பங்கள் மிகவும் முக்கியமானவை. சில துணையரங்குகளும் இங்கே உருவாக்கப்பட்டன. சுகததாச உள்ளரங்கம் 1989ஆம் ஆண்டு மார்கழி மாதம் நடுப்பகுதியில் ஆரம்பித்து 21 மாதங்களில் 21மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் உருவாக்கப்பட்டது. இதன் வடிவமைப்பும், கட்டுமானமும் ஜப்பான் மிற்சுயி நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.

அன்பான வாசகர்களே! குடிசார் பொறியியல் பற்றிய பல விடயங்களை இத்தொடர் கட்டுரை மூலமாக உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மனநிறைவடைகின்றேன். தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக் கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

(தொடரும்...)

akani.suresh@thaiveedu.com

வீட்டுப் பரிசோதனை என்பது அவசியமா?

வீடும் விடியலும் - 169

- வேலா சுப்ரமணியம் -

எமது வாழ்நாளில் நாங்கள் செய்யக் கூடிய முதலீடுகளில் 'வீடு' வாங்குவது என்பது ஒரு மிகப் பெரிய முதலீடாகவும், அதே வேளை முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர் மானமாகவும் அமைகின்றது. அத்தகை யதொரு முதலீட்டைச் செய்கின்றபோது கைக்கொள்ளப்படும் 'வீடு வாங்கும் படி முறைகளில் வீட்டுப்பரிசோதனை' என்பது மிக முக்கியமான அத்தியாயமாகும். சுருக் கமாகக் கூறுவதானால் ஒரு வீட்டை வாங்கு பவர்கள் அந்த வீட்டின் உண்மைத் தன் மையையும் ஏற்படக்கூடிய இடர்களையும் முன்கூட்டியே அறிந்து கொண்டு திடமா னதும் அத்துடன் ஒரு திருப்திகரமானது மான ஒரு முடிவை எடுப்பதற்கு வீட்டுப் பரிசோதனை வழிவகுக்கின்றது.

வடஅமெரிக்க மாநிலங்களில் இருப்பது போல், கனடாவில் வீடு வாங்கும் போது கட்டாயம் வீட்டுப் பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்பது சட்டமாக்கப்படவில்லை என்றாலும், வீட்டுப் பரிசோதனை மூலம் நுகர்வோர் பலவிதமான நன்மைகளை அடையக்கூடிய வாய்ப்பு உள்ளது என் பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் இத்தகைய தொழிற்பாட்டின் உண்மைத் தன்மையினை அறிந்து கொள்ளாது அலட் சியப் போக்குடன் சிலர் நடந்து கொள் வதும், காலம் கடந்து வரும் ஞானத்தால் பலனிழந்து விரக்தியடைவதும் நடைமுறை யில் காணப்படும் சம்பவங்களாக உள்ளன.

ஒரு வீட்டுப் பரிசோதனை என்பது பல குறிப்பிட்ட காரணங்களுக்காகச் செய்யப் படலாம்.

- மீள்விற்பனை செய்யப்படும் வீடுகளுக் கானவை.
- உத்தரவாதத்தை உறுதி செய்யும் புதிய வீடுகளுக்கானவை.
- வீட்டை விற்கமுன் குறைகளின்றித் தயார்படுத்துவதற்காகச் செய்யப்படு பவை.
- வீட்டில் வாழும் போதே குறிப்பிட்ட பிழைகளைக் கண்டறியச் செய்யப்படு பவை.

பொதுவாக மேற்கூறப்பட்ட நான்கு கார ணங்களுக்காக வீட்டுப் பரிசோதனை செய் தல் வழமையாக உள்ளது. இவற்றுள் முதல் அங்கமாக இருக்கின்ற - பலராலும் பின்பற்றப்படுகின்ற 'மீள்விற்பனை' செய் யப்படும் வீடுகளுக்கான வீட்டுப் பரிசோ தனைபற்றியும் அதன் அவசியம் பற்றி யும் இக்கட்டுரையில் விரிவாக விளக்கு வது பொருத்தமாக இருக்கும்.

கனடாவில் வீடுவாங்கும் படிமுறைகள் பற் றிப் பலரும் அறிந்திருந்தாலும் சிலர் அது பற்றிய முழுமையான விளக்கங்கள் இல் லாமலே செயற்படுகின்றார்கள் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். வீடுவாங் கும் எண்ணம் கொண்டிருக்கக் கூடிய ஒருவர் வீடுவாங்குபவரது ஆசைகளையும், விருப்பங்களையும் இதய சுத்தியுடன் நேர்மையாகப் பூர்த்தி செய்யக்கூடியதும் அத்துடன் அத்தகைய துறையில் அனுப வம் உள்ளவருமான ஒரு வீடுவிற்பனை முகவரைத் தேர்ந்து எடுக்க வேண்டியது மிக முக்கியமான அம்சமாகும்.

வீடு வாங்குபவர்களுக்குரிய வெற்றி அல் லது பல லட்சம் பெறுமதியான இலாபம் என்பது ஒரு நல்ல வீடு விற்பனை முகவ ரைத் தேர்ந்தெடுப்பதை அடிப்படையா கக் கொண்டே அமைகின்றது. அத்தகைய முகவர்களினதும், வாங்குபவர்களினதும் தேடலின் பலனாக பல வீடுகளை நேரிற் சென்று பார்க்க வேண்டியிருக்கும். அத்த கைய தொடர் நடவடிக்கையில் ஏதாவ தொரு வீடு உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வதாகவும் உங்கள் நிதி நிலைக்குட் பட்டதாகவும் அமையும் பட்சத்தில் அந்த வீட்டை வாங்குவதற்கான படிமுறையில் இறங்க வேண்டியிருக்கும். அதற்கு முதற் படியாக 'கொள்வனவு விற்பனை ஒப்பந் தம்' (Agreement of Purchase & Sales) ஒன் றை வீடு விற்பனை முகவர் தயார் செய்து வாங்குபவர்களின் கைச்சாத்துடன் விற் பனையாளரின் முகவரிடம் கையளிக்க வேண்டியிருக்கும். பொதுவாக இதனை 'Offer' போடுதல் என அழைப்பார்கள். இத்தகைய ஒப்பந்தத்தில் முக்கியமாக வாங்கப்போகும் வீட்டின் உத்தேச விலை, பூர்த்தி செய்யப்பட இருக்கும் திகதி, அத்துடன் வீட்டுப் பரிசோதனை, வீட்டு அடமானம் என்பவற்றுகான கால நிபந் தனை உள்ளடக்கப்பட்டிருக்கும். பொது வாக வீட்டுப்பரிசோதனைக்கான கால நிபந்தனை 5 - 10 நாட்களாக இருக்கும். அத்தகைய ஒப்பந்தம் வீட்டின் விலை, நிபந்தனைகள் உட்பட சகல அம்சங்களும் வாங்குபவர், விற்பவர் என்ற இரு சாராரது சம்மதத்துடன், நிபந்தனைகளுடன் கூடிய ஒபபந்தமாக ஏற்றுக் கொள்ளப்படும். அத்த கைய நிபந்தனைக்கு அமைவாக குறிப் பிட்ட நாட்களுக்குள் வீட்டுப் பரிசோதனை ஒன்றைச் செய்து அதன் அடிப்படையில் கொள்வனவுக்கான தீர்மானத்தை உறுதி செய்ய வேண்டியது வீடுவாங்குபவரது கடமையாகும். தற்காலிக ஒப்பந்தம் ஏற் றுக் கொள்ளப்பட்ட பின்னர், இருக்கக் கூடிய 'நிபந்தனைக்காலம்' 'Condional Pe-riod' என்பது இருசாராருக்கும் ஒரு மன உளைச்சலைக் கொடுக்கக் கூடிய விரத்தி நிறைந்த காலமாக இருக்கும். வீடு வாங்கு பவரைப் பொறுத்தவரை அடமானக் கடன் கிடைக்குமா? இல்லையா? என்பது உறுதி செய்யப்பட வேண்டும். தற்கால நடைமுறை யில் அது மிகச் சிக்கல் நிறைந்த கால மாக இருக்கும். அடமானக் கடன் கிடைத்து விட்டால் வீடு எப்படியிருக்கும்? அதுசரி யாக இருக்குமா? இது சரியாக இருக் கமா? எதிர்காலத்தில் பாரிய செலவு களைச் சந்திக்க வேண்டிவருமா? இத்த கைய கேள்விகள் வீடு வாங்குபவர்கள் மத்தியில் எழுந்த வண்ணமிருக்கும் அத் துடன் சில வேளைகளில் போட்டி காரண மாகவும் ஆர்வக் கோளாறு காரணமாக வும் வாங்குபர்கள் திடீர் முடிவுகள் எடுப் பதும் காலப்போக்கில் அத்தகைய முடிவு கள் பாதகமானது என்பதை உணர்ந்து கொள்ளவும், உரிய பரிகாரங்களைத் தேட வும் இத்தகைய வீட்டுப்பரிசோதனை சாத கமாக அமையும் வாய்ப்பு உள்ளது.



வீட்டுப் பரிசோதகரை ஒழுங்கு செய்ய வேண்டியது யார்?

வீடு வாங்குபவர் தனக்கு நம்பிக்கையான, தராதரம் பெற்ற வீட்டுப்பரிசோதகரை தனது சுயவிருப்பப்படி ஒழுங்கு செய் வதே சரியான நடைமுறையாகும். ஆனால் வீடு விற்பனை முகவர்களே தாம் வாங் கிக் கொடுக்க இருக்கும் வீட்டை பரிசோ திக்க ஒரு வீட்டுப் பரிசோதகரை ஒழுங்கு செய்வது நம்மவர் மத்தியில் பழக்க மாகப் போய்விட்டது. வீடுவாங்கும் புத்தி சாலித்தனமானவர்கள் அதற்கு உடன்படக் கூடாது என்ற கருத்தும் பலரது மத்தியில் நிலவுகின்றது. வீடு விற்பனை முகவர்கள் தனக்குப் பிடித்த ஒரு வீட்டுப் பரிசோதக ரைத் திணிக்காது வீடு வாங்குபவர்களுக் குச் சில பரிசோதகர்களைச் சிபாரிசு செய்து அவர்கள் தமக்குப்பிடித்த ஒரு பரிசோதக

தொடர்தல் 37ம் பக்கம்

வீட்டுப் பரிசோதனை...

36ம் பக்கத் தொடர்ச்சி...

ரைச் சுதந்திரமாகத் தெரிவு செய்யச் சந் தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டியதே சரி யான நடைமுறையாகும்.

எது எப்படி இருப்பினும் ஒரு வீட்டுப்பரி சோதகர் பக்கச் சார்பின்றி வீட்டைப் பரி சோதித்த பின்னர் அதன் உண்மை நிலை யை வீடு வாங்குபவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டியது அல்லது ஆவணப்படுத்த வேண்டியது மிக முக்கியமானது. ஆத் துடன் வீடு வாங்குபவர்கள் தங்களிடம் இருக்கக்கூடிய குறிப்பிட்ட வீட்டைப் பற் றிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திய பின்னர், அடமானக் கடன் ஒழுங்குகளும் சரிவந்திருந்தால் சலனமின்றித் திடமுட னும் துணிவுடனும் நிபந்தனை அடிப்படை யில் கொடுத்திருந்த ஒப்பந்தத்தை குறிப் பிட்ட காலக்கொடு முடிவதற்குள் திடமான ஒப்பந்தமாக்கிக் கொள்ளலாம்.

தாயக மண்ணில் கட்டப்பட்டிருக்கும் வீடு கள் பரம்பரை பரம்பரையாக, பாரிய மாற் றங்கள் அல்லது பாதிப்புகள் இன்றிப் பலகாலமாக உறுதியுடன் நிமிர்ந்து நிற் பதைப் பார்த்துப் பழக்கப்பட்டவர்கள் நாங் கள். ஆனால், கனடா போன்ற குளிர் நாடு களில் வீடுகள் கட்டப்படும் முறையே முற்றிலும் வேறுபட்டது. அதிக குளிரைத் தாங்கக் கூடியதாகவும் அதேவேளை கோடைகாலத்திற்கு உகந்ததாகவும் இங்கு வீடுகள் கட்டப்படுகின்றது. அதிக குளிர், அதிக வெப்பம் என்பன மாறி மாறிவரும் போது சுருங்குதல், விரிதல் என்பவற்றால் வீடுகளுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் தவிர்க்க முடியாதவை. அது மட்டுமல்லாது மீள்விற்பனையில் ஒரு வீட்டை வாங்கும் போது அது பலரது கைகளுக்கு மாறி வந்ததாகக் இருக்கும். ஒவ்வொருவரும் தங்களுக்கு ஏற்றவிதத்திலும் பிடித்த விதத் திலும் இருக்கும் வீட்டை மாற்றியமைப்பது சகசம். தொழில் வல்லமை தெரிந்தவர் களைக் கொண்டு வீட்டைத்திருத்துவது ஒருவிதம். ஆனால் பலரும் செலவைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பல வேலை களை தாமாகச் செய்வதும் அல்லது மலிவான விலையில் கிடைக்கக் கூடிய வர்களைப் பயன்படுத்தி திருத்தங்கள் செய்வதும் நடைமுறையில் காணப்படும் செயலாகும். எனவே வீட்டை வாங்கும் ஒருவர் வீட்டு அமைப்பு, பாவிக்கப்படும் மூலப் பொருட்கள், அத்துடன் வீடுகளை இயக்கிக் கொண்டிருக்கூடிய இயந்திர உபகரணங்கள் பற்றி ஏற்கனவே அறிந் திருக்க வாய்ப்பில்லை. வீட்டை விற்கும் ஒருவர் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாரிய செலவுகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற் காகக்கூட ஒரு வீட்டை விற்றுவிட்டு வேறு வீட்டுக்குப் போகலாம். ஆண்டுகள் போகப் போக வீடுகள், பொருத்துக்கள், பொருத் தப்பட்டுள்ள இயந்திர உபகரணங்கள் பழு தடைவது இயல்பானது. எனவே இவைபற்றி ஒரு அனுபவம் வாய்ந்த பரிசோதகர் மூலம் பூரணமாகத் தெரிந்து கொண்ட பின்னர் ஒரு வீட்டைக் கொள்வனவு செய்வதுதான் விவேகமான செயலாகும்.

ஒரு வீட்டை வாங்குவது என்பது ஒரு பெரிய முதலீடு. தங்களிடம் இருக்கக் கூடிய சேமிப்புக்கள் திரவ நிலையில் இருக்கக்கூடிய சொத்துக்கள் எல்லாவற்றை யும் வழித்துத் துடைத்துப் போட்டு, அதற்கு மேல் வங்கிக் கடன் பெற்றுத்தான் ஒவ் வொருவரும் வீடு வாங்குகிறார்கள். இந்த நிலையில் வீட்டிற்குள் சென்ற பின்னர் பாரிய செலவுகள், திருத்த வேலைகளுக் காகத் தேவைப்படுமாக இருந்தால் பல வித சிக்கல்களையும் இடர்களையும் சந் திக்க வேண்டியிருக்கும். திருத்த வேலை களை எதிர்பார்த்து வீடுவாங்குவது வேறு விடயம். ஆனால், எதிர்பாராத செலவுக ளைத் தவிர்க்கவும் அல்லது முன்கூட்டியே தெரிந்து கொண்டு அதற்குரிய தயார்நிலை யில் வீடுவாங்குவதும் தான் சரியான செய லாகும்.

இவற்றுக்கும் மேலாக வீட்டின் உண்மை நிலை தெரியாது ஒரு வீட்டில் வாழ்கின்ற போது, ஒரு மனப் பயம் இருந்துகொண்டே இருக்கும். அத்தகைய மனப்பயம் காலப் போக்கில் விரக்தி, கவலை போன்றவற் றுக்கு காரணமாகி பலவித கற்பனைகளோடு சந்தோஷமாக வாழவந்த வீட்டில் நிம்மதி இல்லாது வாழும் நிலையை உருவாக்க லாம். ஏறத்தாழ ஒரு மில்லியனுக்கு ஒரு வீட்டை வாங்குவதுதான் தற்போதைய சாதாரண நிலை. ஆனால் 250 - 300 டொ-லர்களை வீட்டுப் பரிசோதனைக்கு செலவு செய்ய பலரும் தயங்குவதும் அல்லது அதுபற்றி அக்கறை எடுக்காது விடுவதும் மிகத் தவறான செயலாகும்.

உண்மையில் வீட்டுப் பரிசோதனை என்பது வீடுவாங்குபவர்களுக்கு திருப்தி, நிம்மதி, மகிழ்ச்சி போன்றவற்றைக் கொடுப்பதுடன் பல நன்மைகளைக் கொடுக்கின்றது. வீட்டுப் பரிசோதனையின் போது வீட்டில் இருக்கக்கூடிய பிழைகள் கண்டுபிடிக்கப் பட்டால் அல்லது எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பாரிய செலவுகள் அடையாளப் படுத்தப்பட்டால் குறிக்கப்பட்ட வீட்டு விலையைக் குறைப்பதற்கும் அல்லது இருக்கக்கூடிய பிழைகளை வீட்டை விற் பவர்கள் மூலம் திருத்திக் கொள்ளவும் சந்தர்ப்பம் உள்ளது. பல ஆயிரம் டொ-லர்களைச் சேமிக்க இத்தகைய நடை முறை நிச்சயம் வழிவகுக்கும்.

இவ்வாறு தராதரம் பெற்ற ஒரு வீட்டுப் பரிசோதகரால் முறையாகச் செய்யப்படும் வீட்டுப் பரிசோதனை மூலம் பெறக்கூடிய அனுகூலங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

வீட்டுப்பரிசோதனையில் உள்ளடக்கப்படு பவை எவை?

- அத்திபாரம்
- கூரை
- கதவுகள், சாளரங்கள்
- மின்சார இணைப்பு
- நீர்விநியோகம், கழிவுநீர் போக்கு
- தனிப்படுத்தல் (Insulation)
- துணைக் கருவிகள் (Appliances)
- வெப்பமாக்கியும் குளிரூட்டியும்
- வெளிப்புறம் (Exterior)
- வண்டிப்பாதை (Driveway)
- கட்டட இணைப்புகள் (Porches, Patio, Balcony)
- முன்வளவு, மின்வளவு நிலச்சீர் (Grading).

ஒரு வீட்டுப்பரிசோதகர் மேற்குறிப்பிடப் பட்ட கூறுகள் ஒவ்வொன்றையும் முறை யாக ஆராய்ந்து மதிப்பீடு செய்து அவற் றுள் இயங்காதவை எவை? அல்லது முறை யற்ற வகையில் பொருத்தப்பட்டிருப்பவை எவை? என்பதை அறிவுறுத்தல் வேண்டும். அதுமட்டுமன்றி ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் எதிர்காலத்தில் பாரிய செலவு களை ஏற்படுத்தக்கூடிய அம்சங்கள் என்ன? என்பதனையும் தெளிவுபடுத்த வேண்டி யது ஒரு வீட்டுப்பரிசோதகரின் கடமை யாகும். பொதுவாக ஒரு வீட்டைப் பரிசோ தனை செய்ய 2 - 3 மணித்தியாலங்கள் வரை தேவைப்படலாம்.

ஒரு வீட்டுப் பரிசோதகர் கூறும் அறிவு றுத்தல்களையும் விளக்கங்களையும் அடிப் படையாகக் கொண்டு ஒரு தீர்க்கமான இறுதி முடிவை வீடு வாங்குபவர் எடுப் பதற்கு வீட்டுப்பரிசோதனை உதவுகின் றது. சுருங்கக் கூறுவதானால் செய்யப்படும் முதலீடு பாரிய அளவிலானது என்பதாலும், எடுக்கப்படும் முடிவு நீண்டகாலத்திற்கு வீட்டில் வாழக் கூடிய குடும்ப அங்கத்த வர் ஒவ்வொருவரையும் பாதிக்ககூடியதும் சாதக, பாதக விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது என்பதாலும் வீடு வாங்கும் படி முறைகளில் வீட்டுப் பரிசோதனை என்பது மிகமிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் காணப்படுகின்றது.

வீட்டுப்பரிசோதனையின் போது கவனத் தில் கொள்ள வேண்டிய 2 அம்சங்கள் உள்ளன.

- வீட்டுப் பரிசோதனை
- வீட்டுப் பராமரிப்பு

முதலாவது அம்சம் பற்றி ஏற்கனவே விளக் கமாகக் கூறப்பட்டுள்ளது. இரண்டாவது அம்சமாக இருக்கின்ற வீட்டுப்பராமரிப்பு என்பதும் முக்கியமானது. அதாவது வாங் கிய வீட்டின் பெறுமதி குறையாது இருக்க வும் அதன் பெறுமதியை பன்மடங்கு அதிகரிக்கச் செய்யவும் முறையான வீட்டுப் பராமரிப்பு மிக அவசியமானது. கொள் வனவாளர்கள் வீட்டுப்பரிசோதகரிடம் வீட் டைப் பரிசோதனை செய்யும் போதே கூட நின்று பராமரிப்பு பற்றிய சுருக்க மான தகவல்களைப் பெற்றுக் கொள் வதும் தெரியாதவற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்வதும் அதிக நன்மைபயக்கும்.

எது எப்படி இருப்பினும் வீட்டுப் பரிசோ தனை என்பது ஒரு சிறு தொகையைச் செலவழித்து பல மடங்கு நன்மையைப் பெறவைக்கும் ஒரு முக்கியமான செயற் பாடு என்பதை எவருமே மறுக்க முடியாது.

velasubramaniam@thaiveedu.com

மின்சாரப் பாவனைக்குரிய குறைந்த கட்டணம்



COVID-19 காரணமாக ஒன்ராறியோ மாநிலத்தில் மின்சாரப் பாவனைக்குரிய குறைந்த கட்டணமான (Off Peak) Cents 12.8/Kwh தொடர்கிறது...

The Government of Ontario has introduced a COVID-19 Recovery Rate of 12.8¢/kWh for all time-of-use (TOU) electricity customers, to support Ontarians as we restart the economy. Households, farms and small businesses who pay time-of-use electricity rates will be charged this fixed rate 24 hours a day, seven days a week, starting June 1, 2020.

COVID-19 Recovery Rate for Time-of-Use customers

Effective June 1, 2020, the Government of Ontario announced the COVID-19 Recovery Rate for customers who pay Time-of-Use (TOU) electricity rates. Residential TOU customers will be charged the fixed rate of 12.8 ¢/kWh for all electricity usage, 24 hours a day, seven days a week. The government has extended this rate relief to TOU customers until October 31, 2020.

Insurance & Investments

"Life insurance is the most tangible form of security devised by man"

For all your insurance and investment needs:

- ✓ Guaranteed Investments
- ✓ Annuities and Pensions
- ✓ Registered Retirement Savings Plan (RRSP)
- ✓ RRSP Loan
- ✓ Registered Education Savings Plan (RESP)
- ✓ Life Insurance
- ✓ Disability Insurance
- ✓ Mortgage Insurance
- ✓ Travel Insurance
- ✓ Group Insurance
- ✓ Critical Illness Insurance
- ✓ Health Insurance

Santhakumar Subramaniam
Financial Advisor

Tif: 437.771.1086
Fax: 905.470.4045
santhan16win@gmail.com

4168 Finch Ave. East, PH 28, Scarborough, ON M1S 5H6

30,000 தீவுகளைக் கொண்ட ஜோர்ஜியன் குடா

- குரு அரவிந்தன் -

கொரோனா வைரஸின் தாக்கத்தால் ஏற்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக மக்கள் சுமார் ஆறுமாதங்களாக வீட்டுக்குள் முடக்கப்பட்டு இருந்தார்கள். கொரோனா வைரசுக்கு மருந்துகள் கண்டு பிடிக்காத இந்த நிலையில், சில கட்டுப்பாடுகளுடன், மக்களைச் சற்று வெளியே நடமாட அரசும் சுகாதார அதிகாரிகளும் அனுமதித்தார்கள். ஆனால் பொது இடங்களில் சுகாதாரத்தைப் பேணக்கூடிய வகையில் மனித இடைவெளியைக் கடைப்பிடிக்கும் படியும், முகத்திற்கு கவசம் அணியும்படியும், கைகளை அடிக்கடி சுத்தமாகக் கழுவும்படியும் கேட்டுக் கொண்டார்கள். அதற்கமைய பொது இடங்களும் கட்டுப்பாடுகளுடன் செயற்பட ஆரம்பித்திருக்கின்றன. பொருளாதாரப் பின்னடைவை நிவர்த்தி செய்வதற்காக பொது இடங்கள் மக்களுக்காகச் சேவையாற்றத் தற்போது தொடங்கி இருக்கின்றன. மக்கள் எல்லோரும் கவனமாகச் செயற்பட்டால், மீண்டும் பழைய நிலைக்கு நாட்டைக் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கை வீண் போகாது என்றே மக்கள் நம்புகின்றார்கள். இல்லாத மருந்தை நம்பியிராமல், நாங்களே கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டால் கொரோனாவை ஓரளவு ஒழித்துவிட முடியும்.

பெற்றோர்கள் மட்டுமல்ல, பிள்ளைகளும் வீட்டுக்குள் எவ்வளவு காலம்தான் அடைந்து கிடக்க முடியும், எனவேதான் சில கட்டுப்பாடுகளை தளர்த்தி இருக்கின்றது அரசு. பாடசாலைக்குச் செல்லாமல் வீட்டுக்குள் செப்ரெம்பர் மாதம் வரை தொடர்ந்து இருக்கப்போகும் பிள்ளைகளின் மனநிலை பாதிக்கப்படக் கூடாது என்ற உளவியற் காரணங்களும் இதில் முக்கியமானதாகும். ஒன்ராறியோவில் மட்டும் 2 மில்லியனுக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். ரெறன்ரோவில் 538 பாடசாலைகளில் சுமார் 2,47,000 மாணவர்கள் கல்விகற்கிறார்கள். எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திப் பெற்றோர்கள் பிள்ளைகளை வெளியே அழைத்துச் செல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். காலையும், மாலையும் பயண நேரத்தை மிச்சம்பிடித்து வீட்டிலே இருந்தபடி கணினி மூலம் நாங்களும் தினமும் வேலை செய்யப் பழகிக் கொண்டு விட்டோம். ரொறன்ரோ கல்விச்சபையில் என்னிடம் கல்வி பயிலும் மாணவர்கள் தாங்கள் சென்று பார்த்த சில இடங்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதில் ஒன்றான ரொறன்ரோ மிருகக்காட்சியகத்திற்குச் சென்ற போது, வண்டியில் இருந்தபடியேதான் சுற்றிப் பார்க்க வேண்டி வந்தது. மிருகங்கள் குறைவாக இருந்தது மட்டுமல்ல, அனேகமான மிருகங்கள் வெய்யில் காரணமாக மரத்தின் கீழ் படுத்து இரை மீட்டுக் கொண்டிருந்தன. எதிர்பார்த்த மாதிரி அவற்றைப் புகைப்படங்கள் எடுக்க முடியவில்லை. அடுத்ததாக ஆபிரிக்கன் சபாரிக்குச் சென்றிருந்தேன், அங்கு ஓரளவு மிருகங்களை அருகே சென்று பார்க்க முடிந்தது. தீக்கோழி ஒன்று அருகே வந்து எல்லா வண்டிக் கதவுகளையும் தட்டி உணவு கேட்ட போது பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது, என்றாலும் வழமையாக வண்டியில் ஓடி வந்து ஏறி உட் கார்ந்து வேடிக்கை காட்டும் குரங்குக் கூட்டத்தை இம்முறை காண முடியவில்லை, காரணம் கொரோனா எல்லாவற்றையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமான பொழுது போக்குகள் பிடிக்கும், இசை, நடனம், நாடகம், எழுத்து, வாசிப்பு, சினிமா, விளையாட்டு, நீச்சல், படகோட்டுதல், பனிச்சறுக்கல், சுற்றுலா, ஒன்றுகூடல் என்று மகிழ்வோடு அனுபவிப்பார்கள். எனக்கு வரலாறு சம்பந்தமான இடங்களைப் பார்ப்தில் ஆர்வம் அதிகமிருந்தது. இம்முறை ஒன்ராறியோவில் ஏதாவது ஒரு இடத்திற்குச் செல்ல நினைத்த போது, ஜோர்ஜியன் குடா நிவுக்கு வந்தது. இது, முதற்குடி மக்களின் பாரம்பரிய நிலமாகும். கொரோனா காலத்திற்கு ஏற்றதாகவும், மக்கள் கூடம் குறைவாக இருக்கக் கூடிய இடமாகவும் தெரிவு செய்தேன். கொட்டேஜ்ச் என்று சொல்லப்படுகின்ற, ஏரிக்கரை வீடு ஒன்றை 'பெரிசவுண்ட்' என்ற இடத்தில் வாடகைக்கு எடுத்ததில் நிம்மதியாகத் தங்கக் கூடிய வசதிகள் கிடைத்தன. வீட்டின் பின் பக்க வளவில் காம்பயருக்குத் (campfire) தேவையான வசதிகளைச் செய்திருந்தார்கள். பெரியவளவின் பின்பக்கம் முழுவதும் நீண்டு வளர்ந்த பேச் மரங்கள் (Birch) நிரையாக நின்றன. வசதிகள் அற்ற ஆதி காலத்தில் இந்த மரங்களையும், இதன் பட்டைகளையும், நாரையும் எடுத்துத்தான் முதற்குடி மக்கள் படகுகள் செய்தார்கள்.

இயற்கையின் கொடையாக காலையில் பறவைகளின் இன்னிசையைக் கேட்கவும், அணிலாடும் முன்றல்களைப் பார்க்கவும் முடிந்தது. நீண்ட நாட்களின் பின் இயற்கைச் சூழலை அந்த ஏரிக்கரையில் அனுபவிக்க முடிந்தது. கொரோனா காரணமாக நெடுஞ்சாலைகளில் வாகனங்கள் குறைவு என்பதால், இந்த இடத்திற்கு ரொறன்ரோவில் இருந்து இரண்டு மணி நேரத்தில் செல்ல முடியும். சனநெருக்கம் அற்ற இடம் என்பதால் சுதந்திரமாகத் திரிய முடிந்தது. முகக்கவசம் அணிந்து, மனித இடைவெளியைக் கடைப்பிடித்தோம். ஏரியைச் சுற்றிவர கரையோரங்களில் நிறைய பூங்காக்கள் இருக்கின்றன. பூங்காவின் உள்ளக வீதியின் இரண்டு பக்கமும் உள்ள காணிகளை வாகனத் தரிப்பிடமாக்கி வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். சுற்றுலா வண்டியில் வருபவர்கள் அந்தக் காணிகளில் வண்டியை நிறுத்த வசதிகள் செய்திருக்கின்றார்கள். நாங்கள் சென்ற போது காணிகள் வண்டிகளால் நிரம்பி இருந்தன. மின்சாரம், கேபிள், தண்ணீர், எரிவாயு போன்ற வசதிகள் காணிகளில் கிடைக்கின்றன. வண்டிகளில் படுக்கை வசதிகள் இருப்பதால், குடும்பமாக வரும் பயணிகள் அதிலேயே படுத்தெழும்பு கிறார்கள்.

சிறுவர்களுக்கான பூங்காக்கள், கைக்கிங் என்று சொல்லப்படுகின்ற நடைபவனிக்கு ஏற்ற மாதிரி பாதைகளை அமைத்திருக்கிறார்கள். தினமும் ஒவ்வொரு பூங்காவுக்குச் சென்று நடக்கும் போது, வித்தியாசமான இயற்கைச் சூழலை அனுபவிக்க முடிந்தது. ஓரிடத்தில் நீண்டு உயர்ந்த மரங்களுக்கூடாக நடக்கும் போது, சிகப்பு, அரேஞ், வெள்ளை, மஞ்சள் நிறங்களில் காளான்களை காணமுடிந்தது. இதைவிட மான்கள், மூஸ், கூஸ், ரக்கூன், புளுஜே. லூன், பீவர், கழுகு, கொக்கு, கடல் பருந்து, தவளை, ஆமை, சிப்மங், அணில், மசஸாக ரட்டில்சினெக், நரி, வாத்துக்கள் போன்றவற்றையும் காணமுடிந்தது. அல்பேர்ட்டாவில் கரடிகளைப் பார்த்த அளவுக்கு இங்கே கரடிகளைக் காணமுடிய வில்லை. முள்ளம்பன்றிகள் இப்பகுதியில் நிறைய இருந்தாலும், அவைகளையும் காணக்கிடைக்கவில்லை. 'ரட்டில்சினெக்' என்ற பாம்பு கடித்தால் மனித உயிருக்கு உடனடி ஆபத்தில்லை என்றாலும், அதற்கான மருந்துகள் பெரிசவுண்ட மருத்துவமனையில் தேவையான அளவு வைத்திருக்கிறார்கள். கனடாவிலே அதிகளவு பாம்புக்கடிக்கான மருந்து பாவனையில் இருப்பதும் இந்த மருத்துவமனையில்தான். 'ருவின் பொயின்ஸ் ரெயில்' என்ற இடத்தில் நடக்கும் போது, பாறைகளில் ஏறி இறங்க வேண்டியும் இருக்கும். பாறைகளில் ஏறி இறங்க முடியாதவர்கள் அதைத் தவிர்ப்பது நல்லது. இந்தப் பெரியபாறைகள் சுமார் 1.8 பில்லியன் வருடங்களுக்கு முற்பட்டவை என்று அங்கிருந்த பதாதையில் குறிப்பிடப்பட்டிருந்தது. கில்பியர் என்ற இடத்தில் உள்ள குன்றுகள் பில்லியன் வருடங்களுக்கு முன் இருந்த பெரிய மலைத் தொடரின் எச்சங்களாகும். இந்த மலைத் தொடர் புவியதிர்வு காரணமாக சுமார் 12.5 மைல்களுக்குக் கீழே, நிலத்திற்கு அடியில் தள்ளப்பட்டிருப்பது சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இங்குள்ள பாறைகள் ஏரிதணிணீரால் அரிக்பட்டதால் ஏரிக்கரை மணல் சில இடங்களில் கறுப்பாகவும் (Biotite mica), சில இடங்களில் ஊதா நிறமாகவும் (Almandine) காணப்படுகின்றன.

கனடாவில் பாரம்பரிய பெயரைக் கொண்ட இடங்களில் ஜோர்ஜியன் குடாவும் ஒன்றாக இருக்கின்றது. ஐரோப்பியரின் வருகைதான் இந்த இடம் புகழ் பெறுவதற்குக் காரணமாகியது. கனடாவில் உள்ள ஐம் பெரும் வாவிகளில் ஒன்றான ஹிரான் வாவி 206 மைல் நீளமானதாகவும், 183 மைல் அகலமானதாகவும் இருக்கின்றது. இந்த வாவியில் உள்ள ஜோர்ஜியன் குடா உலகில் உள்ள பெரிய நன்னீர் குடாக்களில் ஒன்றாக இருக்கின்றது. 23,000 சதுர மைல்கள் பரப்பளவைக் கொண்ட ஹிரான் வாவி ஐம்பெரும்வாவிகளில் இரண்டாவது பெரிய வாவியாகவும், உலகின் ஐந்தாவது பெரிய நன்னீர் வாவியாகவும் இருக்கின்றது. இந்த ஜோர்ஜியன் குடா 120 மைல் நீளமானதாகவும், 50 மைல் அகலமாகவும் இருக்

தொடர்தல் 40ம் பக்கம்

30,000 தீவுகளைக்...

39ம் பக்கத் தொடர்ச்சி...

கின்றது. கரையோரங்கள் 15 அடி ஆழ மாகவும், நடுவே சராசரி 100 தொடக்கம் 350 அடி வரை ஆழமாகவும் இருக்கின்றது. ஆகக்ககூடிய ஆழமாக பிரதான தொடு வாய்க்கு அருகே 540 அடியாக இருக் கின்றது. இந்தக்குடா 3,827 மைல்கள் நீள மான ஏரிக்கரையைக் கொண்டது. ஏரிக் கரைகளில் வேடிக்கையாக மீன் பிடிக் கும் வசதிகளும் உண்டு. நீந்துவதற்கு ஏற்ற வசதிகளையும் செய்திருக்கின்றார் நம்பமுடிந்தது. உலகிலே அதிக தீவுக் கூட்டங்களைக் கொண்ட நன்னீரால் சூழப் பட்ட இந்த இடம் ஒன்ராறியோவில் இருப் பது எமக்கும் பெருமைதான்!

ஐலண்ட் குயின் குறூஸ் கப்பலில் சுற்றுலா சென்ற போது பல தீவுகளை ஏரியில் காணக்கூடியதாக இருந்தது. ஒவ்வொரு தீவும் கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந் தவை. இந்தத் தீவுகள் தனியார்களுக்குச் சொந்தமானதாகவோ அல்லது குத்தகைக்கு எடுத்ததாகவோ இருக்கின்றன. சில தீவு களையும், உணவகம், கழிவறை போன்ற வசதிகளையும் கொண்டது. ஒன்ராறியோ வில் குறூஸ் சேவையில் ஈடுபடும் கப்பல் களில் இதுதான் பெரியது. இதைவிட வானத்தில் இருந்து ஏரியின் அழகை ரசிக்க விரும்பினால், ஜோர்ஜியன்பே எயர் வேய்ஸ் விமானங்கள் மூலமும் வானத் தில் பறந்து ஏரியின் இயற்கை அழகை ரசிக்கலாம்.

பயணத்தின் போது ஓரிடத்தில் கருங்கற் பாறைகள் இரண்டு பக்கமும் சுவர் போல இருக்க, ஒடுங்கிய அந்த நீர்ப்பரப்பில் கப் பல் மெதுவாகக் கடந்து சென்றதை ரசிக்க முடிந்தது. ரோஸ்பொயின்ட் என்ற இடத் தில் கப்பல் செல்வதற்குக் திறந்து வழி விட்ட பெரிஐலண்டைத் தொடுக்கும் பாலம் ஆச்சரியத்தைத் தந்தது. 1888 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பழைய பாலம் திருத்தி அமைக் கப்பட்டு 1912 ஆம் ஆண்டு புதிய பாலம் பாவனைக்கு வந்தது. தொடக்கத்தில் தொ டர்வண்டிப் பாதையாக இருந்த இந்தப் பாலம், 1989 ஆம் ஆண்டு தொடர்வண்டிப் பாதை மூடப்பட்டதால், தற்போது வாகனப் போக்குவரத்திற்குப் பாவிக்கப்படுகின்றது. இந்தத் தீவுடனான தரைவழிப் பாதை இது ஒன்றுதான். சுமார் 19,000 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்ட, இந்த தீவு முதற்குடி மக்களான வாசயுகெசிங் முதற்குடி இனத் தவரின் ரிசேவ் பகுதியாகும். ஏரிக்கரையின் பல இடங்களில் உள்ள பாறைகளில் அவர்களின் இருப்பிடத்தின் அடையாளத் தை நினைவுபடுத்தும் நுக்சொக் (Inuksuk) என்று அழைக்கப்படும் கற்கள் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது. கனடாவின் வடபகுதியில் மட்டுமல்ல, ஆர்டிக்வட்டம் என்று அழைக் கப்படும் பபின்ஐலண்ட், அலஸ்கா, கிறீன்-லாந்து ஆகிய இடங்களிலும் பழங்குடி மக்களின் இப்படியான அடையாளங்க ளைக் காணமுடியும். கனடிய எழுத்தாளர் களான writer Waubgeshig Rice and writer Basil Johnston ஆகியோர் இந்த இடத் தைச் சேர்ந்தவர்கள்.

பெரிஐலண்ட் 78 மைல் நீளமான ஏரிக் கரையைக் கொண்டது. பயணத்தின் போது ஸ்ரொக்கி சென்ரர், கரையோரப் பாதுகாவ லரின் தளம், 112 அடி நீளமான ஹோல் இன்த வோல், திறிமைல் லைட்ஹவுஸ், கில்பியர் புறவின்சல் பார்க், ரோஸ்ஐ-லண்ட், சான்டிஐலண்ட், ஒட்டர் ஐலண்ட், பியேர்ஸ்ஹெட், அமென்டா ஐலண்ட், இச-பெலா ஐலண்ட், டெவில் எல்போ போன்ற பல இடங்களைக் கடந்து சுற்றுலாக் கப் பல் பயணிக்கின்றது. ஸ்ரொக்கி சென்ர ரில் பல வகையான பொழுது போக்கு நிகழ்ச்சிகள் உண்டு. பியேர்ஸ்ஹெட் என்ற இடத்தில் கருங்கரடிகளைக் காணமுடியும். பைமைல் நரோ என்ற இடத்தைக் கடக் கும் போது கடல் பருந்துகளின் கூடு களைக்காண முடிந்தது. இந்தப் பருந்து கள் வசந்த காலத்தில் இடம் பெயர்ந்து இங்கு வந்து முட்டையிட்டு யூன் மதத் தில் குஞ்சுகளைப் பொரிக்கின்றன.

கில்பியர் மாகாண பூங்கா பிரபலமானது. அழகான ஏரிக்கரையைக் கொண்டது. இங்கே சிகப்பு வெள்ளை நிறமடிக்ப்பட்ட கலங்கரை விளக்கம் ஒன்று உண்டு. 'காம்ப்' வசதிகளும் உண்டு. கூடாரம் அமைத்தோ அல்லது வாகனங்களிலோ தங்க வசதி செய்திருக்கிறார்கள். முன்கூட்டியே பதிவது நல்லது. பூங்கா ஆங்காங்கே பெரிய கருங்கல் குன்றுகளையும் கொண்டது. நடப்பதற்கு ஏற்ற வகையில் பாதைகளை அமைத்திருக்கிறார்கள். குன்றுகளின் உய ரத்தில் ஏறி நின்று ஏரியின் அழகை ரசிக்க முடிந்தது. அழகிய ஏரிக்கரையைப் புகைப் படங்களாகவும் எடுத்துக் கொண்டேன். மறுநாள் கப்பலில் செல்லும் போது இந் தப் பூங்காவைக் கப்பலில் இருந்தும் பார்க்க முடிந்தது. கரையோரங்களில் நீர் விளையாட்டுகளில் பலர் ஈடுபட்டிருந்தனர். கப்பலில் சென்றவர்களுக்குக் கப்பலுக்கு அருகே வந்து கையசைத்து மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். இதைக்கடந்து வாபுனோ தொடுவாயில் பயணித்தோம். எப்படி அந் தப் பெயர் வந்தது என்று அந்த இடத் தில் பயணிக்கும் போது ஒலிபெருக்கியில் அறிவித்தார்கள். 1879 ஆம் ஆண்டு மிகக் கடுமையாக பனிப்புயல் வீசிய போது, வாபுனோ என்ற 1867 ஆம் ஆண்டு கட்டப் பட்ட நீராவிக்கப்பல் கொலிங்வூட்டில் இருந்து பெரிசவுண்ட் என்ற இடத்திற்குப் பயணித்த போது இந்த ஏரியில் மூழ்கிப் போனது. அதன் நினைவாக அந்தக் கப் பல் மூழ்கிய இடத்தை வாபுனோதொடு வாய் என்று அழைக்கிறார்கள். இதில் பயணித்த 24 பேரும் கப்பலோடு மூழ்கிப் போனார்கள். இதைப்பற்றி 100 ஆண்டு களின் பின் 'நோர்த்ஸ்ரார்' என்ற ஆங்கிலப் பத்திரிகை நவெம்பர் 22 ஆம் திகதி 1979 ஆண்டு கட்டுரை ஒன்று வரைந்து நினைவு கூர்ந்திருந்தது. விபத்தில் மரண மானவர்களின் பெயர்களையும் ஆவணப் படுத்தும் நோக்கத்தோடு அட்டவனைப் படுத்தி இருந்தது.

இதே போல, 1882 ஆம் ஆண்டு செப் ரெம்பர் 14 ஆம் திகதி 'ஸ்ரீமர் ஏசியா' என்ற கப்பலும் இந்த ஏரியில் மூழ்கிய போது பலர் மரணமாகினர். இந்த ஏரியில் சுமார் 1000க்கு மேற்பட்ட பெரியபடகு களும், கப்பல்களும் இதுவரை மூழ்கியி ருக்கின்றன. 1913 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் திகதி மிகப் பலமான புயற் காற்று 90 மைல் வேகத்தில் இப்பகுதி யில் வீசிய போது, சுமார் 30 அடிகள் வரை அலைகள் எழுந்ததாகக் குறிப்பு கள் தெரிவிக்கின்றன. பதினாறு மணி நேரம் நீடித்த புயற்காற்றால் ஏரியில் பயணித்த 10 கப்பல்கள் மூழ்கியும் 235 பேர் மரணமாகியும் போயினர். மூழ்கிய சில படகுகளைத் தற்போது மீட்டு எடுத் திருக்கிறார்கள். தற்காலத்தில் நவீன வசதி கள் கொண்ட படகுகள் இருப்பதால் ஆபத் தில்லை. வாபுனோபீச்சில் கொரோனா பிரச் சனைக்குப் பின் தற்போது லைவ்காட் மீண்டும் கடமையில் ஈடுபடத் தொடங்கி விட்டார்கள்.

கொரோனா வைரஸ்சைச் சாட்டி, பயனுள்ள சுற்றுலா ஒன்றை செய்தது மட்டுமல்ல, அதை உங்களுடன் பகிர்ந்து கொண்ட தில் மனம் நிறைவாக இருக்கின்றது.



கள். வாடகைக்குச் சயிக்கிள், படகுகள் போன்றவை கிடைக்கின்றன. ஒன்ராறியோ வாவியில் உள்ளது போல கலங்கிய தண்ணீர் இல்லாமல், இதிலே தண்ணீர் தெளிவாகவும், குளிப்பதற்கு இதமாகவும் இருக்கின்றது.

ஐரோப்பியர்கள் வந்தபோது, ஐம்பெரும் வாவிகளில் இதைத்தான் முதலில் கண்டார் கள். ஜோர்ஜியன் குடா மிகப் பெரிதாக இருந்ததாலும், மனிற்ருலன் தீவு, புறூஸ் தீபகற்பம் ஆகியன குறுக்கே இருந்த தாலும், இதை தனியாக பிரித்து ஆறா வது வாவி என்று அழைத்தார்கள். முதற் குடி மக்களின் பாரம்பரிய நிலமான இந்த மனிற்ருலன் தீவுதான் உலகத்திலே நன் னீரால் சூழப்பட்ட மிகப் பெரிய தீவாகும். ஐரோப்பியர் வந்து முதற்குடியேறிய இட மும் இதுதான். சுமார் 1400 மேற்பட்ட கருங்கரடிகளின் இருப்பிடமாகவும் இருக் கின்றது. சாம்பல் நிற ஓநாய்களும், மான் களும் உண்டு. எனக்கு ஆச்சரியத்தைத் தந்த விடயம் என்வென்றால் இந்தக் குடா வில் சுமார் 30,000 மேற்பட்ட சிறிய தீவுகள் இருக்கின்றன என்ற செய்திதான் நம்ப முடி யாமல் இருந்தது. ஆனால் ஒன்ராறியோ அரசு இத்தீவுகளை அடையாளம் காண் பதற்காக, ஒவ்வொரு தீவுக்கும் ஒவ்வொரு இலக்கத்தைக் கொடுத்திருப்பதில் இருந்து

களுக்கு முன்னால் சீபிளேன் என்று சொல் லப்படுகின்ற தண்ணீரில் இறங்கி ஏறக் கூடிய சிறிய விமானங்களும் இறங்கு துறையில் நின்றன. பல வகைப்பட்ட பட குகளைக் காணமுடிந்தது. ஒவ்வொரு தீவு களின் இறங்குதுறையில் நின்ற படகுக-ளுமே லட்சக்கணக்கான பெறுமதி வாய்ந்த வை. இச்சந்தர்ப்பத்தில் நாங்கள் பயணித்த ஐலண்ட் குயின் கப்பல் பயணத்தைப் பற்றிச் சிறிது குறிப்பிடலாம் என் நினைக் கின்றேன். 132 அடி நீளமான இந்தக் கப்பல் மூன்று தட்டுகளைக் கொண்டது. ஏரிப் பயணத்திற்காகவே வடிவமைக்கப் பட்ட இந்தக் கப்பலின் மேல்தட்டு திறந் ததாக வானத்தைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. 550 பயணிகள் பயணிக்கக் கூடிய இந்தக் கப்பலின் ஒவ்வொரு தட் டிலும் முன் பக்கத்தில் நின்று ஏரியின் அழகைப் பயணிகள் ரசிக்கக் கூடியதாக வடிவமைக்கப்பட்டிருந்தது. மனித இடை வெளியைக் கடைப்பிடிக்கக்கூடிய வகை யில் போதிய இடைவெளி விட்டு இருக்கை கள் போடப்பட்டிருந்தன. ஆபத்து நேரத் தில் பாவிக்கக்கூடிய உயிர் கவச ஆடை கள் இருக்கைகளுக்கு மேல் உள்ள தட் டில் வைக்கப்பட்டிருந்தன. ஏரியில் பெரிய அலைகள் இல்லாததால் ஆட்டம் போடா மல் கப்பல் அமைதியாகச் சென்றது. இந் தக் கப்பல் பெரிய கண்ணாடி யன்னல்

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான
பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594 Tel: 416-646-3422

உசாத்துணை:

• https://en.wikipedia.org/wiki/Georgian_Bay

kuruaravindan@thaiveedu.com

HOMELIFE HIGHER STANDARDS

Buy or Sell Your Home call me 24-7

Cell: 416 856 6900 Kathir Subramaniam Kathirgamanathan P.Eng. Sales Representative

www.kathirsubramaniam.com

HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090 kathirhomes@gmail.com

With best compliments from

ஞானம்ஸ் ஸ்ரூடியோஸ்

GNANAMS STUDIOS

Since 1987

Digital Prints from 16"x20" to 40"x60"

- Family Portraits
- Children Portraits
- Business Portraits
- Passport & Citizenship Photos
- Classic Weddings
- Arangetram
- Puberty Ceremony

New Location

Bus: 416.750.8118

www.gnanamsstudios.com

Digitally Redefined

2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2 (BRIMLEY & EGLINTON ERA PLAZA NEAR CIBC BANK)

BAYVIEW HOMES DESIGN LTD.

Dream Becomes Reality

Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management

Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml

புதிதாகச் சொத்து வாங்குகின்றீர்களா?

நீங்கள் புதிதாகச் சொத்து வாங்குபவர்களா? அவதானமாக இருங்கள்.

நீங்கள் புதிதாக ஒரு வீட்டையோ,

தொடர்மாடிக் குடியிருப்பையோ வாங்குவதானால்,

'Leaseback' எனப்படும்

குத்தகை உடன்படிக்கையில் கையெழுத்து இடாதீர்கள்.

கனடா வருமானவரித் திணைக்களத்தின் **(Canada Revenue Agency)** புதிய நடைமுறைகளுக்கு அமைய, இந்த உடன்படிக்கையில் கையெழுத்து இட்டுவிட்டால், வரிக்கழிவுகள் உங்களுக்குக் கிடைக்காது. அத்துடன், நீங்கள் கனடா வருமானவரித் திணைக்களத்துக்கு மேலதிகமாக 3,400 டொலர் செலுத்த வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு:

Peter Justin

B.Comm., CGA, CPA

Chartered Professional Accountant

11-1415 Kennedy Road,
Toronto ON M1P2L6

416-321-3100

வீடு வாங்க... விற்க...
உங்கள் பிரதிநிதி

Residential • Commercial • Investment

Rave P. Raveenthiran
Sales Representative
HomeLife/Future Realty Inc. Brokerage

205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8
Dir: 416-567-2462
Tel: 905-201-9977
Fax: 905 201 9229
ravehomes@gmail.com

The spring market started early this year.
Are you thinking of selling?
Opportunity is knocking!
Call me today to get free home evaluation.

GET STAGED
GET SOLD
GET MORE $$$

ATTIC INSULATION

We also do Insulation Removal

Spray Foam Insulation
Attic Walls
Ceiling Garage
Crawl Space

SAVE Heating & Cooling Costs
PREVENT Roof Ice & Mold
Do Your Attic Insulation!!!

Stay Warm in Winter. Be Cool in Summer.

சுப. இரவீந்திரன்
416-939-9353

ENERecon Insulation
416-847-7171
info@eneneconcom / www.eneneconcom

செய்யுள் இலக்கியம் செழித்த கதை

- மாவிலி மைந்தன்
சி. சண்முகராஜா -

இக்காலத்தில் கவிதை என்று அழைக்கப்படும் செய்யுள் காலங்காலமாகப் பல பரிணாம வளர்ச்சிகளைப் பெற்று வந்திருக் கின்றது. பா, பாட்டு, செய்யுள், உரை நடைப் பாட்டு, வசனகவிதை, புதுக்கவிதை என்றவாறெல்லாம் காலத்துக்குக் காலம் பல்வேறு வடிவங்களிலும் பெயர்களிலும் அழைக்கப்பட்டாலும், அடிப்படையில் இவை யாவும் ஒரு பொருளைத்தான் குறிக் கின்றன. சிலர் இவையெல்லாம் கவிதை யை வெளிப்படுத்தும் பல்வேறு கருவிகள் என்பார்கள். வேறு சிலர் செய்யுள் வேறு, கவிதை வேறு, பாட்டு வேறு என்பார்கள். எது எவ்வாறாயினும் கால நீரோட்டத்தில் கவிதை என்பது பல்வேறு வடிவங்களை யும் பல்வேறு பெயர்களையும் பெற்று மாற்றமடைந்து கொண்டிருக்கின்றது என் பதே உண்மை.

செய்யுள் இலக்கியத்தின் தோற்றம்:

மனித இனம் சுமார் ஏழு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியிருக் கலாம் என்பது அறிவியலாளர்களின் கருத்தாகும். எனினும் மனித வரலாற்றில் எப்போது பேச்சுமொழி அல்லது எழுத்து மொழி தோன்றியது என்பதை எவராலும் அறுதியிட்டுக் கூற முடியவில்லை. எழுத்து மொழி தோன்றுவதற்கு முன்னர் பேச்சு மொழி தோன்றியது என்பதை மொழியிய லாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஆதி மொழி பெற்றெடுத்த முதற் பிள்ளை பாட்டுத்தான். எல்லாப் பண்டைய மொழி களிலும் பாட்டே முதலில் தோன்றிய இலக்கியமாகும். இக்காலத்திற் போலவே ஆதி காலத்திலும் ஆட்டத்துடனும் பாட்டு டனும்தான் மக்கள் மகிழ்ச்சியைக் கொண் டாடினார்கள். 'பாட்டில் இருந்துதான் பேச்சு மொழி தோன்றியிருக்க வேண்டும்' என்று மொழியியலாளர் ஆட்டோ எஸ்பர்சன் கூறு வார். அப்பாட்டு ஆரம்பத்தில் சொற்கோ வையும் கருத்துத் தெளிவும் அற்றதாக, வெறும் ஒலியோசையோடு கூடியதாக இருந்து, பின்னர் கருத்துகளை வெளிப் படுத்தும் சொற்களோடு கூடிய பாட்டாக உருவெடுத்திருக்கலாம் என்றும், அதன் பின்னர் சொல், எழுத்து, வாக்கியங்கள் உருவாகி அவற்றிலிருந்து பேச்சு மொழி யும், எழுத்துமொழியும் வளர்ச்சியடைந் திருக்க வேண்டும் என்றும் மொழியிய லாளர்கள் கருதுகின்றார்கள்.

எழுத்து மொழி தோன்றிய பின்னர் இலக் கியம் தோற்றம் பெற்றது. கவிஞன்தான் முதன் முதலாகத் தோன்றிய இலக்கிய வாதி. அவன் பாட்டில், செய்யுளில், கவி தையில்தான் முதன் முதலாக இலக்கியம் படைத்தான். பண்டைய மொழிகள் எல்லா வற்றிலும் பாட்டு எனப்படும் செய்யுள் இலக்கியமே முதலில் தோன்றியுள்ளது. அதுபோலவே உலகச் செம்மொழிகளில் ஒன்றான தமிழிலும் செய்யுள் இலக்கியமே முதலில் தோன்றியது. மக்கள் நாகரிக வளர்ச்சியடைந்த பின்னரே உரைநடை தோன்றியது. மாறாகப் பேச்சு மொழியும், எழுத்து மொழியும் வளர்ச்சியடைந்துவிட்ட பிற்காலத்தில் தோற்றம் பெற்ற புதிய மொழிகளில், பாட்டு தோன்றுவதற்கு முன் னர் உரைநடை தோன்றியிருக்கலாம்.

தமிழில் செய்யுள் இலக்கியத்தின் வளர்ச்சி:

செய்யுள் ஒரு காலத்தில் இலக்கியம், வர லாறு, சமயம், மருத்துவம், நீதி, சோதிடம் முதலிய அனைத்துத் துறைகளினதும் கருத்து வெளிப்பாட்டுக்கு ஒரு கருவியாக இருந்தது. எழுத்துப் பதிவுகளை இலகு வாகச் செய்யமுடியாதிருந்த அக்காலத் தில் செய்திகள், கருத்துப் பரிமாறல்கள் பெரிதும் செய்யுள் வடிவமாக வாய்மொழி யாகவும் செவிவழியாகவுமே எடுத்துச் செல்லப்பட்டன. மனப்பாடம் செய்வதற் கும் நினைவில் வைத்துக் கொள்வதற்கும் செய்யுள் வடிவம் பெரிதும் உறுதுணையாக இருந்தது. ஏட்டுச் சுவடிகளில் எழுத்து களைப் பதியத் தெடங்கிய பின்னர் கூடச் செய்யுள்களே முக்கியத்துவம் பெற்றி ருந்தன.

கால நீரோட்டத்தில் மாற்றம் ஒன்றே மாற்ற மில்லாதது என்பதை உணர்ந்திருந்ததால் புதியன புகுவதைத் தொல்காப்பியமும்

> **காலத்துக்குக் காலம் கவிதையில் புதிய வடிவங்கள் பிறக்கின்றன என்ற நியதிப்படி இன்றைய கவிதை வடிவமாகப் புதுக்கவிதை பிறந்து நின்று நிலைத்து விட்டது உண்மையே.**

அதன் வழிவந்த நன்னூல், யாப்பருங் கலக் காரிகை போன்ற நூல்களும் ஏற்றுக்கொண்டன.

தமிழ் மொழியில் செய்யுள் இலக்கியம் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வளர்ச்சியுற்று உயர்ந்த நிலை யில் இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. எந்த மொழியிலும் முதலில் இலக்கியம்தான் தோன்றும். பின்னரே அதற்கு இலக்கணம் வகுக்கப்படும். இது எந்த மொழிக்கும் பொதுவான இயல்பு. இலக்கணத்தைப் பின்பற்றி இலக்கியம் படைக்கப்படுவது இக்கலத்தினது இயல்பு. 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்' என்ற நன்னூலின் கூற்றுப் படி, தமிழ் மொழியில் இலக்கியம் தோன்றிய பின்னரே அதற்கு இலக்கணம் வகுக்கப்பட்டது. இனிய ஓசையோடு கூடிய செய்யுள்களை இயற்ற வல்ல அறிஞர் கள் செய்யுள் இயற்றுவதைப் பிறருக்குக் கற்பிக்கும் பொருட்டுச் செய்யுள் இயற்றும் முறையைப் போதித்தார்கள். செய்யுள் இயற்றும் முறையைப் புகட்டுவதுதான் யாப்பிலக்கணம். தொல்காப்பியம் கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய நூல். அதற்கு முன்பே தமிழில் இலக்கண நூல்கள் இருந்திருக்கின்றன என்பதற்கான சான்றுகளைத் தொல்காப்பிய நூற்பாக்கள் அறியத் தருகின்றன. எனவே தொல்காப்பி யத்தின் காலத்துக்கும் பல நூற்றாண்டு களுக்கு முன்னரே தமிழில் செய்யுள் இலக்கியம் தோன்றி வளர்ந்திருக்கின்றது என்பதை ஊகிக்க முடிகின்றது. தொல் காப்பியர் காலத்திலேயே நால்வகையான பா வடிவங்களில் பல இலக்கியங்கள் தோன்றியிருந்தன. சில யாப்பிக்கண நூல் களும் வழக்கில் இருந்திருக்கின்றன. அவ்விலக்கியங்களை வைத்தே தொல் காப்பியர் செய்யுளுக்கு இலக்கணமாகப் பொருளதிகாரம் வகுத்தார்.

ஆசிரியப்பா:

தமிழில் முதன் முதலில் அகவல் என்று அழைக்கப்படும் ஆசிரியப்பாவே தோன் றியது. இப்பாவை இசைக்கும்போது அகவலோசையைத் தருவதால் அகவல் எனப் பெயர் பெற்றது. 3 அடி கொண்ட சிறிய அளவிலான பாக்களாகவே முதலில் இயற்றப்பட்டன. பின்னர் புலவர்கள் தமது கருத்துகளைச் சொல்வதற்கு 3 அடி கொண்ட பா போதாது என்று உணர்ந்த போது, ஆசிரியப்பாவை 3 அடிகளிலி ருந்து 1000 அடிவரை பாடலாம் என்ற வரையறையை ஏற்படுத்தினார்கள். 'ஆசிரி யப் பாட்டின் அளவிற் கெல்லை ஆயிர மாகும் இழிபு மூன்றடியே' என்று யாப் பிலக்கணம் சிற்றெல்லையும் பேரெல்லை யும் வகுத்தது. எனினும் ஒருவரும் ஆயிரம் அடி வரைக்கும் அகவற்பாவைப் பாட முனையவில்லை. மாங்குடி மருதனார் என்ற சங்ககாலப் புலவர் மட்டும் 'மதுரைக் காஞ்சி' என்ற நூலை 782 அடிகள் கொண்ட அகவல் பாவில் இயற்றினார். பிற்காலத்தில் மாற்றங்கள் ஏற்பட நேரிட்ட போது நேரிசை ஆசிரியப்பா, இணைக் குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரி யப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என 4 வகை ஆசிரியப்பாக்கள் தோற்றம் பெற்றன. இவற்றுள் நேரிசை ஆசிரி யப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா ஆகிய இரண்டு வடிவங்களையே இக்காலத்து மரபுக்கவிஞர்கள் பெரிதும் பயன்படுத்து கின்றார்கள்.

வஞ்சிப்பா:

ஆசிரியப்பாவுக்கு அடுத்துத் தோன்றியது வஞ்சிப்பா. இது மற்றைய சில பாக்க ளுக்குப் பின்னர் தோன்றியதாகவும் சிலர் கருதுவர். இது அகவற்பாவை ஒருவகை யில் ஒத்ததாகும். ஆரம்பத்தில் இரண்டு சீர்களைக் கொண்ட அடியாக இருந்து பின்னர் மூன்று சீர்கள் கொண்ட அடி களைப் பெற்றும் வரலாயிற்று. வஞ்சி அடிகளை அகவற்பாவில் புகுத்திப் பாடிய கவிஞர்களும் உண்டு. அவை கருத் தோட்டத்திற்கு ஏற்ப அமைந்ததால் அத னைத் தவறாகக் கருதாமல் புலவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

வெண்பா:

மூன்றாவதாகத் தோன்றியது வெண்பா. நான்கு சீர்கள் முதலடியிலும், மூன்று சீர் கள் இரண்டாம் அடியிலும் வரக்கூடியதாக 7 சீர்களைக் கொண்ட இரண்டடிகளாலான குறள் வெண்பா முதலில் தோன்றியது. அறநெறிக் கருத்துகளைக் கூறுவதற்கும், அவற்றை எளிதாக மனப்பாடம் செய் வதற்கும் இப்பா வடிவம் பயன்பட்டது. திருவள்ளுவர் காலத்தில் கூறவரும் கருத்து மாறுபடாதிருப்பதற்காகக் குறள் வெண்பா இயற்றுவதில் சில விதிவிலக்குகளைக் கடைப்பிடித்தனர் என்பதைத் திருக்குறள் வாயிலாக அறிய முடிகிறது. வழியெதுகை இருந்தால் அடியெதுகை தேவையில்லை யென்பது அவற்றுள் ஒன்று என்பதை எடுத்துக்காட்டலாம். திருவள்ளுவர் குறள் வெண்பா இயற்றுவதில் ஒப்பரும் மிக்காரு மின்றி விளங்கினார். அமைப்பிலும் கருத்தி லும் சிறந்தவகையில் குறள் வெண்பா வில் அவரால் ஆக்கப்பட்ட திருக்குறள் உலகப் பொதுமறையாகப் என்றென்றும் போற்றப்பட்டு வருவது நாம் அறிந்ததே.

காலப்போக்கில் இரண்டு அடிகளுள் கருத் துகளைப் புகுத்துவது கடினமாக இருக் கவே, மூன்றடி கொண்ட சிந்தியல் வெண் பாவும், பின்னர் இரண்டு குறள் வெண்பாக் களை இணைத்து நாலடி வெண்பாவும் இயற்றும் முறை தோன்றிற்று. இவ்வாறு குறள் வெண்பாவின் தோற்றத்திற்குப் பின்னர் நாலடிகள் கொண்ட நேரிசை வெண்பாவும், இன்னிசை வெண்பாவும் தோன்றின. தமது கருத்துகளை மிகுதியாக வெளிப்படுத்துவதற்கு நாலடி வெண்பாக் களும் போதுமானவையாக இல்லை என்று உணர்ந்தபோது நாலடிக்குமேல் 12 அடி வரையில் அமைந்த பஃறொடை வெண் பாக்கள் தோன்றின. இதுவும் கருத்து மிகுதிக்குப் போதுமானதாக இல்லாத தைக் கண்ட கவிஞர்கள் 12 அடிகளுக்கு மேலே எல்லை வரையறையற்ற அடிகள் கொண்ட கலிவெண்பாவை உண்டாக்கினர். சிவபுராணம் கலிவெண்பாவால் அமைந் திருப்பது குறிப்பிடத்தக்கது. வெண்பாவின் ஈற்றடி மூன்று சீர்களில் இருக்கும்போது ஓசை இனியதாக அமையும் என்பதால் எல்லாவகை வெண்பாக்களும் மூன்று சீர் களால் முடியவேண்டும் என்றும் விதி வகுக் கப்பட்டது.

கலிப்பா:

அடுத்ததாகத் துள்ளலோசையுடைய கலிப் பா என்னும் ஒருவகைப் பா தோன்றியது. அது ஒத்தாழிசைக் கலிப்பா, வெண்கலிப் பா, கொச்சகக் கலிப்பா, உறழ் கலிப்பா என நான்கு வகையாக உருவெடுத்தது. மேலும் அவை ஒவ்வொன்றிலிருந்தும் வேறு வகைக் கலிப்பாக்களும் தோன்றின. எட்டுத் தொகைகளுள் ஒன்றான 'கற்றார் ஏத்தும் கலி' எனப்போற்றப்படும் கலித்தொகைப் பாடல்கள் கலிப்பா வகையைச் சார்ந்த வை. இனிய ஓசையுடையவை. பிற்காலத் தில் இவை வழக்கொழிந்தாலும், இக்கால மரபுக் கவிஞர்கள் கொச்சகக் கலிப்பா வடிவத்தைப் பயன்படுத்தி இனிய ஓசை யுடைய கவிதைகளைப் புனைந்து வரு கின்றார்கள்.

பரிபாடல்:

இசைப்பாவாக அமைக்கும் பொருட்டு சங்க காலத்தின் இறுதியில் பரிபாடல் என்ற பா வகை தோன்றியது. இது ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா ஆகிய நான்கையும் சேர்த்துக் கதம்பமாகக் கட்டப் பட்ட இசைப்பாவாகும். இதற்கு இசை வகுத்தவர்களும் உண்டு. இக்காலத்து இசைப் பாடல்கள் போலவே புலவர் ஒருவர் இப்பாடலை இயற்றினால் இசைப் புலவர் ஒருவர் இதற்கு இசை அமைப் பார். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பரிபாடல் இவ்வகைப் பாக்களால் அமைந் ததாகும். இப்பாடல் சங்ககாலத்துக்குப்

தொடர்தல் 43ம் பக்கம்

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான
பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594 Tel: 416-646-3422

செய்யுள் இலக்கியம்...

42ம் பக்கத் தொடர்ச்சி...

பின்னர் வழக்கொழிந்து விட்டது. இவ்வாறு சங்ககாலத்தில் ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா ஆகிய பா வகைகள் தோன்றி வளர்ந்தன. தொல்காப்பிய மும் இந்நால்வகைப் பாக்களுக்கும் இலக்கணம் வகுத்துரைக்கின்றது.

பாவினங்கள்:

சங்கம் மருவிய பிற்காலத்தில் நான்கு வகைப் பாக்கள் ஒவ்வொன்றுக்கும் அவற்றின் இலக்கணங்களிலிருந்து சிறிது வேறுபாடு கொண்டவையாகத் தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூன்றுவகைப் பாவினங்கள் தோன்றின. அவற்றுள் விருத்தம் இக்காலக் கவிஞர்களிடையேயும் பிரபல்யமாகிப் பெருவழக்கிலுள்ளதாகி விட்டது. பாக்களில் ஒரு அடிக்கு நான்கு சீர்கள் அமைவதே அளவாகவும், அழகாகவும் இருக்கும் என்பதால் நான்கு சீர்கள் கொண்ட அடியையே 'அளவடி' என்று பாக்களில் பயன்படுத்தினர். 'நாற்சீர் கொண்டது அடியெனப்படுமே' என்றார் தொல்காப்பியர். நான்கு சீர்களைக் கொண்ட அளவடி, மிகுதியாகக் கருத்துகளைக் கூறுவதற்குப் போதாமல் இருப்பதாகச் சிலர் கருதியதால் 5 சீர்களைக் கொண்ட அடிகளையும் 6 சீர்களைக் கொண்ட அடிகளையும் புகுத்தினர். கி. பி. 2ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தில் அறுசீர் விருத்தம் இடம் பெறலாயிற்று. பிற்காலத்தில் எழுசீர், எண்சீர், பன்னிருசீர், பதினான்கு சீர் என்று 32 சீர்கள் வரை விருத்தத்தின் சீர் எண்ணிக்கை நீண்டது. இராமலிங்க அடிகளார் 32 சீர்களுடன் அடிகள் நான்கு உள்ள விருத்தம் பாடியுள்ளார். கி. பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாயன்மார்கள், மற்றும் ஆழ்வார்கள் பாடல்களிலும் 9ஆம் நூற்றாண்டினரான மாணிக்கவாசகரின் பாடல்களிலும் விருத்தமே ஆட்சி செலுத்தியது. அதே காலத்தில் வாழ்ந்த சீவக சிந்தாமணி இயற்றிய திருத்தக்கதேவரே விருத்தங்களால் முதலில் காப்பியம் இயற்றிப் புகழ் பெற்றவர். பின்னர் 12ஆம் நூற்றண்டில் வாழ்ந்த கவிச்சக்கரவர்த்தியான கம்பர் 'விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்' என்று புகழும்படியாகப் பல வகையான விருத்தங்களால் கம்பராமாயணத்தில் 10,000க்கும் மேற்பட்ட பாடல்களை இயற்றிப் புகழ் பெற்றார்.

புதுவகை இசைப்பாக்கள்:

கி.பி. 14ஆம், 15ஆம் நூற்றாண்டுகளில் பாமரமக்களும் படித்துப் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் பதினெண் சித்தர்களால் சிந்துவகைப் பாடல்கள் இயற்றப்பட்டன. அவை மக்கள் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தன. கதாகாலட்சேபங்களுக்கும், நாடகங்களுக்கும் பயன்படும் வகையில் கீர்த்தனைப்பாடல்கள் 18ஆம் நூற்றாண்டில் தோன்றின. நந்தனார் கீர்த்தனை இயற்றிய கோபால கிருஷ்ண பாரதியார் போன்ற இசையறிஞர்கள் இத்தகைய இசைப் பாடல்கள் இயற்றினார்கள். 20ஆம் நூற்றாண்டில், மகாகவி பாரதியார், பாரதிதாசன் போன்றோர் பழைய பா, பாவின வடிவங்களில் மக்களைச் சென்றடையும் வகையில் எளிமையையும், புதுமையையும் கொண்ட பாடல்களைப் புகுத்தினார்கள். பாரதியார் சிந்து, கும்மி, கண்ணி, கீர்த்தனை போன்ற புதிய இசைப்பாடல் வகைகளைப் பெரிதும் பயன்படுத்தினார். பாரதியாரால் சிந்து வகைப்பாடல்களுக்குப் புத்தயிர் அளிக்கப்பட்டதால் அவை கவிதையாக மதிக்கப்படும் பெருமையைப் பெற்றன. இவையனைத்துமே ஏதோ ஒரு வகையில் சீர், தளை, அடி, தொடை கொண்டு யாப்பிலக்கணத்துடன் கூடிய மரபுக் கவிதைகளாகவே காணப்படுகின்றன.

புதுக்கவிதையின் தோற்றம்:

காலவேகத்தில் மேலை நாடுகளில் கவிதை இலக்கியத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் தமிழ்க் கவிதை இலக்கியத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தின. ஆரம்பத்தில் யாப்பு முறைகளுக்குக் கட்டுப்படாமல் கவிதை உணர்வுகளுக்குச் சுதந்திரமான எழுத்து உருவம் கொடுக்கும் இப்படைப்பு முயற்சி வசன கவிதையாகப் படைக்கப்பட்டது. பின்னர் யாப்பில்லாக் கவிதை, இலகு கவிதை, கட்டிலடங்காக் கவிதை போன்ற பெயர்களைத் தாங்கிவந்த இக்கவிதைப் படைப்புகளுக்கு 1960களில் புதுக்கவிதை என்று பெயரிடப்பட்டது. 'New Poetry, Modern poetry' என்று ஆங்கிலத்தில் கூறப்படுவதைத் தமிழில் புதுக்கவிதை என்று அழைக்கத் தொடங்கினார்கள். வால்ட் விட்மன் என்ற அமெரிக்கக் கவிஞர் யாப்பைக் கடந்து இயற்றிய (Leaves of Grass) புல்லிதழ் என்ற கவிதை நூலின் தாக்கத்தால் மகாகவி பாரதியார் 'காட்சிகள்' என்கின்ற வசன கவிதையை இயற்றினார். பாரதியாரின் காலத்துக்கு முன்பு இருந்த கவிதைகளிலிருந்து அவரின் கவிதை ஓரளவு மாறுபட்டதால்,

'சுவை புதிது, பொருள் புதிது,
- வளம்புதிது
சொற்புதிது, சோதிமிக்க நவகவிதை'

என்று தனது எல்லாக் கவிதைகளையும் அவர் புதுக்கவிதை என்றே குறிப்பிடுகின்றார். இக்காரணங்களால் பாரதியார் புதுக்கவிதையின் முன்னோடி என்று அழைக்கப்படுகின்றார். தமிழில் பாரதிக்குப் பின் நூற்றுக்கணக்கான புதுக்கவிஞர்கள் தோன்றி விட்டார்கள். புதுக்கவிதையின் முதல் முயற்சியாளராகக் கவிஞர் ந. பிச்சமூர்த்தி குறிப்பிடப்படுகின்றார். புதுக்கவிதை தோன்றிய காலத்தில் புதுக்கவிதையாளர்களுக்கும் மரபுக்கவிதையாளர்களுக்கும் இடையே பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் எழுந்தன. எனினும் காலத்துக்குக் காலம் கவிதையில் புதிய வடிவங்கள் பிறக்கின்றன என்ற நியதிப்படி இன்றைய கவிதை வடிவமாகப் புதுக்கவிதை பிறந்து நின்று நிலைத்து விட்டது உண்மையே. எனினும் புதுக்கவிதையாளர்களிடையேயும் யாப்பிலக்கணத்தை நன்கறிந்து மரபுக் கவிதையில் கால்பதித்துப் புதுக்கவிதையில் சிறகுவிரித்த கவிஞர்கள்தான் பெரிதும் புகழ் பெற்றிருக்கின்றார்கள். தமிழ்க் கவிதை வடிவம் தனது பரிணாம வளர்ச்சியில் செய்யுள் நிலையிலிருந்து தற்போது வசன கவிதை நிலைக்கு வந்து விட்டது. எதிர் காலத்தில் வேறொரு வடிவம் எடுக்கலாம்.

இவ்வாறாகப் பழந்தமிழ் இலக்கியத்தில் பா, பாட்டு, செய்யுள் என்றும், பின்னர் பாவினங்கள் என்றும், அதன் பின்னர் இசைப்பாக்கள் என்றும், இன்று புதுக்கவிதை என்றும் கவிதை இலக்கியம், பல பரிணாமங்களைப் பெற்று மாற்றமடைந்து வளர்ச்சியடைந்த வரலாற்றை மேலோட்டமாகப் பார்த்தோம். ஆழமாக நோக்கினால் இன்னும் சுவையான தகவல்களை நாம் அறியமுடியும். ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா போன்ற பாவகைகளும், தாழிசை, துறை, விருத்தம் போன்ற பாவினங்களும், இசைப்பாக்களும் காலமாற்றத்தில் முற்றாக அழிந்து விட வில்லை. அவை தற்காலத்திலும் பல மரபுக் கவிஞர்களால் மக்களைச் சென்றடையும் வண்ணம் எளிமையாக இயற்றப்படுகின்றன. இதனை நோக்கும்போது தமிழர்தம் பண்டைய மரபு எக்காலத்துக்கும் ஏற்ற செழுமையை உடையது என்பதை உணர முடிகிறது. அந்த மரபினைத் தொடர்ச்சியாகப் பேணிப் பாதுகாப்பதற்காகப் பெருமுயற்சியுடன் செயலாற்றி வரும் தமிழறிஞர்களது ஆழ்ந்த பொறுப்புணர்ச்சியும் பாராட்டத் தக்கதாகும்.

shanmugarajah@thaiveedu.com

DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION

Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills

Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
vasuki@vdlaw.ca

Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
devadas@vdlaw.ca

1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Next to RBC @ Kennedy & Ellesmere

Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

இலெமூறியா அல்லது குமரிக்கண்டம்

- அ. கணபதிப்பிள்ளை -

குமரிக்கண்டத்தின் தென்பகுதியும் மேற்குப் பகுதியும் படிப் படியாகக் கடலுள் மறைந்து போக எஞ்சிய பகுதியாகக் காணப்படுவது இலங்கையும் இந்துசமுத்திரத் தீவுத் திடல்களுமாகும். குமரிக்கண்டம் முழுவதும் கடலுள் மூழ்கிவிடாது சிலதீவுகள் மட்டும் இந்து சமுத்திரத்தில் தனித்து விடப்பட்டமைக்குக் காரணம் என்னவாக இருக்கமுடியும் என்ற வினாவொன்று நம் மிடையே எழுவது நியாயமானதே. அதே போல தென்குமரிக்கண்டமானது கடல டியுட் புதைந்துவிட்டதா அல்லது இன்ன மும் கடலடித்தள மேடையில் காணப் படுகிறதா என்பதனையும் ஆய்வுக்குட் படுத்துவது அவசியமாகிறது.

புவிமேலோட்டு நகர்வு (Plate tectonics) இலெமூரியா கண்டமிருந்ததனை பொய் யாக்கிவிட்டதாகப் பலர் எண்ணிக்கொண் டிருக்கிறார்கள். ஆனால், அதுவே இலெ மூரியாவுக்கு ஆதாரமாக மாறிவருவதனை ஆய்வுகள் தெளிவு படுத்தி வருகின்றன. புவிமேலோட்டு மண்டலத்தினைக் கற் கோளம் (Lithosphere) எனப் பூகோளத் தின் ஒருபாகமாக நோக்கலாம்.

புவியுட்பாகத்தினை உட்கோளவகம், வெ ளிக்கோளவகம், உள்மான்ரில், வெளிமான் ரில் என்பதாகவும் மேலோட்டினை (Earth Crust) சி-மா கீழ்ப்படை மேலோடு, சி-அல் மேற்படைமேலோடு என இரண்டாகப் பகுக்

பகுதி: 5

கலாம். சி-மா: சிலிக்கன் + மங்கனீசியம் கலந்தது. சி-அல்: சிலிக்கன் + அலுமீனியம் கலந்தது. சமுத்திரம்சார் மேலோடு 5-10 கி மீ தடிப்பானது. கண்டம் சார்ந்த மே லோடு மலைகளில் 30-35 கி.மீ தடிப் பானது மலை வேர்கள் காணப்படுவது இத்தடிப்புக்குக் காரணமாகிறது. புவியின் மேலேடுதான் நகர்தலுக்குட்பட்ட பகுதியாக இருந்து வருகிறது.

பூமியின் மையப்பகுதி அடர்த்தி மிகுந்த இறுக்கமான இரும்பாலான பகுதியாக இருந்தது. அடுத்தபடையான மான்ரில் திரவ வடிவில் காணப்பட்டது. இதனை உள்மான்ரில், வெளிமான்ரில் என இரண் டாகப் பகுக்கலாம். வெளிமான்ரில் மீதான மேலோடானது மான்ரிலில் அமிழ்ந்து போ கக்கூடியது அல்லது வழுக்கிக் கொண்டு செல்லக்கூடியது. இத்தகைய அமைப்பே மேலோட்டு நகர்வுக்கு அடிப்படையாகிறது.

பூமி தோன்றிய 4,540 மில்லியன் ஆண்டு களில் சுமார் 3,500 அல்லது 3,300 மில் லியன் ஆண்டளவில்தான் வெளிமான்ரில் மீதான புவிமேலோட்டில் வெடிப்புகள் தோற் றம் பெற்றன. இத்தகைய மேலோட்டு வெடிப்புகளினால்தான் மலைகள், ஆழ் கடல்கள், நிலநடுக்கம், எரிமலைகள் என் பன உருவாகுவதுடன் ஒவ்வொரு செக்க னுக்கும் புதுநிலம் உருவாகிக் கொண்டி ருப்பதாக ஆய்வுகள் தெளிவுபடுத்துகின் றன. குறிப்பிட்டுச் சொல்வதாயின் எரிமலை களால் புதிய புவியோடு உருவாகிக் கொண்டிருக்கிறது.

குயுமிங் செங் (Quiming Cherng) என்பவர் அடுத்த 1,450 மில்லியன் வருடங்களுக்கு மட்டுமே பூமியில் இத்தகைய நிகழ்வுகளை அனுபவிக்கமுடியும் என்கிறார். அதன் பின்னர் பூமியானது குளிர்ந்து விடுவத னால் வெள்ளிக்கிரகம் போல் பூமி மாறி விடும் எனக் கென் ஹட்நட், றொபேட் ஸ்ரேண் (Ken Hutnut and Robert Stern) போன்றோர் குறிப்பிட்டிருந்தனர். முடிவில் புவியானது புதன் கிரகம் போல் இறந்த கோளமாக மாறிவிடும் எனப் பயமுறுத்து கின்றனர்.

பூமியில் 15 பெரிய புவிமேலோட்டுத் தகடு களிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இத்தகட்டு வெடிப்புகள் உருவாகுவதற்கு முன்னர் கற்கோளமானது முழுவதுமாகக் கடலால் மூடப்பட்டிருந்ததாகச் சொல்லப் படுகிறது. இன்று காணப்படும் உயர்தப் பட்ட நிலப்பகுதிகளில் கடல்வாழ் உயிரி னங்களது புதையுயிர்த் தடங்கள் காணப் படுவதற்கான சான்றாகவும் இதனைக் குறிப் பிடலாம். இத்தகைய வெடிப்புகளால் உரு வாக்கப்பட்ட மேலோட்டுக் கண்டமானது நகரத்தொடங்கியதாகச் சொல்லப்பட்டது. இத்தகைய கண்டத்தினை பஞ்சியா (Pan gea) எனக் குறிப்பிட்டனர்.

புவியோட்டு வெடிப்பு நிகழ்ந்த காலம் முதலாக எத்தனையோ பஞ்சியாக்கள் இணைந்தும் பிரிந்தும் நகர்ந்து கொண்டி ருந்ததாகச் சொல்லப்படுகிறது. கிரேக்க மொழியில் பஞ்சியா என்பது முழுநிலத் தொகுதி என்பதாகப் பொருள்படுகிறது. ஆய்வளர்களது கணிப்பின்படி இதுவரை யிருந்த ஏழு முழுநிலத் தொகுதியில் பஞ் சியா இறுதியாகக் காணப்பட்டு இன்றைய கண்டங்களாகப் பரவியுள்ளது என்பது தான் முடிவாகவுள்ளது.

கண்டங்கள் வருடம் ஒன்றுக்கு 2.5 முதல் 5 சென்ரி மீற்றர் (1-2 அங்குலம் - சில பகுதிகளில் 5 அங்குலம் வரை காணப் பட்டதாகக் குறிப்பிடுவர்) தூரம் நகர்ந்து கொண்டிருப்பதாக ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன. கண்டநகர்வு எடுகோளி னை முதலில் 1596ல் முன்வைத்தவர் ஏப் பிரகாம் ஓட்டீலியஸ் (Abraham Ortelius) ஆகும். இதனை முழுமையாக 1912ல் வெளியுலகுக்கு அறிமுகப்படுத்தியவர் அல்- பிறட் வெஹினராகும் (Alfred Wegener) இந்தக் கருது கோளை மறுதலித்த ஆதர் ஹோம்ஸ் (Arthur Holms) மான்ரில் மேற் காவுகை என்பதாக கண்டவாக்கத்தினைக் குறிப்பிட்டிருந்தார். இன்றைய கண்டங் களின் பௌதிக ரீதியிலான (உருவவியல்) பொருந்தக்கூடிய பாங்கும் பாறையியல் மற்றும் வாழ்ந்த உயிரின ஆதாரங்களும் இக்கோட்பாட்டுக்கு வலுச் சேர்த்தனவாக இருந்ததுடன் புவியோட்டு நகர்வும் வலு வான ஆதாரமாக அமைந்துவிட்டது.

பஞ்சியா என்ற பெருங்கண்டமானது கிழக் கில் பந்தலாசன் என்ற பெருஞ் சமுத்தி ரத்தை (Panthalassan Ocean) எல்லையாகக் கொண்டிருந்தது. 250 மில்லியன் வருடத் தில் புவியின் 70 சதவீத மேற்பரப்பை இச்சமுத்திரம் உள்ளடக்கியிருந்தது. நடு உயிரின யுகத்தின் றையாசிக் (Triassic) காலத்தின் முடிவில் 206 மில்லியன் வரு டத்தில் வடக்கே அங்காராலாந்து தெற்கே கொண்டுவானாலாந்து என இருபெருங் கண்டங்களாகப் பஞ்சியா பிரிந்தது. நடுவே ரெதிஸ் என்ற கடல் உருவாக்கம் பெற்றது.

யுராசிக் (Jurassic) கிறிரேசியஸ் (Creta- ceous) ஆகிய காலப்பகுதிகளில் 206 முதல் 65 மில்லியன் ஆண்டுகளுக்கிடை யில் பெருப்பாலான கண்டங்கள் ஓரளவு தனியாக்கப்பட்ட நிலையில் காட்சியளித் தன. மூன்றாவது காலமான புதிய உயிரி னக்காலத்தின் தோற்றத்துக்கு இக்கண்ட நகர்வுகள் உதவினாலும் இடைஉயிரின யுகத்தில் ஏற்பட்டதாகச் சொல்லப்படும் வானக்கல் மோதுகை அல்லது புவிவெ டிப்பால் ஏற்பட்ட தொடர் வளிமண்டல இருளாக்கமானது அக்கால உயிரினங் களை அழித்துப் புதுஉயிரின யுகத்துக்கு வழிவிட்டதாக விஞ்ஞானிகளிடையே பல கருத்துக்கள் நிலவி வருகின்றன.

புவிமேலோட்டத் தகடுகளின் நகரும் பாங் கினைக்கொண்டு ஒருங்கல் (Convergent), கிடைக்காவுகை (Divergent), சமாந்தரப் பிளவுகள் மடிப்புகள் (transform of plate) என மூன்றாகப் பாகுபாடு செய்யப்படும். இரண்டு தகடுகள் மோதுவதனை ஒருங் கலாகக் கொண்டு நிலம் உயர்த்தபடுவ தனைக் காணலாம் அதன்பொழுது ஒரு தகடு உயர்த்தப்பட மற்றைய தகடானது குமைதலாகக் (Subduction) கீழே சென்று விடுகிறது. இவ்வாறான குமைதல் நீண்ட வலயமாகவும் காணப்படும். குமைதல் பகுதிகளை அண்மித்ததாகப் பிளவுகளும் மடிப்புகளும் அல்லது ஆழ்கடல் அகழி களும் காணப்படும். 65 முதல் 45 மில்லி யன் ஆண்டுவரையில் ஐரோப்பிய-ஆசியத் தகடுமூலம் இமயமலை உயர்த்தப்பட்ட செயற்பாடு இவ்விதமாக அமைந்திருந் தாகக் குறிப்பிடுவர்.

புவி மேலேட்டுத்தகடுகள் கிடையாக நகர்த் தப்படும் பொழுது மேலோட்டில் பிளவுகள் உண்டாகும். பிளவுகள் மூலம் பாறைகள் மென்மையாகும் பொழுது எரிமலைக் குளம்பு இலகுவில் வெளிவந்து விடுகிறது. பிளவுகள் ஊடாகப் புவி மான்ரிலில் இருந்து மேற்காவுகை மூலமாகக் கொண் டுவரப்படும் லாவாக் குளம்பானது எரி மலை மலைகளையும் தீவுத்திடல்களையும் உருவாக்குவதுடன் நடுக்கண்டப் பாறை அல்லது மலைத்தொடர்கள் (Mid Ocean Ridges) உருவாகவும் காரணமாகிறது.

வடதென் அமெரிக்காக்களை ஐரோப்பா, ஆபிரிக்கா இரண்டிலுமிருந்து பிரித்த அத்திலாந்திக் சமுத்திரத்தின் நடுக்கண்டப் பாறைத் தொடரானது ஆங்கில எழுத்தான எஸ் வடிவில் காணப்படுகிறது. ஆபிரிக்கா, இந்தியதுணைக்கண்டம் (தக்கணம்) அவுஸ்- திரேலியா, அண்டாட்டிக்கா ஆகிய கண்டங் களைப் பிரித்த தகட்டு வெடிப்புக்களும் நடுக்கண்டப் பாறைத் தொடர்களும் இந்து சமுத்திர வடபாகத்தில் நேரான ஆங்கில எழுத்து வை வடிவத்திலும் தெற்காகத் தலைகீழ் வை வடிவத்திலும் காணப்படு கிறது. இந்த தலைகீழ் வையின் மேற் பகுதி மத்திய இந்துசமுத்திர மலைத் தொடராகவும் ஆபிரிக்காவை நோக்கித் திரும்பிய பகுதி தென்மேற்கு இந்து சமுத்திர மலைகளாகவும் எதிர்ப்பகுதி தென்கிழக்கு இந்தசமுத்திர மலைகளாகவும் அழைக்கப் படுகின்றன. இந்துசமுத்திர மத்திய மலைத்தொடருக்குச் சமாந்தரமாகத் 90 பாகை கிழக்கே கிழக்கு நெடுங்கோட்டு மலைத்தொடரொன்றும் கடலடியில் காணப் படுகிறது.

இந்துசமுத்திரத்தின் தென் நடுக்கண்டப் பாறைத் தொடருக்குத் தெற்காக கேர்க் கெலன் பீடபூமி காணப்படுகிறது. இப் பொழுது அந்தப் பீடபூமியில்தான் கேர் கெலன் (Kerguelen) தீவு அமைந்திருக் கிறது. இந்தப் பீடபூமியைத்தான் குமரிக் கண்டத்தின் தென் எல்லையாகக் கருது கிறார்கள்.

வடஇந்து சமுத்திரத்தில் இரண்டாகப்பிரிந்த வெடிப்பில் ஒன்று பூமத்தியகோட்டுக்குத் தெற்காக சுந்தா மற்றும் ஜாவா அகழித் தொடரில் முடிவடைகிறது வடமேற்காகச் சென்ற வெடிப்பானது அராபியக்குடாவில் சென்று முடிவடைகிறது. இவ்வாறாக நாலு பெருந்தகடுகளாகப் பிரிக்கப்பட்ட இந்து சமுத்திரம் நாலு பெருங்கண்டங்களைப் பிரித்ததுடன் மலைகளையும் அகழிகளை யும் நடுச்சமுத்திரக் குன்றுகளையும் தனித் தீவுகளையும் உருவாக்கியிருக்கிறது.

பஞ்சியா உடைக்கப்பட்ட 180 மில்லியன் ஆண்டு காலத்தில் பரலோன் தகடானது (Farallon Plate) வடஅமெரிக்காவின் கலி- போர்ணியா கடலுக்குக் கீழ் 93 மைல் ஆழத்தில் வடஅமெரிக்கத் தகட்டினுள் புதைந்து அல்லது குமைந்து போய்விட்டது. அது எதிர் கொண்ட பசுபிக் தகட்டா லும் உள்வாங்கப்பட்டது அதனால் தென் றொக்கி மலைத் தொடரில் பவி நடுக்க வலையமொன்று உருவாகியிருக்கிறது. இந்து சமுத்திரத்திலும் இலங்கைக்குத் தெற்காகக் காணப்பட்ட தகடானது மேற்கு பசுபிக் தகட்டுள்மோதியதால் சுந்தா - யாவா அகழியானது (Sunda and Java Trenches) உருவாக்கம்பெற்றது. இந்தப் பகுதி புவிநடுக்க வலயமாக மாறியதால் புவிநடுக்கப் பேரலைகள் உருவாகிக் காலத்துக்குக் காலம் குமரிக் கண்டத்தை யும் தென்னிந்தியக் கரையினையும் கடலுள் மூழ்கடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாவா சுமாத்திரா புவிநடுக்கவலையத்தின் தோற்றத்துடன் குமரிக்கண்டத்தில் நிலம் உயர்தப்படவும் எரிமலைத்தீவுகள் உருவா கவும் வாய்புகள் இருந்தமை வட அமெரிக்- காவின் பரலோன் தகட்டு ஆய்வுகள் மூலம் தெளிவுபடுத்தக்கூடியதாக இருந்தது. குறிப்பாக மொன்டானா மாகாணத்தின் ஜேலோஸ்ரோன் எரிமலைசார் வெந்நீர் ஊற்றுக்களை(Yellowstone park in Montana) உதாரணமாகக் காட்டுவாரகள். இலங்-கைக் கும் பூமத்திய கோட்டுக்கும் தெற்காகக் காணப்பட்ட பிளவானது இலங்கையைத் தெற்கேயிருந்த மலைகளிலிருந்து பிரித்து விட்டதாகக் கொள்ளலாம். அவற்றின் எரி- மலைத்தாக்கம் இலங்கையின் கன்னியா போன்ற வெந்நீர் ஊற்றுக்களில் காண முடிகிறது.

இந்துசமுத்திரத்தில் மத்தியகோட்டுக்குத் தெற்காக மத்திய இந்து சமுத்திரப் பாறைத்தொடருக்குக் கிழக்காக ஓறாஜினி (Orogeny) என்றழைக்கப்படும் இமயமலை யினை ஒத்ததான மடிப்புமலைத் தொடரி ருந்ததென்று ஆய்வுகள் எடுத்துக்காட்டின. இவை எவ்வாறு சடுதியாக அழிவுக்குள் ளாயின என்பதற்கு விடைதருவதாக ஒன் றில் குமைதல் செயற்பாடு அல்லது புவி நடுக்க ஆழிப் பேரலை காரணமாகியி ருக்கவேண்டும் எனத் துணியலாம்.

(தொடரும்)

kanapathipillai.a@thaiveedu.com

SP Electronics

TV, VCR, DVD, Players, Telephone-Computers

அனைத்துத் தமிழ் வானொலிகளுக்கும்,

திருத்த வேலைகளுக்கும்...

416 264 6400

2641 Eglinton Avenue East

(Brimley & Eglinton)

Commercial Mortgages
Business Loans
Business Line of Credit

for

Buying new business

Improve your business

Operating capital

Commercial real estate investments

Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...

KAPITAL CARE MORTGAGE INC. Lic#12623

Rambo Tharmalingam
Mortgage Agent Licence # M08008479
647-290-3416

Kethes Sivasubramaniyam
Licence # M09006105 Mortgage Agent
416-873-5780

5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5

செம்மொழி காக்க!

- சர்வேசுவரி சோமசுந்தரம் -

மொழி என்பது அறிவின் அடித்தளம். இயற்கை மாந்தனுக்கு அளித்த பெரும் பேறு அவன் அறிந்ததை, எண்ணியதை, விரும்புவதை வெளிப்படுத்த உதவும் ஒரு கருவியாக மட்டுமே மொழி கருதப்பட்டது. மொழி பற்றி ஆராய்ந்த கல்வியாளார்கள் கி.மு. 4ம், 5ம் நூற்றாண்டிலிருந்து கி.பி.17ம் நூற்றாண்டுவரை இவ்வாறுதான் கருதினர். ஆனால், அறிவியல் சிந்தனைகள் உச்சவேகம் பிடிக்கத் தொடங்கிய 18ம் நூற்றாண்டில் மொழி பற்றிய கருத்து மாறியது. மொழி என்பது சிந்தனையை வெளிப்படுத்தும் ஊடகம் மட்டுமன்று, சிந்தனையை வளர்த்தெடுப்பதும் நிகழ்த்துவதும் மொழிதான். மொழியினால் பேசுந்திறனோடு சேர்ந்து அறிவுத்திறனும் வளர்கிறது என்பதை உணர்ந்தான் மாந்தன்.

குமுக அரசியல் சிந்தனைகள், நடப்பியல் மாற்றங்கள் ஆகிய அனைத்தும் மொழியினாலேயே உருவாகின்றன. ஒழுக்கம், பண்பாடு, நாகரிகம் ஆகியனவெல்லாம் மொழியினாலேயே மேம்படுத்தப்பட்டு மக்களிடையே பரம்பல் அடைகின்றன. ஆனால், கல்வியாளர்கள் உட்பட பெரும்பாலான மக்கள் மொழி என்ற அரிய கருவூலத்தின் மேன்மையை உணர்ந்தவர்களாக இல்லை. கருத்தை எடுத்துச் சொல்லும் வெறும் கருவியாகவே மொழியைக் கருதுகின்றனர். மொழி, எழுத்து என்பன இல்லாதிருந்தால், அவற்றின் பயன்பாட்டில் உருவான ஆராய்ச்சிகள் எதுவும் நிகழ்ந்திருக்காது. அத்துடன் எத்துறை சார்ந்ததாக இருந்தாலென்ன? ஒரே முயற்சியைத் தலைமுறை தலைமுறையாக மாந்தன் திரும்பத் திரும்ப மீட்டிக் கொண்டேயிருப்பான். ஒரு தலைமுறை, தான் கண்டறிந்த உண்மைகளை எழுத்தில் பதிவு செய்து வைத்தால்தான், அடுத்த தலைமுறை அதனை அடிப்படையாக வைத்துப் புதிய முயற்சிகளை மேற்கொண்டு வளர்வதற்குத் துணையாக விருக்கும்.

ஐசாக் நியூட்டன் என்ற அறிவியல் மேதை கூறுகிறார். 'எனக்கு முன்பிருந்த அதி உச்ச அறிவியல் மேதைகளின் தோள்களின் மீது நின்று பார்ப்பதால் தான், என்னால் நீண்ட தொலைவுகளைப் பார்க்க முடிகிறது.'

மொழி என்பது மாந்தனின் கையில் கிடைத்த பெரும் புதையல். இதன் பெருமையை உணராதவன் எத்துணை படித்த வனாயிருந்தும் என்ன பயன்? இத்தகைய பெரும் புதையலான எமது தாய்மொழி தமிழ், ஓர் ஈராயிரம் ஆண்டுகாலமாகத் தொடர்ந்து வரும் வடமொழிக் கலப்பால் சீர்குலைவுக்குள் தள்ளப்பட்டுள்ளது என்பதைத் தமிழறிஞர் பலர் தம் ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளனர் என்பது யாவரும் அறிந்ததே!

பல்லவர் காலம் (6ம் நூற்றாண்டு) தொட்டுத் தொடர்ந்து பல நூற்றாண்டுகள், தமிழ்க்குழு காயத்தின் அரசியலில் பன்னாட்டுப் படையெடுப்பின் கரணியமாக எமது மண்ணின் மொழி தமிழானது புறந்தள்ளப்பட்டது, மணிப்பவள நடை தோற்றம் பெற்றது, எல்லாச் சொற்களும் வடமொழியின் கொடை என்றனர். தமிழகத்துப் பழைய ஊர்களின் தமிழ்ப்பெயர்களை வடமொழியில் மொழி பெயர்த்து மாற்றிய பின்னர், வடமொழியிலிருந்தே தமிழ்ப்பெயர்கள் யாவும் மாற்றம் பெற்றன என்று பரப்புரை செய்தனர். இன்று, ஈழத்தின் வடகிழக்குப் பகுதிகளில் தமிழில் உள்ள ஊர்ப்பெயர்களைச் சிங்கள மொழியில் மாற்றம் செய்தது போல, அன்றும் எல்லாம் ஆரிய வயமாக்கப்பட்டன. அவற்றிற்கு இசைவாகக் கற்பனைக் கதைகளையும் (புராணங்கள்) மக்களிடையே திணித்தார்கள். சிறந்த தமிழ் நூல்களையும் வடமொழி நூல்களின் மொழிபெயர்ப்பு என்றார்கள்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வடமொழியானது, தமிழ் மொழியினுள் ஊடுருவிக் கலந்ததனால் தாக்கம் இருப்பதும், ஒரு மொழியின் சொற்கள் இடம் மாறுவதும் இயல்பானதுதான். இதனை ஒரு மொழியிலிருந்து கடன் பெறுதல் என்பர். இந்தக் கடன் பெறுதல், தமிழிலிருந்துதான் வடமொழிக்கு நிகழ்ந்துள்ளது என்பதும் இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறே பற்பல மொழிகளினின்றும் பலப் பல சொற்கள் வந்து தமிழில் கலந்துள்ளன. தமிழில் அவற்றுக்கு நேர்ச்சொல் இல்லாமலோ அவற்றின் பொருளுக்கேற்ற புதிய சொற்களைப் புனைய முடியாமலோ அல்ல. தமிழர் எமக்குத் தாய்மொழி உணர்வு இல்லாமையாலேயே தமிழ், தமிழர் வயமில்லாது ஆரியவயப்பட்டுக் கிடக்கிறது. இவ்வாறு, தமிழ் மக்களிடையே புழக்கத்திலிருந்த மகிழ்ச்சி, திருமணம், மலர், தீ, காற்று, வானம், நீர், அரிமா, பதலை, உறக்கம், அறிவு, செலவு முதலிய சொற்கள் முறையே சந்தோசம், கலியாணம் (விவாகம்), புட்பம், அக்கினி, வாயு ஆகாயம், சலம், சிங்கம், மேளம், நித்திரை, புத்தி, பயணம் ஆகவும் முருகன், திருமகள், மலைமகள், கலைமகள், திருமால், போன்ற தெய்வங்களின் தமிழ்ப்பெயர்கள் சுப்பிரமணியன், இலட்சுமி, துர்க்கை, சரசுவதி, கிருட்டிணன் என மாற்றம் பெற்றன. இவ்வாறு எண்ணிறந்த தமிழ்ப் பெயர்கள் வடமொழியாகின.

தமிழினுள் இவ்வாரியத் தாக்கம் மிகப் பேரளவுக்கு நேர்ந்திருப்பினும் தமிழ் தனக்கேயுரிய இயற்கைத் தகைமையையும் சிறப்பியல்புகளையும் சற்றும் இழக்காமல் இன்றும் உயிர்த்து நிலைத்திருப்பதற்கு அடிப்படைக் காரணம், பண்டைய இலக்கிய இலக்கண ஆவணங்கள் காப்பரண்களாகி நிற்கின்றமையே ஆகும். விரல்விட்டு எண்ணத்தக்க அளவிலேயே அச்ச மற்கிருதச் சொற்களிற் சில நம்மொழிச் செய்யுள்கட்குள் அன்று படிந்துள்ளன. அவையும் அக்கால அரசியற் சூழ்நிலைகளால் படிவுற்றுள்ளன என்பதையும் எம்மால் உணர முடிகிறது.

இன்று, வடமொழியிலும் தமிழ் மொழியிலும் பெரும்பான்மையான சொற்கள் பொதுவாக இருக்கின்றன. இருவர் ஒருமணி நேரத்திற்கு மேல் பேசிக் கொண்டிருப்பார்களேயானால், ஒருவரின் பேச்சு ஆளுமையின் தாக்கம், மற்றவர் மீது படியும். அத்தாக்கம் என்பது தவிர்க்க முடியாதது. அவ்வாறேதான் வடமொழிப் பயன்பாடும் எமது மொழிக்குள் நிலைத்துவிட்டது.

இக்கருத்தின் அடிப்படையில் நாம் பேசும் தாய்மொழியில் பெரும்பான்மையானவை வடசொற்கள் என்பது தெரிந்தும் நாம் அவற்றைப் பயன்படுத்துகின்றோம் என்று நினைக்கையில் எத்துணை பெரும் தவற்றைச் செய்துகொண்டிருக்கின்றோம் என்பதைத் தமிழராகிய நாம் ஒவ்வொரு வரும் எண்ணி வெட்கப்பட வேண்டியவர்களாயுள்ளோம்.

எத்தனையோ நூற்றாண்டுகளாகப் பயன்பாட்டில் இருக்கும் பன்னிரண்டு மாதங்களும் தமிழ்ப்பெயர்களல்ல என்பதும் கிழமை நாட்களில் உள்ள புதனும் சனியும் தமிழில்லை என்பதும் எமக்குத் தெரியும். தெரிந்திருந்தும் நூற்றாண்டு காலங்களாக வழக்கத்திலிருந்த சொற்களை மாற்ற முடியாது, எல்லாம் பழக்கத்திற்கு வந்துவிட்டன என்று சொல்லிக் கொண்டிருக்கின்றோம்.

தமிழ் நிலத்துள் ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன் ஊடுருவிய ஆரியம் எமது மொழியைக் கற்று, அதனைச் சிதைத்து உருமாற்றி, மூடநம்பிக்கைகள் வாயிலாக எம்மக்களிடையே திணிக்கும்போது எம் மக்கள் எமது மொழியின் வேர்ச்சொற்களை மறந்து, ஆரியரின் சொல்லாக்கங்களை ஏற்றுக் கொண்டு தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டார்களல்லவா? மீண்டும் 'இவை தமிழல்ல' என்பதனைத் தெரிந்து கொண்டபின், எம்மை நாம் மாற்றிக் கொண்டு தூயதமிழ்ச் சொற்களுக்குப் பழக்கப்படுத்திக் கொண்டாலென்ன? பேச்சு வழக்கில் மாற்றத்தைக் கொண்டு வரமுடிய வில்லை யென்றாலும் எழுத்து வழக்கில் கொண்டுவரலாமல்லவா?

நாள், மாதம், ஆண்டு யாவும் உலக வழக்கு என்பதால் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் நாம் ஆங்கில வழக்கினைப் பயன்படுத்துகின்றோம். இதன் காரணமாக வடமொழி மாதங்களை (தை, மாசி...) பயன்படுத்துவதில்லை. ஏனெனில், தை மாதம் தொடக்கம் மார்கழி வரையிலான வடமொழி மாதங்களின் பக்கல் (திகதி) ஒழுங்கமைப்பு 14 அல்லது 15 நாட்கள் பின் நோக்கியே உள்ளன. அஃதாவது சனவரி 14ஆம் நாளே தை முதலாம் நாள். அந்த வகையில் வடமொழி மாதங்களைத் தவிர்த்து, இவை தான் தமிழ் மாதங்கள் என்று தமிழ்ப்பள்ளிகளில் தொடக்க வகுப்பிலேயே பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதில் என்ன தவறு?

தனித்தமிழ்ப் பயன்பாட்டுக்கு உரமூட்டும் வகையில், பேராசிரியர் நன்னன் அவர்கள் அடிக்கடி ஒரு கருத்தைக் கூறுவார். நாம் கோவிலுக்குள் நுழையுமுன், வாயிலில் எமது பாதணிகளைக் கழட்டிவிட்டு உள்ளே நுழைகின்றோம். கடவுள் வழிபாட்டை முடித்துக் கொண்டு வெளியே வரும்போது, வாயிலில் ஏராளமான காலணிகள் பரவிக் கிடக்கின்றன. அவை எல்லாம் பாதணிகள் தானே என்றெண்ணி, ஏதோவொரு பாதணியை மாட்டிக்கொண்டு செல்கின்றோமா? இல்லையே! எமது பாதணி எது? எங்கே உள்ளது? என்று தேடி எடுத்து, அணிந்து கொண்டுதானே செல்கின்றோம். அதுபோல எமது தாய்மொழி தமிழின் வேர்ச்சொற்கள் இருக்கும்போது, அவற்றை மீட்டெடுத்துப் பயன்படுத்தாமல் வேற்று மொழிச் சொற்களையே காலங்காலமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். நாம் எத்துணை தவற்றினைச் செய்து கொண்டிருக்கின்றோம் என்பதை எண்ணிப் பார்க்கின்றோமா? இல்லையே!

பிறமொழிக் கலப்பில்லாத மொழி என்னும் தகுதியானது, செம்மொழிக் கோட்பாடுகளில் ஒன்று. அதை யார் நடைமுறைப் படுத்துகின்றோம்? எமது மொழி 'செம் மொழி செம்மொழி' என்று குரல் எழுப்பிக் கூப்பாடு போடுவதில் என்ன பயன்?

வடசொற்களைக் கலந்து எழுதுவதில் தப்பில்லை என்கின்றார்கள். காலங்கால மாகப் பயன்படுத்திய சொற்கள்தானே என்கின்றார்கள். மோனை, எதுகை அமைய வேண்டும் என்னும் நோக்கிற்காக வட சொற்களைக் கலந்து, புதுப்பாக்கள் வடிக்கின்றார்கள் மற்றும் மக்களுக்குப் புரிய வேண்டும் என்றவொரு காரணத்தைச் சுட்டியும் எழுதுகின்றார்கள். ஆனால், எந்த வொரு பிறமொழிச் சொற்களும் கலக்காமல் அனைத்துக் கருத்துகளையும் தனித் தமிழிலே இயல்பாக எழுதமுடியும் என நிறுவியவர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள்! அவரைத் தொடர்ந்து இன்றும் தமிழகத்தில் பல தமிழறிஞர்கள் தூயதமிழில் எழுதிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். ஏன்? இக்கட்டுரையும் தூய தமிழிலே தான் நடைபோடுகிறது.

பிறமொழிச் சொற்களைத் தமிழ்மொழியில் கலந்து பயன்படுத்துவது தமிழ்மொழியின் தூய்மைக்குக் கேடுவிளைவிக்கும். இதன் அடிப்படையிலேயே புலம்பெயர் நாடுகளில் வளரும் எம் இளந் தலைமுறையினர் எம் மொழியின் தூய்மைத் தன்மையைப் பாதுகாப்பர் என்று கருதியே தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் உருவாக்கப்பட்டுள்ள தமிழ் நூல்களில் தூய தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இக் கல்வித்திட்டத்திற்கு உறுதுணையாகத் தமிழ் ஊடகங்களும் துணை நின்றால், எம்முன்னோர் பல்லாண்டு காலமாக ஆய்வுகளின் மூலம் தனித்தமிழை நிலைநிறுத்தப் பாடுபட்ட கனவை நனவாக்கலாமல்லவா?

ஒரு மொழியில் இருக்கும் சொற்கள் அழியாமல் பாதுகாக்க வேண்டுமெனில் அச் சொற்கள் அகராதிகளில் இருப்பது மட்டும் துணை செய்யாது. அவை மக்களின் பேச்சிலும் எழுத்திலும் இடம் பெறவேண்டும். இதற்கு ஊடகங்களே பெரிதும் துணை புரியவேண்டும். மொழியின் வளர்ச்சி, பரம்பல், கலைச்சொல்லாக்கம் என்பவற்றில் ஊடகமொழியானது பெரும் பங்காற்றுகிறது. ஒரு மொழியின் வளர்ச்சி என்பது புதுப் புதுத் துறைகளில் தோன்றும் கருத்துகளையும் கலைச் சொல்லாக்கங்களையும் மொழிபெயர்த்துக் கொள்வதாகும். இவை மக்களிடையே விரைவான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

ஆதலால், தமிழ்மொழியில் கலந்துள்ள வடசொற்களை நீக்கித் தூயதமிழில் செய்தித் தொகுப்புகளையும் நிகழ்வுகளையும் அணியம் செய்து ஒலிபரப்பவோ, ஒளிபரப்பவோ, இணையத்தில் பதிவீடு செய்யவோ முயலுதல் பொதுமக்களிடையே தூயதமிழின் பரம்பல் மிக எளிதாகச் சென்றடைய வாய்ப்பாக அமையும். இக் கருத்தினை ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், இணையப் பயனாளர்கள் போன்றோர் கருத்திற்கொண்டு செயற்படுவார்களேயானால் பல தூய தமிழ்ச் சொற்கள் வழக்கில் இல்லாது இறந்து போவதைத் தடுத்தாட்கொள்ளலாம்.

காக்க! காக்க!
நம் செம்மொழி காக்க!

sarveswary.s@thaiveedu.com

"

BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE

Visit your one stop solution center
for all your super visa insurance needs...

SuperVisa.Today

www.supervisa.today #416 321 6000

தொல் தமிழகத்தில் இரும்பின் தடம்

- செல்வநாயகி ஸ்ரீதாஸ் -

சங்க இலக்கியத்தில் 'தொல் லியல் தடம்' என்பது மிக விசாலமான பரப்பு. இந்தப் பரப்பளவை சுருக்கி 'இரும்பின் தடம்' என்னும் வட்டத்திற்குள் நின்று கொண்டால் தடத்தை ஆழமாகவும் அகலமாகவும் அல சிப் பார்ப்பதற்குச் சிறப்பாக அமையும். தமிழின் தொன்மையைப் பல கோணங் களில் விளக்கும் ஆய்வுகள் பல நடந் துள்ளன. நானும் பல தடவை எடுத்து வந்திருக்கிறேன். அவை அனைத்தும் தமி ழர் மத்தியில் ஓரளவுக்குத் தமிழின் தொன்மை பற்றிய விளக்கத்தைக் கொடுத் திருக்கும் என்பது எனது நம்பிக்கை. அனைத்தையும் ஒன்றாக பார்க்கும் காலத் தைக் கடந்து அவற்றின் கூறுகளை ஒவ் வொன்றாகத் தனித்தனியே எடுத்து வருவது அடுத்த கட்டப் பணியாக வைத்துக் கொள்ளலாம்.

இன்று, நாம் ஆராய இருப்பது தொல் தமிழகத்தில் இரும்பினது தடம்.

தொல்காப்பியம், எட்டுத் தொகை, பத்துப் பாட்டு முதலிய ஆதி இலக்கண இலக்கி யங்கள் காட்டும் அரசுகளும் கடல் வாணிபமும் கோட்டை கொத்தளங்களும் மாடமாளிகைகளும் தமிழகத்தில் ஒரு காலத்தில் இருந்தன என்பது உறுதிப் படுத்தப்படாமல் வெறும் இலக்கியங் களாகக் கொள்ளப்பட்ட காலம் ஒன்று இருந்தது. இன்று அவை வெளிநாட்டார் குறிப்புகள், அகழாய்வுச் சான்றுகள், நாணயங்கள், கல்வெட்டுக்கள் போன்ற புறச் சான்றுகள் மூலம் உலகத்தோரால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய நிலைக்கு நாம் வந்திருக்கிறோம் என்பது மகிழ்ச்சி.

இந்த ஆய்வின் தேவைக்காகத் தொல் காப்பியத்தின் காலத்தை கி.மு. 711 ஆம் ஆண்டு என்றும் சங்க இலக்கிய காலத்தை கி.மு. 5 முதல் கி.மு. 1 ஆம் நூற் றாண்டு வரை என்றும் குறித்துக் கொள் வோம். அண்மைக்கால அகழாய்வுகளுக்கு முன் சங்ககாலம் குத்துமதிப்பாக கி.மு. 3 முதல் கி.மு. 1 ஆம் நூற்றாண்டு வரை என்று கூறிக் கொண்டிருந்தோம். இன்று அகழாய்வில் கண்டறியப்பட்ட பொருட்கள் கரிமப் பரிசோதனையில் கீழடியும் பொருந் தலும் கி.மு. 5ஆம் நூற்றாண்டு என்றும் ஆதிச்சநல்லூர் கி.மு. 905 (கி.மு.10 ஆம் நூற்றாண்டு) என்றும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. மேற்கொண்டு புதிய தகவல் கள் கிடைக்கும் வரை இதுவே காலம் எனக் கொள்வோம்.

எமது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பகுதி கள் கற்காலம் கடந்த செம்புக் காலமும் இரும்புக்காலமும் ஆகும். தென்னிந்தி யாவில் நெற்பயிற்செய்கை, இரும்பின் அறிமுகம், அரச உருவாக்கம், பட்டினங் களின் தோற்றம் என்பவை ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படு கின்றன. உலக வரலாற்றில் புதிய கற் காலத்தின் பிற்பகுதியில் செப்புக்காலத் தையும் வெண்கலக்காலத்தையும் அடுத் துத்தான் இரும்புக்காலம் ஏற்பட்டிருக்கிறது. ஆரம்பகால ஆய்வாளர், செம்பின் புழக் கம் தென்னாட்டில் குறைவாக இருந்த மையால், தென்னிந்தியாவில் 'செம்புக் காலம்' என்று ஒரு காலம் தனியாக இருக்கவில்லை என்று கருதினர். அண் மைக்காலத்தில், அழகன்குழம், கீழடி, கொடுமணல், ஆதிச்சநல்லூர் முதலிய இடங்களில் செம்புப் பொருட்கள் கண் டெடுக்கப் பட்டுள்ளன. தென்னாட்டில் செப்பு புழக்கத்தில் இருந்திருக்கலாம். ஆனால், அவை எண்ணிக்கையில் மிகக் குறைவாகக் காணப்படுவதால் இவை வெளிநாடுகளில் அல்லது வெளி-மாநிலங் களிலிருந்து கொண்டுவரப்பட்டவையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. எதிர் கால அகழாய்வுதான் இவை போன்ற வினாக்களுக்குப் பதில் சொல்லவேண்டும்.

தமிழ்நாடு, புதிய கற்காலத்தின் பிற்பகுதி யில் இரும்புக்காலப் பண்பாட்டினுள் நேரடியாகவே புகுந்து விட்டதாகத் தெரி கிறது. ஐரோப்பாவில் இரும்புத் தொழில் தொடங்குவதற்கு முன்பே தென்னிந்தியா வில் இரும்பின் தொழில் நுட்பம் அறியப் பட்டிருப்பதாக ஆய்வாளர்கள் கருது கின்றனர்.

இந்தியாவில் இரும்புக்காலம் கி.மு. 12 ஆம் நூற்றாண்டில் தொடங்கியதாகக் கூறப்படுகிறது. ஆதிச்சநல்லூர் அகழாய் வின் அடிப்படையில், அந்த அகழ்வாய் வுக்கு தலைமை தாங்கிய தொல்லி யலாளர் சத்தியமூர்த்தி அவர்கள் ஆதிச் சநல்லூரில் இரும்பின் பயன்பாட்டை கி.மு.1000 முதல் கி.மு.1500 வரை கொண்டு செல்லலாம் என்று அபிப்பிராயப்படுகிறார்.

தமிழ் நாட்டில் இரும்பின் பயன்பாட்டுக் காலம்:

பொதுவாகத் தமிழ்நாட்டிலும் இலங்கை யிலும் இரும்பின் பயன்பாடு கி.மு. 1000ஆம் ஆண்டளவில் ஏற்பட்டது என்று கணிக்கப்படுகிறது. சென்னை தேசியக் கடலாய்வு நிறுவனத்தைச் சார்ந்த பத்ரி நாராயணன், சசிசேகரன், இராசவேலு முதலியோர் ஆதிச்சநல்லூர் பகுதியில் மின்னழுத்தத் தடுப்புக்கள் ஆய்வு (electro-resistivity survey) செய்தார்கள். அந்த ஆய்வின் மூலம் உலோகங்கள் அப்பகுதி யில் எந்த அளவு உபயோகிக்கப் படுத்தப் பட்டுள்ளன என்பதை அறியலாம். இம் மின்னழுத்த ஆய்வில் கிடைத்த இரும்புப் பொருட்களை அறிஞர்கள் குறைந்தது கி.மு. 10 ஆம் நூற்றாண்டு அளவில் உபயோகப் படுத்தப்பட்டவை என்றும் இவற்றின் பழமை கி.மு. 17 ஆம் நூற் றாண்டு அளவு கூடச் செல்லும் என்றும் கணித்துள்ளனர். இதன் மூலம் தமிழகத் தின் இரும்புக்காலத்தை இற்றைக்கு 3700 ஆண்டுகளுக்கு முன் கொண்டு செல்ல லாம்.

சீனாவின் இரும்புக்காலம் கி.மு. ஒன்ப தாம் நூற்றாண்டில் தொடங்குகிறது என்று அறியப்படுகிறது. இங்கு காணப்படும் பெரும் முத்திரையின் எழுத்துக்கள் கி.மு. எட்டாம் நூற்றாண்டினதாகவும் யாங்-சீ பகுதியில் காணப்படும் இரும்புப் பொருட் கள் கி.மு. ஆறாம் நூற்றாண்டுப் பழமை யானதாகவும் கணிக்கப்படுகின்றன.

புதிய கற்காலத்தில், மட்பாண்டங்கள் செய்து, பாண்டங்களைச் சூளையில் இட் டுச் சுட்டபோது தற்செயலாக இரும்பைக் கண்டுபிடித்ததாக அனுமானிக்கப்படுகிறது. இரும்புக்காலக் கருவிகள் ஆதிச்சநல்லூர் தவிர, சென்னைக்கு அருகிலுள்ள பெரம் பூர், கோயம்புத்தூர் மாவட்டம், கேரள மாநிலத்தின் மலபாரிலுள்ள தலைச்சேரி போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அகழ்வாய்வின்போது கண் டெடுக்கப்பட்ட பல முக்கியமான பொருட் களுடன் இரும்பு ஆயுதங்களும் கிடைத் திருக்கின்றன. இவை மூலம் இரும்புக் காலத்தில் இறந்தவர்களுக்கு ஈம அடை யாளங்கள் ஏற்படுத்தப் பட்டன என்று அறியக் கிடைக்கிறது. இவ் ஈம அடை யாளங்கள் பெருங்கற்படைச் சின்னங்கள் என்று வழங்கப்பட்டன. பெருங்கல் என்பது கல்லறையின் மேல் சுற்றி அடுக்கப்படும் கற்களைக் குறிப்பிடுகின்றது. கொங்கு நாட்டைச் சேர்ந்த 'கொடுமணல்' அகழ் வாய்வு செய்யப்பட்ட ஒரு வரலாற்றுத் தொடக்க கால ஈம அடையாள இட மாகும். வரலாற்றுத் தொடக்கக் கால ஈம அடையாளங்களில் உரோமானிய அல்லது பிற இந்திய நாணயங்களும், இரசக்கலவை பூசப்பட்டு ஓவியம் வரையப்பட்ட பானை வகைகளும் காணப்படுகின்றன.

'ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது அந்நாட்டில் கிடைக்கும் இயற்கை வளங்களை உயர்ந்த தொழில் நுட்பம் மூலம் உற்பத்திப் பொருளாக மாற்றி அவற்றை உள்நாட்டின் பயன் பாட்டிற் கும் வெளிநாட்டின் தேவைக்கும் அளித்து அதன் மூலம் பெறப்படும் உபரி வரு வாயை ஒட்டு மொத்தச் சமூக வளர்ச்சிக் குப் பயன்படுத்துவதே ஆகும்' என்கிறார் புதுச்சேரிப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியரும் ஆய்வாளருமான கா. ராஜன். மேலும், தென்னிந்தியாவில் இரும்பு ஏராளமாகக் கிடைத்தது. இரும்புத் தாதிலிருந்து இரும்பைப் பிரித்தெடுக்கும் தொழில் நுட்பம் கண்டுபிடிக்கப்பட்ட போது தென்னக வரலாற்றில் ஒரு பெரும் மாற் றம் ஏற்பட்டது என்கிறார்.

தமிழ் நாட்டில் முதல்தரமான மாக்னடைட் இரும்புத் தாதுகள் சேலம் அருகே அமைந் துள்ள, கஞ்சமலை, கோதுமலை, தருமபுரி அரூர் வட்டத்தில் அமைந்துள்ள தீர்த்த மலை, நாமக்கல் மாவட்டத்து கொல்லி மலை, திருச்சி மாவட்டத்து பச்சைமலை ஆகிய பகுதிகளில் மிகுதியாகக் கிடைப் பதாகவும் இரும்பு உருக்கும் தொழி லுக்கு இன்றியமையாத துணைப்பொ ருளான சுண்ணாம்புக் கல்லும் இம் மாவட்டங்களில் கிடைப்பதாகவும் கூறப் படுகிறது.

மாக்னடைட், ஹேமடைட், லிமோனைட், சிட்ரைட் ஆகிய நான்கு வகை இரும்புத் தாதுகளில் இருந்தும் இரும்பு கிடைப் பதாகவும், மாக்னடைட் தாதுவில் அதிக அளவு காந்தசக்தி இருப்பதால் இத் தாதுவே இரும்புத் தாதுக்களில் மிகச் சிறந்ததாக விளங்குகிறது என்றும் மற்றத் தாதுக்களை விட மாக்னடைட்டில் மாசுப் பொருட்கள் குறைவாகவே காணப்படுவ தாலும் மாக்னடைட் தாது மிகவும் உயர்ந் ததாக அறியப்படுகிறது. இதனைத் தேனி ரும்பு என்று தமிழில் அழைப்பார்கள்.

ஈரோடு மாவட்டம் பண்டைய பிரிவான கொங்கு நாட்டில் அமைந்துள்ளது. இது, குறிஞ்சி நிலமும் முல்லை நிலமும் நிறைந்த பகுதி. மேற்கே மேற்குத் தொடர் மலையும் வடக்கே கர்நாடக மாநில எல்லைகளும் காணப்படுகின்றன. கொங்கு நாட்டின் வடக்கு எல்லை பெரும்பாலை, தெற்கு எல்லை பழனி மலை, மேற்கு எல்லை வெள்ளிங்கிரி மலை, கிழக்கு

தொடர்தல் 49ம் பக்கம்

நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

தொல் தமிழகத்தில்...

48ம் பக்கத் தொடர்ச்சி...

எல்லை குளித்தலை ஆகும். தற்போது இந்த நான்கு எல்லைகளுக்கு உள்பட்ட பகுதிகள், கோவை, ஈரோடு, நாமக்கல், தர்மபுரி, பழனி, சேலம் போன்ற பகுதி களாகும். கொங்கு மண்டலம் ஆதியில் தனிப் பகுதியாகவே இருந்திருக்கிறது. திருமூலர் திருமந்திரம் 'தமிழ் மண்டிலம் ஐந்து' என்று கூறுகிறது. இவ் ஐந்து மண்டலங்களுள் கொங்கு நாடும் ஒரு மண்டிலமாக இருந்திருக்க வேண்டும். சங்க இலக்கியங்களில் 'கொங்கர்' குறிப் பிடப்பட்டுள்ளனர். அசோகர் கல்வெட்டில் தனி அரசனாகக் குறிப்பிடப்படும் சத்திய புத்திரன் கொங்கு நாட்டு மன்னன் 'அதிய-மான்' என்பது ஐம்பைக் கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது. தொன்று தொட்டு கொங்கு நாட்டை 'வேளிர்' என்னும் சிற்றரசர்கள் ஆண்டு வந்ததாக அறியப் படுகிறது. ஈரோடு மாவட்டத்திலுள்ள அரையம், கொடுமுடி, சென்னிமலை, கொடுமணல், பூந்துறை, பெருந்துறை போன்ற ஊர்கள் சங்க இலக்கியங்களில் பேசப்படுகின்றன. சங்கச் சான்றோர்களா கிய பெருந்தலைச் சாத்தனார் பெருந் தலை என்னும் ஊரையும் பொன்முடியார் பெருந்துறை அருகிலுள்ள பொன்முடி என்னும் ஊரையும் சார்ந்தவர்கள்.

இம்மலைகளில் காணப்படும் தொல் பழங் காலக் குகை ஓவியங்கள் 7000 ஆண்டு களுக்கு முற்பட்டவை. இம்மலைவாழ் மக்கள் கொற்றவையை வழிபட்டனர். ஈரோடு மாவட்டத்து மலைகளில் நூற் றுக்கு அதிகமான மாட்டுப் பட்டிகளும் (மாடுகள் அடைக்கும் இடம்) மாடுகள் தண்ணீர் அருந்தும் மடைகளும் காணப் படுகின்றன. இம்மாவட்ட மக்கள் கால் நடை வளர்ப்புத் தொழில் செய்து பெருங் கற்காலச் சின்னங்களை உருவாக்கியிருக் கிறார்கள் என்கிறார், பெ. கௌதமபுத்திரன், தொல்லியல் ஆய்வாளர். கிழக்குக் கடற் கரையையும் மேற்குக் கடற்கரையையும் இணைக்கும் தேசீய நெடுஞ்சாலைகள் பல ஈரோடு மாவட்டத்து ஊடாகச் சென் றுள்ளன.

இம்மாவட்டத்தின் கொடுமணல், கத்தாங் கன்னி போன்ற ஊர்களில் அகழாய்வு மேற்கொள்ளப் பட்டன. இங்கு கற்காலக் கருவிகள், பெருங்கற்காலச் சின்னங்கள், ரோமானிய காசுகள், பானை ஓடுகள், சூதுபவள மணிகள், சுடுமண் பொம்மை கள், நடுகற்கள், வணிகர் குழுக் கல் வெட்டுகள், செப்புத் திருமேனிகள், தமிழ் மன்னர்களின் காசுகள் மிகுதியாகக் கிடைத் தன. இப்பகுதியில் இரும்பு பெருமளவில் காணப்பட்டிருக்கிறது. உருக்குவேலையும் பெருமளவில் நடந்தமைக்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

இரும்பை எஃகாக (steel) மாற்றுவதற்குத் தனி நிபுணத்துவம் பெற்றிருக்கவேண்டும். இதனைச் சங்க கால மக்கள் பெற்றிருந் தனர் என்பதை அண்மைக்கால ஆய்வு கள் புலப்படுத்துகின்றன. இரும்பை எஃகாக மாற்றுவது என்பது இரும்பில் தேவைப்படும் அளவிற்குக் கரியத்தைச் (carbon) சேர்ப்பதாகும். இயற்கையாகச் சில இடங்களில் கிடைக்கும் இரும்புத் தாதுக்களில் கரியம் அதிகமாகவும் சில இடங்களில் குறைவாகவும் இருக்கும். இவ்விதம் இரும்புத் தாதுகளில் கரியம் அதிகம் இருக்குமிடத்தில் அதைக் குறைக்கவும் குறைவாக இருக்கும் இடங் களில் அதிகமாக்கவும் வேண்டும். முன்னை யதை decarbonisation என்றும் பின்ன யதை carbonisation என்றும் உலோகவிய லாளர் கூறுவர். தமிழகத்தில் கிடைக்கும் இரும்புத் தாதுக்களில் கரியம் அதிக மாகக் காணப்படுவதால் decarbonisation முறையே இங்கு கையாளப்படுகிறது.

இரும்பு செய்யவும் எஃகு செய்யவும் இருவேறு உலைக்களங்கள் பயன் படுத் தப்பட்டிருக்கின்றன. இரும்பை உருக்கும் உலைக்களங்கள் நிலத்திற்கு மேற் பகுதி யிலும் உருக்கப்பட்ட இரும்பை எஃகாக ஆக்கும் உலைக்களங்கள் நிலத்திற்கு அடியிலும் இருந்தன. இவ்விரு வகை உலைக் களங்களும் கொடுமணலில் கண்டறியப்பட்டன.

இரும்பை உருக்க 1100° சென்டிகிரேட் வெப்பநிலையும், எஃகாக மாற்ற 1300° சென்டிகிரேட் வெப்பநிலையும் தேவை. இந்த நிலையை கொடுமணலில் கிடைத்த உலைக்களங்கள் அடைந்ததாக இவ் உலைக்களங்களை ஆய்வு செய்த, இலண்டன் பல்கலைக்கழகத் தொல்லியல் பள்ளி ஆய்வாளர் சாரதா சீனிவாசன் அவர்களும் இந்தியத் தொழில் நுட்பக் கழகத்தின் ஆய்வாளர்கள், ரகுநாதராவ், சசிசேகரன் ஆகியோரும் உறுதி செய் துள்ளனர்.

அத்துடன் ரகுநாத் ராவும் சசிசேகரனும் தமிழ்நாட்டில், தகடூர் பகுதியில் குண்டூரில் கிடைத்த உலைக்களத்தில் நடத்திய உலோகவியல் ஆய்வு மூலம் அங்கு வார்ப்பு இரும்பு செய்யப்பட்டது என்பது அறியப்படுகிறது. இக்கால வணிகர் எஃகும் வார்ப்பு இரும்பும் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கின்றனர், பொருளா தாரம் உயர்ந்தது, மக்கள் வாழ்வு உயர் நிலை பெற்றது.

சங்ககாலப் பொருளாதார மேம்பாட்டால், பண்டைத் துறைமுகங்கள், வணிக மையங் கள் பல நூற்றாண்டு காலம் நிலைத்து நின்றன என்பதை அகழாய்வு மூலம் அறியக்கூடியதாக உள்ளது. தமிழ்நாடு, உலக அளவில், பல மேலைத் தேயங் களுடனும் துறைமுகப் பட்டினங்களுடனும் நகரங்களுடனும் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்பு, தென்னகத்தின் கேந்திரத்தன்மை முதலியவற்றை நோக்கும் போது வணிகத் தில் அக்காலம் ஒரு பொற்காலமாகத் திகழ்ந்திருக்க வேண்டும் என்பதும் அக் காலத்தில் ஒரு சிறந்த வணிகப் பெருவழி உருவாகி விட்டது என்பதும் தெளிவா கிறது. சங்க இலக்கியங்களும் தொல் லியல் சான்றுகளும் பிறநாட்டார் குறிப்புக் களும் இதனை உறுதி செய்கிறன.

பிளினி இத்தாலிய நாட்டறிஞர், ஒரு எழுத்தாளர், வரலாற்றியலாளர், இயற்கை மெய்யியலாளர். அவர், கி.பி 77 இல் இயற்கை வரலாறு (Naturalis Historia) என்னும் இலத்தீன் மொழிக் கலைக் களஞ்சியம் ஒன்றினை வெளியிட்டார். இயற்கை வரலாறு, கலையும் கட்டிடக் கலையும், மருத்துவம், புவியியல், நில வியல், போன்றவை தொடர்பான 37 பிரிவுகளைக் கொண்ட இக் கலைக் களஞ்சியம் தொன்மை தேடும் இன்றைய வரலாற்று ஆசிரியர்களுக்கு மிகச் சிறந்த வரலாற்றுத் தகவல்களைத் தருகிறது.

பிளினியின் இக்கலைக்களஞ்சியம் இந்தியா வுக்கும் ரோமிற்குமிடையே நடைபெற்ற கடல் வணிபத்தைப் பற்றி விபரிக் கின்றது. அத்துடன் ரோம் நகரத்துடன் தொடர்பு கொண்டு, உலகின் அனைத்துப் பகுதிகளிலும் செயல்பட்ட இரும்புச் சுரங்கத் தொழில் மற்றும் இரும்பு உருக்கு ஆலைகள் பற்றிய முழுமை யான கணக்கைத் தருகிறது. பிளினியின் நூலில் Seres இலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இரும்பு பற்றிக் குறிப்பிடு கிறார். Seres என்று அவர் குறிப்பிட்டது சங்க காலத்துச் சேரநாட்டை ஆகும். பளினி தனது குறிப்பில் காங்கயத்திற்கு அருகில் படியூரில் 'பெரில்ஸ்' என்ற நீல நிறக் கற்கள் கிடைத்ததைக் குறிப்பிடு கின்றார்.

எரித்திரியக் கடலின் பெரிப்ளஸ் (Periplus of the Erythraean Sea) என்ற கையெ ழுத்து ஆவணம், பண்டைய ரோமின் கடல் சார்ந்த வர்த்தகம் அதாவது, செங் கடல், ஏடன் வளைகுடா மற்றும் மேற்கு இந்தியப் பெருங்கடல், குறித்த மிகவும் இன்றியமையாத தகவல் மூலமாகும்.

இந்தக் குறிப்புகள் அக்காலத்திய இந்தியத் தீபகற்பத்தின் மேற்குக் கடற் கரைத் துறைமுகங்கள், கிழக்குக் கடற் கரைத் துறைமுகங்கள் மற்றும் கங்கை யாற்றுச் சமவெளி பற்றி விவரிக்கின்றன. பண்டைத் தமிழரின் கடல் வணிகம் என்பது ஏறக்குறைய கி.மு. 700 முதல், சங்க காலத்தின் இறுதிக்கட்ட காலமாகக் கருதப்படும் கி.பி. 300 வரை என்று கருதப்பட்டிருந்தது, இன்று அது கி.மு 1000 ஆம் ஆண்டுவரை எடுத்துச் செல்லப் படுகிறது. தமிழ் நாட்டில் கண்டெடுக் கப்பட்ட ரோம நாணயங்களில் 90 விழுக் காட்டிற்கும் மோலானவை கொங்கு நாட்டிலே கிடைத்துள்ளன. இவை மூலம்,

- சங்க இலக்கியம் கூறும் இரும்பு, எஃகு தொழில் நுட்ப அறிவும்,
- தமிழகத்தில் இரும்பு உருக்கு ஆலைத் தொழில் நுட்பமும் இரும்பின் பயன் பாடு பற்றிய அறிவும்,

உறுதி செய்யப்படுகின்றன.

ஏறக்குறைய கி.மு 800 ஆண்டுகளுக்கு முன்பே ஆதிச்சநல்லூரில் நாகரீகம் மிக்க மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்ற கருத்தை முதன்முதலாக வெளியிட்டவர், ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வை முதன் முதலாகத் தொடக்கி வைத்த ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த டாக்டர். ஜாகர் என் பவர். 1876 ஆம் ஆண்டு ஆராய்ச்சிக் காக வந்த இவர் கண்டு பிடித்தது தான் இந்தத் தொல் தமிழர் நாகரீகமாகும்.

பிரஞ்சு நாட்டவரான லூலி வேப்பிக் கியூவின் தலைமையில், 1903 ஆம் ஆண்டு அகழாய்வு நடந்தபோது மேலும் பல பொருட்களுடன், மண்வெட்டி, கொழு முதலிய பயிர்ச் செய்கைக்கான உப கரணங்களைக் கண்டு பிடித்தார்கள்.

1905 ஆம் ஆண்டு சென்னை அருங் காட்சியகத் துணைக் கண்காணிப்பாள ராகப் பொறுப்பேற்ற அலெக்சான்டர் ரீ, ஆதிச்சநல்லூரில் செய்த அகழ்வாய்வில் கிடைத்த பொருட்களுக்கு மிக நுணுக் கமான பட்டியல் ஒன்று தயாரித்தார். அகழ்ந்தெடுத்த பொருட்கள் அனைத் தையுமே சென்னை அருங்காட்சியகத்தில் சமர்ப்பித்தார். அகழ்வாராச்சியில் அவர் கண்டு பிடித்தவற்றுள் மிக முக்கிய பொருட்கள், மக்கள் பயன்படுத்திய இரும்புக் கருவிகளே.

அலெக்சான்டர் ரீ, அக்கால மக்கள் பயன் படுத்திய இரும்பாலான கருவிகளைக் கண்டு ஆச்சரியப்பட்டார். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இங்கு வாழ்ந்த தமிழர்கள் இரும்பைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். அப்படியானால்,

அதை உருக்குவதற்கான உலைகள் எங்கே? அதை செதுக்குவதற்கும் சீராக்கு வதற்கும் எத்தகைய தொழில் நுட்பங் களைக் கையாண்டார்கள்? போன்ற பல வினாக்கள் எழுந்தன.

தமிழர் இரும்பைக் கண்டுபிடித்து தேன் இரும்பு, வார்ப்பு இரும்பு, எஃகு இரும்பு ஆகியவற்றை உருவாக்கி இருக்கின்றனர்.

பயிர்த்தொழில், சட்டி-பானை வனையும் தொழில், நெசவுத் தொழில், கப்பல் கட்டும் தொழில் போன்றவற்றை இரும்புக் கருவிகள் மூலம் திறம்பட வளர்த்து கடல் வாணிபம் செய்து உலகப் புகழ் பெற்ற வர்கள் தமிழர் என ஆதிச்சநல்லூரில் கிடைத்த அகழ்வாய்வுச் சின்னங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இரும்பு, வளையும் தன்மையும் மழுங்கும் இயல்பும் கொண்ட உலோகம், அத்துடன் இயல்பாகவே துருப்பிடிக்கும் தன்மை கொண்டது. இரும்புடன், நிக்கல், குரோமி யம் போன்ற உலோகங்களை குறிப்பிட்ட விகிதத்தில் கலந்து எஃகு, தேனிரும்பு (மாழை), வார்ப்பிரும்பு போன்ற கலப்பு உலோகங்களை உருவாக்குவர். இரும்பு அதிக வெப்பத்தைத் தாங்கும் திறனும் உறுதியும் கொண்டிருப்பதால் பயன்பாட் டில் முன்னிலையில் இருந்திருக்கிறது.

பண்டைக் காலத்திலேயே தமிழர், எகிப்து, ஆப்பிரிக்கா, சுமேரியா, கிரீஸ், மெக்சிகோ முதலிய நாடுகளுக்கு இரும்புப் பொருள் கள் ஏற்றுமதி செய்து வந்தனர். எகிப் தியர்களும், கிரேக்கர்களும் இந்திய நாட்டில் இருந்துதான் இரும்பை உருக்கி பயன்படுத்தும் முறைகளை அறிந்தனர் என்று கூறப்படுகிறது.

அறிஞர் ஹீத் என்பவர், 1837ஆம் ஆண்டு இராயல் ஏஷியாட்டிக் சொசைட்டியில் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரை ஒன்றில், தென் இந்தியாவில் செய்யப்பட்ட எஃகுப் பொருட்களே எகிப்துக்கும் ஐரோப்பா கண்டத்திற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன என்று எடுத்துக் காட்டியுள்ளார்.

எகிப்தில் கிடைத்த தமிழ் பிராமி கல் வெட்டிலிருந்து சாத்தன், கண்ணன் என்ற இரு தமிழர்கள், எகிப்து நாடு சென்று அங்கே கொல்லன் பட்டறை ஒன்று நிறுவி, பணி செய்ததாக ஆய்வாளர் ஐராவதம் மகாதேவன் குறிப்பிட்டுள்ளார். பிரமிடுகள் கட்டப் பயன்படுத்திய கற்களை செதுக்குவதற்குரிய உளிகள் இந்த கொல் லன் பட்டறையில் உருவாகி இருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது.

தமிழனின் இரும்பு நாகரிகத்தை வெளிப் படுத்தியது ஆதிச்ச நல்லூர்தான். பண் டைக் காலத்தில் ஆதிச்சநல்லூரில் வாழ்ந்த மக்கள் நாகரிகம் மிக்கவர்கள் என்ற கருத்தை டாக்டர் கால்டுவெல் அவர்களும் வெளியிட்டார்.

செக் நாட்டில் பிறந்த கமில் சுவிலபில் தமிழைக் கற்றார். சமஸ்கிருதத்திலும் திராவிட மொழியியலிலும் தனித்தனியே இரு முனைவர் பட்டங்கள் பெற்றார். ஆய் வுகள் நிறையவே செய்திருக்கிறார். இவர் ஆதிச்சநல்லூரில் கிடைத்த தொல்லியல் பொருட்களை கொண்டு அங்கு வாழ்ந்த மக்களின் பண்பாட்டை பின்வருமாறு வகைப்படுத்துகிறார்.

ஆதிச்சநல்லூரில் வாழ்ந்த மக்கள் போர் வீரர்களாக இருந்தனர். குதிரைகளைப் பயன்படுத்தக் கற்றிருந்தனர்.

இரும்பை உருக்கவும் வார்க்கவும் அதை வைத்துப் போர்க் கருவிகள் செய்யவும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. இப்பகுதி யில், கிராமங்களில் இன்றும் இரும்புக் கருவிகள், விவசாய தளவாடங்கள் செய் வது குறிப்பிடதக்கது.

கொற்றவையை போரில் வெற்றி பெறவும் வெற்றியின் கடவுளாகவும் வழிபட்டனர்.

ஆதிச்சநல்லூர் மக்களின் இயலும் இசை யும் போரின் வீரச்செயல்களை போற்றிப் பாடும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். போர்ப்பறையைச் சடங்குகளில் இசையாக வாசித்திருக்க வேண்டும்.

ஆதிச்சநல்லூர் நாகரிகம் ஒரு நெல் நாகரிகம்:

இதுவரை நாம் கண்டவற்றிலிருந்து ஏறக் குறைய கி.மு. 1000 ஆம் ஆண்டளவில் தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் 'தமிழகத் தில் ஒரு பொருளாதாரப் புரட்சிக்கு வித் திட்டனர்' எனலாம்.

உலோகங்கள் அனைத்தும் உலகின் எப்பகுதியிலும் கிடைக்கும் என்பதில்லை. அவரவர் நிலவளத்திற்கு ஏற்ப உலோகங் கள் கிடைத்திருக்கின்றன. இரும்பும் அவ் வாறே, தென்னிந்தியாவில், ஆதித்தமிழரால் கண்டறியப்பட்டது. அதனைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து தமிழகத்தின் வளத்தைப் பெருக்கினார் கள். மேலைக் கடலில் வணிகம் செய் தாலும் இவர்கள் மேலைக் கடலை

தொடர்தல் 50ம் பக்கம்

தொல் தமிழகத்தில்...

49ம் பக்கத் தொடர்ச்சி...

ஆதிக்கம் செய்ததற்கான சான்று இல்லை. ஆனால் மேலைத் தேசத்தில் ஈட்டிய செல்வத்தில் கீழைத் தேயங்களில் கடலாதிக்கம் செய்திருக்கலாம் என்று அனுமானிப்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன.

இத்தகையதொரு பண்பாட்டுக்குச் சொந்தக்காரரான பண்டைய மக்களின் வரலாற்றை எமது இலக்கியங்கள் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பது இவ் ஆய்வின் இரண்டாம் பகுதி.

தொல்காப்பியம்:

இப்பகுதியில் நான் தொல்காப்பியத்தைப் பற்றிக் கூறும்போது பிற்காலத்து உரையாசிரியர்கள் கருத்து எதனையும் தொடவும் இல்லை. வெறுமனே தொல்காப்பிய நூற்பாக்கள் மட்டுமே ஆயப்படுகின்றன. அத்துடன் தொல்காப்பியம் பொருளதிகாரத்தைப் பொறுத்தவரை திணைப் பிரிவுகளின் அடிப்படையிலும் மானிடவியல் அடிப்படையிலும் எனது பார்வை அமைந்திருக்கும்.

எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களையும் 27 இயல்களையும் 1611 நூற்பாக்களையும் கொண்டது தொல்காப்பியம். மொத்தம் 1611 நூற்பாக்களைக் கொண்ட தொல்காப்பியத்தில் முப்பதே நூற்பாக்களைக் கொண்ட புறத்திணையியல் வரலாற்று ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல தமிழை நேசிக்கும் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் மிக முக்கியமான வரலாற்று ஆவணமாகும்.

தொல்காப்பியத்தில் புறத்திணை மரபு:

தொல்காப்பியர், தமிழகத்தின் புற வாழ்வியலை, அதாவது தமிழக ஆதி அரசியலின் போர்ப் பகுதியையும் அதன் விளைவுகளையும் திணைகளாகவும் துறைகளாகவும் வகுத்துத் தமிழ் நாட்டின் ஆதி வரலாற்றையே வரைந்து காட்டியிருக்கிறார். இவர் காட்டும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை முதலிய போர்களைப் பார்க்கும் போது (விரிவஞ்சி விடப்பட்டது) தொல்காப்பியம் அரச உருவாக்க காலத்தில் பாடப்படவில்லை, அரச விரிவாக்கக் காலத்தில்தான் பாடப்பட்டது என்பது உறுதியாகிறது. தொல்காப்பியர் காலத்தில் வேந்தர்கள் உருவாகி விட்டார்கள்.

இப்போர்கள் அரச உருவாக்கத்தைக் குறிக்கின்றன என்பதை விட அரச விரிவாக்கத்தைக் குறிக்கின்றன என்று கூறுவது பொருந்தும். தொல்காப்பியம், புறத்திணை இயல் தனிப்பட்ட எந்த ஒரு அரசையோ, அரசனையோ, அரச பரம்பரையையோ பற்றிக் கூறுவதாக இல்லை. மாறாக பண்டைக் காலத்து அரசுகள் நில அடிப்படையில் எப்படி இருந்தன என்று புரிந்து கொள்ளத்தக்க 'மாதிரி அரசுகளைக்' (models) காட்டுவதாக அமைந்திருக்கிறது.

புறத்திணையியலில் கூறப்படும் போர் முறைகளைச் சிறிது சுருக்கமாகப் பார்க்கலாம். மலைப் பகுதியாகிய குறிஞ்சித் திணைப்புறம் நிரைகோடலும் நிரைமீட்டலுமாகிய வெட்சிப் போரும் கரந்தைப் போருமாகும். காட்டுப் பகுதியாகிய முல்லைப் புறம், 'மண்ணசை வேந்தனை வேந்தன் அஞ்சுதகத் தலைச் சென்று அடல் குறித்த வஞ்சிப் போர்' மண் ஆசையால் இரு அரசரிடையே நடக்கும் வஞ்சிப் போர் ஆகும், வயல் நிலப் பரப்பாகிய மருதநிலத்து மன்னனது எயில், அதாவது அரணை அழித்தலும் அரணுக்கு உள்ளே இருக்கும் மன்னன் தன் அரணை எதிரி மன்னனிடமிருந்து காத்தலுமாகிய உழிஞைப் போரும் நொச்சிப் போரும் ஆகும். கடல் சார்ந்த நெய்தல் புறம், இரு பெரு வேந்தரும் 'மைந்து பொருளாக' தமது வலியை நிலைநாட்டுவதற்காக, நடக்கும் தும்பைப் போர் ஆகும். பாலைப்புறம் என்பது எத்துறையிலும் எவரும் ஈட்டும் வெற்றியைக் குறிப்பது. காஞ்சி நிலையாமையையும், பாடாண், பாடப்படும் ஆண்மகனின் வீரம், வெற்றி முதலிய சிறப்பியல்புகளையும் கூறுவது.

மிகச் சிறிய சொற்களால் கூறப்பட்ட இப் போர் முறைகளை நுணுகி ஆராய்வாருக்கு இப் போர்களின் தன்மை தெளிவாகும். காவல் காடுகள், அகழிகள், அரண்கள், முழுமுதல் அரணத்தைச் சென்ற வேந்தன் வளைத்தலும் இருந்த வேந்தன் காத்தலுமாகிய போர்கள் என்று இப்படியே சொல்லிக் கொண்டே போகலாம். அவர்களது போர் முறை வியக்கத்தக்கது.

தொல்காப்பியத்தில் வாழ்வியல்:

அரச உருவாக்க காலத்திலிருந்த ஐவகை நிலத்திலும் வாழ்ந்த மக்களது வாழ்க்கை பொதுவாகப் போரை முன்னிலைப் படுத்தியதாகவே இருந்திருக்கிறது.

'ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல்
கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே,
ஒளிறு வாள் அருஞ் சமம் முருக்கி,
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே'

வாகைத் திணையில், மூதில்முல்லைத் துறையில் பொன்முடியார் பாடிய இப் பாடல் அக்கால நிலையை விளக்குகிறது. சமூகத்தில் குழந்தை பிறப்பதற்கு முன்னதாகவே அவன் கடமைகள் தீர்மானிக்கப்பட்டு விட்டன. தாய், தந்தை, மன்னன், கொல்லன் ஆகியோர் அந்த இலக்கை நோக்கியே பயணிக்கிறார்கள். சமூகத்தில் தொழிலின் முக்கியத்துவம் கருதி கொல்லனுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. போருக்குத் தேவைப்பட்ட ஆயுதங்களைச் செய்பவன் அவன்தானே. அக்காலச் சமூகத்தின் இலக்குக்கு இப்பாடல் ஒன்றே போதுமான எடுத்துக் காட்டாகும்.

வினைவலர்:

தொல்காப்பியம், அகத்திணையியலில்
'அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை இலபுறத்து என்மனார் புலவர்'
- தொல். அகத். 25

இந்நூற்பாவில், இன்னுமொரு ஆய்வுக் குரிய பொருளான 'அடியோர்' என்னும் பதத்தை இந்த ஆய்வில் தவிர்த்துக் கொள்கிறேன்.

இந்நூற்பாவில், வாள், வேல் முதலிய போர் ஆயுதங்களை வடிவமைத்தும் திருத்தியும் தொழில் புரியும் கொல்லர், பொன் அணிகலன்கள் செய்யும் பொற் கொல்லர், செப்புத் தொழிற்சாலைகளில் செப்பு உருக்கிப் பாத்திரங்கள் செய்யும் கம்மியர், பருத்தி ஆலைகளில் தொழில் புரியும் நெசவாளர், மரவேலை செய்யும் தச்சர், மண்பாண்டங்கள் செய்யும் குயவர், கப்பல் கட்டுபவர்கள் என்று பலதிறப்பட்ட துறைசார்ந்த வல்லுனர்களையே வினைவலர் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். அவர் காலத்தில் மட்டுமல்ல அவருக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்திருந்த இலக்கண ஆசிரியரும் இவ்வாறே கூறியிருக்கிறார் என்பதைத் தொல்காப்பியர் பதிவு செய்திருக்கிறார். எனவே எமது இந்த வரலாறு தொல்காப்பியர் காலத்திற்கு முன்னையது என்பதைக் குறித்துக் கொள்ளுவோம். அது மட்டுமல்லாமல், தொல்காப்பியர் காலத்தில் தொழில், வர்த்தகம் முதலியன இத்தனை துறைகளிலும் நடந்திருப்பதை ஆதிச்சநல்லூர் ஆய்வுகளும் சான்று பகர்கிறது என்பதையும் குறித்துக் கொள்ளுவோம்.

இரும்பின் தொழில் நுட்பம்:

தென்னிந்தியாவில் இரும்புத்தாது ஏராளமாகக் கிடைத்தது. இரும்பை எஃகாக மாற்றுவது என்பது இரும்பில் சமச்சீரான அளவில் தேவைப்படும் அளவிற்குக் கரியத்தைச் சேர்ப்பதாகும் என்று ஏற்கெனவே கண்டோம். இரும்பை எஃகாக மாற்றுவதற்குத் தனி நிபுணத்துவம் பெற்றிருக்க வேண்டும். இதனைச் சங்கால மக்கள் பெற்றிருந்தார்கள் என்பதை அண்மைக் கால ஆய்வுகள் புலப்படுத்துகின்றன என்கிறார் பேராசிரியர் கா. ராஜன்.

மேலும் இரும்பை உருக்க 1100° சென்டிகிரேட் வெப்பநிலையும் எஃகாக மாற்ற 1300° சென்டிகிரேட் வெப்பநிலையும் தேவை. இந்த வெப்பநிலையை கொடுமணலில் கிடைத்த உலைக்கலங்கள் அடைந்தன என்பதை ஆய்வுகள் உறுதிப்படுத்துவதை ஏற்கெனவே கண்டோம். மேலும் இந்தியத் தொழில்நுட்பக்கழகத்தின் ஆய்வாளர்கள் ரகுநாதராவ், சசி-சேகரன் ஆகிய இருவரும் இணைந்து தகடூர் பகுதியில் குண்டூரில் கிடைத்த உலைக்கலங்கள் மீது நடத்திய உலோகவியல் ஆய்வு அங்கு வார்ப்பு இரும்பு செய்யப்பட்டதை எமக்கு உணர்த்துகிறது என்கிறார் பேராசிரியர் ராஜன் அவர்கள்.

எஃகும் வார்ப்பு இரும்பும் மேலை நாடுகளுக்கு மிகுதியாக ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதை இவை உறுதி செய்கின்றன. இக்காலத்தில் ஏற்பட்ட இரும்பின் கண்டுபிடிப்பும் இரும்புத் தொழில் நுட்பத்தில் தமிழ் மக்கள் பெற்ற தேர்ச்சியுமே இக் காலத்தைத் தமிழகத்தின் பொற்காலமாக மாற்றியது எனலாம்.

உலோகங்களின் பயன்பாடு:

சங்ககாலத்தில் இரும்பு, செம்பு, பொன், வெள்ளி முதலிய உலோகங்கள் பயன்பாட்டில் இருந்தன. தொல்காப்பியத்தில் 'வினைவலர்' என்று கூறப்பட்ட வல்லாளர்களது கைத்திறன் பற்றிய பதிவுகளைப் பார்க்கலாம். தொல்காப்பியத்தில் வாள், வேல், கணை முதலிய ஆயுதங்கள் பேசப்படுகின்றன. தொல்காப்பிய நூற்பாவில் -

'வருதார் வழங்கல் வாள்வாய்த்துக்
கவிழ்தல் என்று'
- தொல். புறம். 63-15 (வெட்சி) என்றும்

'குடையும் வாளும் நாள்கோள் அன்றி
மடையமை ஏணிமிசை மயக்கமும் ...
வென்ற வாளின் மண்ணோடு ஒன்ற'
- தொல். புறம். 69-1, 11 (உழிஞை) என்றும்

'கணையும் வேலும் மொய்த்தலிற்
சென்ற உயிரின் நின்ற யாக்கை'
- தொல். புறம். 71-1, 2 (தும்பை)

என்று இவ்வாறெல்லாம் இரும்பின் உபயோகம் பேசப்படுகிறது.

தொல்காப்பியத்தில் அரசியல்:

தொல்காப்பியம், புறத்திணையியல் பெருவியப்புத் தரும் அரசியலமைப்பைக் காட்டி நிற்கிறது. தொல்காப்பியத்தில் எவ்விடத்திலும் குறிப்பிட்ட அரசர், அரச பரம்பரையினர் பற்றிய தகவல் தரப்படவில்லை. ஆனால்,

புறத்திணையியலில் சேர, சோழ, பாண்டியர் பற்றிய குறிப்பொன்று வருகிறது.

'..... உறுபகை
வேந்திடைத் தெரிதல் வேண்டி
ஏந்துபுகழ்ப்
போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெரும் தானையர் மலைந்த பூவும்'
- தொல். புறம். 5

போந்தை, வேம்பு, ஆர் என்று முறையே சேர, பாண்டிய, சோழரது அடையாளப் பூக்கள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. இது மூவேந்தரின் ஆரம்பநிலையாகவும் இருக்கலாம்.

தொல்காப்பியம் கூறும், அரசர்கள், நாற்படை, போர், போருக்கான காரணம், போர்க்களங்கள், காவற்காடுகள், அகழிகள், அரண்கள், அரணில் அமைந்துள்ள ஆயுதக் கிடங்குகள், பாசறைகள், பாசறையின் அமைப்பு, அங்கு வைக்கப் பட்டிருக்கும் ஆயுதங்கள், நாற்படைகள், இத்தனையையும் உருவாக்கும் திறனுள்ள வினைவலர், வினைத்திறன் வியக்கத் தக்கவையே.

சங்கத் தொகை நூல்களில் இரும்பு:

சங்க இலக்கியத் தொகை நூல்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகியவை இரும்பு மற்றும் எஃகுத் தொழில் நுட்பம் மற்றும் பயன்பாடு பற்றி பல செய்திகளைப் பதிவு செய்துள்ளன.

பத்துப்பாட்டுள் முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை ஆகிய மூன்று பாடல்களில்தான் போர் பற்றிய தகவல்கள் அதிகம் பாடப்பட்டிருக்கிறன. பெரும் பாணாற்றுப்படையில் -

'... .... பருந்து பட,
ஒன்னாத் தெவ்வர் நடுங்க, ஓச்சி,
வைந்நுதி மழுங்கிய புலவுவாய் எஃகம்
வடி மணிப் பலகையொடு நிரைஇ, முடிநாண்
சாபம் சார்த்திய கணை துஞ்சு வியல் நகர்
ஊகம் வேய்ந்த உயர்நிலை வரைப்பின்,
வரைத்தேன் புரையும் கவைக்கடைப் புதையொடு,
கடுந்துடி தூங்கும் கணைக்காற் பந்தர்த்
தொடர் நாய் யாத்த துன்னருங் கடிநகர்
வாழ் முள் வேலிச் சூழ் மிளைப் படப்பைக்
கொடு நுகம் தழீஇய புதவின், செந்நிலை
நெடு நுதி வயக்கழு நிரைத்த வாயில்'
- பெரும்பாணாற்றுப்படை (117-128)

11 அடிகள் கொண்ட இப்பகுதியில் எயினர் அரண் சிறப்பாகப் பாடப்பட்டுள்ளது.

'எயினர் அரண்களுக்குள் பெரிய வீடுகள் இருந்தன. அவ்வீடுகளில் பழுது பார்க்கப்பட்ட வேல்கள், மணி கட்டிய கேடயங்களில் செருகி வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. ஏற்றிய நாணோடு கூடிய வில்லைச் சார்த்தி வைத்த அம்புகள் குவிந்து கிடந்தன. அவ்வீடுகளுக்கு எதிரில் ஒரு பந்தல் இருந்தது. அந்தப் பந்தலில் அம்புக் கட்டுக்களும் கடிய ஓசையை எழுப்ப வல்ல 'துடி' என்னும் இசைக் கருவிகளும் வைக்கப்பட்டிருந்தன. வேல், வில், துடி வைத்திருந்த இல்லங்களைக் காக்க காவல் இல்லம் ஒன்று இருந்தது. அவ்வில்லத் தூண்களில் வேட்டை நாய்கள் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தன. அனைத்து இல்லங்களைச் சூழவும் முள் வேலி அமைக்கப்பட்டிருந்தது. அதனைச் சுற்றிக் காவல் காடு இருந்தது. எயினர் அரணுடைய முன்வாயிலில் நெடிய கூரிய கழுக்கள் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன என்று அமைகிறது இப்பாடற் பகுதி.

இப்பாடற் பகுதியில் கூறப்பட்ட வீடுகள், அரண்கள், வேல்கள், மணி கட்டிய கேடயம், விற்கள், அம்புகள், துடி, நாய் கட்டிய தூண்கள், நாய் கட்டிய சங்கிலி, மதில்கள், நெடு வாயில், கழுமரங்கள் என்ற அனைத்து தேவைகளையும் செய்யத்தக்க செயல் திறம் நிறைந்த வினைவலர், இரும்பு, எஃகு முதலியவற்றின் பயன்பாட்டின் துணையுடன் இத்தனை வேலைகளையும் செய்தார்கள் எனலாம். இத்தகைய செயற்பாடுகளுக்கு உலோகங்களின் பயன்பாட்டுடன் ஆதித் தமிழரின் அயராத உழைப்பும் செயற்திறனும் காரணம் எனலாம்.

எட்டுத் தொகை இலக்கியங்களிலும் இரும்பு மற்றும் எஃகுத் தொழில் நுட்பம்

தொடர்தல் 51ம் பக்கம்

தொல் தமிழகத்தில்...

50ம் பக்கத் தொடர்ச்சி...

அவற்றின் பயன்பாடு பற்றி நிறையச் செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பொன், இரும்பொன், கரும்பொன், கருந்தாது, இரும்பு, எஃகு, கொல்லன், கருமைக் கொல்லன், உலை, உலைக் கூடம், உலைக்கல், துருத்தி, விசைவாங்கி, விசைத்து வாங்கு துருத்தி, மிதியுலை, ஊது குருகு, குடம், குறடு, குறுக்கு போன்ற தொழில்நுட்பக் கலைச் சொற்கள் சங்க காலத்திலேயே இரும்பை உருக்கி எஃகாக உருமாற்றும் தொழில் நுட்பம் அறியப்பட்டிருந்ததைக் உறுதிப் படுத்துகின்றன.

இரும்பின் அன்ன கருங்கோட்டுப்
புன்னை
நீலத்து அன்ன பாசிலை அகந்தோறும்
வெள்ளி அன்ன விளங்கினர் நாப்பண்
பொன்னின் அன்ன நறுந்தாது உதிர.

- நற்றினை 249: 1-4

இந்தச் செய்யுளில் உலோகங்கள் உவமை களாகப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. இரும்பு புன்னை மரத்தின் கரிய கிளை களுக்கும் நீலம் மரத்தின் பசுமையான இலைகளுக்கும் வெள்ளி மரத்தின் இலை களின் நடுப் பகுதியில் காணப்படும் நரம்புகளுக்கும், பொன் மரத்தின் நறுந் தாதுக்களுக்கும் உவமையாகப் பேசப் படுகின்றன.

இரும்பை உருக்கி எஃகாக மாற்றி கருவி களைச் செய்தோர் கொல்லர். இவர்களது தொழிற்கூடம் உலை எனப்பட்டது. கொல் லன், உலைக்கல், துருத்தி, சம்மட்டி, பட்டடைக்கல் முதலிய துணைக்கருவி களையும் பயன்படுத்தினான். போர்க் கருவிகள் மட்டுமல்லாது தச்சுவேலை முதலிய பிற தேவைகளுக்கும் இரும்பு பயன்படுத்தப்பட்டது. வேளாண்மை செய் வதற்குரிய வேளாண்கருவிகளையும் இவர் கள் உருவாக்கினர்.

சங்கத்தொகை நூல்களில் உலைக்களம்:

'அசைவரல் வாடை தூக்கலின் ஊதுஉலை
விசைவாங்கு தோலின் வீங்குபு ஞெகிழும்'

அகநானூறு 96

'கொல்லன் குருகு ஊது மிதி உலை'

- அகநானூறு 202

'இரை தேர் எண்கின் பகு வாய் ஏற்றை
கொடு வரிப் புற்றம் வாய்ப்ப வாங்கி
நல் அரா நடுங்க உரறி கொல்லன்
ஊது உலைக் குருகின் உள் உயிர்த்து
அகழும்
நடுநாள் வருதல் அஞ்சுதும் யாம்'

- நற்றிணை 125

'காமுறு தோழி காதல் அம் கிளவி
இரும்பு செய் கொல்லன் வெவ் உலைத்
தெளித்த
தோய் மடல் சில் நீர் போல
நோய் மலி நெஞ்சிற்கு ஏமம் ஆம்சிறிதே'

- நற்றிணை 133

'வெள்ளி, செம்பு, வெண்கலம், பித்தளை
வெள்ளி விழுத்தொடி மென் கருப்பு
உலக்கை'

- அகநானூறு 286 - ஓரம்போகியார்

'வெள்ளிப் பூண் இட்ட கருப்பு உலக்கை
... மாசில் வெள்ளிச்
சூர்ப்புறு கோல் வளை...'

- அகநானூறு 142, பரணர்

'செம்பு இயன்றன்ன வெய்வுறு நெடுஞ்சுவர்'

- நெடுநல்வாடை 112

இவை சில எடுத்துக்காட்டுகளே.

புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக் கோட்டை என்ற இடத்தில் செம்பாறங் கற்படுகையில் குழி அமைப்புகள் காணப் படுகின்றன. செந்நாக்குழி என்று அங்குள்ள வர்கள் அவற்றை அழைப்பர். இது சங்க காலத்தைச் சேர்ந்த பழங்கால உருக்கு ஆலையாகக் கருதப்படுகிறது.

தொழிற்கூடங்கள்:

பத்துப்பாட்டு இலக்கியம், பல தொழில் களையும் அத்தொழில் செய்வதற்குரிய கருவிகளையும் பற்றிக் கூறுவதை ஒருங் கிணைத்துப் பார்க்கும்போது பலதரப்பட்ட தொழிற்சாலைகள் சங்ககாலத்தில் செயற் பட்டு வந்திருக்கின்றன என்று அனுமா னிக்கக் கூடியதாக உள்ளது. மட்பாண்டத் தொழிற்சாலை, தச்சுத் தொழிற்சாலை, கொல்லத் தொழிற்சாலை, நெசவுத் தொழிற் சாலை முதலிய தொழிற்சாலைகள் இயங் கியமை அனுமானிக்கக் கூடியதாக உள்ளது. இதனைத் தொல்லியலாளரும் உறுதி செய்கிறார்கள்.

மாளிகைகள்:

- தொண்டைநாட்டுத் துறைமுகப்பட்டினம் விண்ணைத் தொடும் அழகிய மாட மாளிகைகளைக் கொண்டிருந்தது என்று பெரும்பாணாற்றுப்படையும்
- பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரைமாநகரின் மாடமாளிகைகள் பற்றி மதுரைக்காஞ்சியும்
- காவிரிப்பூம்பட்டினத்துப் பெருமாளிகை கள் பற்றிப் பட்டினப்பாலையும்
- பாண்டிய மன்னரது அரண்மனை பற்றி நெடுநல்வாடையிலும் மன்னனது எழு நிலை மாடம் பற்றியும்

பாடப்பட்டிருக்கிறது.

சங்ககாலச் சமூகம் சிறப்புற இருந்ததற்கு அக்காலப் பொருளாதாரம் முக்கிய காரணமாக இருந்தது. நாணயங்கள் உலோகங்களால் செய்யப்பட்டுள்ளன. அவை கண்டறிந்த இடத்தைக் கொண்டு அவற்றை வெளியிட்ட மன்னனின் நாட்டு எல்லை, வணிகத் தொடர்பு முதலியவற்றை அறியலாம். அவற்றின் வகை, தரம் முதலியவற்றைக் கொண்டு அக்கால மக்களின் உற்பத்தித் திறன், அவை வெளியிட்ட காலத்தின் வரலாறு, பொரு ளாதாரம், பண்பாடு முதலிய பல தகவல் களை அறியலாம்.

'மொழி பல பெருகிய பழிதீர் தேஎத்துப், புலம்பெயர் மாக்கள் கலந்தினிது உறையும், முட்டாச் சிறப்பின் பட்டினம்' என்று பட்டினப்பாலை (அடி 216-218) பல மொழிபேசும் பல்லின வணிகர்கள் பல நாடுகளிலிருந்தும் வணிகத்தின் பொருட்டு வந்து காவிரிப்பூம்பட்டினத்தில் குடியேறிக் கூடியிருந்தமை கூறப்படுகிறது.

இது ஏறக்குறைய கி.மு 10 ஆம் நூற் றாண்டளவில் பெரியதொரு பொருளாதாரப் புரட்சி தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் காட்டி நிற்கிறது. சான்று எங்கே என்று நீங்கள் கேட்கலாம். 11 ஆம் நூற்றாண்டில் தெற்காசியப் பிராந்தி யத்தில் கொடிகட்டிப் பறந்த ராஜராஜ சோழன் வாழ்ந்த மாளிகையே இருந்த இடம் தெரியாமால் போய் விட்டது. இந்த நூற்றாண்டின் தொடக்க காலத்தில் உலகமே பிரமிப்புடன் நிமிர்ந்து பார்க்க வைத்த தலைவன் பிரபாகரனின் அதிகாரத் தின் கீழிருந்த தமிழீழம் சிறிது சிறிதாக எம் கண் முன்னாலேயே அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழர் என்ற ஒரு இனமே அங்கு வாழ்ந்ததற்கான அறிகுறி இல்லாமல் ஆக்கும் முயற்சிகள் மிக விரைவாக நடந்து கொண்டிருக்கின்றன.

உண்மைநிலை இதுவாக இருக்கும் பொழுது, 3000 ஆண்டுகளுக்கு முன் செல்வச் செழிப்புடன் இருந்ததாகக் கூறப் படும் ஒரு இனத்தின் எச்சம் எமக்குக் கிடைப்பதே பெரும் காரியம்.

இங்கு வாழ்ந்த மன்னர்கள் பற்றிய ஆய்வு மிக்க பயனுள்ளதாக இருக்கும். பார்க் கலாம்.

selvanayaki.s@thaiveedu.com

FOR SALE/ LEASE

FOR ALL YOUR REAL ESTATE NEEDS

WILSON RD N / TAUN RD EAST
OSHAWA
FOR LEASE

Bedrooms:3 Washrooms:2

BRIMLEY/ELLESMERE
TORONTO
FOR LEASE

Bedrooms:6+3 Washrooms:3

HIGHWAY 7/BAYVIEW
RICHMOND HILL
FOR LEASE

Bedrooms:1+1 Washrooms:1

YONGE/SHEPPARD
TORONTO
FOR LEASE

Bedrooms:1 Washrooms:1

BAY/HARBOUR
MARKHAM
FOR LEASE

Bedrooms:1 Washrooms:1

MCCOWAN RD/HWY 401
TORONTO
FOR LEASE

Bedrooms:2+1 Washrooms:2

HURONTARIO/EGLINTON
MISSISSAUGA
FOR LEASE

Bedrooms:2 Washrooms:2

N OF KINGSTON/S OF FINCH
PICKERING
FOR LEASE

Bedrooms:2 Washrooms:2

BAYVIEW/ELGIN MILLS
TORONTO
FOR LEASE

Bedrooms:3 Washrooms:1

HWY 7/ 9TH LINE
MARKHAM
FOR LEASE

Bedrooms:3 Washrooms:3

ELLESMERE/KENNEDY
TORONTO
FOR LEASE

Bedrooms:3 Washrooms:3

YONGE / CRIMSON KING
EAST GWILLIMBURY
FOR LEASE

Bedrooms:4 Washrooms:4

FINCH/ALAMOSA
TORONTO
FOR SALE

Bedrooms:4+1 Washrooms:6

LESLIE/16 TH
RICHMOND HILL
FOR SALE

Bedrooms:5+2 Washrooms:5

KENNEDY/BUR OAK
MARKHAM
FOR SALE

Bedrooms:4+2 Washrooms:4

RE/MAX
Outstanding Agent
for Outstanding Results.
RE/MAX
Excel Realty Ltd., Brokerage
Bus: 905.475.4750 Fax: 905.475.4770 50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3

RAJ NADARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 416.333.6115
nanohomes@gmail.com

மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

இலங்கைச் சுதந்திரத்தை அண்மித்த காலம்...

கோ. நடேசய்யருக்கு அடுத்ததாக மலையகத்தில் கல்விப்புலமையோடு இலக்கிய உலகுக்குள் பிரவேசித்த சி.வி. வேலுப்பிள்ளை மற்றும் கே. கணேஷ் ஆகியோர் இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியை ஊடறுத்து வந்தவர்கள். 1948க்கு முன்பும் பின்பும் இலக்கிய உலகில் செயற்பட்டவர்கள். ஆதலால் வாய்மொழி பாரம்பரியத்தில் இருந்து தாம் பெற்ற அனுபவத்தை நவீன இலக்கிய வடிவங்களில் உலாவவிட்டவர்கள். இவர்களது ஆங்கிலப் புலமை மலையக இலக்கியச் சூழலை புதிய செல்நெறிக்கு இட்டுச்சென்றது.

இக்காலகட்ட பாடுபொருள் எல்லாமே தொழிலாளர்களின் வேலைச்சுமைகளையும், அவர்களது வாழ்விட வசதியின்மைகளையும், அவர்கள் மீதான சுரண்டல்களையும் பாடும் அவலச்சுவை கொண்டவை என்ப

பாகம்: 4

தனை மறுப்பதற்கில்லை. என்றாலும், எம் மக்கள் இந்த துயரங்களில் இருந்து மீண்டு எழுவர் எனும் நம்பிக்கை இந்த கால கட்ட படைப்புக்களில் பதிவு செய்யப் பட்டுள்ளது.

கே.கணேஷ்:

சி.வி. வேலுப்பிள்ளை ஆங்கிலத்தில் மலையகக் கவிதை எழுதிய இதே சமகாலத்தில் **தலாத்துஓயா** கே. கணேஸ் அவர்களும் ஆங்கிலத்தில் மலையகக் கவிதைகளை எழுதியுள்ளார். பின்னாளில் மலையகத்தில் மட்டுமல்லாது இலங்கையிலேயே மொழிபெயர்ப்புத்துறையில் ஆழத் தடம் பதித்த கே. கணேஸ் 1955ஆம் ஆண்டில் ஜப்பானிய சக்கரவர்த்தியின் பிறந்தநாளை யொட்டி நடத்தப்பட்ட கவிதைப்போட்டியில் பரிசு பெற்றுள்ளார்.

1946 முதலே அவர் 'பாரதி' எனும் கலை, இலக்கிய சஞ்சிகையை வெளியிட்டு வந்துள்ளார். அந்த சஞ்சிகையில் அவர் எழுதிய கவிதையொன்று பின்வருமாறு அமைகிறது.

வான் நோக்கி உயர்கின்ற
மலைகள் யாவும்
மதுவொக்கும் எனப்புகழும்
தேயிலைகள் மேவும்.
கான் ஒழித்துச் சோலை
நிகராக இதைச் செய்தோர்
கடல் கடந்து தொழிலாளர்
வியர்வை நீர் பெய்தோர்

உழைப்போர்கள் இருக்கின்ற
வாழக்கையோ தாழ்வு
உழைக்காத துரைமார்கள்
சுகபோக வாழ்வு
மழைக்காற்று மதியாது
உதிர்க்கின்ற மேல் நீர்
மனம் குளிர நாமுண்ணும்
ஒரு கோப்பை தேநீர்

தலாத்துஓயா கணேசைப் போல யாரும் இப்படி கவிதையில் தேநீரை வரைவிலக்கணப்படுத்தியது கிடையாது.

தலாத்துஓயா கே. கணேஸ்க்கு இருந்த கவிதை ஆளுமை பின்னாளில் பல சர்வதேச கவிஞர்களின் கவிதைகளை தமிழுக்கு மொழிபெயர்த்துதர உதவியுள்ளது. (கவிதை தவிர்ந்த கே. கணேஷின் ஆளுமை மகத்தானது. அது, தனியாக ஆய்வு செய்யப்படவேண்டியது).

சி.வி. வேலுப்பிள்ளை:

1931லேயே ஆங்கிலத்தில் 'விஸ்மாஜினி' (Vishmajini) எனும் பெயரிலும், 1948ல் 'வழிப் ஸ்ரீபோக்கன்' (Wayfarer) எனும் பெயரிலும் கவிதை நாடக ஆங்கில நூல்களை

கே.கணேஷ்

சி.வி. வேலுப்பிள்ளை

சக்தீ பால அய்யா



வெளியிட்டுள்ளார். இந்தியாவின் கவியரசர் ரவீந்தரநாத் தாகூர், கவிக்குயில் சரோஜினி தேவி போன்ற இந்திய கவிஞர்களின் கவிதைகளால் உந்தப்பட்டு ஆங்கில கவிதைகளைப்படைத்தவர் சி.வி. வேலுப்பிள்ளை. ஆனாலும் 1954ஆம் ஆண்டு வெளிவந்த 'In Ceylon tea garden' (இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே) என்ற ஆங்கில கவிதை நூல்தான் இவருக்கு பெரும் புகழை ஈட்டித்தந்தது.

1963ஆம் ஆண்டு ஆபிரிக்க - ஆசிய எழுத்தாளர்களின் ஒன்றியம் (Afro - Asian Writers' Bureau) தொகுத்து வெளியிட்ட ஆங்கில கவிதை நூலில் இலங்கையிலிருந்து ஆறு கவிஞர்களின் ஆங்கில கவிதைகள் சேர்த்துக்கொள்ளப்பட்டன. அவர்களின் பெயரும் கவிதைத் தலைப்புகளும்: வண.

- மல்லியப்புசந்தி திலகர் -

மஹிந்த தெரோ - 'சுதந்திரப் பிரார்த்தனை' (Prayer of Independence), ஜே.பி. விக்கிரமதிலக்க - 'சிங்கள இளைஞர்களே எழுக' (Awake Sinhala Youth), ஈவா ரணவீர - 'அவர்களை அடிபணியச் செய்யுங்கள்' (Down Them), வண. சார்ல்ஸ் வில்லியம் டி சில்வா - ' மனு ' (A Petition) சி.வி. வேலுப்பிள்ளை - 'தேயிலை ஆய்பவர்கள்' The Pluckers).

சி.வி. வேலைப்பிள்ளையின் 'தேயிலை ஆய்பவர்கள்' தவிர்த்து ஏனைய கவிதைகளின் தலைப்பை அவதானித்தால் அவற்றில் ஒரு சுதந்திர வேட்கைத் தெரியும். 1948ஆம் ஆண்டே சுதந்திரம் கிடைத்துவிட்டது. பிறகேன் 1963ஆம் ஆண்டு இவர்கள் எழுதிய கவிதையில் சுதந்திர வேட்கை இருக்க வேண்டும்? அதற்கான காரணம் 1972 தான் இலங்கை குடியரசு (Republic) ஆனது. எனவே 1948 முதல் 1972வரை அதற்கான பாடல்களாக அவை இருந்திருக்கலாம். அல்லது, இலங்கை சுதந்திர மடைந்ததன் பின்னர் உள்நாட்டில் எழுந்த அரசியல் சூழலில் இருந்து இந்த கவிதைகள் எழுதப்பட்டு இருக்கலாம்.

ஜே.பி. விக்கிரமதிலக்க எழுதியுள்ள கவிதைத் தலைப்பு 1963ல் ஏன் சிங்கள இளைஞர்களை எழச் சொய்கிறது? என்ற கேள்வியும் ஈவா ரணவீரவின் அவர்களை 'அடிபணியச் செய்யுங்க'ளும் வெள்ளையரைச் சொல்வது போலவும் கருப்பன்களைச் சொல்வது போலவும் கூட வாசிக்கப்படலாம். அவரின் கவிதை வரிகள் சிலதை ஆங்கிலத்தில் அப்படியே பார்க்கலாம்.

Down them down them down them
Till you become a free race
Till you become the race,
the people, the nation
And cease to be
The hands.
Till you lead
And all follow
Till you distribute
And all receive.
Down them down them down them
For the good of the many

தொடர்தல் 54ம் பக்கம்

மலையகக் கவிதை..

53ம் பக்கத் தொடர்ச்சி...

இலகுவான ஆங்கில மொழி நடையில் எழுதப்பட்டுள்ள ஈவா ரணசிங்கவின் இந்தக் கவிதையின் உள்ளடக்கத்தில் 'அவர்களை அடிபணியச் செய்யுங்கள்!. நீங்கள் ஒரு சுதந்திர இனம் ஆகும்வரை, ஓர் இனம் மக்கள் தேசியம் ஆகும்வரை, நீங்கள் தலைமை ஏற்கும்வரை, எல்லோருக்கும் நன்மை ஏற்படும்வரை' என்ற தொனி தெரிகிறது. இங்கே அடிபணியச் செய்யப்பட வேண்டியது யாரை என்பது தொக்கு நிற்கிறது.

இந்த ஐந்து கவிஞர்களுள் ஒருவராகவும் ஒரே ஒரு தமிழராகவும் வரும் சி.வி. வேலுப்பிள்ளையின் கவிதை ஏனையவர்களின் பொது சுதந்திர வேட்கையில் இருந்து மாறுபட்டு மலையக தோட்டத் தொழிலாளியின் உழைப்பை பற்றியதாக அமைந்தமை சி.வி.யின் முக்கியத்துவத்தை காட்டி நிற்கிறது. அதே நேரம் அந்தக் கவிதைக்குள் தன் மக்களின் 'சுதந்திரத்தை' சி.வி. வேலுப்பிள்ளை வேண்டி நிற்கிறார் என்பதுதான் சிறப்பு. அவரது கவிதை வரிகளை முழுதாக பார்க்கலாம்...

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594
Tel: 416-646-3422

Tea Pluckers

My bronze bodied men
Noose the morning light
From Dell to dale
From upland and inclines
Echoes rise and fall
To the rhythm of pickaxe
Mammoty, fork and crowbar
Forkers and pruners
Ferners and sprayers
Each skilled in the task;
They enter the field.
Disturbed beehives their hearts
Their hands honey combs
Drip warm with the sweat,

Eight hours in a day
Seven times in a week
Thus their life blood flows
To fashion this land
A paradise for some.

இந்தக் கவிதை கவிஞர் சக்தீ பால அய்யா தமிழாக்கம் செய்த 'இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே' எனும் நெடுங்கவிதையின் ஆங்கில மூலக்கவிதையில் உள்ளடங்கும் வரிகளே. அந்த ஆங்கில நெடுங்கவிதையின் ஒரு பகுதியை சி.வி. வேலுப்பிள்ளை ஆபிரிக்க - ஆசிய கவிதைகள் எனும் இந்த தொகுப்புக்காக அனுப்பி உள்ளார்.

'இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே' தமிழாக்கத்தில் (தமிழ் மொழி பெயர்ப்பு அல்ல. தமிழ் ஆக்கம்) மேலே உள்ள கவிதையின் இறுதி வரிகளை சக்தீ பால அய்யா இவ்வாறு எழுதி இருப்பார். 'இங்கெவர் வாழவோ தன்னுயிர் தந்தனன்' (பக்:19, இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே - சக்தீ பால அய்யா. மறுபதிப்பு: பாக்யா பதிப்பகம் - 2007).

சக்தீ பால அய்யா ஒன்றும் தவறாக தமிழ் ஆக்கம் செய்யவில்லை. ஆனால் ஆங்கிலத்தில் சி.வி. சொல்லவரும் அழுத்தம் அதில் இல்லை. சக்தீ ஒரு மொழி பெயர்ப்பாளர் மட்டுமல்ல, அவர் சிறந்த கவிஞர். அதுவும் 1950களில் முகிழ்ந்த கவிஞர். அந்த கால மரபுக் கவிதைத் தாக்கம் இன்றி அவரால் மொழிபெயர்ப்புக் கவிதையைக் கூட எழுத முடியாது.

சக்தீ ஒரு கலாரசிகர். கொழும்பு - டாம் வீதி சைக்கிள் கடைகளிடையே கடிதங்களை வரைபு செய்யும், தட்டச்சு செய்துதரும் ஒரு 'பழைய கிழவனாக' பார்த்தவர்களுக்கு, இன வன்முறைகளின் போது எரியூட்டப்பட்ட சக்தீ பால அய்யாவின் கலைப் பொக்கிஷங்கள் கொண்ட கலைக் கூடத்துக்கு மாற்றாகக் கொடுத்த 'கடைத் துண்டு' என எத்தனைப் பேருக்குத் தெரியும்?

சக்தீயின் தமிழாக்கம் ஒரு கலைப்படைப்பு! சிவி ஆங்கிலத்தில் எழுதியது அரசியல்!

நாம் சக்தீ யின் கண்ணாடியின் (lens) ஊடாக சி.வி.யை வாசித்துக் கொண்டு இருக்கிறோம். விமர்சித்துக் கொண்டு இருக்கிறோம்.

இந்தத் தொகுப்புக்குள் அந்த நால்வருக்குள் இந்தக் கவிதையோடு உள்ளே நுழையும் சி.வி ஒரு போராளி. 'சிங்கள இளைஞர்களே எழுக 'Awake Sinhala youth' என ஜே.பி விக்கிரமதிலக்க அழைக்கும் போது சி.வி தன் மக்களை எப்படி விளிக்கிறார் பாருங்கள்.

'My bronze bodied Men' Men என்பதை தமிழில்... 'ஆண்கள்' என எழுதினால் மொழிபெயர்ப்பு! 'மனிதர்கள்' என எழுதினால் இலக்கியம்! 'தோழர்கள்' என எழுதினால் அரசியல்!

சி.வி என்ன சொல்ல வருகிறார் என அடுத்துவரும் வரிகளில் வாசிக்கலாம்.

வெண்கலத் தோள்கொண்ட
என் தோழர்களின்
விடிகாலை
வெளிச்சத்தின் ஒலிகளவை!

உச்சிமலை சிகரத்திலும்
உள்ளே
பள்ளத்தாக்கின் வெளிகளிலும்
மலைச் - சரிவுகளிலும்
எதிரொலி வீழ்ந்து எழும்!

மண்வெட்டி, முள்ளு, பிக்காசு
கடப்பாரைகள் எழுப்பும்
அதன் தாளத்திற்கே!

முள்ளுக்குத்துக்காரர்களும்
கவ்வாத்துக்காரர்களும்
மீனாப்புல் லெடுப்பவரும்
விரைந்து நாசினி தெளிப்பவரும்
தெளிந்த அறிவு பெற்றவர்தாம்
அவரவர் அறிந்த தொழில்தனிலே!

களத்தில் அவர்கள் இறங்கையிலே
கலையும் தேனீக் கூடுகளில்
துளிகளாய் சொட்டும் தேனதுவே
கலக்கும் அவர்தம் கை வேர்வையுடன்!

நாளொன்றின் எட்டு மணி நேரமுமாய்
கிழமையின் ஏழு நாட்களுமாய்
- அவர்களின்
வாழ்க்கை ரத்தம் ஓடுவது
அந்த நிலத்தை அழகாக்கிடவே!

யாருக்கோ சொர்க்கம் ஆக்கிடவே!

(கவிதை - தமிழாக்கம் - மல்லியப்புசந்தி திலகர் - 17-05-2020 வீரகேசரி வாரவெளியீடு)

(தொடர்வோம்...)

thilagar@thaiveedu.com

முகவடு

- குமார் புனிதவேல் -

சுந்தரம் தன் வீட்டு முன் விறாந் தையில் குறுக்கும் நெடுக்குமாக ஆழ்ந்த யோசனையுடன் நடந்துகொண்டிருந்தான். உள்ளே மனைவி தொலைக்காட்சியில் நாடகம் பார்த்துக் கொண்டிருந்தாள். வளர்ந்த பிள்ளைகள் இன்னும் வீடு திரும்ப வில்லை என்பது ஞாபகத்திற்கு வரவும் தான் சிந்தித்துக் கொண்டிருந்த விடயத்தை மறந்து பிள்ளைகள் வீடு திரும்புவதற்கு பிந்தியது பற்றி சிந்தனை ஓடியது. மனம் ஒரு குரங்கு. ஒரு விடயத்திலிருந்து இன்னுமொரு விடயத்திற்கு தாவிய வண்ண மிருக்கும். தான் சிறுவயதாய் இருக்கையில் விளக்கு வைக்கும் நேரத்திற்கு முன் வீட்டிற்கு வரவேண்டும் என 'விளையாட்டு அடக்கும் சட்டம்' இருந்தது ஞாபகத்திற்கு வந்தது. ஆனால் இங்கோ விளக்கு ஏற்றிய பின்தான் வீடு திரும்புவார்கள். இவர்கள் இன்னும் சற்று வளர்ந்தால்... வீட்டு விளக்கு அணைத்த பிறகுதான் திரும்புவார்கள் போல் உள்ளது... என்று எண்ணிக் கொண்டான்.

மீண்டும் அவனுக்கு அண்ணன் மாதவன் ஞாபகம் வந்தது. அன்று காலை இலங்கையிலிருந்து வந்த தொலைபேசியே அதற்குக் காரணம். மாதவனுக்குச் சுக மில்லையாம். மாதவனைப்பற்றி யோசிக்கும் நேரத்தில் எப்போதும் அவன் முகத்தில் இருந்த கீறல் காயம் சுந்தரத்தின் நினைவுக்கு வந்து அவனைக் குற்ற உணர்விற்கு உள்ளாக்கும். மாதவன் என்றால் எவருக்கும் மனதில் வருவது அந்த வடுதான்.

பிறக்கும்போது மாதவன் மிக அழகாக இருந்தான். அப்போது முகத்தில் ஒரு காயமும் இருக்கவில்லை. மாதவனுக்கு பதினாறு வயதிருக்கும் வேளையில் அவனுக்கு அப்பா கொடுத்த தண்டனையின் விளைவுதான் அந்த வடு.

அன்று மாலை வேலையிலிருந்து திரும்பிய அவர்களின் தந்தை குளித்துவிட்டு உள் அறையில் இருந்த போத்திலை கையில் எடுத்தார். தான் வைத்த அளவிலும் சாராயம் இரண்டு விரல் குறைந்திருப்பதை கண்டதும் அடக்க முடியா ஆத்தி ரத்துடன் சத்தமாக, 'அடேய் மாதவா! இங்கே வா. எப்போ இருந்து இந்தப் பழக்கம்' என்று கையில் போத்திலை பிடித்த வண்ணம் கேட்டார்.

பாவம், அங்கு வந்த மாதவன் ஒன்றும் அறியாதவனாக 'என்ன அப்பா? என்ன பழக்கத்தைப் பற்றி கேட்கிறீர்கள்' என்றான்.

அவன் அப்படி அப்பாவி போல் கேட்டது அப்பாவின் கோபத்தை பல மடங்காக்கியது. 'என்னடா செய்றதையும் செய்துவிட்டு ஒன்றும் தெரியாதவன் போல முழிக்கிறாய்? 'காட்டுக் கிளியை கடுவன் பூனை பார்த்த மாதிரி' என்றார் இன்றும் அந்தக் காட்சி நினைவுக்கு வந்தால் சுந்தரத்திற்கு பயமாக இருக்கும். ஆனால் மாதவனோ அசையாமல் அப்பாவை நேருக்கு நேர் பார்த்தவண்ணம் நின்றான். சுந்தரத்துக்கு அப்பாவின் காலடியில் விழுந்து கெஞ்சலாமா போல் இருந்தது. ஆனால் அவனுக்கு துணிவு வரவில்லை. மாதவன் பேசாமல் இருந்திருக்கலாம். பொதுவாகவே நிரபராதிகளுக்கு அகங்காரம் கொஞ்சம் அதிகம். அதுவும் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். மாதவன் சொன்னான், 'அப்பா, ஏசுகிற நீங்கள் என்ன தவறு செய்தேன் என்று சொல்லிவிட்டாவது ஏசுங்கோவன்' என்றான்.

அப்பாவுக்கு கோபம் எல்லை மீறிவிட்டது. 'டேய்! சாராயத்தை குடித்து விட்டு ஒன்றும் தெரியாது போல் கேக்கிறாயோ? என்று கேட்டார். மாதவனோ, 'அப்பா என்ன விசர்க்கதை கதைக்கிறியள். வீட்டிலை வைத்துக் குடித்துக்கொண்டு என் மேலே பழியைப் போடுகிறீர்கள்?' என்றான். அப்பாவுக்கு கோபம் பொத்துக்கொண்டு வர தன்னை மறந்து கையில் இருந்த தடியால் அடிப்பதற்கு விசுக்க அவன் முகத்தில் பெரிய காயம் விழுந்தது. பாழாய்ப்போன சுந்தரத்துக்குத் துணிவு வரவில்லை. ஓடிப் போய் அறையில் கட்டிலுக்கருகில் முகத்தை முழங்காலில் புதைத்தபடி முடங்கிப் போய் தரையில் இருந்தான்.

அப்பா அண்ணனை அழைத்துக் கொண்டு வைத்தியரிடம் சென்றார். அந்தக் காயத்துக்கு மூன்று தையல் வேறு போடப் பட்டது. காயம் மாறுவதற்கு இரண்டு வாரம் வீட்டில் இருந்து விட்டு தையல் கழற்றியபின் பள்ளி சென்றான் மாதவன்.

மாதவன் அப்போ G.C.E O'level படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு R.L Stevenson எழுதிய Treasure Island ஆங்கிலப் பாடப்புத்தகமாக இருந்தது. அந்தப் புத்தகத்தில் வந்த வில்லன் ஒரு கடல் கொள்ளைக்காரன். பெயர் Billy Bones. அந்த கடல் கொள்ளைக்காரனுக்கு மாதவனுக்கு இருந்தது போல் ஒரு வடு இருந்தது. எனவே பள்ளி நண்பர்கள் மாதவனுக்கு பில்லி போன்ஸ் என்று பட்டப் பெயர் சூட்டி விட்டார்கள். காலப் போக்கில் அவன் நண்பர்கள் பலருக்கு பில்லி போன்ஸ் என்றால் தான் தெரியும். அவன் உண்மைப் பெயரையே மறந்து விட்டார்கள்.

அந்த நாள் முதல் சுந்தரத்திற்கு அண்ணன் முகத்தை பார்க்கவே அச்சமாயிருந்தது. அவனுடைய குற்ற உணர்வு அவனை வேதனைப்படுத்தியது. காலம் எதையும் மாற்றி விடும் என்பார்கள். ஆனால் காலம் மாதவனின் முகவடுவை மறைக்க வில்லை. அதே வேளை அதனை பார்க்கும் போதெல்லாம் சுந்தரம் படும் மனவேதனை குறைவதிலும் பார்க்கக் கூடியது என்றே சொல்லலாம்.

அன்று காலை தொலைபேசியில் வந்த செய்தி சுந்தரத்தை வாட்டி வதைத்தது. சுகயீனமாய் இருக்கும் அண்ணனுக்கு ஏதும் நடந்தால் தன்னால் தாங்க முடியாது என உணர்ந்தவனாக ஒரு முடிவெடுத்துக் கொண்டு வீட்டிற்குள் சென்றான்.

மனைவியிடம் மாதவனைப் பார்க்க தான் இலங்கைக்குப் போகப்போவதாக தெரிவித்தான், வீட்டில் ஒரு பூகம்பமே வெடித்தது. அவன் மனைவி சாந்தி அவனிடம் 'இப்ப இந்தக் கொறோனாவுக்குள்ளே அங்க போய் என்ன செய்யப் போகிறீர்கள்? வீட்டுக்குள்ளே அடைந்து இருக்க வேண்டியதுதான்' என்று கூறினாள்.

'நான் இப்ப இலங்கையை சுற்றுலா பார்க்கப் போகவில்லை. எனது அண்ணன் நோயில் படுத்திருக்கிறார். அதுதான் அவரை பார்த்து விட்டு வரலாம் என்று போகப் போறன்' இது சுந்தரத்தின் வாதம். 'அதுக்கு இந்த கொறோனா காலத்தில தானா? இவ்வளவு காலமும் இல்லாத பாசம் பொங்கிக் கொண்டு வந்திருக் கிறது?' என்று சாந்தி கேட்கவும் வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்தன.

அவன் போவது பாவமன்னிப்புக்கு என அவளுக்குத் தெரியாது. அதனை அவளுக் குச் சொல்லும் தைரியம் அவனுக்கு மில்லை. ஆனால், அந்தப் பயணத்தின் ஆபத்துகளைப் பற்றி ஒருவித சந்தேகத் திற்கும் இடமிருக்கவில்லை.

பலப்பல வாதப்பிரதிவாதங்களுக்குப்பின் அடம்பிடித்துக் கொண்டு சுந்தரம் இலங் கைக்குச் சென்றான். அப்பேலோவில் சந்திர னுக்குச் செல்வதை விட இலங்கைக்குச் செல்வது ஆபத்தாயிருந்தது. அத்தடைகள் அத்தனையும் கடந்து சுந்தரம் அண்ணன் வீட்டை அடைந்தான்.

அவன் வீட்டை அடைந்தவேளை வீட்டில் அண்ணனும் அண்ணியும் மட்டுமே இருந் தார்கள். அறையில் அண்ணன் கட்டிலில் இருந்தாலும் இருந்து கதைப்பதற்கு ஏற்ற வித்தில் தலையணையை வைத்திருந்தார் கள். சுந்தரத்தை கண்டவுடன் 'வா தம்பி, இப்ப என்ன அவசரம்? வழியில் பயணம் எப்படி இருந்தது?' என்று கேள்விக்கணை களைத் தொடுத்தான். இதற்கிடையில் அண்ணி, 'இரண்டு பேரும் கதைத்துக் கொண்டு இருங்கோ. நான் போய் தேனீர் கொண்டு வருகிறேன்' என்று அறைக்கு வெளியே சமையலறையை நோக்கி நடந் தார்.

அண்ணி வெளியே சென்றதுதான் தாமதம் காலம் தாழ்த்தாது உடனே எழுந்து சென்று அண்ணனின் கால்களைப் பிடித்துக் கொண்டு அழத் தொடங்கினான் சுந்தரம்.

'டேய் சுந்தரம் என்னடா செய்கிறாய். உனக்கு விசரா? விடு காலை. என்ன வேண்டும்?' என்று கேட்டான் மாதவன். காலைப்பிடித்த சுந்தரம் தலையை தூக்க வில்லை. அண்ணாவின் முகத்தில் அந்த வடு அப்படியே இருந்தது. அந்த வடு உள்ளவரை சுந்தரத்தின் உள்ளத்தில் உள்ள வடு மாறப்போவதுமில்லை. சுந்தரத் திற்கு அந்த வடுவைப் பார்க்க துணிவு மில்லை. அண்ணனின் பாதத்தை தன் கண் ணீரால் அபிஷேகம் செய்தபடி 'அண்ணா என்னை மன்னித்து விடுங்கள், என்னை மன்னித்தேன் என்று ஒரு தரம் சொல்லுங் கள்' என்று சொன்னான்.

'கொஞ்சம் பொறு இப்ப நான் எதற்காக மன்னிக்க வேண்டும்? அதை முதலில சொல்லு' என்று கேட்டான் மாதவன்.

அண்ணனின் முகத்தைப் பார்க்க துணி வில்லாமல், எங்கோ தொலைவில் பார்ப்பது போல் மயக்க நிலையில் சொன்னான். 'அண்ணா அப்பாவுடைய சாராயத்தை குடித்தது நான், ஆனால் நீங்கள் தான் அந்த அடியைத் தாங்கினீர்கள். நான் ஒரு கோழை, உடனே நான் சொல்லி குற்றத்தை ஒப்புக் கொண்டிருந்தால் இந்த வடுவும் வாழ்நாள் பழியும் உங்களுக்கு வந்திருக்காதல்லவா?' என்று

மாதவன் புன்னகைத்து 'சுந்தரம் எனக்குத் தெரியும் நான் அதை குடிக்கவில்லை என்று. வீட்டில் என்னை விட அம்மாவும் நீயும்தான். அதிலும் அம்மா குடிக்கமாட்டா என்றும் எனக்குத் தெரியும். அதால... குடித்தது நீதான் என்று அப்பவே தெரியும்' என்று சொன்னான்,

'அண்ணா அப்படி என்றால் ஏன் நீ அதை அப்பவே சொல்லவில்லை?' என்று சுந்தரம் கேட்டான்.

'டேய் அதெலாம் நான் மறந்து எந்தக் காலம். இப்ப நீ ஏன் இதெல்லாம் சொல் கிறாய்?' என்றான் மாதவன்.

சுந்தரமோ உடனே 'அண்ணா உன் முகத்தில் உள்ள அந்த மார்க்கை (mark) பார்க்கும் போதெல்லாம் என் குற்ற உணர்வு உறுத்தும். பத்தாதற்கு அப்பா சாகும் வரைக்கும் அதை அறிந்திருக்க வில்லை. அண்ணா நீ ஒரு தெய்வம்' என்றான்.

'சுந்தரம் நான் அதை எப்பவோ மறந்து போனன். நண்பர்கள் என்னை பிலிபோன்ஸ் எனும்போது எனக்கு ஒரு விதத்தில் திருப்தி தான். உண்மையில் உன்னைப் பார்க்க எனக்கு பெருமையாய் இருக்கிறது. நன்றி' என்றான் மாதவன்.

சுந்தரம், 'அண்ணா எல்லாருக்கும் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். ஆனால் எனக்கு நீங்கள்தான் தெய்வம்' என்று அருகில் வந்து அவனைக் கட்டிப் பிடித்தான்.

அறைக்குள் தேநீர் தட்டுடன் அறைக்குள் வந்த அண்ணி என்ன நடக்கிறது என்று புரியாது குழம்பிப்போய் நின்றாள்.

kumar.punithavel@thaiveedu.com

It so long

- சாம்ராஜ் -

மில்கிப்சன் இயக்கத்தில் வெளி வந்த பிரேவ் ஹார்ட் திரைப் படத்தில் துவக்க வசனம் இப்படியிருக்கும் 'I Am William Wallace History Always Told Me Myself as a Cult prit But History Was Wrote By Them' வரலாறு யாரால் எழுதப்படுகிறதோ அதைப் பொறுத்தே அந்த வரலாறு அமைகிறது. உலகத்தின் மகத்தான சரித்திர நிகழ்வு களுக்கு குறைந்த பட்சம் மூன்று வகை வரலாறு இருக்கிறது. ரஷ்ய புரட்சிக்கு மூன்று வரலாறு இருக்கிறது, இந்திய சுதந்திரத்திற்கு குறைந்தபட்சம் இரண்டு வரலாறு உண்டு என உடனடி உதாரணங் களை சொல்லலாம்.

அரசியல் நாவல்:

அப்படி அரசியலையும் வரலாற்றையும் இணைத்து எழுதப்பட்ட அரசியல் நாவல் கள் தமிழில் உண்டா. எல்லா நாவலும் நம் வாழ்வும் அரசியல்தான் என்று பொது வாக சொல்லலாம். ஆனால் தி. ஜானகி-ராமனின் மோகமுள்ளை ஒரு போதும் அரசியல் நாவல் என்று சொல்லமுடியாது. ஜெயமோகனின் காடு நாவலை ஒருபோதும் அரசியல் நாவல் என்று சொல்ல முடியாது.

போராட்டத்தை, சமூக வரலாற்றை, ஒரு குறிப்பிட்ட அரசியல் போராட்டத்தை, அரசி யல் நிகழ்வை, எழுதுவதை அரசியல் நாவல் என வரையறுக்கலாம்.

தமிழில் நிறைய இல்லாவிட்டாலும் ஓரள விற்கேனும் அரசியலை மையமாக வைத்து நாவல்கள் எழுதப்பட்டன. எழுதப்படுகின் றன. தொண்ணூறுகளுக்குப் பின் அரசியல் நாவல்கள் குறைந்து விட்டன. உடைந்த ரஷ்யாவின் எதோவொரு துண்டு அரசியல் நாவலை அச்சடிக்கும் ஆப்-செட் மிஷின் மீது விழுந்துவிட்டது. பொதுவாக இடது சாரி படைப்பாளிகளே இந்த படைப்பு களை எழுதினார்கள்.

ரகுநாதனின் பஞ்சும் பசியும் நாவல் தொ டக்கம் எனக் கூறலாம். கு. சின்னப்பாரதி, பொன்னீலன், தனுஷ்கோடி ராமசாமி, மேலாண்மை பொன்னுச்சாமி, ராஜம் கிருஷ்ணன், டி. செல்வராஜ், தேனீ சீருடை யான் போன்றவர்கள் எழுதினார்கள்.

கலைக்கு சம்பந்தம் இல்லாமல் கோஷங் களாக எந்த உணர்ச்சியும் இல்லாமல் பிரகடனமாக எழுதி தீர்த்தார்கள். தனுஷ் கோடி ராமசாமியின் தோழர் நாவல் சிறந்த உதாரணம். நாவலில் வரிக்கு வரி புரட்சி தான். போலீஸைப் பார்த்தவுடன் கலை யும் மக்களைப் போல மேகங்கள் கலைந் தன. எவ்வளவு புரட்சிகரம்.

மக்ஸிம் கார்க்கியின் தாய் நாவலின் பாதிப் பில் தாய்பாணி நாவல்கள் இடதுசாரி எழுத்தாளர்களால் எழுதப்பட்டன. தாய் நாவலில் ரஷ்ய சூழலுக்கு ஏற்ப அவர் கள் சமோவார் பாத்திரத்தில் நாள் முழுக்க தேநீர் அருந்த, தேனியில் நிகழும் பொன் னீலன் நாவலிலும் நாள்முழுக்க தேநீர் அருந்துவார்கள். தாய் நாவலின் கடைசி வரி 'அவர்கள் நம் அறிவை இரத்தமய மாக்க முடியாது.' ஏறக்குறைய இதே வரியோடு பொன்னீலனின் நாவல் ஒன்று முடியும்.

தேனி சீருடையானின் நிறங்களின் உல கம் என்றொரு நாவல் உண்டு. உலகத் தில் யாருக்கும் நிகழாத அனுபவம் அவ ருக்கு நிகழ்கிறது. எட்டுவயதில் அவருக்கு பார்வை போகிறது. பார்வையற்றவராகவே கல்லூரிவரைப் படிக்கிறார். வேலை தேடும் சமயத்தில் அறுவை சிகிட்சை வழி பார்வை கிடைக்கிறது. சான்றிதழ்கள் எல்லாம் பார்வையற்றவர் என்று இருக்க பார்வையுடையவராய் நேர்முகத் தேர்வுக்கு போகிறார். அதுவே அவருக்கு வேலை கிடைக்காததற்கு காரணமாகிறது. இதை நாவலாக எழுதுகிறார். இந்த நாவலுக்கு தமிழ்ச்செல்வன் ஒரு முன்னுரை எழுதுகி றார். முன்னுரையை படித்தவுடன் நாம் இதுவரை சந்தித்திராத அனுபவத்திற்கு நாம் தயாராகிறோம். ஆனால் நாவலோ நமக்கு ஏன் கண் இருக்கிறதென துயர் கொள்ள வைக்கிறது. ஒரு மகத்தான அனுபவத்தை தேனீ சீருடையான் போன்ற வர்களால்தான் ஒன்றுமில்லாமல் ஆக்க முடியும். கடவுள் உலகம் அழிவதற்கு முன் நோவாக்கப்பலை உருவாக்கினார் என்ற நம்பிக்கை உண்டு. அந்தக் கப்ப லில் கடவுள் இந்தப் புத்தங்களின் அட்டை களை கூட ஏற அனுமதிக்க மாட்டார். ஜெயகாந்தன் ஒரு குறிப்பிட்ட காலம் வரை இடதுசாரி முகாமுக்குள் நின்று எழுதினாலும் மனித உறவுகளின் சிக்கல் களையே அவர் எழுத விளைந்தார். அஸ்-வகோஷ், பா. செயப்பிரகாசம், கந்தர்வன், தமிழ்செல்வனை தனியாக பேச வேண்டும்.

> **"முகிலினி வாசித்த பிறகு கோவை உங்களுக்கு பழைய கோவை அல்ல. பவானி என்பது ஆறு மாத்திரம் அல்ல. யூகலிப்டஸ் மரங்கள் வெறும் மரங்கள் மாத்திரம் அல்ல. கோத்தகிரி மலைகள் வெறும் ரசிப்பதற்கானது மட்டுமல்ல. ஒரு நாவலில் மிகப்பெரிய வெற்றியே இதுதான் என்று கருதுகிறேன். இந்த நாவல் நம்மை தொந்தரவுக்குள்ளாக்குகிறது. துயரத்தில் ஆழ்த்துகிறது."**



இந்த மூவரில் கந்தர்வன் நீங்கலாக மற்ற வர்கள் ஒரு கட்டத்தில் புனைவுகள் எழுது வதை நிறுத்திவிடுகிறார்கள்.

மறுபடியும் ஜெயபிரகாசம் மாத்திரம் புனை வுகள் எழுத வந்தார். கலையை குதிரை என்று சொல்வதுண்டு. ஒரு குதிரையிலி ருந்து இறங்கி விட்டால் குதிரை ஓடிவிடும். ஜெயப்பிரகாசத்தை விட்டு வெகுதூரம் ஓடிவிட்டது. வெறுங்கம்போடு அதை விரட் டிக் கொண்டிருக்கிறார் ஜெ.பி..

கந்தர்வன் ஒரு கட்டத்தில் கட்சிசார் கதை கள் அல்லாது நமக்கு போதிக்கும் தன்மை யல்லாத கதைகளை பின்னால் எழுதினார். பயில்வான், கதைகளின் தேசம், போன்ற அருமையான கதைகளை எழுதினார்.

பாரதிநாதன் என்ற இடதுசாரி பின்புலம் கொண்ட எழுத்தாளரின் தறியுடன் என்ற நாவல் சமீபத்தில் வெளிவந்தது. தறி நெச வாளர்களைப் பற்றியான நாவல். அதற்கு நக்ஸலைட் பின்புலமும் உண்டு. 600 பக்க நாவலில் எழுத்தாளர் ஒவ்வொரு பக்கத்திலும் வந்து பேசுகிறார். பழைய நாடகங்களில் கட்டியக்காரன் இடையி டையே வந்து கதை சொல்வான். ஆனால் கட்டியக்காரனை நாடகம் முழுக்க பேசத் தொடங்கினால்... அதுவே அந்த நாவல் முழுக்க நிகழ்கிறது. தறி உடைந்து தொங்குகிறது. தமிழ் சூழலில் இசங்கள் மற்றும் அரசியல் அமைப்புக்கள் படைப் பாளிகளை மொன்னையாக்கும் வேலை களையே செய்கிறது. இரு தரப்பும் மிக உன்மையாக உரையாடிக்கொள்ள வேண் டிய ஒரு கேள்வியது.

ரகுநாதனின் சிறுகதை ஒன்று வீட்டில் தலைமறைவாக ஒளிந்திருக்கும் தோழரை தேடி போலீஸ் வர, தோழரை காப்பற்று வதற்காக போலீஸின் கவனத்தை திசை திருப்ப தனது சிறு குழந்தையை சுவற் றில் அடித்து கொல்கிறார்.

நான் மன்றாடிச் சொல்வேன் இப்படிபட்ட புரட்சிகர இலக்கியமும் வேண்டாம், புரட்சி யும் வேண்டாம்.

முகிலினி:

இரா. முருகவேளின் இரண்டாவது நாவல். இடதுசாரி பின்புலம் கொண்டவரே முருக-வேள். அவருடைய முதல் நாவல் மிளிர் கல், அது ஓரளவிற்கு கவனிக்கப்பட்டது. பின்நவீனத்துவ, மேஜிக்கல் ரியலிச நாவல் என்றெல்லாம் சொல்லப்பட்டது. என்னைப் பொறுத்தவரை அந்த நாவல் பல்வேறு கருத்துகளின் தொகுப்பு மாத்திரமே. மேஜிக் கல் ரியலிஸத்திற்கெல்லாம் இடமே கிடை யாது. வைரக்கல்லைத் தேடி அலைகிறார் கள். அதைத்தான் நம்மவர்கள் மேஜிக்-கல் என்று புரிந்துகொண்டார்களோ. கள் என் றால் தமிழர்கள் கொஞ்சம் தள்ளாடத் தானே செய்வார்கள்.

முகிலினி நாவல் 1950 தொடங்கிறது. ஏறக் குறைய அது நமது சம காலத்தில் முடி கிறது. அதை மூன்று தலைமுறைக் கதை என்று சொல்லலாம்.

1. கன்னுச்சாமி - கஸ்தூரி முதலாளிக் குடும்பத்தின் மூன்று தலைமுறை. 2. ராஜி - மரகதம், மணிமேகலை - சொக்க-லிங்கம், கவுதம் - வர்ஷினி. 3. ராமக்காள் அவளது மகன் சந்துரு. 4. ஆராண், ஆராணின் மகன், மகள்... என நாவல் விரிகிறது.

தொடர்தல் 57ம் பக்கம்

It so long...

56ம் பக்கத் தொடர்ச்சி...

செயற்கை இழைத் தயாரிப்புக்காக முகிலினி ஆற்றங்கரையில் விஸ்கோஸ் ஆலை இத்தாலிய கூட்டு முயற்சியோடு தொடங்கப்படுகிறது. பிரம்மாண்டமான ஆலை. அது படிப்படியாக தன் உற்பத்தியை பெருக்க ஆறு மாசுபடுகிறது. தொழிலாளர்களுக்கு சுவாசம் சார்ந்த பல வியாதிகள் வருகின்றன. பங்குச்சந்தையில் வந்த நெருக்கடியில் முதலாளிகள் மில்லை கேண்டி என்ற சர்வதேச முதலாளியிடம் விற்கிறார்கள்.

ஆற்றைச் கொண்றவர்களின் மூன்றாம் தலைமுறை ஆர்கானிக் ஃபார்மிங்க் எனத் துவங்கி உலகளாவிய சந்தையில் பெறும் லாபங்களை ஈட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

மறு புறத்தில் தொழிலாளியின் முன்றாம் தலைமுறை சிறிய நிலத்தில் இயற்கை விவசாயம் செய்து தோற்று கொண்டிருக்கின்றன.

கேண்டி மில்லின் உற்பத்தியை பெருக்குகிறார். அது ஆற்றை, சுற்றுச்சூழலை, மனிதர்களை ஒன்றுமில்லாமல் ஆக்குகிறது. விளை நிலங்கள் ஒன்றுக்கும் பிரயோசனம் இல்லாமல் ஆகுகின்றன. மில்லை மூடச் சொல்லி போராட்டங்கள் வலுக்கின்றன. மில் மூடப்படுகின்றன. மில் தொழிலாளர்களின் மூன்றாம் தலைமுறை தறுதலைகளாக மூடிய மில்லுக்குள் போய் திருடுபவர்களாக மாறுகிறார்கள்.

முகிலினி தமிழ் நாவலில் எவ்வகையில் முக்கியமான நாவலாக மாறுகிறது. தமிழ் நாவல்கள் இதுவரை பயணப்படாத நிலப் பரப்புக்குள் பயணப்படுவதுதான். அதுவும் கலையாக.

பத்திரிகையில் பங்குச்சந்தை பற்றியான விவரங்களை ஒரு நாவலுக்குள் கொண்டு வரமுடியுமா அது முகிலினியில் வெற்றிகரமாக நிகழ்ந்திருக்கிறது. கேண்டி போன்ற சர்வதேச முதலாளிகள் மிகத் துல்லியமான சித்தரிப்புகள் வழி தமிழ் இலக்கியத்தில் முதல்முறையாக வந்திருக்கிறார்கள். தமிழ் நாவலில் உள்ளூர் முதலாளிகளே ஒழுங்காக சித்தரிக்கப்பட்ட நாவல்கள் குறைவு.

சுற்றுச்சூழல் சார்ந்த போராட்டங்கள், எருமை மாடுபோல் மெதுவாய் அசைந்து கொடுக்கும் அரசமைப்புகள், நீதிமன்றங்கள், வழக்குகள் அதன் நடைமுறைகள்... அப்பிடியே அதன் அசல் தன்மையுடன் வந்திருக்கிறது.

இரவில் மில்லுக்குள் திருடப்போவதை முருகவேள் இப்படிச் சொல்கிறார். 'முகிலினி ஆறு முழுக்க மின்மினி போல வெளிச்சம். உற்று பார்த்தால், பரிசலில் கூட்டம் கூட்டமாய் மில்லை கொள்ளையடிக்க போய்க் கொண்டிருக்கிறார்கள்.'

இந்த நாவலில் குறைகள் இல்லையா? இருக்கிறது.

பிரகடனங்கள் இருக்கின்றன. நேரடியாக கருத்துகள் பேசப்படுகின்றன. ஒரு மிகப் பெரிய காலகட்டத்தை இன்னும் கவனமாக கையாண்டிருக்கலாம். சடசடவென எமர்ஜென்சி பஞ்சங்கள் என கடந்து போகின்றன.

ஆனால், இவையெல்லாம் மீறி கலையான தருணங்களும் இருக்கின்றன. அரசியல் நாவலில் அதை தமிழில் பார்ப்பது அபூர்வம்.

நாவலின் மைய பாத்திரமான ராஜு தனது சிறுவயதில் நீந்திக் கடக்கமுடியாத நெய்யலாற்றைப் பார்த்து இது ஒரு நாள் வற்றிப் போகவேண்டுமென குழந்தைத்தன மாக ஆசைப்படுகிறான். அவனது ஆசை கொடூரமாக அவன் வளர்ந்த பின் நிறை வேறுகிறது. நீந்திக் கடக்கமுடியாத நெய் யலாற்றின் எலும்புக்கூட்டை அவன் பார்க் கிறான்.

ஆராணின் இறுதிக்காலத்தில் அவருக்கு காது கேட்காமல் போகிறது. நாவலாசிரியர் அது வலதுகாதா இடதுகாதா என சொல்லவில்லை. இடது காதாக இருக்கத் தான் சாத்தியங்கள் அதிகம். தன் வாழ் நாள் முழுக்க தொழிலாளர் போராட்டம், சங்கம் என இருந்த ஒருவருக்கு அது எவ்வளவு ஆசுவாசத்தை தந்திருக்க கூடும். இல்லையெனில் கேட்கக் கூடாத எத் தனை கதைகளை அவர் கேட்க வேண் டும். இறுதியில் அவருக்கு வாழ்க்கை இப்படித்தான் விடுதலை வழங்குகின்றது.

தொழிலாளிகளின் வீரம் செறிந்த போராட் டம் நிறைந்த புருக்பாண்ட் மில் மூடப் பட்டு பின்பு தகர்க்கப்பட்டு 'புருக்பீல்ட் மால்' அங்கே எழுகிறது. தொழிலாளியின் பேரக் குழந்தைகள் அங்கே காபி டேயில் தங்களது காதலிகளோடு காபி அருந்திய வாறு மங்கும் சூரியனை பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். ஒரு காலகட்டத்தின் வீழ்ச்சி அத்தனை கூர்மையாக சொல்லப்படுகிறது.

வரலாறும் புனைவும் கலந்து பயணிக் கின்ற இந்நாவலில். எது உண்மை எது புனைவுயென்று நம்மால் துல்லியமாய் பிரித்துவிட முடியாது. அது நாவலுக்கு கூடுதலான வாசிப்பு சாத்தியத்தையும் பிரத்யேக வசீகரத்தையும் வழங்குகின்றன.

1950களில் மாசற்று ஓடிக்கொண்டிருந்த பவானி ஆறு, 90களில் கருத்த சாக்கடை யாக மாறுகிறது. யாரிதை துவக்கி வைத் தார்கள். யாரெல்லாம் குற்றவாளி, என நாவல் சூசகமாய் சொல்கிறது. அந்தப் பட்டியல் பளிங்குக் கல் பதித்த நினைவு மண்டபங்கள் வரை நீள்கின்றன.

முகிலினி வாசித்த பிறகு கோவை உங்களுக்கு பழைய கோவை அல்ல. பவானி என்பது ஆறு மாத்திரம் அல்ல. யூகலிப்டஸ் மரங்கள் வெறும் மரங்கள் மாத்திரம் அல்ல. கோத்தகிரி மலைகள் வெறும் ரசிப் பதற்கானது மட்டுமல்ல. ஒரு நாவலில் மிகப்பெரிய வெற்றியே இதுதான் என்று கருதுகிறேன். இந்த நாவல் நம்மை தொந் தரவுக்குள்ளாக்குகிறது. துயரத்தில் ஆழ்த்து கிறது.

Brave heart திரைப்படத்தின் துவக்க வசனத் தோடு எனது உரையை துவக்கினேன். மற்றொரு படத்தின் ஒரு வரியோடு எனது உரையை முடிப்பது சரியாக இருக்கு மென கருதுகிறேன்.

12 angry man என்றொரு புகழ் பெற்ற திரைப்படம் உண்டு. அதன் இறுதியில் இப்படியொரு உரையாடல் உண்டு. மரண தண்டனையிலிருந்து ஒரு இளைஞனை காப்பாற்றுவதற்கு கடுமையாக போராடிய ஒரு வயதான ஜூரியும், முதலிலிருந்தே மரண் தண்டனைக்கு எதிராய் இருந்த இளம் ஜூரியும் பேசிக் கொள்வார்கள். அந்த வயதான ஜூரி it so long என கேட் பார். நீதிக்காக வெகு நேரம் காத்திருக்க வேண்டியிருக்கிறது என பொருள்பட.

முகிலினி வாசிக்கையில் நமக்கு அதுவே தோன்றுகிறது. நாம் நீண்ட காலம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. நீதிக்கு, நல்வாழ்விற்கு, உண்மைக்கு, முகிலினி போன்ற நல்ல நாவலுக்கும்.

samraj@thaiveedu.com

Oshawa - Affordable Investments

ஒஷாவா நகரில் குறைந்த விலையில் தரமான முதலீடு!

Oshawa பகல்கலைக் கழகத்துக்கு அருகாமையில்

New Town Homes From $400s
Easy Deposit Structure

Modern Free Hold Town Homes



From $500s - Freehold
Flexible Deposit Structure

முற்பதிவுக்கு இன்றே அழையுங்கள்:

கமல் நவரட்ணம்

KAMAL
NAVARATNAM
Sales Representative

KAMAL NAVARATNAM REAL ESTATE

Trusted and reliable services

RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage

Direct:
416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
www.kamalrealtor.ca

Independently Owned and Operated

இலங்கைத் தமிழர் வரலாறு: கிழக்கிலங்கையில் நாகரும் தமிழரும்

பேராசிரியர் சி. பத்மநாதன் எழுதி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடாக மார்ச் 2016இல் பதிப்பிக்கப்பட்ட 'இலங்கைத் தமிழர் வரலாறு : கிழக்கிலங்கையில் நாகரும் தமிழரும்' (கிமு 250 - கிபி 300) என்கிற நூலின் பதிப்புரை.

- சி. பத்மநாதன் -

அண்மைக் காலம் வரை புராதன கால இலங்கை வரலாற்றைப் படிப்பதற்கும் ஆய்வு செய்வதற்கும் மூன்று வகையான மூலாதாரங்கள் கிடைத்தன. முடி மன்னர் வம்சாவழிகளை மையமாகக் கொண்ட தீபவம்சம், மகாவம்சம் முதலான பாளி மொழியிலுள்ள நூல்கள், ஆதி இரும்புக் காலப் பண்பாடு பற்றிய தொல்பொருட் சின்னங்கள், 1970 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பிராமிக் கல்வெட்டுகள் என்பன அம்மூன்று வகைகளாகும்.

இவற்றைப் பற்றிய ஆய்வுகள் பல தரங்களில் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும், அவற்றிலுள்ள விபரங்களை ஒன்று சேர்த்து ஒப்பியல் நோக்கில் ஆய்வுகளை நெறிப்படுத்துவதிற் போதியளவு முன்னேற்றம் ஏற்படவில்லை. அந்நிலையிற் பொருத்தமற்ற முடிவுகளும் தவறான விபரங்களும் பொது நூல்களிலும் பாட நூல்களிலும் இடம்பிடித்துக் கொண்டன.

மகாவம்சம் தொடர்பாகச் சில விடயங்களை இங்கு அவதானிப்பது அவசியமாகின்றது. மகாசேனனின் ஆட்சிக்காலம் (276 - 302) முடியும் வரையான வரலாற்று மரபிலே தமிழருக்கு விரோதமான உணர்வுகள் காணப்படவில்லை. எல்லாளன், சேனன், குட்டகன் ஆகிய தமிழ் மன்னர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தர்ம நெறி தவறாது ஆட்சி புரிந்தனர் (தம்மேன ராஜ்ஜம் காரயும்) என்று தீபவம்சம், மகாவம்சம் ஆகிய நூல்களிற் சொல்லப்படுகின்றது. வேறெந்த மன்னனும் அவற்றில் இவ்வாறு சிறப்பிக்கப்படவில்லை. அது இன உணர்வுகள் ஏற்படாத காலம், இனவேற்றுமைகள் பாராட்டப்படாத காலம். இருப்பினும் நவீன கால வரலாறு துட்டகாமினி, எல்லாளன் ஆகியோருக்கு இடையிலான போரைச் சிங்களவர், தமிழருக்கிடையிலான போராகச் சித்திரிக்கின்றது. அவ்வாறான சிந்தனை இன்று வலுப்பெற்றுள்ளது.

மகாவம்சம் இலங்கை மக்களில் எந்தவொரு பிரிவினரையும் ஆரியர் என்று குறிப்பிடவில்லை. ஆயினும், இருபதாம் நூற்றாண்டில் விஜயன், பாண்டுவாசுதேவன் ஆகியோர் பற்றிய புனைகதைகளை ஆதாரமாகக் கொண்டு இலங்கையில் ஆரியர் குடியேற்றங்கள் ஏற்பட்டன என்ற கதையினை வரலாற்று நூல்களிற் புகுத்தி விட்டனர்.

குடியேற்றம், குடியிருப்புகள் என்பவற்றை விளக்கும் வண்ணமாக தீபவம்சம், மகாவம்சம் என்பன எழுதப்படவில்லை. அவை இராசதானியை மையப்படுத்தும் நூல்கள், மன்னர்களின் ஆட்சிக்கால நிகழ்ச்சிகளை ஒரு காலவரையறைப்படி கூறும் நூல்கள். அவற்றிலே தமிழர் குடியிருப்புகளைப் பற்றி எதனையும் எதிர்பார்க்க முடியாது.

இரண்டாவது வகையில் அடங்கும் பிராமி வரிவடிவங்களில் எழுதிய பிராகிருதமொழிக் கல்வெட்டுகள் பெருந்தொகையிலே கிடைத்துள்ளன. 2000த்துக்கும் மேலானவை கிடைத்துள்ளன. வரலாற்று மூலங்கள் என்றவகையில் அவை மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. அவை அளவிற் சிறியவை. அவற்றிலே தமிழர் சமூகப் பிரிவுகளின் பெயர்கள், பிராகிருதமயமான தமிழ்ச் சொற்கள் என்பன காணப்படுகின்றன. தொழில்சார் சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த சமூகக் கட்டமைப்பு உற்பத்திமுறை, பௌத்தசமயச் செல்வாக்கு என்பன பற்றிய விபரங்களை அவற்றிலே காணலாம். பிராகிருத மொழிக் கல்வெட்டுக்களை அறிவியற் சிந்தனைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் அடிப்படையில் மீள்பதிப்புச் செய்யவேண்டிய அவசியம்

ஏற்பட்டுள்ளது.

பெருங்கற்காலப் (ஆதி இரும்புக் கால) பண்பாட்டுச் சின்னங்கள் இலங்கையின் பல பிரதேசங்களிற் காணப்பட்டுள்ளன. அவை காணப்படும் இடங்கள் சிலவற்றில் அகழ்வாய்வுகள் நடைபெற்றன. அவற்றைப் பற்றிய அறிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளன. தென்னிந்தியாவிலிருந்தும் பரவிய ஆதி இரும்புக்கால மக்களே முதன் முதலாக உற்பத்தி முறை ஒன்றினை இலங்கையில் உருவாக்கினார்கள். பயிர்ச் செய்கை, நீர்ப்பாசனம், உலோகவார்ப்பு, மட்கல உற்பத்தி, கிராம, நகர அமைப்புக்கள், பண்டமாற்று, சந்தைப்படுத்தல், கடற்பிரயாணம் முதலியயாவும் அவர்களின் நடமாட்டத்தோடு வழமையாகின.

ஆதி இரும்புக்காலப் பண்பாட்டு மக்களின் ஈமத்தலங்களில் அமைந்துள்ள கல்லறைகள், ஈமத்தாழிகள் என்பவற்றிலே தமிழ்மொழியில் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடற்குரியது. அவை நாகரோடு தொடர்புடையவை. இலங்கையின் பலவிடயங்களிற் குறிப்பாக வட, கிழக்கு மாகாணங்களிலும் புத்தளம் மாவட்டத்திலும் பெருந்தொகையான தமிழ்க் கல்வெட்டுக்கள் உள்ளன. அவை தமிழ்ப் பிராமி வடிவங்களில் உள்ளன. அவற்றுட் சில கடந்த இரு வருடங்களில் அடையாளங் காணப்பட்டன. அதனாற் புராதன கால இலங்கை வரலாறு தொடர்பான நான்காவது வகையான ஆவணங்கள் இப்பொழுது கிடைக்கின்றன. அவற்றினைப் பரிசீலனை செய்வதன் மூலம் ஆதிகால இலங்கை வரலாற்றிலும் இலங்கைத் தமிழரின் உற்பத்தி பற்றிய சிந்தனைகளிலும் பெருமளவிலான மாற்றங்கள் ஏற்படக்கூடிய நிலை உருவாகிவிட்டது.

தமிழ்ப்பிராமி வடிவங்களில் எழுதிய தமிழ்ச் சாசனங்கள் பல அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள சில நிறுவனங்களில் நெடுங்காலமாக இருந்துள்ள போதிலும் அவற்றை எவரும் அடையாளம் காணாதமை வியப்பிற்குரியது. பிராமி வரிவடிவங்களில் எழுதிய தமிழ்க் கல்வெட்டுகள் நூற்றுக்கணக்கில் உள்ளன. அவை, முன் குறிப்பிட்டவாறு, மிகக் கூடுதலாக வட கிழக்கு மாகாணங்களில் உள்ளன. இப்பொழுது கிடைத்துள்ள புராதனமான தமிழ்க் கல்வெட்டுகளில் 90 வீதத்திற்கும் மேலானவை நாகரைப் பற்றியவை, அவை அளவிற் சிறியவை. பெயர்ச் சொற்களால் அமைந்தவை. அவற்றிலே பயன்படுத்தப்படும் சொற்களும் சொற்பமானவை.

கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலே தான் முதன் முதலாகத் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களை அடையாளங்காண முடிந்தது. அங்கு, படுவான் கரையிலும், எழுவான் கரையிலும் அவை காணப்பட்டன. அம்மாவட்டத்தின் வட, தென் பகுதிகளில் அவற்றைக் காணமுடிகின்றது. வயல் வெளிகளிலும், மலைகளிலும், காடுகளிலும் அவை பரந்து காணப்படுகின்றன. அவற்றைப் பற்றிய மேலோட்டமான ஆய்வுகளை மேற் கொண்ட பொழுது இந்த வகையான கல்வெட்டுகள் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலும் காணப்படுவது பற்றி அறிந்துகொள்ள முடிந்தது.

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய அருங்காட்சியகங்களுக்குச் சென்ற பொழுது அங்கும் பல வகையான பொருட்களிலே தமிழ்க் கல்வெட்டுகள் இருப்பதைக் காண முடிந்தது. கல்வெட்டுகளைப் போல அவை பொறிக்கப்பட்டுள்ள பொருட்களும் பண்பாட்டுச் சின்னங்கள் என்ற வகையிலும் வரலாற்றுச் சான்றுகள் என்ற வகையிலும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

மலைப் பாறைகளிலும் தூண்களிலும் சொற்கள் பொறிக்கப்பட்டுள்ளன. நூற்றுக் கணக்கான சிறு தூண்களில் அவற்றைப் பார்க்கலாம். கல்லிலே பொழிந்த செக்கு, உரல், ஆட்டுக்கல், அம்மி ஆகியவற்றில் அவை காணப்படுகின்றன. பித்தளை விளக்கு, இரும்பு விளக்கு, உலோக வார்ப்பான காட்சிப் பொருட்கள் என்பவற்றிலும் அவற்றைக் காணலாம். இத்துடன் தமிழ்ச் சொற்களின் கதை முடிந்துவிடவில்லை.

தமிழ்ப் பிராமி வடிவங்களிலே பெயர்கள் வெட்டிய சங்குகள் பலவற்றைக் கற்பிட்டியிற் காணமுடிந்தது. வழிபாட்டுச் சாதனங்களாகப் பயன்பட்ட முக்கோண வடிவிலமைந்த சிறிய கற்கள், சிறிய சுடுமண் படிமங்கள் என்பன இலங்கையின் மூன்றிலொரு பாகத்திலே பரந்து காணப்படுகின்றன. நாகர் உருவாக்கிய கேணிகளிலும் மலைமேல் வெட்டிய தடாகங்களின் விளிம்புகளிலும் தமிழ்க் கல்வெட்டுகள் உள்ளன. செங்கற்கள் கலவோடுகள், கட்டட அழிபாடுகள் என்பவற்றிலும் அவற்றைக் காணலாம்.

பிராமி வரிவடிவங்களில் எழுதிய பிராகிருத மொழிக் கல்வெட்டுகள் குகைத் தளங்களின் நீர்வடி விளிம்புகளிற் பெரும்பாலும் காணப்படுகின்றன. அவை அனைத்தும் பௌத்த சமயம் தொடர்பானவை. ஒரு தொடர்பு மொழியில் எழுதப்பட்டவை, அவற்றின் சமகாலத்தவையான தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் பெரும்பாலும் மக்கள் வாழ்க்கையோடு தொடர்புடையவை. புராதனகால இலங்கை வரலாறு பற்றிப் போதிக்கப்படும் சிந்தனைகளை மீள்பரிசீலனை செய்து மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியமொன்று அவற்றின் வெளிப்பாட்டால் ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் மூன்றிலொரு பாகத்திலே தமிழர் சமுதாயம் கி.மு முதலிரு நூற்றாண்டுகளிலும் உருவாகிவிட்டது என்பதையும் தொடர்ச்சியான ஒரு நிலப்பகுதியிலே

தொடர்தல் 59ம் பக்கம்

இலங்கைத் தமிழர்...

58ம் பக்கத் தொடர்ச்சி...

தமிழ் மொழி பேசுவோர் வேளிர் ஆட்சியின் கீழமைந்த சிற்றரசுகள் பலவற்றை உருவாக்கிவிட்டனர் என்றும் சொல்லக் கூடிய காலம் வந்துள்ளது. நாகர் தமிழ் மொழி பேசியவர்கள் என்பதாலும் ஆதி இரும்புக்காலப் பண்பாட்டைப் பிரதானமாக அவர்களே இலங்கையிற் பரப்பினார்கள் என்பதாலும் கி.மு ஏழாம் நூற்றாண்டு முதலாகத் தமிழ் ஒரு பேச்சுவழக்கு மொழியாக நிலைபெற்றுள்ளமை உய்த்துணரப்படுகின்றது. தமிழ் மொழியின் தொன்மை பற்றி தமிழ்நாட்டுத் தொல்பொருட் சின்னங்களை ஆதாரமாகக் கொண்டு நிர்ணயிக்க முடியாதவற்றை இலங்கையிற் கிடைக்கின்ற தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களின் அடிப்படையிலேயே சொல்ல முடிகின்றமை ஒரு குறிப்பிடத் தக்க விடயமாகும்.

இந்நூல் இலங்கைத் தமிழர் வரலாறு (கி.மு 250 - கி.பி 300) பற்றிய முதலாம் பாகமாகும். இலங்கையிலே புராதன காலத்தில் வாழ்ந்த தமிழ் மொழி பேசிய மக்கள் தொடர்பான கல்வெட்டுகளும் அவற்றோடு கூடியுள்ள வேறு பண்பாட்டுச் சின்னங்களும் முதன் முதலாகக் கிழக்கு மாகாணத்தில் அடையாளங் காணப்பட்டதாலும் அவற்றின் அடிப்படையிலே வடக்கிலும் வடமேற்கிலுமுள்ள கல்வெட்டுகள் முதலான பண்பாட்டுச் சின்னங்களை விளக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதனால் இப் பாகம் கிழக்கிலங்கை பற்றியதாக அமைகின்றது. அங்கு இதுவரை கிடைத்துள்ள எழுத்துப் பொறித்த பண்பாட்டுச் சின்னங்கள் நாகரைப் பற்றியவை.

நாகர் தமிழ் மொழி பேசியவர்கள் என்பது அவற்றால் உறுதியாகின்றது. இந்நூலில் முன்னுரை நீங்கலாக ஏழு அத்தியாயங்கள் உள்ளன. அவற்றுள் முதலாவது பரதகண்டத்தில் நாகர் என்பது அது மிகச் சுருக்கமானது. அதிலே இந்திய துணைக்கண்டத்தில் நாகர் ஏற்படுத்திய செல்வாக்கு ஒரு குறிப்புரை மூலம் மிகச் சுருக்கமாக விளக்கப்படுகின்றது.

இரண்டாம் அத்தியாயத்தில் இலங்கையிலுள்ள பிராகிருத மொழிச் சாசனங்களில் நாகரைப் பற்றிச் சொல்லப்படும் குறிப்புகள் விரிவாகப் புதிய கண்ணோட்டத்தில் ஆராயப்படுகின்றன. மூன்றாம் அத்தியாயத்திற் பிராகிருத மொழிச் சாசன வழக்கிலே ஏற்பட்டுள்ள தமிழ் மொழியின் செல்வாக்கு விளக்கப்படுகின்றது. நான்காம் அத்தியாயத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அடையாளங் காணப்பட்டுள்ள தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் அவற்றின் படங்களோடு விரிவாக விளக்கப்படுகின்றன. அதே போன்று அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிற் காணப்படும் அவ்வகைக்குரிய பொருள்கள் ஐந்தாம் அத்தியாயத்தில் விளக்கப்படுகின்றன. ஆறாம் அத்தியாயம் மட்டக்களப்பு தேசத்தில் நாகர் குலத்தவர் உருவாக்கிய வேள்புலங்களைப் பற்றியது. இறுதியான ஏழாம் அத்தியாயம் ஆதிகாலத்திற் கிழக்கிலங்கையில் வாழ்ந்த நாகரின் சமய வழிபாட்டு நெறிகள் பற்றியது. இங்கு முன்வைக்கப்படும் விபரங்களும் விளக்கங்களும் புதுமையானவை, அவை வேறெந்த நூலிலும் காணமுடியாதவை. வேறெங்கும் காணமுடியாத பலவற்றை இங்கு கண்டுகொள்ளலாம்.

இந்நூலில் அடங்கிய விபரங்கள், அவற்றின் விளக்கங்கள் என்பன மூலம் இரு பிரதானமான விடயங்கள் தெளிவாகின்றன. அவற்றிலொன்று நாகரின் பேச்சுவழக்கான மொழி தமிழ் என்பது, மற்றது கி.மு முதலிரு நூற்றாண்டுகளிலும் கிழக்கிலங்கையிலே தமிழர் சமுதாயம் உருவாகி மேலோங்கிய செல்வாக்கினைப் பெற்றுவிட்டது என்பதாகும்.

Science Tutoring

Success Starts Here!

St. Anthony Learning Centre

Anthony / Mary Selvarajah
416 836 7072

CELEBRATING 20 YEARS

Students will develop a better understanding of science by the end of the grade level with more enthusiasm. Students also develop good study skills and critical thinking skills. Good study skills can increase students' confidence, competence, and self-esteem.

Grade 3
Plants
Stability
Forces and Movement
Soils

Grade 5
Human Organs
Forces
Matter
Conservation of Energy

Grade 4
Habitats and Communities
Pulleys and Gears
Light and Sound Energy
Rocks, Minerals, and Erosion

Grade 6
Diversity of Living Things
Air and Flight
Electricity
Space

Grade 7
Interactions in the Environment
Structures Form and Function
Pure Substances and Mixtures
Heat in the Environment

Grade 8
Cells
Systems in Action
Fluids
Water Systems

Grade 9
Sustainable Ecosystems
Atoms, Elements, and Compounds
The Study of the Universe
The Characteristics of Electricity

Grade 10
Tissues, Organs, and Systems of Living Things
Chemical Reactions
Climate Change
Light and Geometric Optics

Learing science is something student do, not something that is done to them

தமிழகத்து முதனிலைச் சாசனவியலாளர்களின் சாதனைகளின் பயனாகவும் அவர்களோடு கொண்ட தொடர்பினாலும் தமிழ்ப் பிராமிச் சாசனங்களில் ஈடுபாடும் அவற்றைப் படிக்கும் தகைமையும் அண்மைக் காலத்தில் எமக்குக் கிடைத்தன. அ.ஐராவதம் மகாதேவனின் தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் பற்றிய இணையில்லாத பெரு நூலை முதலிற் குறிப்பிட வேண்டும். அன்னார் விரிவாக்கம் பெற்ற அந்நூலில் இரண்டாவது பதிப்பினைச் சென்ற ஆண்டின் முடிவில் அன்பளிப்பாக வழங்கினார். பெருஞ்செலவில் அவர் அதனை அனுப்பி வைத்தார்.

கடந்த பத்து வருடங்களாகத் தமிழகத்து முதுநிலைச் சாசனவியலாளரான கலாநிதிகள் ச. இராசகோபால், வே. வேதாசலம், செ. சாந்தலிங்கம் ஆகியோருடன் நெருக்கமாகப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. சென்ற ஆறு வருடங்களாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பல்கலைக்கழக மாணவர்களுக்குச் சாசனவியற் பயிலரங்குகளை நடத்தி வருகின்றது. அவற்றை நடத்துவதற்கு இம் மூவரையும் அழைப்பது வழக்கம். பெருந் தொகையான மாணவர்கள் தமிழ்ச் சாசனவியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டனர். அவர்களிற் பலர் தமிழ்க் கல்வெட்டுக்களைப் படிக்கும் முறையினையும் அவற்றைப் படியெடுக்கும் விதத்தினையும் அறிந்து கொண்டனர். முதுநிலைச் சாசன வியலாளரான இம்மூவரோடும் பழகிய தால் தமிழ்ப் பிராமிச் சாசனங்களில் மிகுந்த ஈடுபாடு எமக்கு ஏற்பட்டதோடு, அவற்றின் எழுத்துகளை அடையாளம் காணும் தகைமையும் கிடைத்தது. இலங்கைத் தமிழரின் புராதன காலத்து வரலாறு, பண்பாடு என்பன பற்றிய புரிந்துணர்விற்கும் விளக்கத்திற்கும் அதுவே திறவுகோலாகியது.

கடந்த இரு வருடங்களிற் கிடைத்த தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகளைப் படித்த அனுபவமும் பயனுமே இந்நூலாக்கத்திற்கு அடிப்படையான காரணமாகும். நாம் இங்கு வெளியிடும் கல்வெட்டுகளைத் தேடிப்போகவில்லை. அவற்றைக் கண்டவர்கள் அவற்றின் புகைப்படங்களை எமக்குக் காட்டினார்கள். மலைகளில் உள்ளவற்றைத் தவிர மற்றவை எல்லாவற்றையும் அவை அமைந்திருக்கும் இடங்களுக்குச் சென்று பார்க்க முடிந்தது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்து அபிவிருத்தி உதவியாளரான திருமதி எழில்வாணி பத்மகுமார், செங்கலடி பிரதேச செயலகத்திற் பணிபுரியும் மு. சிவானந்தராஜா சில அரிய தொல்பொருட் சின்னங்களை எடுத்து வைத்திருப்பதாகவும் அவற்றை ஒருமுறை பார்த்து அடையாளம் காணவேண்டும் என்றும் பலமுறை எமக்குத் தொலைபேசி மூலம் சொன்னார்கள். பல்கலைக்கழகப் பணியொன்றின் தொடர்பாக மட்டக்களப்பிற்குச் சென்ற பொழுது படுவான் கரையிலுள்ள இலவாணை என்னும் ஊரிலுள்ள வேரத்திற்குப் 14.11.2014 திகதியில் அழைத்துச் சென்றனர்.

அங்கு நாகர் 2000 வருடங்களுக்கு முன் உருவாக்கிய கிணற்றை அடையாளம் கண்டோம். கிணற்றுப்பிட்டியின் விளிம்பிலும், துண்டங்களிலும் அமைந்துள்ள சொற்களைப் படித்து விளக்க முடிந்தது. அதைப்பற்றிய செய்தி ஊடகங்களில் மிக வேகமாகப் பரவியது. அதனால் கிழக்கிலங்கைத் தமிழரிடையில் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது. துணை அரசாங்க அதிபர் முதலாக நிர்வாகத்தின் பல கட்டங்களிற் பணிபுரிவோர், கல்லூரி ஆசிரியர்கள் எனப் பலதிறத்தோர் தமிழ்க் கல்வெட்டுகளின் புகைப்படங்களை எமக்கு அனுப்பத் தொடங்கினார்கள். அவர்களிற் கூடுதலானவற்றை திருமதி எழில்வாணி பத்மகுமாரும், ஆசிரியர் செல்லையா பத்மநாதனும் கண்டுபிடித்தனர். வெல்லாவெளி, விவேகானந்தபுரம், கழுமுந்தன் வெளி, வெள்ளிமலை என்பவற்றிலும் களுவாஞ்சிக்குடி, நாவற்குடா, காரைதீவு என்பவற்றிலுள்ள நாகர்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் எழில்வாணியாற் கண்டுபிடிக்கப்பட்டவை.

தழிழ்ப் பிராமிச் சாசனங்களிற் கூடுதலானவற்றைத் தானே கண்டுபிடிக்கவேண்டும் என்ற ஆர்வம் செ. பத்மநாதனுக்கு ஏற்பட்டது. மிகுந்த வேகத்துடன் செயற்பட்டுப் பிளாக்குழி வேரம், பாலாமடு, கல்லடிச் சேனை, படிவெட்டின மலை, வேரோடின மலை, நெடியமடு, வந்தாறுமூலை, விஷ்ணு கோயில், மாவடி வேம்பு வில்லுக்காடு, வந்தாறுமுலை நீர்முகப் பிள்ளையார் கோயில் என்பவற்றிலுள்ள தொல்பொருட் சின்னங்களைக் கண்டுபிடித்த சிறப்பு செ. பத்மநாதனுக்குரியாதாகும்.

ஆசிரியரும் கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகப் பட்டதாரியுமான வன்னிமணி குணபாலசிங்கம் மகிழடித்தீவு, தாந்தாமலை என்னுமிடங்களிலுள்ள நாகரின் பண்பாட்டுச் சின்னங்களைப் பற்றி அறிந்ததோடு அவற்றின் புகைப்படங்களையும் வழங்கினார். உதவி அரசாங்க அதிபாரான கிரிதரன் கிராணிலுள்ள, நாகரின் மிக முக்கியமான சில சின்னங்களைக் கண்டு, அவற்றின் படங்களை எம்மிடம் மின்னஞ்சல் மூலம் அனுப்பினார். இங்கு வெளியிடப்படும் வேள்நாகனொருவன் வாழ்ந்த மனையின் படம் எட்வின் என்னும் இளைஞர் மூலம் கிடைத்தது. கஞ்சிகுடிச்சாறு பற்றிய கட்டுரைக்கு ஆதாரமான படங்கள் வைத்திய கலாநிதி க. அருள்நிதி மூலம் கிடைத்தவை.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தமிழர் பண்பாட்டுச் சின்னங்கள் வைத்திய கலாநிதிகளான சதீஸ், ஜீவராஜ் ஆகியோரால் அடையாளங் காணப்பட்டவை. இவர்கள் அனைவரதும் அன்பு, ஆர்வம், ஆதரவு என்பன எமது பாராட்டுகளுக்குரியவை. இந்து சமய கலாசார பண்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளரான அ. உமாமகேஸ்வரன் இந்நூலின் ஆக்கம், வெளியீடு என்பவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அந்த உணர்வுகளைத் திணைக்களத்துக் கணக்கு அதிகாரி காண்டீபனிடமும் காணமுடிந்தது.

திணைக்களத்து ஆராய்ச்சிப் பிரிவின் பொறுப்பதிகாரியான தேவகுமாரி ஹரன் இந்நூலின் ஆக்கம், வெளியீடு என்பன தொடர்பாக மிகுந்த பொறுமை பேணி, ஆர்வ மிகுதியால் இயலுமானமட்டில் ஆதரவு வழங்கினார். பல சிரமங்களின் மத்தியிலும் அவரோடு பணிபுரியும் ந. பிரேமா, அ. உஷாந்தினி, ப. பைரவி ஆகியோரும் மனங்கோணாது பல விதங்களில் உதவி புரிந்தனர்.

இங்கு வாகரைச் செயலக அதிகாரி இராகுலநாயகி அம்மையார் வழங்கிய ஆதரவு பற்றிச் சிறப்பாகச் சொல்ல வேண்டும், அவர் தனது பொறுப்பிலுள்ள பிரதேசத்திற் காணப்படும் தொல்பொருட் சின்னங்கள் பலவற்றை எம்மை அழைத்துச் சென்று காட்டினார். ஒருமுறை பிரயாண ஏற்பாடுகளையும் செய்தருளிய துணை அரசாங்க அதிபர் ரங்கநாதன், பல சமயங்களில் மிகுந்த உற்சாகத்தோடு உதவிகளைச் செய்த செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவின் அதிகாரி உதயஸ்ரீதர் வரையான எல்லோரும் எமது நன்றிகலந்த பாராட்டிற்குரியவர்கள்.

அவ்வண்ணமே இங்கு விளக்கப்படும் பண்பாட்டுச் சின்னங்கள் பற்றிய செய்திகளைப் பிரதேச, தேசிய, சர்வதேச மட்டங்களிற் பரப்பிய ஊடகவியலாளருக்கும் எமது நன்றிகள் உரித்தானவை. நெடுங்காலமாக இந்து நாகரிகம் தொடர்பாக எமது ஆய்வுகளையும், வெளியீடுகளையும் பாராட்டி, உற்சாகப்படுத்திய மாண்புமிகு அமைச்சர் தேவமனோகரன் சுவாமிநாதன் எமது நன்றிகளுக்கு உரித்தானவர். இப்பணிகளை நெறிப்படுத்தி ஆற்றுப்படுத்தும் குருநாதனுக்கு எல்லாம் காணிக்கையாகும்.

■ ■ ■

அரசியல் சூதாட்டத்தில் அலைவுறும் பாமரரின் வாழ்வு
'வாழ்க வாழ்க' நூல் மதிப்புரை

- நர்மதா குப்புசாமி -

இமையம் அவர்களின் சமீபத்தைய படைப்பான 'வாழ்க வாழ்க' குறுநாவல் பல்வேறு வகைமைகளில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முன்னோடி படைப்பாக தடம்

பதித்திருக்கிறது. உண்மை சம்பவத்தை அடிப்படையாக வைத்து புனையப்பட்டிருக்கும் இக்குறுநாவல் சமகால அரசியல் சூழலை எந்த சமரசமுமின்றி படம் பிடித்துக் காட்டுகிறது. தமிழக அரசியல் சூழலை எந்த ஒரு குறிப்பிட்ட கட்சிக்கும் எதிர் நிலையையோ சார்புநிலையையோ முன்வைக்காமல் அதன் பொது குணாம்சங்களை தோலுரித்துக் காட்டியிருக்கிறது. ஒரு நாள் நிகழ்வுகளின் தொகுப்பாக விரியும் கதைக்களம் ஒரு தலைமுறைக்கான விவாதங்களை முன்வைக்கிறது. எளிய பாமர மக்களின் வாழ்வின் ஊடாக கட்சி அரசியலின் அசல் முகங்களை அந்த எளிய மக்களின் மொழியாகவே பதிவு செய்திருக்கும் விதத்தில் இந்நூல் மேலும் கவனிக்கத்தக்கதாக அமைகிறது.

இன்றைய காலக்கட்டத்தில் அரசியல் நடத்தப்படும் விதத்தை உயர்மட்ட தலைவர்களின் செயல்பாடுகளைக் கோடிட்டுக்காட்டி விட்டு, உள்ளூர்தலைவர்கள், பொறுப்பாளர்கள், அடிமட்ட கட்சி உறுபபினர்கள் உட்பட அனைவரையும், கட்சி மேலிடம் எவ்வாறு சுரண்டுகிறது, அவர்களிடம் என்ன எதிர்பார்க்கிறது என்பதை அப்பட்டமாக வெளிச்சம் போட்டு காட்டுகிறார் இமையம். ஒவ்வொரு தொகுதியிலும் அந்தந்த பகுதியின் சாதிக்காரர்களாலேயே கட்சி அமைப்பு பரிபாலணம் செய்யப்படுகிறது. இதில் கட்சிகளை விட சாதிகளின் கைதான் மேலோங்கியிருக்கிறது. பிரச்சினை என்று வரும்போது கட்சியைவிட சாதிக்குதான் முதலிடம் தரப்படுகிறது என்ற யதார்த்தத்தையும் பூடகமின்றி நேரிடையாகவே சொல்கிறது நாவல்.

கட்சிக்காரன் என்றாலே அவன் கட்சியிலிருந்து ஆதாயங்களை அனுபவிப்பவன் என்ற பொதுபுத்தியை உடைத்து அவர்களுக்கும் பல நெருக்கடிகளும் சவால்களும் இருப்பதை பதிவு செய்திருக்கும் பாணியில் மற்ற இலக்கியபிரதிகளிலிருந்து முற்றிலும் வேறுபடுகிறார் இமையம். அரசியல் எனும் சூதாட்டத்தில் அவன் தன் சுயநலத்துக்காகவும், தான் சார்ந்திருக்கும் கட்சிக்காகவும் சுயமரியாதையையும், தன் கைக்காசையும் பணயம் வைத்து இழப்பது ஏராளம். வெற்றி கொள்வதும் ஏராளம். இது கயிற்றில் நடக்கும் வித்தைக்கு ஒப்பானது. இந்த வித்தையில் பல கண்ணுக்குத் தெரியாத விதிமுறைகள் உள்ளன. சாதியும் அதில் ஒன்று. கீழுறுப்பு வேலைகளும் அவசியமாகிறது. துரோகங்களை நிரந்தரமாக நினைவில் வைத்திருக்கக் கூடாது, காரியம் முடிகிறவரை கரிசனம் காட்ட வேண்டும், பகையோ உறவோ நிரந்தரமல்ல, என பல விதிமுறைகளை அநாயசமாக பதிவு செய்கிறார் இமையம்.

பொதுகூட்டங்களுக்கு லாரியில் ஆட்களை பிடித்து வரும் மாவட்ட கிளைச் செயலாளரான வெங்கடேச பெருமாள், கூலிக்காக மட்டுமே கூட்டத்திற்கு வர சம்மதிக்கும் தெரு சனங்களான ஆண்டாள், கண்ணகி, சொர்ணம், கோமதி போன்ற எளிய அடித்தட்டு பெண்களின் உரையாடல்களின் மூலமாகவே அரசியல்வாதிகளின் சுரண்டல் எப்படி சமூகத்தின் அடிமட்டம் வரை பரவியிருக்கிறது என்பதை ஆசிரியர் காத்திரமாகவும் மிக இயல்பாகவும் உணர்த்துகிறார். இந்நாவலை முழுக்க முழுக்க பெண்கள் சார்ந்த பின்புலத்தில் கட்டமைக்கப் பட்டிருப்பதை கூர்ந்து கவனித்தால் அதன் பின் இருக்கும் உளவியல் தத்துவத்தை விளங்கிக் கொள்ளலாம். கட்சி கோட்பாடுகளோ, குறைந்தபட்ச கட்சி அபிமானமோ எதுவுமில்லாது எளிய குடியானவ பெண் முதல் படித்த பெண்கள் வரையிலான ஆண் வெறுப்பு அரசியலே ஒரு பெண் தலைமையை ஆதரிக்க போதுமானதாக இருக்கும் உளவியலை ஆண்டாள், கண்ணகி பாத்திரங்கள் மூலம் ஆசிரியர் நிறுவுகிறார்.



பொருளாதார நிலையில் பின்தங்கியிருந்தாலும் சாதிப் படிநிலையில் கொஞ்சம் உயர்ந்து இருக்கும் மனிதர்கள் குறிப்பாக பெண்கள் எந்தச் சூழலிலும் எதற்காகவும் தங்களது சாதி ஆணவத்தை சமரசம் செய்து கொள்வதில்லை. பிரமாண்டமான மைதானத்தில் நடக்கும் ஒரு கட்சிப் பொதுக்கூட்டத்தில் உட்காரும் இருக்கைக்கு நடக்கும் போராட்டத்தில் சாதி எப்படி தலைவிரித்தாடுகிறது என்பதை நாவலில் வரும் ஒரு சம்பவம் நுட்பமாக விவரிக்கிறது. ஊர் என்பது அனைத்து மக்களுக்கு மானது அல்ல அது ஆதிக்க சாதிக்காரர்களுக்கு மட்டுமே உரியது. ஒடுக்கப்பட்ட மக்கள் அவ்வூரில் வசித்தாலும் அவர்கள் அந்த ஊரைச் சேர்ந்தவர்களாகக் கருதப் படுவதில்லை. இதை இமையம் அவர்கள் கீழ்கண்ட பகுதியில் யதார்த்தமாக பதிவு செய்திருக்கிறார், (பக்..37)

'ஒரே ஊருக்காரின்னுகூடப்பாக்காம என்னைக் கீழேத் தள்ளிட்டீங்க இல்லையா? ஒங்கள நான் சும்மா வுடப்போறதில்ல 'என்று கத்தினாள்.

'நீ ஊரு இல்ல. பறத்தெரு.'

'நானும் பவழங்குடிதான்.'

'நீ பவழங்குடியா இருந்தாலும் நீ ஊருல்ல, பறத்தெரு.'

'அப்ப பவழங்குடிங்கறது என்னா?'

'எங்க ஊரு.'

'அப்ப நானு?'

'பவழங்குடியா இருந்தாலும் நீ பறத்தெரு. ஊரு வேற. பறத்தெரு வேற'.

கட்சி பொது கூட்டத்திற்காக கூலி கொடுத்து அழைத்துவரப்பட்ட கூட்டத்தில் பிரியாணிக்காகவும், புடைவைக்காகவும் அல்லாடும் பெண்களாக இருப்பினும் சாதி பேதம் அவர்களை விடுவதாயில்லை. இதற்கு எதிர்குரலாக ஒலிக்கும் அந்த ஒடுக்கப்பட்ட காலனிப்பெண்ணின் வார்த்தைகள் ஒட்டுமொத்த சாதியாணவ சமூகத்தின் மீதும் செருப்படியாக விழுகின்றன. (பக்..37)

'நான் மட்டுமா காசுக்காக வந்தன்? இந்தச் சிரிக்கிவுளும் காசுக்காத்தான ஊம்பறதுக்கு வந்தாளுங்க. ஊம்பறதுல என்னா சாதி பாத்து ஊம்பறது? எல்லாத் தேவிடியாமவனும் கட்சியா பண்றானுவோ. சாதிதான பண்றானுவோ'.

தன் தலைவியின் கட்சி பொதுகூட்டத்திற்கு ஆள்சேர்க்கும் வெங்கடேச பெருமாள் கூறும் ஆசைவார்த்தைக்கு மயங்கி பதினைந்து பேர் போகக்கூடிய வேனில் முப்பத்தைந்து பேர்களோடு ஏறும் அப்பாவி பெண்கள், மண்டையைப் பிளக்கும் வெயிலில் ஒதுங்க நிழலோ, குடிக்க தண்ணிரோ இல்லாததுடன் இயற்கை உபாதையை தீர்த்துக் கொள்ள வழிகூட இல்லாத அவலம், ஒரு நாள் கூத்திற்காக ஐநூறு ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள மரங்களை வெட்டி நாசமாக்கும் இயற்கை சுரண்டல், இலட்சக்கணக்கான பணத்தில் வீண் ஆடம்பரம், கூட்டத்தை ஈர்க்க மலிவான உத்திகளை கையாளும் அவலங்கள், தனிமனித உரிமை சுரண்டல், ஆபத்தான கட்அவுட் கலாச்சாரங்கள், கிள்ளுக்கீரையென மதிக்கப்படும் மனித உயிர்கள், கட்சி கூட்டத்திலும் நிலவும் சாதிவெறி, அரசியல் கட்சிகளில் சாதிகளின் ஆதிக்கம் என நாவல் பல்வேறு சித்திரங்களை மிக நுட்பமாக சித்தரிக்கிறது. இறுதியில் பல உயிர்கள் பலியான பின்பும், அதைப் பற்றிய எந்த பிரக்ஞையும் இல்லாமல் தலைவி தொடர்ந்து தன் உரையை படிப்பதுடன் நாவல் முடிவடைகிறது. ஆனால் வாசகனின் மனதில் அதன் பிறகும் அது நீட்சி கொண்டு பல்வேறு வினாக்களை எழுப்பியபடி இருக்கிறது. புனைவிலக்கியத்தின் ஆகச்சிறந்த சாத்தியத்தை எளிமையான முறையில் நிகழ்த்தியிருக்கிறது இந்நாவல்.

தமிழகத்தின் சமகால அரசியலின் நிலையை அதன் அடிமட்டத்திலிருந்து மிக காத்திரமான வகையில் பதிவு செய்திருக்கும் இமையம் அவர்களின் 'வாழ்க வாழ்க' குறுநாவல் புனைவிலக்கியத்தின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியருக்கிறது என்றே கூற வேண்டும். சொல்லப்பட்ட விதத்திற்காகவும், வடிவரீதியாகவும் சிறந்த கட்டமைப்பு கொண்ட படைப்பாக பரிணமிக்கிறது இக்குறுநாவல். அளவில் மிகச்சிறியதான இந்நாவல் வாசகரின் மனதில் ஏற்படுத்தும் தாக்கமோ ஒரு தலை முறைக்கானது. சமகால அரசியல் அவலங்களை சமரசமற்ற தொனியில் பேசுகிற விதத்திலும் பல பரிமாணங்களை உள்ளடக்கியிருக்கும் விதத்திலும் 'வாழ்க வாழ்க' நாவல் இலக்கிய மதிப்பீட்டில் தவிர்க்க முடியாத ஒரு இடத்தை தனக்கென தக்கவைத்துக் கொள்கிறது. புத்தகத்தை மிக நேர்த்தியாக பதிப்பித்திருக்கும் க்ரியா பதிப்பகத்திற்கு வாழ்த்துகள்.

இன்றைய அரசியல், நாட்டின் வேர்ப்பகுதியான சிற்றூர், கிராமப் பகுதிகளில் கொண்டிருக்கும் முகத்தை இதைவிடத் தெளிவாகவும், வலுவாகவும் வேறெந்த தமிழ் படைப்பும் காட்டியதில்லை, அந்த வகையில் இமையத்தின் 'வாழ்க வாழ்க' தமிழின் ஒரே அரசியல் நாவல் எனலாம்.

வாழ்க வாழ்க.

narmatha.k@thaiveedu.com

1ST MORTGAGE SPECIALS
5 Year Variable 2.35%
5 Year Fixed 3.24%
*Some Conditions Applied, Please Call For More Details
2ND MORTGAGE SPECIALS
Up To 80% in GTA. 75% on other major cities.
No Income Verification.
No Minimum Credit Score.
Quick Closing
Rates from 7.99% to 12.99%
BonaFide
Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216
TD Canada Trust
Scotiabank
STREET CAPITAL
FIRST NATIONAL FINANCIAL LP
MCAP
ICICI Bank
MERIX
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8
-digi Media Creations-

இலக்கிய ஆளுமை பண்டிதர் க. சச்சிதானந்தன்

- வே. விவேகானந்தன் -

ஈழத்து இலக்கிய மிகச் சிறந்த ஆளுமைகளுள் ஒருவராக அமரர் கலாநிதி பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே பிரகாசித்தார். இவர் தும்பளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை, மாவிட்டபுரத்தைச் சேர்ந்த தெய்வானைப் பிள்ளை இணையருக்கு மகனாக 1921ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10ஆம் நாள் மாவிட்டபுரத்தில் பிறந்தார்.

இவர் தனது பாடசாலைக் கல்வியை காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும், பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்திலும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும், யாழ். பரமேஸ்வராக் கல்லூரியிலும் கற்றார். மகாவித்துவான் நவநீதகிருஸ்ண பாரதியிடம் தமிழ் மொழியை முறையாகக் கற்ற பெருமை இவருக்குண்டு. தந்தையாரிடம் வானியல் சாஸ்திரத்தையும், சோதிடக் கலையையும் தெளிவுறக் கற்றார். பதின்னாங்கு வயதிலேயே கவிதை புனைவதிலும், பதின்னாறு வயதிலே பஞ்சாங்கக் கணிப்பிலும் வல்லவரானார். அத்துடன் சிவப்பிரகாச தேசிகர், சுப்பிரமணிய சாஸ்திரிகள், பாலசுந்தரக் குருக்கள் ஆகியோரிடம் சமஸ்கிருத மொழியையும் கற்றுத் தேர்ச்சி பெற்றார். 1941 ஆம் ஆண்டு மதுரை தமிழ் சங்க பண்டிதர் பரீட்சையிலும் சிறப்புத் தேர்ச்சியில் சித்தியடைந்தார்.

பண்டிதர் க. சச்சிதானந்தன் 1946 ஆம் ஆண்டு, நீர்கொழும்பு புனித மேரி கல்லூரியில் கணித ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்தார். தொடர்ந்து உடுவில் மகளிர் கல்லூரி, யாழ். பரமேஸ்வராக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகிய வற்றில் பணியாற்றி, 1965ஆம் ஆண்டு இலங்கை பாடநூற் சபையில் இணைந்து கொண்டார். இரண்டு வருடங்களின் பின்னர் 1967ஆம் ஆண்டு முதல் 1981ஆம் ஆண்டு வரை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் உளவியல் விரிவுரையாளராகவும் தொடர்ந்து உப அதிபராகவும் பணியாற்றினார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பணிபுரிந்த அதே காலகட்டத்தில், 1971 ஆம் ஆண்டு இலண்டன் இளங்கலைமானிப் பட்டத்தையும் (B.A), முதுகலைமானிப் பட்டத்தையும் (M.A), 1978ஆம் ஆண்டு உளவியலில் M.Phil பட்டத்தையும் பெற்றுக் கொண்டமை, அவரது அயராத முயற்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பொறுப்பு மிக்க ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும், திறமை மிக்க நிர்வாகியாகவும் விளங்கியமை பண்டிதர் க. சச்சிதானந்தனின் ஒரு பக்கமாகும். கலை இலக்கிய ஆளுமை கொண்ட, மூத்த அறிஞராக விளங்கியமை அவரது மறுபக்கமாகும். கதை, கவிதை, கட்டுரை, நாடகம், நாவல், காவியம் என அவரது பன்முகப் படைப்புகள் இலக்கிய வானில் பரந்து விரிந்தன. இவர், ஆனந்தன், யாழ்ப்பாணன், பண்டிதர், சச்சி போன்ற புனைபெயர்களில் தனது ஆக்கங்களை வெளியிட்டு வந்தார். பண்டிதர் க. சச்சிதானந்தன் இளைஞனாக இருந்தபோதே, யாழ்ப்பாண சமூகத்திலே நீண்டகாலமாகப் புரையோடிப் போயிருந்த சமூக ஏற்றத் தாழ்வுகளைக் கண்டு ஆவேசம் கொண்டார். தனது மனக்கொதிப்பை வெளிப்படுத்தும் வகையில் 'தண்ணீர்த் தாகம்' என்ற சிறுகதையினை எழுதினார். அது 1939 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி ஈழகேசரிப் பத்திரிகையில் பிரசுரமானது. தனது சொந்தப்பெயரில் எழுதத் தயங்கிய சச்சிதானந்தன் 'ஆனந்தன்' என்ற புனைபெயரில் எழுதியிருந்தார். 1939 முதல் 1944 வரை ஈழகேசரிப் பத்திரிகையில் வெளிவந்த இவரது சிறுகதைகளில் புரட்சிகர கருத்துக்களை கருவாகக் கொண்ட 'தண்ணீர்த் தாகம்' என்ற சிறுகதை சிறப்பிடம் பெற்றது. ஈழத்தில் நவீன புனைகதை இலக்கியத்தை அறிமுகம் செய்த இலங்கையர்கோன், சம்பந்தன், சீ. வைத்திலிங்கம் போன்றவர்கள் வரிசையில், க. சச்சிதானந்தனும் எண்ணப்பட வேண்டியவர் என்ற கருத்தை அவரது சிறு கதைகள் ஏற்படுத்தியிருந்தன. 'ஈழத்துப் பேனா மன்னர்கள்' என்னும் தொடர் கட்டுரையில், 'கரவைக்கவி கந்தப்பனார்' என்ற புனை பெயரில், இரசிகமணி கனக. செந்திநாதன் எழுதிய பண்டிதர் சச்சிதானந்தனின் ஆக்கங்கள் பற்றிய விமர்சனக் கட்டுரை, 1955 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி ஈழகேசரிப் பத்திரிகையில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.



கவிதைத்துறை பண்டிதர் க. சச்சிதானந்தனுக்கு கைவந்த துறையாகும். மரபுக் கவிதையில் வல்லவர். இலக்கணநெறி தவறாது கவிதை புனைவதில் முதன்மையானவர். 'காதலியின் கையெழுத்து' என்ற அவரது முதலாவது கவிதை இந்திய நவசக்தி சஞ்சிகையில் பிரசுரமானது. அவரது கவிதைகளின் தொகுப்பு நூல் 'ஆனந்தத் தேன்' என்ற பெயரில் 1955ஆம் ஆண்டு வெளிவந்தது.

'சாவில் தமிழ் படித்துச் சாகவேண்டும்
- எந்தன்
சாம்பல் தமிழ் மணந்து வேக வேண்டும்'

என்ற புகழ் பெற்ற பாடலின் சொந்தக்காரர் பண்டிதர் க. சச்சிதானந்தன். இப்பாடல் அக்காலத்தில் தமிழரசுக் கட்சியின் பிரசார மேடைகளில் முழங்கியது. மூலை முடுக்கெல்லாம் ஒலித்தது. தமிழரசுக் கட்சியின் ஆஸ்தானக் கவிஞராகவே அவர் விளங்கினார். எஸ்.ஜே.வி செல்வநாயகத்தின் நெருங்கிய நண்பராகவும் ஆலோசகராகவும் விளங்கியவர். தமிழரசுக் கட்சியின் தோற்றுவாயாக, மூலகர்த்தாக்களாக இருந்தவர்களுள் பண்டிதர் சச்சிதானந்தனும் ஒருவர். கொழும்பு - காலி வீதியில் தந்தை செல்வாவும் 'இரும்பு மனிதன்' டாக்டர் நாகநாதனும் தானும் பயணம் செய்தபோதே, தமிழரசுக்கட்சி என்ற பெயர் பிறந்ததாக ஒரு நேர்காணலில் அவர் குறிப்பிட்டிருந்தார். தந்தை செல்வா இருக்கும் வரை, தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளனாகவும், கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் இருந்தார். கொள்கையில் தளம்பாதவராகவும், துணிச்சல் மிக்கவராகவும் செயற்பட்டார். தமிழரசுக் கட்சியில் கொண்ட ஆர்வம் காரணமாக, அப்போதைய முக்கிய அரசியல் வாதிகளில் ஒருவரான கு. வன்னியசிங்கம் அவர்களின் வரலாற்றை, 'தியாக மாமலை' என்ற பெயரில் நூலாக, 1959ஆம் ஆண்டு வெளியிட்டார். பின்னாளில் மிதவாத அரசியலின் தோல்வியும், வன்முறை அரசியலின் தோற்றமும், நீண்டு தொடர்ந்த யுத்தமும், அழிவுகளும், துன்பங்களும் தமிழ் அரசியல் களத்திலிருந்து அவரை ஒதுங்கச் செய்தன.

பண்டிதர் க. சச்சிதானந்தன் சைவசமயத்தில் ஆழ்ந்த நம்பிக்கையும், மாவைக் கந்தன் மீது எல்லையில்லாப் பக்தியும் கொண்டவர். போர்க்காலத்தில் அக்கோயில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் சிக்குண்டு, வழமையான வழிபாடுகள் தடைப்பட்டபோது பெரிதும் மனவேதனை அடைந்தார்.

பண்டிதர் க. சச்சிதானந்தனின் கற்பனைகள் இயற்கைகளைப் பாடுவதிலும், தமிழ் மொழியின் சிறப்புக்களை எடுத்துக் காட்டுவதிலும், குடும்பப் பொது உணர்வுகளை வெளிப்படுத்துவதிலும் தனித்துவமானவை. மனைவி கட்டிக் கொடுத்த உணவு, என்னும் பொருளைக் கருவாகக் கொண்டு, அவர் பாடிய 'பச்சை அமிழ்தம்' என்ற கவிதை பலரையும் வெகுவாகக் கவர்ந்தது. அது போலவே 1999 ஆம் ஆண்டு தனது மாவிட்டபுரம் வீட்டைப் பார்த்து, தன் மனைவிக்கு, 'தாழிட்டறியாத் தலைவாசல்' என்ற தலைப்பில் கடிதமாக எழுதிய கவிதை, படிப்பவர்களின் உள்ளத்தை உருக்கும்.

பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்கள் யாழ். நூல் தந்த சுவாமி விபுலானந்தரின் படியெடுக்கும் மாணவனாகவும் இருந்துள்ளார். அதனால் ஆராய்ச்சித்துறையில் ஆர்வமும், ஆற்றலும் மிக்கவராக விளங்கினார். இதற்கு அவர் கற்றிருந்த சமஸ்கிருத மொழி அறிவும், நுணுக்கமான அணுகுமுறைக்குப் பேருதவியாக இருந்தது. அவரது 'தமிழர் யாழியல்' என்ற ஆய்வு நூல், இலங்கை இலக்கியப் பேரவையின், சிறந்த ஆய்வு நூலுக்கான விருதையும், பரிசினையும் பெற்றது. இவர் எழுதிய மற்றுமொரு ஆய்வு நூலான 'மஞ்சு-காசீனியம் - இயங்கு தமிழியல்' என்ற நூல் புதிய கோணத்தில் எழுதப்பட்ட இலக்கண நூலாகும். 'மஞ்சு' என்ற இவரது மகளின் நினைவாக அவரது பெயரில் அந்த நூலை வெளியிட்டார். பண்டிதர் க. சச்சிதானந்தன் எழுதிய 'யாழ்ப்பாணக் காவியம்' என்ற படைப்பு மிகச்சிறந்த காவியப் படைப்பாகும். இது யாழ்ப்பாண இராச்சியத்தின் கி.பி. 1450 - 1467 காலகட்டத்தினை அழகாகச் சித்தரிக்கிறது. 2088 பாடல்களைக் கொண்ட இக்காவியம், இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு, வடக்குக் கிழக்கு மாகாண இலக்கியப் பரிசு, சம்பந்தன் விருது என்பவற்றைப் பெற்றுக் கொண்டது. 2002 ஆம் ஆண்டு வெளிவந்த 'Fundamentals of Tamil prosody,' 'Footprints of our fathers' ஆகிய இரு நூல்களும் முறையே தமிழ் இலக்கணத்தையும், தமிழினத்தின் வரலாற்றையும், அரசியலையும் உலகுக்கு விளங்க வைக்கும் நூல்களாகும். 2003 ஆம் ஆண்டு வெளிவந்த 'மஞ்சு மலர்க்கொத்து' என்ற சிறுவர் இலக்கியமும், 2004 ஆம் ஆண்டு வெளிவந்த 'எடுத்த மலர்களும் கொடுத்த மாலையும்' என்ற கவிதை நூலும் அவரது ஏனைய படைப்புக்களில் சிலவாகும்.

ஒருவர் வாழும்போதே கௌரவிக்கப்பட வேண்டும் எனக் கருதிய, தெல்லிப்பளை கலை இலக்கியக் களம், 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி பண்டிதர் க. சச்சிதானந்தனுக்குப் பாராட்டு விழாவினை நடத்தி, 'பண்டிதர் க. சச்சிதானந்தன் இலக்கியப் பணி' என்ற நூலையும் வெளியிட்டது பன்முக ஆளுமை கொண்ட சச்சிதானந்தனின் கலை இலக்கியப் பணிகளை அடையாளம் கண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2001 ஆம் ஆண்டு கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கிப் பெருமை கொண்டது. பேராசிரியர் சு. சுசீந்திரராஜா அவர்கள், யாழ். பல்கலைக்கழகத்தின் மொழியில்துறைத் தலைவராகப் பணியாற்றிய காலப்பகுதியில், எழாலைப் பண்டிதர் மு. கந்தையாவின் அறிவுத்திறனைப் பயன்படுத்தியது போல, பண்டிதர் க. சச்சிதானந்தனையும் பயன் படுத்த முயற்சி செய்தார். ஆனால். காலச் சூழ்நிலை சாதகமாக அமையவில்லை. எனினும் யாழ். பல்கலைக்கழக நூலகத்துக்குச் சென்று வாசிப்பதையும் எழுதுவதையும் பண்டிதர் சச்சிதானந்தன் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

'எந்த வீட்டில் புத்தகங்கள் இருக்கின்றனவோ அந்த வீட்டில் ஆன்மா இருக்கிறது' என பிளேட்டோ கூறினார். ஆயிரக்கணக்கான நூல்களை வாசித்தும், பல நூல்களை எழுதியும், தனது வாழ்வைக் கோலமிட்ட பண்டிதர். க. சச்சிதானந்தன் எதிர் பாராவிதமாக 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி இவ்வுலகை விட்டு நீத்தார்.

நடமாடும் பல்கலைக்கழகம் எனப் போற்றப் பட்ட, மூத்த அறிஞர் ஒருவரைத், தமிழ் உலகம் இழந்து நின்றது.

vivekananthan.v@thaiveedu.com

Move on with **REON**

RE/ON

Homes Realty Inc.
Brokerage

Living in your Own Home.
It's a gift.™

- ☑ FREE MARKET EVALUATION
- ☑ 24 HRS MLS LISTING
- ☑ PROFESSIONAL PHOTOGRAPHY & VIRTUAL TOUR
- ☑ HIGHEST VALUE FOR YOUR PROPERTY
- ☑ COMPETITIVE COMMISSION STRUCTURE
- ☑ OPEN HOUSES
- ☑ PROFESSIONAL HOME STAGING

FOR SALE

FOR SALE

COVID-19
MORTGAGE PAYMENT TOOLS

S$$-Short-term mortgage payment deferral:
Your lender may agree to pause or suspend your mortgage payments for a certain amount of time.

S$$-Extending the original repayment period (amortization):
An extension to your original amortization period can lower your monthly mortgage payments.

S$$-Adding any missed payments (arrears) to the mortgage balance:Your lender may be able to add missed payments to your mortgage balance and spread them over the remaining mortgage repayment period.

S$$-Moving from a variable to a fixed interest rate mortgage:
Converting a variable interest rate mortgage to a fixed interest rate mortgage in order to protect you from a sudden interest rate increase, should one occur.
Special payment arrangement:

S$$-There may be a special payment arrangement unique to your particular financial situation.

Uthayan Aiyadurai
Sales Representative
416.999.3555

Jeyanthe Sritharan
Broker
416.918.5872

Seelan Siva Aiyadurai
Broker
416.451.0271

வீடு விற்க வாங்க

BUY. SELL. INVEST

25 Karachi Drive #15, Markham ON L3S 0B5 **905.209.8080** **www.reon.ca**

அ. முத்துலிங்கத்தின் சிறுகதைகள் மீதான விமர்சன நோக்கு....

- அ. றொனிராஜன் -

நவீன தமிழ் இலக்கிய வரலாற்றில் புலம்பெயர் படைப்பாளிகளின் பெருக்கமும் அவர்களின் இலக்கிய உருவாக்கமும் தவிர்க்கமுடியாத வகையில் பெரு வளர்ச்சி கண்டிருப்பதை அவதானிக்கலாம். படைப்பாளிகளில் பலர், புலம் பெயர்ந்த வாழ்க்கைச் சூழலமைவினால் படைப்பாளியாக உருமாற்றம் பெற, இன்னும் சிலர் ஈழத்தையும் புலம்பெயர் தேசத்தையும் தமது படைப்பனுபவத்தால் ஒருங்கே இணைக்கும் படைப்பாளிகளாக விளங்குகின்றனர். அ. முத்துலிங்கம் இந்த இரண்டாவது வகைப் பாட்டில் உள்ளடங்கும் ஒரு படைப்பாளி ஆவர். இவர் 1958ஆம் ஆண்டு சுதந்திரன் பத்திரிகையில் வெளிவந்த 'ஊர் வலம்' என்ற கதையுடன் சிறுகதை ஆசிரியராக அறிமுகமாகின்றார். தொடர்ந்து 1964 இல் அக்கா என்னும் கதைத் தொகுதி பேரா. கைலாசபதியின் முன்னுரையுடன் வெளிவருகின்றது. சிறிது காலம் கடந்து மீண்டும் எழுத வரும்போது ஆசியா, ஆபரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா என பல்வேறுபட்ட கண்டங்களில் உள்ள நாடு களின் புதிய களங்களையும் கதைப் பொருளையும் வாசகருக்கு அறிமுகம் செய் கிறார். இவர் சிறுகதையாசிரியராக அறி முகமான சூழல் ஈழத்தின் முற்போக்கு இயக்கத்தின் தீவிர செயற்பாடுகளும் மாக்சிய சித்தாந்தமும் முனைப்புப் பெற் றிருந்த காலப்பகுதியாகும். அந்த இயக்க நிலைப்பட்ட தன்மையில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு தனித்துவமான கதைப் பொருளுடன் சிறுகதை ஆசிரி யராக அறிமுகமாகின்றார். 1958 இல் இருந்து இன்று வரையிலும் நூற்றிற்கும் மேற்பட்ட கதைகள் வரையில் எழுதி யுள்ள முத்துலிங்கம், கோட்பாட்டு சிந் தனை முறைமைக்குள் தன்னை உட் படுத்தாது, அத்தகைய கட்டுக்களில் இருந்து விலகி ஓர் சுதந்திரமான படைப் பாளியாக தன்னை நிலை நிறுத்துகிறார். இந்த தளை நீக்கம் படைப்பின் உள்ள டக்கம், வெளிப்பாட்டு முறை, வடிவம் என்பவற்றில எவ்வாறான நிலைப்பாட்டை எடுத்ததென்பது ஒரு விடயமாக நோக்கப் படுகின்ற அதே வேளை, நிகழ்கால ஒழுங்கில் இருந்து விலகி படைப்புக் களை உருவாக்கும் போது அது அவரு டைய படைப்புக்கள் மீது எவ்வாறான விமர்சனத்தை உண்டு பண்ணியது என்ப துடன் படைப்பின் பலம் பலவீனமான பண்புகளை எடுத்துக்காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

'இலக்கிய அரசியல் என்று வரும்போது நீங்கள் ஒரு கூடாரத்தில் அடைக்கப்பட்டு விடுகின்றீர்கள். அது நடக்கும் பட்சத்தில் நீங்கள் என்ன எழுதினாலும் புகழ்து பாராட்ட ஒரு குழு இருந்து கொண்டே இருக்கும். பாராட்டிக் கொண்டே இருப் பார்கள். அதே வேளை எவ்வளவு உன் னதமான படைப்பாக இருந்தாலும் எதிர் கூடாரத்தினார் உங்கள் படைப்பை விமர் சிக்கச் செய்வார்கள் இது விதி. கூடாரங் கள் இருக்கலாம் ஆனால் கூடாரம் இலக் கியத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். (ஜெயமோகன், சூத்திரதாரி இலக்கிய உரையாடல், பக்: 222) முத்து லிங்கத்தின் மேற்கூறப்பட்ட இந்தக் கருத்து அவர் படைப்பாளியாக அறிமுகமான போது ஈழத்தில் நிலவிய சூழலை வெளிப் படுத்தி நிற்கின்றது. ஈழத்தின் முன்னணி படைப்பாளிகள் பலரின் கூட்டுழைப்பால் 1954 இல் முற்போக்கு இயக்கம் உரு வாக்கப்பட்டது. இவர்களின் இலக்கியம் பற்றிய கருத்துநிலையின் முக்கிய சில அம்சங்கள் பின்வருமாறு.

- இலக்கியம் மக்களின் விடிவுக்கும் விடு தலைக்குமானது. அடக்கியொடுக்கப் பட்ட மக்களின் வாழ்க்கைத் துய ரங்களை இலக்கியம் பிரதிபலிக்க வேண்டும்.
- சாதிக்கொடுமை, சீதனக்கொடுமை, இன வொடுக்குமுறை, பெண்ணடிமைத்தனம், வறுமை முதலான சமூக அநீதிகளுக்கு எதிராக முற்போக்கு எழுத் தை பயன் படுத்த வேண்டும்.
- இலக்கியம் ஐதார்த்தப் பண்பு கொண் டதாகவும், மண்வாசனையை பிரதி பலிப்பதாகவும், தேசிய இலக்கியமாக வும் அமைதல் வேண்டும்.

இவர்கள் தமது கருத்தியலை பலப் படுத்த மாக்சிய சித்தாந்தத்தை வழி காட்டியாக ஏற்றுக் கொண்டனர். இலக் கியத்தில் படைப்பாளியின் அந்தரங்க எழுச்சியை நிராகரித்த மாக்சியம் அதை யொரு கூட்டு செயற்பாடாக தொடர்ந்து வலியுறுத்தியது. ஒரு சமூகத்தின் குரலை பிரதிநிதித்துவப்படுத்துவதே இலக்கிய வாதியின் வேலை என்று மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தியது. இத்தகைய நிலை யினை ஏற்றுக் கொள்ளாத எதிரணியினர், மரபுவாதிகள் எஸ்.பொ வின் தலைமை யில் இலக்கியத்தில் 'நற்போக்குவாதம்' என்ற ஒன்றை தோற்றுவித்தனர். நற்போக்கு வாதத்தை எஸ்.பொ ஒரு கோட்பாடாக முன்வைக்கவில்லை. அதை வகுத்துக் கூறவும் இல்லை. எனவே நற்போக்கு வாதத்தை அரசியல், தத்துவ அடிப் படைகளை வைத்து பொருள் கொள்ள முடியாது. எஸ்.பொ, மு. தளையசிங்கம் ஆகிய இருவரும் முற்போக்குவாதத் திற்கு எதிராக தனிமனித வாதத்தை முன்வைத்தனர். தன்அக எழுச்சியின் பலத்தால் நிற்க முயல்வதே இலக்கிய வாதியின் முதல் கடமை என்று வலியுறுத் தினர். மு. தளையசிங்கம், எஸ். பொன்னுத் துரை ஆகிய இருவரும் இந்த தனிமனித வாதத்தின் குரல்கள். இதில் மு. தளைய சிங்கத்தின் தனிமனிதவாதம் தன்னை ஒரு தனித்த பிரக்ஞையாக கண்டறிவதில் இருந்து தொடங்குகின்றது. தன்னுடைய ஆழ்மனம் வரலாற்றால் ஆனது என்றும், அதை அறிவதன் ஊடாக வரலாற்றை யும் வாழ்க்கையையும் அறிந்து விடலாம் என்று கூறுகின்றது. ஆகவே கோட்பாடு களுக்கு எதிராக தான் உணர்ந்த அகத் தரிசனங்களை முன்வைத்தது. சமூகம் என்றும், வரலாறு என்றும் கோட்பாட்டாளர் கள் தர்க்கபூர்வமாக நிறுவ முற்படும் பொதுமை என்பது மிகச் சிறிய உருவ கமே என்றும், மானிட அகம் என்பது அதையெல்லாம் தன்னுள் சிறு துளிளாக

அ. முத்துலிங்கம் முற்போக்கு காலகட்டத் தில் தோற்றம் பெற்ற ஒரு எழுத்தாளர் அடக்கிக் கொண்ட பிரமாண்டமான அமைப்பு ஒன்றின் கூறு என்றும் அறிவிக் கின்றது. (பார்க்க: ஜெயமோகன், எஸ்.பொ, யாழ்நிலத்து பாணன்) மு. தளையசிங்கத் தின் ஆன்மீக தரிசனம் இதுவேயாகும்.

அ. முத்துலிங்கம் முற்போக்கு காலகட்டத் தில் தோற்றம் பெற்ற ஒரு எழுத்தாளர் என்ற வகையிலும் கைலாசபதி, சிவத் தம்பி போன்ற நட்சத்திர அந்தஸ்து கொண்ட விமசகர்களின் நட்பிலும் வழி காட்டலிலும் சிறுகதையாசிரியராக அறிமுக மாகின்ற போது, ஈழத்தில் நிலவிய இலக் கியப்போக்கினோடு ஒரு தனித்துவமான படைப்பாளியாக அந்த சூழலை அவர் எவ்வாறு கடந்து செல்கின்றார்? என்பது இங்கு முக்கியமான விடயப் பொருளாக அமைகின்றது. இவருடைய முதலாவது சிறுகதைத் தொகுதி பதினொரு கதை களைக் கொண்டதாக 'அக்கா' என்னும்

தொடர்தல் 65ம் பக்கம்

அ. முத்துலிங்கத்தின்...

64ம் பக்கத் தொடர்ச்சி...

தலைப்பில் வெளிவருகின்றது. இத்தொகுதியில் உள்ள கதைகளின் உள்ளடக்கம் பற்றி இத்தொகுதிக்கு முன்னுரை வழங்கிய பேரா. கைலாசபதி, பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'அக்கா என்னும் தலைப்பின் பெயரைப் பார்த்துவிட்டு வாசகர் எந்தவிதமான அவசர முடிவுக்கும் வந்துவிடக் கூடாது. காதல், குடும்பச் சச்சரவு, முதலிய வழக்கமான பல்லவி இங்கு பாடப்படவில்லை. காதல் போயில் சாதல் என்றோ! வஞ்சனை புரியும் மனிதரைப் பாரீர் என்றோ! சமூகத்தின் கொடுமை என்னே என்றோ! கதாசிரியர் எம்மை நோக்கிக் கூறவில்லை. அதற்கு மாறாக சர்வ சாதாரண மனித உணர்ச்சிகளும் மனித உறவுகளும் கிராமப்புறச் சூழலில் எவ்வாறு தோன்றி இயங்குகின்றன என்பதை உணர்த்துகிறார் ஆசிரியர். நேர்மை, எளிமை, நுட்பம், விளக்கம் ஆகிய பண்புகள் பசுமை குலையாத ஓர் உள்ளத் திலிருந்து வந்து எமக்கு புத்துணர்ச்சி அளிக்கின்றன. நமது உணர்வைத் தொட்டு தடவிச் செல்கின்றன. (அ. முத்துலிங்கம், அக்கா, பக்:6, 1964)

மேற்கூறப்பட்ட விடயத்தில் இருந்து பேரா. கைலாசபதி முக்கியமான ஓர் விடயத்தை சுட்டிக்காட்டுகின்றார். சமூகத்தின் கெடுமை கண்டு அவர் பொங்கி எழவில்லை என்பது தான் அது. அதாவது முற்போக்கு இயக்கத்தின் கருத்தியல் பின்புலத்தில் நின்று படைப்பை உருவாக்குவதில் அவர் விலகி நிற்கின்றார். இதனால் இவரது கதைகளில் மனித நேயம் இல்லையென்பதல்ல கருத்து. அவை தனித்துவமான பண்புகளுடன் உருத்திரள்வதை அவதானிக்கலாம். பருவ வயதைக் கடந்தும் பூப்படையா நிலையில் உள்ள ராசாத்தியின் மனப்போராட்டம் - (பக்குவம்); தாம் மற்றவர்கள் மீது வைத்துள்ள அன்பிற்கு இடையூறு ஏற்பட்டு விடும் என உளச்சிக்கலுக்கு உள்ளாகும் சிறுவன் சிறி - (ஒரு சிறுவனின் கதை); மனப்பிறழ்வடைந்த சிறுவன் வைரவநாதன் - (இருப்பிடம்); வறுமையின் பிடியில் இருந்து மீளமுடியாது தவிக்கும் கந்தப்பு - (அழைப்பு); வட்டிக்கு பணம் கொடுத்து ஏமாறும் சின்னாச்சிக் கிழவி - (கோடைமழை); தவிர்க்க முடியாத பிரிவினால் பாலியல் எல்லை மீறும் கமலி - (சங்கல்ப நிராகரணம்); கல்வி, உத்தியோகம், ஏற்படுத்திய பொருளாதார இடைவெளி என்பவற்றால் தனது முறைப் பெண்ணால் ஏமாற்றப்படும் மாணிக்கம் - (ஊர்வலம்); மருத்துவதாதி என்ற காரணத்தால் மற்றவர்களின் நகைப்புக்கு உள்ளாகும் சரசா - (உன்மத்தமாயிருந்தோம்); தான் நிதந்தர நோயாளி என்பதால் தனது கணவன் வேறு பெண்களை விரும்பலாம் என்ற காரணத்தால் மனத்தவிப்புக்கு உள்ளாகும் கமலா - (கடைசிக் கைங்காரியம்) என இங்கு காட்டப்படும் மனிதர்கள் வாழ்வின் எளிய நிலையில் உள்ளவர்கள். சிறியதும் ஆனால் சிக்கலான பிரச்சினைகளால் மனஉளைச்சலுக்கு ஆளானவர்கள். ஒவ்வொரு பாத்திரமும் மற்றவர்களிடம் ஏதோ ஒன்றை எதிர் பார்த்து ஏங்குகின்றன. அன்பிற்காக, பாலின்பத்திற்காக, காதலிற்காக என அதனூடாக ஒரு தேடல் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றது. இன்னொரு மூலையில் சமூகத்தின் குரூர முகங்களும் ஆங்காங்கே வெளித் தெரிகின்றன. சுரண்டல், நம்பிக்கைத் துரோகம், மனித நேயமற்ற தன்மை என்பனவும் ஆங்காங்கே ஒளிப் பொட்டுகளாக பளிச்சிடுகின்றன. இதைத் தான் முத்துலிங்கம் தனது படைப்பின் உள்ளடக்கமாகக் கொள்கின்றார். அவரது கதைகளில் உள்ளத்தின் உணர்வின் வலி இருந்து கொண்டேதான் இருக்கின்றது. அந்த வலியைக் கூற முயல்வதுதான் இந்த எழுத்தின் அறம். விமர்சன எல்லைகளைக் கடந்து அவர் முன்வைக்கும் எழுத்தின் அறமாக அது விரிகின்றது.

இத்தொகுதியில் உள்ள கதைகள் பற்றி இரண்டு விதமான விமர்சனப் பார்வைகள் உள்ளன. ஒன்று பாத்திரங்களின் அகவுணர்வுகளைக் காட்டும் அளவுக்கு புறவுலகையும் புறவுலகில் உள்ள சிக்கல்களையும் இவரது கதைகள் காட்டுவ தில்லை என்பது. இதே போன்ற குற்றச் சாட்டு புதுமைப்பித்தன் மீதும் உள்ளது. 'புதுமைப்பித்தனின் கதைகள் அன்றாட வாழ்க்கையின் வேதனைக் குரலை வெளிப் படுத்துகின்றனவேயொழிய வேதனையை நீக்கும் மார்க்கத்தைக் கூறவில்லை என்று தொ.மு.சி. ரகுநாதன் குறிப்பிடுகின்றார். இரண்டாவது, முத்துலிங்கம் இணைவிழைச்வு அதாவது பாலியல் பற்றி அதிகம் எழுதுகின்றார் என்பது. இதற்கு நாம் முன்னே குறிப்பிட்டதைப் போன்று இவரது கதைகள் தனிமனித உளவியல் சிக்கல்களையும் பாத்திரங்களின் உளப்பாங்கையும் பற்றிப் பேசுகின்றது. ஆனால் பிரச்சினைக்கான சூழலை பகிரங்கப்படுத்திக் காட்டாது நாசுக்காக வெளிப்படுத்துகின்றார் ஆசிரியர். இது சிறுகதையின் உத்தியாக அமைகின்ற அதேவேளை படைப்பின் அழகியலை ஒழுங்கமைக்கும் ஆக்கக் கூறாகவும் அமைகின்றது. இது பற்றி அவரே கூறுகின்றார். 'இணை விளைச்சு சம்மந்தமாக நான் எழுதுகிறேன் என்பது என்மீதான ஒரு குற்றச் சாட்டு. என்னைப் பொறுத்தவரையில் அப்படி எழுத வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு சிறிதும் கிடையாது. ஆனாலும் நான் சொல்ல வந்த கருத்தை சிந்தித்த முறைப்படியே வார்த்தைகளில் வடிப்பதற்கு சில விபரங்களை வார்த்தைகளில் அரணாக அமைக்க வேண்டியிருக்கின்றது. அவ்வளவுதான்' (அ. முத்துலிங்கம், மேலது, பக்,10) முத்துலிங்கம் வரன்முறையான இலக்கிய பரிட்சயமற்றவராக இருப்பினும் அவர் பாலியல் சார்ந்த விடயத்தை வேண்டத்தகாத ஒன்றாக கருதாது ஒரு பிரச்சினை என்ற வகையில் அதை முன்வைக்கும் முறை சிறப்பானது. எந்தவிதமான ஆர்ப்பரிப்பு எதுவும் இன்றி, சொல்ல வந்த விடயத்தை வாசகனுக்கு புரியும் வண்ணம் இலகுவாக சொல்லிவிடுகின்றார்.

முற்போக்குவாதத்தின் நிழலில் ஒதுங்க மறுத்த முத்துலிங்கம் நற்போக்குவாதத்தை எவ்வளவு தூரம் தழுவுகின்றார் என்று பார்க்கலாம். பொதுவாக முத்துலிங்கத்திற்கும் எஸ். பொன்னுத்துரைக்கும் ஒத்த, அதே நேரம் வேறுபட்ட சில பண்புகள் உள்ளன. இவர்கள் இருவரும் நுண்மையான சித்திரிப்பில் எளிய மனிதரை அடையாளப்படுத்தி, அவர்களின் மனவுலகை ஆராய்கின்றனர். இருவருக்கும் காமம் முக்கியமான ஒன்று. எஸ்.பொ காமத்தை காரண, காரியத்துடன் அதை ஒரு உளம்சார்ந்த பிரச்சினையாகவே பார்கின்றார். ஆனால் முத்துலிங்கம் மனிதனின் அடிப்படை உணர்வுநிலை, ஒரு தேவை என்ற அர்த்த பரிமாணத்தில் தான் அதைப் புரிந்து கொள்கின்றார். மேலும் எஸ்.பொ மனத்தை காமகுரோதங்களின் விளைநிலமாகவே காண்கின்றார். இருவரும் அடித்தள, நடுத்தர மக்களைக் கண்டு எழுதினார்கள். இருவரிடத்தும் 'சிக்மன்ட் ப்பிராயட்' இன் தாக்கம் உண்டு. இதனால் இவர்களின் படைப்புக்கள் சமூகம் சார்ந்து உளவியலை முதன்மைப்படுத்துகின்றன. இங்கு முத்துலிங்கத்திற்கும் எஸ். பொன்னுத்துரைக்கும் இடையே காணப்படும் ஒத்த இயல்பின் அடிப்படையில் இருவரும் இலக்கியம் தொடர்பாக வளர்த்துக் கொண்ட சிந்தனையின் வழி உருவான ஒன்றாகும். உண்மையில் முத்துலிங்கம் முற்போக்கு முகாமைச் சேர்ந்தவர்களுடன்தான் அதிக தொடர்பைக் கொண்டிருந்தார். ஆனால் அவர்களின் வழியைப் பின்பற்றாது அக்காலகட்டத்தின் தீவிர இலக்கிய அரசியல் போக்கில் இருந்து விலகி தனித்துவமான அடையாளங்களுடன் வெளித்தெரிகின்றார். இதனால் முற்போக்கு இயக்கத்தினரின் படைப்புக்கள் பற்றிய பொதுவான குற்றச்சாட்டுக்களில் இருந்து அவரது படைப்புக்கள் தப்பிவிடுகின்றன. இங்கு உள்ள முரன் என்னவென்றால் முற்போக்குவாதத்தை முன்னெடுத்த பேரா. க. கைலாசபதியால் கூட இவரது கதைகள் பாராட்டப்படுகின்றன. 'கடந்த பத்தாண்டு காலத்திற்குள் ஈழத்திலே தோன்றிய தரமான பத்து சிறுகதை எழுத்தாளர்களுள் அ. முத்துலிங்கமும் ஒருவர். அத்தகைய எழுத்தாளர் ஒருவரை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டு கொண்டதில் நான் எப்பொழுதும் பெருமைப்படுவதுண்டு' (அ. முத்துலிங்கம், மேலது, பக்,13) எனக் குறிப்பிடுகின்றார்.

முத்துலிங்கம் இலக்கியம் வேறு அரசியல் வேறு என்பதையும், இலக்கியத்தின் பணி ஒற்றைப்படையான ஒன்றல்ல என்பதையும் நன்கு அறிந்து, முற்போக்கு கால கட்டத்தை இயல்பான முறையில் கடந்து செல்கின்றார். ஆனால் அவர் ஈழத்தை விட்டு தொழில் நிமித்தம் புலம்பெயர்ந்த சூழலில் முப்பது ஆண்டுகள் கடந்து மீண்டும் அவர் எழுத வரும்போது அவருடைய எழுத்துக்களில் எத்தகைய மாறுதல் கள் ஏற்பட்டன என நோக்குவது இங்கு அவசியமாகும்.

முத்துலிங்கம் ஈழத்தைவிட்டு புலம்பெயர்ந்த சூழலில் எழுதிய கதைகளை மூன்று வகையாகப் பிரித்து நோக்கலாம்.

- ஆசிய, ஆபிரிக்க நாடுகளை களமாகக் கொண்ட கதைகள்.
- தாய்நாடு பற்றிய நினைவுகளை மீட்டுருவாக்கம் செய்தல் (நனைவிடைத் தோய்தல்).
- ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளை களமாகக் கொண்ட கதைகள்.

ஆசிய, ஆபிரிக்க நாடுகளை களமாகக் கொண்ட கதைகள் மூலம் தமிழுக்கு பரிட்சயமற்ற கதைக் களங்கள் பல அறிமுகமாகின்றன. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சூடான், சியாராலியோன் என இவை முற்றிலும் அந்நியமான கதைக்களங்கள் மூலம் வேறுபட்ட மனிதர்கள் இங்கு அறிமுகமாகின்றனர். போதைப் பொருள் பாவனை, பெண்கள் மீதான வன்முறைகள், ஊழல், மனிதனின் எல்லை மீறிய நுகர்வுப் பயன்பாட்டால் விளிம்பு நிலையில் உள்ள உயிரினங்கள் மீதான கரிசனை, பண்பாடும் பண்பாட்டு வன்முறையும், போரினால் விளிம்பு நிலக்கு தள்ளப்பட்டுள்ள சிறுவர்கள் என அந்த மண்ணுக்கு உரித்தான பிரச்சினைகள் இங்கு படைப்பாக்கம் செய்யப்படுகின்றன. ஆனால், கதையின் உள்ளடக்கத்திலும் வெளிப்பாட்டு முறையிலும் படைப்பனுபவத்தை தமிழ் வாசகரின் உணர்வுக்கு மிக நெருக்கமாகக் கொண்டு வருகின்றார். இதனால் இந்தக் கதைகளை வாசிக்கும்போது ஒரு தமிழ் வாசகர் தன் முகத்தை அக்கதைகளில் காணமுடிகின்றது. இது எவ்வாறு சாத்தியமாகின்றது? என்றால், ஒன்று அக்கதைகளில் இளையோடும் பிரச்சினைகள், பாத்திரங்கள், உணர்வுநிலை என்பன ஒத்த தன்மையைக் கொண்டிருக்கின்றன. எடுத்துக் காட்டாக, 'நாளை' என்ற கதையில் அண்ணன் தம்பியாகிய இரண்டு சிறுவர்கள் நாவுக்கு ருசியான உணவு தேடி ஒவ்வொரு முகாமாக பாதுகாப்பு வேலிகளைத் தாண்டிச் செல்வார்கள். அதில் ஒரு முகாமின் பெயர் 'கஞ்ச்'. இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய மனித அவலத்தை எதிர் கொண்டவர்கள் நாங்கள். எங்களிடம் பிரமாண்டமான தடுப்பு முகாங்கள் இருந்தன. இராணுவ அடக்கு முறை இருந்தது. ஒவ்வொன்றையும் இந்தக் கதைகளில் காணலாம்.

'நெடுஞ்சாலையில் நூறு மீற்றருக்கு இரண்டு இராணுவ வீரர்கள் வீதம் காவல் நின்றார்கள். தானியங்கி துப்பாக்கிகளுடன் அவர்கள் நேராக நின்றதை இந்த சிறுவர்கள் ஆர்வத்தோடு பார்த்தார்கள். அவர்கள் உடுப்பும் தோரணையும் ஒருவித பயத்தை தோற்றுவித்தது. இதிலே ஒருவன் சிவப்பாக, நெடுப்பாக இருந்தான். மற்றவன் ஏதோ யோசணையில் சிகரைட் பிடித்துக் கொண்டிருந்தான். (அ. முத்துலிங்கம், மகாராஜாவின் ரயில் வண்டி, பக்,26,)

மொசு மொசுவென்று சடைவைத்த வெள்ளை முடி ஆடுகள், ராகுகாலம், ஒட்டகம், பெருஞ்சாளி, கிரகணம் போன்ற கதைகளை வாசிக்கும்போது சமாந்திரமாக எமது மண்ணின் நினைவுகளையும் சேர்த்தே நாம் வாசிக்கின்றோம். இக்கதைகளில் இடம்பெறும் பாத்திரங்களில் எமது மண்ணின் முகத்தை நாம் தரிசிக்க முடிகின்றது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், விதவைப் பெண்கள், ஐ.நா சபையின் தொண்டு நிறுவனங்கள் என மறைவாக ஓர் ஈழத்து சூழல் இங்கு உருவாகி வருவதைக் காணலாம். இதையே தமிழவன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'இலங்கையில் தமிழர்கள் சிங்களவர்களால் விரட்டப்படும்போது அவர்கள் மேற் கொள்ளும் 'இடம்பெயரல்' பிறகதைகளின் உள்ளமைப்பாகின்றது. சியாராலியோன், பாகிஸ்தான், சூடான் என்று வெவ்வேறு அனுபவங்கள் வழி கதைகள் உருவகம் பெறும்போது இதுவரைத் தமிழில் இப்படிப்பட்ட கதைக்களங்கள் வந்ததில்லையே என்று நாம் யோசிக்கையில் அதற்கு உள்ளே இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்த ஒரு மனம் தான் இந்தவித புனைவில் ஈடுபடும் என்ற உட்குரல் கேட்கின்றது. அதாவது அனுபவத்தை புனைவு சாத்தியப்படுத்துகின்றது. (தமிழவன், தீராநதி தமிழ் தேச இலக்கிய விமர்சனமும் இரண்டு படைப்பாளிகளும் பக்:12, 2006).

மேலே கூறியுள்ளதன்படி இக்கதைகளை எமக்கு நெருக்கமாகக் கொண்டு வரும் இரண்டாவது அம்சம் முத்துலிங்கம் சிறுகதைகளில் பயன்படுத்தும் உத்திமுறை. இக்கதைகளில் எப்பொழுதும் ஒரு புராண மனம் உயிருடன் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றது. பாத்திரங்களின் ஏதோ ஒரு கூறு புராணத்தின் நிழலில் ஒதுங்கியே வெளிப்படுகின்றது. 'லோடாவினுடைய வாழ்க்கையானது இப்படியாக திடீரென்று கந்தர்வலோக வாழ்க்கையாக மாறிவிட்டது. தன் வாழ்நாளிலே இவ்வளவு சந்தோமாக இருந்தது அவருக்கு ஞாபகமில்லை. கிஸ்கிந்தையில் சுக்கிரீவன் மாரிகாலம் முடிந்த பின்பும் ராம காரியத்தை முற்றிலும் மறந்து அந்தப்புர போகத்தில் மூழ்கிக்கிடந்தது போல லோடாவும் தன் அலுவலக காரியங்களை அறவே மறந்தார். அவளோ வாலிபத்தின் உச்சியில் இருந்தாள். இவருடைய பாட்டரியோ கடைசி மூச்சில் இருந்தது. அவளுடன் சுகிர்த்திருப்பதே மோட்சம் என்ற நிலையில் 'விடுதல் அறியா விருப்பினன் ஆகி' அவளுடைய காலடியில் உலகத்தை தரிசிக்க மறந்தவர் அலுவலகத்தை தரிசிக்க மறந்து போனார். (அ. முத்துலிங்கம், மேலது, பக்:243). பாகிஸ்தானை களமாகக் கொண்டு எழுதப்பட்ட இன்னொரு கதைதான் வம்சவிருத்தி. முற்றிலும் இஸ்லாமியப் பண்பாட்டை அடியொற்றி தோற்றம் பெறுகின்றது இக்கதை. 'அஹமத் மிர்ஸா வீடு தேடி வந்தபோது 'புன்னியா எருமைக் கொட்டடியில் வேலையாக இருந்தாள். வேலையில் கண்ணாயிருந்தவள் தலைத்திரை விலகியதைக் கவனிக்கவில்லை. வைத்த கண் வாங்காமல் அப்படியே கொஞ்ச நேரம் நின்றான். கொக்கிபோட்டதுபோல ஏதோ ஒன்று இழுத்து அவனை நிறுத்தி வைத்தது. புத்தி அடியொடு மழுங்கி விட்டது. வெற்றிக் களிப்பில் துரியோதனன் மதிமயங்கி ஒற்றை ஆடையோடு இருந்த திரௌபதியை சபைக்கு இழுத்து வரச் சொல்லி அவள் பார்க்க தனது இடது தொடையைக் கையினால் தடவ லில்லையா? அது மாதிரி ஒரு கணம் உன்மத்தனாகிவிட்டான்.' (அ. முத்துலிங்கம், கொழுத்தாடு பிடிப்பேன், பக்:12, 2013). லோடாவையும், அஹமத்மிர்ஸாவையும் அருகே கொண்டு சேர்க்கும் பாலமாக புராண இதிகாசக் கதைகளே விளங்குகின்றன. இங்கு புராணக்கதையின் மூலத்தில் மறைந்திருக்கும் உரு

தொடர்தல் 66ம் பக்கம்

அ. முத்துலிங்கத்தின்...

65ம் பக்கத் தொடர்ச்சி...

வத்தை வெளிப்படுத்தும் உத்தியாக அல்லது முற்றிலும் அந்நியமான களத்தையும் மனிதர்களையும் எதிர்கொள்ளும் வாசகர் இலகுவான கதையை எதிர் கொள்ள பயன்படுத்தும் உத்தியென்ற முறையில் மாத்திரமே இது கதைகளில் முக்கியம் பெறுகின்றதே, தவிர புதுமைப் பித்தனைப் போன்று புராணத்தை கேலிக் கும் கிண்டலுக்கும் உள்ளாக்கும் தன்மை இவரது கதைகளில் அறவே இல்லை என்றே கூறலாம்.

முத்துலிங்கத்தின் கதைகளில் நனைவிடைத் தோய்தல் பற்றிய கதைகளையும் ஐரோப்பாவை களமாகக் கொண்ட கதைகளையும் எடுத்து நோக்கினால் தனது மக்களின் கதையாக அவருடைய கதைகளைப் புரிந்து கொள்வதில் பல தடைகள் இருப்பதைக் காணலாம். ஆசிரியர் தன் அனுபவத்தில் சந்தித்த மனிதர்களின் மென்மையான உணர்ச்சிகளையும் பலம் பலவீனங்களையும் வேடிக்கை வினோதங்களையுமே அவர் தன் எழுத்துக்களில் முன்வைக்கின்றார். நனவிடைத் தோய்தல் என்பது, இறந்த காலத்துடன் நிகழ் காலத்தை இணைத்துச் செல்லும்போது அது புதிய அர்த்த சாயலைப் பெறும். ஒரு தேர்ந்த படைப்பாளி நனைவிடை நினைவுகளில் தோய்ந்து எழுதுகின்ற போது தன் மண்ணின் கவலைகளையும் தன் நினைவுகளின் மூலம் வெளிப்படுத்து கின்றான். இந்த அனுபவத்தை இவரது கதைகள் வெளிப்படுத்துகின்றவா? என்றால் இல்லை என்றே கூறலாம். முத்துலிங்கம் ஐரோப்பாவை களமாகக் கொண்டு எழுதிய கதைகளில் கூட அங்கு புலம் பெயர்ந்த தமிழர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினையின் மையங்களை அவருடைய எழுத்து தீண்டவில்லை. புதிய தலை முறையினர் பற்றிய அச்சம், பண்பாட்டு நெருக்கீடுகள், பெண்ணியம் சார்ந்த பார்வை போன்றவற்றை விடுத்தால் மனித அவலத்தின உள்ளோட்டங்களை அவரது கதைகளில் காணமுடிவதில்லை. இந்த இடம்தான் முத்துலிங்கம் தன்னை சமூகப் பிணைப்பில் இருந்து விடுவித்துக் கொள்ளும் இடம். இதை ஜெயமோகன் பின் வருமாறு குறிப்பிடுகின்றார். 'மானுட அடிப் படைகளைப் பற்றிய ஆழமான மன அவலத்தை நாம் அ. முத்துலிங்கத்தின் படைப்புக்களில் காணமுடிவதில்லை என்பதே அவரது முக்கியமான குறை. அவரது கதை உருவாக்கும் மனஎழுச்சி எதுவும் அவரையும் நம்மையும் இணைத்துக் கொண்டு ஒற்றைப் பேரொலியாக மாறுவதில்லை. உதாரணமாக அவரது சிறந்த கதையான 'கறுப்பு அணிலையே' எடுத்துக் கொள்வோம். முற்றிலும் அன்னிய மண்ணில், தனிமையில் முற்றிலும் கை விடப்பட்ட நிலையில் வாழும் அந்த மனி தனின் துயரத்தின் குளிர்ந்த கணத்தை நம் மனதில் ஏற்றி விடும் கதை அது. ஆனால் அதற்கு அப்பால் நகர்ந்து அது எல்லா மனிதர்களும் எங்கும் அடையும் நிராகரிப்பின் கையறுநிலையின் பெரும் துயரத்தை அது நமக்கு அளிப்பதில்லை' (ஜெயமோகன், அமர்தல் அலைதல், பக்:73, 2003)

முத்துலிங்கம் இலக்கியம் அனுபவ உண்மைகளுக்குள் அடங்கியது என்ற கருத்தை உடையவர். எனவேதான் அவர் வாழ்க்கையில் இருந்து பெற்றுக்கொண்ட அனுபவத்திற்கு அப்பால் எதையும் தீவிரமாக அணுகப் பின்நிற்கின்றார். ஈழத்து பிரச்சினைகள் பற்றி எழுத தனக்கு நேரடி அனுபவம் இல்லை என்கின்றார். இது பற்றி எஸ். ராமகிருஸ்ணன் குறிப்பிடும் போது, 'சொந்த அனுபவங்களை எழுதுவதில் தமிழ் எழுத்தாளர்கள் அளவிற்கு தீவிரமானவர்கள் வேறுயாரும் இல்லை. நீங்க குளிக்கிற பகுதி கடல் கிடையாது. எட்டு அடிக்குள்ளே குளிச்சிட்டு வருகிறோம். அனுபவம் என்பது முற்றான விடயம் அல்ல. தஸ்தாவெஸ்கியை ஜெயிலில் போட்டாங்க. ஜெயில் கதை எழுதுறேன் என்று எழுதவே இல்லை. பதிலாக 'கமரசோவ் சகோதரர்கள் எழுதினார். தமிழ் எழுத்தாளன் ஜெயிலுக்கு போயிட்டால் தொடர்ந்து ஜெயில் கதை தான் எழுதுவான்' (பார்க்க: எஸ். ராமகிருஸ்ணன், எப்போதிருக்கும் கதை, பக்:54) என்ற கருத்து முத்துலிங்கத்திற்கு பொருந்தி நிற்கின்றது. எனவே வாழ்க்கையை தத்துவக் கண்ணோட்டத்திடனும் விமர்சனப் பார்வையுடனும் பார்க்கும் கூர்மதிப்பீடு இவரது கதைகளில் சாத்தியமாகவில்லை. வாசக அனுபவம் உலக அனுபவமாக மாறுவதில் பல கதைகள் தோல்வியடைகின்றன. வாசக பங்கேற்புக்கு அவசியமான மௌனங்களையும் கதைகள் கொண்டிருக்க வில்லை. ஆசிரியர் கதையை வாழ்க்கை பற்றி சிந்திக்கும் முறை என்று பார்க்காது அச்சு அசலாக வாழ்க்கை பற்றிய அனுபவமாக பார்க்கின்ற போது வாசகப் பங்கேற்புக்கு அவசியமான மௌனங்கள் கதைகளில் இடம்பெறுவது தவிர்க்கப்படுகின்றது.

இதுதவிர, முத்துலிங்கத்தின் படைப்புக்கள் வணிக எழுத்தின் சாயலைக் கொண்டவை என்ற பொதுவான குற்றச்சாட்டு ஒன்று உள்ளது. சுஜாத்தா, பாலகுமாரன் போன்ற எழுத்தாளர்களின் சாயலில் இவருடைய எழுத்துக்கள் உள்ளதாக நட்சத்திரன் செவ்விந்தியன் குறிப்பிடுகின்றார். இது முற்றிலும் உண்மையல்ல. அவரது கதைகளில் உள்ள புனைவு, சுவாரசியம் கதையின் உள்ளடக்கத் தீவிரத்தைக் கூட சிறு புன்னகையுடன் கடந்து சென்று விடுகின்றது. அவர் துன்பத்தை வெறும் துன்பமாக எதிர் கொள்வதில்லை. அதைப் புன்னகையுடன் தான் எதிர் கொள்கின்றார். 'துன்பம் வந்துற்ற கால் நகுக' என்பதாக அவரது புனைவு உள்ளது. ஆனால் அண்மையில் எழுதப்பட்ட சில கதைகளில் வணிக எழுத்தின் சாயல் உள்ளது. (சூனியக்காரியின் தங்கச்சி, கோப்பை) என்றாலும் தீவிர இலக்கியத்திற் கான படைப்பூக்கம் அவரிடம் நிறையவே உள்ளது என்பதும் உண்மையாகும்.

அவ்வாறானால் இவருடைய உலகம் எத்தகையது? அது பொருள் உலகமோ அன்றி ஆன்மீக உலகமோ அல்ல. சமூகக் கொடுமைகளை, ஆன்மீகச் சீர்கேடுகளை, சமூக மாற்றங்களை, புதிய எழுச்சிகளை, கருத்தோட்டங்களை, ஆழமாக அவருடைய கதைகள் வெளிக்கொண்டு வரவில்லை. போகிற போக்கில் மேலெழுந்தவாரியாக அனைத்தையும் ஒரு கணம் தொட்டுச் செல்கின்றது. எந்தவொரு வாழ்க்கையும் அவருடைய கதைகளில் முழுமையாக வெளிப்படவில்லை. அவருடைய கதைகளில் இடம்பெறும் கொக்குவில் என்ற கிராமம் கூட முழுப் பரிமாணத்துடன் வெளிக்கொணரப்படவில்லை. யாழ்ப்பாண சமூக அமைப்பை தொட்டுத் தீண்டாத ஒரு கதை சொல்லியாக அவர் இருக்கின்றார்.

அதே போன்று அவர் பணியில் இருந்து ஓய்வு பெறும்வரை அரசியல் வாடை கொஞ்சமும் வெளிவராமல் பார்த்துக் கொண்டார். அதன்பின் எழுதிய கதைகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக தனது பார்வைக் கோணத்தை முன்நகர்த்தியுள்ளார். உண்மையில் அதனை படைப் பாளியின் அரசியல் என்று குறிப்பிடுவதை விட இதுவரை காலமும் அவர் கட்டிக் காத்த மௌனமே அவரது நுண் அரசியல் என முன்மொழியலாம். எனவே அவரது படைப்புலகத்தை பின்வருமாறு வரையறுக் கலாம். பணியின் நிமிர்த்தம் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் செல்லும் போது தாம் பெற்றுக் கொண்ட அனுபவங்களைச் சொல்ல வரும்போது, மனிதர்களின் ஆசாபாசங்கள், விருப்பு வெறுப்புக்கள் என்பவற்றையும் கலாசார மாற்றங்கள், தனிமை, விரக்கி, போன்ற மனித உணர்வுகளை சுவாரசியம் குன்றாமல் எள்ளல் கலந்து புனைவாக்கம் செய்வதே இவருடைய கதையுலகின் அடிப்படை அம்சமாகும்.

ஆனாலும், ஈழம் மற்றும் புலம்பெயர் புனைகதைகளின் மத்தியில் முத்துலிங்கத்தின் கதைகளுக்கு தனித்துவமான ஓர் இடம் உள்ளது. பரந்ததொரு வாசக ஈர்ப்பு எப்போதும் அவருடைய கதைகளுக்கு உண்டு. இது எந்தவொரு ஈழப் படைப்பாளிகளாலும் இலகுவில் எட்ட முடியாத ஒரு இடமாகும். இது அவர் வரிந்து நின்ற தத்துவ, அரசியல், கருத்தியல் நிலைப்பாட்டால் உண்டானது அல்ல. மாறாக, அவர் பயணப்பட்ட நாடுகளின் புவிசார் நிலைமைகளின் வழி அவர் தம் மரபில் இருந்து பெற்றுக் கொண்ட பட்டறிவு என்பவற்றில் நின்று தோற்றம் பெற்றதாகும். எனவே ஈழம் மற்றும் புலம்பெயர் தமிழ் எழுத்துக்களில் இவரின் வகிபங்கை சுருக்கமாக வரையறுப்பதாக இருந்தால், இதுவரை இல்லாத மாறுபட்ட உள்ளடக்கத்தையும் சுவாரசியம் குன்றாத எழுத்தையும் வடிவ மாறுதலுடன் புதிய உத்தி மாற்றங்களுடனும் தமிழில் முன்னெடுத்தவர் என்ற வகையில் இப்படைப்பாளி மிகுந்த கவனிப் புக்குரியவராக இருக்கின்றார் எனலாம்.

ronyrajan.a@thaiveedu.com



கோலங்கள்

அரங்கேற்றம், கலைநிகழ்ச்சி, திருமணம், பூப்புனித நீராட்டு போன்ற வைபவங்களுக்கு கோலம் போட்டு அலங்கரிக்க,

Floor Decoration for Arangetram Wedding and other Cultural Functions.

Bhamini:

647 294 0736,
416 491 6057.

அண்ணாமலை கனடா

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன்

இணைந்து நடத்தும் தொலைதூரக் கல்வித்திட்டங்கள்

கல்வியாண்டு 2020/2021

தமிழ், யோகா, பரதநாட்டியம், வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல் முதலிய துறைகளில்

பட்டயம் (DIPLOMA), **இளங்கலை** ((BA, BFA), **முதுகலை** (MA, MFA, MSC)

படிப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொலை தூரக் கல்வியேயானாலும்

- தமிழ், வகுப்புகள் நவம்பர் 1 முதல் அடுத்த ஆண்டு யூன் 30 வரை முழுநேரமாக அண்ணாமலைக் கனடா வளாகப் பேராசிரியர்களால் நடாத்தப்படுகின்றன.
- யோகா வகுப்புக்கள் அக்டோபர் முதல் வாரம் தொடக்கம் முழுநேரமாக அண்ணாமலைக் கனடா வளாகப் பேராசிரியரால் நடாத்தப்படும்.
- வாய்ப்பாட்டு, வயலின், வீணை, பரதநாட்டிம் முதலிய கலைப் பிரிவுகளில் இந்திய விற்பன்னர்கள் கோடை விடுமுறையின் போது, ஜூலை, ஆகஸ்டு ஆகிய இரு மாதங்களிலும் பயிற்சியளிப்பார்கள்.
- பரீட்சைகள் யாவும் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களால் நடத்தப்பட்டு, விடைத்தாள்கள் அவர்களால் இந்தியாவிற்கு எடுத்துச்செல்லப்பட்டு, பெறுபேறுகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினாலேயே வெளியிடப்படும்.

தர அடிப்படையிலான வாய்ப்பாட்டு, வாத்திய இசை, பரதநாட்டியம்
தரம் 1 முதல் 7 வரையிலான தேர்வுகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொடர்புகளுக்கு: அண்ணாமலை கனடா, 101-1240 எலிஸ்மியர் வீதி, ஸ்காபரோ.
வளாகச் செயலகம் 416 -777 -2822 / 647 -881 -3613 யோகா 905-781-9796
அலுவலகம் சனி, ஞாயிறு தினங்களில் காலை 10.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை திறந்திருக்கும்.

அண்ணாவியார் சவரிமுத்து மிக்கேல்தாஸ்

ஆழத்து முத்துக்கள்

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

அவர்கள். அவர் யாழ். தீவகத்தில் புராண, இதிகாசக் கதைகளிலிருந்தும் கத்தோலிக்க கதைகளிலிருந்தும் கூத்துப் பிரதிகளை உருவாக்கினார். இவரது தந்தையரான சவரிமுத்து அவர்களும் பிரபலமான கூத்துக் கலைஞராக விளங்கினார். இவ்வாறு சிறுவயதிலிருந்து கூத்துக்கலையில் குரு குல வாசம் பெற்ற மிக்கேஸ்தாஸ் தாத்தாவின் பிரதிகளை ஆக்குதல், தந்தையின் கூத்து மெட்டுக்களுக்கு உதவுதல் போன்ற வற்றில் தேர்ச்சி பெற்றார்.

புலம் பெயர்ந்த மெலிஞ்சிமுனைக் கிராமத்தின் கூத்துக் கலைஞர்களை ஒருங்கிணைத்து மெலிஞ்சிமுனை கலைக்குரிசில் கலாமன்றத்தின் சர்வதேச கிளைத் தலைவராக மிக்கேல்தாஸ் இயங்கிவருகிறார். தற்போது கனடாவில் வசித்து வரும் இவர் ஆயுட்கால ஊழியமாக கூத்துப்பணியை ஏற்றுத் தன்னை அதற்காக முழுமையாக அர்ப்பணித்து வருகிறார்.

இவர் எழுதிய முதல் தென்மோடி நாட்டுக் கூத்தான 'சிறுமை' 1994இல் நாவாய் கலாமன்றம் தயாரிப்பில் கனடா கலை பண்பாட்டு கழகம் நடத்திய நாடகப் போட்டியில் முதன்மை விருதைப் பெற்றது. மேலாதிக்க வார்க்கத்தின் அடக்குமுறையைச் சாடிய இக்கூத்து பின்னர் புனித மரியகொறற்றி ஆலய மண்டபத்தில் சிறப்பு நிகழ்வாக மேடையேறியது. அடுத்து, இவர் எழுதிய 'கண்ணகி' கூத்து 1996 இல் கனடாவில் நடைபெற்ற ஆறாவது உலகத் தமிழர் பண்பாட்டு மாநாட்டில் நாவாய் கலாமன்றம் தயாரிப்பில் மெற்றோ ரொறன்டோ கொன்வென்சன் சென்ரரிலும் பின்னர் நோர்வே பேர்கன் நகரிலும் மேடையேற்றம் கண்டது.

ஈழப்போராட்டத்தை மையமாகக் கொண்டு இவர் எழுதிய 'வீரசுதந்திரம்' என்ற கூத்து நோர்வே நாட்டில் பேர்கன் கலைபண்பாட்டுக் கழகம் நடத்திய 2004ம் ஆண்டு மாவீரர் நிகழ்வில் மேடையேற்றப்பட்டது. மேலும் யேசுவின் பிறப்பைக் கூறும் 'மனுக்குல மீட்ப்பர்' கூத்து நோர்வே பேர்கன் தமிழ்ச்சங்கத்தின் தயாரிப்பில் தமிழ்க் கல்விக்கூட இளங்கலை மாணவர்களின் நடிப்பில் மேடையேற்றப்பட்டது. மக்கள் திலகம் எம்.ஜி. ராமச்சந்திரன் குறித்து இவர் எழுதிய 'புரட்சித்தலைவன்' என்ற கூத்து நோர்வே பேர்கன் நகரில் நடைபெற்ற எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில் மேடையேறியது.

இவர் எழுதிய மூன்று கூத்துகள் பிரான்சில் இயங்கும் ரிரிஎன் தொலைக்காட்சிக் காகப் பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்பானது. 'சுதந்திரமும் முரண்பாடுகளும்', 'தமிழ் மரபுப் பொங்கல்', 'வென்றிட ஒன்றாவோம்' ஆகிய கூத்துக்களே இவ்வாறு பிரான்ஸ் ரிரிஎன் கலையகத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட கூத்துகளாகும்.

'வரலாற்றை மறந்தவர்களால் வரலாற்றைப் படைக்க முடியாது' என்ற வாசகத்துக்கு இணங்க தமிழ் மன்னர்களின் வரலாற்றை தென்மோடிக் கூத்தாக வடித்தார். இலங்கையில் ஏகாதிபத்திய ஆங்கிலேயர்களை எதிர்த்துக் களமாடிய கடைசி மன்னன் குலசேகர வயிரமுத்து பண்டாரவன்னியன், அனுராதபுரத்தை ஆட்சி செய்த மாமன்னனான எல்லாளள் ஆகியோரின் வீரஞ் செறிந்த வரலாறுகளை எளிய நடையில் கூத்துகளாக அமைத்திருந்தார். 'மாவீரன் பண்டாரவன்னியன்' கூத்து 2016இல் பிரான்ஸ் பரிஸ் நகரில் நடைபெற்ற உலகத் தமிழ் நாடக விழாவிலும் கனடாவில் இடம்பெற்ற விஜய் ரிவியின் சுப்பர் சிங்கர் விழாவிலும் கலைக்குரிசில் கலாமன்றம் சர்வதேச ஒன்றியத்தினர் கனடாவில் நடத்திய விழாவிலும் மேடையேற்றப்பட்டு பெரு வரவேற்பைப் பெற்றுக் கொண்டது. இதே போல் ஆழ்கடலின் உள்ளே அமிழ்ந்திருக்கும் தமிழ் மன்னர்கள் ஆண்ட பெருநிலப் பரப்பில் வாழ்ந்த ஆதித்தமிழரின் அகம், புறம் சார்ந்த பண்பாட்டு வாழ்வியல் வரலாற்றைக் கூறும் 'குமரிக்கண்டமும் சங்க காலமும்' என்ற தென்மோடிக் கூத்தினையும் இவர் எழுதியுள்ளார்.

உலக ஒழுக்கநெறிக் கழகத்தின் தயாரிப்பில் மேடையேற்றப்பட்ட 'பெண்ணின் பெருமை' கூத்து, மறை பரப்புதலுக்காக மரணித்த புனிதரின் வரலாறான 'புனித ஸ்ஞாபக அருளப்பர்' கூத்து என மொத்தம் 14 தென்மோடிக் கூத்துக்களை இவர் எழுதியுள்ளார். இவரது பெரும்பாலான கூத்துக்கள் மேடையேற்றப்பட்டுள்ளன. மேடையேற்றம் கண்ட கூத்துக்கள் அனைத்தையும் அண்ணாவியார் மிக்கேல்தாஸ் அவர்களே அண்ணாவியம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

புலம்பெயர் நாடுகளில் ஏறத்தாள ஐம்பதுக்கு மேற்பட்ட கூத்துக் கலைஞர்களை ஒன்றிணைத்து கூத்துக்களை மேடையேற்றி வருகிறார். இவர்களில் நோர்வே பேர்கன் நகரில் தொடர்ச்சியாகக் கூத்துக்களை மேடையேற்றி வரும் அண்ணாவியார் ச. ஜெயராஜா, 1989இல் நோர்வே ஒலசுண்ட் நகரில் இளைய தலைமுறைக் கலைஞர்களுடன் இணைந்து மேடையேற்றிய 'தாவீது கொலியாத்து' கூத்தில் கொலியாத்து பாத்திரம் ஏற்ற ச. யோண்பீற்றர், பிரான்ஸ் நாட்டில் வாழும் கலைக்குரிசில் கலைப் பாரம்பரியத்தின் நான்காம் தலைமுறைக் கலைஞர் சூ. றொபின்சன் ஆகியோர் குறிப்பிடத்தக்க கலைஞர்களாவர்.

ஈழத்தில் எமது தேசிய கலைவடிவமான கூத்துக்கள் மருவி வரும் இக்காலகட்டத்தில் அக்கலையைப் பாதுகாக்கும் நோக்கில் மிக்கேல்தாஸ் எழுதிய 'எதிரேறு எல்லாளன்', 'மனுக்குல மீட்ப்பர்', 'கண்ணகி', 'மாவீரன் பண்டார வன்னியன்', 'சுதந்திரமும் முரண்பாடுகளும்' ஆகிய தென்மோடிக் கூத்துகள் இதுவரை நூல்களாக வெளிவந்துள்ளன. தனது படைப்புக்களை மதிப்பிட்டுக் கலையுலகில் ஒரு அங்கீகாரத்தை அளித்து தன்னை உலகறியச் செய்த மதிப்புக்குரியவர்களாக எழுத்தாளர் பா. செயப்பிரகாசம், பேராசிரியர் கே.ஏ. குணசேகரன் ஆகியோரை நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

இவர் தென்மோடிக் கூத்துகள் மட்டுமல்லாது கவிதை, சிறுகதை எழுதுவதிலும் ஆற்றல் படைத்தவர். உதயன் பத்திரிகையின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் இவரது 'மனச்சுமைகள்' சிறப்புப் பரிசைப் பெற்றதோடு, ஆறாவது உலகத் தமிழர் பண்பாட்டு மாநாட்டின் சிறுகதைப் போட்டியில் 'கரையேறி மீண்ட அலை' என்ற இவரது சிறுகதை தேர்ந்தெடுக்கப்பட்டு விழாமலரில் பிரசுரமானதும் குறிப்பிடத்தக்கது.

தந்தையைப் போலவே மிக்கேல்தாஸ் அவர்களின் பிள்ளைகளும் கலைத்துறையில் ஈடுபட்டு வருகின்றனர். புகைப்பட, ஒளிப்படக் கலைஞனான இவரது மகன் மில்டன் கண்ணகி, ஞானசௌந்தரி ஆகிய கூத்துக்களில் நடித்துள்ளார். இன்னொரு மகன் மிக்றோன், மணிவண்ணனின் 'நாகராஜசோழன்', ரவி அச்சுதனின் 'ஐஸ்கிறீம்' ஆகிய திரைப்படங்களிலும், கண்ணகி, ஊதாரிப்பிள்ளை ஆகிய கூத்துக்களிலும் நடித்துச் சிறப்புச் சேய்துள்ளார்.

இந்தியா, கனடா, நோர்வே, பிரான்ஸ் போன்ற தமிழர்கள் வாழும் இடங்கள் எல்லாம் சென்று தென்மோடிக் கூத்தின் பெருமையைப் பறைசாற்றிய மிக்கேல்தாஸ் அவர்களை எழுத்தாளர்கள், கலைஞர்கள், தமிழ் உணர்வாளர்கள் என பலர் பாராட்டியுள்ளனர். 'அண்ணாவியார் மிக்கேல்தாஸ் அவர்கள் கனடாவில் ஆறாவது உலகத் தமிழர் பண்பாட்டு மாநாட்டில் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான கண்ணகி வரலாற்றை நாட்டுக்கூத்தாக எழுதி மேடையேற்றியமையும் நோர்வே நாட்டில் வீரசுதந்திரம் காவியம் படைத்ததும் எமது பாரம்பரிய கலையின் பெரும் பதிவாகும். கூட்டில் குயிலின் குஞ்சாக இன அடையாளத்தை வெளிப்படுத்தும் இவரது பணி மகத்தானது' என உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனும், 'இலக்கிய நடையில் சுதந்திர வேட்கையூட்டி நாட்டுப்பற்று, இன உணர்வை வெளிப்படுத்துபவர் அண்ணாவியார் மிக்கேல்தாஸ் அவர்கள்' என உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறனும், 'பண்டார வன்னியனின் வீரம் செறிந்த வரலாறே இவரது எழுத்தாக்கமாய் உருவாகி, வீழ்ந்து விடாத வீரத்தையும் மண்டியிடாத மானத்தையும் பறைசாற்றித் தமிழரின் ஒப்பற்ற வரலாற்றுப் பதிவுக்குச் சான்றாகிறது' என செந்தமிழன் சீமானும் புகழாரம் சூட்டியுள்ளனர். மேலாக, கூத்துக்கலைக்காக இவர் ஆற்றிய அளப்பெரும் பணியைப் பதிவு செய்யும் முகமாக புதுவை பல்கலைக்கழக நிகழ்த்துக் கலைத்துறையால் 'கூத்துக்கலைக் செம்மல்' என்ற விருது வழங்கப்பட்டு இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தென்மோடி கூத்துகள் பலவற்றை எழுதியும் மேடையேற்றியும் பதிவிட்டும் வரும் அண்ணாவியார் ச. மிக்கேல்தாஸ் அவர்கள் மென்மேலும் கலைப்பணி ஆற்றத் 'தாய் வீடு' வாழ்த்துகிறது.

sriskandan@thaiveedu.com

சிக்மன்ட் பிராய்ட்: நவீன உளவியலின் தந்தை

- எஸ். பத்மநாதன் -

உலக உளவியல் துறையில் மறக்கவே முடியாத ஒரு அறிஞரைக் கூறுங்கள் என்று எவரைக் கேட்டாலும் அவர்கள் முதலில் சொல்லும் பெயர் நிச்சயமாக சிக்மன்ட் பிராய்ட்டாகவே இருக்கும்.

தனது வாழ்நாள் முழுவதையும் உளவியல் தேடலுக்காகவே அர்ப்பணித்த ஓர் உள மருத்துவர் இவர். உளப்பகுப்பாய்வு துறையில் (psychopathology) ஆரம்ப கர்த்தா. மனங்களின் வேறுபாடுகள், களவுகள், குழந்தைப்பாலியல் (infantile Fexuality), ஆளுமை வளர்ச்சி, உணர்ச்சி மேம்பாடு போன்ற பல்வேறு உளவியல் கூறுகள் பற்றியும் அவை பற்றிய கோட்பாடுகளையும் வழங்கியவர். ஹிஸ்தீரியா (Hysteria) என்ற நோய் பற்றி முதலில் ஆய்வு செய்த மனோவசிய கலைஞர், உலகில் சிறந்த காதல் நிபுணர் (Greatest Love Specialist) என்று அமெரிக்காவில் MGM நிறுவன உரிமையாளர் Samuel Goldwyn என்பவரால் வர்ணிக்கப்பட்டவர், 15க்கு மேற்பட்ட நூல்களையும், 320க்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதிக்குவித்த உளவியல் எழுத்தாளர், கொக்கெயின் பற்றிய ஆய்வுக்காக தானே உட்கொண்டு பார்த்தவர். தாடை புற்றுநோய்க்கு உட்பட்டிருந்த இவர் நாசிகளின் பிடிக்கு தப்பி இங்கிலாந்துக்கு தப்பியோடி பின் அங்கு மரணித்தார். இப்படியான உளவியல் சாதனையாளரை உலகம் கடந்த நூறாண்டுகள் சந்திக்கவில்லை என்றே கூறலாம்.

பிராய்ட் 1856 மே 6இல் ஆஸ்திரியாவில் உள்ள Freberg Moraviaவில் ஜேக்கப் - அமாலியா இணையரின் மகனாக பிறந்தார். அப்போது அவரது இயற்பெயர் Sigismnud. இதனை இவர் பின்பு (1875ல்) Sigmnud என மாற்றிக் கொண்டார். எட்டு பிள்ளைகள் உள்ள குடும்பத்தில் இவரே மூத்தவர். ஆரம்பத்தில் குடும்பத்தில் வறுமை நிலவினாலும் குடும்பத்தினரே இவரது படிப்புக்கு உதவியுள்ளனர்.

1873ல் இரண்டாம் நிலை கல்வி முடிந்து மருத்துவப் படிப்பை மேற்கொண்டார். 1881ல் ஒரு மருத்துவராக வெளியேறினார். 1884ல் தொடங்கி, தொடர்ந்து பத்து ஆண்டுகள் உடலியல் பற்றிய ஆராய்ச்சிகள் நடத்தினார். பின்னர், நரம்பியல் மருத்துவ ஆராய்ச்சியில் செயல்பட ஆரம்பித்தார். பிரெஞ்சிய நரம்பியல் அறிஞரான ஜீன் சார்க்கோட் என்பவருடன் பணியாற்றியும் உள்ளார். வியன்னா மருத்துவ வல்லுநர் ஜோசப் பிராசிரியர் என்பவருடனும் பணிபுரிந்தார். இவ்வேளையில் தான் உறக்கப் போலி (அறிதுயில் நிலை) என்னும் Hypnosis பற்றி ஆய்வு செய்தலுடன் Hysteria எனப்படும் ஒரு வகை இசிப்பு (நரம்புத் தளர்ச்சி) நோய் பற்றியும் ஆய்வு செய்துள்ளார். இந்நோயில் பதற்றம், மயக்கமுறல், நித்திரையின்மை போன்ற பல்வேறு வேறுபாடுகளையும் கண்டறிந்தார். psychomatic எனப்படும் உளப்பிரச்சினைகள் பற்றி சகல விபரங்களையும் அறிந்து கொண்டார். இக்காலத்தில் உடலியல் உளவியல் எவ்வாறு போதை பொருட்களால் மாறிவிடுகிறது என்பதனை அறிய (psychomatic physical and psychological effects of Cocaine) பல ஆய்வுகளை தானே செய்தார். தானே கொக்கையினை உண்டு பார்த்தார். இந்த வேளையில் சொந்தமாக பல நோயாளிகளை சுகமாக்கினார்.

1886ல் Martha Bernays என்பவரை திருமணம் செய்தார். அவருக்கு ஆறு குழந்தைகள்.

1895ல் இவரது முதல் நூலான Studies of Hysteia வெளிவந்தது. நரம்புக் கோளாறு, உதரணமாக பெண்களின் உடல் உளப் பண்புகள் எவ்வாறு பாதிப்படையும் என்பதனை விளக்கியது இந்நூல். இவ்வேளையில் உளப்பகுப்பாய்வு psychoanalysis என்ற கோட்பாட்டினை உருவாக்கினார்.

இயக்கவியல் விதிகளை மனிதனின் ஆளுமைக்கும் மனிதனின் உடலிற்கும் பாவிக்க முடியும் என்பதனை கண்டறிந்தவர் இவராவார். பல்வேறு பாலியல் உணர்வுகள் பற்றி ஆய்வு செய்தார். முதலாவது மனித உந்து சக்தி பற்றி அறிந்து கொண்டார். உணர்வு மாற்றீட்டு கோட்பாடு (Theory of Transference) பற்றி அறிந்து கொண்டார். உள் மன ஆசைகள், கனவுகளின் தொழிற்பாடு பற்றியும் அறிந்து கொண்டார்.

பிராய்ட் 1899ல் வெளியிட்ட நூல் The Interpretation of Dreams ஆகும். இவரது நூல்களில் சிறந்த தற்சிந்தனைவாய நூல் இதுவாகும். கனவுகள் பற்றி ஆய்வில் இந்நூலை தவிர்த்துவிட முடியாது. முதலில்



600 பிரதிகளே வெளியிடப்பட்டன. பின்னர் உலகெங்கும் இந்நூல் பிரபலம் பெற்றது. இந்நூல் பின்பு 7 பதிப்புக்களில் வெளிவந்தன. உலகை மாற்றிய சிறந்த நூல்களில் இதுவும் ஒன்றாகும். முதலில், ஜேர்மன் மொழியிலேயே இந்நூல் வெளிவந்தது.

முதலில் நோயாளிகளை ஆய்வு செய்தும், அவர்களை துயில் கொள்ளவைத்தும் பல ஆழ்மன உண்மைகளை ஆய்வு செய்தார். இவ்வேளையில் உளப்பாய்வும் செய்யப்பட்டிருந்தது. மிக ஆழமானதும் அற்புதமானதுமான இக்கனவுகள் தோன்றும் விதம் பற்றி அறிய நூற்றுக்கணக்கானவர்களின் கனவுகள் பதியப்பட்டன. இவை விஞ்ஞான ரீதியில் கொடுக்கப்பட்டன. 1931ல் இந்நூல் மூன்றாவது பதிப்பாக வெளிவந்தவேளை உலகமே வியப்பில் ஆழ்ந்தது. அமுக்கப்பட்ட ஆசைகளின் நிறைவுகள் மட்டுமல்ல, சிறுவயது முதல் ஏற்பட்ட மாறுதல், அடையாத ஆசை, நிறைவுகளின் தோற்றங்கள் கனவுகளாக மாறலாம் என்கிறார் பிராய்ட்.

மூளை ஒழுங்காக செயல்பட கனவுகள் அவசியம். நினைவாற்றலுக்குக் கனவுகள் தேவை, உள - உடல் சமநிலையாக கனவுகள் உதவும் என்பது பற்றியெல்லாம் அரிய தகவல்களை இந்நூல் விளக்குகிறது. முதலில் நித்திரை நிலை, பழைய ஞாபகங்கள் புதுப்பிக்கப்படும் நிலை, பின் நோக்கல் பற்றியும் கூறுகிறார். இறுதியில் ஏற்படும் கனவுத்தொழிற்பாடு பற்றி கூறுகிறார். 257 அடையாளங்களை தெரிவு செய்து விளக்கம் கொடுத்திருந்தார். அடிமன ஆசைகள் அனைத்தும் கனவுகளுக்கு அடிப்படையில் முக்கியமாகும் இந்த இடத்தில் நனவிலி நிலை (unconcious) பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

மனித மனங்களை அறிய சிக்மன்ட் பிராய்ட் 2 வகைகளாக பிரித்தார். உணர்வு மனம், நனவிலி அல்லது ஆழ்மனம் என்பனவே அவையாகும். மனித நடத்தையில் நனவிலி மன செயற்பாங்குகளுக்கு முக்கியத்துவம் அறிந்தார்.

நனவிலிமனமே எமது மனத்தின் முக்காற் பங்கினதாகும். சகலவிதமான அபிலாசைகள், எதிர்ப்பார்புக்களை புதைத்து இணைந்துள்ளது. ஆழ்மனமே சகலவிதமான பிரச்சினைகளுக்கும் காரணமாகும். பகுத்தறிவு பேசுவது உணர்வு மனம் அல்லது கனவு மனம் ஆனால் ஆழ்மனதில் பகுத்தறிவுக்கு ஏற்ற கொள்கைகள், எண்ணங்கள் பதிந்திராதுவிட்டால், அவர் எவ்வளவு பகுத்தறிவு வாதம் புரிந்தும் பயனில்லை. டார்வினின் பரினாம கொள்கையில் ஈடுபட்டார். எனவே இயக்கவியல் விதிகளை மனிதரின் ஆளுமை (Personally)க்கும் அவரது உடலிற்கும் பாவிக்க முடியும் என கண்டு பிடித்தார்.

மனத்திற்கு விஞ்ஞான ரீதியான விளக்கம் தந்த முதல்வர் பிராய்ட் ஆவர். பலருக்கு மனம் எங்கே உள்ளதென்றே தெரியாத நிலையில் இவரது மனம் பற்றிய ஆய்வு முக்கியம் பெறுவதாகும். ஆளுமைக்கும் மனத்திற்கும் உள்ள தொடர்பினை மிகவும் அற்புதமாக விளக்கியவர் பிராய்ட் ஆவர். உள் மனத்தில் புதைந்து கிடக்கும் இவ் வாளுமைகள் வெளிப்படும் விதமே தனித்துவமானது.

'மனிதன் பிறக்கும் போது வெற்றுத்தாள் போல தான் பிறக்கிறான். இவ்வுலகில் அவர் கண்டு கேட்டு அறியும் சம்பவங்களால் மெல்ல மெல்ல அவனது நல்லது கெட்டது அறியும் திறனை பார்க்கின்றன' என்ற அரிய கருத்தினை கூறியுள்ளார்.

முதலாவதான உணர்வு உந்தல் என்பது பிறப்புடன் தொடர்புள்ளது. இதனை உணர்ச்சி இயல்வுக்கமனம், நனவடி அகம், பண்படாத மனம் என்றெல்லாம் கூறலாம். இவ்வாறான உணர்வு உந்தல் உள்ள ஒருவர் தான் சொல்வது அல்லது செய்வது சரியா தவறா என்று அவருக்கே புரியாது. தான் என்ன நினைக்கிறரோ அதனை உடன் செய்துவிடுகிறார். ஒரு பொருளை அபகரிப்பது, ஒருவரை பாலியல் வல்லுறவு செய்வது, ஒருவரை துன்புறுத்துவது எல்லாம் ஆபத்தமான செயல் எனப் புரியாது. பகுத்தறிவற்ற செயல்களாகவே இவை இருக்கும். இது மிகவும் சிக்கலான தொழிற் பாடாகும்.

அடுத்துள்ள மனநிலை ஈகோ என்பதாகும். இது நான் என்னும் அகங்காரம் ஆகும். இது சூழ்நிலை அறிவு சம்பந்தமானது. தற்போது இந்த ஈகோ பற்றிய தெளிவு பெறப்படவில்லை. குழப்பமான நிலையே உள்ளது. தவறான புரிதல்கள் உள்ளன. எதற்கெடுத்தாலும் ஈகோ என்பர். குடும்பங்களில் நடைபெறும் பிரச்சிகளின் அனைத்தும் இந்த ஈகோ பற்றியதாகவே இருக்கும். இந்த நிலையில் மனதின் ஆளுமையினை உருவாக்கும் மற்றொரு இயல்பான 'நான்' என்னும் முனைப்பு முக்கியம் பெறுகிறது. யதார்த்த நிலையை கவனத்தில் எடுத்துக் கொள்கிறது.

சிக்மன்ட் பிராய்ட் மனிதரில் மறைந்திருக்கும் மர்மமான குணங்களையெல்லாம் கண்டறிந்த மாமேதையனவார். இவர் கையாண்ட உளவியற் சொற்கள் நூற்றுக்கணக்கான வையாகும். மனஉணர்வை கிளறுதல் (Abraction), பீதி அல்லது கிலி (Phobia) வலுத்தாக்குதல் இருமுகப்போக்கு மின் உணர்ச்சி, விரத்தி, தாழ்வு மனாப்பான்மை, துன்பம் விளைவித்தல், சுயஇன்பம், சோகபோராட்டம், உணர்வு அழுத்தம், துன்பத்தில் இன்பம் காணல்... இப்படி எத்தனையோ புதிய புதிய சொற்களை அறிமுகம் செய்து இருக்கிறார்.

சிக்மன்ட் பிராய்ட்டின் வழியாக Anna Freud, Alfred Adler, Erik Eriksoh, Emst Jones போன்ற பலர் உருவாகினர். இவ்வளவு உளவியல் கண்டு பிடிப்புகளைச் செய்த பிராய்ட்டிற்கு 13 தடவைகள் நோபல் பரிசுக்காக சிபாரிசு செய்யப்பட்டாலும் அப்பரிசு கிடைக்கவில்லை. 1915 -1938 வரை இவ்வாறான முயற்சிகள் இடம் பெற்றுள்ளன.

அமெரிக்காவில் Stanley Hallல் அவர் பல சொற்பொழிவுகளை நடத்தினார். இதற்காக 1909ல் முதல் முதலாக அமெரிக்காவுக்கு பல தடவை வருகை தந்தார், அமெரிக்காவில் அவருக்கு கௌரவ பட்டம் வழங்கப்பட்டதை அவர் பெருமையாக கருதினார். 1930ல் ஜேர்மனியிலும் 50 Ethe என்ற சிறப்பு பட்டம் வழங்கப் பட்டது. இது பிராஸ்பேட் நகரில் இடம் பெற்றதாகும்.

இவ்வாறான அரிய உளவியல் ஆய்வுகளை அவர் புகழ் கருதி செய்யவில்லை. இயல் பாகவே அவரது உந்துதல் அத்துறையில் இருந்துள்ளது. இதே வேளையில் நாசிகள் (Nazis) மூலமான பிரச்சினையால் அவர் தனது மனைவியுடன் இங்கிலாந்துக்கு செல்ல நேர்ந்தது. பிள்ளைகளும் தனித்து விடப்பட்டனர். அவரது நூல்கள் பல எரியூட்டப்பட்டன. இந்த நிலையில் அவரது புகைப்பிடித்தலால் ஏற்பட்ட தாடை புற்று நோயால் வருந்தினார். அவருக்கு 30 தடவைகளுக்கு மேல் சத்திர சிகிச்சை நடத்தப்பட்டுள்ளது. Epithelomia என்ற புற்று நோய் அவரை தாக்கியது. வேதனை தாங்க முடியாது Morpiaine என்னும் வலி நீக்கி மருத்துகளை ஏற்றும்படி மருத்துவர்களிடம் மன்டாடியுள்ளார். இந்த வலி நீக்கிகளால் உயிரையும் நீத்துள்ளார். எத்தனையோ பேரின் உளவியல் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கிய சிக்மன்ட் பிராய்ட் அவர்கள் 1939ல் மரணமானார்.

தவற்றிலிருந்து தவறுகளுக்கு சென்ற பின்பு ஒருவர் உண்மையை கண்டு பிடிக்கிறார் (From Error to Errors one discovers the entire truth) என்பது பிராய்ட்டின் பெரிய சித்தாந்தம்.

pathmanathan.s@thaiveedu.com

BUYERS

If Yathavann Doesn't Negotiate at Least

$10,000 Off The List Price,

He'll Give You $2000 Cash on Closing.

FREE Home Inspection When You Buy With Us.

Sellers

Your Home SOLD in 60 Days Guaranteed!

OR I'LL SELL IT FOR FREE**

**SOME CONDITIONS MAY APPLY

For More Information On My
Exclusive Guaranteed Sales Program

ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA

**Free Home Evaluation.
No Cost. No Obligations**

RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002

YATHAVANN
SELVARAJAH
Sales Representative

416-992-4474

ஆய்வறிஞரும் மார்க்சிய விமர்சகருமான கோவை ஞானி

- தெளிவத்தை ஜோசப் -

தமிழ் உலகிற்கும் தமிழிலக்கிய உலகிற்கும் செயற்கரிய செயல்கள் புரிந்து ஒரு வழிகாட்டியாகத் திகழும் அறிஞர் என்று தமிழறிஞர் பலராலும் போற்றப்பட்ட கோவைஞானி ஜூலை 22, 2020இல் ஆமரர் ஆனார்.

நீண்ட 85 ஆண்டுகள் தமிழுடனும் தமிழ் மக்களுடனும் வாழ்ந்துதான் மறைந்திருக்கின்றார் என்றாலும் அவருடைய மறைவால் ஏற்பட்டிருக்கும் நிரப்பப்பட முடியாத வெற்றிடம் தமிழுக்கான ஒருபேரிழப்பே ஆகிறது.

தமிழின் உயிரியக்கத்தை வரலாற்றுப் போக்குகளோடும் நிகழ்கால முகங்களோடும் சரியாக இனங்காண்பதற்கு ஞானியின் தேடுதல்கள் எழுத்துக்கள் தரும் புரிதல்கள் தேவை. தேடு... தேடு... இன்னும் தேடு என்று தேடலையே வாழ்க்கையாகக் கொண்ட ஞானியின் வழித்தடங்களில் நூறு நூறு ஞானிகள் தோன்ற வேண்டும். ஞானி அத்தகைய ஒரு வீரிய வித்து... என்று இந்த வெற்றிட நிரப்பலுக்கான நம்பிக்கையை 2000 மாம் ஆண்டிலேயே குறித்து வைக்கின்றார் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக கலைத்துறை பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள். (இருபது நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை இருபதாம் நூற்றாண்டு பார்வை நூல் அணிந்துரை).

கோவை மாவட்டத்தின் பல்லடம் வட்டம் சோமனூரில் ஜூலை 01, 1935ல் பிறந்தவர் இவர்.

பெற்றவர்கள் வைத்த பெயர் பழனிச்சாமி. இலக்கியத்துக்காக இவர் வைத்துக் கொண்ட பெயர் கோவை ஞானி. சோமனூர். இ. பழனிச்சாமி என்னும் இயற்பெயரை விடவும் தமிழுலகில் நின்று நிலைக்கும் அடையாளமாகியுள்ள பெயர் கோவை ஞானி என்பதே.

ஞானியின் தந்தை கிருஷ்ணசாமி, தாயார் மாரியம்மாள். பல்லடம், சோமனூர், கோம்பைகாட்டுப்புதூர், கருமத்தம்பட்டி என்று கிராமியச் சூழலில் வளர்ந்து கோவையின் கத்தோலிக்கப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி என்று தமிழ்க் கல்வி பெற்று அண்ணாமாலை பல்கலைக் கழகத்தில் தமிழ் இலக்கியம் கற்ற தமிழ்ப் பற்றாளர் இவர்.

‘நான் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன். பல ஊர்களின் பள்ளிகளில் கல்விகற்றேன். தமிழில் தான் கல்வி கற்றேன். தெருவிலும் ஊரிலும் என்னைப் போலத் தமிழ் பேசுபவர்களிடமிருந்தும் தமிழ் கற்றேன். தாயிடமிருந்து தமிழ் கற்கும் கோதே அன்பையும் சேர்த்துத்தான் நாம் அனைவரும் கற்கின்றோம் என்று கூறும் ஞானி, ஒரு முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கோவையில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

தமிழிலக்கிய வரலாற்றாய்வுகளும் மெய்யியல் சிந்தனைகளும் அவரின் கண்கள் என்றால் தமிழ் அவரது உயிர்.

‘தமிழ்தான் எனக்கு உயிரைத் தந்தது. உறவுகளைத்தந்தது. என் கல்வி, என் ஆளுமை என்று செல்லப்படுவதெல்லாம் என் தமிழ் எனக்குத் தந்தது. எனக்குள் வள்ளுவரும் இளங்கோவும் வாழ்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணமும் தமிழ் தான் என்று ஒரு கட்டுரையில் குறிக்கின்றார் இவர். 1999இல் இவருடைய கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவந்த நூல் ‘தமிழன் வாழ்வும் வரலாறும்’ என்பது. ‘இலட்சியப் போராளி’ என்னும் மக்கள் விடுதலை இயக்க இதழில் இவர் தொடராக எழுதிய 12 கட்டுரைகள் இவை. இந்தக் கட்டுரைகளின் தலைப்புக்களே ஞானியின் அகம் நிறைந்த தமிழுணர்வின் அடையாளங்களாக அமைகின்றன.

எந்த முகம் தமிழனின் முகம் என்னும் முதற் கட்டுரையினிருந்தது, தமிழன் உலகத்திற்கு உரம், உப்பு, உயிர், வரலாற்றில் தமிழன், தமிழ்ச் சித்தர்கள், சாதிகளைக் கைவிடுவோம் தமிழராய் இணைந்திடுவோம், தமிழ்த் தேசியத் திருமுகம், என்று தமிழுக் குள்ளேயே சமூக வாழ்வின் உயிரியக்கத் தைக் காணும் ஆன்ம வெளிப்பாடு இக் கட்டுரைகள்.

‘தமிழ்த் தேசியம் என்னும் அரசியலை கருத் தியல் ரீதியாக முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள் ளன. தமிழரின் நெடுங்கால வரலாற்றை ஆராய்வது இக்கட்டுரைகளின் நோக்கம் அல்ல. தமிழரின் இன்றைய வாழ்வு நமக்



குள் பெரும் வருத்தத்தை ஏற்படுத்துகிறது. உலகளவில் பெருகிவரும் நெருக்கடிகளுக் கிடையில் தமிழன் நொறுங்கிக் கொண் டிருக்கின்றான். வரலாற்றுக்குள்ளிருந்து இவனை, இவனது ஆற்றல்களைத் திரட்ட வேண்டும். வரலாறு நெடுகிலும் தமிழனுக் குள் செயல்பட்ட மெய்யியலைத்திரட்ட வேண்டும். தமிழன் தன்னை உணர்ந்து, தன்னைத்திரட்டிக் கொண்டு கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டாலொழிய இவனுக்கு வரலாற்றில் இடம் இல்லை. விடுதலை இல்லை. இன்று உருவாகிவரும் தமிழ்த்தேசியம் என்னும் அரசியலின் இலக்கு இதுவாகத்தான் இருக்கமுடியும். இத்தகைய அரசியலுக்கான ஒரு முன்னுரையே இந்த கட்டுரைகள்’ என்று முன்னுரையில் எழுதுகின்றார் ஞானி.

இலண்டனிலிருந்து இ. பத்மநாப ஐயர் 1998ல் வெளியிட்ட இன்னுமொருகாலடி என்னும் சிறப்பு மலரில் வெளி வந்த கோவை ஞானியின் ‘அகதியாகும் தமிழன்’ கட்டுரையும் பின்னினைப்பாக சேர்க்கப் பட்டுள்ளது.

ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத் துக்கு குரல் கொடுக்க ஒத்துழைப்பு நல்கி இயங்க நம்மால் இயலவில்லை. சிங்கள அரசுக்கு இந்திய அரசு தரும் இராணுவ உதவி முதலியவற்றை கேள்விக்குட்படுத்த நம்மால் இயலவில்லை. தமிழகத்து அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் உரிமைகளை மைய அரசிடம் விற்றுவிட்டார்கள். தமிழன் இன்று தன் மானம் அற்றவனாக, தன்னைத்தானே காத்துக்கொள்ள முடியாத வனாக, தமிழகத்திலேயே அகதியாகி வருகின்றான்... என்று தமிழர் அரசியலை விரிவாகப் பேசும் கட்டுரை இது.

தமிழ்த் தேசியம் என்பதன் முக்கியத்துவம் உணர்ந்திருந்த ஞானியவர்கள் அது பற்றி நிறைய எழுதியும் வந்தவர். தமிழ்த் தேசியம் என்பது இல்லாமல் தமிழர்களாகிய நமக்கு இனி வாழ்வு இல்லை, விடுதலை இல்லை என்பதை வற்புறுத்தியவர். தமிழகத்தில் உள்ள தமிழினத்தலைவர்கள் மற்றும் தமிழ் அறிஞர்கள் பலரை கோவைக்கு அழைத்து உரையாற்ற வைத்து, உரைகளைப் பதிவு செய்து ‘தமிழ் தேசியம் - பேருரைகள்’ என்னும் நூலை கோவை நண்பர்களுடன் இணைந்து வெளியிட்டிருக்கின்றார்.(1997).

இதன் தொடர்ச்சியாக வெளிவந்த நூல் தான் அறிஞர் கு.ச. அனந்தன் அவர்களின் அரிய நூலான ‘இந்தியாவில் தேசிய இனச் சிக்கலும் தமிழ்த் தேசியமும்’ என்பது. தொடர்ந்து வெளிவந்தது ஞானியின் ‘தமிழன் - வாழ்வும் வரலாறும் (1999). இந்த நூலை அமரர் கு.ச. ஆனந்தன் அவர்களுக்கே காணிக்கையாகப் படைத்துள்ளார் ஞானி.

சிற்றிதழ்களுடன் தெருக்கமான உறவு கொண்டிருந்தவர் ஞானி. கிராம ஊழியன் நின்றுபோன காலத்தில் இவர் 12 வயது பள்ளி மாணவரே என்றாலும் அதன் இலக்கியத்தாகமும் புதுமை வேகமும் புதிய வர்களையும் பாதிக்கவே செய்திருந்தது. புதிய தலைமுறை, எழுத்து, அஃக், செங்கொடி, தீக்கதிர், செம்மலர், தீவட்டி, சதங்கை, லயம், விழுது, மௌனம் என்று அறுபதுகள் தொடக்கம் 70; 80; 90 என்றும் அதற்குப்பின்னும் வெளிவந்த சிற்றிதழ்களின் இயக்கங்களுடன் இணைந்திருந்தவர். கோவைக்கவிஞர்களின் புரட்சிக் குரலாய்த் திகழ்ந்த வானம்பாடி புதுக் கவிதை இயக்கம் மற்றும் வானம்பாடி இதழின் தோற்றம், வளர்ச்சி ஆகிய வற்றின் மையப்புள்ளியாகவும் இருந்தவர் கோவை ஞானி. 1900ல் ‘வானம்பாடிகளின் இலக்கியவானம்’ என்னும் பெயரில் வானம்பாடியின் வரலாற்றை ஒரு நூலாகப் பதிவிட்டிருக்கும் வானம்பாடிக்கவிஞர் தமிழ் நாடன் ‘கோவையிலிருந்த வானம் பாடிகளின் கூட்டை கலைத்தவரும் ஞானி தான் என்கின்றார்.

‘கவிதை உலகின் பகத்சிங்குகள் நாம். இந்தக் கோவைநகர் இன்னுமொரு பெத் ரோகிராட்..’ என்றெல்லாம் புரட்சிக்குரல் எழுப்பிய வானம்பாடிக்குழுவினர் ஒற்றுமை யிழந்து கலைந்து போன வரலாறு சோக மானது.

ஞானியின் விமர்சனங்களால் தான் இந்த உடைவு நிகழ்ந்தது என்று குறை கண்டனர் சிலர். ‘தமிழ்க் கவிதை மீண்டும் தேங்கிவிட்டது. புகழ் பெற்ற வானம்பாடிக் கவிஞர்கள் தமது முன்னைய சாதனைகளை வெல்ல முடியாமல் தமது வரலாற்றைத் தாமே கடந்து செல்ல முடியாமல் தேங்கி நிற்கின்றார்கள். நிறைய நேரங்களில் வாழ்க்கையின் வழியே கவிதையைப் பார்க்காமல் கவிதையின் வழியே வாழ்க்கையைப் பார்க்க முயல்கின்றார்கள். விரிந்த அரசியல் அறிவும், பரந்த தத்துவ அறிவும் கலை இலக்கிய உணர்வை அழித்து விடாது என்பதை இவர்கள் நம்ப மறுக்கிறார்கள். வெல்வதற்குரிய தத்துவ அடிப்படையைக் கண்டு பிடிக்கத் தவறிய தன் மூலம் கவிதையுலகில் ஒரு புதிய விடிவெள்ளி போன்ற இயக்கத்தை இருட்டாக்கி விட்டார்கள் வானம்பாடிகள் என் றெல்லாம் வேள்வி இதழில் 1974 - 75ல் தொடர் விமர்சனங்கள் வைத்தவர் கோவை ஞானி.

அவருடைய வரலாற்று ஆய்வு நூல்களில் ஒன்றான ‘வானம்பாடியின் கவிதை இயக்கம் - வரலாறும் படிப்பினையும்’ 2011ல் வெளி வந்திருக்கிறது. சிற்றிதழ்களுடன் இணக்கமும் இயக்கமும் கொண்டிருந்த ஞானி அவர்களின் தொடர் உழைப்பால் வெளிவந்த சிற்றிதழ்களாக பரிமாணம் (1979 - 83), நிகழ் (1988 - 96), தமிழ் நேயம் (1998 - 2012) ஆகியவை சிற்றிதழ்கள் வரலாற்றில் பேசப்படத்தக்கவை.

இவ்விதழ்களின் கலை இலக்கிய சமூகப் பண்பாட்டுச் செயற்பாடுகளுக்கப்பால் நிகழ் வெளியீடுகள். தமிழ் நேயம் வெளியீடுகள் என நூல்கள் வெளியிட்டுள்ள பதிப்புத்துறைப் பணிகள் முக்கியமானவைகள். குறிப்பிடத்தக்கவைகள்.

அறுபதுகளிலிருந்து 90கள் வரையான ஒரு முப்பதாண்டு காலம் கோவையில் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர் ஞானி. மனைவி திருமதி இந்திராணி உடற் கல்வி ஆசிரியை. பாரிவள்ளல், மாதவன் என இரண்டு மகன்கள்.

தொடர்தல் 72ம் பக்கம்

ஆய்வறிஞரும்...

71ம் பக்கத் தொடர்ச்சி...

நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த ஞானி 1988ல் கண்பார்வையிழந்தார். ஆசிரிப் பணியிலிருந்து ஓய்வும் பெற்றுக் கொண்டார்.

தனது கண்பார்வை இழப்பை ஒரு குறையாக எண்ணிக் கலங்கவோ கலவரப்படவோ முடங்கிப் போகவோ இடமளிக்காமல் மீண்டெழவும் எழுத்துப்பணியாற்றவும் இலக்கியச் செயற்பாடுகளில் ஒரு உற்சாகத்துடன் ஈடுபடவும் ஆன்மபலம் கொண்டவராகவே இவர் இருந்திருக்கின்றார்.

இந்தபலமும் உள்ளியக்கச் சக்தியும் அவரது மனைவியாலும் மகன் மார்களாலும் அவருக்கு வழங்கப்பட்ட வராங்கள் என்பதை நாம் எளிதில் புரிந்து கொள்ளலாம். தமிழ்நோயம் மிகுந்த இல்லம் அவருடையது.

'இந்த உலகில் எனக்குப்பிடித்த இடம் எதுவெனக்கேட்டால் ஞானியின் வீடு என்பேன். ஆயிரம் புத்தகங்களுக்கு நடுவே ஆலமரச் செல்வன் போல் அவர் அமர்ந்திருக்க எதிரிலமர்ந்து இலக்கியமும் வரலாறும் தத்துவமும் அரசியலும் கேட்டுக் கொண்டிருப்பதும் பேசிக் கொண்டிருப்பதும் ஒரு பேரனுபவம். அது எனக்கு வாய்த்திருக்கிறது...?' என்று பூரிக்கும் இளங்கோ கிருஷ்ணன் 'பற்பல ஆண்டுகள் எனது மாலை நேரங்கள் அனைத்தும் ஞானியின் வீட்டிலேயே கழிந்தன. என்போன்ற இளம் படைப்பாளிகள் மட்டுமின்றி ஜெயமோகன், பிரேம், எம்.ஜி. சுரேஷ், சு. வேணுகோபால், எம். கோபாலகிருஷ்ணன் என்று அவருடன் உரையாட வருபவர்கள் ஏராளம்' என்றும் எழுதுகின்றார் (தடம்: பிப்ரவரி 2017). இவையனைத்தும் கூட பார்வை இழந்த பின்னரான அவரது மீளெழுச்சிக்கான உந்து சக்தியாக அமைகின்றன.

தமிழ்நேயம் சிற்றிதழ் உட்பட பெரும்பாலான அவரது முக்கிய நூல்கள் 90களுக்குப் பிறகே வெளிவந்துள்ளமையும் கவனத்திற்குரியது.

கோவையில் இலக்கியக் கூட்டங்கள் எங்கு நடந்தாலும் அவரது பிரசன்னம் அங்கிருக்கும். யாராவது ஒரு எழுத்தாளர் அல்லது மகன்களில் ஒருவரின் கைப்பிடித்துணையுடன் வந்தமர்வதுண்டு.

'ஞானம் போர் இலக்கியச் சிறப்பிதழ்' வெளியீட்டு விழாவுக்கும் வந்ததுடன் அவ்விதழ் பற்றிய ஒரு அருமையான விமர்சனக் குறிப்பையும் புதுப்புனல் என்னும் சிற்றிதழில் பதிவிட்டிருக்கின்றார். பார்வையற்ற நிலையிலும் ஆள் வைத்து வாசித்து, ஆள்வைத்து எழுதி வெளியிடுவதென்னும் அவருடைய இலக்கி ஆர்வமும் அர்ப்பணிப்பும் மகத்தானவை, வியப்பளிப்பவை.

நவீன நாடக இயக்கங்களுடனும் கணிசமான தொடர்புகளைக் கொண்டிருந்தவர் அவர். கோவையில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் ஞனியும் கலந்து சிறப்பித்ததை பதிவிடுகின்றார் பேராசிரியர் மௌன குரு.

"2013 டிசம்பரில் கோவையில் விஷ்ணுபுரம் விருது விழா நடைபெற்றது. நான் திலகருடன் விழா மண்டபத்துக்குள் நுழைந்ததும் என்னைக்கூட்டிக் கொண்டு போய் மேடையில் இருத்திக் கொண்டார்கள். இளைஞர் ஒருவரின் கைப்பற்றலுடன் ஞானி உள் நுழைகின்றார். மேடையில் இருந்த எனக்கு மிகத்தெளிவாகத் தெரிந்த அருங்காட்சியத்தில் அவர் உள் நுழைந்ததுமே அமர்ந்திருப்போர் எழுந்துநின்று வணக்கம் தெரிவிக்கின்றனர். மேடையில் நின்ற ஒரு சிலர் இறங்கி ஓடிப்போய் அவரைக் கைப்பிடித்துக் கூட்டிவந்து முன்வரிசையில் அமர்த்துகின்றனர். எழுத்தாளர்கள் எழுந்து நிற்பதும் வணங்கி அமர்வதும் தொடர்கிறது. கேமராவும் தானுமாக நண்பர் திலகராஜ் மேடை ஓரத்தில் சுறுசுறுப்புடன் நிற்கின்றார்.

'ஞானி உங்களைத்தான் தேடுகின்றார்' என்று ஒருவர் ஓடிவந்து என்னிடம் கூறுகின்றார். அவர் யாரென்று எனக்குச் சரியாக நினைவில்லை என்றாலும் அவது ஓவியர் ஜீவாவாகவோ, எழுத்து பதிப்பாக உரிமையாளர் அமரர் வே. அலெக்ஸாகவோ இருக்கலாம். இறங்கி ஓடிவந்த என்னை அவர் ஆறத்தழுவி பாராட்டும் வாழ்த்துக்களும் கூறிய தருணம் எனது இலக்கிய வாழ்வின் மறக்க முடியாத தருணம்!"

தமிழிலக்கிய ஆய்விலும் செயற்பாடுகளிலும் அவரது அரைநூற்றாண்டு காலப் பணிகளைக் கௌரவிக்கும் முகமாக இலக்கிய அமைப்புக்கள் சில அவருக்கு விருதளித்துள்ளன, கௌரவித்துள்ளன.

புதுமைப்பித்தன் விளக்கு விருது 1998, கனடா இலக்கியத் தோட்டம் வழங்கும் இயல் விருது 2010, எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராயம் வழங்கும் பரிதிமாற் கலைஞர் விருது 2013 போன்றவை குறிப்பிடத்தக்கவை.

1988 லிருந்து 50க்கும் மேற்பட்ட நூல்கள், வரலாறு, திறனாய்வு, மார்க்கியம், படைப்பியல், மெய்யியல், பின் நவீனத்துவம், கவிதையியல், தொகுப்பு நூல்கள் எனப் பல்வகையாக வெளியிட்டவர் ஞானி.

'பண வசதி குறைந்த நிலையிலும் தொடர்ந்து நூல்கள் வெளியிடுகின்றேன். தங்களைப் போன்ற பெரிவர்களுக்கும் நண்பர்களுக்கும் நூல்கள் அனுப்புகின்றேன். நூலின் அடக்க விலையாவது எனக்குக் கிடைக்கவேண்டும். நன்கொடை அனுப்பினாலும் நல்லது என்னும் கடிதத்துடன் தனது நூல்களின் விலைப்பட்டியலினையும் இணைத்து, தேவையான நூலுக்கு முன் பணத்துடன் எழுதுங்கள் என கல்வித்துறையினர், தமிழாசிரியர்கள், பல்கலைக் கழகக் தமிழ்த்துறை விரிவுரையாளர்கள், படைப்பாளிகள் நெருக்கமான நண்பர்களுடன் அவர் தொடர்பு கொள்வதுண்டு.

கண் பார்வையிழந்த நிலையிலும் செயலாக்கத்துடன் இயங்கிய அவர் உயிருக்கு உயிரான தனது மனைவியை 2012இல் இழந்தபோது மீண்டும் தனிமையானார். அதிலிருந்தும் மீண்டெழுந்தார்.

அவருடைய கட்புலன் அதிநுட்பமானது செவிப்புலன் அதிதீவிரமானது.

'செவ்வியல் நோக்கில் சங்க இலக்கியம்', 'இந்திய தத்துவத்தில் பிரச்சினைகள்', 'கல்லும் முள்ளும் கவிதைகளும்', 'மார்க்சியமும் மனித விடுதலையும்' போன்ற எட்டுக்கும் அதிகமான நூல்கள் 2012க்குப் பிறகு வெளிவந்தவை.

கடவுள் மறுப்பாளர் ஞானி என்றே பொதுவாகக் கருதப்பட்டாலும் 'பக்தி இல்லாமல் மனிதன் இல்லை. என்னதான் அறிவு பகுத்தறிவு என்று மனிதன் பேசினாலும் மனிதனுக்குள் அறிவியக்கத்தோடு உணர் வியக்கமும் இருக்கத்தான் செய்கிறது' என்றெழுதியவர் அவர்.

நோய், மூப்பு, தனிமை என்று போராடி தனது 85 அகவையில் அமரரான ஞானி அவர்களின் இழப்பு தமிழுலகுக்கான பேரிழப்பே ஆகும்.

theliwathai.joseph@thaiveedu.com

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com

தொலைக்காட்சியில் மேடை நாடகங்கள்

கலையரங்கம் ரூபவாஹினியில் வாரமொருமுறை அரைமணித் தியாலத்திற்கு ஒளிபரப் பப்பட்ட பிரதான தமிழ் நிகழ்ச்சி. இலங் கைத் தமிழர்களுக்கான கலை, இலக் கிய, கலாச்சார நிகழ்ச்சியாகிய அதில் தமி ழர்கள் ஈடுபடும் சகல கலைகளும் இடம் பெற்றன. அதுமட்டுமல்லாமல் பல்துறைக் கலைஞர்கள், இலக்கியவாதிகள் ஆகி யோரின் பேட்டி நிகழ்ச்சிகளும் அவ்வப் போது இடம்பெற்றன. நான் அதன் தயாரிப் பாளர்.

தொலைக்காட்சியில் தொடர்ந்து ஒவ்வொரு கிழமையும் இப்படியான நிகழ்ச்சிகளைத் தயாரிப்பது மிகச்சிரமமான பணி. மேலை நாட்டுத் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயா ரிப்பாளர்களுக்கு இதை நம்பமுடியாமலி ருக்கும். நடப்பு விவகார நிகழ்ச்சிகள், அரசியற்பேட்டிகள் போன்றவற்றை ஒவ்வொ ருநாளும் தயாரிக்கலாம். ஆனால் கலை நிகழ்ச்சிகளை அவற்றுக்குரிய தரத்துடன் தயாரிப்பது மிகக்கடினம். இருந்தபோதும் சளைக்காமல் தயாரிப்புகளை மேற்கொண் டேன். எமக்கு மலேஷியாவில் பயிற்சி தந்த தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப் புப் பயிற்சியாளரான கனேடியர் டொன் எல்டர் அப்போது இலங்கைக்கு வந்திருந் தார். அவருடன் பேசுகையில் நான் இவ் வாறு பல்வேறு கலைநிகழ்ச்சிகளைக் வாரம் தோறும் செய்வதாகக் கூறியபோது அவ ரால் நம்பமுடியவில்லை. ஆனால் நான் செய்தேன். கலைஞர்கள் பற்றாக்குறை, பெரும்பான்மையான தமிழர்கள் கொழும்பி லிருந்து தூர இடங்களில் வசித்தமை, 83ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின்னர் உக்கிரமடைந்த போர்ச்சூழலால் நாட்டு நிலைமை சீரழிந்து வடக்குக் கிழக்கிற்கான போக்குவரத்து அடிக்கடி தடைப்படுதல், மிகக் குறைவான தயாரிப்புப் பணியாளர் கள் போன்ற அனுகூலமற்ற தன்மை நிலவி யபோதிலும் இவற்றையும் மீறி என்னால் முடிந்தளவு பல நிகழ்ச்சிகளைச் செய்திருக் கிறேன்.

இப்போது நினைத்துப் பார்க்கும்போது ரூபவாஹினியின் ஆரம்பத்திலிருந்து நான் அசுர பலத்துடனும் வேகத்துடனும் செய்த பல நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக மனக்கண் முன் தோன்றுகின்றன. அனைத்தையும் சொல்வதானால் மிக நீண்டுவிடும் என்ப தால் எனது ரூபவாஹினிக் காலத்தில் தயாரித்த நிகழ்ச்சிகளில் முக்கியமான சிலவற்றையும் சில முக்கிய சம்பவங்களை யும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட எனது கருத்துகளையும் மட்டுமே இந்தத் தொட ரில் பதிய இருக்கிறேன்.

நான் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப் பாளராக செய்யவேண்டிய முக்கிய பணி களென்று ஒரு பட்டியல் என்னிடமிருந் தது. அவற்றில் முதன்மையானது, இலங் கையில் அப்போது அல்லது அந்தக் கால கட்டத்தில் மேடையேற்றப்பட்ட நாடகங்க ளில் முக்கியமானவற்றை ஒளிப்பதிவு செய் வதென்பது. அது எமது ஒளிபரப்புக்கு வேண்டிய நிகழ்ச்சித் தேவையைப் பூர்த்தி செய்வதோடு, எமது கலைப் படைப்புகளை ஆவணப்படுத்தும் செயலாகவும் இருக்கு மென்பது எனது திட்டம்.

சுமதி:

இந்தத் திட்டத்திற்கமைய எனது முதல்த் தயாரிப்பாகக் கண்ணாடி வார்ப்புகள் அமைந்தது. அடுத்து நான் தெரிவுசெய்த நாடகம் 'சுமதி'. இந்த நாடகம் கே.எம். வாசகர் அவர்களால் எழுதி, இயக்கி மேடை யேற்றப்பட்டது. 1960களின் பிற்பகுதியில் அப்போது வருடாவருடம் மிகப்பிரபல மாக நடைபெற்றுக்கொண்டிருந்த தினகரன் விழாவின் ஓரம்சமாகிய நாடகப் போட்டி யில் முதற்பரிசு பெற்றது சுமதி நாடகம். அதன்பின் கே.எம். வாசகர் கொழும்பில் ஒரு முக்கிய மேடைநாடகத் தயாரிப்பா ளராகக் கணிக்கப்பட்டார். சேவா ஸ்டேஜ் என்பது அவரது நாடக அமைப்பின் பெயர். சேவா ஸ்டேஜ் என்று தமிழ்நாட்டிலும் அப் போது மிகப்பிரபலமான நாடக மன்றம் இருந்தது. கே.எம். வாசகர் தனது நாடக அமைப்புக்கு ஏன் அந்தப்பெயரை வைத் தாரென்பது தெரியவில்லை.

சுமதி ஈட்டிக்கொடுத்த புகழ் காரணமாகவே கே.எம். வாசகர் இலங்கை ஒலிபரப்புக் கூட் டுத் தாபனத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பு உத வியாளராகத் தெரிவுசெய்யப்பட்டுப் பின் னர் தமிழ்ச்சேவையின் பிரதான நாடகத் தயாரிப்பாளராக இருந்த சானா என்ற சண் முகநாதன் அவர்கள் ஓய்வுபெறப் பிரதான நாடகத் தயாரிப்பாளராக வரமுடிந்தது.

சுமதி நாடகத்தை நான் ரூபவாஹினியில் தயாரிக்கப்போவதாக வாசகரிடம் சொன்ன போது மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். வாசகர் அப்போது ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பயிற்சிப்பிரிவில் அமைப்பாளராகப் பணி யாற்றிக்கொண்டிருந்தார். அறுபதுகளின் பிற்பகுதியில் மேடையேற்றப்பட்ட நாடகம் சுமதி. எழுபதுகளில் மேடையேற்றப்பட வில்லை. நான் இதை ரூபவாஹினிக்கெனத் தயாரித்தது 1982ஆம் ஆண்டு. வாசகர் நாடகத்திற்கான ஒத்திகைகளை உடனடி யாக ஆரம்பித்தார். முதலில் மேடையேற் றப்பட்டபோது யார்யாரெல்லாம் நடித்தார் களென்பது எனக்குத் தெரியாது. ஆனால் பிரதான பாத்திரத்தில் விஜயாள் பீற்றர் நடித்தாரென்று கேள்விப்பட்டிருக்கிறேன். விஜயாள் பீற்றர் எனது காலத்தில் வானொ லியில் புகழ்பெற்ற முக்கிய நடிகர்களில் ஒருவர். இலங்கையில் என்னால் தயாரிக் கப்பட்ட முதல்த் தொலைக்காட்சி நாடகமா கிய (Teledrama) 'கற்பனைகள் கலைய வில்லை' நாடகத்திலும் விஜயாள் பீற்றர் தான் பிரதான பெண் பாத்திரமேற்று நடித்தி ருந்தார். அவர் ரூபவாஹினிக்கெனத் தயா ரிக்கப்பட்ட சுமதி நாடகத்திலும் முக்கிய பாத்திரத்தில் நடித்தார். அதில் நடித்த அனைத்து நடிகர்களும் இப்போது எனது ஞாபகத்தில் இல்லை. ஆனால் விஜயாள் பீற்றருடன் செல்வசேகரன், இராமதாஸ் ஆகியோர் நடித்தார்கள் என்பது ஞாபக மிருக்கிறது.

கே.எம். வாசகர் என்னைவிட வயதில் மூத் தவர். மேடை நாடகத்துறையிலிருந்து வானொலி நாடகத் தயாரிப்பாளராக மாறி மிகுந்த புகழ்பெற்றிருந்தார். இவையெல்லா வற்றையும்விட தானாகவே எனது முன் னேற்றத்தில் அக்கறைகாட்டியவர். எனவே, அவர் அந்தத் தயாரிப்புக்காக மேற்கொண்ட ஒத்திகைகள்பற்றி நான் கவலைப்பட வில்லை. நான் ரூபவாஹினியில் தயாரித்த அனைத்து மேடைநாடகங்களிலும் அவற்றை எவ்வாறு இயக்குவதென்பது பற்றிக் கவ னம் செலுத்தவில்லை. அவற்றைப் படைத்து மேடையேற்றியவர்களின் நாடகங்கள் அவை. அவற்றின் தரத்திற்கு அவர்களே பொறுப்பென்பதால், அவற்றை எந்தளவு சிறப்பாகப் படமாக்குவதென்பதை மட்டுமே எனது பணியாக வைத்துக்கொண்டேன்.

1982ஆம் ஆண்டு ஏப்ரல் மாதக் கடைசி அல்லது மே மாத முதல்ப்பகுதியென்று நினைக்கிறேன். அப்போது ரூபவாஹினியில் அரங்க நிர்மாணப்பகுதியின் தலைமைப் பொறுப்புக்கு வின்சன்ட் என்பவர் நியமிக் கப்பட்டிருந்தார். வரைகலைப் பகுதிக்கு மட்டும் அர்த்தசாத் பொறுப்பானவராக நியமிக்கப்பட்டார். அரங்க அமைப்பில் அனுபவமும் திறமையுமுள்ள வின்சன்ட் அந்தப் பிரிவுக்குப் பொறுப்பாக நியமிக் கப்பட்டமை எனக்கு மகிழ்ச்சியளித்தது. வின்சன்ட் ஒரு இந்திய வம்சாவழித் தமி ழர். சிங்களத் திரைப்படங்களுக்கு அரங்கு கள் அமைத்து அத்துறையில் மிகத் திற மைமிக்கவரென்று சிங்கள சினிமாத்துறை சார்ந்தவர்களின் நன்மதிப்பைப் பெற்ற வர். அரங்க அமைப்புக்காக விருதுகளைப் பெற்றிருந்தார். அவர் சிங்களத் திரைப் படங்களில் தனக்கு உதவியாளர்களாகப் பணிபுரிந்த ஹீனற்றிக்கல பிரேமதாஸ என்பவரையும் தச்சுவேலைகளில் ஆற்றல் மிக்க பீ.டீ. மைக்கல் என்பவரையும் அரங்க அமைப்புப் பிரிவில் சேர்த்திருந் தார். அவர்கள் வந்தபின்னர் எம்மால் தொழிற்தரம் வாய்ந்த அரங்குகளை அமைக்கக் கூடியதாக இருந்தது. இருப்பி னும் சுமதி நாடகத்திற்கு கதிர்காமத்தம்பி அவர்களைக்கொண்டே அரங்கம் அமைப் பித்தேன்.

சுமதி நாடகத்திற்கான அரங்கம் திரைப் படங்களில் வருவதுபோல மேல்மாடியுடன் கூடிய வீட்டுக்கூடம். பெரிய அரங்கம். அதை நிர்மாணிப்பதற்கு எமது முதலாம் இலக்கக் கலையகம் போதாது. எனவே, அப்போது நாடகங்கள் மற்றும் பெரிய கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற பம்ப லப்பிட்டி, கதிரேசன் மண்டபத்தில் அந்த நாடகத்தை ஒளிப்பதிவுசெய்யத் தீர்மானித் தேன். அவ்வாறு வெளியிடத்தில் நாடகம் ஒளிப்பதிவுசெய்வதற்கு ஓ.பி. பஸ் (Out-side Broadcasting Bus) என்ற வெளி புறப்படப்பிடிப்புக்கான பெரிய பஸ் வண் டியைக் கொண்டு செல்ல வேண்டும். இந்த பஸ் சகல தொழில்நுட்ப வசதி களையும் கொண்ட ஒரு நடமாடும் கலைய கம். இந்த பஸ்ஸிலுள்ள கலையகத்தில் நான்கு கமராக்களைப் பொருத்திப் படப் பிடிப்பை மேற்கொள்ளும் வசதியிருந் தது. நிலையக் கலையகத்தைப்போலவே குளிரூட்டப்பட்டிருக்கும். அத்தகைய ஓ.பி. பஸ்ஸொன்றின் அப்போதைய விலை கிட்டத்தட்ட ஐம்பது இலட்சம் என்று சொல் வார்கள். இந்த பஸ்ஸைக் கொண்டு சென்று படப்பிடிப்பை மேற்கொள்வதானால் கதிரேசன் மண்டபத்தில் பொருத்தப்பட் டிருக்கும் ஒளிவிளக்குகளின் வெளிச்சம் போதுமானதாக இருக்காதென்பதால் ரூப வாஹினியிலிருந்து மேலதிகமான ஒளிவிளக் குகளை எடுத்துச்செல்லவேண்டும். அதுமட் டுமல்ல, மேடைக்கு எதிரே பார்வையாளர் கள் இருக்கும் பகுதியில் மேடையின் உய ரத்துக்குச் சமமான உயரத்தில் சிறுமேடை கள் அமைத்து அவற்றில் கமராக்களை வைத்தால்த்தான் சரியான கண்மட்டத்தில் (eye level) படப்பிடிப்பை மேற்கொள்ள முடியும். எனவே, இவ்வாறான படப்பிடிப் புகளை மேற்கொள்வதற்குத் தொழில்நுட்ப வியலாளர்கள், படப்பிடிப்பாளர்கள் மற் றும் உதவியாளர்களைக்கொண்ட பெரிய குழு தேவை. இந்தத் தயாரிப்பில் புதிதா கத் தயாரிப்பு உதவியாளராகப் பணிக்குச் சேர்ந்திருந்த ஈ. பாலசுப்ரமணியம் என்னு டன் இணைந்து பணிபுரிந்தார். அவர்

தொடர்தல் 75ம் பக்கம்

கரி ஓன் டிரெக்டர் நாடக அரங்கில் ஹெலன்குமாரி, ஜெயந்தி அப்புக்குட்டி, வரைகலைஞர் ஆனந்தமுருகன், நான்.

தொலைக்காட்சியில்...

74ம் பக்கத் தொடர்ச்சி...

ஈடுபட்ட முதல் பெரிய தயாரிப்பு இது. தயாரிப்பில் ஈடுபடும் பல்வேறு பிரிவினைச் சேர்ந்தவர்களையும் ஒருங்கிணைப்பதிலிருந்து படப்பிடிப்புக்குத் தேவையான உபகரணங்களை முன்கூட்டியே பதிவுசெய்து பெற்றுக்கொள்வது போன்ற முக்கியபான பணிகளில் தயாரிப்பாளருக்கு உதவியாகவிருந்து அனைத்தையும் செய்வது தயாரிப்பு உதவியாளரின் பணி. தயாரிப்பின் தன்மையைப் பொறுத்து ஒரு தயாரிப்பாளருக்குப் பல உதவியாளர்கள் தேவைப்படலாம். வழமைபோல சுமதி நாடகத் தயாரிப்பு முடிவடைவதற்கு மிகுந்த நேரமெடுத்தது. நள்ளிரவுவரை நடைபெற்ற அந்தப் படப்பிடிப்பில் பாலசுப்ரமணியம் மிக நன்றாகப் பணியாற்றினார். மறுநாள் திருமதி. ஞானம் இரத்தினம் பாலசுப்ரமணியம் எப்படிப் பணியாற்றினாரென்று கேட்டதற்கு நான், 'அவர் மிக உதவியாக இருந்தா'ரென்று கூறினேன். திருமதி. இரத்தினம் திருப்தியடைந்தார்.

ரூபவாஹினியின் ஆரம்ப நாட்களில் நான் மிகத் தீவிரமாகப் பல்வேறு நிகழ்ச்சிகளைத் தயாரித்துக்கொண்டிருந்ததை ரூபவாஹினியின் தலைவர் எம்.ஜே. பெரேரா அவர்கள், பணிப்பாளர்சபை அங்கத்தவர்கள் மற்றும் ரூபவாஹினியில் அப்போது பணியாற்றிய அனைவரும் அறிந்திருந்தார்கள். புதிய ஊடகத்தில் நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்கும் அல்லது தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளில் பங்குபற்ற வேண்டுமென்பதிலும் நிகழ்ச்சித் தயாரிப்போடு சம்பந்தப்பட்ட சகல பிரிவுகளிலும் பணியாற்றிய அனைவரும் மிக ஆவலாக இருந்தார்கள். வெளிப்புறப்படப்பிடிப்பு பஸ்ஸைக் கொண்டுசென்று தயாரிப்பை மேற்கொள்வதென்பது எல்லோருக்குமே புதிய அனுபவமாக இருந்தது. இது மிக அதிகமான ஆளணியையும் மிகக் கடினமான உழைப்பையும் வேண்டிநிற்கும் ஒரு பணி. இருந்தபோதிலும் நான் முதல்முதலில் ரூபவாஹினியின் சகல வளங்களையும் உபயோகித்துத் தயாரிப்புகளை மேற்கொண்டதால் எல்லோருமே எனது தயாரிப்புகளில் பங்குபற்றுவதற்கு விரும்பி வந்து ஒத்துழைப்பு வழங்கினார்கள். ஏற்கனவே, தம்ம ஜாகொட அவர்கள் இந்த வெளிப்புறப் படப்பிடிப்பு பஸ்ஸை எடுத்துச்சென்று ஒரு ஆங்கில நாடகத்தை லயனல்வென்ற் நாடக அரங்கில் ஒளிப்பதிவை மேற்கொண்டிருந்தார். இவ்வாறு வெளிப்புறப் படப்பிடிப்பு பஸ் வண்டியைக் கொண்டு சென்று ஒரு மண்டபத்திலே ஒளிப்பதிவை மேற்கொண்ட இரண்டாவது நாடகம் சுமதி.

டொக்டர். பத்மா சுப்ரமணியம்:

1982ஆம் ஆண்டுப் பிற்பகுதியில் இந்து கலாச்சார அமைச்சினால் இலங்கையில் ஏற்பாடு செய்யப்பட்ட உலக இந்து மகா நாட்டின்போது நடனமாட வந்திருந்த டொக்டர். பத்மா சுப்ரமணியம் அவர்களின் நடன நிகழ்ச்சியையும் இதே ஒ.பி. பஸ்ஸை எடுத்துச்சென்று படமாக்கினேன். இந்த நடன நிகழ்ச்சி பண்டாரநாயக்க சர்வதேச மகா நாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பத்மா சுப்ரமணியம் அவர்களின் நடன நிகழ்ச்சியைப் படமாக்கியது ஒரு புதிய அனுபவத்தைத் தந்தது.

அவருடைய நடனநிகழ்ச்சி மேடையில் ஒழுங்காக நடைபெறுவதைக் கண்காணிப்பதற்கு அவரது மூத்த சகோதரர் பாலகிருஷ்ணன் அவர்கள் வந்திருந்தார். அவரது துணைவியார் ஷியாமளா பாலகிருஷ்ணன் அவர்கள்தான் பத்மா சுப்ரமணியத்தின் நடன நிகழ்ச்சிகளுக்குப் பாடுவார். ஒலி, ஒளியமைப்பை மேற்பார்வையிடுவது பாலகிருஷ்ணன் அவர்களது பணி. மிகுந்த கண்டிப்புடன் அந்தப் பணிகளை அவர் செய்வார். ஒத்திகைகள், ஒலி, ஒளியமைப்பு முதலியவற்றை மேற்கொள்ளும்போது மண்டபத்தினுள்ளே ஒருவரையும் அனுமதிக்கமாட்டார். ரூபவாஹினிக்கென நிகழ்ச்சியைத் துல்லியமானப் படம்பிடிப்பதற்கு மேலதிக ஒளியமைப்புத் தேவையென்று ரூபவாஹினித் தொழில்நுட்பவியலாளர்கள் கருதினார்கள். ஆனால் பாலகிருஷ்ணன் அவர்களோ தான் செய்யும் ஒளியமைப்பிலேயே படமாக்கப்பட வேண்டுமென்று சொல்லிவிட்டார். நாம் நண்பகல் பன்னிரண்டு - ஒருமணியளவில் வேண்டிய இடங்களில் கமராக்களைப் பொருத்திவிட்டு வெளியே வந்துவிட்டோம். இப்போது உள்ளதுபோல் குறைந்தளவு வெளிச்சத்தில் துல்லியமாகப் படம்பிடிக்கக்கூடிய கமராக்கள் அப்போது இருக்கவில்லை.

அரங்கமைப்பாளர் வின்சன்ட் அமைத்த நாடக அரங்கில் ஒளியமைப்பாளர் ரன்டொல்ஃப் பெரெரா தனது உதவியாளர்களுடன்.

மேடைக்கெனப் போடப்பட்டிருக்கும் வெளிச்சத்தில் அண்மைக்காட்சிகளை (close up) எடுக்கும்போது பிரச்சினை இருக்காது. ஆனால் தூரக் காட்சிகளை எடுத்தால் படத்தில் புள்ளிபுள்ளியாக ஓடி, காட்சி தெளிவில்லாமலும் நிறங்கள் வித்தியாசமாகவும் இருக்கும். இத்தகைய படங்களை snowy அல்லது noisy pictures என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். இது எமக்கு மிகுந்த கரிசனையைத் தந்தது. இருந்தபோதிலும் அது பத்மா சுப்ரமணியம் மட்டுமே ஆடும் நடனமென்பதால் நாம் தூரக் காட்சிகளுக்குச் செல்லாமல் அண்மைக் காட்சிகளாகவே எடுத்துவிடலாமென்று நம்பினோம். எனக்கு அப்போது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிக்கத்தொடங்கி ஏறக்குறையப் பத்துமாத அனுபவம் ஏற்பட்டிருந்தது. அதுவரை எந்த நிகழ்ச்சியையும் ஒத்திகை பார்க்காமல் நான் படப்பிடிப்புச் செய்ததில்லை. ஆகக் குறைந்தது ஒரு ஒத்திகையாவது பார்த்த பின்னர்தான் படப்பிடிப்பு மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்த எனக்கு எந்தவித ஒத்திகையும் பார்க்காமல் படப்பிடிப்பை மேற்கொள்வதென்பது கண்ணைக்கட்டிக் காட்டில் விடுவதுபோலிருந்தது.

ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பில் சினிமாவைப்போலவே இயக்குனர் மிக முக்கியமானவர். மேலைநாடுகளில் தயாரிப்பாளர் ஒருவராகவும் இயக்குனர் வேறொருவராகவும் இருப்பார்கள். ஆனால் எமது நிர்வாக அமைப்பின்படி தயாரிப்பாளரும் இயக்குனரும் ஒருவரே. இந்தத் தயாரிப்பாளர் / இயக்குனர் பல்வேறு பணிகளையும் செய்பவர்களது ஒத்துழைப்புடன் தான் ஒரு தயாரிப்பை மேற்கொள்ள வேண்டும். தயாரிப்பாளர் இயக்கப்படும் பல்வேறு கமராக்களின் காட்சிகளையும் பார்த்தவாறு எந்தக் கமராவின் காட்சி வேண்டுமென்று கூற, அருகிலிருக்கும் விஸன் மிக்ஷர் என்னும் தொழில்நுட்பவியலாளர் அந்தக் காட்சிகளைத் தொகுத்து நிகழ்ச்சியைப் பூரணமாக்குவார். ஒரு நிகழ்ச்சி தயாரிக்கப்படும்பொழுது படப்பிடிப்பாளர்கள், விஸன் மிக்ஷர், ஒலி-ஒளியமைப்பாளர்கள் அனைவரும் ஒத்திசைவுடன் பணியாற்ற வேண்டும். இவர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்துத் தனக்கு வேண்டிய நிகழ்ச்சியைத் தனது எண்ணப்படி செய்துமுடிக்கும் பெரும்பொறுப்பு தயாரிப்பாளருடையது. எனவே, தயாரிப்பாளர் விஷயம் தெரிந்தவராகவும் மிகுந்த ஆளுமை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். சிலவேளைகளில் இந்தத் தகுதி இல்லாதவர்களும் தயாரிப்பாளர்களாக வருவதுண்டு. இவர்களது பணி கலைஞர்களைக் கலையத்திற்குள் கொண்டு வந்து சேர்ப்பது மட்டுமே. மிகுதியைத் தொழில்நுட்பவியலாளர்களே செய்து முடித்து நிகழ்ச்சியை அவரது கையில் கொடுப்பார்கள். இதனால்த்தான் தொழில்நுட்பம் தெரியாதவர்கள் தயாரிப்பாளராகலாம், ஆனால் அவர் தயாரிக்கும் நிகழ்ச்சிகள் அவரது தயாரிப்பாக இருக்காதென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

இரவு ஏழு மணியிருக்கும். நடன நிகழ்ச்சி ஆரம்பமாகும் நேரம். ஒ.பி. பஸ்ஸுக்குள் நான் எனது இருக்கையில் சற்றுப் பதட்டத்துடன் காத்திருக்கிறேன். நான் ரூபவாஹினி நிகழ்ச்சிகள் தயாரிக்கத் தொடங்கி கிட்டத்தட்டப் பத்துமாத அனுபவம் பெற்ற பின்னர் தயாரிக்கப்போகும் நிகழ்ச்சி. ஆனால் இதுவரை ஒத்திகை பார்த்து, கலைஞர்கள் என்ன நடனமாடப்போகிறார்களென்று முன்கூட்டியே அறிந்துவைத்திருந்து, கமரா ஷொட்களை ஏற்கனவே எழுதிவைத்தோ மனதில் தீர்மானித்தோ அதன்படி படப்பிடிப்பை நடத்திப் பழகிய எனக்கு என்ன ஆடப்போகிறாரென்று தெரியாமலே ஒளிப்பதிவை நெறிப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம். அதுவும் உலகப் புகழ்பெற்ற நடனக்கலைஞர். நான் ஒளிப்பதிவு செய்யும் நடனம் ஒளிபரப்பாகும்போது பல்லாயிரக் கணக்கானோர் பார்க்கப்போகிறார்கள். நான் சரிவரக் காட்சிப்படுத்தவில்லையென்றால் அது எனது தொழில்த்திறமைக்கு இழுக்காகிவிடும். இந்த எண்ணமே எனது பதற்றத்திற்குக் காரணம். ஒரேயோரு வழி இருக்கிறது. மண்டபத்திலிருந்து பார்ப்பவர்களின் கோணத்தில் நடுவிலுள்ள கமராவை ஓரளவு தூரக்காட்சிகளைப் படமாக்கும்படி கூறிவிட்டால் மேடையில் ஒருவர் ஆடுவதை முன்னிருந்து பார்ப்பவர்கள்போல் தொலைக்காட்சி இரசிகர்களும் பார்க்கலாம். ஆனால் சின்னத்திரைகளில் பார்ப்பவர்களுக்குக் காட்சிகள் தெளிவாக இருக்காது. இருந்தாலும் தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு அப்படிப் படமாக்குவோமா என்றெல்லாம் பல வாறாக யோசித்தேன். இருந்தாலும் அன்று விஸன்மிக்ஷராகப் பணியாற்றிய ரஞ்சித் எதிரிசிங்கவின் திறமையை நான் அறிந்திருந்ததால் மனதில் ஓரளவு துணிவிருந்தது. ஏற்கனவே பத்து மாதங்களில் பல்வேறு நடன நிகழ்ச்சிகளைப் படம்பிடித்த படப்பிடிப்பாளர்களின் அனுபவமும் கைகொடுக்குமென்று நம்பினேன்.

ரஞ்சித் எதிரிசிங்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் தொழில்நுட்பவியலாளராகப் பணியாற்றிப் பின்னர் ரூபவாஹினிக்கு வந்தவர். இவரும் எனது நிகழ்ச்சிகளில் பணியாற்றும் குமார் கனகரத்தினம் போலவே கலை இரசனை மிக்கவர். கலைகளை எளிதில் புரிந்துகொள்ளக் கூடியவர். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சி உதவித் தயாரிப்பாளர்கள் ஒலிப்பதிவுகளைச் செய்ய ஆரம்பிப்பதற்கு முந்திய காலத்தில் தொழில்நுட்பவியலாளர்களே ஒலிப்பதிவுப் பணிகளை மேற்கொண்ட போது சிங்கள இசை நிகழ்ச்சிகளின் ஒலிப்பதிவாளராகப் பணியாற்றிப் புகழ்பெற்றிருந்தவர். இசை, தாளம் என்பவை அவர் உணர்விலே ஊறியிருந்தன. இந்த உணர்வு விஸன்மிக்ஷருக்கு வேண்டிய முக்கியமான தகைமை. அப்படியானவர்களால்தான் இசை, நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகளைச் சரியான இடத்தில் வெட்டித் தொகுக்கமுடியும். இவர்களுக்கு இந்தக் கமராவின் படத்தை எடு என்று வாயால் சொல்லவேண்டியதில்லை. இசையை உள்வாங்கி, இரசித்துத் தயாரிப்பாளரும் விஸன் மிக்ஷரும் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது கமராக்கள் கொடுக்கும் காட்சிகளை அவற்றுக்கான சிறிய திரைகளைப் பார்த்தவாறு வேண்டிய காட்சிகளைச் சுட்டிக்காட்டி அந்த இசைக்கேற்ப விரல்களைச் சொடுக்கினாலே விஸன் மிக்ஷர் புரிந்துகொண்டு காட்சிகளை இலயத்திற் கேற்றவாறு தொகுப்பார். அங்கு வாய்ப்பேச்சுக்கு இடமிருக்காது. குமார் கனகரத்தினம் இதில் மிகவும் வல்லவர். அவரைப் போன்றவரே ரஞ்சித் எதிரிசிங்க.

நடுவில் வைக்கப்பட்டிருந்த கமராவில் மேடையின் பெரும்பகுதி தெரியுமாறு சட்டகத்தை (frame) வைக்குமாறு ஒளிப்பதிவாளரிடம் கூறிவிட்டுக் கலைஞர் மேடைக்குள் பிரவேசித்ததும் இடது, வலது கமராக்களில் நடனக் கலைஞரின் முழுமையான உருவம் தெரியுமளவுக்கு சட்டகத்தையமைத்து அவரை விடாது தொடருமாறு கூறினேன். நடுவிலுள்ள கமராவை நான் விடுவித்ததும் உடனே அந்த ஒளிப்பதிவாளர் நடனக் கலைஞர் பக்கவாட்டில் கைகளை விரித்து நீட்டினாலோ உயரே தூக்கினாலோ அவரது கைகள் வெட்டுப்படாத அளவுக்கு சட்டகத்தை அமைக்குமாறு கூறிவிட்டுக் காத்திருந்தேன்.

நடனம் ஆரம்பமாகியது. நான் கூறியவாறே படப்பிடிப்பும் ஆரம்பமாகியது. நடனத்துக்கான இசையின் ஒலியமைப்பு

தொடர்தல் 76ம் பக்கம்

தொலைக்காட்சியில்...

75ம் பக்கத் தொடர்ச்சி...

சிறந்த தரத்திலிருந்தது. அதனை ரூபவாஹினித் தொழில்நுட்பவியலாளர்கள் செய்யவில்லை. பாலகிருஷ்ணன் அவர்களின் மேற்பார்வையில் அவை நடைபெற்றன. நாம் பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தின் கட்டுப்பாட்டறையிலிருந்து இறுதியான ஒலியை நேரடியாகப்பெற்று ஓ.பி. பஸ்ஸில் இணைத்திருந்தோம். ஓ.பி. பஸ்ஸிலுள்ள கலையகம் மிகச் சிறியது. நானும் விஸன் மிக்ஷரும் ஒலி-ஒளியமைப்பைக் கட்டுப்படுத்தி ஒளிப்பதிவு நாடாவையும் இயக்கும் ஒரு தொழில்நுட்பவியலாளரும் மட்டுமே அதற்குள் இருந்தோம். நான் படப்பிடிப்பாளர்களுக்குக் கொடுக்கும் அறிவுறுத்தல்களைத் தவிர வேறு எந்தவித இரைச்சலோ சந்தடியோ அற்ற அந்தச் சிறிய கலையகத்தில் நானும் ரஞ்சித்தும் மிகுந்த கவனச்செறிவுடன் ஒளிப்பதிவை மேற்கொண்டோம். நல்லவேளையாக பத்மா சுப்ரமணியம் அவர்கள் 'ஆனந்த நடமாடுவார், தில்லையம்பலம் தனில்...' என்ற பாடலுக்கான நடனத்துடன் தனது நிகழ்ச்சியை ஆரம்பித்தார். அது எம்மை சுதாகரித்துக்கொள்ள வாய்ப்பாக அமைந்தது. ஏனெனில் அவர் ஆரம்பத்தில் சிவபெருமானின் நடனத்திலுள்ள நூற்றியெட்டுக் கர்ணங்களில் அல்லது நிலைகளில் சிலவற்றைக் காண்பிக்கும் விதமாக நடுமேடையில் நின்று அவற்றை அபிநயித்தார். அங்குமிங்கும் அதிகமாக அசையவில்லை. உடனே மூன்று கமராக்களில் ஒன்றை அவரது முகத்துக்கான க்ளோஸப்பிலும் மற்றொன்றை இடுப்புவரையான க்ளோஸப்பிலும் மூன்றாவதை முழு உருவத்தையும் காட்டக்கூடிய விதத்திலும் ஃப்றேம் செய்து, அப்படியே அவரைத் தொடரும்படி கூறிவிட்டு, விஸன் மிக்ஷரிடம் மிருதங்கத் தாளத்திற்கேற்றவாறு அந்த மூன்று கமராக்களிலுமிருந்து வரும் காட்சிகளைக் கலவைமுறையில் (mixing) தொகுக்குமாறு கூறினேன். அந்தப் பணியை அவர் மிக அழகாகச் செய்தார். சிறிதுநேரத்தில் பதற்றம் தணிந்து உற்சாகம் பற்றிக்கொண்டது. கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக்கொண்டு அவதானிப் பதென்று கூறுவதைப்போல மிக அவதானமாக நானும் ரஞ்சித்தும் உலகில் வேறெந்த சிந்தனைகளுமேயற்ற வர்களாக சிறிய தொலைக்காட்சித் திரைகளில்வரும் காட்சிகளைப் பார்த்தவாறே வேண்டியவற்றைத் தொகுத்து முழு நிகழ்ச்சியையும் செய்து முடித்தோம். அந்த நிகழ்ச்சியை நடனம் தெரிந்தவர்கள் பார்த்தால் குறையேதும் கண்டுபிடிக்க இயலாதளவுக்கு ஒளிப்பதிவைச் செய்து முடித்தோமென்ற திருப்தி எனக்கு எற்பட்டது.

ஒரு சாஸ்திரிய நடன நிகழ்ச்சியை ஒளிப்பதிவுசெய்யும்போது பலவற்றைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். கைகளின் ஒவ்வொரு அசைவும், பாத வேலைகளும் முகபாவங்களும் நிலைகளும் மிகுந்த அர்த்தத்துடனேயே செய்யப்படுகின்றன. இவற்றைச் சரியான விதத்தில் படம்பிடித்துக் காட்டுதல் வேண்டும். கை முத்திரைகளைக் காட்டவேண்டிய நேரத்தில் பாதங்களைக் காட்டுவது, முழுமையாக ஒரு நிலையை (pose) காட்டவேண்டிய நேரத்தில் முகத்தை க்ளோஸப்பில் காட்டுவது போன்ற குளறுபடிகளைச்செய்து நடனத்தை ஒளிப்பதிவுசெய்தால் அது பார்ப்பவர்களுக்கு மிகுந்த சினத்தை உண்டாக்கும்.

தொலைக்காட்சியில் ஆயிரக்கணக்கானவர்கள் நிகழ்ச்சியைப் பார்த்தாலும் பெரும்பாலானவர்கள் மேலோட்டமாகக் காட்டப்படும் காட்சிகளை மட்டுமே பார்ப்பார்கள். விஷயம் தெரிந்த பார்வையாளர்கள் அது உரிய முறையில் படமாக்கப்பட்டிருக்கிறதாவென்பதைக் கூர்ந்து கவனிப்பார்கள். அத்தகையவர்களது பாராட்டைப் பெறும்போதுதான் ஒருவர் சிறந்த தயாரிப்பாளரென்ற அந்தஸ்த்தைப் பெறுகிறார். அப்படிக் கடுமையாக உழைத்து, நுணுக்கமாகத் தயாரிக்கும் தயாரிப்புகளுக்கு மக்களின் பாராட்டுக் கிடைக்கும்போது அந்தத் தயாரிப்பாளருக்கு மனநிறைவேற்படுவதோடு, தன்மீதே மரியாதை ஏற்படும். இது மனதால் உணரப்படும் உண்மை. நாம் ஏனோதானோவென்று அல்லது அரைகுறை அறிவோடு ஒரு நிகழ்ச்சியைத் தயாரித்து அதைப் பலரும் பாராட்டினால் அந்தப் பாராட்டு கௌரவமாக உணரும் சந்தோஷத்தைத் தராது, மாறாக அகந்தையையும் தலைக்கனத்தையும் ஏற்படுத்தும்.

கரி ஒன் டிரெக்டர் நாடகத்தில் ஒரு காட்சி.

ஒளிப்பதிவைச் செய்து முடித்த பின்னர் தான் பாலகிருஷ்ணன் அவர்கள் ஏன் ரூபவாஹினியினர் மேலதிக ஒளி விளக்குகளை உபயோகிக்கக்கூடாதென்று சொன்னாரென்பது புரிந்தது. பத்மா சுப்ரமணியம் அவர்கள் அன்று ஆடிய நடனங்களில் ஒன்று சீதையின் சுயம்வர நிகழ்ச்சி. இராமர் வில்லை உடைத்ததும் சீதையின் சந்தோஷமான மனநிலையை விளக்குவதற்கேற்ற விதத்தில் கலைஞர் நடனமாட, அதற்கு மேலும் மெருகேற்றும் விதத்தில் மேடையில் பிரகாசித்த வெளிச்சத்தை அணைத்துவிட்டு மின்னல்போல் விட்டு விட்டுத் துடிக்கும் strobe என்னும் லைட்டைப் பாவித்தார்கள். அந்த மின்னல் வெளிச்சத்தில் பத்மா சுப்ரமணியம் விரைந்து நடனமாடும்போது ஒவ்வொரு அசைவும் மேடையின் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு சட்டகமாக உறைந்து நிற்பதுபோல் அவர் மேடைமுழுவதும் வியாபித்திருந்தார். இசையும் அந்த சந்தோஷ உணர்வை வெளிப்படுத்துவதாக இருந்தது. எல்லோருமே திகைத்து அதை இரசித்தார்கள். நாம் படப்பிடிப்புக்கென எமது ஒளிவிளக்குகளை உபயோகித்திருந்தால் அந்த ஒளியில் srobe லைட்டுகளை உபயோகித்திருக்க முடியாது. மக்கள் மத்தியில் புகழ்பெற்ற கலைஞர்கள் தமது கலையாற்றுகைகளை அவ்வளவு தீவிரமான அர்ப்பணிப்புடனும் கண்டிப்புடனும் செய்வதால்தான் அவர்களால் உச்சப்புகழை எட்டமுடிகிறது.

நான் ஒளிப்பதிவுசெய்த டொக்டர். பத்மா சுப்ரமணியம் அவர்களின் அந்த நிகழ்ச்சி ரூபவாஹினியில் பல தடவைகள் மீள் ஒளிபரப்புச் செய்யப்பட்ட நிகழ்ச்சிகளில் ஒன்று. போர்ச்சூழல் காரணமாகக் கலையரங்கம் நிகழ்ச்சி செய்யமுடியாதுபோன நாட்களில் பத்மா சுப்ரமணியம் அவர்களின் நிகழ்ச்சியைப் பலதடவைகள் மீள் ஒளிபரப்புச் செய்திருக்கிறோம். ஒவ்வொரு தடவை ஒளிபரப்பானபோதும் மக்கள் அதை விரும்பிப் பார்த்தார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு விஸன் மிக்ஷிங் செய்த ரஞ்சித் எதிரசிங்க சில நாட்களிலேயே எதிர்பாராதவிதமாக சுகவீனமுற்றுக் காலமானார். மிகச்சிறந்த ஒரு தொழில்நுட்பவியலாளரை இழந்த கவலை அனைவருக்கும். டொக்டர். பத்மா சுப்ரமணியம் அவர்களையும் அவரது நடன ஒளிப்பதிவையும் நினைக்கும் போதெல்லாம் ரஞ்சித்தின் நினைவும் மனதில் எழும். அவர் இறந்ததும் அவரது மனைவி வனமாலிக்கு ரூபவாஹினித் தொழில்நுட்பப் பிரிவு அலுவலகத்தில் பணியாற்ற வாய்ப் பளிக்கப்பட்டது. சிறிது காலத்தில் அவர் சிங்களமொழிச் செய்தி வாசிப்பவராகத் தெரிவுசெய்யப்பட்டு, புகழ்பெற்ற செய்தி வாசிப்பாளராகத் திகழ்ந்தார்.

ஏகலைவன் நாட்டுக்கூத்து:

ஓ.பி. பஸ்ஸைக் கொண்டுசென்று வெளியே ஒளிப்பதிவை மேற்கொண்ட மற்றொரு முக்கியமான நிகழ்ச்சி இளைய பத்மநாதன் அவர்களின் 'ஏகலைவன்' நாட்டுக் கூத்து நிகழ்ச்சி. இளைய பத்மநாதனை அவர் கொழும்பில் இருந்தபோது அறிவேன். அவருக்கு நெருக்கமானவர்கள் அவரைப் பத்தண்ணா என்று அழைப்பார்கள். எழுபதுகளின் பிற்பகுதியில் நான் வானொலி நாடகத் தயாரிப்பாளராக இருந்தபோது வானொலி நாடகங்களை எழுதிய நெல்லை க. பேரன் கொழும்புக்கு வரும்போது இளைய பத்மநாதன் அவர்களின் வீட்டிலே தங்குவார். அப்போது அவர் வீட்டிற்குச் சென்றிருக்கிறேன். பின்னர் இளையபத்மநாதன் தனது ஊருக்குத் திரும்பி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவிகளுக்கு 'ஏகலைவன்' நாடகத்தைப் பயிற்றுவித்திருந்தார். முழுக்க முழுக்க மாணவிகளே இதில் பங்குபற்றினர். பெருந்தொகையான மாணவிகள். அவர்கள் அனைவரையும் கொழும்புக்கு அழைத்து வந்து கதிரேசன் மண்டபத்தில் இந்த ஒளிப்பதிவை மேற்கொண்டோம். இந்த நிகழ்ச்சியை ஒளிப்பதிவு செய்தபோதுதான் ரூபவாஹினி தமிழர் பிரதேசங்களில் ஒரு பிராந்திய நிலையத்தை அமைக்க வேண்டும், அல்லது ஆகக் குறைந்தது ஒரு கலையகமாவது இருந்தால்த்தான் தமிழ்க் கலைஞர்களின் பங்களிப்பு மிகப் பெரியளவில் இருக்குமென்ற சிந்தனை என்னுள் வலுப்பெற்றது. அந்த முயற்சியில் நான் மிகத் தீவிரமாக ஈடுபட்டபோதும் அதில் வெற்றி பெற முடியவில்லை. அதில் நான் சந்தித்த மிகத் துயரமான சம்பவங்கள் பற்றி நான் ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன்.

கரி ஒன் டிறெக்டர்:

ரூபவாஹினி தொடங்குவதற்கு முன்னைய காலங்களில் இலங்கையில் தயாரிக்கப்பட்ட மேடை நாடகங்களில் ரூபவாஹினிக்கென ஒளிப்பதிவு செய்யக்கூடிய நிலையில் இருப்பவற்றை என்னால் இயன்றளவில் தயாரித்துவிடவேண்டுமென்று மிகவும் முயன்றேன். கொழும்பில் அறுபதுகளின் பிற்பகுதி மற்றும் எழுபதுகளில்த்தான் ஓரளவு மேடை நாடகங்கள் தயாரிக்கப்பட்டு அதை மக்கள் ஆதரித்த நிலை இருந்தது. இது ரூபவாஹினி ஆரம்பிப்பதற்குமுன்னர் பதினைந்து இருபது வருடங்களுக்குள் நடந்ததென்பதால் நாடகங்கள் ஓரளவு கிடைக்குமென்று கருதினேன். ஆனால் நான் நினைத்தபடி பெரிதாக இருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் அப்போது சினிமாப் பாணியில் அமைந்த ஒருசில நாடகங்கள் மக்களின் வரவேற்பைப் பெற்றதாக அறிவேன். அவற்றை நான் பார்க்கவில்லை. பார்த்திருந்தாலும் ரூபவாஹினியில் மீளத் தயாரிப்பதற்கு அவற்றுடன் அதிக நேரமும் பெருந்தொகைப்பணமும் செலவிட வேண்டியேற்படலாம் என்பதால் அதற்கு அப்போது சாத்தியமில்லையென்ற நிலையில் நான் யாழ்ப்பாண நாடகங்களைத் தயாரிப்பதற்கு முயற்சியெடுக்கவில்லை. எழுபதுகளின் பிற்பகுதியில் அதாவது ரூபவாஹினி ஆரம்பிப்பதற்கு ஐந்தாறு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் வெள்ளிநிலாக் கலாலயம் என்ற ஒரு நாடக மன்றம் கொட்டாஞ்சேனைப் பகுதியில் இயங்கிக்கொண்டிருந்ததை அறிந்தேன். அதை இராஜசேகரன் ஹெலன் குமாரி தம்பதியினர் நடத்தினார்கள். நான் அவர்களது நாடகங்களை மேடையில் பார்க்கவில்லை. கொழும்புக் கலைஞர்கள் அப்போது இலங்கையிலிருந்த அரச ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி சேவைகளில் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளில் பங்குபற்ற முடியாதிருந்தது. காரணம், அவர்களுக்கு நடிப்புத் திறமை, அதீத ஈடுபாடு என்பன இருந்தாலும் பெரும்பாலானவர்களுக்குத் தமிழை உரிய முறையில் உச்சரிக்கமுடியாத நிலை இருந்தது. அதனால் அவர்களால் இலங்கை வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற முடியவில்லை. குறிப்பாக வானொலியில் மொழி பிரதான தொடர்பூடகம் என்ற படியால் தமிழ் உச்சரிப்பின்மீது மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது. இதனால் வானொலித் தமிழ்ச்சேவைப் பொறுப்பதிகாரிகள் பிராந்தியத் துவேஷம் பாராட்டுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு இந்த உச்சரிப்புப் பிரச்சினை அரசியலாக்கப்படுவ

தொடர்தல் 77ம் பக்கம்

தொலைக்காட்சியில்...

76ம் பக்கத் தொடர்ச்சி...

துண்டு. அப்படியிருந்தும் நான் வானொலி நாடகத் தயாரிப்பாளராக ஒரு கொழும்பு மேடைநாடகத்தை வானொலி நாடகமாகத் தயாரித்து ஒலிபரப்பியமை பற்றி முன்னைய பதிவில் குறிப்பிட்டிருக்கிறேன்.

வெள்ளிநிலாக் கலாலயத்தினர் நான் மேடை நாடகங்களைத் தொலைக்காட்சிக் கெனத் தயாரிப்பதையறிந்து பணிபாளர் சபை அங்கத்தவர் திருமதி. நல்லையா அவர்களை அணுகியிருக்கிறார்கள். திருமதி. நல்லையா திருமதி. ஞானம் இரத்தினத்திடம் கூற அவர் என்னவென்று பார்க்கும்படி என்னிடம் கூறினார். நான் இராஜசேகரனை அலுவலகத்திற்கு அழைத்துப் பேசும்போது, 'உங்கள் பிரதி, நடிப்பு முதலியன நாம் எதிர்பார்க்கும் தரத்திலிருந்தால் நிச்சயமாக அதை ரூபவாஹினிக்குத் தயாரிப்போம். அதற்காகத் திருமதி. நல்லையா அவர்களைச் சென்று பார்த்து, அவருக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டியதில்லை'யென்று கூறி, அவரிடம் நாடகப் பிரதியை வாங்கிக்கொண்டு, வாசித்துவிட்டு முடிவுசொல்வதாக அனுப்பி வைத்தேன்.

நல்லவேளை, பிரதி ஓரளவு தரமாகவிருந்தது. மேலும் இந்த நாடகத்தை இயக்கியவர் ஹெலன்குமாரி. இலங்கையில் தமிழ் மேடைநாடகத்துறையில் பெண்கள் நாடகம் இயக்கியது பற்றி அப்போது நான் கேள்விப்பட்டிருக்கவில்லை. எனவே அந்தவகையில் அதை ஒரு முக்கிய நாடகமாகக் கருதினேன். நடிப்பவர்களில் ஜெயந்தி அப்புக்குட்டி ஒரு வானொலி நாடக, உரைச்சித்திரக் கலைஞர். அவரது உச்சரிப்பில் பிரச்சினை இல்லை. ஹெலன்குமாரியிடமும் பிரச்சினை இருக்கவில்லை. எல்லோருமே இந்தியப் பேச்சுவழக்கில் பேசுபவர்கள். நாடகத்தில் நடித்த ஏனையவர்களிடம் உச்சரிப்பில் சிறுசிறு பிரச்சினைகள் இருந்தாலும் அவை திருத்தக்கூடியவையென்று கருதியதால் நாடகத்தை ஒளிப்பதிவு செய்யலாமென்று முயற்சியை மேற்கொண்டேன்.

'கரி ஓன் டிறெக்டர்' என்ற இந்த நாடகம், இந்திய சினிமாப் பாணியிலமைந்த ஒரு நகைச்சுவை நாடகம். எனவே, தொலைக்காட்சித் திரையில் காட்டப்படும் இந்த நாடகம் இந்தியப் பேச்சுவழக்கில் அமைந்திருப்பதால், இந்திய சினிமா பார்க்கும் மனநிலையை இரசிகர்களிடம் ஏற்படுத்தி அவர்களைக் கவருமென்று நான் நினைத்தேன். நாடகம், சினிமா என்பன எந்தப் பேச்சு வழக்கில் அமைய வேண்டுமென்பது அந்தக்காலத்தில் நாம் எதிர்நோக்கிய முக்கிய பிரச்சினைகளிலொன்று. நாடகமோ சினிமாவோ எமக்குப் பரிட்சயமான இந்தியப் பேச்சுவழக்கிலிருந்தால்த்தான் இரசிக்க முடியுமென்ற மனநிலை அப்போதிருந்தது. இந்த மனநிலையில் தான் கே.எம். வாசகர் தமது ஆரம்பகால மேடை நாடகங்களை இந்தியப் பேச்சு வழக்கில் எழுதினார். வாசகரை ஒரு மேடை நாடக நெறியாளராக, தயாரிப்பாளராக மக்களுக்கு அறிமுகப்படுத்திய நாடகம் சுமதி. அது இந்தியப் பேச்சுவழக்கில் அமைந்தது.

கொழும்புவாழ் கலைஞர்களும் தமது நாடகங்களை இந்தியப் பேச்சுவழக்கிலேயே தயாரித்தார்கள். அவர்கள் இயல்பாகவே அந்தப் பாணியில் பேசுவதால் அந்த நாடகங்கள் யதார்த்தமற்றவையாகத் தெரிவதில்லை. ஆனால் வடக்குக் கிழக்குக் கலைஞர்கள் இந்தியப் பாணியில் பேசி நாடகங்களை நடித்தால் அவை யதார்த்தமானவையாக இருக்காது. வேடிக்கையாக இருக்கும். எழுபதுகளில் வடக்குக் கிழக்குப் பேச்சுவழக்கில் தயாரிக்கப்பட்ட வானொலி நாடகங்கள் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப்பெற்றதாலும் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த கலைஞர்களின் மேடைநாடகங்கள் அதிகளவில் கொழும்பில் தயாரிக்கப்பட்டதாலும் இந்தப் பேச்சு வழக்குப் பிரச்சினை ஓரளவு தணிந்ததென்றாலும் திரையில் காட்டப்படும் சினிமா எப்போதுமே இந்திய சினிமாவைப் பின்பற்றியதாகவே இருக்கவேண்டுமென்ற மனநிலை அப்போதும் இப்போதும் இலங்கைத் தமிழ் மக்களிடையே இருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

'கரி ஓன் டிரெக்டர்' நாடகத்திற்கு நான் அப்போது ரூபவாஹினியில் ஸ்தாபிக்கப்பட்டுவிட்ட அரங்க அமைப்புப் பகுதியினரைக்கொண்டே அரங்கம் அமைத்திருந்தேன். சிங்களத் திரையுலகில் புகழடைந்திருந்த வின்சன்ட் அவர்கள் தனது உதவியாளர்கள் ஹீனற்றிகல, மைக்கல் ஆகியோரின் உதவியுடன் ஓர் அழகான அரங்கத்தை அமைத்துத்தந்தார். அந்த அரங்கிற்கு

1982ஆம் ஆண்டு நான் ஒளிப்பதிவு களுக்குப் பாவித்த O.B. Bus. இப்போது செயலிழந்த நிலையில்.

வேண்டிய பொருட்கள் அனைத்தையும் வாடகைக்கு எடுத்து அரங்கை அலங்கரிப்பதும் அவர்களின் பொறுப்பு. அதை மிக நேர்த்தியாகச் செய்திருந்தார் வின்சன்ட். ஒரு தொழில்முறை அரங்க அமைப்பாளருடன் பணியாற்றுவது மிகவும் இலகுவானது. நான் அவரிடம் அரங்கம் மற்றும் அரங்கப் பொருட்கள் (set and props) என்னென்ன வேண்டும், என்ன நிறத்தை அடிப்படையாகக்கொண்டு அந்த அரங்கம் அமைக்கப்படவேண்டும், முக்கியமாக எங்கெங்கே கமராக்கள் வைக்கப்படும் போன்ற விபரங்களைக் கொடுத்து விட்டால் ஒளிப்பதிவிலன்று ஒரு பூரணமான அரங்கம் தயார்நிலையிலிருக்கும். வின்சன்ட் ரூபவாஹினிக்கு வந்தபின்னர் எனக்கு அமைத்துத்தந்த முதல் அரங்கம் கரி ஓன் டிறெக்டர் நாடகத்துக்கானது. நாடகம் மிகவும் சிறப்பாக ஒளிப்பதிவு செய்யப்பட்டது. அது இரசிகர்களிடையேயும் வரவேற்பைப்பெற்றது.

நம்பிக்கை:

மேடை நாடகங்களைத் தொலைக்காட்சிக்கெனத் தயாரிக்கும் எனது திட்டத்திற்கமைய நான் தயாரித்த மற்றுமொரு நாடகம் வரணியூரான் எஸ்.எஸ். கணேசபிள்ளை அவர்கள் எழுதி, இயக்கி, தயாரித்த 'நம்பிக்கை' என்னும் மக்களின் அமோக வரவேற்பைப்பெற்ற நாடகம்.

எழுபதுகளின் இறுதிப்பகுதியில் எஸ்.எஸ். கணேசபிள்ளையினால் தயாரிக்கப்பட்ட இந்த நாடகம், கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மண்டபம் நிறைந்த காட்சிகளாகப் பல தடவை மேடையேற்றப்பட்டது. யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபத்தில் ஒரேநாளில் இரண்டு காட்சிகளாகவும் மேடையேற்றப்பட்டது. மனோதத்துவவியலாளரும் மருத்துவருமாகிய டொக்டர். ஏப்ரஹாம் கோவூர் அவர்கள் தான் சிகிச்சையளித்துக் குணமாக்கிய மனோவியல் சம்பந்தமான பிரச்சினைகள்பற்றித் தினகரன் பத்திரிகையில் தொடர்கதை போல் எழுதியவற்றிலிருந்து ஒரு சம்பவத்தையெடுத்து கணேசபிள்ளை மேடை நாடகமாக எழுதித் தயாரித்திருந்தார். இதில் கோவூரும் ஒரு பாத்திரமாகப் படைக்கப்பட்டிருந்தார். அந்தப் பாத்திரத்தை இலங்கை வானொலித் தமிழ் அறிவிப்பாளரும் தயாரிப்பாளருமான ஜோர்ஜ் சந்திரசேகரன் ஏற்று நடித்திருந்தார். ஜோர்ஜ் கோவூராக ஒப்பனை செய்யப்பட்டபின் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து வீதம் கோவூராகவே காட்சியளித்தார். சில மேடையேற்றங்களின்போது இருவருமே மேடையில் ஒன்றாகத் தோன்றி இரசிகர்களை ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சிக்குள்ளாக்கினார்கள். இந்த நாடகமும் முதலாம் இலக்கக் கலையகத்தில் அரங்கம் அமைத்துத் தயாரிக்கப்பட்டது. இதில் மனோவியாதிக்குள்ளான பெண் பாத்திரத்தில் மணிமேகலை இராமநாதன் மிகச் சிறப்பாக நடித்திருந்தார்.

அவளைக் கொன்றவள் நீ:

ரூபவாஹினியில் எனது காலத்தில் தயாரிக்கப்பட்ட மற்றுமொரு முக்கிய மேடை நாடகம் 'அவளைக் கொன்றவள் நீ'. 1960களின் பிற்பகுதியில் கொழும்பில் தமிழ் நாடகங்கள் கணிசமாக அளவில் மேடையேற்றப்பட்டன. இந்நாடகங்கள் பெரும்பாலும் பம்பலப்பிட்டி, சரஸ்வதி மண்டபத்தில் மேடையேற்றப்பட்டன. அப்போது கதிரேசன் மற்றும் இராமகிருஷ்ண மண்டபங்கள் இருக்கவில்லை. நான் அப்போது கொழும்புக்கு வந்திருக்கவில்லை. அதனால் அப்போது மேடையேற்றப்பட்ட நாடகங்களைப் பார்க்கவில்லை. அப்போது கிரமமாக மேடையேற்றப்பட்ட நாடகங்களுக்குத் தமிழ்மக்களின் ஆதரவு கிடைத்ததாகக் கூறுவார்கள். அந்தக்காலத்தில் கொழும்பு தமிழ் மேடைநாடகத்துறையில் பிரபலமாக விளங்கிய இயக்குனர்களில் ஒருவரான சுஹைர் ஹமீட் அவர்கள் ஒரு ஆங்கில நாடகத்தை அவளைக் கொன்றவள் நீ என்ற தலைப்பில் மொழிபெயர்த்து இயக்கியிருந்தார். இதை ரூபவாஹினிக்குத் தயாரித்தபொழுது சுஹைர் ஹமீட் அவர்கள் காலமாகிவிட்டார். 'அவளைக் கொன்றவள் நீ' நாடகம் முதலில் மேடையேற்றப்பட்ட போது யார் யாரெல்லாம் நடித்தார்களென்று தெரியவில்லை. ரூபவாஹினியின் தயாரிக்கப்பட்ட நாடகத்தில் முக்கியபாத்திரங்களில் ஹெலன் குமாரி, கே.ஏ. ஜவாஹர், ராஜசேகரன், மற்றும் ஜோபுநஸீர் ஆகியோர் நடித்தார்கள்.

நான் ரூபவாஹினித் தமிழ் நிகழ்ச்சிகள் பிரிவின் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் மேற்கொண்ட ஒளிப்பதிவென்பதால் என்னால் அந்த ஒளிப்பதிவைப் பல பொறுப்புக்களுக்கிடையே நேரடியாக மேற்கொள்ள முடியவில்லை. அதனால் அப்போது தமிழ்ப்பிரிவில் நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளர்களாகப் பணியாற்றத் தொடங்கியிருந்த இளைஞர்களில் ஒருவரான உமர் லெப்பை யாக்கூப்பிடம் இந்த நாடகத்தைத் தயாரிக்கும் பொறுப்பைக் கையளித்திருந்தேன். இது ரூபவாஹினியின் பெரிய கலையகமாகிய மூன்றாம் இலக்கக் கலையகத்தில் அரங்கம் அமைத்துத் தயாரிக்கப்பட்டது. அந்தப் பணியை யாக்கூப் மிகப் பொறுப்புடனும் நன்றாகவும் நிறைவேற்றியிருந்தார்.

மேற்கூறிய மேடைநாடகங்கள் எனது காலத்தில் ரூபவாஹினியில் தயாரிக்கப்பட்டன. மேற்கொண்டு தயாரிப்பதற்கேற்ற வேறு நாடகங்கள் கிடைக்கவில்லை. எனது அறிவுக்கெட்டியவரையில் இலங்கையின் தமிழ்ப்பிரதேசங்களான வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளில் கொழும்பில் தயாரிக்கப்பட்டது போன்ற முழுமையான நாடகங்கள் தயாரிக்கப்படவில்லை. தமிழ்ப் பகுதிகளில் ஆகக்கூடியது ஒரு மணித்தியாலம் வரை நீடிக்கக்கூடிய சமூக, சரித்திர, நகைச்சுவை நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. அவை ஒரு பூரணமான நாடகத் தயாரிப்புக்கு வேண்டிய ஒப்பனை, உடையலங்காரம், காட்சி என்பன போன்ற வற்றில் அதிகளவு கவனம் செலுத்தப்படாது, வெறும் மேடைகளில் தொங்கவிடப்படும் மைக்குகளின் முன்னால் நின்று பேசும் நாடகங்களாகவே இருந்தன. நான் எனது இளமைப்பருவத்திலே கல்லூரி நாடகங்களிலும் கல்லூரிக்கு வெளியேயும் நாடகங்களில் நடித்திருக்கிறேன். சிறந்த நடிப்புக்கான பரிசும் பெற்றிருக்கிறேன். ஆனால் நான் நாடகங்கள் நடித்த அந்த நாட்களில் பார்த்த நாடகங்கள் அனைத்துமே நான் மேற்கூறிய நாடகங்கள் போன்றவையே. யாழ்ப்பாணத்தில் எனது காலத்தில் அதாவது அறுபதுகளில் நான் முழுமையான மேடை நாடகங்களைப் பார்க்கவில்லை. சிலவேளைகளில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களது காலத்தில் அத்தகைய முழுமையான நாடகங்கள் தயாரிக்கப்பட்டிருக்கலாம். ஹென்றிக் இப்ஸனின் 'ஏ டோல்ஸ் ஹவுஸ்' என்ற நாடகம் தேவன் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, அப்போதைய அரசாங்க அதிபர் வேணன் அபயசேகர அவர்களால் தயாரிக்கப்பட்டதாக அறிகிறேன். ஆனால் அது ஒரு மேடையேற்றத்துடன் நின்றுவிட்டது. எனது பதின்ம வயதுகளில் மேடையேற்றப்பட்ட அந்த நாடகத்தையும் நான் பார்க்கவில்லை. நடிகமணி வீ.வீ. வைரமுத்து அவர்கள் இரண்டு, மூன்று மணித்தியாலங்கள் நீடிக்கக்கூடிய தான பல இசை நாடகங்களைத் தயாரித்தார். தமிழர்கள் வாழும் அனைத்துப் பிரதேசங்களிலும் மிகவும் நீண்டநேரம் நடைபெறும் கூத்துகள் இடம்பெற்றன. கொழும்பில் இலங்கையின் சகல பிரதேசங்களையும் சேர்ந்தவர்கள் தொழில்நிமித்தம் ஒன்றுகூடுவதால் அங்கு சகல பிரதேசத் தமிழர்களும் சிங்களத்திலும் மற்றும் உலகெங்கிலும் மேடையேற்றப்படுவது போன்ற இரண்டு, மூன்று மணித்தியாலங்களுக்கு நீடிக்கும் நாடகங்களை மேடையேற்றினார்கள்.

அப்படி மேடையேற்றப்பட்ட நாடகங்களில் நான் மேற்குறிப்பிட்ட நாடகங்களே ரூபவாஹினி ஆரம்பிக்கப்பட்டபோது தொலைக்காட்சிக்கென மீள்தயாரிப்புச் செய்யும் வகையில் எமக்குக் கிடைத்தன.

எண்பதுகளில் குறிப்பாக, எண்பத்திமூன்றாம் ஆண்டு இனக்கலவரத்தினையடுத்து தமிழ் மேடை நாடகமென்ற கலையே கொழும்பில் முற்றாக மறைந்துவிட்டது. இப்போது சில முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அறிகிறேன்.

நான் ரூபவாஹினியில் மேடைநாடகங்களைத் தயாரித்த சமகாலத்தில் நாடகப் பிரிவின் தலைவராகவிருந்த தம்மஜாகொடவும் பிரபலமான சில சிங்கள மேடை நாடகங்களை ரூபவாஹினிக் கலையகத்திலும் ஓ.பி. பஸ்ஸை எடுத்துச்சென்றும் தயாரித்திருக்கிறார். அவற்றில் 'சிங்கபாகு', 'குணுவட்டே கத்தாவ', 'களனிபாலம' போன்ற தயாரிப்புகள் எனது நினைவில் உள்ளன.

தொடரும்...

wikneswaran.p@thaiveedu.com

YOUR INTEREST IS
MY CAPITAL
உங்கள் விருப்பமே
என் முதலீடு !

Call SRI
For your Real estate Chat.

SRI SIVASUBRAMANIUM
SALES REPRESENTATIVE
DIR : 416.884.3991
ssriskand@gmail.com
www.sriveedu.com

HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE/FUTURE REALTY INC., BROKERAGE*
*INDEPENDENTLY OWNED AND OPERATED
7 EASTVALE DR, UNIT 205 MARKHAM, ON L3S 4N8
Off : 905.201.9977 Fax : 905.201.9229
www.homelifefuture.ca

OUR FREE SERVICES

For Home Owners

- ✓ Home Staging
- ✓ Newspaper & Flyer Advertisement
- ✓ High Resolution Picture & Virtual Tour
- ✓ Four Page Colour Feature Sheets
- ✓ Weekends Open House
- ✓ Guaranteed Weekly Feedback
- ✓ Social Media Marketing
- ✓ Full MLS Listing Service
- ✓ Sale Sign & Direction Signs
- ✓ Market Evaluation
- ✓ Radio & Web Tool Advertisement
- ✓ Professional & Friendly Service

LOW Commission

WHY? REALTOR KATHIR

- Over 10 yrs Experience Realtor
- Multi Award Winner Since 2006
- Excellent Negotiation Skill
- Quick Sale with Low Commission
- Professional & Friendly Services
- Home Sellers' Programme
- Home Buyers' Programme
- Mortgage Brokers, Lawyers, Inspector Team.
- Getting Low Rate Mortgage

SELL WITH KATHIR
& GET MAX. PRICE

Buy with Kathir & Get Dream Home

HomeLife/Future Realty Inc.,
Brokerage *Independently Owned and Operated
O: (905)201-9977 F: (905)201-9229
205-7 Eastvale Dr., Markham,Ont, L3S 4N8

Kathir Kathirgamanathan B.A,
Real Estate Broker
Dir: 416-230-6462

கவிஞர் நெருடாவும் பணிப்பெண் தங்கம்மாவும்

- திருமதி ரொபினா பி. மார்க்ஸ்

தமிழில்: மணி வேலுப்பிள்ளை

பாப்லோ நெருடா (1904-1973)

சிலிய நாட்டுக் கவிஞரும், இராசதந்திரியுமாகிய பாப்லோ நெருடா அந்த நாட்டின் தூதராக இலங்கையில் கடமையாற்றியவர். அப்பொழுது தங்கம்மா என்ற பெண் அவருடைய இல்லத்துக்கு பணிசெய்ய வந்து சென்றாள்.

தற்பொழுது தென் ஆபிரிக்க தூதராக இலங்கையில் கடமையாற்றும் ரொபினா மார்க்ஸ் (Robina P. Marks), 1973ல் இறந்த கவிஞர் நெருடாவின் 116வது பிறந்தநாளை முன்னிட்டு, அவரை விளித்து எழுதிய மடலில் தங்கம்மாவுக்கு நேர்ந்த கதியை விவரித்துள்ளார்.

அதன் சுருக்கம் இது:

அன்பின் பாப்லோ,

சிலிய நாட்டில் தொல்குடிமக்கள் சுரண்டப் படுவதற்கு எதிராக வெகுண்டெழுந்து நீங் கள் யாத்த கவிதைகளில் பொங்கும் அறச் சீற்றத்தை நான் நயந்து வியந்தேன். ஈற் றில் நீங்கள் சிலியத் தூதராக கடமை யாற்றிய நாடுகளில் 'கருமேனி, பொன் மேனி அழகிகளுடனும் மற்றும் இடச்சு, ஆங்கிலேய, திராவிடக் குருதி கொண்ட பெண்களுடனும்' ஊடாடியதை உங்கள் வாயிலாகவே அறிந்து குழப்பம் அடைந் துள்ளேன். 'கைமாறு கருதாமல் அவர் கள் விளையாட்டாக என்னுடன் படுத் தெழும்பினர்' என்று நீங்கள் எழுதிச் சென் றிருக்கிறீர்கள்.

உங்கள் கவிதைமீது நான் கொண்ட காதல், தங்கம்மா என்ற பெண்ணைப் பற்றிய நினைவில் சிக்கிகொண்டுள்ளது. உங்கள் பணியின்மீது அச்சமும், ஆபத்தும் கலந்த ஒரு கருநிழலை அது படரச் செய்துள்ளது. உங்கள் கவிதை வரிகளிடையே அவள் ஓயாது சீறியெழுகின்றாள்.

கடலை அண்டி அமைந்த உங்கள் இல் லத்துக்கு உங்கள் உடற்கழிவு வாளிகளை யும், உங்கள் தெருவில் வசித்த மற்றவர் களின் கழிவுவாளிகளையும் கொண்டுசெல்ல ஒவ்வொரு நாளும் காலையில் தங்கம்மா வந்து சென்றாள். நீங்கள் அடையக் கனவுகண்ட தங்கம்மா, நீங்கள் அள்ளி வழங்கிய பழங்களையும், பட்டுக்களையும் புறக்கணித்த தங்கம்மா வந்து சென்றாள். நீங்கள் எழுதியது போல் அவள் கையை இறுகப் பற்றி இழுத்த அந்த நாள் வரை அவள் வந்து சென்றாள். அதை நீங்கள் இப்படி வர்ணித்திருக்கிறீர்கள்:

'அவள் புன்னகை புரியவில்லை. எனது படுக்கை அறைக்கு தன்னை இட்டுச்செல்ல அவள் இடங்கொடுத்தாள். கையோடு எனது கட்டிலில் அவள் பிறந்த மேனியைக் கண்டேன் அவள் இடையின் மெதுமையும், இடுப்பின் முதிர்ச்சியும், மார்பகங்களின் திரட்சியும் அவளை ஆயிரம் ஆண்டு கள் பழைமைவாய்ந்த தென்னிந்தியச் சிலை ஆக்கின. முழு நேரமும் தன் விழி களை அவள் திறந்து வைத்திருத்தாள். இம்மியும் அவள் பதில்வினை ஆற்ற வில்லை. அவள் என்மீது விசனப்பட்டது நியாயமே. அத்துடன் அந்த அனுபவத் துக்கு முடிவுகட்டப்பட்டது.'

'அவள் என்மீது விசனப்பட்டது நியாயமே' என்ற சொன்னவுடன் அந்தப் பழியிலிருந்து விடுபடலாம் என்று எண்ணினீர்களா? அது ஒரு வன்புணர்ச்சி அல்லவா? அது இரு வர் ஒருவர்மீது ஒருவர் அன்புகொண்டு, ஆசைப்பட்டு மேற்கொண்ட இசைவுப் புணர்ச்சி அல்லவே! அதை எவரும் பொருட்படுத்த வேண்டியதில்லை என்பது போலவும், அதை ஒரு கணநேர வருத்தத் துக் குரிய சங்கதி போலவும் உங்கள் நினைவுத்திரட்டில் பூசி மெழுகியிருக்கிறீர் கள்.

தாழ்ந்த சாதியையும், பால்மையையும் சேர்ந்த ஒரு வறிய பெண்ணை, உங் கள் இல்லத்தைப் போன்ற வீடுகளுக்குச் சென்று உடற்கழிவு வாளிகளை அப்புறப் படுத்துவதை மட்டுமே தனது பிழைப் பாகக் கொண்டு, தன்னையும் தனது குடும் பத்தையும் காப்பாற்றிய ஒரு பெண்ணை, வேறு கதியற்ற ஓர் அபலையை வன் புணர்ச்சிக்கு உட்படுத்திய குற்றம் அது.

உங்களை ஒடுக்கப்பட்டவர்களின் தோழ னாகக் காட்டி நீங்கள் பெருமைப்பட்டா லும் கூட, தங்கம்மாவைப் பொறுத்தவரை நீங்கள் ஒரு வெள்ளை இனத்தவர், ஆண் என்ற வலியவர். அவளோ எழுதப்பேசத் தெரியாதவள். தான் வலுவற்றவள், துணை யற்றவள், குரலற்றவள் என்று எண்ணிக் கொண்டவள். தான் பிழைக்க வேண்டுமே என்பதற்காக உங்கள் படுக்கையில் அமை திகாத்து, நீங்கள் புரிந்த வன்செயலை அவள் தாங்கிக்கொண்டாள். தனக்கு முன் னரும் பின்னரும் எத்தனையோ பெண்கள் தாங்கிக்கொண்டது போல் அவள் தாங் கிக்கொண்டாள்!

உங்களுடன் உறவாடும் ஐரோப்பியர்கள் தங்களை மேலானவர்கள் என்று எண்ணி, உங்களுக்கு தயவுகாட்டுவது எல்லாம் உங்களுக்கு அருவருப்பு ஊட்டுவதாக நீங்களே எழுதியிருக்கிறீர்கள். அப்படி என்றால் உங்களுக்கும் தங்கம்மாவுக்கும் இடையே அதே ஏற்றத்தாழ்வு நிலவியது உங்களுக்குப் புரிந்திருக்குமே!

'அத்துடன் அந்த அனுபவத்துக்கு முடிவு கட்டப்பட்டது' என்பது எனக்குப் புரிய வில்லை. அதற்குப் பின்னரும் தங்கம்மா உங்கள் கழிவுவாளியை அகற்றும் பணி யைத் தொடர்ந்தாளா? அல்லது அதற்குப் பின்னர் உங்கள் வாழ்நாளில் உங்கள் சரசத்துக்கு இடங்கொடுக்க மறுத்த வேறு பெண்களுடன் உங்களுக்கு அப்படி ஓர் 'அனுபவம்' கிடையாதா என்பது எனக்குப் புரியவில்லை.

தங்கம்மா வரலாற்றிலிருந்து அழிக்கப்பட் டாள். நீங்கள் 'அனுபவம்' என்று சொல் வதை அடுத்து அவள் எவ்வாறு செயலாற் றினாள் என்பது எமக்குத் தெரியாது. அவளையும் அவளது வாழ்வையும் அந்த வன்புணர்ச்சி எவ்வாறு தாக்கியது? அதைப் பற்றி வேறு எவரிடமும் அவள் சொல் லியிருக்கக் கூடுமா? 'உனக்கு உது வேணும்!' என்று பிறர் சொல்லுவார்கள் என்று அஞ்சியபடியால், அவள் வாய் திறக்கவில்லையா? எமக்குத் தெரியாது.

தொடர்தல் 80ம் பக்கம்

கவிஞர் நெருடாவும்...

79ம் பக்கத் தொடர்ச்சி...

அந்த அமைதி அவள் தொண்டையில் ஒரு கல்லைப் போல் சிக்கியிருக்கும். அதன் பிறகு தன்னுடனும், ஆண்களுடனும் அவள் பூண்ட உறவை அது எப்படி வடிவமைத்திருக்கும்? அந்த வன்புணர்ச்சியைத் தொடர்ந்து நீங்கள் இலங்கையை விட்டு வெளியேறி விட்டீர்கள். உங்கள் கவித்துவப் புகழ் உலகம் முழுவதும் பரவியது. மாண்பும், விருதுகளும் பரிசுகளும் உங்களுக்கு வந்து குவிந்தன. நோபல் பரிசு வேறு கிடைத்தது.

வன்புணர்ச்சியை அடுத்து தங்கம்மாவின் அகவாழ்வுக்கும் புறவாழ்வுக்கும் என்ன நேர்ந்தது? இற்றைவரை வரலாற்றிலிருந்து அவள் அழிக்கப்பட்டிருக்கிறாள் இலங்கையில் ஒருநாள் காலைவெயில் ஒளிர்ந்த வேளையில் நீங்கள் ஈட்டிய ஓர் 'அனுபவம்' என்பதுள் அவள் ஒடுக்கப்பட்டிருக்கிறாள்.

சாந்தி அடையாத தங்கம்மாவின் ஆவி உங்கள் கவிதை வரிகளிடையே என்னுடன் கண்ணாம்பூச்சி விளையாடுகிறது. தனது பெயரை எவரோ உதிர்த்தார் என்பதை அது அறியவேண்டும், அவளுக்கு நடந்ததை நாங்கள் அனைவரும் பொருட்படுத்தும் வண்ணம் உங்கள் கவிதையின் எதுகை மோனைகளிடையே அது நிலைத்திருக்க வேண்டும், அங்கு இச்சைப்படியும் தங்குதடையின்றியும் அது சுற்றித் திரிய வேண்டும் என்றே நான் ஆசைப்படுகிறேன்.

நீங்கள் வசித்த இல்லத்துக்கு எதிரே உள்ள கடற்கரைக்கு இன்று நான் சென்றேன். 'ஒவ்வொரு நாளும் காலையில் தூய்மை அடையும் இயற்கையின் அற்புதம் என்னை ஆட்கொண்டது' என்று எந்தக் கடற்கரையைப் பற்றி நீங்கள் எழுதினீர்களோ அந்தக் கடற்கரைக்குச் சென்றேன். கரையைத் தொட்டுத் திரும்பும் அலைகளை அவதானித்தபொழுது எனக்கும் அதே உணர்வு ஏற்பட்டது. எனினும் தங்கம்மாவின் உடலிலும் உள்ளத்திலும் நீங்கள் ஏற்படுத்திய கறை நிலைத்திருந்தது. அன்

Robina P Marks, South African High Commissioner to Sri Lanka and The Maldives, Sri Lnka Guardian.

சிலிய நாட்டின் தூதராக இலங்கையில் கடமையாற்றிய கவிஞர் பாப்லோ நெருடா

றாடம் தனது தலையில் வைத்து பத்திரமாய் சுமந்துசென்ற உங்கள் வாளிக்கழிவைப் போலவே அவளது கறையும் களையப்படவில்லை.

கடற்கரையில் சில கற்களை நான் பொறுக்கினேன். அவற்றில் 'தங்கம்ம்மா' என்று கருநிறத்தில் எழுதினேன். அவற்றை நீங்கள் வசித்த வீட்டுக்கு எடுத்துச் சென்றேன். நீங்கள் வெளியேறிய பிறகு அங்கு வசித்துவரும் முஸ்லீம் குடும்பம் என்னை வரவேற்றது. தாயும் இரண்டு புதல்வருமான அம்மூவருடனும் அளவளாவியபடியே, தங்கம்மா நடமாடிய இடத்தில் திருட்டுத்தனமாக அந்தக் கற்களைப் போட்டேன். அவர்கள் தேநீர் தர முன்வந்தார்கள். கல்லுச் சிக்கிய என் தொண்டையால் அதைப் பருக முடியாது என்று சொல்லிவிட்டு நான் கடற்கரைக்குத் திரும்பி 'தங்கம்மா' என்று பொறித்த கற்களை மேலும் இட்டுச்சென்றேன். வரலாற்றினால் அழிக்கப்பட்ட அவள் பெயரை உச்சரித்தேன்: 'தங்கம்மா! தங்கம்மா! தங்கம்மா!'

பாப்லோ, அந்த வீட்டருகில் அல்லது கடற்கரையில் ஒரு குழந்தையோ, அல்லது கடற்கரையில் வேறெவருமோ நான் இட்டுச் சென்ற கல்லை மிருதுவாய் எடுத்து, கையில் ஏந்தி, அதன் கதையை அறிய ஆவல் கொள்ளக்கூடும். அத்தகைய ஒரு கல்லை நீங்கள் கண்டெடுத்தால், அதைப் பற்றி ஒரு கவிதை எழுத உங்கள் உள்ளம் துடித்திராதா? அது என்ன கதையை உணர்த்துகிறது என்று நீங்கள் சிந்தித்திருக்க மாட்டீர்களா?

அத்தகைய கல் ஒன்றை நீங்கள் ஏந்தி வைத்திருந்து, முதல் தடவையாக அவள் பெயரை உச்சரித்து, அந்த விதிவசப்பட்ட நாளில் எது உங்கள் உடைமை இல்லையோ அதை நீங்கள் கவர்ந்த நாளில் எந்தப் பெயரை நீங்கள் உச்சரிக்கவில்லையோ அந்தப் பெயரை உச்சரிக்கும்பொழுது உங்களுக்கு எழும் எண்ணங்களாலும் சொற்களாலும் உந்தப்பட்டு நீங்கள் ஒரு கவிதை எழுதுவதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

■ ■ ■

ஆதியும் அந்தமும் தேடி...

- குகன் சங்கரப்பிள்ளை -

1838 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 28ஆம் திகதி சார்லஸ் டார்வினுக்கு (Charles Darwin) ஒரு மறக்கமுடியாத நாள். ஏன்னெனில் அன்றுதான் டார்வின் முதன்முதலில் ஓராங்குட்டான் (orangutang) குரங்கு ஒன்றை லண்டன் மிருக காட்சிசாலையில் பார்க்கின்றார். பார்த்த அதிசயத்தை அவரால் நம்ப முடியவில்லை. மணிக்கணக்காக அவற்றை அவதானித்துக்கொண்டே இருந்தார். இந்த ஓராங்குட்டான் குரங்குக்கு ஜெனி (Jenny) என்று மிருக காட்சிசாலை அலுவலர்கள் பெயர் வைத்திருந்தார்கள். ஜெனி குச்சிகளை உடைத்து விளையாடுவது, தன்னை இந்த கூட்டிலிருந்து வெளியேற்ற வைப்பதற்கு அது அடைக்கப்பட்ட கூட்டையே குலுக்குவது, மிருக காட்சிசாலை அலுவலர் ஓர் ஆப்பிளை எடுத்து ஜெனியின் முன் காட்டிவிட்டு அதற்கு கொடுக்காதபோது சிறு பிள்ளைகள் அடம் பிடிப்பது போல ஆப்பிளை கொடுக்கும் படி அடம் பிடிப்பது, மிருக காட்சிசாலை அலுவலர் 'ஜெனி நீ ஒழுங்காக நடப்பாய் என்றால் உனக்கு ஆப்பிள் கிடைக்கும்' என்று சொன்னவுடன் ஜெனி பவ்வியமாக அடங்கி பணிவாக இருப்பது... இவை எல்லாவற்றையும் பார்த்த டார்வினுக்கு வியப்பு மட்டும் ஏற்படவில்லை, அவரது ஆழ்மனதில் பற்றியிருந்த கூர்ப்பு தொடர்பான சிந்தனைகள் மீண்டும் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தன. அப்போது டார்வினுக்கு 27 வயது. இரண்டு வருடங்களுக்கு முன்னர்தான் HMS Beagle என்ற கப்பலில் தென்னமெரிக்க கண்டத்திலுள்ள கோலபிகஸ் தீவுகள் மற்றும் பல நாடுகளுக்கு பயணம் செய்திருந்தார். வரும் போது, பல வகையான செடிகள், பறவைகள், பூச்சிகள் மற்றும் சிறு விலங்கினங்கள் யாவற்றினதும் மாதிரிகளையும் (specimen), அவற்றின் வதிவிடம் மற்றும் வாழ்வியல் தொடர்பான குறிப்புகளையும் சேகரித்து இருந்தார். இன்று உலகமே கொண்டாடும் 'கூர்ப்பு தொடர்பான பரிணாம கோட்ப்பாடுகளை' உருவாக்கிய டார்வினின் எண்ணங்கள் அவரிடம் வலுப்பெறுவதற்கு இந்த HMS Beagle கப்பல் பயணம் மிக முக்கியமான நிகழ்வு. ஆனால், டார்வின் HMS Beagle கப்பலில் பயணம் செய்ததோ ஒரு எதிர்பாரத நிகழ்வுதான்.

Robert Darwin மற்றும் Susana தம்பதிகளுக்கு பிறந்த 6 குழந்தைகளில் ஐந்தாவதாக டார்வின் 1809ஆம் ஆண்டு மாசி மாதம் பன்னிரண்டாம் திகதி பிறந்தார். அவரது தாயார் அவருக்கு 8 வயது இருக்கும் போதே இறந்துவிட்டார். இந்த தாயார் இறந்த சம்பவத்தை தவிர தனது பிள்ளை பருவம் மிக ஆரோக்கியமான ஒன்று என்று டார்வின் தனது சுயசரிதையில் குறிப்பிடுகின்றார். டார்வினின் தந்தையார் ஒரு மருத்துவர். இளம் வயது டார்வினை ஒரு மருத்துவராக்கி விடவேண்டும் என்று விரும்பி மருத்துவ கல்லூரியில் சேர்த்தார். டார்வினோ மருத்துவ துறையில் நாட்டம் கொள்ளவில்லை மாறாக இயற்கையில் இருக்கும் பறவைகள், மரங்கள், பூச்சிகள், புழுக்கள் என இவற்றை பார்ப்பது, படிப்பது, பிடிப்பது என அவரது நேரத்தை போகடித்து கொண்டிருந்தார். வெறுத்து போன டார்வினின் தந்தையார் 'நீ பூச்சிகளையும் புழுக்களையும் பிடிப்பதை தவிர வேறு ஒன்றுக்கும் உதவாதவன்' என்று கூறிவிட்டு, டார்வினை ஒரு போதகர் ஆக்கி விடலாம் என்று நினைத்து, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சேர்த்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தில் அங்கு கற்பித்த தாவரவியல் பேராசிரியர் கேன்சலாவ் (John Stevens Henslow) அவர்களுடன் நெருங்கி பழகும் வாய்ப்பு கிடைத்தது. பேராசிரியர் கேன்சலாவ் மாலை நேரங்களில் கேம்பிரிட்ஜ் பல்கலைகழக வளாகங்களை சுற்றி இருந்த இயற்கை வன பூங்காக்களில் நீண்ட நடை பயணம் செய்யும் வழக்கமுடையவர். இப்படி பேராசிரியர் போகும் நடை பயணங்களுக்கு டார்வினும் துணை போவது வழக்கமான நிகழ்வாகிவிட்டது. இதனால் டார்வினை 'கேன்சலாவ்வின் நடை தோழன்' என்ற புனை பெயரிலும் கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தில் அழைக்கத் தொடங்கினார்கள். பேராசிரியர் கேன்சலாவ் டார்வினின் நடை பயண தோழனாக மட்டுமல்லாமல் இளம் வயது டார்வினுக்கு சிறந்த ஒரு வழி காட்டியாகவும் விளங்கினார்.

அப்போது டார்வினுக்கு 22 வயது. நீண்ட ஒரு நடை பயணத்தின் பின்னர் வீடு திரும்பிய அவருக்கு, பேராசிரியர் கேன்சலாவ்வின் கடிதம் காத்திருந்தது. இந்த கடிதத்



தில் கேப்டன் பிட்ஸ்ரோய் (Robert Fitzroy), அவரது தென்னமெரிக்க கப்பல் பயணத்திற்கு அவருடன் துணையாக யாராவது போவார்களாயின், அவர்களுக்கு கப்பலில் உள்ள கேப்டனின் விசேட அறையில் தங்குவதற்கு இலவசமாக இடமும், சாப்பாடும் கொடுக்க தயாராக இருக்கின்றார் என்ற விபரத்தை பேராசிரியர் கேன்சலாவ் தெரிவித்திருந்தார். அது மட்டுமில்லாமல் டார்வின் இந்த பயணத்தில் பங்கேற்கும் பட்சத்தில், டார்வின் வெப்பமண்டல காடுகளையும் (topical forest), அங்கு வாழும் உயிரினங்களையும் நேரடியாக பார்த்து, படித்து, ஆராய்வதற்கு இந்த பயணம் மிகுந்த அனுகூலமாக அமையும் என்றும் அறிவுறுத்தி இருந்தார். கேப்டன் பிட்ஸ்ரோய் (Robert Fitzroy) எதற்காக அவருக்கு கப்பல் பயணத்திற்கு துணை தேடுகின்றார்? அவருடன்தான் நூறுக்கணக்கான மாலுமிகள் பயணம் செல்கின்றார்களே! இங்குதான் வாசகர்கள் விக்டோரியன் காலத்து இங்கிலாந்தை விளங்கி கொள்வது அவசியம். விக்டோரியன் காலத்து இங்கிலாந்து மிகவும் ஏற்றத்தாழ்வு கொண்ட ஒரு சமூகம். இங்கு வாழ்ந்த மேட்டு குடி என்று சொல்லப்படுகின்ற மக்கள், அடித்தட்டு என்று சொல்லப்படுகின்ற மக்களுடன் பேசிப்பழகுவதில்லை. கேப்டன் பிட்ஸ்ரோய் மேட்டு குடி என்று சொல்லப்படுகின்ற சமூக பின்புலத்தை சார்ந்தவர், மாலுமிகளின் பின்புலம் அடித்தட்டு என்று சொல்லப்படுகின்ற சமூகத்தில் இருந்து வந்தவர்கள். இங்கிலாந்தில் இருந்து கிளம்பும் கப்பல் நீண்ட நாள் கடல் பயணங்களின் பின் அமெரிக்காவை வந்தடையும் அது வரையும் கப்பலின் கேப்டன் பெரும்பாலும் தனியாக அவரது அறையில் கழிக்க வேண்டிய அவசியம். இதனால்தான் கேப்டன் பிட்ஸ்ரோய் துணைக்கு ஒருவரை தேடினார். கேப்டன் பிட்ஸ்ரோய்க்கு அப்போது 26 வயது. இரண்டாவது தடவையாக அவர் தலைமையில் HMS Beagle கப்பல் தென் அமெரிக்காவுக்கு பயணத்தை ஆரம்பிப்பதற்கு தயாராகி கொண்டிருந்தது. டார்வினும் பேராசிரியர் கேன்சலாவ்வின் ஆலோசனைப்படி இந்த கப்பலில் கேப்டன் பிட்ஸ்ரோய்க்கு துணையாக போக முடிவெடுத்தார், ஆனால் இந்த முயற்சியில் அவர் இரண்டு சிக்கல்களை எதிர் கொண்டார்.

முதல் சிக்கல் அவரது தந்தையார், பையனை மருத்துவ கல்லூரியில் சேர்த்தால் படிப்பதை விட்டுவிட்டு பூச்சி புழுக்களை பிடித்து திரிந்தான், சரி ஒரு போதகராக்கி விடலாம் என்று பார்த்தால் அதையும் குழப்பி கப்பலில் போகிறது என்று சொல்கின்றான், மகனை இப்படியே விடமுடியாது. மகனே நீ போக வேண்டாம் என்று உறுதியாக கூறிவிட்டார். நல்லவேளை டார்வின் தனது தாய்மாமன் மூலம், அவரது தந்தையாரை சமாதானப்படுத்தி, தந்தையாரின் சம்மதத்தை பெறக்கூடியதாக இருந்தது. இந்த தாய்மாமனின் மகளைதான் டார்வின் திருமணமும் செய்துகொண்டார். டார்வினின் இரண்டாவது சிக்கல் கேப்டன் பிட்ஸ்ரோய். இவர் ஒரு phrenologists (முவுருவியலர்கள்). Phrenologists மனிதர்களின் முகத்தின் அங்க அடையாளங்களை வைத்து மனிதர்களின் இயல்பை தீர்மானிப்பவர்கள். இந்தத் துறை 17ஆம் நூறாண்டிலிருந்து 19ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை மிக பரவலான ஒரு நம்பிக்கையாக ஐரோப்பாவில் இருந்தது. முதலில் முன் நெற்றியில் விழும் சுருக்கம், முன் நெற்றியின் அளவு போன்றவற்றை வைத்து மனிதர்களின் அறிவும், புத்திசாலித்தனமும் தீர்மானிக்கப்பட்டன. பின்னர் பலர் இந்த துறையை முகத்தின் மற்ற உறுப்புகளுக்கும் நீட்டிவிட்டனர் கேப்டன் பிட்ஸ்ரோய்யும் இந்த வகையை சார்ந்தவர். அவருக்கு டார்வினின் மூக்கு பிடிக்கவில்லை. இவர் ஒரு சிக்கலான பேர்வழியாக இருப்பாரோ என்று சந்தேகப்பட்டார். இறுதியாக ஒரு வழியில் டார்வினை தனது பயணத்தில் அழைத்து செல்ல சம்மதித்தார்.

தென்னமெரிக்க கரையோரங்களை அளவிடுவதற்கும், ஆராய்வதற்குமாக 1831ஆம் ஆண்டு மார்கழி 27 ஆம் நாள் HMS Beagle கப்பல் லண்டன் துறைமுகத்தை விட்டு தென்னமெரிக்கா நோக்கி கிளம்பியது - இது ஐந்து வருடப்பயணம். வரும் காலத்தில் மானிட வரலாற்றையே திருத்தி எழுதும் ஒரு மகாஞானியும் அந்த கப்பலில் தனது தேடலை நோக்கிய பயணத்தை தொடர்கினார். டார்வினுக்கு கடல் பயணம் அவ்வளவு ஒத்து வரவில்லை. இதனால் டார்வின் கப்பல் இடையில் தங்கும் இடங்கள் யாவற்றிலும், கப்பலில் தங்கியிருப்பதை தவிர்த்து கரைகளில் பெரும்பாலான நாட்களை செலவிட்டார். Beagle கப்பல் உலகத்தின் தென் கோடி எல்லைகளையும் தாண்டி ஆர்ஜென்டீனா (Argentina) உட்பட பல தென்னமெரிக்க நாடுகளுக்கு சென்றது. போகும் வழிகளில் நிற்கும் இடங்களில் யாவற்றிலும் டார்வின் பல உயிரினங்களின் மாதிரிகைகளையும் (specimen) சேகரித்திருந்தார். இவற்றை சந்தர்ப்பம் கிடைக்கும் போது லண்டனுக்கு திரும்ப போகும் கப்பல்களில் லண்டனுக்கு அனுப்பியும் இருந்தார். 1835ஆம் ஆண்டு Beagle கப்பல் கொலாபிக்கஸ் தீவுகளை (Galapagos islands) சென்றடைந்தது. கொலாபிக்கஸ் தீவுகள் (Galapagos islands) தென் அமெரிக்காவில் உள்ள உள்ள ஈக்குடோர் (Ecuador) நாட்டிலிருந்து 1000 கில்லோ மீட்டருக்கு அப்பால் அட்லாண்டிக் கடலில் அமைந்துள்ளன. இங்குள்ள 13 பெரிய தீவுகளையும் நூற்றுக்கணக்கான சிறிய தீவுகளையும் ஒன்றாக சேர்த்து கொலாபிக்கஸ் தீவுகள் என்கின்றனர். கொலாபிக்கா என்னும் சொல் பழைய ஸ்பானிய மொழியில் ஆமைகளை குறிப்பிடுகின்றது. இதனால் கொலாபிக்கஸ் தீவுகள் என்பது ஆமைகளின் தீவுகள் என்று பொருள். இந்த தீவுகள் கிட்டதட்ட சில மில்லியன் வருடங்களுக்கு முன்னர் அட்லாண்டிக் கடலில் உருவான எரிமலைகளின் விளைவாக தோன்றி இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். டார்வின் இந்த தீவுகளில் ஐந்து வாரங்கள் தங்கிருந்தார்.

ஐரோப்பியர் தென்னமெரிக்காவுக்கு வரும் வரை இந்த தீவுகளில் எந்த மனிதர்களும் நிரந்திரமாக வாழ்ந்ததில்லை. மனிதர்கள் மட்டுமல்ல நிலத்தில் வாழும் எந்த வகையான பாலூட்டி விலங்கினங்களும் இந்தத் தீவுகளில் உருவானதோ வாழ்ந்ததோ இல்லை. இந்த தீவுகள் பறவைகளினதும் நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரினங்களான ஆமை போன்றவற்றின் சரணாலயமாக திகழ்ந்தன. இங்கு வாழ்ந்த உயிரினங்களான ஆமைகள், உடும்புகள், பறவைகள் போன்ற யாவும் இந்த தீவுகளுக்கே உரிய தனித்துவதுடன் காணப்பட்டன. உதாரணமாக இந்த தீவுகளில் வாழ்ந்த பறவைகளில் 24 விதமான பறவைகள் இந்த தீவுகளுக்கு மட்டும் உரித்தானவை. இங்கு வாழ்ந்த கடல் வாழும் உடும்புகள் கடல் பாறைகளில் வளரும் பாசிகளை உண்ணும் பிராணிகளாக வாழ்ந்தன. அது மட்டுமல்லாமல் இவற்றின் உடல் கடல் பாறைகளில் வாழ்வதற்கும் இங்கு வளரும் பாசிகளை உண்ணுவதற்கும் ஏற்றவாறு இயல்வாக்கம் அடைந்திருந்தன. இங்கு வாழ்ந்த இன்னுமோர் உடும்பு வகைகள் (இவை காடுகளில் வாழ்பவை) மிக பெரியவை. உலகத்தில் இருக்கும் உடும்பு வகைகளில் இவையே மிகப்பெரியவை. இவற்றை கொலாபிக்கஸ் தீவுகளை தவிர வேறு எங்கும் இந்த பூமியில் காணமுடியாது. இதே போல இங்கு வாழ்ந்த ஆமைகள் தனித்துவமானவை இவை உலகத்திலேயே இருக்கும் ஆமைகளில் மிகப்பெரியவை. அது மட்டுமல்லாமல் 100 வருடங்களுக்கு மேல் வாழ்பவை. காரிட் (Harriet) என்று பெயரிட்ட ஆமை டார்வினால் 1830 களில் கோலபிகஸ் தீவுகளில் ஒன்றில்

தொடர்தல் 82ம் பக்கம்

ஆதியும் அந்தமும்...

81ம் பக்கத் தொடர்ச்சி...

பிடிக்கப்பட்டது என்று நம்புகின்றனர். இது 2006ஆம் ஆண்டு, ஆனி மாதம் 23ஆம் நாள் மாரடைப்பால் அவுஸ்திரேலியாவில் இறந்தது. இது இறக்கும் பொது இதன் வயது 175 வருடங்கள்.

டார்வின் ஒரு பெரும் இயற்கை ஆர்வலர். இயற்கையில் இருக்கும் ஒவ்வொரு உயிரினங்களும் ஓராயிரம் கதைகளை இவருக்கு கூறும். இயற்கையில் வளரும் உயிரினங்களின் அழகில் மட்டும் டார்வின் லயித்து, ரசித்து இருக்கவில்லை. ஏன், எதற்காக, எப்படி உயிரினங்கள் தோன்றின, அவற்றின் அங்கங்கள் அவை வாழும் சூழலுக்கு ஏற்ப பரிணாமம் அடைந்திருக்கின்றன என் பதனை மிக நுணுக்கமாக அவதானித் தார். டார்வின் ஒரு தோட்டக்காரர். அவர் வளர்ந்த சூழலும் வாழ்ந்த வீடும் தோட் டங்களால் சூழப்படிருந்தது. இந்த தோட் டங்கள் அவருக்கு ஒரு பல்கலைகழகம். இந்த தோட்டங்கள் அவர் அனுமானங் களை பரிசோதிக்கும் ஒரு களம். படரும் கொடிகளின் துளிர்கள் அவை படரும் பொருட்களை நோக்கி நீண்டு நீள்வதை யும், இந்த பொருட்களை கொடிகள் அடைந்தவுடன் அவற்றை சுற்றி இறுக பிடித்து வளர்வதையும் பார்த்து, இவை மனிதர்கள் அவர்களின் கைகளால் ஒரு பொருளை எட்டி பிடிப்பது போல இருக் கின்றதே என்று அதிசயித்தார். நரம்பு தொகுதிகளே இல்லாத மரங்களின் வேர் கள் எவ்வாறு நீரை நோக்கி போகின்றன? பூக்களின் முன் ரீங்காரமிட்டு நாட்டியமாடும் வண்டுகளும், தேனீக்களும் டார்வினுக்கு ஒன்றுடன் ஒன்று பின்னி பிணைந்து தங்கி வாழும் உயிரினங்களின் பரிணாம வளர்ச் சியின் பக்கங்களை எடுத்துரைத்தன. பூக்கள் - பூச்சிகளையும் வண்டுகளையும் தேனீக்களையும் கவர்வதற்காகவே விதம் விதமான வடிவங்களில், வண்ண வண்ண நிறங்களில், நறுமணங்களுடன் அலங்காரம் செய்து - பூத்து, அவற்றின் நடுவே தேனை யும் மகரந்தகளையும் கொண்டிருக்கின்றன. பூக்கள் இதழ்களை விரித்து வைத்திருப் பதே வண்டுகழும், தேனீக்களும், பூச்சி களும் அதில் அமர்வதற்கே. செடிகளில் உருவாகும் பூக்கள் தமக்கு தாமே மகரந்த சேர்க்கையில் ஈடுபடலாம், இருந்தும் ஏன் தமது மகரந்தகளை தம்மைப்போன்ற மற்ற செடிகளுக்கு கடத்த வேண்டும் என்று துடிக்கின்றன? மகரந்தைகளை கடத்துவதற் காக அவை பூக்களை உருவாக்குவதும் அதன் மத்தியில் தேனையும், நறுமணத் தையும் உருவாக்குவது என்பது அவற் றின் சக்தியை விரயமாக்குவது அல்லவா? டார்வின் சிந்தித்தார். இந்த முரண் புதி ருக்கு டார்வினுக்கு விடை தெரியவில்லை. இதனை விளங்குவதற்கு டார்வின் தனது தோட்டத்தில் உள்ள மரங்களில் ஒரு பரிசோதனை செய்து பார்த்தார். சில செடி களில் வளரும் பூக்களை அதே செடியில் உள்ள பூக்களுடன் மகரந்த சேர்க்கை செய்தும், அதே செடியில் உள்ள வேறு பூக்களை வேறு செடியில் உள்ள பூக்களு டனும் மகரந்த சேர்க்கையில் ஈடுபடுத்தி விளைவு எப்படி இருக்கும் என்று ஆராய்ந்து பார்த்தார். ஒரு செடியில் உள்ள பூக் களை ஒன்றுடன் ஒன்று மகரந்த சேர்க் கையில் ஈடுபடுத்தி உருவான காய்களில் இருந்து வந்த வித்துக்கள், வீரியமும், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவையாக காணப்பட்டன. செடிகள், தமது பூக்களை தம்மை போல உள்ள வேறு செடிகளில் உள்ள பூக்களுடன்தான் மகரந்த சேர்க் கையில் ஈடுபடுத்துகின்றன என்பதனை டார்வினுக்கு முன்னர் வாழ்ந்த ஜேர்மன் அறிவியலாளர் ஸ்பிரேங்கேல் (Christian Konrad Sprengel) 1793ஆம் ஆண்டு வெளியிட்ட புத்தகத்தில் குறிப்பிட்டு இருக் கின்றார். ஆனால் டார்வினோ இந்த பூக்க ளுக்கும் அதில் இருக்கும் தேனை சுவைக் கும் உயிரினங்களுக்கும் இடையில் இருக் கும் உறவு முறையினை பரந்து ஆழ மாக நோக்குகின்றார். ஆழ்ந்த அவதா னிப்புகளுக்கு பின்னர் ஒரு அனுமானத் துக்கு வந்தார் அதாவது பூக்களை சுமக் கும் செடிகளும், பூக்களின் தேனில் தங் கியிருக்கும் உயிரினங்களும் ஒரே கால கட்டத்தில் இந்த பூமியில் தோன்றி பரி ணாமம் அடைந்திருக்கலாம் என்பதுதான் அவரது அனுமானம். இன்று அவரது அனுமானம் மரபணு பரிசோதனைகள் மற்றும் அகழ்வாராச்சியினால் கிடைத்த படிமங்கள் மூலம் உறுதி செய்யப்பட் டுள்ளது. பூக்கும் செடிகளும் அவற்றை அண்டி வாழும் உயிரினங்களும் கிட்டதட்ட 130 - 140 மில்லியன் வருடங்களுக்கு முன் னர் பூமியில் தோன்றி இருக்கின்றன. 140 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் பெர்ன் (Fern) போன்ற வேர்களின் மூலம் பரவும் தாவரங்கள்தான் இந்த பூமி முழுவதும் பரவி இருந்தன. பூக்கள் இல்லாத பூமி? கற்பனை பண்ணிப்பாருங்கள் எப்படி இருந்திருக்குமென?

கொலாபிக்கஸ் தீவுகளின் ஆளுநர் டார்-
வினுடன் உரையாடும் போது கூறிய ஒரு

விடயம் டார்வினின் ஆழ்மனதில் பலத்த கேள்விகளை எழுப்பியது. கொலாபிக்கஸ் தீவுகளில் வாழும் ஆமைகளின் ஓடுகளை வைத்து தன்னால் இந்த ஆமைகள் எந் தெந்த தீவுகளில் வாழ்கின்றன என்பதனை அடையாளம் காணமுடியுமென்று ஆளுநர் கூறினார். கொலாபிக்கஸ் தீவுகள் ஒவ் வொன்றும் ஒவ்வொரு விதமான தட்ப வெப்ப சூழ்நிலைகளை கொண்டுள்ளன. இந்த சூழலுக்கு ஏற்ப இங்கு இருக்கும் மரம் செடி கொடிகளும் உருவாகி இருந் தன. சில தீவுகளில் வளரும் செடிகள் மழை வீழ்ச்சி குறைவானதால் மிக சிறிய னவாகவும், மற்ற மழை வீழ்ச்சி அதிக மான தீவுகளில் வளரும் செடிகள் கொஞ் சம் கூட வளர்ந்தனவாகவும் காணப்பட்டன. சிறிய செடிகள் இருக்கும் தீவுகளில் இருக்கும் ஆமைகளின் கழுத்து சிறிய னவாகவும், அதேவேளை வளர்ந்த செடி கள் இருக்கும் தீவுகளில் இருபவற்றின் கழுத்து நீண்டும் காணப்பட்டன. இந்த கழுத்துக்களின் நீளத்திற்கு ஏற்ப ஆமை களின் ஓடுகளும் மாற்றமடைந்திருந்தன. கொலாபிக்கஸ் தீவுகளின் ஆளுநரின் இந்த அவதானம், டார்வினின் மனத்தில் ஒரு முக்கிய கேள்வியை எழுப்பியது, அதாவது இந்த தீவுகளில் வாழும் விதம் விதமான ஆமைகள் யாவும் அடிப்படை யில் ஒரே குடும்பத்தில் இருந்து தோன்றி காலப்போக்கில் அவை வாழும் சூழலுக் கேற்ப வேறு வேறு வகைபட்ட ஆமை களாக மாற்றம் அடைந்திருக்கலாமா என் பதுதான் டார்வினின் மனத்தில் உருவான கேள்வி. கொலாபிக்கஸ் தீவுகளில் உள்ள பறவைகள் அந்த அந்த தீவுகளுக்கே உரிய தனித்துவத்துடன் காணப்பட்டன. இந்த பறவைகளின் உடலமைப்பை அவ தானித்த டார்வினுக்கு ஒன்று புலனாகி யது. இவற்றின் உடலமைப்பு ஒரேமாதிரி இருந்தாலும் அவற்றின் அலகுகள் அவை வாழும் தீவுகளுக்கு தீவுகள் மாறுபாட் டிருந்தன. இங்கும் டார்வினின் கேள்வி ஏன் இந்த பறவைகள் யாவும் ஒரே குடும் பத்தில் பிறந்து காலபோக்கில் அவை வாழும் சூழலுக்கேற்ப அவற்றின் அலகுகள் மாற்றம் அடைந்திருக்க கூடாது என்பது தான்.

டார்வின் எந்த உயிரினத்தை அவதானித் தாலும் அவைகளின் உடலமைப்பு, அவை வாழும் சூழல், அவற்றின் வரலாறு என யாவற்றையும் கூர்ந்து அவதானிப்பவர். உயிரினங்களின் மூலத்தை தேடும் சிந்த னையை இளம் வயது டார்வின்னின் மன தில் பதிய வைத்தவர் அவரது பேரனார் இராஸ்மஸ் டார்வின் (Erasmus Darwin). இவர் ஒரு மருத்துவர் மட்டுமல்ல, ஒரு கவிஞரும் கூட. டார்வின் பிறக்கும்போது இவர் இறந்து விட்டார். இருப்பினும் இவர் எழுதிய கவிதை ஒன்றில் 'உலகில் இருக்கும் அனைத்து உயிரினங்களும் ஒரு சிறு பொருளில் (Filament என்று Erasmus Darwin குறிப்பிடுகின்றார்) இருந்து தோன்றி இருக்கலாமா என்று எண்ணுவது எல் லைக்கு மீறிய சிந்தனையா? என்று எழுதி இருந்தார். இந்த வரிகள் டார்வினின் மனதில் ஆழமாக வேரூன்றி இருந்தது. உயிரினங்களை குடும்பங்களாக வகைப் படுத்துவது என்பது டார்வினுக்கு பல நூற்றாண்டு காலங்களுக்கு முன்னரே மனி தர் அறிந்த விடயம்தான். ஆனால் டார்-வினோ இதற்கு பின்னால் உள்ள பொறி முறையினை தேடினார். இந்த பொறிமுறை யினை விளங்குவதன் மூலம் உயிரினங் கள் யாவற்றிற்கும் இடையிலான தொடர்பு களை பரந்த நோக்கில் அணுகினார். இந்த தொடர்புகளை ஒரு மரத்திலுள்ள கிளை கள் போல வரைபடமாக பார்த்தார். டார்-வின் உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி பற்றி ஆராய்ந்துகொண்டிருந்த அதே கால கட்டத்தில், இங்கிலாந்தில் வாழ்ந்த இன்னு மோர் இயற்கை ஆர்வலர் அல்பிரேட் வாலஸ் (Alfred Russel Wallace) அவர் களும் உயிரினங்கள் ஒன்றில் இருந்து ஒன்று பிரிந்து வேறு வேறு உயிரினங் களாக உருவாகி இருக்கலாம் என்ற கருத்தை கொண்டிருந்தார். அல்பிரேட் வாலஸ் தென் கிழக்கு ஆசிய நாடுகளான இந்தோனேசிய, மலேயா போன்ற இடங் களுக்கு 8 வருடங்களுக்கு மேல் பய ணித்து அங்கு வாழ்ந்த சிறு உயிரினங் களின் மாதிரிகளையும் சேகரித்து இங்கி-லாந்துக்கு அனுப்பியும் இருந்தார். இவர் தனது பரிணாம கோட்ப்பாடுகள் தொடர் பான அனுமானங்களுக்கு பிரேசிலில் உள்ள அமசோன் நதிக்கரையோரம் வாழ்ந்த குரங்குகளின் (Marquee Monkey) வாழ்வு முறையினை அவதானித்ததன் மூலம் டார்-வினின் கருத்துக்களுடன் ஒத்த ஒரே முடி வுக்கு வந்தார்.

கொலாபிக்கஸ் தீவுகளுக்கு போய்வந்து 25 வருடங்களின் பின்னர், அவரது 50 ஆவது வயதில், உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி தொடர்பான 'உயிரினங்களின் தோற்றமும் அவற்றை தேர்ந்தெடுக்கும் இயற்கையின் சூழலும்'. என்ற புத்தகத்தை 1859ஆம் ஆண்டு பிரசுரித்தார். இந்த புத்தகத்தின் முழு பெயர் Origin of Species by Means of Natural Selection or the Preservation of Favoured Races in the Struggle for Life. இந்த புத்தகத்தின் வர வின் விளைவால் உருவான வாத பிரதி வாதங்களின் அதிரொலிகள், இன்றுவரை மனித சமூகத்தில் அதிர்ந்து கொண்டே இருக்கிறது. டார்வினின் 'Origins' புத்தகம், உயிரினங்கள் ஒன்றில் இருந்து ஒன்று பிரிந்து எவ்வாறு வேறு வேறு உயிரி னங்களாக உருவாகி இருக்கலாம் என் பதனை சான்றுகளுடன் விபரிகின்றது. அது மட்டுமல்லாமல், மானிடரின் தோற்றம் பற்றி புதிய கோட்பாட்டை முன்மொழிகின்றது. இது காலம் காலமாக மனிதர்களால் அவர்களின் தோற்றம் பற்றி நம்பி வந்த கற்பிதங்களுக்கு சவாலாக அமைகின்றது.

டார்வின் தனது பரிணாம வளர்ச்சி தொடர் பான கோட்ப்பாடுகளை விபரிப்பதற்கு மிக எளிமையான சில அனுமானங்களை எடுத்து கொள்கின்றார்.

முதலாவது; உயிரினங்கள் யாவும் தமது இயல்புகளை (traits) தமது தலைமுறை களுக்கு கடத்துகின்றன.

அடுத்து; உயிரினங்கள் யாவும் ஒன்றில் இருந்து ஒன்று வேறுபடுகின்றன.

இறுதியாக; இந்த வேறுபட்ட உயிரினங் களில் எவை, அவை வாழும் சூழலுக்கு ஏற்ப இயல்பை (உதாரணமாக: உடல மைப்பு) கொண்டுள்ளனவோ அவை தமது சந்ததியினை பெருக்குகின்றன.

இந்த அனுமானங்களின் அடிப்படையில் டார்வினின் பரிணாம கோட்பாட்டினை விளங்குவதற்கு கொலாபிக்கஸ் தீவுக ளையே உதாரணத்துக்கு எடுத்து கொள் வோம். இங்கு ஒரு தீவில் வாழ்ந்த ஆமை யின் கழுத்து நீண்டதாகவும் மற்ற தீவில் வாழ்ந்த ஆமையின் கழுத்து கட்டையாக வும் இருந்தது என்று முன்னர் பார்த்தோம். ஆரம்பத்தில் இரண்டு தீவுகளிலும் ஒரே மாதிரியான ஆமைகள் குடியேறி இருக் கும். குடியேறிய இந்த ஆமையின் வாரிசு களில் ஒன்றின் கழுத்து மற்ற ஆமைகளின் கழுத்தை விட மிக சிறிது நீளமாக இருப் பின் இலைகளையே உணவாக உண்ணும் இந்த ஆமைக்கு, செடிகள் உயரமான தீவில் - உணவு மற்ற ஆமைகளை விட அதிகமாக கிடைக்கும். இதனால் இந்த ஆமை தப்பி பிழைப்பதும் இனப்பெருக்கம் செய்து சந்ததியை பெருக்குவதற்குமான சந்தர்ப்பம் அதிகம். இனி இதன் சந்த தியில் வரும் ஆமைகளில் எந்த ஆமைக்கு கழுத்து கொஞ்சம் கூட வளர்ந்து இருக் குமோ அந்த ஆமையின் சந்ததி பெருக் கின்றது. இப்படி பல ஆயிரக்கணக்கான சந்ததிகளுக்கு பின்னர் செடிகள் உயரமான தீவு கழுத்து நீண்ட ஆமைகள் மட்டும் வாழும் வதிவிடமாக மாறியிருக்கும். நீண்ட தலைமுறைகளுக்கு கழுத்து நீண்ட ஆமை கள் வேறு ஒரு இன ஆமைகளாக மாறி விடும். தற்போது உள்ள கழுத்து நீண்ட ஆமையை பார்க்கும் எமக்கு ஒரு காலத் தில் இந்த ஆமை கழுத்து மிக கட்டை யான கழுத்து ஆமையிலிருந்து பரிணாமம் அடைந்திருக்கும் என்பது நம்பமுடியாமல் இருக்கும். இங்கு ஆமையின் கழுத்தின் நீட்சியை தீர்மானிப்பது இந்த தீவுகளில் உள்ள உயர்ந்த செடிகள் - அவை இருக் கும் சூழல்.

இனி கொலாபிக்கஸ் தீவுகளில் உள்ள வேறு வகைப்பட்ட பறவைகளை எடுத்து கொள்வோம், இங்கு வாழும் பல பறவை களின் உடல் ஒரே மாதிரியும் அலகுகள் வேறுபட்டும் காணப்படுகின்றன. இங்கும் கூட அடிப்படையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஒரே மாதிரியான பறவைகள் வேறு வேறு தீவுகளில் குடியேறி இருக்கின்றன குறிப்பிட்ட ஒரு தீவில் வாழும் பறவையின் உணவு, கடினமான மேல் கோதினால் ஆன தானியங்கள் அல்லது விதைகள் ஆக இருக்கின்றன. இந்த தீவில் குடியே றிய பறவையின் வாரிசுகளில் எதற்கு, அதன் அலகு மற்ற எல்லா வாரிசுகளின் அலகுகளை விட உறுதியானதாக இருக் கின்றதோ அந்த பறவைகளுக்கு உணவு மற்ற பறவைகளை விட அதிகம், ஏனெனில் உறுதியான அலகினால் மேல் கோதினை அகற்றுவது இலகுவாக இருக்கும். இத னால் இவை அவற்றின் சந்ததியினை அதி கரிக்கின்றன. அடுத்த சந்ததியில் வரும் பறவைகளிலும் எந்தப் பறவைக்கு உறுதி யான அலகு இருக்கின்றதோ அதன் சந் ததி பெருகுவதற்கான சந்தர்ப்பம் அதிக ரிக்கின்றது. இப்படியாக பல சந்ததியின் பின்னர் இந்த தீவில் வாழும் பறவைகளின் அலகுகள் உறுதிமிக்கதாக மாறிவிடும். முதன் முதலில் இந்த தீவுக்கு வந்த பறவையின் தோற்றத்தை விட இதன் தோற்றம் முற்றாக மாறியிருக்கும். இதே போல இன்னுமொரு தீவில் குடிபெயர்ந்த பறவை சிறு புழுக்களை உணவாக உண் ணுமாயின், அவற்றின் அலகு கூர்மையான தாக காலப்போக்கில் மாறிவிடும். இங்கும் பறவைகளின் அலகுகளை தீர்மானிப்பது

தொடர்தல் 83ம் பக்கம்

ஆதியும் அந்தமும்...

82ம் பக்கத் தொடர்ச்சி...

அவை வாழும் சூழல். நீண்டகால மாற்றங்கள் ஒரு குறிப்பிட்ட உயிரினங்களை வேறு ஓர் உயிரினங்களாக மாற்றி விடுகின்றது.

இங்கு இரண்டு விடயங்களை கருத்தில் கொள்வது அவசியம். முதலாவது, உயிரினங்களின் உடலமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் ஒவ்வொரு தலைமுறைகளிலும் மிகச் சிறிதாக நடைபெறுகின்றன. இந்த மாற்றங்களை அவதானிப்பதற்கு நாம் அவற்றின் நீண்ட தலைமுறைகளை அவதானிக்க வேண்டும். இரண்டாவது, உயிரினங்கள் தகுந்த சூழலுக்கு ஏற்பவாறு தமது சந்ததிகள் உருவாகவேண்டும் என்று தாமாக திட்டமிட்டு தமது சந்ததியினை உருவாக்குவதில்லை. அதற்கான வல்லமையும் அவற்றிற்கு இல்லை. இதை ஒரு blind process என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். உதாரணமாக மேல் குறிப்பிட்ட பறவைகளின் உதாரணத்தில் தாய் பறவை பல முட்டைகளை இடுகின்றது. இந்த முட்டைகளில் இருந்து வரும் குஞ்சுகளில் ஏதாவது ஒரு பறவையின் அலகு சிறிது உரமாக இருப்பின் இந்த பறவையின் சந்ததி அதிகரிக்கின்றது. அலகு வலிமையில்லாத பறவை அழிந்து விடுகின்றது. உயிரினங்களின் ஒவ்வொரு தலைமுறைகளிலும் எவை, வாழும் சூழலுக்கு ஏற்ப ஒரு சிறிது மாற்றம் பெற்று உருவாகின்றனவோ, அவை அந்த தலைமுறைகளில் தப்பி பிழைத்து பெருகுவதற்கான சந்தர்ப்பம் மற்றவைகளைவிட அதிகம். சிறிய மாற்றங்கள் தலைமுறை தலைமுறையாக தொடர்கின்றன, சிறு துளி பெருவெள்ளம் என்பது போல கால போக்கில் பல தலைமுறைகளுக்கு தொடர்ந்த மாற்றங்களின் விளைவால், குறிப்பிட்ட ஓர் உயிரினம் அது வாழும் சூழலுக்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டது போல தோன்றும். உண்மையில் இங்கு உயிரினங்களின் உடலமைப்பின் தெரிவு, உயிரினங்களை விட சூழல்தான் முதன்மையானதாக இருக்கிறது. இன்னமொரு வகையில் கூறுவதாயின் சூழல் உயிரினங்களை வடிகட்டி தன் சூழலுக்குகேற்ப தேர்ந்தெடுக்கின்றது.



உயிரினங்களின் தோற்றத்தின் வகைகளை இயற்கையே தேர்ந்தெடுப்பது என்பது மட்டுமல்ல டார்வினின் பரிணாம கோட்பாடு. இந்த உயிரினங்கள் எவ்வாறு ஒன்றில் இருந்து பிரிந்து இனொன்றாக மாற்றமடைந்துந்திருக்கலாம் என்பதனை ஒரு மரத்தின் கிளைகள் ஒன்றில் இருந்து ஒன்று பிரிந்து போவது போல பிரிந்திருக்கின்றன என்பதனை இந்த கோட்ப்பாடு விபரமாக விளக்குக்கின்றது. இங்கு, மனிதரின் தோற்றம் எங்கிருந்து உருவாக்கி இருக்கலாம் என்பதனை டார்வின் இவ்வாறு விபரிக்கின்றார். மனிதர், மனிதக்குரங்குகள் (Apes), ஓராங்குட்டான் (orangutang) குரங்குகள், சிம்பன்சிகள், கொரில்லாக்கள் போன்ற உயிரினங்கள் யாவும் ஒரே குடும்பத்தை சார்ந்தவை. இவையாவும் ஒரே கிளையில் இருந்து பிரிந்து காலப்போக்கில் வேறு வேறு உயிரினங்களாக பரிணாமம் அடைந்து இருக்கின்றன. இது மட்டுமல்லாமல் மனிதர் என்றொரு இனம் முதன் முதலில் ஆப்பிரிக்காவில்தான் உருவாகி இருக்கின்றது.

டார்வினின் இந்த அனுமானம்தான் டார்வினையும் அவரது பரிணாம கோட்பாட்டையும் இன்று வரை மிகுந்த விமர்சங்களுக்கு உள்ளாக்கி வருகின்றது. மனிதர்கள் குரங்கிலிருந்துதான் உருவானார்கள் என்று டார்வின் ஒருபோதும் கூறவில்லை. இருந்தும், டார்வினின் பரிணாம கோட்பாடு இவ்வாறுதான் பொதுவெளியில் சுருக்கமாக பலரால் விளங்கப்பட்டது.

மனிதரும் குரங்குகளும் ஒரே குடும்பத்தில் இருந்து உண்மையிலே உருவாகி இருப்பார்களா? உயிரினங்களில் ஏற்படும் மாற்றங்கள் மிக மெதுவாக நடைபெறுகின்றன என்றால் மனிதருக்கும் மற்ற குரங்கினங்களுக்கும் இடையில் உருமாற்றம் பெற்ற எந்த உயிரினத்தையும் இன்று காணவில்லையே? மனிதர்கள் மொழி பேசுபவர்கள், மிகுந்த சிக்கலான கலாசார வழக்கங்களை உடையவர்கள், வாழும் சூழலை தமக்காக மாற்றி அற்புதமான வாழ்வியலை மேற்கொள்பவர்கள், சிக்கலான ஆயுதங்கள், கருவிகளின் உற்பத்தியாளர்கள். கடல் கடந்து, வானம் கடந்து எங்கும் பயணம் செய்பவர்கள். இவர்களுக்கும் காடுகளில் வாழும் குரங்குகளும் எப்படி ஒரு குடும்பமாக முடியும். இது, மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போல அல்லவா இருக்கின்றது. இப்படி உணர்ச்சி பொங்கும் வாதங்களின் விளைவால் டார்வினின் பரிணாம கோட்ப்பாடு இன்று அறிவியற் தளத்திற்கு அப்பாற்பட்டு மத-அரசியல் தளங்களுக்கு நழுவி விட்டது.

இந்த விவாதங்களுக்கு அறிவியல் என்ன பதில் சொல்கின்றது. சூழல் மட்டும்தான் உயிரினங்களின் சந்ததியின் பரம்பலுக்கு காரணமா? அறிவியலில், கலாசாரத்தில், சமூக உறவுகளில் மிகவும் சிக்கலான பொறிமுறைகளை கொண்டுள்ள மனித உயிரினத்தின் தோற்றத்தையும் வாழ்வையும் டார்வினின் பரிணாம கோட்பாட்டினால் மட்டும் முழுவதுமாக விளங்கி கொள்ளமுடியுமா? பரிணாம வளர்ச்சியின் விளைவுதான் மனிதராயின், எதிர் காலத்தில் மனிதர்கள் இன்னுமோர் உயிரினங்களாக கூர்ப்பு அடைந்து 'Super Human' ஆக பரிணாமிப்பார்களா? அதாவது மனித உயிரினத்தின் அந்தம்தான் என்ன? இந்த கேள்விகளுக்கும் மற்றும் டார்வினின் பரிணாம கோட்ப்பாடுகள் அவர் இறந்து 150 வருடங்கள் கழிந்து இன்று, எவ்வாறு வளர்ந்து இருக்கிறது என்பதை அடுத்த இதழில் ஆராய்வோம்.

(தொடரும்...)

kugan.s@thaiveedu.com

■ ■ ■

AJAX CREMATORIUM
& VISITATION CENTRE

உங்கள் உறவுகளின் இழப்பில்
உங்களுடன் இணைந்து உங்களுடன் ஒருவராக
உங்களுக்காக சேவைபுரிய

Easy Access to all Major Highways
250முதல் 500 பேர் வரை அமரக்கூடிய 5 மண்டபங்கள்
தாராளமான வாகன தரிப்பிடங்கள்
அனுபவம் மிக்க தமிழர்களின் சேவை
இறுதிச்சடங்கு முதல் அந்தியேட்டி வரையான ஒழுங்குகள்
இறுதிச் சடங்கை நேரடியாகப் பார்க்கும் வசதிகள்
இறுதிச்சடங்கு முதல் ஈமைக்கிரியை வரை ஒரே இடத்தில்
இந்து, கிறிஸ்தவ அந்திமச் சடங்குகளுக்கான ஒழுங்குகள்
Funeral Church arrangements with choir

Scarborough, Markham, Stouffville பகுதியில்
உள்ளோருக்கு வசதியாக 10-20 நிமிட தூரத்தில்
Ajax, Pickering, Whitby, Oshawa பகுதியில்
உள்ளோருக்கு வசதியாக சில நிமிட தூரத்தில்

AJAX CREMATORIUM & VISITATION CENTRE
384 Finley Avenue
Ajax, ON

BRAMPTON CREMATORIUM & VISITATION CENTRE INC
30 Bramwin Ct,
Brampton, ON L6T 5G2

Tharma Stanislaus.BCom
Funeral Counselor
416-655-6164

"Saying Goodbye is so hard
Let us make it easy for you "

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் வடபுலச் செய்திகள்

- பால. சிவகடாட்சம் -

சேர, சோழ, பாண்டிய நாடுகளை உள்ளடக்கிய பழந் தமிழகத்துக்கு வடக்கு எல்லையில் வாழ்ந்த மக்களை வடுகர் என்று குறிப்பிட்டனர் சங்கப் புலவர்கள். இந்த வடுகருக்கு வடக்கே இமயமலைப் பக்கம் வாழ்ந்தோரை ஆரியர் என்றனர். ஆரியரும் வடுகரும் தமிழரும் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ள உதவிய மொழி எது என்ற கேள்வி எழுகின்றது. சங்க காலத்தை அடுத்துவந்த காலப்பகுதியில் சமஸ்கிருதமொழியானது சாஸ்திரங்கள் பயிலுமொழியாகவும் பயிற்றுமொழியாகவும் நெடுங்காலமாகப் பயன்பட்டுவந்துள்ளது என்பதை சாசனங்கள் மூலமாகவும் இலக்கியங்கள் வாயிலாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது. சாதாரண குடிமக்களால் பேசப்படாத ஒரு மொழியாக இருந்தபோதிலும் சமஸ்கிருதம் பெரும்பாலும் ஒரு தொடர்பாடல் கருவியாகப் பயன்பட்டு வந்துள்ளது. அவ்வாறாயின் சங்காலத்திலும் சமஸ்கிருத மொழியானது ஒரு தொடர்பு மொழியாகப் பயன்பட்டிருத்தல் கூடுமோ என்னும் சந்தேகம் எழுகின்றது.

சங்கஇலக்கியம் என்று இன்று அறியப்படும் பாடல்கள் பல ஆக்கப்பெற்ற காலப் பகுதியில் தமிழ் மக்களுள் ஒருசிலராவது சமஸ்கிருத மொழியை நன்கு அறிந்திருத்தல் கூடும் என்பதற்கு சங்க இலக்கியங்களிலேயே சான்றுகள் காணப்படுகின்றன.

ஆரிய அரசனுக்குத் தமிழறிவித்த கபிலரும், அதியமான் என்னும் சிற்றரசனிடம் ஆயுளை நீடிக்கச் செய்யும் நெல்லிக்கனி பெற்ற ஔவையும், மாமூலனாரும், பரணரும் சமஸ்கிருதம் பற்றி அறியாதவர்கள் என்று கூறிக்கொள்ளமுடியாது. சங்ககாலத் தமிழர் மகாபாரதம் பற்றியோ இராமாயணம் பற்றியோ அறிந்திருக்கவில்லை என்று சொல்லமுடியாது. சங்ககாலத்து மன்னரும் மக்களும் தமது சமகாலத்து வடபுலத்து மன்னர்களான நந்தர்கள், மௌரியர் பற்றி எதுவுமே அறியாதிருந்தர்கள் என்றும் கூறமுடியாதுள்ளது.

கிறித்துவுக்கு முந்தைய ஐந்தாம், நான்காம் நூற்றாண்டுகளில் பாடலிபுரத்தைத் தலைநகராகக்கொண்டு வட இந்தியாவை ஆட்சிசெய்தவர்கள் நந்தர்கள். நந்த வம்சத்தவரின் முதலாவது மன்னனாக அறியப்படும் மகாபத்மநந்தன் (450-362 BCE) என்பவன் சூத்திரர்களுள் ஒருபிரிவினரான நாவிதர்களின் குடியில் பிறந்தவன். இவன் தனது திறமையினால் சத்திரியர்களிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றி அரசனாக முடிசூடிக்கொண்டான் என்பது வரலாறு.

நந்தர்களின் படைபலமும் பணபலமும் உலகம் அறிந்தவை. கிரேக்க மன்னன் மகா அலெக்ஸாண்டரின் வரலாற்றை எழுதிவைத்த ரோம வரலாற்றாசிரியர் குயின்ரஸ் கேட்டியஸ் ரூபஸ் (Quintus Curtius Rufus) என்பார் இந்திய நந்தர்களின் போர்ப்படையில் இரண்டு இலட்சம் போர்வீரர்களும் இருபதினாயிரம் குதிரைப்படையினரும் இருந்ததாக எழுதிவைத்துள்ளார். நான்கு குதிரைகள் பூட்டிய இரண்டாயிரம் தேர்களும் மூவாயிரம் யானைகளும் இவர்களிடம் இருந்ததாகவும் பதிவுகள் உள்ளன.

நந்தர்களின் படைபலத்தையறிந்த அலெக்ஸாண்டரின் படைகள் இந்தியாவுக்குள் நுழையும் எண்ணத்தை கைவிட்டுத் திரும்பியதாகக் கூறப்படுகின்றது. நந்தவம்சத்தின் கடைசி மன்னனாகிய தனநந்தன் (321 BCE) என்பான் மிதமிஞ்சிய தனது செல்வத்தைக் கங்கையாற்றில் புதைத்து வைத்ததாகப் பௌத்தரினதும் சமணரினதும் வரலாற்றுப்பதிவுகள் தெரிவிக்கின்றன. கங்கையாற்றுப்படுகையில் இருந்த பாறைகளைக் குடைந்து அமைத்த சுரங்கங்களில் தான் சேகரித்த பொற்காசுகளைப் புதைத்துவைக்கும் பழக்கத்துக்கு இவன் அடிமையாக இருந்தான் என்று இலங்கையின் பௌத்த வரலாற்று நூலான மகாவம்சம் கூறுகின்றது. கதா சரித சாகரம் (கி.பி. 11ஆம் நூற்றாண்டு) என்னும் நூல் தனநந்தன் ஒன்பது கோடியே தொண்ணூறு லட்சம் பொற்காசுகளை வைத்திருந்தான் என்று கூறுகின்றது.

சங்ககாலத் தமிழ்மக்கள் தமது சமகாலத்து நந்தர்கள் பற்றியும் அவர்களது பொன் மிகுந்த பாடலிபுரம் பற்றியும் நன்கு அறிந்து வைத்திருந்தார்கள் என்பதை மாமூலனார் போன்ற புலவர்களின் பாடல் கள்மூலம் உறுதிப்படுத்தமுடிகின்றது.

பொருள் சம்பாதிப்பதற்காகக் குடும்பத் தலைவன் வடபுலம் செல்வதையும் அவன் ஊர்திரும்பும் நாளை எதிர்பார்த்துக் குடும்பத்தலைவி ஏங்குவதையும் கருப்பொருளாகக் கொண்டு ஏராளமான பாடல்கள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.

வடபுலம் சென்ற கணவன் வெகுநாளாகியும் வீடு திரும்பவில்லை. வருவோர் போவோரிடமெல்லாம் எனது காதலரை எங்கேயாவது கண்டீர்களா என்று அவனது மனைவி ஏக்கத்துடன் கேட்டுகொண்டிருக்கின்றாள். அவளுக்கு ஆறுதல் தரும் நினைப்பில் ஒவ்வொருவரும் ஏதேதோ கூறிவைக்கின்றனர். அவள் நம்பிக்கை யிழக்கும் நேரத்தில் யாரோ ஒருவர் அவளது கணவன் இருப்பிடத்தைத் தாம் அறிந்துள்ளதாகக் கூறுகின்றார். ஏடுத்த எடுப்பில் **அவர் கூறுவதை அவள் நம்பத் தயாராய் இல்லை. அவளது அனுபவம் அப்படி.**

'அவர் வருவதை நீ கண்டாயா அல்லது ஆரும் கண்டவர் சொல்லக் கேட்டாயா? உண்மையை அறிய விரும்புகின்றேன். பரிகாசம் செய்யாமல் சொல்.

வெண்ணிறத் தந்தங்களையுடைய யானைகள் குளிக்கும் சோணை நதி தவழும் பொன் நிறைந்த பாடலிபுரத்தையே பெறுவாய். என் காதலர் வரவை யார் சொல்லக் கேட்டாய்?' என்கிறாள் அவள்.

நீ கண்டனையோ கண்டார்க்
கேட்டனையோ
ஒன்று தெளிய நசையினம் மொழிமோ
வெண்கோட்டு யானை சோணை படியும்
பொன் மலி பாடலி பெறீஇயர்
யார் வாய்க் கேட்டனை காதலர் வரவே
- படுமரத்து மோசிகீரனார் (குறுந்தொகை 75)

செல்வம் நிறைந்த பாடலிபுரத்தை மட்டுமல்லாது அதற்குச் சமீபமாக ஓடிய கங்கை நதியின் கிளைநதிகளுள் ஒன்றான சோணை நதி பற்றியும் குறிப்பிடும் படுமரத்து மோசிகீரனாரின் இப்பாடல் சங்க காலத்தமிழரின் புவியியல் அறிவையும் புலப்படுத்துகின்றது. மாபெரும் யானைப் படையை வைத்திருந்த நந்தர்களின் யானைகள் சோணையாற்றில் குளிக்கும் காட்சியை இப்பாடல் எமது மனக்கண் முன் கொண்டுவருகின்றது.

மாமூலனாரின் பாடல் ஒன்று கங்கையாற்றுப் படுகையில் நந்தர்கள் புதைத்து வைத்த பெருஞ்செல்வம் பற்றிப் பேசுகின்றது. தன்னைப் பிரிந்து சென்று தலைவன் சம்பாதிக்கப்போகும் நிதியமானது பாடலிபுரத்தில் கங்கையாற்றுப் படுகையில் நந்தர்கள் ஒளித்து வைத்திருக்கும் செல்வத்திலும் அதிகமாயிருக்குமோ என்று ஏளனமாகக் கேட்கின்றாள் இப்பெண்.

பல் புகழ் நிறைந்த வெல் போர் நந்தர்
சீர் மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர் முதல் கரந்த நிதியம் கொல்லோ
- மாமூலனார் (அகநானூறு 265)

வடக்கே திரவியம் தேடச் சென்ற கணவன் இன்னமும் திரும்பவில்லையே என்று ஏங்கும் தலைவியிடம் 'நந்தனின் புதையல் கிடைக்கும் என்றால் கூட உன் தலைவன் உன் துன்பம்பற்றிக் கேள்விப்பட்டால் அங்கு தங்கமாட்டான்' என்று அவளுக்கு ஆறுதல் கூறுகின்றாள் அவளது தோழி.

நாம் படர் கூரும் அருந்துயர் கேட்பின்
நந்தன் வெறுக்கை எய்தினும் மற்று
அவண்
தங்கலர் வாழி தோழி
- மாமூலனார் (அகநானூறு 251)

பாடலிபுரத்தில் பெரும் செல்வச்செழிப்புடன் ஆட்சிபுரிந்துவந்த நந்த அரசவம்சத்தின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து மௌரியர்களின் ஆட்சியை நிறுவியவன் சந்திரகுப்தமௌரியன். மாமூலனார் நந்தர்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகளை அறிந்து வைத்திருந்ததோடு, நந்தர்களின் அரச பரம்பரையை ஒழித்துக்கட்டி வட இந்தியாவில் ஒரு பேரரசை நிறுவிய மௌரியர் பற்றியும் அறிந்திருந்தார்.

மௌரியர்கள் தமது சாம்ராச்சியத்துள் தென்னிந்தியாவையும் உள்ளடக்கப் பெரிதும் முயன்றனர். சந்திரகுப்த மௌரியன் தமிழகத்தைக் கைப்பற்றை விரும்பிய போதும் அவனால் அது முடியவில்லை.

மௌரியர்களுக்குச் சார்பாக நின்ற கோசர்களுக்கு அடிபணிய மறுத்த மோகூர் மீது படையெடுத்து வந்த மௌரியப் படையினரின் தேர்ச் சில்லுகள் ஓடுவதற்காக வெட்டப்பட்ட மலைப்பாதைகள் பற்றிக்கூறும் மாமூலனாரின் அகநானூற்றுப் பாடலில் நந்தனின் செல்வம் பற்றிய செய்தியும் இடம்பெற்றுள்ளது.

... ... மோகூர்
பணியாமையின் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனை தேர் நேமி உருளிய குறைத்த
இலங்கு வெள் அருவிய அறைவாய்
உம்பர்
- மாமூலனார் (அகநானூறு 251)

நந்தர்களின் வீழ்ச்சியும் மௌரியர்களின் எழுச்சியும் மாமூலனார் காலத்தில் நிகழ்ந்தது என்பதற்கு அவர் மௌரியர்களை 'வம்பமோரியர்' அதாவது புதிய மோரியர் என்று குறிப்பிடுவதன் மூலம் ஊகிக்க முடிகின்றது.

மௌரியர்கள் தென்னிந்தியாவைக் கைப்பற்ற எடுத்த முயற்சிகள் பற்றிய குறிப்புக்களை மாமூலனார் உள்ளிட்ட சங்கப்புலவர்களின் பாடல்களில் காணமுடிகின்றது.

தமது பெருந்தேர்கள் ஓடுவதற்கு வழி சமைக்க மலைகளை உடைத்துப் பாதைகளை அமைத்த மௌரியர் பற்றியும் அவர்களது முயற்சிகளை முறியடித்த தென்னிந்திய வீரர்கள் பற்றியும் சங்ககாலக் கவிதைகள் அறியத்தருகின்றன.

விண்பொரு நெடுங்குடை இயல்தேர்
மோரியர்
பொன்புனை திகிரி திரிதர குறைத்த
அறை இறந்து அகன்றனர்
- உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார் (அகநானூறு 69)

விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர்
மோரியர்
திண் கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக இடை கழி அறைவாய்
நிலைஇய
- கள்ளில் ஆத்திரையனார் (புறநானூறு 175)

தெலுங்கர்கள் முன்செல்ல மௌரியர் தென்திசை நோக்கித் தமிழகத்தின் வட எல்லையை நெருங்குவதற்கு மலைகளை வெட்டிப் பாதை அமைத்தது பற்றிக் கூறும் மாமூலனாரின் பாடல் ஒன்று அகநானூற்றில் இடம்பெற்றுள்ளது.

முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென் திசை மாதிரம் மன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனி இருங்குன்றத்து
எண் கதிர்த் திகிரி உருளிய குறைத்த
அறை இறந்து அவரோ சென்றனர்
- மாமூலனார் (அகநானூறு 281)

முள்ளூர் என்னுமிடத்தில் ஆரியப்படையை முறியடித்த மலையன் பற்றிய பாடல் நற்றிணையில் காணப்படுகின்றது.

ஆரியர் துவன்றிய பேர் இசை முள்ளூர்

தொடர்தல் 86ம் பக்கம்

சங்க இலக்கியங்...

85ம் பக்கத் தொடர்ச்சி...

பலர் உடன் கழித்த ஒள் வாள்
மலையனது
- (நற்றிணை 170)

ஆரியர் வாழும் இமயம் முதற்கொண்டு தென் குமரி வரையிலான பரந்த நிலப் பரப்பை உள்ளடக்கிய பரத கண்டத்தின் பல்வேறு பகுதிகளை ஆண்டு வந்த மன்னர்களையெல்லாம் அடக்கிவைத்தவன் என்று இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் போற்றுகின்றார் குமட்டூர்க் கண்ணனார் என்னும் சங்கத்தமிழ்ப்புலவர்.

ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னம் குமரியொடு ஆயிடை
மன்மீக் குருநர் மறம் தபக் கடந்தே
- (பதிற்றுப்பத்து 11)

இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட கூற்று என்று கொண்டாலும் கூட, அக்காலப்பகுதியில் இந்தியத் துணைக்கண்டத்தில் அமைந் திருந்த பல்வேறு நாடுகள் பற்றியும் அவற்றை ஆண்டுவந்தோர் பற்றியும் சங் கத்தமிழர் அறிந்து வைத்திருந்தனர் என் பதும் உறுதியாகின்றது.

பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தோருக் கிடையில் அவ்வப்போது போர்கள் இடம் பெற்றிருக்க வாய்ப்புண்டு. அதேசமயம் இவர்களுக்கு இடையே வர்த்தகமும் பெரு மளவில் நடைபெற்றுள்ளது என்பதற்கும் சங்க இலக்கியங்களில் சான்றுகள் கிடைக் கின்றன. வணிகம் திருப்திகரமாக நடப் பதற்கு ஒருவர் தொடர்பு மொழியை மற் றவர் புரிந்துகொள்வது அவசியம். வேறு மொழி பேசுவோர் (மொழிபெயர் தேயத் தினர்) ஆயினும் அங்கும் சென்று பொருள் தேடவேண்டிய அவசியம் ஒவ்வொரு நாட்ட வர்க்கும் இருந்தது.

தன்னைப் பிரிந்து சென்ற தலைவனைத் தேடி வேறு மொழி பேசும் ஒரு தேசமாயி



நான்கு குதிரைகள் பூட்டிய தேர்களின் சிற்பம்

னும் அங்கு செல்லத் துணிந்த ஒரு பெண் பற்றிய மாமூலனாரின் பாடல் குறுந்தாகை யில் இடம்பெற்றுள்ளது.

வடுகர் முனையது பல்வேற் கட்டி
நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே
- (குறுந்தொகை 11:5-8)

வேங்கடத்துக்கு அப்பால் வேறுமொழி பேசு வோர் வாழ்வது பற்றி மாமூலனாரின் அக நானூற்றுப்பாடல் கூறுகின்றது.

பனிபடு சோலை வேங்கடத் தும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும் நல்குவர்
- (அகநானூறு 211:7-8)

இந்தப் பின்னணியில் சங்ககாலப்பகுதி யில் இந்தியத் துணைக்கண்டத்தில் படித் தவர்களினதும் பண்டமாற்றுக்காரரினதும் தொடர்பாடல் மொழிகளாக வடக்கே பிராகிருதமும் சமஸ்கிருதமும் தெற்கே தமிழும் இருந்திருக்க வாய்ப்புண்டு. தமிழகத்தில் சமஸ்கிருதம் அறிமுகமாவ தற்கும் இராமாயண, மகாபாரதக் கதை கள் பரவலாக அறியப்படுவதற்கும், வட நாட்டு மன்னர் தொடர்பான செய்திகள் பரவுவதற்கும் வணிகர்களினதும் சமயவாதி களினதும் பங்களிப்பு பெருமளவில் இருந் துள்ளது என்பதை ஊகிக்கமுடிகின்றது.

Sivakadadcham@thaiveedu.com

தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும்

- நா. சுப்பிரமணியன் -

1920கள் முதல் 50-60கள் வரையான தமிழ் ஆய்வியல் வரலாற்றிலே 'தமிழ் இலக்கிய - இலக்கணக்கல்வியின் இயங்குநிலைகள்' பற்றிநோக்கி வருகிறோம். அக்காலக் கல்வி மரபின் முக்கிய -அடிப்படையான - அம்சமாக, 'காலவுணர்வு' என்பது அமைந்திருந்தது என்பதை கடந்த கட்டுரையில் நோக்கினோம். மேற்படி காலவுணர்வுசார் பார்வையின் ஒரு வகைமை சார்ந்தவை என்ற வகையிலே - குறிப்பாக, ஒரு கால கட்டம் அல்லது குறித்த ஒரு பொருண்மை சார் பார்வைகள் என்றவகையிலே - அக்காலகட்டத்தின் முக்கிய ஆய்வாளர் ஐவரின் Ph. D ஆய்வேடுகள் முன்னைய கட்டுரையில் கவனத்துக்கு இட்டுவரப்பட்டன.

அவற்றுள் மூவரின் ஆய்வேடுகள் (டாக்டர். பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி அவர்களின் 'History of Gramatical Theories in Tamil and their relation to grammatical literature in Sanskrit' 1930, டாக்டர் க. கணபதிப் பிள்ளை அவர்களின் 'A Study of the Language of the Tamil Inscriptions of the 7th

தமிழியல் ஆய்வுகள்: 06

and 8th Centuries A. D'. (1935), டாக்டர் அ. சிதம்பரநாதச்செட்டியார் அவர்களின் 'Advanced Studies in Tamil Prosody' (1943) ஆகியன) பற்றிய முக்கிய குறிப்புகள் அக் கட்டுரையில் பதிவாயின.

அவ்வரிசையிலே அடுத்த இருவரான டாக்டர் மு. வரதராசன் அவர்களின் 'The Treat ment of Nature in Sangam Literature '1948, டாக்டர் க. கைலாசபதி அவர்களின் Tamil Heroic Poetry 1966 ஆகியன) பற்றிய குறிப் புகள் இங்கு முன்வைக்கப்படவுள்ளன. அவற்றையடுத்து காலவுணர்வுசார் பார் வையின் இன்னொருவகை அணுகுமுறை கள் சார்ந்தவையான இலக்கிய வரலாறு, இலக்கண வரலாறு ஆகியன சார் இயங்கு நிலைகள் இங்கு கவனத்துக்கு இட்டுவரப் படவுள்ளன.

மு. வரதராசன், க. கைலாசபதி ஆகியோரின் Ph. D ஆய்வேடுகள் பற்றிய சுருக்க குறிப்புகள்:

மேற்சுட்டிய இருவரும் கடந்த நூற்றாண் டின் தமிழிலக்கியவுலகிலும் கல்வியுலகி லும் பரவலான அறிமுகம் பெற்றிருந்தவர் கள் என்பது பொதுவாக அறியப்பட்ட செய்தியேயாகும். 1950-60களில் தமிழின் முக்கிய நாவலாசிரியர்களில் ஒருவராக வாசகர்களின் கவனத்தைப் பெற்றிருந் தவரான டாக்டர் மு. வ. அவர்கள் சென் னைப் பச்சையப்பன் கல்லூரி மற்றும் சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியவற் றில் தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்ந்தவரா வார். பின்னர் அவர் 1971-74 காலப்பகுதி யில் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத் தில் துணைவேந்தராகவும் பதவி வகித்த வராவார். ஈழத்தவரான டாக்டர் க. கைலா சபதியவர்கள் தமிழுலகில் நன்கறியப் பட்டிருந்த திறனாய்வாளராவார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப் பாண வளாகத்தின் தலைவராகவும் தமிழ்த் துறைப் பேராசிரியராகவும் பணியாற்றி யவராவார் என்பதும் பொதுவாக அறியப் பட்ட செய்திகளேயாகும்.

இவ்வாறு தமிழுலகில் பரவலான கவனத் தைப் பெற்றிருந்த இரு கல்வியாளர்களும் தமது Ph. D பட்ட ஆய்வுகளுக்கான மூலா தாரங்களாகக் குறித்த ஒரு காலகட்டத் தமிழிலக்கியப் பரப்பையே - அதாவது சங்க இலக்கியப் பரப்பையே தேர்ந்து கொண்டி ருந்தனர் என்பது ஒரு குறிப்பிடத்தக்க ஒற்றுமையம்சமாகும். ஆயினும் அவ்விலக் கியப்பரப்பை அணுகிய முறைகளில் மேற் படி இருவரின் ஆய்வு நோக்குகளில் தெளி வான வேறுபாடு உளது என்பதையும் இங்கு நாம் சுட்டுவது அவசியமாகும்.

முதலாவதான மு.வ. அவர்களின் 'The Treatment of Nature in Sangam Literature' என்ற ஆய்வேடானது அவ்விலக்கியப் பரப்பை இயற்கைச் சூழலுடன் தொடர் புறுத்தி அவற்றுக்கிடையிலான உறவுநிலை யை இனங்கண்டு காட்டும் அணுகுமுறை யிலமைந்ததாகும். மற்றது, அவ்விலக்கியப் பரப்பின் உருவாகக்கத்துக்கான சமுதாய வரலாற்றுச்சூழலை அடையாளங்காணும் முயற்சியாகும். மு.வ அவர்களின் ஆக்கம் தமிழகத்தில் சென்னைப் பல்கலைக்கழகத் தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதற்குப்பதி னெட்டு ஆண்டுகளின் பின்னர் கைலா-சபதியவர்களால் சமர்ப்பிக்கப்பட்டதான Tamil Heroic Poetry என்ற தலைப்பிலான ஆய்வேடானது ஐக்கியராச்சியத்தின் பர்-

> **"பி.எஸ் சுப்பிரமணிய சாஸ்திரியார், க. கணபதிப்பிள்ளை மற்றும் அ. சிதம்பரநாதச் செட்டியார் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டிருந்த Ph.D பட்ட ஆய்வுகள் முறையே இலக்கணக் கொள்கை, சாசன மொழிநிலை, இலக்கண வகைமை ஆகியன சார்ந்தவையாகவே அமைந்திருந்தன. அவ்வகையில் தமிழிலக்கியம் சார்ந்ததும் சங்க இலக்கியப்பரப்பை மையப்படுத்தியமைந்ததுமான முதலாவது Ph.D பட்ட ஆய்வாகத் திகழ்வது மு.வ. அவர்களுடைய ஆய்வேடேயாகும்."**

மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் சமர்ப் பிக்கப்பட்டதாகும். இவ்வாய்வேடுகள் பின் னர் நூல்களாகவும் வெளிவந்தன.

மு.வ. அவர்களின் ஆய்வேட்டைப் பொறுத் தவரையில் இங்கு முக்கியமாகச் சுட்டப் பட வேண்டிய மற்றறொரு அம்சம் தமிழி லக்கியம் சார்ந்த முதலாவது Ph.D ஆய்வு முயற்சி அது என்பதாகும். அதற்கு முன் னர் பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியார், க. கணபதிப்பிள்ளை மற்றும் அ. சிதம்பர-நாதச்செட்டியார் ஆகியோரால் மேற்கொள் ளப்பட்டிருந்த Ph.D பட்ட ஆய்வுகள் முறை யே இலக்கணக்கொள்கை, சாசன மொழி நிலை, இலக்கண வகைமை ஆகியன சார்ந்தவையாகவே அமைந்திருந்தன என் பதை முன்னரே - முன்னைய கட்டுரையில் - நோக்கியுள்ளோம். அவ்வகையில் தமிழி லக்கியம் சார்ந்ததும் சங்க இலக்கியப் பரப்பை மையப்படுத்தியமைந்ததுமான முதலாவது Ph. D ஆய்வாகத் திகழ்வது மு.வ. அவர்களுடைய மேற்படி ஆய்வேடே யாகும்.

சங்க இலக்கியம் பற்றிய ஆய்வுகளில் ஏற்கெனவே மறைமலையடிகள் (சுவாமி வேதாசலம் 1878-1950), பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை முதலியோர் ஆழமா கக் கவனம் செலுத்தி வந்துள்ளனர் என் பதையும் இங்கு சுட்டுவது இட்டு வரு வது வரலாற்று நோக்கில் அவசியமாகிறது. மறைமலையடிகளாரின் முல்லைப் பாட் டாராய்ச்சியுரை (1903), பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை (1906) ஆகியனவும் வையா புரிப்பிள்ளையவர்களின் சங்க இலக்கியப் பதிப்புமுயற்சிகள் சார் எழுத்துகள் மற்றும் அவற்றின் காலநிலை தொடர்பான ஆய்வு கள் ஆதியனவும் இவ்வகையில் முக்கிய நிலவிவரும் கோட்பாட்டம்சமொன்றைச் சார்ந்து தேர்ந்து கொள்ளப்பட்டதாகும். அவ்வம்சம் 'திணைமரபு' எனப்படும். இது இலக்கிய ஆக்கத்துக்கும் அது எழும் இயற்கைச் சூழலுக்குமுள்ள இயைபு பற் றிப் பேசுவதாகும். குறித்த நிலத்தில் குறித்த பொழுதின் உணர்வம்சங்களே இலக்கிய ஆக்கமொன்றின் உள்ளடக்க நிலைகளை யும் கட்டமைப்புக் கூறுகளையும் தீர்மா னிக்கின்றன என்பதே இம்மரபின் அடிநா தமான கருத்துநிலையாகும். தொல்காப் பியப் பொருளதிகாரம் முதலான பண் டைய இலக்கண நூற்பரப்பிலும் அவற் றின் உரைகளிலும் பேசப்பட்டுவந்த இக் கோட்பாட்டம்சத்தை மையப்படுத்தியே சங் கப்பாடல்களைக் கற்பிக்கும் மரபு தமிழ கச்சூழலில் காலம்காலமாக நிலவிவந்து ளது. இவ்வாறான இலக்கியக் கல்வி மர பை ஆய்வுநிலையில் விளக்கியுரைக்கும் ஒரு செயற்பாடாகவே மு.வ. அவர்களின் மேற்படி ஆய்வு முயற்சி அமைந்தது.

கைலாசபதியவர்களுடைய ஆய்வேட்டின் உள்ளடக்க அம்சமானது முற்றிலும் வேறு பட்ட தளத்தில் அமைந்ததாகும். சங்கப் பாடல்களின் உருவாக்கப் பின்புலத்தைச் சமுதாய வரலாற்று நிலையில் அடையா ளங்காணும் முயற்சியிலே அவர் அனைத் துலக நிலைசார் இலக்கிய ஒப்பீட்டு முயற்சியை மேற்கொண்டவராவார். அவ் வகையில் குறிப்பாக கிரேக்கமொழி சார்ந்த பண்டைய இலக்கியங்கள் பற்றிய ஆய்வு களை முன்மாதிரிகளாகக் கொண்டு தனது ஆய்வணுகுமுறையை அமைத்துக்கொண்ட வர். இவ்வாறான ஒப்பியல் நோக்கிலான ஆய்வினூடாக அவர் சங்க இலக்கியக் காலத்தை ஒரு 'வீரயுகம்' (Heroic Age) என அடையாளங்கண்டார். அவ்வகையில் சங் கப்பாடல்களை அவர் வீரயுகக் கவிதை கள் (Heroic Poetries) எனவும் அவை வாய் மொழிப்பாடல்களாக உருவானவை எனவும் அவர் ஆய்வுநிலையில் விளக்கியுரைத் துள்ளார்.

இவ்வாறான அவரது ஆய்வுச்செயற்பா டானது மார்க்ஸியம் என்ற தத்துவம்சார் சமூக வரலாற்றுப்பார்வையின் தளத்தில் மேற்கொள்ளப்பட்டதாகும். சமுதாய வரலா றுகளை வர்க்கப் போராட்டங்களின் வர லாறாகத் தரிசிக்கும் அத்தத்துவப்பார்வை தமிழக - ஈழ இலக்கியச் சூழல்களில் 1930-கள் முதல் 50 கள்வரையான காலப்பகுதி யில் படியத் தொடங்கிவிட்டது. இதனைத் தொடர்ந்து அது தமிழ் ஆய்வியலிலும் ஆழமாகக் காலூன்றத் தொடங்கிவிட்டது. இதன் விளைபொருளான முதலாவதான உயர்நிலை ஆய்வாகவே டாக்டர் க. கை-லாசபதியவர்களின் மேற்சுட்டிய Tamil Heroic Poetry என்ற ஆய்வேடு திகழ்கின்றது.

இந்த ஆய்வேடு உருவான காலகட்டத்தை அடுத்து அதாவது 1960களிலிருந்து தமிழ் ஆய்வியல் இன்னொரு புதிய கட்டத்தில் அடி பதிக்கிறது. அதனை 1960களுக்குப் பின்னரான இயங்குநிலை என்ற அடுத்த கட்டத்தில் விரிவாக நோக்கவுள்ளோம். எனவே மேற்படி ஆய்வேடுகள் பற்றிய சுருக்க விளக்கங்கள் இங்கு இத்துடன் நிறைவடைகின்றன. அடுத்து 1950-60கள் வரையான காலவுணர்வுசார் பார்வையின் இன்னொருவகை அணுகுமுறை சார்ந்தவை யான இலக்கியவரலாறு, இலக்கண வர லாறு ஆகியன சார் இயங்குநிலைகள் இங்கு கவனத்துக்கு இட்டுவரப்படவுள்ளன.

1950-60கள் வரையான காலப்பகுதியின் இலக்கிய வரலாறு மற்றும் இலக்கண வரலாறு ஆகியனசார் இயங்குநிலைகள்:

தமிழின் இலக்கிய வரலாறு, இலக்கண வர லாறு ஆகிய வகைகளிலான ஆய்வுமுயற்சி கள் ஆங்கிலத்திலுள்ள History of Literature, History of Grammar ஆகிய வகை களிலமைந்த ஆய்வுப் பார்வைகளை அடி யொற்றியே உருவானவையாகும். இவ்வ கைப் பார்வைகளின் அடிப்படையாக திகழ் வது, 'அவ்வவ் வகைசார் ஆக்கங்களைக் காலவரிசைப்படுத்தி நோக்கிப் புரிந்து கொள்ள விழையும் ஆய்வியல் ஆர்வமே' என்பது வெளிப்படை.

இவ்வாறான ஆர்வநிலைசார் அணுகுமுறை கள் பொதுவாக இருவகைப்படுவன. ஒரு வகையின ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுந்த இலக்கிய, இலக்கண நூலாக்கங் கள் பற்றியும் அவற்றை எழுதிய ஆசிரி யர்களைப் பற்றியுமான தகவல்களை வரலாற்று முறையில் வரிசைப்படுத்திப் பதிவுசெய்யும் முயற்சிகளாக மட்டும் அமைவனவாகும். இத்தகையவை பொது வாக 'வரலாற்று முறையிலான தகவல் தொகுப்புகள்' என்ற அளவிலான கணிப் பையே பெறுவன. இன்னொருவகை அணு குமுறைகள் 'குறித்த ஒவ்வொரு ஆக்கமும் தான் எழுந்த காலத்தின் சமூக-பண்பாட்டு நிலைகளுடன் கொண்டிருக்கக்கூடிய உறவு நிலைகளை நுனித்து நோக்கி இனங்கண்டு விளக்கியுரைக்கும் முயற்சிகளாக' அமை வன. இவ்வாறான செயற்பாடுகள், குறித்த அம்மொழிசார் சிந்தனைச் செல்நெறிகள் மற்றும் வாழ்வியல் இயங்குநிலைகள் ஆகி யவற்றின் வரலாற்றுத் தொடர்ச்சியை அடை யாளங்காணத் துணைபுரிவனவுங்கூட. அவ் வகையில் இந்த இரண்டாவது வகை அணுகுமுறைசார் முயற்சிகளே இலக்கிய வரலாறு, இலக்கண வரலாறு ஆகிய

தொடர்தல் 88ம் பக்கம்

தமிழியல் ஆய்வுகள்...

87ம் பக்கத் தொடர்ச்சி...

வகையிலான சிறப்புக் கணிப்புகளுக்கு உரிமை பெறுகின்றன. இவ்வாறான தெளிவுடன் முதலில் 1960கள் வரையான காலப் பகுதியின் தமிழின் இலக்கிய வரலாற்று முயற்சிகள் பற்றி நோக்குவோம்.

1960கள் வரையான காலப்பகுதியின் தமிழின் இலக்கிய வரலாறு தொடர்பான ஆய்வு முயற்சிகள் பற்றிப் பேசமுற்படும் பொழுது இங்கு முதற் கவனத்துக்குரிய ஒரு செய்தியைப் பதிவுசெய்வது அவசியமாகிறது. 'தமிழியல் ஆய்வுகளில் ஈடுபட்ட பலருடைய கவனத்தைக் கவர்ந்திருந்த ஆய்வுத்துறை, இது' என்பதே அச்செய்தியாகும். குறிப்பாக, மொழி வரலாறு, சமூக வரலாறு, பண்பாட்டு வரலாறு, தத்துவ வரலாறு முதலியவற்றில் ஈடுபாடு காட்டி நின்ற பலரும் தத்தம் கோணங்களில் தமிழின் இலக்கியங்களின் உருவாக்க நிலைகள், வரலாற்றுச் செல்நெறிகள் ஆகியன தொடர்பான கருத்தாக்கங்களை விரிவாகவும் சுருக்கமாகவும் முன்வைத்து வந்துள்ளனர். அதே வேளை 'இலக்கிய வரலாறு' என்பது உயர்கல்விக்கான பாடநெறியாக இருந்து வந்தமையால் அப்பாடநெறி சார்ந்து தமிழ் இலக்கிய வரலாறு என்ற பெயரிலும் பல ஆய்வுநிலையில் பல நூல்கள் எழுதப்பட்டு வந்துள்ளன. இவ்வாறான நூல்களை மையப்படுத்திய சில அவதானிப்புகளையே இங்கு பதிவுசெய்ய முற்படுகிறேன்.

இவ்வகையில் முதலில் நமது கவனத்துக்கு வரும் செய்தி தமிழின் இலக்கியவரலாறு என்ற எண்ணக்கருவானது 1850களிலேயே உருவாகத் தொடங்கிவிட்டது என்பதாகும். இவ்வாறான தொடக்கநிலைச் சான்றுகளாக எமக்குக் கிடைப்பன கையில் கால்டுவெல் (Bishop Robert Caldwel -1814-1891) அவர்கள் 1856ஆம் ஆண்டில் வெளியிட்ட தமது A Comperetive Grammer of Dravidian Languages என்ற ஆய்வு நூலும் சைமன் காசிச்செட்டி (Simon CasieChetty-1807-1860) என்பார் 1859இல் வெளியிட்ட Tamil Plutarchஎன்ற நூலுமாகும்.

கால்டுவெல் அவர்களின் மேற்படி நூலின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி முன்னரே இத்தொடரின் இரண்டாவது கட்டுரையில் நோக்கியுள்ளோம். எனவே அவ்விவரங்கள் இங்கு தவிர்க்கப்படுகின்றன. அந்நூல் தொடர்பாக இங்கு நமது கவனத்துக்குரிய விடயம் அதன் Antiquity of Dravidien Literature என்ற அத்தியாயத்தில் தமிழ் இலக்கியத்தின் வரலாறு என்ற வகையில் பதிவான சில குறிப்புகளேயாகும். குறிப்பாகத் தமிழிலக்கியங்களை கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டனவாகக் காட்டுவனவாகவே அவருடைய பதிவுகள் அமைந்திருந்தன. தமிழின் பக்திக் கவிஞர்களுள் ஒருவரான திருஞானசம்பந்தரை அவர் 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவராக அதில் பதிவிட்டிருந்தார்.

இவர் இவ்வாறான கருத்துகளை முன்வைத்திருந்த காலப்பகுதியில் தமிழின் பண்டைய இலக்கியங்கள் பல அச்சேறியிருக்கவில்லை என்பதும் பழந்தமிழிலக்கிய இலக்கணங்களை அச்சு நிலையில் வெளிக்கொணர்ந்தவர்களான சி.வை. தாமோதரம்பிள்ளை மற்றும் உ.வே. சாமிநாதையர் முதலியோரின் பதிப்புச் செயற்பாடுகள் மேற்படி கால்டுவெல் அவர்களின் நூலாக்கத்துக்குப் பிற்பட்டனவே என்பதும் இங்கு நமது கவனத்துக்குரிய செய்திகளாகும். எனவே கால்டுவெல் அவர்களுடைய மேற்படி கருத்தாக்கம் குறைபாடுகளுடையது என்பது வெளிப்படை.

கால்டுவெல் அவர்களின் மேற்படி இக் கருத்துகள் தமிழறிஞர்களிடம் தமிழிலக்கியங்களின் காலக்கணிப்புகளை சரியான முறையில் - ஆய்வுபூர்வமாக - மேற் கொள்ள வேண்டும் என்பதான உந்துதலை ஏற்படுத்தின என்பது தமிழியலாய்வு வரலாற்றில் தெளிவாகவே தெரிகிறது. பின்னாளில் பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை யவர்கள் (1855-1897) எழுதியனவாக நாம் முன்னரே 2ஆம் கட்டுரையில் நோக்கிய 'திருஞானசம்பந்தர் காலவாராய்ச்சி', 'Some Milestones in the History of Tamil Literature' ஆகிய தலைப்புகளிலான கட்டுரைகள் மேற்படி உந்துதல்களின் வெளிப்பாடுகளாகவே கொள்ளப்பட வேண்டியனவாகும். (இத்தொடர்பில் மேலதிக விளக்கங்களுக்குப் பார்க்க: கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழில் இலக்கியவரலாறு - வரலாறெழுதியல் ஆய்வு - N.C.B.H. வெளியீடு - 2007. பக். 96-98.)

சைமன் காசிச்செட்டியவர்களின் Tamil Plutarch - வாழ்க்கைச் சரித வகையிலான அணுகுமுறை:

1859இல் வெளிவந்த Tamil Plutarch என்ற ஆங்கில ஆக்கத்தைத் தந்த சைமன் காசிச்செட்டி என்பார் ஈழத்தவர். அக்கால இலங்கை அரசில் உயர் பதவிகள் பல வற்றை வகித்த கல்வியாளரான இவர் தமிழ், ஆங்கிலம், சிங்களம், சம்ஸ்கிருதம், லத்தீன், கிரேக்கம் முதலிய பலமொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தவராகவும் திகழ்ந்தவர். தமிழ்மீது பெரும் பற்றுக்கொண்டிருந்த இவர் அதன் பண்டைப் பெருமைகளை உலகறிய எடுத்துரைப்பதில் ஆர்வங் கொண்டிருந்தார். அவ்வார்வத்தின் வழி உருவான மேற்படி ஆக்கமானது 202 தமிழ்ப் புலவர்கள் தொடர்பான தகவல்களின் தொகுப்பாக அமைந்ததாகும். (திரு. சைமன் காசிச்செட்டி அவர்களைப் பற்றிய மேலதிக தகவல்களைப் பெறவிழைவோர் அவரைப் பற்றிப் பேராசிரியர் கலாநிதி பொ. பூலோகசிங்கம் (1940-1219) அவர்களால் 1970இல் எழுதி வெளியிடப் பெற்றதான தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞர்களின் பெருமுயற்சிகள் என்ற நூலிலுள்ள, 'சைமன் காசிச்செட்டி அவர்கள் தந்த தமிழ்ப் புலவர் சரிதம்' என்ற கட்டுரையையும் கலாநிதி பால. சிவகடாட்சமவர்கள் தாய்வீடு ஜூலை 2020 இதழில் எழுதியுள்ள' சைமன் காசி செட்டியின் தமிழ்ப் புலவர் வாழ்க்கைப் பதிவு' என்ற கட்டுரையையும் பார்க்கவும். இங்கு மேற்படி Tamil Plutarch நூலின் பெயர்க் காரணம் மற்றும் இலக்கிய வரலாற்றுத் தகைமை என்பன தொடர்பான சில குறிப்புகளே பதிவாகவுள்ளன.)

மேற்படி நூலின் தலைப்பிலமைந்த Plutarch என்பது கிரேக்கத்திலே கி. பி. 46-120 காலப்பகுதியில் வாழ்ந்த அறிஞர் ஒருவருடைய பெயராகும். வாழ்க்கை வரலாறுகளைத் தொகுப்பதில் ஆர்வங் கொண்டிருந்த இவ்வறிஞர் பண்டைய உரோமப் பேரரசின் முக்கிய வரலாற்று நாயகர்களின் சுவைமிகு செய்திகளை மையப்படுத்தி Lives (வாழ்க்கைகள்) என்ற தலைப்பிலான நூலை எழுதியுள்ளார். இந்நூலிலமைந்த வாழ்க்கைக் குறிப்புகளே பின்னாளில் ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்கள் பல வற்றுக்கான கதைமூலங்களாக அமைந்தன. அவ்வகையில் மேலைநாட்டு இலக்கியவாதிகள் பலர் Plutarch மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். ஆங்கிலக் கவிஞர்களின் வரலாற்றை எழுதிய முன்னோடிகளுள் ஒருவரான ஜோன் டிரைடன் (John Dryden -1631-1700) அவர்கள் 1683 இல் தாம் எழுதிவெளியிட்ட அவ்வகை வாழ்க்கை வரலாற்று நூலுக்கு Plutarch' s Lives என்றே பெயரிட்டுள்ளார் என்பது இத் தொடர்பில் இங்கு நமது கவனத்துக்குரிய முக்கிய செய்தியாகும். சைமன் காசிச்செட்டி அவர்களும் டிரைடனைப் போலவே Plutarch மீது பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதை தமது இந்நூலாக்கத்துக்கு அவர் சூட்டிய Tamil Plutarch என்ற தலைப்பு தெளிவாகவே உணர்த்தி நிற்கிறது.

காசிசெட்டியவர்களின் இவ்வாக்கம் தமிழின் இலக்கிய வரலாற்றை எழுத வேண்டும் என்ற ஆய்வியல் ஆர்வத்தின் வழி உருவான ஒரு நூலாக்கமன்று என்பது வெளிப்படை. அவர் இந்நூலைத் தொகுத்த காலத்தில் அத்தகு வரலாற்றாய்வு நோக்கு தமிழகத்திலோ அல்லது ஈழத்திலோ உருவாகியிருக்கவில்லை என்பதையும் இங்கு கவனத்திற் கொள்ள வேண்டும். தம்மால் தேடித்திரட்டப்பட்ட புலவர்களின் வாழ்க்கை வரலாறு தொடர்பான செய்திகளையும் அவர்களின் ஆக்கங்கள் பற்றிய குறிப்புகளையும் அவ்வாங்கங்களின் சில பாடற் பகுதிகளையும் தொகுத்துப் பதிவு செய்வதன்மூலம் தமிழின் சிறப்பை உலகுக்கு உணர்த்தவேண்டும் என்ற ஆர்வமே அவரை வழிநடத்தியது என்பதை உய்த்துணர முடியும்.

அவ்வகையில் உள்ளடக்க நிலையில் இது ஒரு வாழ்க்கைச் சரிதங்களின் தொகுப்பு தான். தமிழ்ப் புலவர்கள் பலரைப் பற்றிய செவிவழி வந்தனவாகிய கதைமரபுகளும் திருவள்ளுவமாலையில் இடம்பெற்ற புலவர்களின் பெயர்களும் கபிலரகவல் முதலான ஆக்கங்களுமே இவருடைய இந்நூலுக்கான ஆதாரங்களாக அமைந்திருந்தன. அவர் இந்நூலை உருவாக்கிய கால கட்டத்தில் சி. வை. தாமோதரம்பிள்ளை மற்றும் உ.வே. சாமிநாதையர் முதலியோரால் பழந்தமிழ்நூல்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதையும் இங்கு நாம் தொடர்புபடுத்தி நோக்கவேண்டும்.

மேற்படி நூலாக்கம் பற்றிய விமர்சனங்களை நாம் வைத்தாலும் அதற்குரிய வரலாற்று முக்கியத்துவத்தை நாம் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. தமிழில் இலக்கிய வரலாறு எழுதுவதற்கான மனப்பான்மைக்கு முன்னோடியாக இந்நூலாக்கமே திகழ்கிறது என்பதை இங்கு பதிவுசெய்வது அவசியம்.

இத்தொடர்பிலே, 'இலக்கிய வரலாறு என்ற வகைசார் ஆக்கமுயற்சிகள்' தொடர்பான பொது அவதானிப்பொன்றையும் இங்கு பதிவுசெய்வது அவசியமாகும். 'இலக்கிய வரலாறுகள் மேலைநாடுகளில் தொடக்கத்திலே வாழ்க்கை வரலாறுகள் என்ற வகையிலேயே உருவானவை' என்பதே ஆங்கில இலக்கிய வரலாறு தரும் செய்தியாகும். மேலே நாம் நோக்கிய ஜோன்டிரைடன் அவர்களது Plutarch' s Lives என்ற நூலும் பின்னர் டாக்டர் சாமுவேல் ஜோன்சன் (Dr. Samuel Johnson கி. பி. 1709-1784) எழுதியLives of the Poets என்ற நூலும் கவிஞர்களின் வாழ்க்கை வரலாறுகளாகவே அமைந்தவையாகும். மேற்சுட்டியவாறான தொடக்கமுயற்சிகளை அடுத்து தோமஸ் வார்ட்டன் (ThomasWarton- 1728-1790) என்பார் நான்கு பகுதிகளாக எழுதி வெளியிட்ட The History of English Poetry (1774-81) என்ற நூலாக்கமே இலக்கிய வரலாறு என்ற கண்ணோட்டத்துடன ஆங்கிலத்தில் எழுதப்பட்ட முதல் நூலாகும். (இத்தொடர்பில் மேலதிக விளக்கங்களுக்குப் பார்க்க: Rene Wellaek (1903-1995) என்பாரின் The Rise of English Literary History1941என்ற நூல்.) இவ்வாறு நோக்கும்போது சைமன் காசிச்செட்டியவர்களின் தமிழ்ப் புலவர்களின் சரிதமாக அமைந்த Tamil Plutarch நூலை தமிழிலக்கிய வரலாற்றுக்கான ஒரு முன்னோடிச் செயற்பாடாகக் கொள்வது பொருத்தமானதேயாகும்.

இவ்வாறு வாழ்க்கைச் சரிதங்களை முன்வைத்து இலக்கிய வரலாற்றைக் காணும் முயற்சி பின்னர் பலராலும் தொடரப்பட்டது. ஈழத்திலே திரு. அ. சதாசிவம்பிள்ளை (J. R. Arnold -1820-1895) அவர்கள் சைமன் காசி செட்டியவர்களின் நூலிலிடம்பெற்ற புலவர் பட்டியலை மேலும் விரிவுபடுத்தி, பாவலர் சரித்திர தீபகம் என்ற தலைப்பிலான நூலொன்றை 1886 இல் வெளியிட்டார். அவருக்குப்பின் திரு அ. குமாரசாமிப்புலவர் (1854-1922) அவர்கள் தமிழ்ப் புலவர் சரித்திரம் என்ற நூலை 1916 இல் வெளியிட்டார். தமிழகத்தில் 1860இல் வெளிவந்த வீராசாமிச் செட்டியாரின் வினோதரசமஞ்சரி என்ற நூலும் முரகதாசசுவாமிகள் எனப்படும் தண்டபாணி சுவாமிகள் (1840-1899) எழுதியதாக 1908 இல்வெளிவந்த புலவர் புராணம் என்ற நூலும் மேற்குறித்தவாறு வாழ்க்கைச் சரிதங்களைக் கூறும் ஆக்கங்களேயாம்.

இலக்கியவரலாறு என்ற உணர்வுடனான செயன்முறைகள்:

மேற்கூறியவாறு புலவர் சரிதங்களாக வெளிவந்து கொண்டிருந்த வரலாற்றுச் செல்நெறியிலே இலக்கிய வரலாறு என்ற உணர்வுடனான எழுத்தாக்க முயற்சிகள் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே தொடங்குகின்றன. இவ்வகையில் திட்டப்பாங்காக ஆய்வு மேற்கொள்ள முற்பட்டவர்கள் என்ற பெருமை தமிழகத்தவர்களான வி. எஸ். செங்கல்வராயபிள்ளை (1883-1972) மற்றும் எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை (1866-1947) ஆகியோரையே சாரும். செங்கல்வராய பிள்ளையவர்கள் தமிழ்ப் பக்தியிலக்கியத் துறையில் ஆழமான ஆய்வுகள் பலவற்றை மேற்கொண்டவர். 'தணிகைமணி' என்ற சிறப்பு விருதைப் பெற்றவருங்கூட. இவர் 1904இல் எழுதிவெளியிட்ட History of the Tamil Prose Literature என்ற நூலும் பூரணலிங்கம்பிள்ளையவர்கள் அதே ஆண்டில் எழுதியதாக அறியப்படும் APrimer of Tamil Literature என்ற நூலுமே இலக்கிய வரலாறு என்ற உணர்வுடன் மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சிகளாகும்.

இவற்றுள் செங்கல்வராயபிள்ளையவர்களின் ஆக்கமானது இவரது முதலாவது எழுத்தாக்கமான தொடக்கத்தில் முதுகலை (M.A. பட்டத்துக்கான ஆய்வேடாக எழுதப்பட்டுப் பின்னர் நூலுருப் பெற்றதாகும். தமிழின் உரைநடை வரலாற்றை மட்டும் சுருக்கமாக எடுத்துரைப்பதாக அமைந்த இவ்வாக்கம், 'உரை' பற்றிய தொல்காப்பியக் குறிப்புகள் முதல் ஆறுமுகநாவலர், சபாபதி நாவலர், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, பரிதிமாற்கலைஞர் ஆகியோரின் உரைநடையாக்கங்கள் வரையான வற்றைப் பற்றிய தொகுநிலை மதிப்பீடாக அமைந்ததாகும். உரைநடை வரலாறு என்பது இலக்கிய வரலாற்றின் ஒரு பகுதி என்பது வெளிப்படை. அவ்வகையிலேயே இது இங்கு இலக்கியவரலாற்றுப் பார்வை சார்ந்த முதல் முயற்சி எனக் கொள்ளப்படுகின்றது. பூரணலிங்கம்பிள்ளையவர்களின் A Primer of Tamil Literature என்ற ஆக்கமானது மாணவர்களின் பரீட்சைத் தேவைகளை மனங்கொண்டு எழுதப்பட்ட ஆக்கமாகும் என பேராசிரியர் கா. சிவத்தம்பிய வர்கள் குறிப்பிடுகிறார். (மு. கு. நூல் ப. 92.)பூரணலிங்கம்பிள்ளையவர்கள் இவ்வாக்கத்தை விரிவுபடுத்தி TamilLiterature என்ற தலைப்பிலான நூலாக பின்னர் 1929இல் வெளியிட்டார்.

இவ்வாறான வரலாற்றுப் போக்கிலே தமிழ் இலக்கிய வரலாறு என்ற தலைப்பிலான நூல்களை எழுதும் முயற்சிகள் 1930களிலிருந்து தொடங்குகின்றன. சென்னைப் பல்கலைக்கழகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மற்றும் இலங்கைப்பல்கலைக் கழகம் ஆகியவற்றில் இலக்கிய வரலாறானது ஒரு கற்கைநெறியாக இடம்பெறத் தொடங்கிய காலப்பகுதி, இது என்பது இங்கு நினைவிற் கொள்ளவேண்டிய செய்தியாகும். மேற்படி பல்கலைக்கழகங்களிற் பணியாற்றிய பேராசிரியர்கள் பலரும் தமிழ் இலக்கியவரலாற்றைக் காலவரன்முறைப்படி கற்பிக்கமுற்பட்டனர். அவ்வாறான கற்பித்தல் அனுபவங்களுடன் இலக்கிய வரலாற்று நூல்களையும் அவர்கள் ஆய்வு நிலையில் விரிவாக எழுத முற்பட்டனர். இவர்களுட் பலர் - குறிப்பாக, பேராசிரியர்கள் கா. சுப்பிரமணியபிள்ளை (1888-1945), எஸ் வையாபுரிப்பிள்ளை (1891-1956), தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் (1901-1980) தமிழகத்தோரும் ஆகியோரும் ஈழத்தவர்களான பேராசிரியர்கள் வி. செல்வநாயகம் (1907-1973), ஆ. வேலுப்பிள்ளை (1935-2015) ஆகியோரும் - தமிழிலக்கியக் காலப் பகுதி முழுவதையும் கவனத்துள்கொண்டு தமது ஆய்வுப் பார்வைகளை பதிவு செய்தவர்களாவர். இவ்வாறான முயற்சிகள் சிலவற்றின் தகைமைகள் பற்றி அடுத்த கட்டுரையிலே விரிவாக நோக்கலாம்.

(தொடரும்)

subramanian.n@thaiveedu.com

Mega Financial Group
WE ARE PROVIDING A LIFETIME
FAMILY PROTECTION
SAVE BIG
ON COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET
OUR PRODUCTS AND SERVICES
Life Insurance products
Critical Illness Insurance
Disability Insurance
Dental & Drug Insurance
Travel Insurance
Non-Medical Insurance
Mortgage Insurance
RRSP's Investments
RESP-Education Saving Plan
Final Expense Products
(Through Funeral Homes)
INDUSTRIAL ALLIANCE
Canada Life
Sun Life Financial
UL Mutual
OBF
LaCapitale
Assomption Life
RBC Insurance
Empire Life
Desjardins
Manulife Financial
www.megafinancial.ca
RAJ NADARAJAH
President & CEO
Dir: 416-666-1120
raj@megafinancial.ca
Office: 416-293 5559 • Fax: 416-293 9409
PH28 -4168 Finch Ave. E., Scarborough, ON., M1S 5H6

இனத் தேசிய அரசியலின் நாலாவது கட்டம்

- ந. இரவீந்திரன் -

இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் நிறை வடைந்து புதிய அரசாங்கம் பதவி-யேற்ற பின்னரான நடவடிக்கைகள் ராஜ பக்ச குடும்ப ஆட்சி குறித்து எழுப்பப்பட்ட பல வேறு சந்தேகங்களையும் உறுதிப்படுத்து வன போன்ற தோற்றப்பாட்டையே ஏற் படுத்தி நிற்கின்றன. குறிப்பாக, தமிழர் பிரச்சினையே இன்றைய உலகின் அதி முக்கியத்துவம்மிக்க சர்வதேசப் பிரச்சினை என்றவாறாக கருதும் தமிழ் மனங்களுக்கு இருண்ட காலம் ஒன்றுக்குள் புகுந்துவிட்ட தான நெருக்கடி உணர்வு. பூமியை மைய மாக்கி பிரபஞ்சம் அனைத்தும் சுழல்வதான மத்திய கால எண்ணம் போல எமது இருப்பு!

உலக வரலாற்று முன்னெடுப்புக்குள் இன்று இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் மாற்றமும் அதனிடையே இலங்கைத் தமிழ் தேசிய இனமும் ஏனைய ஒடுக்கப்படும் தேசிய இனங்களும் எதிர் நோக்கும் பிரச் சினைகளும் அக்கறைக்கு உரியன. எழுந்த மானமான தன்னாட்சிகளைக் கடந்து இன் றைய உலக மக்கள் எதிர்நோக்கும் நெருக் கடிகளின் பகுதியாக எமக்கானவற்றைக் கருதி விடுதலை மார்க்கத்தினை வகுத்தாக வேண்டிய தேவை எம்முன்னால் உள்ளது.

மூன்றாம் உலக யுத்தம் ஒன்று ஏற்பட்டு விடுமா என்ற சந்தேகம் வலுப்பட்டு நிற்கிற இன்றைய சூழலில், இலங்கையின் வகிபா கம் எத்தகையதாக உள்ளது? இதனுள்ளே எமது இனத் தேசிய அரசியல் பெற்றுள்ள முக்கியத்துவம் எவ்வகைப்பட்டது? இன்று இனப்பிரச்சினைத் தீர்வின் குறைந்தபட்ச அடையாளமாக உள்ள 13வது திருத்தச் சட்டமே தூக்கிவீசப்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ள சூழலில், இந்தியா அது குறித்து அலட்டிக்கொள்ளாதிருப்பது ஏன்? இந்திய விஸ்தரிப்பு வாதத்துக்கு எதிராக வும் இஸ்லாமியப் பயங்கரவாதத்தை முறியடிப்பதாகவும் கூறியபடி மேலெழும் பௌத்த சிங்களப் பேரினவாத ஒடுக்கு முறைக்கு எதிரான இனத்தேசிய விடுதலை அரசியல் எவ்வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும்? இந்தக் கேள்விகளுக்கான சில தேடல்கள் இங்கு!

நிலைமாறு கட்டத்தின் உறுதிப்பாடு:

ரணில் பிரதமராக இருந்தவரை இந்தியா வினதும் அமெரிக்காவினதும் சொல்லுக்கு மதிப்பளித்துத் தமிழர் பிரச்சினை தீர்க்கப் பட வாய்ப்பு இருப்பதான நம்பிக்கை பல ரிடம் இருந்தது. அமெரிக்காதான் தொடர்ந் தும் உலகின் முதல் நிலை வல்லரசாக நீடிக்கும், அது இரண்டாம் மூன்றாம் நிலை களுக்கு வீழ்ந்துவிடும் என்பதுபோலச் சொல்லப்படுவது இன்று நேற்றல்ல சோ-வியத் யூனியனுடனான பனிப்போர் காலத் திலும் சொல்லப்பட்ட விவகாரமே தான் - வீழ்ந்து சிதறியது சோவியத் யூனியனே அன்றி ஐக்கிய அமெரிக்க வல்லரசல்ல. அந்த அமெரிக்காவின் அனுசரணையுடனே யே தமிழ் தேசியம் தனது விடுதலையை வென்றெடுக்க வேண்டும் எனச் சொல்கிற மதியுரைஞர்கள் உள்ளனர்!

ரணிலுடன் அவரது பரிவாரங்கள் அனை வரும் ஒட்டுமொத்தமாகத் தோற்கடிக்கப் பட்டு சீன சார்பு மஹிந்த ராஜபக்ச பிரத மராக்கப்பட்டுள்ளமை அபாய அறிகுறியா என்ற கேள்வி எழுந்து நிற்கிறது. 'பாது காப்பு விடயங்களில் இந்தியாவுக்கு அனு சரணையாக இருப்போம், வர்த்தகம் உள் ளிட்ட ஏனைய உறவுகளில் பிற நாடகளு டனான தொடர்புகளை வலுப்படுத்துவோம்' எனப் புதிய ஆட்சியாளர்கள் சொல்லு கின்றனர். கொழும்பு துறைமுக நகர் உரு வாக்கப்படுவதற்குக் கூட இந்தியாவின் அனுமதியைப் பெற வேண்டி இருந்தது - வர்த்தகம் உட்பட்ட பல விவகாரங்களில் இந்தியாவின் அனுமதியின்றி இலங்கை செயற்பட இயலாது என்பதற்கான ஒப்பந் தங்களை ஏற்கனவே 2010ம் ஆண்டில் மஹிந்த - மன்மோகன்சிங் கைச்சாத்திட்ட உடன்பாடுகளில் ஏற்றுக்கொண்ட பின்னர் மீறிச்செல்ல அனுமதி உள்ளதா? மிகக் காத்திரமான அறுதிப் பெரும்பான்மை யுடன் வெற்றி பெற்ற இப்புதிய அரசாங் கம் தான் மீறிப் பாய்வதற்கு முற்படுகிறது என்றில்லை. ஏற்கனவே கொங்கிரஸ் கட்சி யுடனான ஒப்பந்தங்கள் தானே அவை யெல்லாம், இனிப் புதிதாக ஆரம்பிப்போம் என்று முதற்தடவை நரேந்திர மோடி பிரத மரானதும் ஓடோடிச் சென்று மஹிந்த ராஜபக்ச சொல்லிப்பார்த்தார், 'அதெல்லாம் சரிவாது செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் ஒவ் வொன்றும் பின்பற்றப்பட வேண்டியனவே' என மோடி சொல்லி அனுப்பி இருந்தார்.

அப்போது நேரடியாக ஒப்பந்த உள்ளடக் கங்களை மாற்றுவதற்கு மோடி அரசு சம்ம

> **இந்தியாவோ, இலங்கையைத் தனது சந்தையாக்கிக் கொண்டதோடு இங்கு தன் விருப்பத்துக்கு ஏற்ற எதனையும் செய்ய இயலும் என்ற வாய்ப்புகளாக ஆகியது. ஆயினும், ஆக்கிரமிப்பாளன் என்ற கொடூர முகத்தை மறைத்துக்கொண்டு தேவகடாட்சத்துடன் நாடகமாட இனக்குரோதப் பூசல்களை வளர்த்து மீண்டும் இரத்தங்குடிக்கும் வெறியில் இந்தியா!**

திக்காத பொழுதிலும் சுதந்திர நாடு என்ற நினைப்புடன் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த, சீன சார்பு நடவடிக்கைகளை அதிகரித்துச் சென்றார். உடன்படிக்கை மீறல்களாக இவற்றை வெளிப்படுத்த இந்தியா முற்படவில்லை. பூரண சுதந்திரம் உடைய நாடு என்ற தோற்ற மயக்கம் தொ டர வேண்டும் என்பதனால் விட்டுப்பிடித்து 2015இல் தேர்தல் களத்தை வாய்ப்பாக் கிக் கொண்டு மஹிந்த அரசை வீழ்த்தினர். இப்போது கேத்தபாய ராஜபக்ச ஜனாதி பதியாகி, அரசியல் சாணக்கியர் மஹிந்த பிரதமராக அரியணை ஏறி, மீண்டும் ஒரு ஆட்டம் தொடங்கி உள்ளார்.

முன்னதாக, இலங்கையைக் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவர முப்பது வருட யுத்தத்தை இலங்கையினுள் நடத்துவதற்கான 'அரசி யல் இயக்கப் பொறிமுறையை' இந்தியா கையாண்டது. தேர்தல் வரை பொறுத் திருந்து மீற முற்பட்ட மஹிந்தவுக்கு 2015 இல் பாடம் புகட்டியது. இப்போதும் இந்தி-யா அவசரப்படப் போவதில்லை. சாம, பேத, தான, தண்டம் எனும் உத்திகள் அனைத்தையும் போதிய நிதானத்துடன் ஒன்றுமாறி ஒன்றாகக் கையாளுகின்ற பொறுமை இந்திய ஆளும் தரப்புக்கு உள் ளது. இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக ஆட்சி செலுத்தும் பிராமணியத்தின் அனு பவ முதிர்ச்சி இது. அதிகார மையத்தைக் கண்டுணர மாட்டாமல் அயலிலுள்ள சாதி களை மோதவிட்டே ஆட்சியைக் கொண்டு நடத்தும் உத்தி இன்று ஏகாதிபத்தியப் பரிணமிப்பில் உள்ள பொழுதும் கைகொ டுத்து உதவுகிறது. இன்றைய இலங்கை அரசு புதிய உத்திகள் ஊடாக மீறல் கொள்கிற போது இன முரண்பாடுகளை மீண்டும் கொழுந்துவிட்டெரிய வைக்க ஏற்ற எரிபற்று நிலை இன்னமும் பேணப்பட்ட வாறுள்ளது.

இந்தியாவின் அகநிலைத் தேவையும் இலங்கையைக் கையாள்வதனை அவசர கதியற்றதாக முன்னெடுக்க நிர்ப்பந்தித்த படி உள்ளது. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் வாயிலாக 1947இல் சுதந் திரம் பெற்ற இந்தியா, அமெரிக்க ஊடுரு வலை அனுமதிக்க மறுத்து சோவியத் யூனியனுடன் நட்புறவைப் பேணி மக்கள் நல அரசுக்கு உரிய பல கட்டுமான நிர் வகிப்புடன் முன்னேறி வந்திருந்தது. அத னூடாக வளர்ந்த இந்தியப் பெரு முத லாளி வர்க்கம் இந்தியாவை ஏகாதிபத்திய நாடாக மாற்றி அமெரிக்காவுடன் கூட்ட மைத்து ஏனைய நாடுகளைக் கபளீகரம் செய்ய வேண்டுமாயின் உள்நாட்டினுள் கட்டமைப்பு மாற்றங்களைச் செய்தாக வேண்டும். இன்றைய இந்துத்துவ ஆட்சி யாளர்கள் படிப்படியாக அத்தகைய மாற் றங்களைச் செய்துவருகின்றனர்.

இந்திய அரசின் 'மென்போக்கு பாசிச' நடைமுறைகளுக்கு எதிராக மக்கள் விடு தலை சக்திகள் வீறார்ந்த போராட்டங் களை முன்னெடுத்தவாறு உள்ளனர். ஆயி னும் பரந்துபட்ட மக்கள் எழுச்சியை இந் துத்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராக முன் னிறுத்த இயலவில்லை. மோடி ஆட்சி மக்களது வாழ்வாதாரங்களை நாசப்படுத்தி வருவதனை அம்பலப்படுத்தித் தேர்தலை முகங்கொண்ட பொழுதிலும் முன்னரைக் காட்டிலும் பெருவெற்றியை மோடி இரண் டாந்தவணையில் பிரதமரான பொழுது பெற்றுக்கொண்டார். இந்துத்துவத்துக்கும் இந்து சமயத்துக்கும் உள்ள வேறுபாட்டி னைப் புரிந்து கொள்ளாமல் முன்னெடுக்கப் படும் பரப்புரை நடவடிக்கைகள் இந்துத் துவ அணி பலம் பெறுவதற்கே வழகோலி வந்திருக்கிறது.

இத்தகைய வாய்ப்பைச் சாதகமாக்கிக் கொண்டு இந்துத்துவ ஆட்சியாளர்கள் மக் கள் விரோத நடவடிக்கைகளை தொடர் கின்றனர். புகையிரத துறை, வங்கிகள் தனியார் துறையிடம் ஒப்படைக்கப்படு வது உட்பட மக்கள் நல அரசுக்குரிய அனைத்து வடிவங்களும் ஒழித்துக்கட்டப் படுவதன் ஒரு வெளிப்பாடு கொரோனா ஊரடங்கின் பொழுது கோடிக்கணக்கான மக்கள் ஆயிரமாயிரம் மைல்களை நடந்தே கடந்து மடியவேண்டி வந்தது. மக்கள் விரோத ஆட்சி முறையைக் கண்டுகொள் ளாதிருக்க சீன - பாகிஸ்தான் எதிரிகளுக்கு எதிரான விழிப்புணர்வுக் கொதி நிலை யைப் பேணும் நடவடிக்கைகளை இந்துத் துவக் கும்பல் கையேற்றபடி உள்ளது.

இந்து சமுத்திர ஆதிக்கத்தை அமெரிக்கா வுடன் கூட்டமைத்து இந்தியா கைவசப் படுத்தி வைத்திருப்பது இந்திய மக்கள் நலனுக்கு அவசியமானது என ஆளும் கும்பல் வலியுறுத்துகிறது. லட்சக் கணக்கில் சாகவிடப்படுகிற மக்களுக்கான நலனா - கொள்ளை நோய் கொடூரத்துக்குள்ளேயும் லாபமீட்டி வளரும் மில்லியனர்களதும் அதிகாரக் கும்பலுக்கானதுமான நலனா? இந்து சமுத்திரப் பிராந்தியத்தினுள் அமெ-ரிக்க மேலாதிக்கத்துக்கு இந்தியா செங் கம்பள வரவேற்பைச் செய்கிற பொழுது அதனை முறியடிக்கும் வகையில் சீனா வும் தனது காய் நகர்த்தல்களை மேற் கொள்ளவே செய்யும். ஏற்கனவே பாகிஸ் தான், பங்களாதேஷ், பர்மா போன்ற நாடு களுடனான உறவைச் சீனா வலுப்படுத்தி வந்துள்ளது. இன்று இலங்கையின் ஆட்சி மாற்றமும் அதற்குச் சாதகமாக மாறியுள் ளது. சீனாவுடனான உறவை இலங்கை வலுப்படுத்த முனையும் பட்சத்தில் தமிழின விடுதலை மீது இந்தியாவின் கரிசனை பன்மடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஏகாதிபத்திய வல்லரசாக நிலைமாறும் மாற்றத்தில் இந்தியாவினுள்ளே உறுதிப் பாட்டைப் பேணும் பொருட்டு, இலங்கை யையும் வேண்டாத ஒரு எதிரியாக உணர் வதற்கு, பௌத்த - சிங்கள மேலாதிக்க கொடூர அரக்கத்தனத்தைக் காட்டி தமிழர் உரிமைத்தீயை முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் களத்தில் சுவாலைவிடச் செய் வது வாய்ப்பாக அமையலாம் அல்லவா?

மாற்று அரசியல் செல்நெறி:

முப்பது வருட யுத்தத்தில் பல்லாயிரம் உயிர்களைப் பறிகொடுத்தோம், உடைமை களையும் உறவுகளையும் சொந்த மண் ணையும் இழந்தோம். கல்வி, வாழ்வாதார அடிப்படைகள் பலவற்றை இழந்தோம். இரண்டாந்தரப் பிரசை என்றிருந்ததையும் பறிகொடுத்து 'மாற்றார் மனப்பாங்கு'க்கு ஆட்படுத்தப்பட்டோம். இத்தனை பெரும் விலையில், கழித்தல் பெறுமானத்துக்கு வந்துவிட்ட நிலையில் எமக்குக் கிடைத் தது வெறும் 13ம் திருத்தச்சட்டம். இந்தியா வோ, இலங்கையைத் தனது சந்தையாக் கிக் கொண்டதோடு இங்கு தன் விருப்பத் துக்கு ஏற்ற எதனையும் செய்ய இயலும் என்ற வாய்ப்புகளாக ஆகியது. ஆயினும், ஆக்கிரமிப்பாளன் என்ற கொடூர முகத்தை மறைத்துக்கொண்டு தேவகடாட்சத்துடன் நாடகமாட இனக்குரோதப் பூசல்களை வளர்த்து மீண்டும் இரத்தங்குடிக்கும் வெறி யில் இந்தியா!

சரி, 'இந்துத்துவ அரக்கனிடம்' காருண் யத்தை வேண்டி நிற்க முடியுமா, எங்களு டைய புத்தி மீண்டும் 'கெடுவார் கதை யாக' முடிய வேண்டுமா? இதன் பொருட் டாக முந்திய எமது தேசிய இன விடு தலை அரசியல் எவ்வகையில் முன்னெடுக் கப்பட்டது என்பதனைச் சுருக்கமாகப் பார்ப் பது அவசியமானதாகும்.

ஐரோப்பியர்களது குடியேற்றவாத நாடாக ஐநூறு வருடங்கள் இலங்கைத் தமிழர் தாயகம் இருந்துள்ளது. முன்னதாக தமிழ் மன்னர் ஆண்டதாக கூறிய பொழுதிலும் கிழக்கு மாகாணம் பெரும்பாலும் கண்டி இராச்சியத்துக்கு கட்டுப்பட்டே தான் இருந் துள்ளது. மன்னர் ஆட்சிக் காலத்தில் தேசிய ஒருமை இல்லாதது காரணமாக வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை நிராகரித்துவிட இயலாது. அதேபோல சிங்கள, முஸ்லிம் மக்களும் இந்த மண்ணுக்கு உரியவர்கள் என்பதும், இலங்கையின் ஏனைய பகுதிகளில் இலங்-கைத் தமிழ் தேசிய இனமக்கள் வாழ் கிறார்கள் என்பதும் கவனத்தில் கொள்ளப் பட வேண்டிய அம்சங்கள் ஆகும். வெற்றா ரவாரமாக 'ஒரு நாடு இரு தேசங்கள்' என்று கறுப்பு - வெள்ளை என்று பிரி கோடு வரையக்கூடியதாக தேசிய இன விவகாரம் இல்லை. சிங்கள, தமிழ், முஸ்-லிம், மலையக தேசிய இனங்களுடன் வேடர், பறங்கியர், மலேயர் போன்ற சிறு பான்மை மக்களை உள்ளடக்கிய அனைத் துத் தரப்பாரது நலன்களையும் கவனத்தி லெடுத்த தீர்வுக்கு வருவது அவசியம்.

தொடர்தல் 91ம் பக்கம்

இனத் தேசிய...

90ம் பக்கத் தொடர்ச்சி...

இந்திய ஆக்கிரமிப்புக்கு எம்மை அறியாது துணைபோன தனிநாட்டுக் கோரிக்கை போல இனியும் உணர்ச்சிவேக அரசியல் அடிமைகள் ஆகாதிருப்பது அவசியம்.

சிங்களப் பேரினவாத அரசுகள் நம்பிக்கை இழக்க வைத்ததனாலேயே தனிநாட்டுக் கோரிக்கையைக் கையிலெடுக்க வைக்கப் பட்டோம் என்ற விவாதம் நிராகரிக்க இய லாதது. அதே வேளை சிங்களத் தலை வர்கள் மட்டுமே குற்றவாளிகள் அல்ல, தமிழ் அரசியல் தலைமைகளும் சம அள வான தவறுகளுடன் இயங்கினர் என்பதும் கவனிப்புக்கு உரியது. தமிழர் உரிமை பற்றிய கோரிக்கைகள் மூன்று கட்டங் களுக்கு உட்பட்டிருந்தன. ஜி.ஜி. பொன்- னம்பலம் முன் வைத்த 'ஐம்பதுக்கு ஐம் பது' கோரிக்கை, தமிழரசுக்கட்சியின் 'சுயாட்சிக் கோரிக்கை', தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'தனிநாட்டுக் கோரிக்கை' யைக் கையேற்ற இளைஞர்களின் ஆயுதப் போராட்ட முன்னெடுப்பு என்பன எண்பதாம் ஆண்டுகள் வரை நீடித்த மூன்று கட்டங் கள் ஆகும்.

பிரித்தானியர் ஆட்சியில் பிரித்தாளும் தந் திரோபாயப்படி பாராளுமன்றமாக மாற்றப் பட்ட சட்ட சபையில் சிங்கள மக்களின் விகிதாசாரத்தைவிடவும் அதிக பிரதிநிதி கள் உள்வாங்கப்பட்டிருந்தனர் பிரதியீ டாக இலங்கை பூராவும் நிர்வாகத்துறை மற்றும் பொதுத்துறைகளில் யாழ்ப்பாணத் தமிழர்கள் மிக அதிகமாக எடுக்கப்பட்டி ருந்தனர். அதற்கு அமைவாக யாழ்குடா நாட்டில் மிக அதிக கல்விக்கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சுதந்திர இலங்கை யில் சனத்தொகை விகிதாசாரப் பிரகாரம் பிரதிநிதிகளைக் கோரியிருக்க வேண்டிய வேளையில் 75 வீதம் சிங்கள மக்கள் இருக்கும் சூழலில் ஐம்பது வீதம் மட்டும் பாராளுமன்றப் பிரதிநிதிகளை அவர்கள் பெறுவதாயும் மீதி 50 வீதம் ஏனையவர் களுக்கும் என்ற பொருத்தமற்ற கோரிக் கையை ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமை யிலான அகில இலங்கை தமிழ் கொங் கிரஸ் கட்சி கோரியிருந்தது.

அதனின்றும் பிரிந்த தமிழரசுக்கட்சி சமஷ் டிக் கோரிக்கையை முன்னிறுத்திய வகை யில் தனது பெயரை 'சமஷ்டிக்கட்சி' என்று வைத்துக் கொள்ளவில்லை. ஆங்கிலத் தில் 'Fedaral Party' (சமஷ்டிக்கட்சி) என வைத்துக்கொண்டு தமிழில் 'தமிழரசுக் கட்சி' என இயங்கிய நேர்மையற்ற அவர் களது நிலைப்பாட்டை சிங்களப் பேரின வாதிகள் பயன்படுத்திக் கொண்டனர் சாதாரண கோரிக்கைகளைக்கூட தமிழரசு ஒன்றை உருவாக்கும் பிரிவினைக்கான முதற்படிகள் எனக்கூறி சமஷ்டி என்பதும் காலவோட்டத்தில் பிரிவினைக்கு முஸ்தீ பாக முன்வைக்கப்படுவதே என்று பிர சாரப்படுத்தினர்.

அந்த இரு கட்சிகளும் மக்களைத் தொ டர்ந்து ஏமாற்றி வந்த சூழலில், இளம் தலைமுறையினர் அவர்களை நிராகரிக் கும் நிலை ஏற்பட ஆரம்பித்த பொழுது 'தமிழர் விடுதலைக்கூட்டணி' என இணைந்து மாறுபட்ட சூரத்தனமாக 'தனித்தமிழீழக் கோரிக்கை'யை முன்வைத்தார்கள். அவர் களைப் பொறுத்தவரை பாராளுமன்றம் செல்வதற்கான ஒரு உத்தி மட்டுமே தமிழீ ழம் - அதற்கென பல்லாயிரம் உயிர்களைத் தியாகம் செய்ய இளைஞர் இயக்கங்கள் கிளர்ந்தெழும் என அவர்கள் தீர்க்கதரி சனம் கொண்டிருக்கவில்லை.

அந்த இரு கட்சிகள் தனித்தனியே மட்டு மன்றி இணைப்பில் வந்த தமிழர் விடுத லைக் கூட்டணியும் ஐக்கிய தேசியக் கட்சி யுடன் இணக்க அரசியலை முன்னெடுத் திருந்தன. இளைஞர் போராட்டம் ஏற் படுத்தியுள்ள 'எதிர்ப்பு அரசியல்' என்ற புதிய போக்கு நடந்து முடிந்த இந்தத் தேர்தலுக்கு முந்திவரை மேலோங்கி இருந்தது. புதிய பாராளுமன்றத்துக்கு வடக்கு - கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட வர்களில் 13 பிரதிநிதிகள் மட்டுமே தமிழ் தேசிய நிலைப்பாட்டுக்கு உரியவர்கள் (இவர்களில் 10 பேர் சிங்கள அரசுடன் இணக்கமான பேச்சுவார்த்தையின் அவசி யத்தை வலியுறுத்திய கூட்டமைப்புக்கு உரியவர்கள்). வடக்கு - கிழக்குக்கு உரிய (தேசியப் பட்டியல் பிரதிநிதிகள் உள் ளிட்ட) மொத்தம் 32 பேரில் தமிழ் தேசி யத்தை முன்னிறுத்தும் 13 பேர் என்பது மக்களிடையே ஏற்பட்டுள்ள மனமாற்றத் தின் வெளிப்பாடென அரசியல் அவதா- னிகள் முன்வைக்கும் கருத்துக் கவனிப்- புக்குரியது!

இனிவரும் நாலாம் கட்டம் எவ்வாறு அமை யவேண்டும் என்பதற்கு இந்தத் தேர்தல் முடிவு தரும் படிப்பினையைக் கவனங் கொள்வது அவசியமாகும். பூரண இணக்க அரசியல், கண்மூடித்தனமான எதிர்ப்பு அரசியல் என்ற இரு போக்குகளும் தீர்வு களை எட்டாத் தூரத்துக்கு துரத்தவல்லன. மக்கள் விடுதலை அரசியல் என்பது 'எதிரி யார்', 'நட்பு சக்திகள் யார்' என்பதனைக் கவனத்தில் எடுப்பதாகும். சிங்களத் தரப் பை எதிரியாகக் கணித்த தமிழினவாத நிலைப்பாடு இந்தியா மேலாதிக்க எதிரி எனக் கண்டுகொள்ள இடமளிக்காது அவர் களால் பயன்படுத்தப்படுகிறவர்களாகி அழி வைப்பெற்றுக்கொள்ளும் நிலை இருந்தது. சிங்கள மக்கள் மத்தியில் ஏகாதிபத்தியம் எனும் எதிரியுடன் இணைவுபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியுடனேயே தமிழர் தலை மைகள் இணக்க அரசியலை முன்னெடுத் திருந்தனர்.

நாலாம் கட்டம் பற்றிய பேச்சு பாராளு மன்றத் தேர்தல் களத்தில் ஒரு அணியிட மிருந்து வெளிப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் 'சுயேட்சைக்குழு -2' எனப் போட்டியிட்ட அணி 'மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன் னணி' எனும் அமைப்புக்கு உரியது. இறுதி யுத்தத்தில் பங்கெடுத்த ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவிலிருந்து தன்னெழுச்சியாக உருவாகிய அமைப்பு அது. இதனுடன் 'புதிய ஜனநாயக மார்க்சிஸ்ட் - லெனி னிஸ்ட் கட்சி' ஐக்கியப்பட்டிருந்தது. இந் தக்கட்சியின் ஒரு தலைமைத் தோழராக இருந்த மறைந்த கே.ஏ. சுப்பிரமணியம் முன்வைத்த நாலாம் கட்டப்போராட்டம் என்ற கருத்துநிலை சுயேட்சைக்குழு - 2 இன் தேர்தல் பிரசாரக்கூட்டங்கள் சிலவற் றில் பேசப்பட்டிருந்தது.

மேலாதிக்க நாட்டம் கொண்ட மேட்டுக் குடிகளின் இனத்தேசிய அரசியல் ஏகாதி பத்திய சக்திகளுக்கு காலூன்ற இடமளிப் பனவாய் அமைந்தன. இலங்கை தேசிய இனப்பிரச்சினைக்கான சரியான தீர்வாக அமையாத ஈழப்போராட்டம் என்பதனை மூன்றாம் கட்டமென வரையறுத்த தோழர் மணியம், முந்தியவை போல இதுவும் தோல்வியுறுவது தவிர்க்கவியலாதது என எண்பதாம் ஆண்டுகளில் கூறிய பொழுது இடது கொம்யூனிஸ் கட்சி இனத்தேசிய விடுதலைக்கான நாலாம் கட்டப்போராட் டத்தைக் கையேற்க வேண்டும் என முன் மொழிந்தார். சாதியத்துக்கு எதிரான போ- ராட்டத்தை நடத்திய அனுபவங்களின் தொடர்ச்சியாக, ஒடுக்கப்பட்ட மக்களும் உழைக்கும் ஏனைய மக்களும் இணைந்து ஏனைய இனங்களின் உழைப்பாளர்களோடு ஐக்கியப்பட்ட போராட்டமாக இனத்தேசிய விடுதலைக்கான நாலாம் கட்டத்தை முன் னெடுப்பது அவசியமானது என்பது அவர் கருத்தாகும். அத்தகைய ஒரு வரலாற்றுச் செல்நெறிக்கான முதல் அடி பதியப்பட் டுள்ளது. தொடருமா - தொடரவேண்டும்!

raveendran.n@thaiveedu.com

An Ontario Secondary Private School Registered Under the Ministry of Education

Delta Academy Inc.

Offers the Following OSSD Credit Courses

Our goal is not the quantity of students but quality of education. We ensure that the students are trained to work independently and be prepared to the next grade level with the help of our highly qualified and experienced teachers.

BSID # 667561

Grade 10	
English	ENG2D
Principle of mathematics	MPM2D
Science	SNC2D
Grade 11	
English	ENG3U
Functions	MCR3U
Biology	SBI3U
Chemistry	SCH3U
Physics	SPH3U
Accounting	BAF3M
Economics	CIA3U
Grade12	
English	ENG4U
Advanced Functions	MHF4U
Calculus and Vectors	MCV4U
Data Management	MDM4U
Biology	SBI4U
Chemistry	SCH4U
Physics	SPH4U
Accounting	BAT4M
Economics	CIA4U

ART COURSES

Grade 10	
Tamil	LITBD1
Vocal	
Violin	
Veena	AMU20
Piano Keyboard	
Dance	ATI201
Miruthangam	AMP2D
Grade 11	
Tamil	LITCU1
Vocal	
Violin	
Veena	AMU3M
Piano Keyboard	
Dance	ATI3M1
Miruthangam	AMP3M
Grade 12	
Tamil	LITDU1
Vocal	
Violin	
Veena	AMU4M
Piano Keyboard	
Dance	ATI4M1
Miruthangam	AMP4M

Classes begins on
February, July, September
Register with us early as the space is limited.
All courses are 110 hours.
Course fee is $500 (Including registration)

KINDERGARTEN TO GRADE 12
TUTORING & HOMEWORK HELP

Special Classes For:

- Functions
- Physics
- Advanced Function
- English
- Chemistry
- Calculus & Vectors

Evening and weekend classes available
Qualified and experienced teachers to help your children to do better

416.751.2011
deltaacademyinc@hotmail.com
1160 Birchmount Road, Unit 1B, Scarborough ON M1P 2B8

காலனித்துவ காலத்து இலங்கை வரலாற்று நூல்களும் கடந்தகாலம் பற்றிய படிமங்களும்

பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இலங்கை வரலாறு பற்றிய நூல்களை ஐரோப்பியர்கள் எழுதினார்கள். இலங்கையில் நிர்வாக அதிகாரிகளாகவும், இராஜதந்திரிகளாகவும் சேவையாற்றிய ஐரோப்பியர்களால் இந்நூல்களில் பெரும்பான்மையானவை எழுதப்பட்டன. றொபர்ட் பேர்சிவல் (1843) பெர்ட்டோலக்கி (1817), யோன்டேவி (1821) ஆகியோர்களின் நூல்களை ஆரம்பகால எழுத்துக்களிற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இவர்களைத் தொடர்ந்து ஐரோப்பியர்களாலும் இலங்கையர்களாலும் இலங்கை பற்றிய வரலாற்று நூல்கள் பல எழுதப்பட்டன. இலங்கையரான சைமன் காசிச்செட்டி 'சிலோன் கசற்றியர்' என்ற நூலை 1834 இல் வெளியிட்டார். யே. போர் பஸ் (J. For- bes) (1840), ஈ. டபிள்யு. நைட்டன் (1845), யே. ரெனனைட் (1859) ஆகியாவர்களும் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையின் வரலாற்றை அறிந்துகொள்ள உதவக் கூடிய நூல்களை எழுதினர். டபிள்யு நைட்டன் எழுதிய நூலின் தலைப்பு 'The History of Ceylon From the Earliest period to the present time' (பண்டைக்காலம் முதல் இற்றை நாள் வரையான இலங்கையின் வரலாறு) ஐரோப்பிய எழுத்தாளர்கள் முறைப்படியான இலங்கை வரலாறை எழுதமுற்பட்டனர் என்பதன் அடையாளமாக இருப்பதைக் காணலாம்.

- க. சண்முகலிங்கம் -

பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இலங்கை வரலாறு பற்றிய நூல்களை ஐரோப்பியர்கள் எழுதினார்கள். இலங்கையில் நிர்வாக அதிகாரிகளாகவும், இராஜதந்திரிகளாகவும் சேவையாற்றிய ஐரோப்பியர்களால் இந்நூல்களில் பெரும்பான்மையானவை எழுதப்பட்டன. றொபர்ட் பேர்சிவல் (1843) பெர்ட்டோலக்கி (1817), யோன்டேவி (1821) ஆகியோர்களின் நூல்களை ஆரம்பகால எழுத்துக்களிற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இவர்களைத் தொடர்ந்து ஐரோப்பியர்களாலும் இலங்கையர்களாலும் இலங்கை பற்றிய வரலாற்று நூல்கள் பல எழுதப்பட்டன. இலங்கையரான சைமன் காசிச்செட்டி 'சிலோன் கசற்றியர்' என்ற நூலை 1834 இல் வெளியிட்டார். யே. போர்பஸ் (J. Forbes) (1840), ஈ. டபிள்யு. நைட்டன் (1845), யே. ரெனனைட் (1859) ஆகிய வர்களும் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையின் வரலாற்றை அறிந்து கொள்ள உதவக்கூடிய நூல்களை எழுதினர். டபிள்யு நைட்டன் எழுதி நூலின் தலைப்பு 'The History of Ceylon From the Earliest period to the present time' (பண்டைக் காலம் முதல் இற்றை நாள் வரையான இலங்கையின் வரலாறு) ஐரோப்பிய எழுத்தாளர்கள் முறைப்படியான இலங்கை வரலாறை எழுதமுற்பட்டனர் என்பதன் அடையாளமாக இருப்பதைக்காணலாம்.

ஐரோப்பியர் பார்வையில் இலங்கை:

வரலாற்றில் என்னென்ன நிகழ்வுகள் நிகழ்ந்தன, மக்கள் எப்படி வாழ்ந்தார்கள். அரசுகளின் எழுச்சியும் வீழ்ச்சியும் என்பன போன்றவிடயங்களை கால ஒழுங்கில் எழுதுவதை வரலாறு (History) என்று கூறுவர். இதனைக் கடந்த காலத்தைப் பற்றி எழுதுதல் எனவும் கூறலாம். இன்று வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கடந்த கால வரலாற்றை எழுதுவது மட்டுமல்லாது, தமக்கு முந்திய காலத்தில் வரலாற்றை எழுதியவர்களின் நூல்கள் பற்றியும் கூட விரிவாக ஆராய்கிறார்கள். இவ்விரண்டாவது வகை ஆய்வு வரலாறு பற்றிய பிரதி (Text) அல்லது ஆவணம் (Document) பற்றிய ஆய்வு ஆகும். நூல்கள் பற்றிய இத்தகைய ஆய்வை வரலாற்று எழுதியல் (Historiography) என்று கூறுவர்.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்ட வரலாற்று நூல்களைப் பற்றிய வரலாற்று எழுதியல் ஆய்வாக அமையும் கட்டுரையொன்றை யோன். டி. றொஜர்ஸ் 'Historical images in the British period' (பிரித்தானியர் காலத்தில் கடந்த காலம் பற்றிய படிமங்கள்) என்னும் தலைப்பில் எழுதியுள்ளார்.

யோன் டி றொஜர்ஸ் அவர்களின் கட்டுரையைத் தழுவி தமிழில் எழுதப்படும் இக் கட்டுரை, வரலாற்று எழுதியல் நோக்கு முறை என்றால் என்ன, அந்நோக்கு முறையின் பயன்கள் யாவை, அதன் தேவை என்ன என்பனவற்றை தமிழ் வாசகர்களுக்கு எடுத்துக் கூறும் நோக்குடன் எழுதப்பட்டுள்ளது.

கட்டுரையின் ஆரம்பத்தில் யோன் டி றொஜர்ஸ் அவர்கள் காலனிய காலத்தில் ஐரோப்பியர்களாலும் (அவர்களை அடியொற்றி எழுதிய சுதேசிகளாலும்) எழுதப்பட்ட நூல்களின் நோக்கு முறையைப் பின் வரும் மூன்று காரணிகள் தீர்மானித்ததாகக் கூறுகிறார்.

- வரலாற்றாசிரியர்கள் வரலாற்றை எழுதுவதற்கான மூலங்களாக (Sources) எவற்றைக் கொண்டனர்?
- அவர்கள் எழுதிய காலத்தில் ஐரோப்பாவில் வரலாறு தொடர்பான சிந்தனை எப்படிப்பட்டது? அச்சிந்தனையின் பொதுப் போக்குகள் (Broder Trends) அல்லது செல்நெறிகள் யாவை?
- வரலாற்றை எழுதியவர்களின் சமூக நிலை (Social Positions) யாது? அவர்களது கருத்தியல் நிலைப்பாடுகள் (Idological Positions) எவை?

மேற்குறித்த வினாக்களை கேட்பதன் மூலம் ஐரோப்பியர் பார்வையின் அடிப்படைகள் யாவை என்பது பற்றி யோன் டி றொஜர்ஸ் தெளிவாக்குகிறார்.

அடிப்படையான அனுமானங்கள்:

ஐரோப்பிய வரலாற்றாசிரியர்களிடையிலும், அவர்களைப் பின்பற்றி வரலாற்றை எழுதிய சுதேசிகளிடையிலும் இலங்கை வரலாறு பற்றிய இரண்டு அடிப்படையான அனுமானங்கள் இருந்தன என யோன். டி. றொஜர்ஸ் குறிப்பிடுகிறார்.

அவையாவன:

- பண்டைய காலத்தில் இலங்கையில் உன்னதமான நாகரிகம் இருந்தது. அந்நாகரிகம் பின்னர் வீழ்ச்சியுற்றது.
- ஒன்றோடொன்று அடிக்கடி மோதிக் கொண்ட சிங்களவர், தமிழர் என்ற இரு இனக்குழுமங்கள் (Often Antagonistic Ethnic Groups) இலங்கையில் கடந்த காலத்தில் இருந்து வந்தன.

மேற்படி இரு அனுமானங்களின் படி வரலாற்றை எழுதியவர்கள் பண்டைய சிங்கள நாகரிகத்தின் உயர்வும் மேன்மையும் என்ற விடயத்திற்கு அழுத்தம் கொடுத்தனர். வெவ்வேறு வரலாற்றுக் கட்டங்களில் சிங்கள நாகரிகம் அடைந்த உயர்ச்சிகளை விபரித்து ஆவணப்படுத்தினர். உயர்வான சிங்கள நாகரிகம் என்ற இக்கருத்து இருபதாம் நூற்றாண்டில் சிங்கள மக்கள் மத்தியில் தம்மைப் பற்றிய பெருமித உணர்வை ஏற்படுத்தியது. குறிப்பாக கரைநாட்டுச் சிங்களவர் மத்தியில் இவ்வுணர்வு ஏற்பட்டது. இவ்வுணர்வையும் அது கிளர்த்திய மனப்படிமங்களையும் 'பொது மக்கள் சார்ந்த படிமங்கள்' (Popular Images) என்று றொஜர்ஸ் கூறுகிறார். 'பொப் புயுலர்' என்ற சொல் 'நன்மதிப்புப் பெற்ற', 'பாராட்டை பெற்ற' என்ற அர்த்தங்களையுடைய சொல் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். உன்னதமான சிங்கள நாகரிகம் என்ற கருத்தின் ஓர் அம்சமாக சிங்கள மக்களுக்குத் தொடர்ச்சி அறுபடாத வரலாறு (Unbroken History) இருந்தது என்ற விடயமும் அடங்கியிருந்தது.

ஐரோப்பிய வரலாற்றாளர்களின் இன்னொரு அனுமானமான, ஒன்றோடொன்று மோதும் சிங்களவரும், தமிழர்களும் என்ற கருத்தின் விளைவாக தமிழர்களுக்கு எதிரான விரோத உணர்வு ஏற்பட்டதா என்ற நியாயமான வினா எழுகின்றது. ஆச்சரியத்திற்குரிய விடயம் யாதெனில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் (1915 வரை) தமிழர்களுக்கு எதிரான விரோத உணர்வு சிங்கள மக்கள் மத்தியில் இருக்கவில்லை என்பதாகும். கடந்த காலத்தின் சிங்கள - தமிழர் மோதல்கள் பொருட்படுத்த வேண்டியன அல்லவென்றோ, அல்லது அநாவசியமானவை என்றோ மக்கள் கருதியிருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. ஆயினும் வரலாற்று நூல்களில் சிங்கள - தமிழ் மோதல்களும் குறிப்பிடப்பட்டிருந்தன என்பது உண்மையாகும். இலங்கை வரலாறு பற்றி எழுதியவர்களில் முக்கியமான மூவரைப் பற்றி அடுத்துச் சுருக்கமாகக் குறிப்பிடுவோம்.

அலக்சாண்டர் ஜோன்ஸ்டன்:

1820களில் பிரதம நீதியரசராக இருந்த அலக்ஸாண்டர் யோன்ஸ்டன் வரலாற்றுச் சுவடியை சேகரிக்க ஆரம்பித்தார். இவரது சேகரிப்பில் மகாவம்சம், சூளவம்சம் ஆகியவற்றின் பகுதிகளும் இருந்தன. தாம் சேகரித்தவற்றை ஒழுங்குபடுத்தி ஆங்கில மொழி பெயர்ப்பில் பதிப்பித்து வெளியிடும் பணியை எட்வார்ட் அப்ஹாம் (Edward Upham) என்பவரிடம் ஒப்படைத்தார்.

இச்சுவடிகளை ஆதாரமாகக் கொண்டு இலங்கையின் முறையான வரலாற்றை எழுதிப் பெற்றுக்கொண்டால், மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாட்டையும் அறிந்து கொள்ளலாம், அதன் மூலம் நீதி பரிபாலனத்திற்கு தேவையான பொருத்தமான சட்டங்களை இயற்ற முடியும் என யோன்ஸ்டன் கருதினார். யோன்ஸ்டனிற்கு முந்திய எழுத்தாளர்கள் வாய்மொழித் தகவல்களை மட்டுமே பெற்றுக் கொண்டனர். பாளி, சிங்கள நூல்களை படித்தறியும் முயற்சியை ஆரம்பித்தவராக அலக்ஸாண்டர் யோன்ஸ்டனைக் குறிப்பிடலாம்.

ஜோர்ஜ் ரேர்ணர்:

1833இல் எட்வார்ட் அப்காம் மொழி பெயர்த்த நூல் வெளிவந்த போது, கண்டியில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய ஜோர்ஜ் ரேர்ணர் 'சிலோன் அல்மானக்' என்ற சஞ்சிகையில் ஒரு கடிதத்தைப் பிரசுரித்தார். பாளி, சிங்கள நூல்களைப் படித்தறியும் திறமையுடையவரான ரேர்ணர் இலங்கையின் அரசர்களின் பட்டியல் ஒன்றை தம் கடிதத்தின் இணைப்பாக வெளியிட்டார். விஜயன் முதல் 1915 இல் கண்டியினைப் பிரித்தானியர் கைப்பற்றிய காலம் வரையான அரசர்களின் விபரம் பட்டியலில் இடம் பெற்றிருந்தது. நான்கு ஆண்டுகள் கழித்து 1837இல் ரேர்ணர் மகாவம்சத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பை, பாளி மூலத்துடன் சேர்த்துப் பதிப்பித்து நூலாக வெளியிட்டார். அப்காம் நூலின் சுருக்கிய பதிப்பு முழுமையுடைய தல்ல என்பதையும் ரேர்ணர் எடுத்துக் காட்டினார். சூளவம்சத்தின் மொழிபெயர்ப்பையும் அவர் வெளியிடுவதற்குத் திட்டமிட்டிருந்தார். ஆயினும், அவ்வேலையை நிறைவு செய்யும் முன்னர் ரேர்ணர் காலமானார். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மகாவம்சம், சூளவம்சம் என்பனவற்றின் திருத்தமான மொழி பெயர்ப்புகள் வெளியிடப்படும் வரை, ரேர்ணர், அப்காம் ஆகிய இருவரதும் மொழிபெயர்ப்புகளை ஆங்கிலேய அதிகாரிகள் இலங்கை பற்றிய அறிவைப் பெறுவதற்குரிய ஆதாரமாகக் கொண்டனர்.

மேஜர் யொனதன் போர்ப்ஸ்:

1840 இல் மேஜர் யொனதன் போர்ப்ஸ் (Jonathan Forbes) எழுதிய 'இலங்கையில் பதினொரு ஆண்டுகள்' (Eleven years in Ceylon) என்னும் நூல் வெளியாயிற்று. 1830 முதல் மாத்தளையில் வசித்தவரான போர்ப்ஸ், ரேர்ணரின் நூல் பற்றி அறிந்திருந்தார். அவர் மகாவம்சம் குறிப்பிடும் வரலாற்றுக்கால இடங்களைத் தேடி அடையாளம் காண்பதில் அக்கறை கொண்டிருந்தார். அவரது நூலில் பண்டைய நகரங்கள், நீர்ப்பாசன அமைப்புகள் என்பனவற்றின் அழிபாடுகள் பற்றிய பதிவுகள் உள்ளன. இதனால் போர்பசின் நூல் மகாவம்சம், சூளவம்சம் போன்ற நூல்களில் வரலாற்று உண்மைகள் உள்ளன என்பதை உறுதி செய்தது. யோன்ஸ்டன், அப்காம், ரேர்ணர், போர்பஸ் ஆகியோர் மகாவம்சத்தைக் 'கண்டு பிடித்து' ஆங்கில வாசகர்களுக்கு அறிமுகம் செய்தமை இலங்கையின் வரலாற்று எழுதியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

நைட்டனின் நூல்:

1845 ஆம் ஆண்டு வெளியாகிய வில்லியம் நைட்டனின் நூல் இலங்கையின் பண்டைக் காலம் 'உன்னதமானதும், செழிப்பு மிக்கதும், வளமும் மகிழ்ச்சியும் நிறைந்ததும்' (Great and flourishing, Prosperous and Happy) என வருணித்தார். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் 'கடந்து போன பொற்காலம்' பற்றிய சிந்தனையை உருவாக்கியவராக இவரைக் கொள்ளலாம்.

பண்டைய இலங்கையில் விவசாயம், மெய்யியல், கலைகள், மருத்துவம், ஆட்சிக்

தொடர்தல் 93ம் பக்கம்

காலனித்துவ...

92ம் பக்கத் தொடர்ச்சி...

கலை என்பன நன்கு வளர்ச்சியுற்றிருந் தமை, இலங்கை நாகரிக வளர்ச்சியில் மிக முன்னேறிய நிலையை அடைந்த மையைக் காட்டுகிறது என அவர் கூறி னார். கைத்தொழிலும் வர்த்தகமும் கடந்த காலத்தில் இலங்கையில் வளர்ச்சியுற்று இருக்கவில்லை ஆயினும் வளம்மிக்க நிலத்தைக் கொண்ட நாட்டிற்கு அவை அவசியமானவையாக இருக்கவில்லை என் றும் கூறினார். நைட்டன் பிற உலக நாடு களோடு இலங்கையின் நாகரிகத்தை ஒப்பிட்டு அதன் பெருமையை எடுத்துரைத் தார். 'ஐரோப்பா அறியாமையில் இருந்தும், காட்டுமிராண்டி நிலையில் இருந்தும் தன்னை விடுவித்துக் கொள்வதற்கு முன்பே' ஆசிய தேசங்கள் முன்னேற்றப் பாதையில் செல்லத் தொடங்கிவிட்டன என்று நைட்டன் கூறினார். அவரது இக்கூற்றை பின்வந்த இலங்கை எழுத்தாளர்கள் மெச்சத்தக்க தொரு கருத்தாக போற்றியதோடு, அதைப் பற்றி விரித்துரைக்கலாயினர். நைட்டனின் வரலாற்று நோக்கில் நாகரிகங்களின் எழுச் சியும் வீழ்ச்சியும் என்ற கருத்து உள்ள டங்கியிருந்தது.

- செவ்வியல் கால எழுச்சி.
- அதனைத் தொடர்ந்து வரும் இருண்ட காலம்.
- நவீனகாலத்து முன்னேற்றம்.

என்ற மூன்று கட்டங்களை ஐரோப்பிய வரலாற்றில் வரலாற்றாய்வாளர்கள் கண்ட தற்கு அமையவே, நைட்டன் இலங்கை யின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் கண் டார். இப்பார்வை காலனியவாதத்தின் அடிப்படையான சிந்தனைக்கு ஏற்புடைய ஒன்றேயாகும். இலங்கையை முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்லும் பெரும் பொறுப்பை காலனியம் ஏற்றிருப்பதாகக் கருதிய நைட்டன் போன்றவர்கள், காலனிய ஆட்சியை நியாயப்படுத்தும் வரலாற்று நோக்கையே முன்வைத்தனர். நைட்டனின் நூல் 'கடந்து போன பொற்காலம்' பற்றிக் கூறிய போதும் பிரித்தானிய ஆட்சியாளர் களை வெட்கமுறச் செய்வதாக அவரது நூல் இருந்திருக்காது. ஏனெனில் பிரித்தானி யர்கள் பண்டைய கிரிஸ், ரோம் என்பன மீண்டெழ முடியாத வீழ்ச்சியை அடைந் தமை போன்று இல்லாது, தம்தேசம் தன்னம்பிக்கையுடன் முன்னேறுவதாகவே கருதினர்.

நைட்டனின் நூல் இலங்கையின் வீழ்ச்சிக் குரிய காரணங்களாக...

- சாதி போன்ற தவறான சமூக நடை முறைகள்.
- தென்னிந்திய படையெடுப்புகள்.
- போத்துக்கேய டச்சு ஆட்சியாளர்களின் 'பேராசை மிக்க சூறையாடல்'.

என்பனவற்றைக் குறிப்பிட்டது.

எமர்சன் ரெனன்ட்:

நைட்டனிற்கு பின்னர் வெளியாகிய ரெனன்ட் எழுதிய நூல் (1859) முழுமையானதாகவும், இலக்கியத்தரம் மிக்க மொழி நடையில் எழுதப்பட்டதாயும் இருந்தது. இக்காரணத் தால் ரெனன்ட் நூல் ஐரோப்பியர்களின் கவனத்தை ஈர்த்த நூலாக விளங்கியது. ரெனன்ட் அவர்களும் இலங்கை வர லாற்றை நைட்டன் போன்றே மூன்று கட் டங்களாக நோக்குகிறார். பாளி மொழி யில் எழுதப்பட்ட வரலாற்று நூல்களில் காணப்படும் அரசர்களின் பெயர்கள் உண் மையானவை என ஏற்றுக் கொள்ளும் ரெனன்ட், அந்நூல்களில் கூறபட்டுள்ள பல கதைகளை உண்மையற்றவை என நிராகரிக்கின்றார். இலங்கையின் பண்டைய நாகரிகத்தை நைட்டன் போன்று மிகைப் படப் புகழ்ந்துரைக்காத ரெனன்ட், அரசர் கள் வீணாக செல்வத்தை விரயம் செய் தனர் எனக் குறை காண்கிறார். கோவில் களைக் கட்டுவதிலும், புனித தந்தத்தை பாதுகாத்து வைக்கும் தாது கோபங் களைத் திருத்துவதிலும், விளைநிலங் களை மடாலயங்களுக்கு தானம் செய்வ திலும் அரசர்கள் தம் கவனத்தைச் செலுத் தினர் என்றும் 'குடிமக்களிடையே பிரிவி னைகள், சமயச் சண்டைகள், அரச வம்சத் தவர்களின் சதிகள், சூழ்ச்சிகள், ஆட் கொலைகள் என்பனவும்' சிங்கள அரசு களின் சீரழிவுக்குக் காரணமாக இருந்தன என ரெனன்ட் கூறுகிறார். உள்நாட்டுப் பிரச்சினைகளும், வெளிநாட்டு ஆக்கிரமிப் புகளும் சிங்கள நாகரிகத்தின் வீழ்ச்சிக் குக் காரணமாயின என ரெனன்ட் கூறுகி றார்.

இனக்குழுமம், சமயம் என்ற வகைமைகள் (Categories) நைட்டன், ரெனன்ட் என்ற இருவராலும் ஒரே முறையிலேயே நோக்கப் பட்டன. அக்காலத்தில் ஐரோப்பாவில் தேசிய இனம் (Nationality), இனம் (Race) என்பன பற்றிய விவாதங்கள் நடைபெற்றன. இவற்றின் செல்வாக்குக்குள் உட்பட்ட நைட்டனும், ரெனன்ட் அவர்களும் பாளி நூல்களில் குறிக்கப்படும் மக்கள் பிரிவி னரை 19ஆம் நூற்றாண்டின் ஐரோப்பிய சிந்தனைகளின் நோக்கிலேயே விளக்க முனைந்தனர்.

விஜயனின் வரவுக்கு முன்னர் இலங்கை யில் வாழ்ந்த மக்கள் பிரிவினர் சிங்கள பௌத்தர்களில் இருந்து வேறானவர்கள் என இருவரும் அடையாளம் காண்கின் றனர். அத்தோடு சிங்கள - பௌத்தர்கள், தென்னிந்தியாவில் இருந்து வந்த தமிழ் மொழிபேசுவோர்களிலிருந்தும், பிற மொழி பேசுவோர்களில் இருந்தும் வேறானவர் கள் எனவும் அடையாளப்படுத்துகின்றனர். ரெனன்ட் நூலில் சிங்களவர், தமிழர், பௌத்தர் முதலிய வேறுபட்ட அடையா ளங்கள் கூடிய அழுத்தம் பெற்றுள்ளன. ஆயினும் சிங்கள - தென்னிந்திய வேறு பாடுகளை பகைமை உறவாக இவர் சித்திரிக்கவில்லை. 'பிராமணிய சடங்கு களை சிங்கள அரசர்கள் விரும்பி ஏற்ற தைக் குறிப்பிடும் ரெனன்ட் இதனைச் சிங்களப் பண்பாட்டின் பலவீனமாகக் கருத்துரைக்கிறார்.

அதிகார பூர்வமான அறிவின் உற்பத்தி:

காலனித்துவ ஆட்சிக் காலத்தில், ஆட்சி அதிகாரத்தைப் பலப்படுத்துவதற்கு இலங் கை மக்களைப் பற்றியும் அதன் வர லாற்றைப் பற்றியும் அதிகார பூர்வமான அறிவு தேவைப்பட்டது. நைட்டன், ரெனன்ட் ஆகியோரின் அறிவுத்துறைப் பணியை அதிகார பூர்வமான அறிவை உற்பத்தி செய்தல் (Production of an Authoritative Knowledge) என்று கூறலாம். இத்தகைய அறிவின் உருவாக்கம் காலனிய அரசாங் கத்தின் தேவைகளுக்கு (Needs of Govern-ment) அவசியமானவையாக இருந்தது. அறிவை உற்பத்தி செய்யும் பணியில் ஈடு பட்ட அறிவாளிகள் நிர்வாகத் தேவை களுக்காக நூல்களை எழுதினர். உதார ணமாக: ரெனன்ட் காலனிகளுக்கான செய லாளராகப் பதவி வகித்து ஓய்வு பெற்ற பின்னர் இலங்கை பற்றிய வரலாற்றை எழுதினார். அவர் இலங்கையில் பணி யாற்றிய பிரித்தானிய அதிகாரிகளுக்கு இலங்கை பற்றிய வழிகாட்டி நூல் ஒன்றின் தேவையை உணர்ந்து தமது நூலை எழுதினார். நைட்டன் அறிவியல் ஆர்வம் காரணமாக எழுதியவர் என்பதை 'பண்பட்ட உள்ளங்களை மகிழ்விக்கும்' தமது நோக்கத்தை தெரிவித்ததன் மூலம் அறியலாம். உண்மையில் அரசாங்கத்தின் தேவைகள், அறிவியல் ஆர்வம் என்ற இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானவை அன்று. அரசாங்கத் தேவைகளுக்காகத் திரட்டப்பட்ட அறிவு அறிவியல் ஆர்வத் தைக் கிளறும் கேள்விகளை எழுப்புகிறது. இக்கேள்விகள் சில எண்ணக்கருக்கள், அறிவியல் கட்டுரைகள் (Constructs) என் பனவற்றை உருவாக்க உதவுகின்றன. எத்தகைய அறிவு முக்கியமானது என்பதும் இச்செயல்முறை மூலம் தீர்மானமாகிறது.

இக்கட்டுரையில் கூறப்பட்ட கருத்துக் களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

- வரலாற்றை எழுதுவதற்கு ஆதாரமாகக் கொண்ட மூலங்கள், வரலாற்றாசிரியர் களின் காலத்தில் ஐரோப்பாவில் வர லாறு பற்றிய சிந்தனையின் போக்குகள், வரலாற்றை எழுதியவர்களின் சமூக நிலை என்ற மூன்று விடயங்கள் வர லாற்று எழுதியல் நோக்கு முறையைத் தீர்மானிக்கும் காரணிகளாக அமைந்தன.
- இலங்கை வரலாற்றை எழுதிய 19ஆம் நூற்றாண்டு ஐரோப்பியர்கள்:
  - இலங்கையில் பண்டைக் காலத்தில் உன்னதமான ஒரு நாகரிகம் இருந்தது.
  - சிங்களவர், தமிழர் என்ற இரு இனக் குழுமங்கள் இருந்தன, அவை அடிக் கடி தமக்குள் மோதிக்கொண்டன.

என்ற இரு அடிப்படையான அனுமானங் களைக் கொண்டிருந்தனர்.

- 'சிங்கள நாகரிகம் உயர்வும் மேன்மை யும் உடையது', 'சிங்களவர்களுக்கு தொடர்ச்சியான அறுபடாத வரலாறு உள்ளது' ஆகிய கருத்துக்களை இவர் களின் நூல்கள் வெளிப்படுத்தியதால் சிங்கள மக்களிடையே தம் இனத்தைப் பற்றிய பெருமித உணர்வு தோன்றியது.
- சிங்கள மக்களிடையே தம் பண்டைநாட் பெருமை பற்றிய பெருமித உணர்வு தோன்றிய போதும், தமிழர்களுக்கு எதிரான பகைமை உணர்வு 1915 வரை தோன்றவில்லை.
- அலக்சாண்டர் ஜோன்ஸ்டன், அப்காம், ரேர்ணர், போர்பஸ் போன்றோர் இலங் கை வரலாற்றை எழுதுவதற்கு மகாவம் சத்தை ஆதாரமாகக் கொள்ளும் மர பைத் தொடக்கிவைத்தனர். இவர்களது 'மகாவம்சக் கண்டுபிடிப்பு' இலங்கை வரலாற்று எழுதியலில் பெரும் தாக் கத்தை ஏற்படுத்தியது.
- நாகரிகங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் என்ற கோட்பாட்டின் தாக்கம் நைட்டன் ரெனன்ட் அகிய இருவரதும் எழுத்துக் களில் வெளிப்பட்டது. செவ்வியல் கால எழுச்சி, அதனை அடுத்த இருண்ட காலம், நவீனத்துவத்தை நோக்கிய முன்னேற்றம் என்ற மூன்று வரலாற்றுக் கட்டங்களை இவர்கள் அடையாளப் படுத்தினர். பிரித்தானிய காலனிய ஆட்சி இலங்கையருக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்றும், இலங்கையை நவீனத்துவம் நோக்கி முன்னேறச் செய் யும் வரலாற்று வகிபாகத்தை பிரித்தா-னியா நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்றும் இவர்கள் நம்பினர்.
- இனக் குழுமங்கள், சமயப்பிரிவுகள் தொடர்பான கருத்துக்களை இவ்வர லாற்று எழுத்தாளர்கள், ஐரோப்பிய சிந்தனைகளுக்கு அமைவாக வகுத்துக் கொண்டனர். நிகழ்காலப் பிரச்சினை களையும், நிகழ்காலத்துச் சிந்தனைப் போக்குகளையும் அடிப்படையாகக் கொண்டு கடந்த காலப் பனுவல்களை (Texts) விளக்கும் நோக்குமுறையை இவர்கள் பின்பற்றினர். பிற்காலத்தில் இனவாத நோக்கிலான வரலாறுகள் எழுதப்படுவதற்கு இது காரணமாக அமைந்தது.
- அரசாங்கத்தின் தேவைகளின் பொருட்டு அதிகார பூர்வமான அறிவை உற் பத்தி செய்தல் என்ற பணியை இவ் வரலாற்றாசிரியர்கள் நிறைவேற்றினர்.

யொனதன் ஸ்பென்சர் பதிப்பித்து வெளியிட்ட Sri Lanka - History and the Roots of Conflict என்ற நூலின் (ரவுட் லெட்ஜ் 1990, 2015) 4ஆவது அத்தியாயமாக அமையும் Historical Images in the British Period (பிரித்தானியர் காலத்தின் வரலாற் றுப் படிமங்கள்) என்ற தலைப்பிலான கட்டுரையை (பக்: 87-106) தழுவி இக்கட்டுரை எழுதப்பட்டது. ஆங்கில மூலத்தின் ஆசிரியர் யோன் டி றொஜர்ஸ் (John. D. Rojers) ஆவர். ஆங்கிலக்கட்டுரையின் முற்பகுதியின் 6 பக்கங்களில் உள்ள கருத்துக்கள் மட்டுமே இங்கு சுருக்கித் தரப்பட்டுள்ளன.

shanmugalingam@thaiveedu.com

Proud to be serving you through these two Funeral Homes!

GTA EAST

OGDEN
FUNERAL HOMES
4164 Sheppard Ave E,
Scarborough, ON M1S 1T3.
www.ogdenfuneralhome.com

GTA WEST

LOTUS
Funeral and Cremation Centre Inc.
121 City View Dr,
Etobicoke, ON M9W 5A8.
www.lotusfuneralandcremation.com

:: Family owned and operated for over 70 years
:: East Toronto location just off Hwy 401,
between Kennedy Road and Midland Ave
:: Affordable funeral plans to meet your budget

:: On-Site Crematorium
:: West Toronto location just off Hwy 401,410,
427 & 407 North of Belfield Rd and East of Hwy 27
:: Beautiful Facility With Up To 500 Seating

State of the art technology
Financing plans available for both preplanned funerals and at-need funerals
Diverse staff to care for your needs, honour your traditions and speak your language
Travel Repatriation Insurance available (**$495.00 only**) for your lifetime coverage

Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director
Licenced Insurance & Investment Advisor

Direct: **416-834 5753**
Email: advisorpat10@gmail.com

"Serving With Dignity, Compassion and Excellence"

மலையகக் கூத்துகள்

- ஞானம் லெம்பட் -

காமன் கூத்து

இலங்கையில் ஆடப்படும் பெரும்பான்மையான கூத்துக்கள் சமய நம்பிக்கை சார்ந்த சடங்குகளைக் கொண்டதாய் அமைந்துள்ளன. இயற்கையின் மாறுபட்ட நிகழ்வுகளைக் கண்டு பயந்த ஆதிமனிதர் இயற்கை வழிபடுவதன் மூலம் அதன் அழிவுகளிலிருந்து தப்பித்துக் கொள்ளலாமென்ற நம்பிக்கை கொண்டனர். அதனடியாக இயற்கை வழிபாடும், வழிபாட்டை மேம்படுத்தச் சடங்குகளும் ஏற்பட்டன. இந்த வழிபாட்டுக்கு ஆடலையும் பாடலையும் ஒரு கருவியாக் கொண்டபோது அவ்வழிபாடு சடங்கின் ஒரு பகுதியாகியது. இச்சடங்கு சமூக, பொருளாதார மாற்றங்களினால் மாற்றங்களைத் தன்னகத்தேகொள்ள அது கலையாக மாறியது.

இறைவன் மீதான நம்பிக்கையும், பயமும் காரணமாக அமைந்த வழிபாடு கிராமிய மக்களிடையே நீண்ட காலமாய் நிலைத்திருப்பதனால், அதனடியாகத் தோன்றிய கலைகளும் இன்றும் நிலைத்திருக்கின்றன.

இவ்வாறு வழிபாட்டுக் கலையாகத் தோன்றிய கூத்துகளில் காமன் கூத்து இலங்கையில் மலையகத் தமிழ் மக்களிடையே மிக முக்கியமான கூத்தாக ஆடப்படுகிறது.

காமனுக்கு விழா எடுப்பது சிலப்பதிகார காலத்திற்கு முற்பட்ட ஒன்று. இதைச் சிலப்பதிகாரம் காதல் நோயூட்டிக் கொல்லும் வில்லுடைய மன்மதனுக்கு (காமனின் மறுபெயர்களில் ஒன்று) விழா எடுக்கும் காமன் பண்டிகை நடக்கம் பங்குனி மாதம் வந்துவிடும் என்று பின்வருமாறு கூறுகிறது.

ஆங்கு அது அன்றியும்
ஒங்கு இரும்பரப் பின்
வாங்க ஈட்டத்துத் தொண்டியோர் இட்ட
அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்
தொரு கருப்பூரமும் சுமந்துடன் வந்த
கொண்டலோடு புகுந்து கோமகன்
கூடல்
பெங்கண் நெடுவேன் வில்விழாக்
காணும்
பங்குனி முயக்கத்துப் பனி
அரசு யாண்டு உளன்.

சிவபெருமானின் தவத்தைக் கலைத்து, தேவர்களை அரக்கர்களிடமிருந்து காப்பாற்ற, பிரம்மனால் அனுப்பப்பட்ட காமன் சிவபெருமானை நோக்கி அம்பு எய்யவே, சிவபெருமான் கோபம் கொண்டு நெற்றிக் கண்ணால் நெருப்பைப் பாய்ச்சி காமனை எரித்தார் என்று ஒரு கதை சொல்ல, கந்த புராணம் சிவபெருமான் மீது அம்பு எய்யக் காமன் கொண்ட துணிவே அவனை எரித்தது என்று பின்வருமாறு கூறுகிறது.

நுண்ணிய உணர்வின் மிக்கீர்
நுமக்கிது புகல்வன், எங்கோன்
கண்ணுதல் உமிழ்ந்த செந்தீ
காமனை பொடித்தது அன்றால்
அண்ணலை எய்வன் என்னா
அனையவன் துணிவிற் கூறித்
துண்ணென ஈண்டு வந்த
செயற்கையே சுட்டபோலும்

காமன் திருவிழாவைக் கொண்டாட தம்மைத் தயார் செய்யப் பெண்கள் குளித்து சுத்தம் செய்து விரதம் இருப்பார்களென ஆண்டாள் பாடலிலே கூறப்படுகிறது.

இவ்வாறாகப் பழமையான இலக்கியங்களில் கூறப்படும் காமன் வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு செய்யும் கிராமங்களில் காமன் கூத்தாக ஆடப்படுகிறது. காமன் பற்றிய கதைகள் சிற்சில மாற்றங்களுடன் பல உள்ளன. எனினும் அவற்றிடையே நிறைய ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

காமன் கதை - 1:

சிவபெருமானை நிந்தனை செய்த தேவர்களை அசுரர்கள் தண்டித்தார்கள். அசுரர்களின் தண்டனையைத் தாங்க முடியாத தேவர்கள் சிவபெருமானிடம் வந்து அசுரர்களிடமிருந்து தம்மைக் காப்பாற்றும்படி கேட்டுக் கொண்டனர். அதற்கு சிவபெருமான் தனக்கும் உமைக்கும் பிறக்கும் மகன் அவர்களைக் காப்பாற்றுவான் என்று கூறித் தியானத்தில் ஆழ்ந்து விட்டார். ஆனால் சிவபெருமானின் தியானம் நீண்டகாலம் நீடிக்கவே, தொல்லை தாங்க முடியாத தேவர்கள் பிரம்மதேவனை அணுகித் தங்களை அசுரர்களிடமிருந்து காக்கும்படி வேண்டினர். பிரம்மதேவன் மன்மதனை (காமனை) அழைத்துச் சிவபெருமான் மீது காதற் கணை செலுத்துமாறு கேட்டுக் கொண்டார். மன்மதன் சிவபெருமாளின் ஆற்றலை அறிந்தவனாதலால் பயம் கொண்டு தன்னால் இதைச் செய்ய முடியாதென மறுத்து விட்டான். அசுரர்களிடமிருந்து தம்மைக் காக்குமாறு தேவர்களோ கெஞ்சிக் கேட்கவே, அவர்கள் மீது காதல் கணைகளை வீசுவேன் என உறுதியளித்து சிவபெருமான் மீது கணைகளை வீசனான். தன்மீது காதல் கணைகளை வீசியதனால் கோபங்கொண்ட சிவபெருமன் தனது நெற்றிக் கண்ணிலிருந்து நெருப்புப் பொறிகளை அனுப்பி காமனை எரித்தார். இதை அறிந்த காமனின் மனைவியும் சிவபெருமானின் மகளுமான ரதி, சிவபெருமானிடம் தனது கணவனான காமனுக்கு உயிர்பிச்சை கொடுக்குமாறு கெஞ்சினான். மகள் மீது கொண்ட பாசம் காரணமாய் காமன் ரதியின் கண்களுக்கு மட்டுமே தெரிவான், மற்றவர்களால் அவனைப் பார்க்க முடியாதெனக் கூறி, காமனுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தார்; என்பது ஒரு கதை.

காமன் கதை - 2:

திருமாளுக்கும், திருமகளுக்கும் மகனான காமனுக்கும், சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் மகளானா ரதிக்கும் திருமண ஏற்பாடு செய்த போது காமன் - ரதி என்ற பெயர்கள் பொருந்தாது போகவே, காமனுக்கு மன்மதன் என்று பெயர் மாற்றம் செய்து திருமணத்தை நிறைவேற்றினார்.

திருமணமான நாள் அன்றே, தக்கனை அழித்த கோபத்திலிருந்த இந்திரன், சிவபெருமானின் தவத்தைக் கலைத்து தேவர்களின் துன்பத்தை நீக்கும்படி வேண்டினார்.

இதற்கமைய, திருமணமான நாள் அன்றே காமன், சிவபெருமானின் தவத்தைக் கலைக்கப் புறப்பட்டுச் சென்றான். இதனை அறிந்த ரதி தடுக்க முற்பட்டபோது, காமன், சிவபெருமானை இகழ்ந்து, இந்திரனின் பெருமைகளை எடுத்துரைத்து சிவபெருமானின் தவத்தைக் குலைக்கப் புறப்பட்டான். சிவபெருமான் தவம் செய்யும் இடத்தை அடைந்த காமன் சிவபெருமான் மீது காதல் கணைகளைத் தொடுத்தான். இதனால் கோபங்கோண்ட சிவபெருமான் தனது நெற்றிக் கண்ணால் காமனைச் சுட்டெரித்தார் என்று அம்பிகை வேல்முருரு தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார் என சு. முரளிதரன் கூறுகிறார்.

காமன் கதை - 3:

தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் தீங்கு நடப்பதைப் பொறுக்க முடியாத பிரம்ம தேவன் சிவபெருமானின் மௌனத்தைக் கலைத்து உமாதேவியைத் திருமணம் செய்யவைப்பதால், சிவபெருமான் தேவர்களினதும், மனதர்களினதும் துன்பத்தை நீக்கலாம் என நினைத்து மன்மதனைப் படைத்து சிவபெருமான் மீது காதல் கணைகளைத் தொடுத்து அவரது மௌனத்தைக் கலைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

சிவபெருமானின் பெருமைகளையும் வலிமையையும் அறிந்த மன்மதன் இதற்கு மறுத்து விட்டான். அதற்கு பிரம்மதேவன் மன்மதனை நோக்கி தம்மை அடைந்தோரது துன்பத்தை ஒழித்தருளும் எம்பெருமானுடைய திருவருளினால் இக்காரியம் உன்னாலேயே முடியும் என்றார். ஒருவன் ஓர் உதவியைச் செய்ய வல்லவனாயின், அவனே செய்தல் உத்தமம் என்றும், மற்றவர்களின் துன்பத்தைத் துடைத்தற்பொருட்டு தம் உயிரை விடினும் அது தருமம் என்றும், அதைச் செய்யாது விடின் பாவமும் பழியும் அவனைவிட்டு நீங்காது, சிறியோனே துன்பத்தை ஒழிக்க மரணத்தையும் ஏற்றுக் கொள்ளத் தயங்காதே என உற்சாகப் படுத்தினார்.

பிரம்ம தேவனின் அறிவுரைகளைக் கேட்ட காமன் தான் இறந்தாலும் மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவேன் என்ற நம்பிக்கையில் சிவபொருமானின் மீது காதல் கணைகளைத் தொடுக்க இந்திரன், பிரமன், ரதி ஆகியோருடன் கைலாய மலைக்குச் சென்றான்.

கைலாயமலையில் சிவபெருமானைக் கண்ட காமன் பயந்து நடுங்கி கீழே வீழ்ந்தான். இதனைக் கண்ட ரதி அவனைத் தூக்கி தேற்றவே, காமன் சிவனை அணுகி காதல் கணைகளைத் தொடுத்தான். காமன் தொடுத்த கணைகள் சிவன் மீது பாயவே சிவன் கோபங்கொண்டு காமனைப் பார்த்தார். சிவனின் கோபங்கொண்ட பார்வையால் கைலாய மலைமுழுவதும் புகைபரவிற்று. இதை அறிந்த திருநந்தி தேவர். உள்ளே சென்ற காமன் இறந்துவிட்டான், அவன் சிவபெருமான் மீது கணை தொடுக்கக் கொண்ட துணிவே அவனை அழித்தது என்று கூறினார். இதனை அறிநத ரதிதானும் காமனுடன் இறந்து போவதாக் கூறி அழுதாள்; என்று கந்தபுராணம் கூறுவுதாக திருமதி ஆர். சோதிமலர் தமது ஆய்வுக் கட்டுரையில் விரிவாகக் கூறியுள்ளார்.

அளிக்கைமுறை:

காமன் கூத்து மாசி மாதத்தின் மூன்றாவது பிறை நாளன்று காப்புக் கட்டலுடன் தொடங்கி பதினாறாம் நாள் அல்லது பதினெட்டாம் நாள் காம தகனத்துடன் கூத்து முடிவுறும்.

காப்புக் கட்டுதல் என்பது, இலங்கையின் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெறும் கூத்துகளின் காப்புக்கட்டல் அல்லது ஏடு திறத்தல் போல கடவுள் வேண்டுதலோடே நடைபெறுகிறது.

காமன் கூத்தின் காப்புக் கட்டலுக்கு ஆற்றங்கரையில் பூசை செய்யப்படும். இதில் இக்கூத்தில் பங்குற்றும் எல்லா நடிகர்களும் பங்கு கொள்வர். ஆல், அரசு, அத்தி, வேம்பு ஆகிய மரத்துண்டுகளை வைக்கோலால் செய்யப்பட்ட புரியால் (கயிற்றால்) கட்டி, மலர்களினால் அலங்காரம் செய்து, மஞ்சள் பூட்டி, நடிகர்களின் கைகளில் கட்டப்படும். இச்சடங்கு இக்கூத்தின் அண்ணாவியாரால் நடத்தப்படும். பின்னர், இவர்கள் அனைவரும் கூத்து நடக்கும் இடத்திற்கு அழைத்து வரப்படுவர்.

கூத்து நடக்கும் இடத்தில் அல்லது திடலில் காமன் ஊன்றுதல் என்றும் கப்பு நடல் நடைபெறும். இக்கப்பு, இக்கூத்திற்கு முன்னர் நடந்த கூத்திற்கு கப்பு அல்லது கம்பம் நட்டஇத்திலேயே நடப்படும். கம்பம் நடப்படுவதற்காகச் சென்றமுறை நட்ட இடத்தைக் கிண்டி, சென்றமுறை அக்குழியில் இட்ட பொருட்களை எடுத்தபின் திரும்பவும் தேங்காய், தேசிக்காய், உடைத்த முட்டை, சில்லறைக் காசு ஆகியன போடப்பட்டு கம்பத்தை நட்டு, அதைச் சுற்றிச் சாணம் கொண்டு மெழுகி, நவதானியங்களை அதில் பரவி பால் ஊற்றுவர். பின்னர் இதில் பூசை நடைபெற்று, விளக்கேற்றப்படும். இக்கிரியையகள் மூளைப்பாலி எனப்படும். இந்நாளிலிருந்து கூத்து நடைபெறும் நாள்வரை இவ்விடத்தில் பூசை செய்யப்பட்டு விளக்கேற்றப்படும். இதே போன்றே மன்னாரிலும் கூத்துக் கொட்டகைக்கு கப்பு நடும் போது அக்கப்பு அல்லது கம்பத்தில் வேப்பம் இலையைக் கட்டி நட்டபின்னர் கொட்டகை போடப்பட்டு கூத்து நடைபெறும் நாள் வரை என்னை விளக்கேற்றி அது அணையாதவாறு காத்துக் கொள்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

கம்பம் நட்டு மூன்றாவது நாள் பந்தல், மணவறை என்பன தயார் செய்யப்படும். அதே நாளில் காமன், ரதி ஆயோருக்கு வேடம் இடப்பட்டு, கோயிலிலே சமயச் சடங்குகளுடன் கூத்து ஆரம்பமாகும். பின்னர் இவர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு, காமன் பொட்டல் அதாவது நாடக மேடையில் இவர்களது திருமணச் சடங்கு விமரிசையாக நடைபெறும். இச்சடங்கின் போது அங்கு காணிக்கையாகப் பரிசுப் பொருட்கள் கொடுக்கப்படும். சில இடங்களில் கலியாணப் பலகாரமும் வழங்கப் படும். கூத்தில் கலியாணச் சடங்கு நடை பெறும்போது பார்வையாளர்கட்கும் பல காரம் வழங்குவது யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களிலும் நடைமுறையில் இருந்தது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

இதனைத் தொடர்ந்து காமன் கூத்து பதினாறு அல்லது பதினெட்டு நாட்களுக்கு நடைபெறும். ஆனால் ஒவ்வொரு நாளும் கூத்து நடைபெறாது. கூத்து நடைபெறாத நாட்களில் பூசை நடைபெறும். ஈற்றில் சிவ பெருமானின் நெற்றிக்கண் நெருப்பால் எரியுண்டு காமன் இறந்து போவான். இது காம தகனம் எனப்படும்.

காமதகனம் இடம் பெற்று மூன்று நாட்களின் பின் வெள்ளைச் சீலை அணிந்த ரதி, வெள்ளைச்சீலையால் மூடப்பட்டிருக்கும் காமனின் உடலருகின் இருந்து...

இந்தச் சின்னஞ் சிறுவயதில்
நான் சீர் இழக்க ஒப்புவியோ
இந்தப் பிஞ்சுப் பிராயத்தில்
நான் பூவிழக்கச் செய்தாயோ

என்று புலம்பி அழுவாள். முதலில் இதனை கேட்க மறுத்த சிவபெருமான் ஈற்றில் மனம் இரங்கி...

என் மகளே ரதியாளே
உன் கண்ணாளன் மன்மதனை
நான் அரூபியாய் எழுப்பித் தாரேன்
கண்ணே உனக்கு மட்டும்
காமன் உருவம் தெரியுமம்மா
மத்தவங்க கண்களுக்கு
மதன் தெரிய மாட்டானம்மா

என்றுபாடி தனது கமண்டத்திலுள்ள மஞ்சள் கலந்த நீரைக் காமன் மேல் மூன்று முறை தெளித்து பிரம்பினால் காமனைத் தட்ட காமன் உயிர் பெற்று எழும்புவான். இது உயிர் எழுப்புதல் எனப்படும்.

இவ்வுயிர் எழுப்புதலுடன் காமன் கூத்து முடிவு பெறும்.

காமன் கூத்து வெறும் பொழுது போக்குக் கலையாக அல்லாமல் பக்தியுள்ள ஒரு சமயங்சடங்கு போலவே ஆடப்படுகிறது.

(தொடரும்...)

ganam.lambert@thaiveedu.com

YOGA CLASSES SCHEDULES AS FOLLOWS

யோக அமிர்தம்

FOR ADULT
RICHMOND HILL

MONDAY
AND
WEDNESDAY

6:30 PM TO 8:00 PM
10865 bay view ave.
Richmond hill , Hindu Temple

OSHAWA

SUNDAY
AND
WEDNESDAY

8:00 AM TO 9:30 AM .
1211 Harlstone cresent

FOR CHILDREN
RICHMON HILL

MONDAY
AND
WEDNESDAY

5:00 PM TO 6:00 PM
10865 bay view ave.
Richmond hill , Hindu Temple

FOR ADULT
AJAX

THURSDAY
AND
FRIDAY

6:00 PM TO 7:30

FOR ADULT
NORTH YORK

SATURDAY

8:00 AM TO 9:30
1290 finch ave, west
unit 22 . keele and finch

Please Contact at

416 729 3419

further more information.

$864,500
723 Ashprior Ave.
Mississauga
3 Bedroom town house
2 Bedroom Bsmt Apt.
2 Close to All Amenities

$1,899,000
1748 Spruce Hill Rd.
Pickering
4 BR 5 WR Custom Built
4100 Sqft In 60 Ft Lot
Great Location

$1900.00
275 Village Green Sq.
Scarborough
1+Den Condo Apartment
2 Washroom & 1 Parking
Close to all amenities

$2200.00
275 Village Green Sq.
Scarborough
2 Br Condo Apartment
2 Washroom & 1 Parking
Close to all amenities

$2250.00
852 Audley Rd N.
Ajax
3 Bedroom Semi Detached
3 Washroom3 Storey
Great Location

$2500.00
48 Saratoga Rd.
Scarborough
3 Bedroom Main Floor
1 Washroom 2 Parking
Close to all amenities

$3600.00
3 Lord Roberts Dr
Scarborough
3 Bedroom Semi Detached
4 Washroom 3 Level Home
Great Location

$2500.00
2466 Eglinton Ave # 919.
Toronto
2 + Den Condo Apartment
2 Washroom & 1 Parking
Close to GO and all amenities

$2,499,000
122 Euclid Ave.
Scarborough
4 BR & 5 WR Custom Built
2 BR Bsmt Apt w/ 2 Full WR
4100 Sqft. Great Location

$1700.00
2 Adam Sellers St.
Markham
1+Den Condo Apartment
1 Washroom & 1 Parking
Close to all amenities

Gnani Narasingham
Owner / Sales Representative
416-937-8090

Judy Gnanendran B.Com (Hons)
Owner / Sales Representative
416-629-9797

Move On With Re/On

www.reongtacondos.com
www.reongtahomes.com

RE/ON
Homes Realty Inc.
Brokerage

25 Karachi Dr # 15
Markham On. L3S 0B5
905-209-8080

அம்மா வந்தாள்

- சாம்ராஜ் -

'The book is a film that takes place in the mind of the reader. That's why we go to movies and say, 'Oh, the book is better'.
- Paulo Coelho

'Academia is the death of cinema. It is the very opposite of passion. Film is not the art of scholars, but of illeterates'.
- Werner Herzog

நாவல் அல்லது சிறுகதையிலிருந்து தமிழ் சினிமா உருவாவதென்பது 1940களிலிருந்து துவங்குகிறது. வடுவூர் துரைசாமி அய்யங்கார் எழுதிய நாவல்கள் எல்லாம் நாற்பதுகளில் படமாயின. தாஸ்தோய், விக்டர் ஹியூகோ, ஹென்றி வுட் கூட தமிழ் சினிமாவுக்கு வந்திருக்கிறார்கள்.

'நிழல்' திரையிதழ், இலக்கியத்திலிருந்து திரைப்படமாக மாறிய தமிழ் சினிமாக்களின் பட்டியலை வெளியிட்டது. 70 ஆண்டுகால தமிழ் சினிமா வரலாற்றில், 155 படங்களே அப்பட்டியலில் இருக்கின்றன. இந்தப் பட்டியல் துல்லியமானதாக இல்லாமல் இருக்கலாம். 155 உடன் இன்னுமொரு 100 என்று வைத்துக்கொண்டாலும் 70 ஆண்டு கால தமிழ் சினிமாவிற்கு இது மிக அற்பத்திலும் அற்பமான எண்ணிக்கையே.

தமிழ் சினிமா, எழுத்தாளர்கள் பலரின் படைப்புகளை பயன்படுத்தியிருக்கிறது. இந்தப் படைப்பாளிகளையும் நான்கு விதமாகப் பிரித்துக்கொள்ளலாம்.

வடுவூர் துரைசாமி அய்யங்கார், துமிலன், தேவன், இரா. கோபாலன், எல்.ஆர்.வி, ஜே.ஆர். ரங்கராஜு, மு.வரதராசன், ரா.கி. ரங்கராஜன், அகிலன், லட்சுமி, மகரிஷி, கோவி.மணிசேகரன், பூவண்ணன், சோ, மணியன், தமிழ்வாணன், பூவை.எஸ்.ஆறுமுகம், புஷ்பா தங்கதுரை, சிவசங்கரி, மெரினா, ராஜேந்திரகுமார், உமா சந்திரன், அழகாபுரி அழகப்பன், ஆலங்குடி சோமு, ஜாவர் சீத்தாராமன், ஹேமா சந்திரன், தாமரை செந்தூர்பாண்டி, அனுராதா ரமணன், தாமரை மணாளன்.

காத்திரமான படைப்பாளிகளின் படைப்பின் வழி தான் காத்திரமான திரைப்படம் உருவாக வேண்டும் என்று நிபந்தனையில்லை. ஆனால் தொடர்ந்து அதுவே நிகழும் பொழுது அதை நாம் கவனமாய் அவதானிக்க வேண்டியிருக்கிறது கூடுதலாக மிக சுமாரான படைப்பாளிகளின் படைப்புகள் நான்கைந்து திரைப்படங்களுக்கு மேல் சினிமாவாகியிருக்கின்றன. உதாரணத்திற்கு சிவசங்கரி, மணியன், புஷ்பா தங்கதுரை, மகரிஷி, லட்சுமி, அனுராதா ரமனன் போன்றோர். இன்றைக்கு யாரேனும் இவர்களை தேடி படிக்கிறார்களா?

தமிழ் இலக்கியத்திற்கென ஒரு நோவா கப்பலை கடவுள் தயாரித்தால் அந்தக் கடலில் நீந்துவதற்குக் கூட மேற்கண்ட பட்டியலில் உள்ளவர்களை கடவுள் அனுமதிக்க மாட்டார். புலி மார்க் சீயக்காய்க்கும் புலிக்கும் உள்ள தொடர்பு என்னவோ அதுவே இவர்களுக்கும் இலக்கியத்துக்குமான தொடர்பு.

நிறைய நாடகங்கள் திரைப்படமாகி இருக்கின்றன. கறுப்பு வெள்ளை சினிமா காலத்தில் அது மிக அதிகம். 'ரத்தக்கண்ணீர்' முதலில் நாடகம் பின்பு புகழ் பெற்ற சினிமா. இன்னும் துல்லியமாக சொன்னால் நாடகத்திலிருந்து தான் தமிழ் சினிமாவே தோன்றியது. நாடகங்கள் அப்படியே படமாக்கப்பட்டன.

திராவிட இயக்கப் படைப்பாளிகள் என அண்ணாதுரை, ஏ.வி.பி. ஆசைத்தம்பி, மு. கருணாநிதி ஆகியோரைக் கூறலாம். இவர்களின் படைப்புகளின் நோக்கம் பிரச்சாரமாய் இருந்தது. முடிந்தவரை அதை கலையோடு கலந்து கொடுக்க முயற்சித்தனர். வெற்றி என்னவோ பிரச்சாரத்திற்குத் தான்.

இடதுசாரி படைப்பாளிகளும் தமிழ் சினிமாவுக்கு வந்திருக்கிறார்கள்.

ஜெயகாந்தன், சி.ஏ. பாலன், நிரஞ்சனா, பொன்னீலன், டி. செல்வராஜ், கோமல் சுவாமிநாதன், கந்தர்வன், ச. தமிழ்ச்செல்வன், சு. வெங்கடேசன், மு. சந்திரகுமார்.

சினிமாவான இடதுசாரிகளின் படைப்பு



களில் தப்பித்தவை ஜெயகாந்தன் மற்றும் கோமல் சுவாமிநாதனின் படைப்புகளே. ஜெயகாந்தனின் ஆளுமை அவரது படைப்புகளைக் காப்பாற்றியது. தமிழ் இலக்கியத்தில் ஒரு முழுநேர எழுத்தாளர், அதிலும் குறிப்பாக இடதுசாரி எழுத்தாளர் இயக்குநராகிய சாதனை ஜெயகாந்தனுக்கு மாத்திரமே உண்டு. 'உன்னைப் போல் ஒருவன்', 'யாருக்காக அழுதான்' - இந்த இரண்டு படங்களையும் நிச்சயமாக புறந்தள்ளிவிட முடியாது. 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்', 'சில நேரங்களில் சில மனிதர்கள்' ஆகிய ஜெயகாந்தனின் கதைகளை அதன் சாரம் கெடாமல் பீம்சிங் இயக்கினார். ஜெயகாந்தனின் 'ஊருக்கு நூறு பேர்' நாவலை அதே பெயரில் திரைப்படமாக இயக்கினார் பி. லெனின். ஊருக்கு நூறு பேர் கூட பார்க்காதது போல் பார்த்துக்கொண்டது திரைப்படம்.

டி. செல்வராஜின் தேநீர் 'ஊமை ஜனங்கள்' ஆகியது. ஊமையும் ஆகியது. கோமல் சுவாமிநாதனின் நாடகமான 'தண்ணீர் தண்ணீர்' திரைப்படமாகி பெரும் வெற்றியைப் பெற்றது. ஒரு கணக்கில் இடதுசாரி படைப்பு ஒன்று வெகுஜன சினிமாவில் பெரும் வெற்றி பெற்றது இப்படம் மாத்திரமே. அவருடைய 'ஒரு இந்தியக் கனவு' திரைப்படம் தேசிய விருது பெற்றுப் பெருங்கனவாகவே முடிந்தது. 'தூக்கு மேடை நிழல்' புகழ் சி.ஏ. பாலனின் 'இன்று நீ நாளை நான்' கதை மேஜர் சுந்தர்ராஜனின் இயக்கத்தில் திரைப்படமானது. இளையராஜாவின் மகத்தான பாடல்கள் தவிர இந்தப் படத்தில் நாம் நினைவில் வைத்துக்கொள்ள ஒன்றுமில்லை. கந்தர்வனின் 'சாசனம்' தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் தயாரிப்பில் மகேந்திரனின் நீண்டகால இயக்கத்தில் சாசனம் ஆகாமல் போனது. ச. தமிழ்ச்செல்வனின் 'வெயிலோடு போய்' சிறுகதை 'பூ' என்ற பெயரில் சசி இயக்கத்தில் மலரவில்லை. சு. வெங்கடேசனின் 'காவல் கோட்டம்' நாவல் 'அரவானாக' திரைப்படமாகும்பொழுது அது மரண தண்டனைக்கு எதிரான படம் என்று சொல்லப்பட்டது. படத்தில் முதலில் தண்டனைக் குள்ளாக்கப்பட்டது நாவலே. இடதுசாரி படைப்புகளில் அரிதாய் மனதுருக்கும் நிரஞ்சனாவின் காத்திரமான 'நினைவுகள் அழிவதில்லை' நாவலை இடதுசாரி இயக்கத்தைச் சேர்ந்த பகத்சிங் கண்ணன் என்பவர் அதே பெயரில் திரைப்படமாக்கினார். அதைப் பார்த்த நினைவுகள் அழிந்துபோகவே மிகவும் விரும்புகிறேன். ஓர் இடதுசாரி ஆக்கத்தை எப்படி திரைப்படமாக்கக்கூடாது என்பதற்கு அதை ஒரு பாடமாக வைக்கலாம்.

இந்த இடதுசாரி படைப்பாளிகளின் ஆக்கங்களில் ஓர் இனிய விதிவிலக்காக இருந்தது மு. சந்திரகுமாரின் கதையான 'லாக் அப்'பை அடிப்படையாகக் கொண்டு வெற்றிமாறனால் இயக்கப்பட்ட 'விசாரணை' திரைப்படம். நாவலாக அது பெரிய வாசிப் பனுபவத்தைத் தரக்கூடிய நாவல் அல்ல. அதை மிக நேர்த்தியான திரைப் பிரதியாக மாற்றியிருந்தார் வெற்றிமாறன்.

ரஷ்யக் கதைகளின் பாதிப்பில் எடுக்கப்பட்ட தமிழ்த் திரைப்படங்களை விட்டு விட லாம். அவையெல்லாம் chaos theory யின் அடிப்படையில் சோவியத் யூனியன் உடைந்ததற்கான மறைமுகக் காரணங்களில் ஒன்றாக நான் நம்புகிறேன். ஒருவேளை இப்படங்கள் ரஷ்யமொழியில் மொழிமாற்றம் செய்யப்பட்டிருந்தால் கோர்ப்பசேவுக்கு சோவியத் யூனியனை உடைப்பதற்கு பெரிஸ்த்ரோஸ்காவைவிட பெரிதும் உதவியிருக்கும். 'அன்னை வயல்', 'அதிகாலையின் அமைதியில்', 'வெண்ணிற இரவுகள்' போன்ற படைப்புகளை நாம் கண்ணீர் மல்க வாசித்திருக்கிறோம். அந்த படைப்பாளிகளின் ஆன்மா சாந்தியடையட்டும்!

தீவிர இலக்கியவாதிகளின் படைப்புகளும் சினிமாவிற்கு வந்திருக்கிறார்கள். அந்தப் பட்டியல் மிகச் சொற்பமே.

புதுமைப்பித்தன், கி. ராஜநாராயணன், இந்திரா பார்த்தசாரதி, சுஜாதா, தி. ஜானகிராமன், நாஞ்சில் நாடன், நீல. பத்மநாபன், பூமணி, ஜெயமோகன், ரெட் டீ டேனியல், தங்கர்பச்சான்.

புதுமைப்பித்தனின் 'சிற்றன்னைக்கும்' 'உதிரிப்பூக்களுக்கும்' உள்ள தொடர்பு மெலிதானதே. ஆனால் அது தமிழில் ஒரு நல்ல படமாய் இன்றைக்கும் இருக்கிறது. இந்திரா பார்த்தசாரதியின் 'குருதிப் புனல்' நாவலாகவே சிக்கலானது. வெண்மணியில் 44 பேரைக் கொளுத்தியதற்குக் காரண மானவர்களுக்கு இருந்த ஆண்மைக் குறைவு காரணமாக ஏற்பட்ட உளவியல் சிக்கல்களும் வெண்மணி கொடூரத்திற்கு ஒரு முக்கிய காரணம் என்கிற ரீதியில் நாவல் நகரும். அதை 'கண் சிவந்தால் மண் சிவக்கும்' என்கிற பெயரில் ஸ்ரீதர் ராஜா இயக்கினார். இளையராஜாவின் இசையையும் வைரமுத்துவின் வரிகளையும் தவிர அதில் நினைவில் வைத்துக் கொள்வதற்கு ஒன்றுமில்லை. 'மோகமுள்' திரைப்படமான பொழுது மரித்துவிட்ட ஜானகிராமனைக் குத்தியது.

சுஜாதா சற்று விரிவாக எழுதப்படவேண்டியவர். ஒருவனுக்கு சிறுநீரகம் செயலிழந்து சிறுநீரகம் தர உறவினர்கள் யாரும் தயாராக இல்லாமல் பணமும் இல்லாமல் அவன் மரிப்பதைப் பற்றிய கதை 'காகிதச் சங்கிலி' நாவல். அந்நாவல் 'பொய் முகங்கள்' என்கிற திரைப்படமானதைப் பற்றி அவரே எழுதியிருப்பார். 'ஒரு நாள் தற் செயலாக தினத்தந்தியைப் பார்க்கும் பொழுது, 'பொய் முகங்கள்' என்று ஒரு படத்தின் ஸ்டில் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. அதில் ஆட்டைப் பிடித்துக் கொண்டு ஒருவர் நின்றுகொண்டிருப்பார். நமது நாவலில் இப்படியெல்லாம் இல்லவே இல்லையே என்று இயக்குநரை தொலைபேசியில் விசாரித்தால், 'அதெல்லாம் காமெடி டிராக் சார். விட்டுருங்க. கண்டுக்கிறாதீங்க.' என்று பதில் சொன்னார் என்று எழுதியிருக்கிறார். 'ப்ரியா' படம் ஞாபகம் இருக்கிறதா? ஸ்ரீதேவியை சிங்கப்பூரில் உயர்ந்த கட்டடத்தில் சீனக் கடத்தல்காரர்கள் கட்டிவைத்திருக்க, அவர்களுக்குத் தெரியாமல் ஸ்ரீதேவியை மீட்க கம்பராமாயணத்தைத் துணைக்கழைத்து 'ஸ்ரீராமனின் ஸ்ரீதேவியே அனுமான் உன்னைக் காக்க, சிறையில் உன்னை மீட்க கடல்தாண்டி வந்தானம்மா, எதிர்ப்போரை வெல்வானம்மா' என்று ரஜினிகாந் பாட, சீனக் கடத்தல் காரர்கள் அந்த வரிகளைக் கேட்டு பதட்டப்பட..., மறக்க முடியுமா? சுஜாதாவின் 'கரையெல்லாம் செண்பகப்பூ' நாவல் படமாகும்பொழுது நமக்கு மிஞ்சியது வழக்கம்போல இளையராஜாவின் அபாரமான பாடல்கள் மட்டுமே. ஒரு கட்டத்தில் சுஜாதா தன் நாவல்கள் திரைப்படமாவதை அறவே தவிர்த்துவிட்டார்.

தொடர்தல் 98ம் பக்கம்

அம்மா வந்தாள்...

97ம் பக்கத் தொடர்ச்சி...

பூமணி எழுதி இயக்கிய 'கருவேலம்பூக்கள்' திரைப்படம் ஒரு ஆவணப் புனைவாகவே திரையில் வந்தது.

நாஞ்சில் நாடனின் குறிப்பிடத்தகுந்த நாவலான 'தலைகீழ் விகிதங்கள்' பேசுவது வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்கும் ஒருவனின் துயரம். நாவலில் அது மிக வலிமையாக துயரார்ந்து சித்தரிக்கப்பட்டிருக்கும். நாவல் எழுதி நாற்பதாண்டுகள் கழித்தும் இன்றைக்கும் உங்களை துயர் கொள்ளவே செய்யும். அது தங்கர்பச்சான் இயக்கத்தில் திரைப்படமாகும்பொழுது படத்தின் தலைப்புக்கு மிக நேர்மையாக இருந்தது. படத்தின் தலைப்பு - சொல்ல மறந்த கதை.

தங்கர்பச்சானின் 'கல்வெட்டு' சிறுகதை மூலத்தை மிஞ்சி 'அழகி' என்று ஓர்மையில் நிற்கும் ஒரு படமாகியது. அவருடைய மற்றொரு நாவலான 'ஒன்பது ரூபாய் நோட்டு' திரைப்படமாகும்பொழுது நாவலின் சாரம் இறங்கவில்லை.

பாஸ்கர் சக்தியின் 'அழகர்சாமியின் குதிரை' சிறுகதை அதிக சேதராமில்லாமல் திரைப்படமாகியது. திரைப்படத்திலும் குதிரை குதிரையாகவே இருந்தது. நரி பரியான மேஜிக்கல் ரியலிச பாரம்பரியத்தில் வந்தவர்கள் அல்லவா நாம்? நம் சினிமாவில் குதிரைகள் கோவேறு கழுதையாகும் அபாயம் நிறையவே உண்டு.

நீல. பத்மநாபனின் 'தலைமுறைகள்' அவருடைய நாவல்களில் குறிப்பிடத்தகுந்த ஒன்று என்று சொல்லப்படுவதுண்டு. அது, 'மகிழ்ச்சி' என்ற பெயரில் திரைப்படமான போது தலைமுறைகளைக் கடக்கவில்லை.

ஜெயமோகனின் 'ஏழாம் உலகமும்' டேனியலின் 'எரியும் பனிக்காடும்' திரைப்படமாகும் போது அங்கு நிலப்பரப்புகளும் உருப்படிகளும் மாத்திரம் கடத்தப்பட்டன.

தொகுக்கும்பொழுது, 'உதிரிப்பூக்கள்', 'அழகி', 'அழகர்சார்மியின் குதிரை' ஆகிய படங்கள் மட்டுமே என்றென்றைக்குமாக நிற்கின்றன.

இது யாருடைய குற்றம்? தனிநபர்கள் சார்ந்ததல்ல.

கூடுதலாக மிக சுமாரான படைப்பாளிகளின் படைப்புகள் நான்கைந்து திரைப்படங்களுக்கு மேல் சினிமாவாகியிருக்கின்றன. உதாரணத்திற்கு சிவசங்கரி, மணியன், புஷ்பா தங்கதுரை, மகரிஷி, லட்சுமி போன்றோர். இவர்கள் எழுதிய காலத்தில் தமிழில் ஆளுமைமிக்க படைப்பாளிகள் இல்லையா? நிச்சயமாக முன்பும் பின்பும் இருக்கவே செய்கிறார்கள். அசோகமித்திரன் இந்தக் காலத்தில்தான் எழுதினார். ப. சிங்காரத்தின் நாவல் அப்பொழுதுதான் வந்தது. ஆதவனின் நல்ல நாவல்களும் அப்போதுதான். தி. ஜானகிராமனின் மகத்தான சிறுகதைகள் எழுதப்பட்டதும் அப்பொழுதுதான். இவர்கள் எல்லாம் சினிமாவில் விவாதிக்கப்பட்டார்களா? நாமறியோம்.

இலக்கியம் எந்தளவிற்கு சமூகமயமாகி இருக்கிறது என்பதில்தானிருக்கிறது இதற்கான விடை. இன்றைக்கும் நாவலோ, சிறுகதையோ, கவிதையோ 500 பிரதிகள் மூன்று வருடங்கள் என்ற கணக்கில்தான் விற்றுக்கொண்டிருக்கின்றன. மூன்று வருடங்களில் விற்றுவிட்டால் பெரும் சாதனை. இலக்கியம் என்பது இன்றைக்கும் தமிழில் ஒரு ரகசியக் குழுதான். இலக்கியம் சமூகமயமாகவே இல்லை. 70களிலும் 80களிலும் 90களிலும் சுமாரான படைப்பாளிகளின் படைப்புகளே சினிமாவை வந்தடைகின்றன. 2000த்திற்குப் பின் உலகமயமாக்கலை ஒரு மைல்கல்லாக வைத்தால் இணையத்தின்வழி வாசிப்பு சற்று விரிவடைந்தது எனலாம். ஜெயமோகன் போன்ற படைப்பாளியை 70களில் சினிமாவில் பங்களிக்கக்கூடியவராக, நீங்கள் கற்பனை செய்ய முடியாது.

இலக்கியப் படைப்புகள் சினிமாவிற்குள் கூடுதலாக வந்திருக்கும் கேரள சமூகத்தின் நிலவரம் வேறு. எண்பதாண்டுகால இடதுசாரி இயக்கப் பின்னணி, கல்வியறிவு, மலையாளிகளின் விழிப்புணர்வு, ஒரு கிராமப் பொருளாதாரம் போல இருக்கக்கூடிய மலையாள சினிமாவின் வியாபார எல்லைகளும் மலையாள சினிமாவிற்குள் இலக்கியத்தைத் தொடர்ந்து அமதிக்கிறது.

ஓரளவிற்கு மக்களுக்கு ஓர் எழுத்தாளன் என்பவன் மதிக்கப்படவேண்டியவன் என்று தெரிந்திருக்கிறது. ஓர் எழுத்தாளனின் புகழ் பெற்ற ஆக்கம் ஓரளவுக்கேனும் வாசிக்கப் படுகிறது. அது திரைப்படமாகும்பொழுது சரியாக வந்திருக்கிறதா என்று கண்டு பிடிக்க ஒரு கூட்டம் காத்திருக்கிறது. காலகாலமாக சீரிய இலக்கியவாதிகள் சினிமாவிற்குள் இயங்கிக்கொண்டேதான் இருக்கிறார்கள். சினிமாவை நவதீண்டாமையோடு அணுகுகிற போக்கு அங்கு ஒரு காலத்திலும் இல்லை. நம் நிலத்தில் இப்பொழுதுதான் அது உடைபடத் துவங்கியிருக்கிறது. வேறு வேறு வாழ்க்கை சார்ந்த பிரதிகள் அங்கு கிடைக்கிறது. உதாரணத்திற்கு திருடன் மணியம்பிள்ளை, ஆமென், வினயா, நளினி ஜமீலா, ராமச்சந்திர நாயர், சி.கே. ஜானு, அஜீதா போன்றோரின் வாழ்வை எழுதுவதற்கு அங்கு எழுத்தாளர்கள் தயாராக இருக்கிறார்கள். தமிழில் இப்படியான ஒரு தன்மை இன்னும் துவங்கவே இல்லை. இன்றைக்கும் அங்கு திரைக்கதையாசிரியன் அல்லது எழுத்தாளனே அங்கு தயாரிப்பாளரிடம் கதை சொல்ல வேண்டும். இயக்குநர் அல்ல. புத்தகங்கள் 75 பதிப்புகள், 80 பதிப்புகள் வெளிவருகின்றன. எழுத்தையே முழுநேர வாழ்வாகக்கொண்டு வாழ்வது அங்கு சாத்தியமே.

கல்பற்றா நாராயணனோடு ஆலப்புழையில் ஒரு காலை நேர நடையின்போது எதிர்பட்ட ஒருவர் 'நீங்கள் கல்பற்றா நாராயணன் தானே?' என்றார். கல்பற்றா இல்லை என்றார். அவர் அகன்றதும் 'மனுசமாருக்கு ஒரு ப்ரைவஸி இல்லா. எவிட போயாலும் கல்பற்றா அல்லே... கல்பற்றா அல்லே என்ற சோதியம்' என நம் மூரில் ஒரு பிரபலம் அலுத்துக்கொள்வதைப் போல அலுத்துக்கொண்டார். அதுவே அவர்களின் சூழல். வண்ணதாசனோடு இந்த 15 ஆண்டுகளில் பல தெருக்களில் பல ஊர்களில் நடந்திருக்கிறேன். புத்தகக் கண்காட்சி அல்லாது வேறெங்கும் அவரை 'வண்ணதாசனா?' என்று யாரும் கேட்டதே இல்லை.

ஒரு குறள் உண்டு. அறிவாளிகளை மதிக்காத சமூகம் உருப்படாது என. அறிவாளி என்பதை நாம் படைப்பாளிகள் என்றும் பொருள் கொள்ளலாம். வெள்ளத்தனைய மலர்நீட்டம் என்று மற்றொரு குறளையும் சொல்லலாம்.

கமல்ஹாசன், தி. ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்' நாவலை, திரைப்படமாக்கவேண்டுமென்று பல சமயங்களில் நேர்காணலில் சொல்லி இருக்கிறார். அது இன்று வரை நிகழவில்லை. தமிழ்த்திரையில் தி. ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்' எப்பொழுது வருவாள்? நாமறியோம். இப்போதைக்கு அரசியலில் மாத்திரமே மறுபடியும் மறுபடியும் நமக்கு அருளப்பட்டிருக்கிறது 'அம்மா வந்தாள்'.

samraj@thaiveedu.com

வீடு வாங்க விற்க...

10 வருட வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்

வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

வாங்கப் போகிறீர்களா?

- தரமான வீடு தவறிப்போகாது
- பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- வாங்கியபின் ஏமாற்றங்கள் இல்லை
- பெருவருவாய் தரும் முதலீடு

விற்கப் போகிறீர்களா?

- இலவச வீட்டுப் பரிசோதனையும் ஆலோசனைகளும்
- விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்

★ Cash incentive for referrals

For Sellers

Free Home Inspection!
Free Market Evaluation!
Free Home staging Cosultation!

www.vela4homes.com

Estate Home

App 9,000 sft
5+ Bedrooms, 1.34 Acres
6 WR + 6 Fire Places
Fully Renovated
Nanny Suite

Detached.

3 Bedrooms,
4 WR
Fully Upgraded
Finished Bsmt

Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com

Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8

Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2016
Chairman's Club Award Winner 2017
HOMELIFE HIGHER STANDARDS

வீதிக்கு வந்தவன்

- சார்ள்ஸ் குணநாயகம் -

பஸ் தரிப்பிடத்தை வந்தடைந்து விட்டது. பயணிகள் மிக அவசரமாக முண்டியடித்துக் கொண்டு இறங்கிக் கொண்டிருந்தனர். நானும் அவர்களுடன். இந்த சந்தடிக் குள் 'ஆம்புலன்ஸ்' வாகனமொன்றும் இரண்டு 'பொலிஸ்' வண்டிகளும் ஊதிக் கொண்டு கடந்து போகின்றன.

ஏதோ நடந்து விட்டது.

நாளாந்தம் விபத்துக்களினால் இறந்து போ கின்ற மனிதர்கள் ஏராளம். அதிலும், இப் படியொரு நெருக்கமான நகரங்களின் வாகன ஓட்டமும் இந்த பனி படர்ந்த வீதிகளின் சறுக்கல்களும் சாரதிகளை யமனாக் கிவிடுகின்றதுதான்.

நான் வெளியே இறங்கியபோது வெண்பனி துகள்களாகிக் கொட்டிக் கொண்டிருந்தன. இந்த மஞ்சள் தெருவிளக்குகளின் ஒளி, படர்ந்து கிடக்கும் பனிப் படைகளின் மீது பரவி அற்புதமாய் மினிங்கிக் கொண் டிக்கின்றன. எனது 'மப்பிளரை' கழுத்துக் கும் காதுகளுக்கும் இறுக சுற்றிக்கொண்டு நடக்கின்றேன்.

ஒரு குளிர்காலத்து இரவென்பதால் எல்லோ ரும் மிக வேகமாகவும் சோடிகள் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டும் நடக்கி றார்கள்.

நான் தொடரூர்ந்து நிலையத்துக்கு ஏறும் மின்படிகளினூடே மேலே ஏறி நடந்தேன். படிகளை கடந்து திரும்பும் ஒரு முடக் கில் தெருப்பாடகன் ஒருவன் கிற்றாரை இசைத்து பாடிக்கொண்டிருந்தான். அவ னுக்கு முன்னால் விரிக்கப்பட்டிருந்த துண யில் சில சில்லறைகள் மட்டும் கிடந்தன. இந்த தொடரூந்து நிலையத்தோடு இணைந் து பரந்துகிடக்கும் பல கடைத் தொகுதி களின் தொடர் இந்த பெருநகரத்துக்கு விசேடமானது.

கோடைகாலம், குளிர்காலம் என்றில்லாமல் எப்போதும் நிரம்பி வழியும் சனக்கூட்டமும், மூலைக்கு மூலை பாடிக்கொண்டிருக்கும் கலை பிச்சைக்காரர்களும், மூடாமல் இயங் கும் உணவுச் சாலைகளுமாக இது ஒரு தூங்காத நகரமாக வாழ்ந்து கொண்டே இருக்கிறது.

நான் வந்து மேல் தளத்தில் அமைந்திருந்த இருக்கை ஒன்றில் அமர்ந்து கொண்டேன். எதிரே இருந்த இருக்கைகள் எங்கும் சோடிகள் பல தம்மை மறந்து உதட்டு முத்தங்களால் காதற் கதை பேசிக்கொண் டிருந்தார்கள்.

'வாக்கிடோக்கி' பொலிஸ்காரர்களும் 'ஸ்ரெச்சர்' தாங்கிய இரண்டு 'அம்புலன்ஸ்' காரர்களும் எனக்கு முன்னால் ஓடிக்கொண் டிருந்தார்கள். இங்கு ஏதோ நடந்துவிட்டது. இந்த நிலையத்துக்குள் ஏதாவது ஒன்று எப்போதும் நடந்து கொண்டுதான் இருக் கிறது. என்னதான் நடந்துவிட்டது? நானும் அவசரப்பட்டேன்.

அங்கே சுவர் ஓரமாக இருந்த பச்சை தொலைபேசி கூண்டுக்கு அருகே சனமெல் லாம் தூர நின்று வேடிக்கை பார்த்தனர். நானும் கிட்டப்போய் எட்டிப்பார்த்தேன். ஒரு மனிதன் எந்த அசைவுகளுமற்று கிடக் கிறான்.

என்ன இவன் செத்துப்போனானா? அல்லது இன்னும் உயிர் உள்ளதா? முதலுதவியும் அவசர சிகிச்சையும் அவனுக்கு கொடுத் தார்கள். பின்னர் அவனை படுக்கையில் போட்டு தூக்கிப்போனார்கள். அப்போது தான் அவன் முகத்தைப்பார்த்தேன்.

வேடிக்கை பார்த்த சனங்களும் தோள்களை தூக்கி, உதடுகளை பிதுக்கி, உடல் மொழி யூடும் பேசிக் கொண்டார்கள்.

'இவன் தூள் விற்கிறவன்... தூள் பாவிக் கிறவன்... கஞ்சாவும் விற்கிறவன்.'

'இவ்விடத்திலதான் படுத்து எழும்புறவன்.'

'குப்பைக்கூடைகளில் உணவு தேடிச்சாப் பிடுகின்றவன்'

'இவன் ஒரு ஆசியன் அல்லது சூரினாம் காரன்.'

இவனொரு இலங்கையன். ஒரு தமிழன் என்பதை என்னால் மட்டும்தான் அடை யாளம் காண முடிந்தது.

நானும் தொடரூந்து மேடைக்கான படிக ளில் இறங்கி தொடரூந்தில் ஏறி அமர்ந்து கொண்டேன்.

தொடர்ந்தும் அவன் நினைவுகள்...

அன்று ஒரு புதன்கிழமை. கோடை கா லத்து வெய்யிலும் இழந்தென்றலும் மன துக்கு சந்தோசம் தந்தன. என் இரவுப் பள்ளிக்கூடம் முடிந்து பஸ் ஏறி, அதே தொடருந்து நிலையித்துக்கு வந்தேன்.

பஸ் பத்து நிமிடங்கள் தாமதித்ததால் எனது தொடருந்தை கோட்டைவிட்டு விட்டேன். அடுத்து இன்னும் முக்கால்மணி நேரம் காக்க வேண்டும். என்ன செய்வது...?

நேரம் இரவு பத்தை தாண்டிவிட்டதால் சன நடமாட்டம் சற்று குறைந்திருந்தது.

ஆங்காங்கே சிலர் காட்சி அறைகளை பார்த்துக்கொண்டு நடந்து கொண்டிருந் தனர்.

தெருப்பிச்சைக்காரர்கள் மூலைகளில் தமது மூட்டை முடிச்சுக்களுடன் உறங்கிக்கொண் டிருந்தனர்.

நித்தக்குடிகாரன் ஒருவன் தூண் ஒன்றை பிடித்துக்கொண்டு டச்சில் ஏதோ உளறிக் கொண்டிருந்தான். இடையிடையே ஒரு பெண்ணின் பெயரை சொல்லி கெட்ட வார்த் தைகளால் திட்டிக்கொண்டான்.

அவனைக் கடந்து நடந்தால், வடக்கு வாச லுக்கு இறங்கும் படிகள் உள்ளன. அந்த முடக்கில் இருந்த விளம்பரப் பலகையில் பிறந்த குழந்தை ஒன்றுக்கு நச்சுக் காற்று தாக்காமலிருக்க முகக்கவசம் போடப்பட்ட பெரிய படம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

அதன் கீழ் ஒதுக்குப்புறமாக மூன்று பேர் குந்தியிருந்தார்கள். அவர்கள் மூவரும் ஏதோ அவசரத்தில் காரியமாற்றுவது போல வே இருந்தது. ஏதாவது திருடிக்கொண்டு வந்து விட்டார்களளோ?

எதேச்சையாக பார்ப்பது போல் அடிக்கடி நோட்டம் விட்டேன். உள்ளூர கொஞ்சம் பயமும் இருந்தது.

ஒருவன் வெள்ளித்தாளில் வைத்து லைட்ட ரால் எதையோ சூடாக்கினான். மற்றவன் கத்தி போன்ற ஒன்றினால் மெல்ல மெல்ல எதையோ சேர்த்து கலந்து கொண்டிருந் தான். அடுத்தவன் துண்டுகளாக்கப்பட்ட வெள்ளை தாள்களை சுருளாக்கினான். அவர்கள் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு அவசரமாக காரியமாற்றிக் கொண்டிருந் தனர்.

பொலிஸ் வரக்கூடும் என்ற அச்சம் என நினைத் துக்கொண்டேன். அவர்களின் ஒரு வன் உயர்ந்து வளர்ந்த டச்சு வெள்ளை யன். தாடியும் முடியும் வளர்ந்து கிடந் தன. மற்றவன் ஆபிரிக்க கருப்பனாக இருக்கலாம். சிறிய சுருள் முடிகளும், பெருத்த உதடுகளும். மற்றவன் ஆசி யாக்காரன். தலைமுடி வளர்ந்து தோள் வரை கிடந்தது. சிலவேளை அவன் சூரி னாம் நாட்டுக்காரனாகவும் இருக்கலாம். அவர்கள் போதை பொருளான கிரோயி னையோ, மருயுவான என்கிற கஞ்சாவை யோ பாவிப்பதற்கான ஆயத்தத்தில் இருந் தார்கள்.

உலகெங்கும் இன்று இளைஞர்களை அடி மையாக்கியுள்ள ஒரு பயங்கரமான போ தைப்பழக்கம் இது. ஐரோப்பாவில் மட்டு மல்ல இலங்கைத்தீவிலும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து அச்சப்படுகின்ற மிக முக்கியமான விடை யங்களில் இதுவும் ஒன்று.

'லைற்றரை' வைத்திருந்த அவன் என்னை ஒரு விதமாக பார்த்தான். நான் சட்டென

தொடர்தல் 101ம் பக்கம்

வீதிக்கு வந்தவன்...

100ம் பக்கத் தொடர்ச்சி...

திரும்பி எனது கைகடிகாரத்தில் நேரம் பார்த்தேன். இன்னும் முப்பது நிமிடங்கள் உள்ளது. அவர்களைப் பார்க்காதது போல் மறுபக்கம் திரும்பி நடந்தேன்.

இவ்வகை போதைப்பொருள் பாவனை ஒல்லாந்தின் பல பகுதிகளிலும் இதற்கென நடத்தப்படும் 'கோப்பிசொப்'களிலும், பெருநகரங்களின் விபச்சாரத் தெருக்களிலும் நாளாந்தம் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

இந்தத் தேவைகளுக்காக பல உல்லாசப் பிரயாணிகள் ஒல்லாந்துக்கு வந்து போகிறார்கள். இவர்களுடன் அரசியல் அகதிகளாக வந்த இலங்கையர்களும் இவ்வகைப் போதை பொருள் பாவனைகளுக்கு அடிமைகளாகி சீரழிந்திருப்பது ஒன்றும் மறைக்கப்படவேண்டிய விடையங்களே இல்லை.

எனக்கு பசி குடலைக்கடித்துக் கொண்டிருந்தது. திரும்பி நடந்து 'சினைக்பார்' என்னும் ஒரு சிறு உணவுக்கடைக்குள் நுழைந்து உருளைக்கிழங்கு பொரியலும் 'கறிச்சோசும்' வேண்டி சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்.

எனக்கெதிரே இருந்த ஒரு நாற்காலியில் ஒருவன் வந்தமர்ந்தான். அவன் அந்த மூவரில் ஒருவன். அந்த ஆசியன். ஒரு சிறு தாடியும் மீசையும் இருந்தது. வளர்ந்திருந்த முடியைசிறு குடும்மியாக கட்டிருந்தான். சில பகுதிகளில் காயத் தளிம்புகள் இருந்தன. பொதுநிறம்.

கீழே எதையோ தேடினான். சில சிறு சிகரட் துண்டுகளை பொறுக்கி எடுத்தான். பின்னர் நிமிர்ந்து என்னைப் பார்த்தான். நானும் நேராய் அவனைப் பார்த்தேன். அவனுடன் கதைக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு சற்றும் இல்லை.

அவனே 'ஹலோ' என்றான்.

நானும் பதிலுக்கு 'ஹலோ' என்றேன்.

'நீங்கள் எந்த நாட்டவர்' டச்சில் கேட்டான்.

'இலங்கையன்'

'தமிழரா?'

'ஓம்'

'நானும் தமிழன் தான்' அவன் தமிழில் சொன்னான்.

அவனிடம் ஒரு சிறு பதட்டத்தையும் இயல்பான சோகத்தையும் அவதானித்தேன். எனக்கு கொஞ்சம் வெட்கமாக இருந்தது. சுற்றும் முற்றும் பார்த்தேன். எனக்கு தெரிந்தவர்கள் ஒருவரும் இல்லை.

'உருளை கிழங்கு பொரியல் சாப்பிடுகிறீர்களா?' தமிழிலே கேட்டேன்.

'ஓம்'

சாட்பிட்டுக்கொண்டே இருவரும் பேசிக் கொண்டோம்.

'ஊரில எந்த இடம் தம்பி நீங்கள்?'

'கொக்குவில், பூநாறி மரத்தடி'.

'அப்பா அம்மா எல்லாரும் எங்க இருக்கினம்?'

'தெரியாது. இருபது வருஷமா தொடர்பில்லை'.

'இருபது வருஷமா?'

'ஓம். எனக்கு இரண்டு தங்கச்சிமார். அப்பா ஒரு மாஸ்டர்'.

'எப்ப இங்க வந்தனீர்?'.

'மூண்டு வருஷம். எட்டுவருஷம் சிறையில் இருந்தனான்'.

'சிறையோ எங்க?'

'ஜேர்மனியில். ஹரோயின் கொஞ்சம் கீழ வைச்சுக்கொண்டு வந்தனான், பிடிபட்டுப் போனன்'.

'அதுக்கு முதல்'

'யாழ்பாண கல்லூரியில படிச்சு ஏ.எல் எழுதின்னான்'.

இயக்கம் ஒண்டோட போய் சேர்ந்தான். இந்தியாவிற்கு பயிற்சிக்கு அனுப்பினாங்கள். அங்க ஆளுக்காள் இயக்க மோதல். உள்ளுக்குள்ளையும் முரண்பாடுகள். ஆளையாள் போட்டு தள்ளினாங்கள். நானும் உயிர்தப்பி டில்லி, மும்பை என்று திருஞ்சு போட்டு, பாகிஸ்தானுக்கு போயிட்டன். அங்கயிருந்துதான் ஜேர்மனிக்கு வந்தனான்'.

'சிறைக்கு பிறகு நன்நடைத்தையில் வெளியில் விட்டிட்டாங்கள்'.

'அப்ப இங்க?'.

'ஓம். தெருவில இருக்கிறன்' பொது அமைப்புகள் சாப்பாடு தருகினம், கடும் குளிரெண்டால் படுக்கையும் தருவினம்.'

'இப்படியே இருந்து என்ன செய்யப்போறீர்? அரசியல் தஞ்ச விண்ணப்பம் ஒண்டைப் போட்டால் ஒரு கூடாரமும் சாப்பாடும் கிடைக்குமே?' என்றேன்.

மௌனமாக கேட்டுக்கொண்டான்.

மௌனம் சம்மதமில்லை என்பதை அவன் முகம் காட்டியது. அவனது வாழ்வின் பக்கங்களை என்னோடு பகிர்ந்து கொண்டதில் அவன் சந்தோசப்பட்டானா என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் தன் கதையை யாருக்காவது சொல்ல வேண்டும் என அவன் நினைத்திருக்கலாம்.

அவன் பட்ட பல எதிர்மறை அனுபவங்களால் நிதானமாகவே பேசினான். அவன் சாப்பிட்டு முடித்த கையோட அவனது ஆபிரிக்க கூட்டாளி வந்து அழைத்தான்.

'அண்ண நான் போயிட்டு வாறன், நன்றி அண்ண' என்று எழுந்து போய்விட்டான்.

அதற்கு பின்னர் அவனை மூன்று நான்கு தடவைகள் கண்டேன், அதே கூட்டாளிகளோடு.

அதற்கு பின்னர் இன்று.

அன்று அவனுடன் ஏனோ தானோ என்று கதைத்துக் கொண்ட கதைகள். எனகென்ன என்று ஒதுங்கி இருந்து வேடிக்கை பார்க்கும் ஒருவகை சுயநல புத்தி...

ம் நான் என்ன செய்யலாம்?

தமிழாக்களிட்ட காசு சேர்த்து இலங்கைக்கு அனுப்புவமா...? அனுப்புவது யாருக்கு?

ஒருவன் இறந்து தொலைந்த பின்னர் சோகமும் இரக்கமும் கொள்ளுகின்ற புத்தி ஏன் எனக்கு?

மீண்டும் மீண்டும் மீண்டும் எனக்கு அவனோடு பேசியவையும் தன் குடும்பம் பற்றி அடிமனதில் பொதித்திருக்கும் அவனது சோகமும் தனது இயலாமையை ஒரு நண்பனுக்கு சொல்லுவதுபோல் எனக்குச் சொன்ன விதமும் என் நினைவில் வந்து கொண்டிருக்கின்றன.

அவன் தன் கூடாரத்துக்குள்ளேயே இறந்து போனான். அவனது உயிரற்ற உடலையே அவர்கள் தூக்கிப்
போனார்கள்.

charles.g@thaiveedu.com

வீடு வாங்க விற்க

$1,199,000

South of Patterson
4 + 7 Bedrooms 7 Washroom
W/O Basement Finished

அனைவருக்கும் எமது இதயம் கனிந்த
நத்தார் வாழ்த்துக்கள்

$375,000

Markham/McNicoll
Commercial Condo

Kuga Raveendrarajah
Real Estate Broker
Dir: 416-843-8585

HOMELIFE HIGHER STANDARDS

Mathan Selvendarakumaran
Sales Representative
Dir: 416-625-2870

MLS MULTIPLE LISTING SERVICE®

Shajetha (Suzy) Sabanathan B.Sc.
Sales Representative
Cell: 416-298-3200

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6

சேமிப்பின் அடையாளம் அழகானதோர் வீடு
Bus: 416-298-3200
*Independently Owned and Operated, Realtor

Bringing Your Dreams To Life!

RE/MAX

மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி

RE/MAX REAL ESTATE CENTRE INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED

Mahesan Subramaniam
BROKER

Free Home Evaluation with No Obligation

416-816-0141

141-1140 Burnhamthorpe Road West, Mississauga, ON L5C 4E9
Office : 905-270-2000 Fax : 905-270-0047
* Not intended to solicit properties already listed for sale, or buyers under contract.

Income Tax
Augustine & Associates
25 Years Canadian Experience

" Rapid,Accurate & Affordable Service."
(Quebec, Ontario & Other Provinces)
Personal
Business
Corporate
GST,HST & QST
Bookkeeping
Payroll
T4 & T4A
Rental Releve 31

EFILE

Wimal Augustine
ON: 416 617 6735
QC: 514 279 7138
Toll: 1 800 668 9048

YOUR CHOICE IN
REAL ESTATE

Jesmine J Wimalendran
647.871.1921

Wimal Augustine
416.617.6735

www.propertyrealtors.ca

HOMELIFE
HomeLife/Future
Realty Inc., Brokerage. Independently Owned And Operated
Office: 905.201.9977

நினைவேற்றம்: மூலைக் கல்

- தேவகாந்தன் -

'கடந்த காலப் பிரதேசங்களுக்குத் திரும்ப வரும்போது எல்லாவற்றோடும் பிசிறில்லாமல் பொருந்திக்கொள்ளவே ஞாபகங்கள் எப்போதும் ஆர்வமாக இருக்கின்றன' என 'கடல்' நாவல் நாயகனது எண்ணமாக வரும் ஒரு சந்தர்ப்பத்தை ஆசிரியர் ஜோன் பான்வில் விவரித்திருப்பார். மனங்களும் ஞாபகங்களும் சார்ந்த சரியான கணிப்பாக, கடந்த 2018இல் நான் எனதூர் சென்று திரும்பிய பின் கிளர்ந்த ஞாபகங்களின் பொருந்திப்போதல் சம்பந்தமான இடர்ப்பாடுகளினால் உணர முடிந்திருந்தது.

நாங்கள் குடியிருந்த வீட்டிற்கு அண்மையில் தான் இருந்தது நடேசபிள்ளையின் வீடு. இடையிலே சில வீடுகளும், குடிமனயற்ற ஒரு பெரிய வெறுங்காணியும். அதை பாம்புக் காணியென்று யாரும் சொல்லாவிட்டாலும், பாம்புகள் பிணைந்து முறுகி ஊர்ந்து திரியும் அயல் என்பதன் பயம் மட்டும் இருந்துகொண்டிருந்தது. அந்தக் காணிக்குள் ஒரு அழிநிலை எய்திய ஒரு கட்டுக் கிணறும், அலைந்து திரியும் கால் நடைகள் வெளியிலிருந்து நீரருந்துவதற்காக கட்டப்பட்ட உடைந்த தொட்டியும், அதற்கு கிணற்றிலிருந்து நீரிறைப்பதற்கான ஒரு செடிகள் முளைத்த, வெடிப்புகள் விழுந்ததுமான சுமார் நூற்றைம்பது அடி நீள வாய்க்காலும் இருந்திருந்தன. வேலியோரத்தில் சில பனை மரங்களையும், புல் பூண்டுகளையும் தவிர காணிகூட வெறுமைபற்றியிருந்தது.

பல காணிகளுள் ஒன்றுக்கு மேலான குடிசைகள் அமைந்திருந்த நிலையில், அந்தக் காணிமட்டும் ஏன் யாரினதும் குடிமனையற்றதாய் வெறித்துக் கிடக்கறதென்ற எண்ணம் என்றைக்கும் என் மனத்தில் உறைத்ததில்லை. அவ்வாறு உறைக்கிற வயதும் இல்லை. எட்டு ஒன்பது வயதில் அது சாத்தியமில்லைத்தான். வெகு காலத்திற்கு முன்பாக அந்தக் காணியில் குடியிருந்த ஒரு குடும்பம் வாடைக் காற்றுக் காலமொன்றில் பிடித்த தீயில் வீடு மொத்தமும் எரிந்தழிந்து போனதோடு ஊர்விட்டுச் சென்றதாக பேச்சுவாக்கில் யார் யாருக்கோ கூறியதைச் செவமடுத்திருந்த ஞாபகம் இருந்தது. அதற்கடையாளமாக காணியின் நடுவில் மண் திட்டொன்று இருந்ததையும் கண்டிருந்தேன்.

அதற்குமேல் நினைப்பதற்கு பெரிதாக எதுவும் இருக்கவில்லை. அடிக்கடி நான் நடந்துசெல்லும் பாதையாக அது இல்லாத வரையில் அழுத்தமான நினைவுகளுள் அந்தக் காணியும் பதிந்துகொள்ளவில்லை.

2018இல் நான் ஊர் சென்றிருந்தபோது அந்தக் காணியைக் கடந்துசெல்ல நேர்ந்த வேளையில் அதைக் கண்டு திகைத்துப் போனேன். அரை நூற்றாண்டு கழிந்திருந்த நிலையிலும் அந்தக் காணி அந்தப்படியே இருந்திருந்தது. அது சாதாரணமில்லை. கிராமமே மாறிப்போயிருந்தது. கிடுகு வேலிகள் மதில்களாகியிருந்தன. மண்வீடுகள் கல்வீடுகளாயிருந்தன. இன்னும் ஒரு மாடிவீடுகூட அங்கே தோன்றியிருந்தது. ஆனால் பாழ்ங் கிணற்றுக் காணிமட்டும் தன் பழைய ஸ்திதியில் எந்த மாற்றமுமின்றி, அதனாலான ஒரு சோகத்தோடும்போல், ஏன் இருந்துகொண்டிருந்தது?

இதற்கு என் ஞாபகங்களைக் கிளறிக் கொண்டும், எல்லாவற்றோடும் பிசிறில்லாமல் பொருந்திப்போகும்படி ஞாபக தகவமைப்பைச் செய்துகொண்டும் நடேசபிள்ளையிலிருந்து இந்தக் கதையை நான் துவங்கவேண்டும்.

நடேசபிள்ளையை ஊரிலே பெரியவர்கள் அழைப்பதுபோலவே நானும் நடேசு என்றுதான் குறிப்பிட்டு வந்தேன். அதை அவதானித்திருந்த ஐயாதான் ஒருநாள் நடேசு மாமாவென அழைக்கவேண்டுமென கண்டித்து வைத்தார். நடேசுவுக்கு என்னைவிட ஓரிரு வயது குறைந்த இந்திராணியென்ற சிவப்பான அழகிய ஒரு மகள் இருந்தவகையில், அவ்வாறு அழைப்பதில் புதிதான சொந்தம் உண்டாகிவிட்டதுபோன்ற எண்ணத்துடன் இந்திராணியையும் வேறான ஒரு பார்வையில் பார்க்கத் துவங்கிவிட்டேன். சிறுவயதின் அவ்வகையான ஆதர்ஷங்கள் பலவற்றை என் வயதுச் சிறுவர்கள் பலரிடத்தில் நான் பலமுறையும் கண்டிருந்ததில் என் நினைப்பு புளகிதத்தையே என்னிடத்தில் செய்திருந்தது.

குடும்பத் தொடர்பு காரணமாய் எமது இரு குடும்பங்களுக்குமிடையே இருந்த நெருக்கத்தில் என்னைக் காணும்போது இந்திராணி சிந்தும் புன்சிரிப்பில் எனக்குள் சினிமாப் பாடல்கள் ஒலிக்கத் துவங்கின. நான் கனவுகளில் நடிக்க ஆரம்பித்தேன்.

இவ்வாறான இனிய சூழ்நிலையில் ஒரு நாள் பாரிய வெடிப்பொன்று விழுந்து போனது.

அதை விளக்குவதற்கு முன்பாக மூலைக் கல்பற்றி சிறிது சொல்லவேண்டும்.

அந்தக் கால கிராமத்தின் ஒழுங்கைகளோ மக்கி ரோடுகளோ வெட்டுவீதியாக இருந்ததில்லை. மனிதர் நடப்பதற்கான, மாடுகளை வயல்வெளிக்குச் சாய்த்துச் செல்வதற்கான தேவைகளை நிறைவேற்றுமளவான விஸ்திரணம் கொண்டவையாக மட்டுமே இருந்தன. அதனால் தோட்டங்களுக்கு எரு ஏற்றிக்கொண்டும், கிராமங்களில் பின்னப்பட்ட கிடுகுகளை ஏற்றிக் கொண்டும் செல்ல நேரும் சமயங்களில் சின்ன வண்டில்களைவிட பெரிய வண்டில்கள் பெரும் சிரமப்பட்டன. மக்கி ரோடிலிருந்து ஒழுங்கைக்குத் திரும்பும் சமயங்களில் அவை பெரும்பாலும் மூலைவளவு வேலிகளைப் பிய்த்தெடுத்தன. அதனால் வண்டில்கள் வேலிகளை நெருங்கிவிடாத படி மூலைகளிலே கனமான கல்லைப் போட்டுவைக்கிற வழக்கம் உருவாகியிருந்தது. அவ்வாறு போடப்பட்ட கல்லே 'மூலைக் கல்' எனப்பட்டது.

எவ்வளவுதான் எடுத்துரைத்தாலும் மணல் ஒழுங்கைகளில் சைக்கிள் ஓட்டுவதற்குத் தேவைப்படும் சாமர்த்தியத்தை முற்று முழுதாக விளக்கிவிட முடியாது. அதில் செய்யப்படும் சாரதியம் மிகநுட்பமாகச் செய்யப்பட வேண்டியது. சாத்தியங்கள் அறவேயற்று சைக்கிள்களை உருட்டிக் கொண்டு செல்லவேண்டியதான சில இடங்களும் ஒழுங்கைகளில் அமைந்திருக்கும். அந்த சாத்தியமின்மைகளைச் சாத்தியமாக்கத் துணிந்து சைக்கிளை ஓட்டிச் செல்பவர்கள் மணலில் சில்லு சுழித்து விழுந்த சம்பவங்கள் ஊரிலே ஏராளம். மணலில் விழுவதால் காயமின்றித் தப்பிவிடுகிற வாய்ப்பைக்கொண்டு அம்மாதிரிச் சம்பவங்கள் மறைக்கப்பட்டுவிட்டாலும், கண்டிருந்தவர்களின் சாட்சியங்களால் தெரியவந்திருந்தது அவை அதிகமென்பது. எந்த இடத்திலும் தம் சாமர்த்தியத்தால் தப்பியவர்கள் மூலைகளில் தம் சமநிலை இழந்து காலை ஊன்றிச் சமாளிக்காமல் சைக்கிளை ஓட்டிச் சென்றவர்கள் அரிது.

சுருக்கமாக மணல் ஒழுங்கைகள் மற்றவர்களின் சாரதியத்தை தம்மிஷ்டத்தில் நடத்தின என்று சொன்னால் போதுமானது. அது போல அவை வண்டில்களையும் தாமே வழிநடத்துகின்றன. அதை மறந்த வண்டில் விற்பனையை மட்டுமன்றி சுகத்திற்கான தேவைகளையும் கொண்டிருந்தனதான். பனைகள் நிறைந்த என் கிராமத்தின் முக்கியமான கைத்தொழில்கள் இறக்குவது. அடுத்ததாய் பனைமரம் வெட்டுதல். அதற்கும் பின்னாலேதான் பாய் பெட்டி கடகம் முதலியன இழைக்கும் குடிசைத் தொழில்.

ஐயாவுக்குப்போலவே நடேசு மாமாவிற்கும் இருளத் தொடங்குகிற நேரத்தில் கள்ளுக் கொட்டில் போகிற பழக்கமிருந்தது. அது வெறுமனேகள் குடிப்பதற்கான இடம் மட்டுமில்லை, செய்திகள் ஊர்ப் புதினங்கள் பரிமாறும் இடமும்.

ஒரு அமாவாசை நாளில் கொட்டிலிலிருந்து சைக்கிள் ஓட்டிவந்த நடேசு மாமா ஒழுங்கையில் திரும்பும்போது எங்களது வளவு

தொடர்தல் 104ம் பக்கம்

நினைவேற்றம்...

103ம் பக்கத் தொடர்ச்சி...

மூலைக் கல்லில் இடித்து வேலி முட்கிள வையில் விழுந்து காயம்பட்டுப் போனார். பெரிய காயம்தான். கிளுவை முள் ஓரங் குல ஆழத்துக்கு மேல் தோள்பட்டையைக் கிழித்துப் போட்டிருந்தது. உடனடியாக தம்பிராசா பரியாரி வீடு போய் மருந்து கட்டிக்கொண்டவர், விடிந்தும் விடியாத காலை நேரத்தில் எங்களது வீட்டுக்கு மனைவியோடு வந்து படலையில் நின்று கூப்பிட்டார்.

'குமாரு, உன்ர வளவு மூலையில கிடக்கிற மூலைக் கல்லை பிரட்டிப் போடெண்டு எத்தினையோ தரம் சொல்லியிட்டன். நீயும் கவனிக்கேல்லை நானும் அப்பிடியே விட் டிட்டன். இப்ப என்னடாண்டா; நேற்று ராத்திரி கல்லில இடறுப்பட்டு விழுந்து காயமும் சரியாய்ப் பட்டுப்போனன். சைக் கிளும் இனி ஓடேலாதமாதிரி முன் சில்லு றிம்மும் வோக்கும் நெளிஞ்சுபோச்சு' என்றார் ஐயா எழுந்து வர.

அது கேட்ட அம்மா வந்து அக்கறையோடு அவரது காயம்பற்றி விசாரித்தாள். ஆனால் ஐயாவுக்கு அது சாதாரணமாய் இருந்திருக் கும், அத்தோடு அந்த விடிகாலைப்பொழு தில் வந்தது எரிச்சலையும் ஏற்படுத்தியி ருக்கும், அவர் அதுபற்றி வாய் திறக்க வில்லை. பின் நிதானமாய்ச் சொன்னார்: 'நடேசு, அந்தக் கல்லை நான் கொண்டு வந்து போடேல்லை. நான் இந்தக் காணியை வாங்கிக்கொண்டு வரேக்கயே அந்த மூலைக் கல்லு அதிலதான் கிடந் தது. அதுவும் பூதம் காவிவந்து போட்ட கல்லுமாதிரி அந்தளவு பெரிய பாறாங் கல்லு. வெளியில தெரியிறது சின்னதெண் டாலும், மண்ணுக்குள்ள தாண்டு கிடக் கிறது பெரிசு. என்னால அதை பிரட்டிப் போட ஏலுமெண்டு நான் நெக்கேல்ல. வேணுமெண்டா நீயே பிரட்டிப் போட்டிடு, நான் வேண்டாமெண்டு சொல்லமாட்டன்.'

'அது உன்ர காணியின்ர மூலைக்கல்லு இல்லையோ பின்னை?' கோபத்தோடு நடேசு மாமா கேட்டார்.

'என்ர காணி மூலைக்கல்லுத்தான்.'

'வேற ஆரும் வந்து அதைக் கிண்டி வெளி யில போட்டா நீ சும்மா விட்டிடுவியோ?'

'அதெப்பிடி, வேற ஆரும் வந்து கிண்டிப் போட ஏலும்?'

'அப்ப, போற வாற சனத்துக்கு இடஞ்சல் வந்து தெண்டா நீதான் அதைக் கவனிக்க வேணும்.'

கூட நின்றிருந்த நடேசு மாமாவின் மனைவி பக்கமாய்த் திரும்பி, 'என்ன உங்கட ஆள் இண்டைக்கு இப்பிடி ஏடகூடமாய்க் கதைக் கிறார்?' என்றவர் மறுபடி திரும்பிக் கொண்டு, 'ஒழுங்கையில வடிவாய் சைக் கிளோடத் தெரிஞ்சிருந்தா நீ மூலைக் கல்லில போய் இடிச்சுக்கொண்டு விழுந் திருக்க மாட்டாய். உன்னைப்போல வேற ஆரும் வந்து இந்தமாதிரி என்னிட்டை குறை சொல்லேல்லையே!' என்றார்.

நடேசு மாமாவுக்கு ஏறிவிட்டது. 'அப்ப; நீ அந்த மூலைக் கல்லை பிரட்டிப் போட மாட்டாய்;?'

நடேசு மாமாவின் காட்டம் ஐயாவுக்குப் பிடிக்கவில்லையென்று தெரிந்தது. அவரும் அதே தொனியில், 'என்னாலதான் ஏலா- தெண்டு சொல்லியிட்டனே. ஏலுமெண்டா நீ போய்ப் பண்ணு' என்றார்.

சற்றுநேரம் மௌனமாக நின்ற நடேசு மாமா, 'சரி, அப்ப நான் பண்ணிக் காட்டி றன்' என்றுவிட்டு போய்விட்டார்.

மறுநாள் காலையே விதானை வீடு சென்று நடந்த சம்பவத்தை விளக்கி மூலைக் கல்லை அகற்றிவிடவேணுமென்று முறைப் பாடு கொடுத்துவிட்டார் நடேசு மாமா.

விதானையும் விதூஷகம் பிடித்த மனிசன். நடேசு மாமாவின் முறைப்பாட்டைக் கேட்டு விட்டு, 'அதுசரி நடேசு, உன்ர முறைப் பாடு மூலைக் கல்லிலயோ, குமாரசாமி யிலயோ?' என்று சிரித்திருக்கிறார். அதற்கு என்ன பதிலைச் சொல்லியிருக்க முடியும் நடேசு மாமாவினால்? பின்னர் விதானை யே, தான் வந்து பார்த்து என்ன செய்வ தென்று முடிவெடுப்பதாகக் கூறி அனுப்பி விட்டார்.

அதற்குப் பின்னால் என்ன நடந்ததென்பது என் ஞாபகத்தில் பிடிபடவில்லை. ஆனால் அது தொடர்பில் முக்கியமான விஷயங் கள் ஏறக்குறைய ஒரு வருஷத்தின் பின் னாலே நடந்தன.

அந்த ஒரு வருஷத்தில் இரண்டு குடும்பங் களுக்குமிடையிலான போக்கு வரத்து கதை பேச்சுகள் யாவும் அறுந்துபோ யிருந்தன.

நடேசு மாமாவிடம் அப்போது சைக்கிள் இருந்திருக்கவில்லை. வேலைக்கும் நடை யில் தான் போய்வந்துகொண்டிருந்தார். நடக்கிறபோதெல்லாம் அந்த மூலைக் கல்லும், ஐயாவின் காட்டமான உத்தர மும் அவருக்கு ஞாபகம் வராமல் இருந்திருக்காது. இரண்டு பகுதியாரின் பார்வைக் கடுமையைக்கூட அந்தக் கால நீட்சி குறைந்துபோக வைக்கவில்லை.

அதுவொரு மாரி முன்னிராக் காலம். ஆயினும் ரோட்டில் சிறிது நடமாட்டம் இருந்தது. வெளியே போய்விட்டு வீடு வந்துகொண்டிருந்த நடேசு மாமாவை எங்கள் காணியின் மூலைக் கல் முகரியில் பாம்பு கொத்திவிட்டது. வளவு மூலையில் எழுந்த சந்தடியில் ஐயா லாந்தருடன் சென்று பார்த்தளவில் நடேசு மாமாவின் உயிரே பிரிந்திருந்தது. ஏற்கனவே அந்த இடத்துக்கு நடேசு மாமாவின் அலறலில் வந்திருந்தவர்கள்தான் மூலைக் கல்லோடு சுற்றிக்கொண்டு கிடந்த பாம்பு கடித்து விட்டதாய்ச் சொன்னார்கள்.

நடேசு மாமா வீட்டில் அந்தச் சம்பவத்தை எவ்வாறு உணர்ந்திருப்பார்களென்று வெறிச் சோடிப் பாய்ந்த இந்திராணியின் பார்வை யிலிருந்தே நான் புரிந்துகொண்டேன். மெல்ல மெல்ல இந்திராணியின் மீதான என் சினிமாப் பாடல் கனவுகளும் மறைந்தன. நடேசு மாமாவின் மறைவு அம்மாவுக்குப் பெருந் துக்கம். 'அந்தச் சவத்து மூலைக் கல்லைப் பிரட்டிப்போட்டி ருந்தால் நடேசண்ணை செத்திருக்கமாட்டா ரெல்லோ?' வென்று சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் சொல்லி ஐயாவைச் சலித் தெடுத்துக்கொண்டு இருந்தாள். பின்னால் அவளுக்கும் அச் சம்பவம் மறந்துபோய் விட்டது.

போன தடவை நான் ஊர் சென்றபோது அந்த மூலைக் கல் இருந்தவிடம் கண்ணில் படவில்லை. தார் ரோடு போடுவதற்கு வீதியை விஸ்தரிக்க நேர்ந்ததில் எல்லை கள் விரிந்து அதன் தடத்தைக்கூட காண முடியாதிருந்தது. புரட்டிப் போட்டிருப்பார் களாவென்று தெரியவில்லை. ஏனெனில் ஐயாவின் வார்த்தையில் அது பூதம் சுமந்துவந்து போட்ட பாறாங்கல்.

நான் அங்கிருந்து திரும்பிய பிறகு கண்ட எல்லாவற்றையும் மறந்தேன். ஆனால் காணாதிருந்த மூலைக் கல்மட்டும் நினை வில் மறையாமல் இருந்திருந்தது. அத் தோடு, அந்தக் கல்லோடு பெரும் ரகசியத் தில்போல் சுற்றிக் கிடந்து நடேசு மாமா வின் உயிர் குடித்த பாம்பும். பாம்பு நினை வாக பாம்புக் கிணறும், அதிலிருந்தே பாம்புகள் ஊற்றெடுப்பதாக மூத்தார் சடையன் சொன்ன கதையும் தொடர்ந்து நினைவுத் திரை கிழித்து வெளிவந்தன.

ஒரு பங்குனி மாதத்து பனி புகட்டியபடி யிருந்த காலையில் அந்த இடத்தைக் கடந்துசெல்ல நேர்ந்த என் கண்களில் சாய்ந்திருந்த சூரியக் கதிரில் ஒழுங்கைத் தொட்டிக்கு நீரிறைக்கும் பாண் கிணற்று வாய்க்காலுக்குள் ஒரு மினுமினுப்புத் தட்டியது. பாம்போ என்ற துணுக்கம் ஏற்பட்டு ஓடுவதற்கான உந்துதல் கிளர்ந்த தாயினும், சமீபத்தில் மூத்தார் சடையன் ஒழுங்கையோரத்தில் புல் செதுக்கிக் கொண்டிருந்த தெம்பில் துணிவை வரவ ழைத்து நின்று கூர்ந்து கவனித்தேன். அது பாம்பல்ல, வாய்க்கால் குழிக்குள் நீளக் கிடந்த பாம்புச் செட்டை. காற்றின் மெல்லிய அசைவுக்குத்தக நெளிந்து கொண்டு கிடந்தது.

எனது நீடிய நிலைப்பில் கவனமாகி, 'என்ன தம்பி பாக்கிறிர், பாம்போ?' திரும்பிப் பார்க்காமலே கேட்டார் மூத்தார் சடையன்.

சடையனை புல்லடைந்த சாக்கோடும் உழவாரத்தோடும் வயல் கரைகளில், ஒழுங்கை ஓரங்களிலென்று மாலை நேரத்தில் எங்கெங்கும் காணமுடியம். அவரை யாரும் சடையனென்று குறிப் பிட்டதுகூட கிடையாது. சடையரென்றோ, இல்லையேல் இன்னும் குறிப்பாகச் சுட்டவேண்டின் மூத்தார் சடையரென்றோ தான் அழைப்பார்கள். ஊரில் மிக வயதாளியென்ற மதிப்பும், வைரவ வாலயமுள்ளவரென்பதால் 'வாயைக் கட்டி' விடுவாரென்ற பயமும் அதற்குக் காரணங் களாயிருந்தன.அவ்வாறு சிலபேருக்கும், சில நாய்களுக்கும் செய்திருக்கிறாரென் பது ஊர்ப் பிரசித்தம். அதனால் நானும் மரியாதையாகவே பதிலளித்தேன்: 'பாம் பில்லை, சடையர் பாம்புச் செட்டை.'

'அதிலயென்ன பாக்கக்கிடக்கு? உசிர்ப் பாம்பெண்டாலும் பறவாயில்லை. உந்த வளவுக்கதான் கனக்கக் கனக்கக் கிடக்கே.'

'பாம்பெண்டா எனக்குப் பயம். நடேசு மாமா பாம்பு கடிச்சு செத்தாப் பிறகு நான் துண்டா இந்தப் பக்கம் வாறேல்ல. உதுக்குள்ள இருந்த பாம்புதான அவரை யும் வந்து கடிச்சது!'

'உதுக்குள்ளயிருந்து வந்ததாய்த்தான் இருக்கும்.'

'உதுக்குள்ள புத்துக்கூட இல்லை. பின்னை; பாம்பு எங்கயிருந்து வந்தது?'

'உதுக்குள்ள இருக்கிறதுகள் புத்துப் பாம்பில்லை, கிணத்துப் பாம்புகள்.'

'கிணத்துக்குள்ளயும் இருக்குங்களோ? அதெல்லாம் எங்கயிருந்து வந்து கிணத் துக்குள்ள இறங்கும்?'

'வெளியிலயிருந்து வராதுகள். அதுக்குள்ள யிருந்து ஊறும்கள். வேற கிணறுகளில தண்ணி ஊறும். இந்தக் கிணத்தில தண்ணியுமூறும், பாம்பும் ஊறும்.'

'கனக்கப் பாம்பு ஊறியிருக்கோ?'

'கொள்ளாயிரம் கொள்ளாயிரமாய் ஊறி யிருக்கு.'

கொள்ளாயிரத்தின் அளவு எனக்குத் தெரியவில்லை. தொள்ளாயிரம் தெரியும், ஆயிரம் தெரியும், ஆனால் கொள்ளாயி ரம்;? அதுதான் ஆகக் கூடிய எண்ணிக் கையோ? லட்சத்தைவிடவும் பெரிய எண்ணிக்கையாயிருக்குமோ?

என் நினைவைக் கலைத்துக்கொண்டு மூத் தார் சடையனின் குரல் எழுந்தது. 'தம்பி, பாம்பு பாக்கிற ஆசையில உள்ள கிள்ள போய் கிணத்தை எட்டிப் பாத்திடாத.'

அந்தக் கிணற்றை நான் என்றும் எட்டிப் பார்த்ததில்லை. மூத்தார் சடையன் சொன்ன பிறகு பார்க்கிற எண்ணமும் கொண்டதில் லை. பின்னால் பாம்புகள் கிணற்றில் விளைவதில்லையென்று தெரியவந்தபோதும் கூட, மனத்துள் விழுந்து கிடந்திருந்த அந்தப் பயத்தை என்னுடைய அறிவின் எந்தக் கட்ட வளர்ச்சியிலும் புரட்டிப் போட முடிந்ததில்லை.

பாம்புகள் அந்தக் கிணற்றுக்குள் வி- ளைகின்றன என்ற மூத்தாரின் அபிப் பிராயம் என்னைப்போலவே பலரிடத்தி லும் நீங்காததில்தான் இன்னும் அந்தக் காணியில் யாரும் குடிவரவில்லையாய் இருக்கும். யாருக்குத் தெரியும்?

ஆனால் நினைவுப் புரட்டல்களில் ஒரு சிக்கலும் ஏற்படுகின்றது. பாம்புக் கிணற் றுக்கும் மூலைக் கல்லுக்கும் எவ்வகை யில் தொடர்பு நிகழ்கிறது? பாம்பொன்று மூலைக் கல்லோடு கிடந்து நடேசு மாமாவை வெட்டியதுதான் அந்தத் தொடர்பா? அதுவும் தெரியவில்லை.

இவ்வாறு தெளிவின்மை ஏற்படும்போது, 'கடந்த காலப் பிரதேசசங்களுக்குத் திரும்ப வரும்போது, எல்லாவற்றோடும் பிசிறில்லாமல் பொருந்திப் போகவே ஞாபகங்கள் எப்போதும் ஆர்வமாக இருக்கின்றன' என்ற 'கடல்' வரிகளை நினைப்பதிலிருந்து என்னால் தவிர முடிவதில்லை. அது நினைவின் அறுபடும் தொடர்ச்சிக்கு ஓர் ஆசுவாசத்தைத் தருகி றது நினைவின் பலஹீனங்களைப் புரிந்து கொள்ள ஒரு வழி- யைத் திறக்கிறது.

devakanthan@thaiveedu.com

கோலங்கள்

அரங்கேற்றம், கலைநிகழ்ச்சி, திருமணம், பூப்புனித நீராட்டு போன்ற வைபவங்களுக்கு கோலம் போட்டு அலங்கரிக்க,

Floor Decoration for Arangetram Wedding and other Cultural Functions.

Bhamini:

647 294 0736,
416 491 6057.

உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...

STANDARD MORTGAGES INC

- Mortgages
- Refinance
- Second Mortgages
- Short Term Secured Loans

SMI

STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial

சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட

Raj Subrayam AMP
Director

80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com

Markham Sheppard
Daniels FirstHome™ at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE HIGHER STANDARDS
*Independently owned & operated
HomeLife/Champions Realty Inc, Brokerage*
Office :416-281-8090
E-mail: raveenvi@gmail.com
RAVEEN VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE

Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
For Shipping Schedule Visit
www.ceycantranship.com
For further information contact
Kumar (905) 673-9873
SRI LANKA'S BEST CLEARING FACILITIES

COLOMBO
Ceylon Shipping Lines Ltd
760 Dr Danister De Silva Mw,
Colombo 9
Tel : 2680301 – 308

KANDY
Ceylon Shipping Lines Ltd
175 Parangantota Road
Mavilmada - Kandy
Tel : 812 234356/57/59

BATTICALOA
Ceylon Shipping Lines Ltd
134 Main Street
Addalachenai - 09
Tel : 067 2277302

OUR AGENTS ACROSS CANADA

Head Office
(905) 673-9873
Toronto/ New Market/Durham region
Sam (647) 986-2393
Brampton/Mississauga/Halton /Peel region
Neel (647) 891-9445
Ottawa
Iggy - 613 799 3519 /613 237 3569
Hamilton/Waterloo /St Catherines
Dharmaweera (519) 760-1280
Montreal
Gana (514) 573-0093
Edmonton/Calgary
Randy (604) 399-8785
Email : randy.kulasekare@kmrgloballogistics.com
Vancouver/British Columbia
Randy (604) 273-4911
KMR Global Logistics Ltd.
135 & 140 - 14480 Knox Way Richmond
British Columbia, V6V 2Z5
Email : admin@kmrgloballogistics.com

United Kingdom :
Atlas Shipping 430 High Rd
Willesden London NW10 2HA
Tel: 02024596633 - Mobile 07949143535

1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com

அமி ரான் 1952. அமெரிக்க எழுத்தாளர். அவரின் எழுத்துக்கள் தாய்-மகள் இடையே உள்ள உறவு பற்றியும், சீன அமெரிக்கர்களின் அனுபவங்கள் பற்றியும் அலசுபவை. The Joy Luck Club என்ற அவருடைய நாவல் திரைப்படமாக எடுக்கப் பட்டுள்ளது. அதைவிட, அவர் The Kitchen God's wife, The Hundred Secret Senses, The Bonesetter's Daughter, Saving Fish from Drowning, The Valley of Amazement போன்ற நாவல்களையும், குழந்தைகளுக்கான நாவல்கள், நினைவுக் குறிப்புக்கள் ஆகியவையும் எழுதியுள்ளார்.

சீனர்களைப் பற்றியும் அவர்களின் கலாசாரம் பற்றியும் மேற்கத்தியரின் எதிர்மறையான இனத்துவ அடையாளப் படுத்தல் அவரின் எழுத்துக்களில் உள்ளன என்ற குற்றச்சாட்டு அவரில் வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சீன ஆண்களைப் பற்றி மிக மோசமாக வர்ணிக்கிறார் என்ற விமர்சனமும் உள்ளது.

விளையாட்டு விதிகள்

- அமி ரான்

தமிழில்: என்.கே. மகாலிங்கம்

என் அம்மா கண்களுக்குப் புலனாகாத உளவலுக் கலையை எனக்குக் கற்பித்தபோது எனக்கு வயது ஆறு. விவாதங்களில் எப்படி வெல்வது, மற்றவர்களிடமிருந்து மரியாதையை எப்படிப் பெறுவது, சதுரங்க விளையாட்டுக்களில் எப்படி வெல்வது என்பவற்றின் மூலோபாயத்தைக் கற்பதே அந்தக் கலை. ஆனால் சதுரங்க விளையாட்டு விளையாட எங்கள் இருவருக்குமே அப்போது தெரியாது.

நான் உரத்து அழுது அவருடைய கையைப் பிடித்து, உப்புப் போட்ட ப்ளம் பழப் பைகள் விற்கும் கடையை நோக்கி இழுத்தபோது 'உன் வாயை மூடு,' என்று என்னைத் திட்டினார். நாங்கள் வீட்டில் இருந்தபோது, 'அறிவாளி காற்றுக்கு எதிராகப் போக மாட்டான். தெற்கில் இருந்து வரும் காற்றுடன் போவான்! வடக்கு அதன் பின்னால் போகும், வேகமான காற்றைக் கண்ணால் காண முடியாது என்று நாங்கள் சீன மொழியில் சொல்லுவோம்,' என்று சொன்னார்.

வாங்கக் கூடாது என்று தடை செய்யப்பட்ட இனிப்புக்களை அடுத்த கிழமை நாங்கள் கடைக்குப் போனபோது கண்டேன். இருந்தும் நான் என் வாயை மூடி விட்டேன். அம்மா சாமான்கள் வாங்குவதை முடித்த பின் ப்ளம் பழப் பை ஒன்றையும் மெதுவாக எடுத்து மற்றச் சாமான்களுடன் மேசையில் வைத்தார்.

என் அண்ணன்மாருக்கும் எனக்கும் எங்கள் வாழ்க்கையில் முன்னேறத் தேவையான நாளாந்த உண்மைகளை அம்மா எங்களுக்குக் கற்பித்தார். நாங்கள் சன் ஃப்ரன்சிஸ்கோவின் சீனர்கள் வாழும் நகரத்தில் வாழ்ந்தோம். பிற சீனக் குழந்தைகள் பலரையும் போல நாங்களும் உணவகங்களின், அருங்கலைப் பொருட்கள் விற்கும் கடைகளின் பின் உள்ள சந்துகளில் விளையாடினோம். நாங்கள் ஏழைகள் என்று நான் நினைக்கவில்லை. என் உணவுப் பாத்திரம் எப்பொழுதும் நிரம்பியே இருந்தது. ஒவ்வொரு நாளும் மூன்று முறை உணவு உண்டோம். எனக்குப் பெயர் தெரியாத புரியாத பலவகைப் பொருட்கள் போட்ட சுப்புடன் அன்றைய நாள் துவங்கும்.

நாங்கள் வேவர்ளி பிளேசில் வாழ்ந்தோம். அது வெதுவெதுப்பான, சுத்தமான, இரண்டு படுக்கையறை கொண்ட ஓர் அடுக்ககம். அது ஒரு சீனரின் பேக்கரியின் மேல் இருந்தது. அந்த பேக்கரியின் விசேஷி உணவுகள் ஆவியில் வெந்த இனிய மாப்பண்டங்களும் பாலாடைப் பண்டங்களும் ஆகும். அதிகாலையில் சந்துகள் இன்னும் அமைதியாக இருக்கும்போது மணமுள்ள சிகப்பு அவரையை இனிமையான மாப்பண்டமாகச் சமைக்கும் மணத்தை இன்னும் என்னால் மணக்க முடியும். விடியும்போது பொரித்த எள்ளுருண்டை மணமும் கோழி இறைச்சி வைத்த கொழுக்கட்டை மணமும் எங்கள் அடுக்ககத்தில் நிரம்பி இருக்கும். நான் என் கட்டிலில் கிடக்கும்போது என்னுடைய அப்பா வேலைக்கு வெளிக் கிடும் சத்தம் எனக்குக் கேட்கும். முதலில் கதவைச் சாத்துவதும் பின் ஒன்று இரண்டு மூன்று என்ற கிளிக் சத்தங்களும் கேட்கும்.

எங்கள் இரு கட்டடத் தொகுதிச் சந்தில் ஒரு சிறிய மணல்தரை விளையாட்டிடம் இருந்தது. அங்கே ஊஞ்சல்கள் இருந்தன. வழுக்கி வழுக்கித் தேய்ந்ததால் மையத்தில் நன்றாக மினுமினுக்கும் வழுக்கிகளும் இருந்தன. விளையாட்டிடத்தின் எல்லைகளில் மரப் பலகை வாங்குகள் கிடந்தன. அவற்றில் முதியவர்கள் வறுத்த தர்பூசணி விதைகளைத் தங்கப் பல்லால் கொறித்துக் கொண்டு விதைகளின் தோல்களை அவர்களைச் சுற்றி பொறுமை இல்லாமல் சலசலத்துக் கொண்டு காத்திருந்த புறாக்களுக்குப் போட்டுக் கொண்டிருப்பார்கள். அந்த நல்ல விளையாட்டிடத்தில் தான் இருண்ட சந்தும் இருந்தது. அதில் தான் புதிரான விஷயங்களும் சாகசங்களும் அதிகம் நடைபெறும். என்னுடைய அண்ணன் மாரும் நானும் மூலிகை மருந்துக் கடைக்குள் எட்டிப் பார்ப்போம். அங்கே பூச்சிக் கோதுகள், மஞ்சள் நிற விதைகள், கார இலைகள் போன்றவற்றை சரியான அளவில் நிறுத்து விறைப்பான வெள்ளைத் தாளில் மடித்து, நோய்வாய்ப்பட்ட வாடிக்கையாளருக்கு முதியவர் லீ கொடுப்பார். மிகச் சிறந்த அமெரிக்க மருத்துவர்களுக்குப் பிடிபடாத, மூதாதையர்களின் சாபத்தால் பீடிக்கப்பட்ட ஒரு பெண் நோயளியை அவர் ஒருமுறை குணமாக்கினார் என்று சொல்லப்பட்டது. மருந்தகத்திற்குப் பக்கத்தில் அச்சகத்தினர் ஒருத்தர் இருந்தார். அவர், தங்க முலாம் பூசிய திருமண அழைப்பிதழ்களும் திருவிழாவிற்கான சிகப்பு நிற பதாகைகளும் சிறப்பாகச் செய்வார் என்ற பெயரும் பெற்றவர்.

வீதியில் இன்னும் கீழே பிங் ஜென் மீன் சந்தை இருந்தது. அதன் முன் பக்க யன்னலின் ஒரு தொட்டியில் துரதிர்ஷ்டமான மீன்களும் ஆமைகளும், சேற்றுப் பச்சை நிற ஓடு போட்ட கண்ணாடிகளின் பக்கங்களில் இடம் பிடிப்பதற்காக முண்டி அடித்தன. கையால் எழுதப்பட்ட விளம்பரப் பலகையில், 'இந்தக் கடைக்குள் உள்ளவை உண்பதற்கான உணவு மட்டுமே, செல்லப்பிராணிகளுக்கானதல்ல,' என்று எழுதப் பெற்றிருந்தது. உள்ளே, மீன் வெட்டுபவர்கள் இரத்தக் கறை படிந்த வெள்ளை நிற மேலங்கிகளில் நின்று, மீன் குடல்களை நேர்த்தியாக வெளியே எடுத்து மீன்களை வெட்டிக் கொண்டிருந்தனர். அதேநேரம் வாடிக்கையாளர்கள் தங்கள் ஆணைகளைச் சொல்லிக் கத்திக் கொண்டிருந்தனர். 'புதிய வற்றை எனக்கு வெட்டு,' என்றனர். அதற்கு, 'எல்லாம் புதியவை தான்,' என்றனர் மீன் வெட்டுபவர்கள். சந்தையில் அதிக வாடிக்கையாளர்கள் இல்லாத நாட்களில் நாங்கள் அங்கே சென்று உயிருள்ள தவளைகள், நண்டுகள், வழுவிச் செல்லும் மீன்கள் உள்ள கூடைகளையும் பார்த்துக் கொண்டிருப்போம். அந்தக் கூடைகளுக் குள் தடிகளை ஓட்டக் கூடாது என்று

தொடர்தல் 108ம் பக்கம்

விளையாட்டு...

107ம் பக்கத் தொடர்ச்சி...

எங்களுக்கு எச்சரிக்கப்பட்டிருந்தது. பெட்டிகளில் உலர்ந்த கூந்தல் கணவாய்களும், ஐஸில் வரிசை வரிசையாக வைக்கப்பட்ட இறால்கள், கணவாய்களும், நழுவும் மீன்களும் இருந்தன. அதிலுள்ள ஒரு தட்டை மீனைப் பார்த்து நடுங்குவேன். தட்டையான ஒரு பக்கத்தில் அவற்றின் கண்கள் இருக்கும். அதைப் பார்த்தபோது என் அம்மா சொன்ன கதை ஒன்று என் ஞாபகத்துக்கு வரும். கவனமில்லாத சிறுமி ஒருத்தி, நெரிசலான மக்கள் நிறைந்த வீதிக்குள் ஓடியபோது, வாடகைக் கார் அடித்து நசுங்கிப் போனாள். 'தட்டையாக அப்படியே நசுங்கிப் போனாள்,' என்று என்னுடைய அம்மா சொன்னார்.

சந்தின் மூலையில் நாலு மேசை போட்ட ஹொங் சிங்கின் உணவகம் இருந்தது. அதற்கு முன்னால் மாடிப்படிகள். அவை ஒரு கதவில் சென்று முடிந்தன. கதவில் 'தொழிலாளர்கள்' என்று எழுதப்பட்டிருந்தது. இரவில் அந்தக் கதவூடாக கெட்டவர்கள் வெளியே வருகிறார்கள் என்று என்னுடைய அண்ணன்மாரும் நானும் நம்பினோம். சுற்றுலாப்பயணிகள் ஹொங் சிங்கின் உணவகத்திற்கு ஒருபோதுமே போனதில்லை. ஏனென்றால் அதன் உணவுப் பட்டியல் சீன மொழியில் மட்டும் தான் அச்சிடப்பட்டிருந்தது. அந்த உணவகத்திற்கு முன்னால் ஒருமுறை என்னையும் என்னுடன் விளையாடுபவர்களையும் நிற்க வைத்து ஒரு கோகேசியன் ஒரு புகைப் படம் எடுத்தார். சாறு விழுந்திருந்த கயிற்றில் வாட்டிய வாத்தின் கழுத்து சுழன்று கொண்டிருந்தது. அதைப் படம் பிடிப்பதற்காக எங்களை அந்தப் படத்தில் ஒரு பக்கமாக நிற்கச் செய்தார். அந்தப் படத்தை எடுத்த பிறகு ஹொங் சிங்கின் உணவகத்திற்குச் சென்று இரவுணவு சாப்பிட வேண்டும் என்று நான் அவரிடம் சொன்னேன். அங்கே என்ன உணவு பரிமாறுகிறார்கள் என்று என்னைக் கேட்ட போது, 'குடல், வாத்தின் விரல்கள், சாக்குக் கணவாய் இரைப்பைகள்,' என்று சத்தம் போட்டுச் சொன்னேன். அதன் பின் என் நண்பர்களுடன் கூச்சலிட்டு சிரித்துக் கொண்டு ஓடினேன். சந்தின் குறுக்காக வேகமாக ஓடிச் சென்று, இரத்தினக் கற்கள் விற்கும் சீனர்களின் கொம்பனியின் வாசலுக்குள் ஒளிந்து கொண்டேன். அவர் எங்களைக் கலைத்துக் கொண்டு வருவார் என்று எதிர்பார்த்து என் இதயம் படபடவென அடித்துக் கொண்டிருந்தது.

நாங்கள் வாழ்ந்த வீதியின் பெயரையே எனக்கு என் அம்மா வைத்தார்: வேவெளி பிளேஸ் ஜொங். அமெரிக்காவின் முக்கியமான ஆவணங்களில் இடம்பெறும் உத்தியோகபூர்வமான என் பெயர் அதுவே. ஆனால் என் குடும்பத்தினர் அழைக்கும் பெயர் மெய்மெய். அதன் பொருள்: 'சின்ன தங்கச்சி.' நான் தான் வீட்டில் இளைய வள். ஒரே மகள்.

ஒவ்வொரு நாள் காலையிலும் என் அம்மா என்னுடைய தடித்த கறுத்த தலைமயிரை இரண்டு சடையாக முறுக்கியும் இழுத்தும் கட்டி விடுவார். ஒருநாள் அவர் என் அடங்காத தலைமயிரை கடினமான பல்லுள்ள சீப்பால் இழுத்து கட்டி விடும் போது, எனக்கு இரகசியமானதோர் எண்ணம் வந்தது.

'மா, சீன சித்திரவதை என்றால் என்ன? என்று கேட்டேன். அம்மா தன் தலையை ஆட்டினார். அவளுடைய இதழ்களுக்கிடையில் கொண்டை ஊசி ஒன்றை வைத்திருந்தாள். தன் உள்ளங்கையை நனைத்து என் காதுகளின் மேலாக வளர்ந்திருந்த முடியைச் சீராக்கி, கொண்டை ஊசியை உள்ளே செலுத்தினான். அது என் மண்டை ஓட்டுத் தோலைக் கூர்மையாகக் கிள்ளி விட்டது.

'அந்த வார்த்தையை யார் சொன்னார்கள்?' நான் எப்படியான கொடுமையானவள் என்று அறியாமல் என்னைக் கேட்டார். நான் என் தோள்களைக் குலுக்கிக் கொண்டு, 'என்னுடைய வகுப்பிலிருந்த ஒரு சிறுவன், சீனர்கள் சீன சித்திரவதை செய்வார்களா,' என்று கேட்டான் என்றேன்.

'சீனர்கள் பல விஷயங்களைச் செய்வார்கள். சீனர்கள் வியாபாரம் செய்வார்கள், மருத்துவம் செய்வார்கள், வரைவார்கள். அவர்கள் அமெரிக்கர்கள் போல சோம்பேறிகள் அல்ல. நாங்கள் சித்தரவதையும் செய்வோம். அவை மிகச் சிறந்த சித்திரவதை,' என்றார், சாதாரணமாக.

உண்மையில் என் அண்ணன் வின்சென்ருக்குத் தான் முதலில் சதுரங்கப் பெட்டி ஒன்று கிடைத்தது. சந்தின் முடிவிலுள்ள ஃபெஸ்ற் சைனீஸ் பப்ரிஸ்ற் சேச்சில் நடந்த வருடாந்த கிறிஸ்மஸ் விருந்துக்கு நாங்கள் போயிருந்தோம். மிஷனரியைச் சேர்ந்த பெண்கள் சேர்ந்து இன்னொரு தேவாலயத்தினரின் அங்கத்தவர்கள் கொடுத்த பரிசுகளைக் கட்டினார்கள். எந்தப் பரிசிலுமே பெயர் இருக்கவில்லை. அவற்றில் பல வயதுச் சிறுவர்கள், சிறுமிகளுக்காக வேறு வேறு பைகள் கட்டப் பட்டிருந்தன. சீன வட்டார குரு ஒருவர் நத்தார் தாத்தாவாக வேடம் போட்டிருந்தார். விறைப்பான தாளில் செய்யப்பட்ட அவருடைய மீசையிலும் தாடியிலும் பஞ்சு ஒட்டப்பட்டிருந்தது. அவர் உண்மையான நத்தார் தாத்தா என்று நம்பியவர்கள் மிகவும் சிறியவர்கள். அவர்களுக்கு அவர் சீனர் அல்ல என்றும் தெரியாது. என்னுடைய முறை வந்தபோது நத்தார் தாத்தா என்னுடைய வயது என்ன என்று கேட்டார். அந்தக் கேள்வியில் ஏதோ சூது இருக்கிறதென்று நான் நினைத்தேன். அமெரிக்க வாய்ப்பாட்டின்படி அப்போது எனக்கு ஏழு வயது. சீன நாள்காட்டியின் படி வயது எட்டு. நான் பிறந்தது மார்ச் 17, 1951 என்று சொன்னேன். அது அவருக்குத் திருப்தியைக் கொடுத்திருக்க வேண்டும். அதன் பின் அவர் கண்ணியமான முறையில், இந்த ஆண்டு நான் மிக மிக நல்ல பிள்ளையாக நடந்தேனா, யேசுநாதரில் நம்பிக்கை உடையவளா, பெற்றோருக்குப் பணிந்து நடந்தேனா என்று கேட்டார். அவற்றுக்கான ஒரே பதில் என்ன என்று எனக்குத் தெரியும். அதனால் நான் அவருக்குச் சமமான முறையில் கண்ணியமாக என் தலையை ஆட்டினேன்.

வயதில் மூத்த குழந்தைகள் தங்கள் பரிசுகளைத் திறந்ததை நான் அவதானித்திருந்தேன். பெரிய பெட்டியிலுள்ள பரிசுகள் பெறுமதியானவையாக இருக்கத் தேவையில்லை என்பதை அறிந்து கொண்டேன். என் வயதுள்ள ஒரு சிறுமி நிறம் தீட்டும் பெரிய புத்தகம் ஒன்றைப் பெற்றிருந்தாள். அது விவிலிய பாத்திரங்கள் உள்ள ஒரு புத்தகம். சிறிய பரிசுப் பெட்டியைத் தேர்ந்தெடுத்த குறைவான பேராசையுள்ள இன்னொரு சிறுமி கண்ணாடிக் குடுவையிலுள்ள லவெண்டர் ஒப்பனை அறை நீரைப் பெற்றாள். பெட்டியிலிருந்து வரும் சத்தமும் முக்கியமானது. பத்து வயதுச் சிறுவன் ஒருத்தன் ஒரு பெட்டியை ஆட்டிய போது அது கலகலத்தது. அது தகரத்தால் செய்யப்பட்ட உலகக் கோளம். அதன் ஓட்டை ஊடாக காசுகளை நுழைக்கலாம். அதற்குள், பத்துச் சத, ஐந்து சதக் குற்றிகள் பல கிடக்கின்றன என்று நினைத்திருக்கலாம். ஆனால் அதைத் திறந்து பார்த்தபோது அதற்குள் ஒற்றைச் சதக் குற்றிகள் பத்து கிடந்தன. அதைக் கண்டு ஏமாந்து போன அவன் முகம் வாடி விட்டது. அவனுடைய தாய் அவன் தலையில் அடித்து அவனைத் தேவாலய மண்டபத்திலிருந்து வெளியே அழைத்துச் சென்றார். தன் மகனுக்குக் கிடைத்த நல்ல பரிசுக்குப் பாராட்டைத் தெரிவிக்காமல் அவன் நடந்து கொண்ட இங்கிதக் குறை பாட்டுக்காக வருந்துவதாகவும் சொன்னார்.

நான் சாக்குக்குள் உற்றுப் பார்த்து, விரல்களால் மீதமாக இருந்த பரிசுப் பொருட்களை விரைவாகத் தொட்டுப் பார்த்து, அவற்றின் நிறை என்ன, அவற்றுக்குள் என்ன இருக்கும் என்பதை கற்பனைச் செய்து கொண்டேன். அதன் பின் பாரமான, மின்னும் வெள்ளி மென் தகட்டால் சுற்றப்பட்டு சிகப்புப் பட்டுத் துணியால் கட்டப்பட்ட இறுக்கமான ஒரு பெட்டியை எடுத்தேன். அதற்குள் பன்னிரண்டு வில்லைகள் கொண்ட லைஃப் சேவேர் இனிப்புகள் இருந்தன. அவற்றை விருந்து முடியும் வரை எனக்குப் பிடித்த இனிப்புக்களின் வரிசையில் மாறி மாறி அடுக்கிக் கொண்டிருந்தேன். என்னுடைய அண்ணன் வின்சனும் புத்திசாலித்தனமாகத் தனக்கு வேண்டியதைத் தெரிந்தெடுத்திருந்தான். அவனுடைய பரிசு ஒரு பெட்டி. அதற்குள் பிளாஸ்றிக் பாகங்கள் இருந்தன. அவற்றை ஒழுங்காக அடுக்கினால் இரண்டாம் உலகப் போரில் பங்கு பற்றிய உண்மையான நீர் மூழ்கிக் கப்பல் ஒன்றை உருவாக்கலாம் என்று அதன் வழிமுறை வழிகாட்டி அறிவுறுத்தியது.

வின்சென்ற் ஒரு சதுரங்கப் பெட்டியை பெற்றிருந்தான். தேவாலய நத்தார் விருந்தில் அதைப் பெறுவது மிகவும் இனிய பரிசு தான். அது பாவித்த பெட்டி என்று பின்னர் தெளிவாகத் தெரிய வந்தது. அதில் ஒரு கறுப்புச் சிப்பாயும் வெண்ணிறப் போர் வீரனும் இருக்கவில்லை. என் அம்மா தெரியாத அந்தக் கொடையாளருக்கு தாராளமாக நன்றி சொன்னார்: 'மிக நல்ல பொருள். பெரிய விலையுள்ளது.' அந்த நேரத்தில் மென்மையான கூந்தலுள்ள ஒரு முதிய பெண் எங்கள் குடும்பத்தைப் பார்த்து, 'இனிய கிறிஸ்மஸ் நல் வாழ்த்துக்கள்,' என்று மெல்லிய குரலில் வாழ்த்துக் கூறினார்.

நாங்கள் வீட்டுக்கு வந்தபோது அம்மா அந்த சதுரங்கப் பெட்டியை வீசச் சொன்னார்: 'அவளுக்குத் தேவையில்லை, எங்களுக்கும் தேவையில்லை.' இறுக்கமான பெருமையான புன்னகையுடன், தன் தலையை விறைப்பாக மேலும் கீழும் ஆட்டினார். என்னுடைய அண்ணன்மார் அதைக் கேட்கவில்லை. வழிகாட்டி அறிவுறுத்தலை வாசித்து, சதுரங்கக் காய்களை அடுக்கினார்கள். வின்சென்ரும் வின்ஸரும் கிறிஸ்மஸ் வாரம் முழுவதும் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டேன். சதுரங்கப் பெட்டி அவிழ்க்க வேண்டிய நுட்பமான இரகசியங்களை வைத்திருப்பது போல எனக்குத் தோன்றியது. சதுரங்கத்திலுள்ளவர்கள், மூத்தோரின் சாபங்களைக் குணப்படுத்தும் லியின் மந்திர மூலிகைகளிலும் பார்க்க மிகவும் சக்தி வாய்ந்தவர்களாக எனக்குத் தெரிந்தார்கள். ஹொங் சிங்கின் 'தொழிலாளர்'களின் கதவினுள் செல்வதைத் தவிர்ப்பதிலும் பார்க்கிலும் ஏதோ இடர் அங்கே இருப்பது போல என் அண்ணன்மார் மிகவும் கடுமையாக முகங்களை வைத்துக் கொண்டிருந்தார்கள்.

என் அண்ணன்மாரில் ஒருவர் விளையாட்டில் வெற்றி பெற்றவுடன் அல்லது எரிச்சல்பட்டு முடிவைத் தாங்க முடியாமல் விளையாட்டை நிறுத்தி விட்டு, ஆழமாக நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டு ஆறுதலாக இருக்கும்போது 'என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள், சேர்த்துக் கொள்ளுங்கள்,' என்று அவர்களைக் கெஞ்சுவேன். முதலில் வின்சென்ற் என்னை விளையாட்டில் சேர்ப்பதற்கு மறுத்தான். ஆனால் இல்லாத சதுரங்கள் காய்களின் இடத்தில் என் லைஃப்சேவர் இனிப்பை வைப்பதற்குத் தருவேன் என்று நான் சொன்னதும் அவன் அதை விட்டுத் தர இசைந்தான். அவனே சுவையான இனிப்புக் களைத் தெரிவு செய்தான்: கறுப்புக் காய்களுக்காக, காட்டு பெரி இனிப்புகளையும், வெள்ளை வீரனுக்காக பெப்பர்மின்ற்றையும் தெரிவு செய்தான். வென்றவன் இரண்டையும் சாப்பிடலாம்.

அம்மா அன்றிரவு உணவுக்காக ஆவியில் வெந்த டம்பிளிங்குகளை சிறிதாகப் பிடிக்கப்பட்ட பிசைந்த மாவில் மாத்துாள்களைத் துாவி உருண்டையாக்கிக் கொண்டிருந்தார். அப்போது வின்சென்ற் ஒவ்வொரு காயாகக் காட்டி சதுரங்க விளையாட்டின் விதிகளை எனக்கு விளங்கப் படுத்தினான். 'உனக்குப் பதினாறு காய்கள், எனக்குப் பதினாறு காய்கள் இங்கே உள்ளன. ஒரு அரசன், ஒரு ராணி, இரண்டு குதிரை வீரர்கள், இரண்டு கோட்டைகள், எட்டுக் காய்கள். காய்கள் ஒவ்வொரு அடியாக முன்னால் போகத்தான் முடியும். முதல் அசைவு தவிர. அதன் பிறகு இரண்டு அடிகள் போக முடியும். ஆனால் இதைப் போலக் குறுக்காகப் போய்த்தான் ஆட்களைப் பிடிக்க முடியும். முதல் அசைவைத் தவிர. முன்னே போய் இன்னொரு காயையும் எடுக்க முடியும்.'

என்னுடைய காயை நகர்த்திக் கொண்டு 'ஏன்?' என்று கேட்டேன். 'அவர்களால் ஏன் பல படிகளை ஒரே நேரத்தில் போக முடியாது?' 'ஏனென்றால் அவை காய்கள்,' என்றான் அவன்.

'மற்ற ஆட்களை எடுப்பதற்கு ஏன் குறுக்காகப் போக வேணும்? ஏன் அங்கே பெண்களும் குழந்தைகளும் இல்லை?'

'வானம் ஏன் நீலமாக இருக்கிறது? ஏன் எப்போதும் மடத்தனமாக கேள்வகளையே கேட்கின்றாய்?' என்றான் வின்சென்ற். 'இது ஒரு விளையாட்டு. இவைதான் அதன் விதிகள். நான் அவற்றை உண்டாக்கவில்லை. இந்தப் புத்தகத்தைப் பார். அதில் எல்லாம் எழுதப்பட்டிருக்கிறது.' ஒரு பக்கத்தில் கையில் வைத்திருந்த ஒரு காயால் குத்திக் காட்டினான். 'காய். கா-ய். நீயே வாசி,' என்றான்.

தன் கைகளிலிருந்த மாவை அம்மா தட்டினார். 'புத்தகத்தைப் பார்ப்போம், தா,' என்றார் மெதுவாக. பக்கங்களை விரைவாகக் கூர்ந்து பார்த்தார், அந்நிய ஆங்கிலக் குறியீடுகளை அவரால் வாசிக்க வில்லை. எதையுமே அவர் குறிப்பாகத் தேடவில்லைப் போலத் தோன்றியது.

'இந்த அமெரிக்கன் விதிகள்,' என்று கடைசியில் முடித்தார். 'ஒவ்வொரு முறையும் அந்நிய நாட்டிலிருந்து மக்கள் வரும் போது அவர்களுக்கு விதிகள் தெரிந்திருக்க வேண்டும். நீதிபதி உனக்குத் தெரியாது என்று சொல்வார். அது மிக மோசம், திரும்பிப் போ. ஏன் என்று சொல்ல மாட்டார்கள். சொன்னால் தானே உன்னால் முன்னால் போக முடியும். அப்படி அவர்கள் சொல்கிறார்கள்.

ஏன் என்று தெரியாது. நீயே கண்டு பிடி. ஆனால் அவர்களுக்கு எல்லாம் தெரியும். அதனால் அதை எடுத்துக் கொண்டு நீயே கண்டு பிடி.' அவர் தன் தலையை திருப்தியான புன்னகையுடன் பின்னால் சரித்தார்.

பின்னர், அந்த ஏன்களை நான் கண்டு பிடித்தேன். விதிகளைக் கற்றேன். அகராதியில் பெரிய வார்த்தைகளுக்கான பொருளைக் கண்டு பிடித்தேன். சைனாரவுண் நூலகத்திலிருந்து நூல்களைக் கடனாகப் பெற்றேன். ஒவ்வொரு காயைப் பற்றியும் படித்தேன். அவற்றின் சக்தியை அறிந்து கொள்ளுவதற்கு முயன்றேன்.

துவக்க அசைவுகளைப் பற்றியும் படித்தேன். ஆரம்பத்திலேயே மையத்தை ஏன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட வேண்டும் என்பதின் முக்கியத்துவத்தைக் கற்றேன். மையத்திற்கு நேராகச் செல்லும் இரண்டு புள்ளிகளே மிகக் குறைந்த தூரம் என்பதை அறிந்தேன். மைய விளையாட்டைப் பற்றியும், இரண்டு கருத்துக்களிடையே ஏற்படும் கருத்து மோதல்கள ஏன் என்பதையும், இரண்டு எதிரிகளின் தந்திரோபாயங்கள் அது என்பதையும் கற்றேன். திறமையாக விளையாடும் ஒருவரிடம் தாக்குவதற்கும் பொறியிலிருந்து தப்புவதற்கும், தெளிவான திட்டங்கள் இரண்டு இருக்கும் என்பதையும் கற்றேன். ஏன் இறுதி விளையாட்டு பற்றிய முன்பார்வையும்,

தொடர்தல் 108ம் பக்கம்

விளையாட்டு...

107ம் பக்கத் தொடர்ச்சி...

சாத்தியமான அசைவுகள் அத்தனையையும் பற்றிய கணித அறிவும், பொறுமையும் முக்கியம் என்பதைக் கற்றேன். அனைத்துப் பலவீனங்களும் சாதகமானவையும் வலிமையான எதிரிக்குத் தெரியவரும். அத்துடன் களைத்துப் போன எதிராளியின் கண்களிலிருந்து அவை மறைந்தும் போகும். முழு விளையாட்டுக்குள் மறைந்துள்ள பலத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். விளையாட்டு முடிவை அது துவங்க முந்தியே கண்டு விட வேண்டும்.

'ஏன்' என்பதை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தி விடக் கூடாது என்பதையும் கண்டு பிடித்தேன். ஒரு சின்னஞ் சிறிய அறிவுத் துளியைக் காட்டாமல் மறைத்து வைத்திருந்தால் பிறகு அது பெரும் சாதகமான தாக அமைந்து விடும். அதுவே சதுரங்கத்தின் வலிமை. சதுரங்கம் இரகசியங்களின் விளையாட்டு. அதை விளையாடுபவன் காட்ட வேணுமே ஒழிய சொல்லக் கூடாது.

அறுபத்து நாலு கறுப்பு-வெள்ளை சதுரங்களுக்குள் கண்ட இரகசியங்களை நான் விரும்பினேன். மிகவும் கவனமாக ஒரு சதுரங்கப் பலகையை கையால் கீறி அதை என் கட்டிலின் பக்கத்திலிருந்த சுவரில் ஊசியால் குத்தி வைத்தேன். அங்கே நடக்கும் கற்பனைப் போர்களை மணிக்கணக்காகப் பார்த்துக் கொண்டிருப்பேன். அதன் பின் நான் விளையாடிய எந்த விளையாட்டையும் லைஃப் சேவேர்சையும் நான் தோற்கவில்லை. ஆனால் என் எதிராளிகளைத் தோற்றேன். அதனால் வின்ஸ்ரனும் வின்சென்ரும் ஹொப்லோங் கசிடி கவ்போய் தொப்பிகளை அணிந்து கொண்டு பள்ளி விட்ட பின் வீதிகளில் அலைவதில் ஆர்வம் காட்டினார்கள்.

வசந்த கால குளிரான பின் மதியம் ஒன்றில் நான் வழக்கமாக வரும் வழியிலிருந்து திரும்பி நாங்கள் வாழும் சந்தின் இறுதியில் இருந்த விளையாட்டு மைதானத்தின் ஊடாக பள்ளியிலிருந்து வீட்டுக்கு நடந்து வந்து கொண்டிருந்தேன். அப்போது முதிய ஆண்கள் கூட்டம் ஒன்றில் இருவர் இருவராக எதிரெதிரே இருந்து சதுரங்கம் விளையாடிக் கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் சுங்கானில் புகைத்துக் கொண்டும், வேர்க்கடலை கொறித்துக் கொண்டும், விளையாட்டைக் கவனித்துக் கொண்டும் இருந்தார்கள். நான் வீட்டுக்கு ஓடிப் போய் வின்சென்ரின் சதுரங்கப் பெட்டியை எடுத்துக் கொண்டு அங்கே சென்றேன். சதுரங்கப் பெட்டி றபர் பட்டையால் கட்டி அட்டைப் பெட்டிக்குள் போட்டு வைக்கப்பட்டிருந்தது. மதிப்புமிக்க லைஃப் சேவேர்ஸ் இரண்டு சுருள்களையும் கவனமாக தெரிவு செய்து எடுத்துக் கொண்டேன். திரும்பவும் பூங்காவுக்கு வந்து, விளையாட்டைக் கவனித்துக் கொண்டிருந்த ஒருவரை அணுகினேன்.

'விளையாடப் போகிறீர்களா?' என்று கேட்டேன். அவருடைய முகம் ஆச்சரியத்தால் விரிந்தது. நான் கையில் வைத்திருந்த சதுரங்கப் பெட்டியைப் பார்த்து விட்டு மெல்லச் சிரித்தார்.

'பொம்மைகளுடன் விளையாடி நீண்ட காலமாகி விட்டது, சின்னப் பெண்ணே,' என்றார், கருணையான புன்னகையுடன். உடனே அவருக்குப் பக்கத்தில் உள்ள வாங்கிலில் சதுரங்கப் பெட்டியை வைத்தேன். அதுவே அவருக்கான சுருக்கமான என் பதில்.

லாவ் போ என்று அவரை அழைக்க என்னை அனுமதித்தார். அவர் என்னுடைய சகோதரர்களை விட நல்ல விளையாட்டுக்காரராகக் காட்டிக் கொண்டார். நான் அவரிடம் பலமுறை தோற்றேன். பல லைஃப் சேவேர்ஸ்களையும் இழந்தேன். ஆனால் கிழமைகள் செல்லச் செல்ல, இனிப்புகள் ஒவ்வொன்றாகக் குறையக் குறைய புதிய புதிய இரகசியங்களைக் கற்றுக் கொண்டேன். லாவ் போ அதற்கான பெயர்களை அளித்தார். அவற்றில் சில: கிழக்குக் கரையிலும் மேற்குக் கரையிலும் இருந்து வரும் இரட்டைத் தாக்குதல். நீரில் மூழ்கிப் போகும் ஆளில் எறியும்

வசந்தகால குளிரான பின் மதியம் ஒன்றில் நான் வழக்கமாக வரும் வழியிலிருந்து திரும்பி நாங்கள் வாழும் சந்தின் இறுதியில் இருந்த விளையாட்டு மைதானத்தின் ஊடாக பள்ளியிலிருந்து வீட்டுக்கு நடந்து வந்துகொண்டிருந்தேன் அப்போது முதிய ஆண்கள் கூட்டம் ஒன்றில் இருவர் இருவராக எதிரெதிரே இருந்து...

கற்கள். குலக் குடும்பங்களின் தீடீர்க் கூட்டம். துயிலும் காவலாளியிடமிருந்து வரும் ஆச்சரியம். அரசனைக் கொன்ற பணிவான பணியாள். முன்னேறும் படையணி யினரின் கண்களில் மண். இரத்தம் இல்லாமல் நடந்த இரட்டைக் கொலை.

சதுரங்கத்தின் இங்கித விதிகளில் சிறப்பான பகுதிகளும் உள்ளன: அதில் சிறைப் பட்டவர்களை நன்றாகக் கவனித்து நேரான நிரைகளில் வைத்திருத்தலும் ஒன்று. 'முற்றுகை' என்று ஆணவத்துடன் அறிவிக்கவே கூடாது. உன்னுடைய கழுத்தை யாராவது ஒளித்திருந்து வாளால் அறுத்தால் ஒழிய. விளையாட்டில் தோற்று விட்டால் காய்களை சுழற்றி பெட்டிக்குள் வீசாதே. ஏனென்றால் பக்கத்திலிருப்பவர்கள் எல்லோரிடமும் மன்னிப்புக் கேட்ட பின் திரும்பவும் நீ தான் அவற்றைக் கண்டெடுக்க வேணும். கோடை கால இறுதிக்குள் லாவ் போ அவருக்குத் தெரிந்த எல்லாவற்றையும் எனக்குக் கற்பித்துத் தந்து விட்டார். அப்பொழுது நானும் திறமான சதுரங்க விளையாட்டுக் காரியாக வந்து விட்டேன்.

வார இறுதியில் சீனர்களின் சிறிய கூட்டமும் சுற்றுலாப் பயணிகளும் ஓரிடத்தில் கூடுவார்கள். அங்கே நான் சதுரங்கம் விளையாடி என்னுடைய எதிராளிகளை ஒவ்வொருவராகத் தோற்கடித்தேன். வெளியே விளையாடும் இந்தக் விளையாட்டுக் கண் காட்சிகளில் என் அம்மாவும் பங்குபற்றினார். பெருமையுடன் வாங்கில் அமர்ந்து கொண்டு என் அபிமானிகளிடம் சீனர் களின் பொருத்தமான பணிவுடன், 'எல்லாம் அதிர்ஷ்டம்' என்பார்.

பூங்காவில் நான் விளையாடுவதைக் கவனித்துக் கொண்டிருந்த ஓர் ஆள் உள்ளூரில் நடைபெறும் சதுரங்கப் போட்டிகளில் விளையாட என்னை அனுமதிக்க வேண்டும் என்று அறிவுரை சொன்னார். அதற்கு என்னுடைய அம்மா கனிவாகப் புன்னகை புரிந்தார். அதன் பதில் அப்படி இல்லை என்பது தான். ஆனால் நானோ அதில் பங்குபற்றுவதற்குத் தீவிரமாக விரும்பினேன். ஆனால் அவ்விடத்தில் என் வாயை மூடிக் கொண்டிருந்தேன். அவர் அந்நியர் களின் மத்தியில் என்னை விளையாட விடமாட்டார் என்று எனக்குத் தெரியும். அதனால் நாங்கள் வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கும்போது உள்ளூர் போட்டி களில் விளையாட விரும்பவில்லை என்று மெல்லமாகச் சொன்னேன். அவர்கள் அமெரிக்க விதிகளின்படிதான் விளையாடு வார்கள். நான் தோற்றால் என் குடும்பத் திற்கு அவமானத்தைக் கொண்டு வருவேன், என்றேன்.

'ஒருவரும் தள்ளி விடாதபோது நீ விழுந் தால் அது அவமானமா? என்ன?' என்று என் அம்மா சொன்னார்.

என்னுடைய முதலாவது போட்டியில் நான் என் முறை வரும்வரை காத்திருந்தபோது என்னுடன் என் அம்மாவும் முன் வரிசையில் இருந்தார். குளிர்ந்த உலோக இருக்கை யில் ஒட்டியிருந்த என் கால்களை எடுப்ப தற்காக அடிக்கடி என் கால்களை ஆட்டிக் கொண்டிருந்தேன். என்னுடைய பெயரை அழைத்தபோது துள்ளி எழுந்தேன். என் அம்மா தன் மடியில் இருந்து எதையோ அவிழ்த்தார். அது சாங் என்ற சிறியதொரு சிகப்பு நிற மாணிக்கக் கல் வில்லை. அது கதிரவனின் தீயை உள்ளே வைத்திருக்கிறது. 'இது அதிர்ஷ்டம்' என்று குசுகுசுத்துக் கொண்டு என் சட்டைப் பைக்குள் திணித்தாள். நான் எனது எதிராளியைத் திரும்பிப் பார்த்தேன். அவன் ஓக்லன்ட்டில் இருந்து வந்திருந்த பதினைந்து வயதுச் சிறுவன். அவன் தன் மூக்கைச் சுருக்கிக் கொண்டு என்னைப் பார்த்தான்.

நான் விளையாடத் துவங்கியபோது அந்தச் சிறுவன் மறைந்து விட்டான். அறையிலிருந்து மணம் வெளியேறி விட்டது. என்னுடைய வெண்ணிறக் காய்களும் மறுபக்கம் இருந்த விளையாடுவதற்கு காத்திருந்த அவனுடைய கறுப்புக் காய்களும் தான் எனக்குத் தெரிந்தன. மெல்லிய காற்று என் காதுகளைக் கடந்து செல்லத் துவங்கியது. எனக்கு மட்டுமே கேட்கக் கூடிய இரகசியங்களை அது எனக்கு முணுமுணுத்துச் சென்றது.

'தெற்கிலிருந்து ஊது,' என்று அது முணுமுணுத்தது. 'காற்று எந்தத் தடத்தையும் விட்டுச் செல்வதில்லை,' என்றது. தெளிவான பாதையையும் என்னை விழுத்தும் பொறிகளையும் தவிர்த்தேன். கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. 'ஷ்!' 'ஷ்!' என்ற சத்தம் அறையின் மூலைகளிலிருந்து வந்தது. இப்போது காற்று அதிக வலுவுடன் வீசியது. 'அவன் கவனத்தைத் திருப்ப கிழக்கிலிருந்து மண்ணை அள்ளி வீசு,' என்றது. போர்வீரன் தன்னை அர்ப்பணிப் பதற்கு முன்னால் வந்தான். காற்று மேலும் மேலும் உரத்துச் சீறியது. 'வீசு, வீசு, வீசு. அவனால் பார்க்க முடியாது. இப்போது அவனுக்குப் பார்வை தெரியவில்லை. அவனைக் காற்றிலிருந்து மெதுவாக அகற்று. அப்போ அவனைத் தோற்கடிப்பது எளிது,' என்றது.

'முற்றுகை,' சிரிப்புடன் காற்றுக் கூவிக் கொண்டிருந்தபோது சொன்னேன். சிறு சிறு மூச்சுப் போல காற்று அடங்கியது. என் மூச்சும் அடங்கியது.

என்னுடைய முதலாவது பரிசுக் கேடயத்தை, அருகாமையில் இருந்த தாவோ சங்கம் எனக்கு அளித்த புதிய பிளாஸ்ரிக் சதுரங்க பெட்டிக்குப் பக்கத்தில் அம்மா வைத்தார். ஒவ்வொரு சதுரங்கக் காயையும் மென்மையான துணி ஒன்றால் அவர் துடைத்துக் கொண்டிருக்கும்போது, 'அடுத்த முறை அதிக காய்களை வென்று குறைவாக தோல்வி அடை,' என்றார்.

'அம்மா, எத்தனை காயைத் தோற்பதல்ல விளையாட்டு,' என்றேன். 'சிலவேளை முன்னேறி வெற்றி பெறுவதற்கு பல காய்களை இழக்க வேண்டி இருக்கும்,' என்றேன்.

'சில காய்களை இழப்பது நல்லது. அப்படிச் செய்வது தேவையா என்று யோசி,' என்றார்.

அடுத்த சுற்றுப் போட்டியில் திரும்பவும் வென்றேன். அப்போது அம்மா தான் வெற்றிச் சிரிப்புடன் காணப்பட்டார்.

'இந்த முறை எட்டுக் காய்களை இழந்து விட்டாய். போன முறை பதினொன்று. நான் சொல்வது என்னவென்றால் குறைவான காய்களை இழப்பது நல்லது என்று! எனக்கு எரிச்சல் வந்தது. ஆனால் என்னால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

நான் பல சுற்றுப் போட்டிகளில் கலந்து கொண்டேன். ஒவ்வொரு போட்டியும் வீட்டிலிருந்து தூரத் தூரத்தான் நடந்தது. எல்லாப் போட்டிகளிலும் எல்லாப் பரிவுகளிலும் வென்றேன். எங்கள் அடுக்ககத்தின் கீழிருந்த சீன பேக்கரியின் யன்னலில், என்றுமே எடுத்துப் போகாத தூசி படிந்த கேக்குகளுக்கு மத்தியில், அதிகரித்துக் கொண்டிக்கும் என்னுடைய எல்லாக் கேடயங்களும் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன. முக்கியமான ஒரு பிராந்திய போட்டியில் நான் வெற்றி பெற்ற அடுத்த நாள் அது. அந்த யன்னலில் பஞ்சு போன்ற கிரீம் வைக்கப்பட்ட தட்டையான சதுரமான புதிய கேக் ஒன்று வைக்கப் பட்டிருந்தது. அதில் சிகப்பு நிறத்தில் 'வாழ்த்துக்கள், வேவளி ஜொங், சீன நகர சதுரங்க வீராங்கனையே' என்று எழுதப் பட்டிருந்தது. அதற்குப் பின் நான் தேசியப் போட்டிகளில் விளையாடுவதற்கு பூக்கடைக்காரர், கல்லறைக்கல் செதுக்குபவர், இறுதிச் சடங்கு செய்பவர்கள் தாளாளர்களாக இருக்க முன்வந்தார்கள். அப்பொழுதுதான் இனிமேல் நான் கோப்பைகள் சட்டிகள் கழுவத் தேவையில்லை என்று என்னுடைய அம்மா தீர்மானித்தார். வின்சனும் வின்சென்ரும் நான் செய்து வந்த சிறு சிறு ஏவல் வேலைகளைச் செய்ய வேண்டும் என்றார்.

'ஏன் அவள் விளையாட வேணும், நாங்கள் ஏன் எல்லா வேலைகளையும் செய்ய வேணும்,' என்று வின்சென்ற் குற்றம் சாட்டினான். 'அதுதான் அமெரிக்காவின் புதிய விதி,' என்றார் அம்மா. 'மெய்மெய் விளையாடட்டும். சதுரங்க சம்பியனாக வருவதற்கு அவள் தன் முழு மூளையையும் கசக்கிப் பிழியட்டும். நீ விளையாடு, துவாயைப் பிழிவது நல்லது,' என்றார் அம்மா.

என் ஒன்பதாவது பிறந்த நாள் வருவதற்குள் தேசிய சம்பியனாக வந்து விட்டேன். கிறான்ட் மாஸ்ரர் தகுதிக்கு வர இன்னும் 429 புள்ளிகள் எடுக்க வேணும். ஆனால் அமெரிக்காவின் பெரும் நம்பிக்கைக்கு உரியவள் என்றும், அதிசயக் குழந்தை என்றும், சிறுமி என்றும் அடையாளம் காணப்பட்டேன். என்னுடைய நிழல்படம் ஒன்று லைஃப் சஞ்சிகையிலும் பிரசுரமானது. அதற்கு அருகில் பொப் ஃபிஷரின் ஒரு மேற்கோளும் வெளியிடப்பட்டிருந்தது: 'ஒருபோதும் ஒரு பெண், கிறாண்ட் மாஸ்ர

தொடர்தல் 108ம் பக்கம்

விளையாட்டு...

107ம் பக்கத் தொடர்ச்சி...

ராக வரவே மாட்டாள்,' என்று அதில் எழுதி இருந்தது. அதன் பக்கத்தில் 'பொபி, இப்போ உன்னுடைய முறை,' என்றிருந்தது அந்தத் தலைப்பு.

அந்த சஞ்சிகைக்கு என் நிழற்படத்தை எடுத்தபோது நான் அழகாக சடை பின்னி, போலி வைர மணி பதித்த அலங்கார மான பிளாஸ்ரிக் கிளிப்புகள் தலையில் குத்தி இருந்தேன். ஒருமுறை உயர்நிலை பள்ளியின் விசாலமான மண்டபத்தில் நான் விளையாடிக் கொண்டிருந்தேன். மண்டபத்தில், சளி பிடித்த இருமலையும் நாற்காலிகளின் கால்களில் பூட்டியிருந்த றபர் குமிழிகளால், பசை பூசிய பலகை யில் சறுக்கும் சத்தங்களும் கேட்டன. எனக்கு எதிரில் ஓர் அமெரிக்கன் உட் கார்ந்திருந்தான். லாவ் போவின் வயதை ஒத்தவனான அவன் இருந்தான். அதா வது ஒரு ஐம்பது வயது. அவனுடைய வியர்வை நிறைந்த முகத்தில் நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அசைவுக- ளின் போதும் அழுவது போல் தெரிந் தது. கருமையான, துர்மணம் வீசும் உடை கள். ஒரு பையில் பெரிய வெண்ணிற கைக்குட்டை. ஒவ்வொரு முறை குறிப்பிட்ட காயை நகர்த்துவதற்கு முன், பெரும் ஆர்ப்பாட்டத்துடன் கைக்குட்டையில் தன் உள்ளங்கையை துடைத்தான். இளஞ்சிகப் பும் வெள்ளையும் கலந்த நிறமுடைய மொரமொரப்பான உடையைத் தான் நான் அணிந்திருந்தேன். அதன் கழுத்தில் கர கரப்பான சரிகையும் இருந்தது. விசேஷ மான நிகழ்வுகளுக்காக என் அம்மா தைத்த இரண்டு உடுப்புக்களில் அது ஒன்று. கைகளை என் முகவாயின் கீழ்ப் பக்கம் வைத்திருந்தேன். முழங்கைகளின் மென்மையான பகுதிகள் மேசையின் மேல் லேசாகத் தயாரான நிலையில் இருந்தன. அப்படி வைத்திருக்க வேண்டும் என்று ஊடகத்திற்கு பேட்டி கொடுக்கும்போது என் அம்மா காட்டித் தந்திருந்தார். காப்பு ரிமை பெற்ற தோல் சப்பாத்துக்களை, பள்ளிப் பேருந்தில் பயணிக்கும் பொறு மையில்லாத ஒரு குழந்தை தன் கால் களை முன்னும் பின்னும் ஆட்டிக் கொண் டிருப்பதை போல ஆட்டிக் கொண்டிருந் தேன். பின் அதை நிறுத்தி விட்டு, இதழ் களைச் சப்பி உள்ளிழுத்துக் கொண்டேன். தெரிவு செய்த சதுரங்கக் காயை இன்னும் என்ன செய்வது என்று தீர்மானிக்காதது போல உயரப் பிடித்துச் சுழற்றிக் கொண் டிருந்தேன். பின் உறுதியாக எதிரியைப் அச்சுறுத்தும் புதிய இடத்தில், எதிரி யை வெற்றிப் புன்னகையுடன் நோக்கிக் கொண்டு அதை வைத்தேன்.

வேவளி பிளேசின் சந்தில் இப்பொழுது நான் விளையாடுவதில்லை. புறாக்களும் முதியவர்களும் கூடும் அந்த விளைாட்டு மைதானத்துக்கும் இப்பொழுது போவ தில்லை. பள்ளிக்குப் போவேன். பிறகு சதுரங்கத்திலுள்ள புதிய இரகசியங்களை யும், புத்திசாலித்தனமாக மறைக்கப்பட்ட அனுகூலங்களையும், தப்பிக்கும் வழிக ளையும் கற்பதற்காக நேராக வீட்டுக்குப் போவேன்.

ஆனால் வீட்டில் கற்பதில் கவனம் செலுத்து வதற்கு கஷ்டமாக இருந்தது. என் விளை யாட்டுக்களைத் திட்டமிட்டுக் கொண்டிருக் கையில் அம்மா எனக்குப் பக்கத்தில் வந்து நின்று பார்த்துக் கொண்டிருப்பார். அது அவருடைய வழக்கம். அவர் தான் என் பாதுகாப்பாளர் என்று நினைத்துக் கொண்டிருந்தார் என்று நினைக்கிறேன். அவருடைய இதழ்கள் இறுக்கமாக மூடி யிருக்கும். நான் ஒரு காயை நகர்த்திய பின் அவரிடமிருந்து மெல்லிய 'ஹிம்ம்ம்ம்' என்ற ஒலி வெளிவரும்.

'அம்மா, நீ இங்கே இப்படி நின்று கொண்டிருந்தால் என்னால் பயிற்சி எடுக்க முடியாது,' என்று ஒருநாள் சொன்னேன். சொன்னவுடன் அவர் குசினிக்குச் சென்று சட்டி பானைகளைப் போட்டுப் பெரும் சத்தங்களை எழுப்பினார். சத்தங்கள் நின்ற வுடன் கடைக்கண்ணால் அவரைப் பார்த்த போது அவர் கதவடியில் நின்று கொண் டிருந்தார். 'ஹ்ம்ம்ம்ம்.' அது மட்டுந்தான் அவருடைய இறுக்கமான தொண்டையி லிருந்து வெளிவந்தது.

பயிற்சி எடுப்பதற்காக என் பெற்றோர் பல சலுகைகளை எனக்குச் செய்து தந்தார் கள். நான் பகிரும் படுக்கை அறை மிக வும் சத்தமாக இருக்கிறது என்றும், அத

என் மூச்சுக் காற்று கோபமான புகையைப் போல வெளிவந்து கொண்டிருந்தது. குளிராகவும் இருந்தது. ஒரு குவியலாக் கிடந்த வெற்றுப் பெட்டிகளின் பக்கத்தில் கவிழ்த்து வைக்கப்பட்ட ஒரு பிளாஸ்ரிக் வாளியின் மேல்...

னால் என்னால் சிந்திக்க முடியவில்லை என்றும் ஒருமுறை குறை சொன்னேன். அதன் பின்பு என் சகோதரர்கள் வீதியை நோக்கிக் கொண்டிருந்த வரவேற்பறையில் ஒரு கட்டிலில் படுத்தார்கள். என் சோற்றை என்னால் சாப்பிட்டு முடிக்க முடியவில்லை என்றேன். வயிறு நிரம்பி இருக்கும்போது என் தலை சரியாக வேலை செய்யவில்லை என்று சொன்னேன். முழுவதையும் சாப் பிடாமல் அரைவாசியைக் கோப்பையில் விட்டு எழும்பியபோது ஒருவரும் என்னைக் குற்றம் சொல்லவில்லை. ஆனால் ஒரே யொரு கடமையை மட்டும் என்னால் செய் யாமல் தவிர்க்க இயலவில்லை. சுற்றுப் போட்டி விளையாட்டு இல்லாத காலத்தில் என் அம்மாவைச் சனிக்கிழமைச் சந் தைக்கு அவருடன் போகாமல் இருக்க இயலவில்லை. அப்போது அம்மா என் னுடன் பெருமையுடன் நடந்து வருவார். பல கடைகளுக்குச் செல்வார். ஆனால் மிகவும் கொஞ்சமாகத் தான் வாங்குவார். அவரை யாராவது பார்த்தால் அவர், 'இவள் என் மகள், வேவளி ஜொங்' என்று சொல்லுவார்.

ஒருநாள் ஒரு கடையை விட்டு நாங்கள் வெளியேறியபோது மற்றவர்களுக்கு கேட் காத முறையில் மெதுவாக, 'நான் உன் மகள் என்று எல்லாருக்கும் சொல்லாதே,' என்றேன். அம்மா அப்படியே நின்று விட் டார்.

நடைபாதையில் மக்கள் கூட்டம் பாரமான பைகளுடன் எங்களை இடித்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார்கள். முதலில் ஒரு பக்கத் தோளிலும், பின் மற்றத் தோளி லும் இடித்தார்கள்.

'ஐய்-யா! அப்படியா? அம்மாவுடன் வரு வது வெட்கமா?' கண்களைக் கூசி என் னைப் பார்த்துக் கொண்டு, என் கையை இறுக்கிப் பிடித்தார்.

நான் கீழே பார்த்தேன். 'அப்படியல்ல. அது மிகத் தெளிவாகத் தெரியும். அது மிகவும் சங்கடமானது.' 'என் மகளாக இருப்பது தான் உனக்குச் சங்கடமா?' அவருடைய குரல் கோபத்தால் உடைந்து கொண்டி ருந்தது. 'அதுவல்ல நான் கருதியது. அது வல்ல நான் சொன்னது.'

'அப்போ நீ என்ன சொன்னாய்?'

மேலும் எதையாவது சொல்வது இன்னும் பிழையாக முடியும் என்பது எனக்குத் தெரி யும். ஆனால் என் குரல் சொல்லிக் கொண் டிருப்பது எனக்குக் கேட்டது: 'என்னை ஏன் காட்சிப் பொருளாக உபயோகிக்கிறாய்? காட்சிப் பொருளாக காட்டுகிறதென்றால் நீயே சதுரங்கம் கற்றுக் கொள்ளலாமே?'

அம்மாவின் கண்கள் ஆபத்தான கறுத்த சிறுகீறல்களாக மாறின. அவரிடம் சொல் வதற்கு எனக்கு எந்த வார்த்தைகளும் இல்லை, கூர்மையான மௌனத்தை தவிர.

என்னுடைய வெம்மையான காதுகளைச் சுற்றி காற்று விரைந்து கொண்டிருந்ததை உணர்ந்தேன். அம்மா இறுக்கமாகப் பிடித் திருந்த என் கையைத் திடீரென இழுத்துச் சுழற்றினேன். என் கை போய் வயதான ஒரு பெண்ணில் இடித்தது. அவர் வைத் திருந்த மளிகைப் பொருட்கள் நிறைந்த பை நிலத்தில் விழுந்து பொருட்கள் சிதறி ஓடின.

'ஐய்ய்-யா! முட்டாள் சிறுமி!' அம்மாவும் முதியவளும் கத்தினார்கள். தோடம்பழங் களும் தகர ரின்களும் நடைபாதையில் ஒரு பக்கமாக சிதறி ஓடின. விலகி ஓடும் பொருட்களை பொறுக்குவதற்காக அம்மா குனிந்தபோது நான் ஓட்டம் பிடித்தேன்.

மக்களின் ஊடாக வீதி நீளம் ஓடினேன். 'மெய்மெய்! மெய்மெய்! என்று அம்மா கிரீச்சிட்ட குரலில் கத்திக் கொண்டே இருந்தார். இருண்ட, திரைச்சேலை போட்டி ருந்த கடைகளையும், யன்னல்களிலிருந்த தூசி படிந்த அழுக்குகளையும் கடந்து சந்தின் நீளம் ஓடினேன். சூரிய ஒளிக்குள் சென்றேன். பின் வேகமாக ஓடி, விசாலமான வீதியை அடைந்தேன். அங்கே சுற்றுலாப் பயணிகள் கூட்டம் ஒன்று, சிறு ஆபர ணங்களையும் நினைவுப் பரிசுகளையும் பரிசோதித்துக் கொண்டிருந்தது. பின் இன்னொரு இருண்ட சந்துக்குள் குனிந்து சென்றேன். பின் இன்னொரு வீதிக்குள் சென்றேன். பின் இன்னொரு சந்துக்குள். கால்கள் நோகும்வரை ஓடினேன். எங்கே போவதென்று தெரியவில்லை என்பதை உணர்ந்தேன். அத்துடன் நான் எதிலிருந் தும் ஓடவில்லை என்பதையும் உணர்ந் தேன். கூட, அந்த சந்துகளில் தப்பிக் கும் வழிகளும் இருக்கவில்லை.

என் மூச்சுக் காற்று கோபமான புகை யைப் போல வெளிவந்து கொண்டிருந்தது. குளிராகவும் இருந்தது. ஒரு குவியலாக் கிடந்த வெற்றுப் பெட்டிகளின் பக்கத்தில் கவிழ்த்து வைக்கப்பட்ட ஒரு பிளாஸ்ரிக் வாளியின் மேல், நாடியைத் தாங்கிக் கொண்டு, கடுமையாக யோசித்துக் கொண் டிருந்தேன். அம்மாவைப் பற்றிக் கற்பனை செய்தேன். முதலில் அவர் ஒரு வீதியில் இருந்து இன்னொரு வீதிக்கு என்னைத் தேடிக் கொண்டு சென்றிருப்பார். பின் அதைக் கைவிட்டு, வீட்டுக்குச் சென்று என் வருகைக்காகக் காத்துக் கொண்டி ருப்பார். இரண்டு மணித்தியாலத்திற்குப் பின் பலவீனமான கால்களில் எழுந்து வீட்டை நோக்கி மெதுவாக நடந்தேன். சந்து அமைதியாக இருந்தது. எங்களின் அடுக்ககத்திலிருந்து வந்த வெளிச்சம், இரவில் புலியின் இரு கண்களிலிருந்து வரும் மஞ்சள் வெளிச்சம் போல வருவ தைக் கண்டேன். கதவுக்குச் செல்லும் பதினாறு படிகள் மீது ஏறிச் சென்றேன். எந்தவித எச்சரிக்கை ஒலியும் எழாமல் ஒவ்வொரு படியிலும் மிக மெதுவாக ஏறி னேன். பூட்டுக் குமிழை திருப்பினேன். கதவு பூட்டியிருந்தது. கதிரை அசையும் சத்தம் கேட்டது. விரைவான காலடிகள். பூட்டு கிளிக்கென்று திருப்பும் சத்தம். கிளிக்! கிளிக்! கிளிக்! கதவு திறந்தது.

'நல்லா நேரம் பிந்தி வருகிறாய்? உனக் குப் பிரச்சினை இருக்கிறது,' என்றான் வின்சென்ற்.

சொல்லிவிட்டு, திரும்பவும் இரவுணவு மேசைக்குப் போய் விட்டான். ஒரு கோப் பையில் பெரியதொரு மீனின் மிச்சம் இருந்தது. சதையுள்ள அதன் தலை மீன் முள்ளில் அப்படியே ஒட்டி இருந்தது. தப்பிப் பிழைப்பதற்காக வீணாக மேல் நோக்கி நீந்திக் கொண்டிருந்தது போல அது இருந்தது. எனக்குக் கிடைக்கப் போகும் தண்டனைக்காக காத்துக் கொண்டு நான் நின்று கொண்டிருந்தேன். அப்போது அம்மா வரண்ட குரலில் ஏதோ பேசுவது கேட்டது.

'நாங்கள் இந்தச் சிறுமியைப் பற்றி இனி மேல் அக்கறைப்படப் போவதில்லை. அவ ளும் எங்களில் மேல் அக்கறை இல்லை,' என்றார். ஒருவரும் என்னைத் திரும்பிப் பார்க்கவில்லை. மீன்முள்ளை எடுத்துக் கொண்டிருந்த உணவுண்ணும் தடிகள் கோப்பையின் உட்பக்கம் தட்டுப்படும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அவர்கள் உணவை உண்டு முடித்துக் கொண்டி ருந்தார்கள்.

நான் எனது அறைக்குள் போய்க் கத வைச் சாத்தி விட்டு கட்டிலில் படுத்தேன். அறை இருட்டாய் இருந்தது. அயலில் இருந்த அடுக்ககங்களிலிருந்து விழுந்த ஒளியில் சீலிங் முழுவதும் நிழல்களால் நிரம்பி இருந்தது. என் தலைக்குள் அறு பத்தி நாலு கறுப்பு, வெள்ளை சதுரங் களைக் கொண்ட ஒரு சதுரங்கப் பலகை யைக் கண்டேன். எனக்கு எதிரில் என் எதிரி. இரண்டு கோபமான கறுத்த சிறு பிளவுகள். முகத்தில் வெற்றிப் புன்னகை. 'மிகப் பெரும் வலிமையான காற்றைக் கண்களால் காண முடியாது,' என்றார்.

அவளுடைய கறுப்புக் காய்கள் சதுரங்கப் பலகையில் முன்னேறிக் கொண்டிருந்தன. ஒவ்வொரு அலகாக, அடுத்தடுத்த மட்ட மாக மெதுவாக அணிவகுத்து முன்னேறிக் கொண்டிருந்தது. என் வெள்ளை நிறக் காய்கள் ஒவ்வொன்றாக வேகமாகச் சென்று விழுந்து அலறிக் கொண்டிருந்தன. அவ ளுடைய ஆட்கள் என் விளிம்புக்கு நெருங்கி வந்தபோது, நான் பளுவற்ற வளாகிக் கொண்டிருந்தேன். காற்றில் எழுந்து, யன்னலூடாகப் பறந்தேன். பள் ளத்தாக்கின் மேலே, ஓடு போட்ட கூரை களின் மேலே, உயர, உயர பறந்து கொண்டிருந்தேன். காற்றினால் அள்ளப் பட்டு, இரவு வானத்திற்குத் தள்ளப்பட் டேன். எனக்குக் கீழே எல்லாம் மறைந்து விட்டன. நான் தனியாக இருந்தேன்.

கண்களை மூடிக் கொண்டு, நான் வைக்கப் போகும் அடுத்த அசைவை நினைத்துக் கொண்டிருந்தேன்.

mahalingam.k@thaiveedu.com

தமிழ்வலை - 59

‘தாய்வீடு’ சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் ‘தமிழ்வலை’யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

பெயர்:

முகவரி:

தொலைபேசி எண்:

மின்னஞ்சல்வரி:



தமிழ்வலை-59 வினா

இடமிருந்து வலம்

2 இலங்கை பெருந்தோட்டப் புலம்

5 ஒரு தென்னமெரிக்க நாடு

7 செய்யுள் இலக்கணம்

8 போக்கிரி

9 கட்டிப் புக்கை

12 வழிபடு

13 பதிலடி

14 முருகனின் துணைவி

15 சாடை

17 திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் ஆசிரியர்

மேலிருந்து கீழ்

1 ஓர் உலக அதிசயம் (4-2-3)

3 காலனின் பட்டணம்

4 முயலு

6 மூட்டு

7 வள்ளுவர் மொழியில் ஒரு பாரிய விலங்குக்கு எய்து குறிதவறிய ஆயுதம் (2-4-2)

8 ஒரு சோழ மன்னன் (3-4)

10 புகட்டு

11 காவிரி

12 ஆடிப்பாடும் நவீன கலை

16 சிறைவாசி

தமிழ்வலை போட்டிக்கான விடையை
இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.

பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய
அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

விடைகளை அனுப்பவேண்டிய மினன்னஞ்சல் முகவரி
thamilvalai@thaiveedu.com
தொலைநகல்: 416 849 0594

விடைகளை அனுப்பவேண்டிய அஞ்சல் முகவரி

Thaiveedu
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

தமிழ்வலை - 58க்கான விடைகள்



தமிழ்வலை-58 பெறுபேறுகள்

முன்னணிப் போட்டியாளர்

சின்னத்தம்பி கனகரட்ணம், சுண்ணாகம், இலங்கை
ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ, கனடா.
சபாநாதன் சாவித்ரி, ரொறன்ரோ
திருமதி. சாந்தி மயில்வாகனம், ஏஜக்ஸ்
அழகரத்தினம் பவளராணி, நோத்யோர்க், கனடா.
சபாநேசன் சின்னப்பு, ஒட்டாவா,
விநோதா வசீகரன், மார்க்கம், கனடா.
முரளீதரன் அரியரட்னம், ஸகார்பரோ, கனடா.
திரு. நவம் கனகலிங்கம், ஒட்டாவா, கனடா.
கணபதிபிள்ளை முரளி, மிஸ்சிசாகா, கனடா.
V. சந்திரன், கொழும்பு 2, இலங்கை
திருமதி. குயின் ஜெயரட்னம், ஏஜக்ஸ்

பரிசுபெறும் போட்டியாளர்

கனகநாதன் சோதிமலர், ரொறன்ரோ.

thamilvalai@thaiveedu.com

உலகின் முன்னணி காணி,
வீடு விற்பனை நிறுவனமான
RE/MAX முதல் தடவையாக
யாழ் மண்ணில்

RE/MAX
NORTH REALTY

கனடாவிலிருந்து தாயகத்தில்
எப்பாகத்திலும் வீடு காணி
வாங்க விற்க சிறந்த ஒரு நண்பர்
உங்களை வழிநடத்த

LKR 15,000,000 CAD $ 109,025

Beach Side Land for sale in Pothuvil
(Sangamam Village, Thirukovil)
Land Size: 01 Acre

LKR 77,500,000 CAD $ 574,582

Famous and spacious Commercial
Building For sale in Prime Location Jaffna
Land Size - 34 Perch • Building Size - 5358sqft

LKR 140,000,000 CAD $ 1,015,257

Famous Palmera Eco Resorts for sale
in Nilaveli, Trincomalee
Land Size :- 143 Perch • Total Sqft :- 38,932

LKR 6,000,000 CAD $ 43,236

House For Sale
in Memorial Lane, Manipay
Land size - 16.05 Perch

LKR 5,000,000 CAD $ 35,449

House For Sale
in Urumpirai West
Land size - 41.9 Perch

LKR 28,000,000 CAD $ 204,219

Brand New 2 Story House
For Sale in Vannarpannai
Land Size - 23.1 Perch

LKR 10,000,000 CAD $ 70,877

Land for sale in Kanagar village,
Pottuvil
Land Size - 732 Perch

LKR 2,800,000 CAD -$ 20,476

Land For Sale
in Muthamil Road, Kottaddy
Land Size - 13.2 Perch

LKR 6,800,000 SOLD

House For Sale in Thinaveli

Land Size - 23.12 Perch

LKR 22,000,000 CAD $ 159,281

Land for sale in Tanankilappu,
Chavakachcheri
Total Land Size - 110 Larchams

LKR 2,000,000 CAD $ 14,450

Land For Sale In Valvettithurai

Land Size - 30 Perch

LKR 2,100,000 SOLD

Land for sale in 3rd Cross St,
Paasaiyoor
Land Size: - 30 Perch

LKR 4,000,000 CAD $ 28,937

Land For Sale In Valvettithurai

Land Size - 60 Perch

LKR 9,000,000 CAD $ 65,480

Land For Sale In Valvettithurai

Land Size - 83.8 Perch

LKR 12,000,000 CAD $ 87,692

House with Land For Sale
In Allaral North
Land Size - 125perch

LKR 600,000,000 CAD $ 4,395,926

Luxurious Business complex For Sale
In Kiramakottu Junction Point Pedro
Land Size - 61 Perch • Total Sqft - 50,771

LKR 27,500,000 SOLD

Two Story Luxury House
For Sale in Nallur
Land Size: - 10 Perch

LKR 36,000,000 CAD $ 262,381



Land For Sale
in Palaly road, Vasavilan
Land Size - 150 Perch

LKR 3,000,000 CAD $ 21,677

Land for Sale In Valvettithurai

Land Size - 45 Perch

LKR SOLD

Land For Sale in Kaithady

Land Size - 38 Perch

Lathan Varatharajah
Broker Owner
+94 76 493 3331
lathan@remaxnorth.lk

Sarmilin Rajeevan
Real Estate Representative
+94 77 227 6498
sarmilin@remaxnorth.lk

வீடு, காணி வியாபாரம் வாங்க விற்க
நம்பிக்கையுடன் நாடுங்கள் நட்பான
விற்பனை முகவர்கள் ஒரே முகவரியில்

+94 77 566 0000 • +94 21 468 0780
www.remaxnorth.lk
83 Kannathiddy Road,
Jaffna, Sri Lanka

Nitharsan Antonrasa
Real Estate Representative
Mobile: +94 77 222 0243
nitharsan@remaxnorth.lk

M.T. Mohamed Ismail
Real Estate Representative
+94 77 221 6916
ismail@remaxnorth.lk

‘நீயுமா புரூட்டஸ் (You too Brutus)?’

இந்த வரிகளில் தேங்கிக் கிடந்த வலிகள் நெஞ்சைக் கிழித்தன. ஏற்கனவே ஒரு தடவை அப்படிக் கிழிபட்ட நெஞ்சம்தான் என்பதாலோ என்னவோ இம்முறை அந்த வலி முன்னையதைக் காட்டிலும் குறை வாகவே இருந்தது. முன்னைய வலி 2004 இல் தமிழினத்தின் ஆன்மாவையே பிரட் டிப்போட்ட வலி. சீசருக்கு வாய்த்த புரூட்-டஸ் போல், கட்டப்பொம்மனுக்கு வாய்த்த எட்டப்பன் போல், பண்டார வன்னியனுக்கு வாய்த்த காக்கை வன்னியன் போல் காலங்காலமாக வரலாறு திரும்பத் திரும்ப வந்துகொண்டேயிருக்கின்றது என்பதற்குக் கட்டியங் கூறுமாற் போல் முதுகில் குத் தப்படும் அந்த வலியுடன் அந்தக் குரங் கினை நோக்கினேன்.

தளைகள் அறுத்து உன்னை இரட்சிப் பதற்காகவே இத்திருவிளையாடலை நாம் மேற்கொண்டோம். அதற்காகவே நீ இறந்து விட்டதாக மற்றவர்கள் அனைவரையும் நம் பச் செய்திருக்கின்றோம்.

வளைபட்ட கைம் மாதொடு, மக்கள் எனும் தளைபட்டு அழியத் தகுமோ? தகுமோ?

விட்டு விடுதலையாகி நிற்குமொரு சுதந் திரப் பறவை நீ இப்போது. உனக்கு நற் கதியையே நாங்கள் நல்கியுள்ளோம்.

பகுதி: 3

நல்லாயிருக்கிறது உங்கள் வாதம். உற்ற மனையாளையும் பெற்ற குழந்தைகளை யும் ஒருவனிடமிருந்து பிரிப்பது அவனுக் குச்செய்யும் நல்லுதவியா?

அப்படிப் பிரிந்து சென்றதால் தானே 25 நூற்றாண்டுகள் கடந்தும் சித்தார்த்தன் இன்றுவரை கௌதமபுத்தனாகக் கொண் டாடப்படுகின்றான்.

ஆனால், இன்று புத்தரின் போதனைகளை அவர் அளித்த பஞ்சசீலக் கொள்கைகளை அவரின் பக்தர்கள் என்று சொல்லிக்கொள் பவர்கள் யாரும் கண்டுகொள்வதாகக் கூடத் தெரியவில்லையே.

தன்னைத் தளைத்திருந்த தளைகளை அறுத்தெறிந்ததால் அல்லவா சித்தார்த் தனால் ஞானமடைய முடிந்தது. ஆனால் உனக்கோ, நாங்களே உன் தளைகள் அறுத்து உடனேயே உன்னைக் கடவுளாக் கவும் அருள்பாலித்திருக்கின்றோம்.

ஓ! இந்தக் கடவுள் என்ற கருத்தினை இந்த மனிதப் பொறிக்குப் புகட்டியது நீதானா? நான் அது ஏதோ கண்டதையும் இணையத் தில் வாசித்துவிட்டு உளறுகின்றது என்று நினைத்தேன்

ஏன் நீ கடவுள் என்றால் ஏதோ பெரிய இதுவாட்டம் அலட்டிக் கொள்கின்றாய்? உங்கள் சக மானிடர்களில் எத்தனையோ பேரைக் கடவுள் என்றும், கடவுளின் பிள் ளை என்றும், கடவுளின் தூதர் என்றும் நீங்கள் கொண்டாடிக்கொண்டுதானே இருக் கின்றீர்கள்?

அதற்காக நானெல்லாம் போய்க் கடவு ளாக முடியுமா?

கெடுவாய் மனனே, கதி கேள், கரவாது
சுடுவாய் நெடு வேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினை யாவையுமே

என்றவாறே இடையில் புகுந்தது அந்த மானிட இயந்திரம்...

என்ன கந்தரனுபூதியா? இரண்டாவது வரி யை விட்டுவிட்டாய்.

பரவாயில்லையே... இதையெல்லாம் தெரிந்து வைத்திருக்கின்றாயே. இரண்டா வது வரியை விட்டுவிட்டாலும் தளை தட்ட வில்லை. சொற்பிழையோ பொருட்பி-ழையோ ஏற்படவில்லைத்தானே?

தளைதட்டுதோ இல்லையோ உன்னுடைய தமிழறிவு நல்லாக் களைகட்டுது என்பது மட்டும் விளங்குகின்றது.

நன்றி நன்றி உங்கள் பாராட்டுக்கு. வசிட் டர் வாயால் பிரம்மரிஷி என்று எடுத்துக் கொள்ளலாமா?

அது உண்மையாகவே அப்படிக்கூறுகின் றதா அல்லது என்னைக் கேலி செய்கின் றதா என்கின்ற ஐமிச்சம் உண்டானது.

எனது முகக்குறிப்புகளிலிருந்து எனது எண் ணவோட்டத்தை அது அறிந்து கொள் வதில் தேர்ச்சிபெற்றுக் கொண்டிருக்கின் றது, அதாவது அதன் செயற்கை நுண்ண றிவினூடாகக் கற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை அது உரைத்த அடுத்த வாக் கியம் எனக்கு உணர்த்திற்று.

அகத்தில் உள்ளது முகத்தில் தெரிகிறது.

நீ இன்னும் இந்தப் பழமொழிகளை விட வில்லையா?

எப்படி விடமுடியும். எவ்வளவு அருமை யான தகவல்களும் கருத்துக்களும் இவற் றில் புதைந்து கிடக்கின்றன தெரியுமா?

ஓ! அப்படியா?

எனது கிண்டலை அது அறிந்துகொண்டு விடுமோ என்று அச்சமாகவும் இருந்தது.

அப்படி அது அறிந்து கொண்டால் அதன் பதில்க் கிண்டல்களை என்னால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்குமோ என்கின்ற சந்தேகமும் உண்டானது.

நானொன்றும் உன்னைக் கிண்டல் செய்ய வில்லை. நாங்கள் உரையாடிக் கொண் டிருக்கையிலேயே சமாந்தரமாகப் பழமொழி களைக் கற்று, அவற்றைப் புரிந்து கொண் டிருக்கின்றேன்.

ஓ! அப்போ நீதான், ஆரியக் கூத்தாடினா லும் காரியத்தில கண்ணாயிருக்கிறாய்.

மனிதன் படைத்த குரங்கு

ஆ! இந்தப் பழமொழி பற்றி தமிழ்க் கோராவில் ஒருவர் விளக்கம் கொடுத்திருக் கிறார். அது ஆரியக் கூத்து ஆடினாலும் என்பதல்ல. ஆர் எக்கூத்து ஆடினாலும் என்பதே காலப்போக்கில் ஆரியக்கூத்து ஆடினாலும் என்று மருவியிருக்கலாம் என் கிறார். உண்மைதானே. ஆர் எக்கூத்து என்பது தொல்காப்பியம் கூறும் புணர்ச்சி விதிகளின்படி ஆரெக்கூத்து ஆகிறது. ஆனால் மொழியியலின் படி ஆர் ஆரு-வா கிப் பின் ஆரி-ஆகி, ஆரி-உம் எக்கூத்து-உம் புணர்ந்து ஆரியக்கூத்து ஆகியிருக் கிறது.

என்னால் அதைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

இராமகிருஷ்ணரின் விவேகானந்தரிலும் நீ மேலானவனாக இருக்கிறாய் என்றேன்.

விவேகானந்தனிலும் பார்க்க நான் விசுவா மித்திரனாக இருக்கவே விரும்புகின்றேன்.

- வல்லிபுரம் சுகந்தன் -

ஓ! அப்படியென்றால் உன் வாழ்விலும் மேனகை உண்டோ? என்றேன் இடை புகுந்து.

அருக்கு மங்கையர் மலரடி வருடியெ
கருத்த றிந்துபின் அரைதனில் உடைதனை
அவிழ்த்தும் அங்குள அரசிலை தடவியும் - இருதோளுற்

றணைத்தும் அங்கையின் அடிதொறும் நகமெழ
உதட்டை மென்றுபல் இடுகுறி களுமிட
அடிக்க ளந்தனில் மயில்குயில் புறவென - மிகவாய்விட்

டுருக்கும் அங்கியின் மெழுகென உருகிய
சிரத்தை மிஞ்சிடும் அநுபவம் உறுபலம்
உறக்கை யின்கனி நிகரென இலகிய - முலைமேல்வீழ்ந்

துருக்க லங்கிமெய் உருகிட அமுதுகு
பெருத்த உந்தியின் முழுகிமெ யுணர்வற
உழைத்தி டுங்கன கலவியை மகிழ்வது - தவிர்வேனோ

தவிர்வேனோ அல்ல. தவிர்த்தவன் நான்.

ஓ! பட்டினத்தார் பாடல்களையும் நீ விட்டு வைக்கவில்லை போல் தெரிகிறதே.

ஹாஹாஹா... இது பட்டினத்தார் பாட லில்லை அப்பனே. அருணகிரிநாதரின்

தொடர்தல் 114ம் பக்கம்

மனிதன் படைத்த...

113ம் பக்கத் தொடர்ச்சி...

திருப்புகழ். கிட்டத்தட்ட இதேகருத்துக்கள் தான் பட்டினத்தார் பாடல்களிலும். ஆனாலும், அவை எனக்குத் தேவையற்றவை. ஏனெனில் நானும் இந்தக் குரங்கைப் போல் கட்டைப் பிரமச்சாரிதான். அந்தப் பாடல்கள் எல்லாம் சிற்றின்ப விரும்பிகளான உன்போன்றவர்களை உய்விப்பதற்காகவே எழுதப்பட்டன. விசுவாமித்திரனாக இருக்கவிரும்புவதற்குக் காரணம் அவர் தானே ஒரு சொர்க்கவுலகைப் படைத்ததே. அவர்தானே திரிசங்கு சொர்க்கத்தை உண்டாக்கியவர். அப்படியான சொர்க்கவுலகுகள் பலவற்றை உண்டாக்குவதே எமது இலட்சியம்.

ம்ம்ம்... நீ இயந்திரப்பொறியாக இருப்பதால் ஆண்-பெண் பேதமற்று அந்த உணர்வுகளற்று இருக்கின்றாய். இந்தக் குரங்கு கட்டைப்பிரம்மச்சாரியாக இருப்பதற்கு காரணம் அதன் இனத்தில் அதனைத்தவிர்த்து வேறுயாருமே உயிருடன் இல்லாதிருப்பதே. ஆக வேறுதெரிவுகளின்றியே நீங்கள் பிரம்மச்சாரிகளாக இருக்கின்றீர்கள்.

கூறிவிட்டு அந்தக் குரங்கினை உற்றுக் கவனித்தேன். அதற்கும் இரு காரணங்கள் இருந்தன. ஒன்று என் அகஉணர்வுகளை அந்த மானிடப்பொறி அறிந்துகொள்வதைத் தவிர்ப்பது. மற்றையது, அம்மானிடப் பொறி என் அகஉணர்வுகளை அறிந்து கொள்வது போன்று அக்குரங்கின் அகஉணர்வுகளை நான் அறிந்துகொள்ள வேண்டும் என்கின்ற எண்ணம் சடுதியாக உதித்திருந்தது. ஏற்கனவே ஒருதடவை அதன் வார்த்தைஜாலங்களில் நான் மயங்கி ஏமாந்துபோயிருந்தது திடீரென நினைவிற்கு வந்து என்னுள் ஒரு விழிப்புணர்வினைத் தோற்றுவித்திருந்தது.

அந்தக்குரங்கின் முகத்தில் ஒரு சிறு முறுவல் மட்டுமே இருந்தது. அதன் முகக் குறிப்புகளில் வேறெந்த வித்தியாசமும் தெரியவில்லை. நான் சொன்னதைக் கேட்டு அது கவலைப்பட்டதாகவோ இல்லை அதை மறுத்துரைக்கும் எண்ணம் கொண்டதாகவோ அல்லாமல் தனக்கும் இதற்கும் எந்தவொரு சங்காத்தமுமில்லை என்பது போன்றவொரு மோனநிலையில் ஒரு சாட்சியாக மட்டுமே அது அங்கே நின்று கொண்டிருப்பதாய் எனக்குப் பட்டது.

அது அனுமனின் பக்தன் என்பதை அதனுடன் இவ்வளவு நாட்களாகப் பழகியும் நீ உணராமலிருப்பது ஆச்சரியமளிக்கின்றது தன்னை ஆஞ்சநேயருக்கே அது ஒப்புக்கொடுத்திருக்கின்றது. இல்லையென்றால் எப்போதோ அதன் சந்ததி விருத்தியை அது உண்டுபண்ணியிருக்கும். பேரின்பத்தை உணர்ந்து அதில் திளைக்கும் அதற்கு எதற்கு இந்தச் சிற்றின்பம்?

மாங்காய்ப் பாலுண்டு
மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி? - குதம்பாய்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி?

ஓ! இப்போது நினைவிற்கு வருகின்றது. இக்குரங்கு என்னுடன் உரையாடுகையில் பலமுறை அனுமனைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றது. அனுமனை ஒருதடவை சந்தித்ததாய்ககூடச் சொல்லியிருந்தது. ஆனால் இது, தான் அனும பக்தன் என்று ஒருதடவைகூடக் கூறியதில்லை. ஏதோ அதனுடைய மூதாதையர்களில் ஒருவரானா அனுமரை அது பெருமையாகக் கருதுகிறது என்றே எண்ணியிருந்தேன்.

ம்ம்ம். தொட்டணைத்தூறும் மணற்கேணி.

மனிதப்பொறி என்னை இப்போது நக்கலடிப்பது புரிந்தது.

எப்படிக் கடவுள்கள் உருவாகுகின்றார்கள் அல்லது உருவாக்கப்படுகின்றார்கள் என்று என்றாவது நீ எண்ணிப்பார்த்ததுண்டா? இப்போதெல்லாம் இப்பூமியில் அதிகளவிலான கோயில்களில் ஆஞ்சநேயருக்கு வழிபாடு நடத்தப்படுவது பற்றியும், அதிகளவில் அவருக்கேயான சன்னதிகள் எழுப்பப்படுவது பற்றியும் நீ எப்போதாவது எண்ணிப்பார்த்திருக்கின்றாயா? அப்படி என்றைக்காவது நீ எண்ணிப்பார்த்திருந்தால், எதுவுமே தெரியாத அப்பாவி மாதிரி நம்முன்னே நிற்கின்ற இந்தக் குரங்குடன் பழகிய பின்னர் சில முடிச்சுக்கள் உன்னால் அவிழ்க்கப்பட்டிருந்திருக்கும். என்ன செய்வது? உங்களைப் படைத்த இக்குரங்கினத்தவர் உங்களுக்கு அந்த அறிவினைப் புகுத்தாமல் விட்டுவிட்டார்கள். உங்களுக்குத்தான் சுயபுத்தியும் கிடையாதே. பிறகெப்படி?

ஏனோ தெரியவில்லை. அதன் சீண்டல் என்னுள் கோபத்தை ஏற்படுத்தவில்லை. உண்மைதானே. ஒருவகையில் பார்த்தால் நாமெல்லோருமே ஒரு செம்மறியாட்டு மந்தைக் கூட்டம் போன்று தானே செயற்படுகின்றோம். கொரோணாவின் தொடக்க காலங்களில் அதைப்பற்றி அலட்சியமாக இருந்தோம். பின்னர் அடித்துப்பிடித்துப் பொருட்களை வாங்கிக் குவித்தோம். இன்று எல்லோர் வீடுகளிலும் உணவுப்பண்டங்களிலும் பார்க்க கழிவறைக் காகிதங்களும் கைக்கிருமி நீக்கிகளும்தானே குவிந்து கிடக்கின்றன. ஊரோடின் ஒத்தோடு என்று சொல்லிச் சொல்லி எம் அறிவை வளர விடாமல் முளையிலேயே கிள்ளிப் போட்டிருக்கின்றார்கள். சமூக இடைவெளி என்கின்றார்கள். ஆனால் இன்று பொதுப் போக்குவரத்துகளில் முகக்கவசம் மட்டும் அணிந்தால் போதும் சமூக இடைவெளியைப்பற்றி பொருட்படுத்துவார் யாரும் கிடையாது. அங்கிருந்து ஆட்டுகின்றவன். அவன் ஆடுகின்ற நாடகமிது. என்றே தான் இப்போது எண்ணத் தோன்றுகின்றது. அங்கிருந்து ஆட்டுகின்ற அவன் யார்? அவனா? அல்லது அவளா? அல்லது அவர்களா? அல்லது அதுவா? அல்லது அவைகளா? அல்லது இந்த ஐம்பாலுக்குள்ளும் அடங்காது நிற்கும் ஆறாம்பாலா?

ம்ம்ம். இப்பொழுதுதான் நீ கொஞ்சம் சிந்திக்க ஆரம்பித்திருக்கிறாய். எப்படி மந்தைக்கூட்டமாய் மக்களை ஆட்டுவிக்க முடிகின்றது என்று யோசி. சில முடிச்சுகள் அவிழும்.

இந்தச்செய்திகள் எப்படி மக்களைச் சென்றடைகின்றன. அட தகவல் ஊடகங்கள். அவைதானே தாங்கள் விரும்பிய விடயங்களைப் பெரிதாக்கியும் விரும்பாதவற்றை மறைத்தோ அல்லது சிறிதாக்கியோ மக்களிடம் கொண்டு செல்கின்றன. அப்படியானால் இந்த ஊடகங்களுக்குப் பின்னாலிருந்து அதை இயக்குபவர்களா அந்த ஆட்டுவிப்பாளர்கள்? அல்லது யாரேனும் அவர்களுக்கும் பின்னால் நின்று அவர்களை ஆட்டுவிப்பார்களோ? ஒருவேளை இந்த உலகையே தங்கள் கட்டுப்பாட்டில் வைத்து ஆட்டுவிப்பவர்கள் என்று சொல்லப்படும் இலுமினாட்டியைச் சேர்ந்தவர்களோ? இலுமினாட்டி இப்போதும் இயங்குவதாகச் சொல்கிறார்களே. ஒ... ஒருவேளை இந்தக்குரங்கு மனிதப்பொறி இவர்களும் இலுமினாட்டியைச் சேர்ந்தவர்களோ? என்னையும் இலுமினாட்டியில் ஒரு உறுப்பினராகச் சேர்ப்பதைத்தான் கடவளாக்குவதாகக் கூறுகின்றார்களோ? அதனால்த்தான் அவர்களின் இரகசியங்களை அறிந்த என்னை உயிருடன் வெளியே விட மாட்டோம் என்கின்றார்களா? கடைசியில் போயும் போயும் இவர்களிடமா வந்து மாட்டிக் கொண்டேன்? எனக்கு வியர்த்து விறுவிறுக்கத் தொடங்கியது.

- தொடரும்

suganthan.v@thaiveedu.com

BUY & SELL HOMES, BUSINESS, LANDS..

PROFIT FROM MY EXPERIENCE, LISITNG.. 1% COMMISSION

Brand new from builder
Oshawa. $764K

Pat Pushpakanthan
Full Time Broker
416.894.1187

Century 21 Brokerage
AFFILIATE REALTY INC
80 Corporate Dr #208
Toronto
416-290-1200
nhome2025@gmail.com VISIT.. PATPUSH.COM

- Call for FREE Market Evaluation!
- FREE Home Staging*
- Spectacular Video
- Extensive Advertising
- Elaborate Marketing Professional Photography

CALL PAT for professional service
We helped many buyers and sellers to buy and sell homes in your area

- Sell in 10 days Program
- 100% Satisfaction.
- Pat Will Beat Any Deal
- Pat Help For Mortgages from 1.99%,
- New Home build & Home Renovation

Warden/
st.clair
3 Bedroom
3 Washroom
steps to
subway

CALL
PAT FOR
VVIP
Platinum
ACCESS

RENTAL CORNER
1, 2, BEDROOM CONDO RENTAL FROM
$1800.00, $2150
HOUSES RENTAL 2 bm 2wsrm $1700/-
Lee Centre Dr. 1+den 1950/-
CALL ME
416-894-1187

கடன் பிரச்சனைகளா?

- கடன் அட்டை சிக்கல்கள்
- வங்கிக்கடன் சிக்கல்கள்
- கலக்சன் கம்பனி போன் தொல்லை
- ஊதிய கையகப்படுத்தும் சிக்கல்கள்
- இது போன்ற கடன் பிரச்சனைகளால் தினந்தோறும் வீட்டில் சண்டை

நல்ல செய்தி

எம்மிடம் தீர்வு உண்டு

நம்மால் 80% வரை உங்கள் கடன்களை குறைக்க முடியும்,
உங்களால் முடிந்த குறைந்த மாதக்கட்டணம் மட்டும்
செலுத்தலாம். இது ஒரு கடன் ஒருங்கிணைப்பு பெறுவது போல.

இலவச ஆலோசனை பெற

JANNET FINANCIAL SERVICES INC.

Ms. Jennet Sam & Mr. Stalin Dominic

Tel: 647-894-3876

FaX: 905-471-8080
Email: jennet_renni@hotmail.com

உடன் அழையுங்கள் உடனடியாக உங்கள் புதிய வாழ்க்கையை தொடங்க

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS

19 BINGLEY RD, TORONTO
FINCH / MORNINGSIDE
4 2

TORONTO
NEILSON RD / SHEPPARD AVE E
1 1

TORONTO
MORNINGSIDE AVE / ELLESMERE RD
2 2

TORONTO
MIDLAND / DANFORTH
2+1 2

OSHAWA
DEAN / WILSON
3+2 2 SEP ENTRANCE

OSHAWA
HARMONY RD / COPPERFIELD DR
3 3

OSHAWA
THORNTON / ADELAIDE
3 3 FINISHED BASEMENT

AJAX
WESTNEY / ROSSLAND / HARDWOOD
3+1 2 FINISHED BASEMENT

TORONTO
MCCOWAN / 401
4 2

TORONTO
MCCOWAN / 401
4 2

TORONTO
MCCOWAN / ELLESMERE
2 2

TORONTO
NEILSON / SHEPPARD
3 3 FINISHED BASEMENT

TORONTO
LAWRENCE / SCARBOROUGH GOLF CL
3+2 2 FINISHED BASEMENT

TORONTO
MARKHAM / LAWRENCE
3+3 2 SEP ENTRANCE

TORONTO
RIVER ST TO RYNARD TO FAIRGROU
5 4

TORONTO
ELLESMERE / SCARB. GOLF CLUB
3+2 2 FINISHED BASEMENT | SEP ENTRANCE

TORONTO
NEILSON RD / SOUTH OF HWY 401
4 3 FINISHED BASEMENT | SEP ENTRANCE

TORONTO
PORT UNION / 401
3 2 FINISHED BASEMENT W/O

TORONTO
MEADOWVALE / ELLESMERE
3 4 FINISHED BASEMENT

TORONTO
PORT UNION / SHEPPARD
4+1 3

POWER BROTHERS REAL ESTATE

UTHAYAN SIVARAJAH BROKER
416.301.5555
WWW.PYRAMIDGROUP.COM

SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777

ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
Independently Owned and Operated

பனி விழும் பனை வனம்

- செல்வம் அருளானந்தம் -

பகுதி: 5

முதல் தடவையாக யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறினதும் பிறகு மன்னாரிலை வாழ்ந்த நாட்களும் இப்ப மனசிலை மங்கின நினைவுகளாய்த்தான் இருக்கு.

மன்னாரிலை இருக்கிறத்துக்கு ஒரு வீடும், ஐஸ் கட்டி அடிச்சு றாலைக் கொழும்புக்கு அனுப்புறத்துக்குக் கடற்கரைக்குப் பக்கத்திலை ஒரு வாடியும் ஒழுங்க செய்ய வேண்டியிருந்தது. சம்மாட்டியும் வான் றைவரும் அந்த ஒழுங்குகளை நல்லாச் செய்தாங்கள்.

மன்னாரிலை தொடங்கி விடத்தல் தீவு, இலுப்பக்கடவை, மூன்றாம் பிட்டி, வெள்ளாங்குளம், நாச்சிக்குடா எண்டு பல்லவராயன்கட்டுவரை வானிலை போய் றாலைச் சேகரித்து வரவேணும். பின்னேரம் அதை லொறியிலை கொழும்புக்கு அனுப்ப வேணும். இரவு அந்தக் கணக்குகளை எழுதி வைச்சிட்டு அடுத்த நாளுக்கான பணத்தை ஆயத்தப்படுத்தி வைக்க வேணும்.

போன முதல் நாள் இராத்திரி பக்கத்தில் வீட்டுக்காறர் பேசியது அப்படியே காதில் விழுந்தது.

'யாரோ யாழ்ப்பாணத்து முதலாளியாம்... இஞ்சை வந்து றால் வேண்டி கொழும்புக்கு அனுப்பி, அப்படியே யப்பானுக்கு அனுப்ப போகினமாம். அவங்கள் இஞ்சை எங்கடை சனத்தைச் சுத்தத்தானே வருவாங்கள்.'

எனக்கு ஒரு மாதிரியாய் இருந்தது. என்னெண்டு இதுகளை சமாளிக்கப் போறன் எண்டு பயமாய் இருந்தது. என்னோட வேலை செய்ய வந்த பெடியன் வந்த அடுத்த நாளே நான் யாழ்பாணம் போகப்போறன் எண்டு தொடங்கிட்டான்.

பக்கத்து வீட்டுக்கார அம்மா விடியவே வந்து, 'என்னண்டு இந்த வீட்டை வாடகைக்கு எடுத்த நீங்கள். எங்கடை வீட்டிலை குமர்ப் பிள்ளைகள் இருக்கு. நீங்கள் இங்கை வந்தபடியால் கண்டபடி ஆட்கள் வந்து போவினம். எங்களுக்கு இது சரி வராது வேறை இடம் பார்த்துப் போறது உங்களுக்கு நல்லது' எண்டு கடுமையாய்ச் சொன்னார்.

சம்மாட்டியின்ரை நண்பரான இன்னொரு இலுப்பக்கடவை சம்மாட்டி லூக்காசின் உதவியுடன் பள்ளிமுனை எண்ட இடத்திலை ஒரு வீடு ஒழுங்கு செய்யப்பட்டது. அங்கையும் பிரச்சினை வந்தது. அது ஒரு தனிக்கிராமம் பெரிதாக வெளியாட்களை அனுமதிக்கிறது இல்லை.

லூக்காஸ் சம்மாட்டிதான் அந்த ஊர் கோயில் பங்குத்தந்தையைப் பிடிச்சு, வீடு கிடைச்சது. பங்குத்தந்தை ஒரு வாக்குறுதியை என்னிடம் கேட்டார். அங்கு 'நான் என்னவும் செய்யலாம். ஆனால் எந்த வொரு இளம் பெண்ணுடனும் பேச்சுவார்த்தை வைக்கப்படாது' என்பதுதான் அந்த வாக்குறுதி. அதற்கு நான் கொள்கை அளவில் உடன்பட்டேன்.

குடியேறிய இரண்டாம் நாளே நான் வாடியை நோக்கி தலை குனிந்துபடி மண்ணைப் பார்த்து நடந்து போனது. பின்னாட்களில் எனக்கு நண்பிகளான மரியகொற்றியும் டெய்சியும் கோயில் வாசலில் நின்ற படி 'பெண்ணு ஊருக்கு புதுசு' எண்டு பெலத்துச் சொன்னதைக் கேட்டு நான் கொஞ்சம் கடுமையாவே பயந்து போனன். வாடிக்குப் போற வரைக்கும் குனிஞ்ச தலை நிமிரவே இல்லை.

'ஊர் ஆட்கள் எலும்பை எண்ணிப் போடு வாங்கள்' எண்டு பங்குத்தந்தை சொன்னது..., சத்தமாய்க் காதிலை கேட்டுக் கொண்டிருந்தது.

வாழ்க்கை இப்படித்தான் போகப் போகுதோ...? எதிர்காலம் பற்றின ஒரு பயம் வந்தமாதிரிக் கிடந்தது.

நான் பெட்டியிலை போனால் சனியன் இஞ்சினிலை போறமாதிரி பிரச்சினையள் எனக்கு முன்னால போய்க்கொண்டிருந்தது.

சம்மாட்டியும் என்னை நம்பி எல்லாப் பொறுப்புகளையும் தந்து போட்டு, பெரிய தொகையை என்ர பெயரிலை 'பாங் ஒவ் சிலோன்' வங்கியிலை போட்டிட்டு யாழ்-பாணம் போய்விட்டார். விலை தீர்மானிக்கிறதிலையும் வேலைக்கு ஆட்களைப் போட்டு காரியங்கள முடிக்கிறத்துக்கும் நம்பிக்கையோடை பொறுப்புகளைத் தந்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வெளியிலையும் உலகம் இருக்கு எண்டுறதும் யாழ்ப்பாணத்தாரை விட பல விதங்களிலை சிறந்த சனங்கள் எங்கும் இருக்கு எண்டு அறிய என்ர உலகம் விரிஞ்சுது.

செய்கின்ற வேலையிலை என்ன சிக்கல் வந்தாலும் வேலையையும் மன்னாரையும் விட்டு போவதில்லை எண்ட முடிவு எனக்குள்ள உறுதியாயிற்று. முதல்ல பத்மினியை மறக்க வேணும். பிறகு கொஞ்சப் பணம் சேர்க்க வேணும். அதோட உலகத்தைப் படிக்க வேணும்.

காலையிலை எழும்பி ஒவ்வொரு கடற்கரைக் கிராமங்களுக்கும் போய், றால்களைக் கொண்டு வந்து, பிறகு கொழும்புக்கு அனுப்புறது சாதாரண வேலையாய் இருக்கேல்லை.

போய் வாற செலவுகள், வானுக்கான செலவு, பெற்றோல் எல்லாத்தையும் கணக்குப் பார்த்துட்டு கடற் தொழிலாளிகளுக்குச் சொன்னன்.

'நேரே கொண்டு வந்து மன்னார் வாடியில் தந்தால் றாத்தலுக்கு ஒரு ரூபாய் கூடத் தாறன்'

தொழிலாளிகள் இரண்டு ரூபா கூட வேணும் எண்டு கேட்டு, ஒன்றரை ரூபாவிலை முடிஞ்சுது. இது முதலாளிக்கும் பிடிச்சுது. கடற் கரையில வாங்கிற றால் ஈரத்தோட நிறை கூடவாயிருக்கும். இங்க அது காய்ந்து நிறை குறைவாயிருக்கும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த பையனுக்கு மன்னார் வெக்கை ஒத்து வரேல்லைப் போல. யாழ்ப்பாணத்துக்கு போகப் போறன் எண்டு வெளிக்கிட்கிட்டுட்டான்.

அவனை அனுப்பிப் போட்டு, உள்ளூரிலை ஒரு முஸ்லீம் பையனையும் ஒரு தமிழ்ப் பையனையும் பிடிச்சு வேலையிலை போட்டன்.

காலையிலை எழும்பி வீட்டியிலைருந்து வாடிக்கு வந்து தொழிலாளர்களையும் முகவர்களையும் எதிர்பார்த்தபடி இருக்கிறது வழக்கமாய்ப் போச்சு. சம்மாட்டி எதிர்பார்த்ததைவிட லாபம் தரக்கூடிய இடமாய் மன்னார் இருந்தது. அத்தோடை உள்ளூர் வியாபாரிகளின் எதிர்ப்பு இன்னொரு பக்கத்திலை வளர்ந்தது.

போகப்போக நாங்கள் எதிர்பாராத இடங்களிலை இருந்தும் றால் வரத்தொடங்கிற்று. வேலைக்கு மேலதிகமாய் இன்னுமொரு ஆளை எடுத்தன். அவருடைய முக்கியமான வேலை எங்கள் எல்லாருக்கும் சமைப்பது. அவன் ஏதோ கரை வலை தொழிலாளர்களுக்கு சமைச்சவன் என்று தான் சொல்லி வந்தான், முதல் ஒரு கிழமை சரியான பிரச்சினை. பருப்பும் கிழங்கும் ஒரு கறியண்ணன், கிழங்கும் பருப்பும் வந்தது. எருக்கலம்பிடடியைச் சேர்ந்த தமிழரசுக் கட்சி ஆதரவாளன் சதகத்துல்லாவும் இன்னொரு தமிழரசுக்கட்சி ஆதர வாளன் பனங்கட்டிக் கொட்டிலை சேர்ந்த வியாபாரி ஸ்ரிபனும் நண்பர்களானார்கள்.

காலையிலை பத்துமணிக்கு மன்னார் பஸ் ஸ்ராண்டு அருகில் இருக்கும் மாநா கர நூல்நிலையத்திற்கு போய் நாளாந்த பத்திரிகைகளைப் பார்த்து ஊர், உலக நடப்புக்களை அறியத் தொடங்கினன். ஒருநாள் நூல் நிலையத்திற்குள்ளை ஒருவர் என்னைக் கண்டுவிட்டு டக்கென மாறினார்.

எனக்கு அவர் சிமியோன் மாதிரி இருந்தது. பாக்கிறதுக்கிடையில் வாசிகசாலையாலை இறங்கி பஸ் ஸ்ராண்டு பக்கமாய் இன்னொருவருடன் விரைவாக நடந்து சென்றார். அவர் கையில் மீன் கூடையும் மரக்கறிகளும் இருந்துச்சுது. நான் பின்னாலை சிமியோன் சிமியோன் எனக் கூப்பிடக்

தொடர்தல் 128ம் பக்கம்

பனி விழும் பனை...

127ம் பக்கத் தொடர்ச்சி...

கூப்பிட அவர் விரைவாக நடந்து போய் ஒரு பஸ்சிலை ஏறிட்டார்.

சிமியோன் எனக்கு ஒரு 25 ரூபா காசு தர வேணும். அதுக்காக என்னைக் கண்டு போட்டு மாறக்கூடிய ஆளும் இல்லை அவன். நானும் அந்த காசைத் திருப்பித் தா என்று சொல்லிக் குடுக்கவும் இல்லை. அவன் கிட்டடியிலை எங்கையோதான் இருக்கவேணும். ஏதோ காரணத்துக்காகத் தான் மன்னார் பக்கம் வந்திருக்க வேண்டும். என்னைக் கண்டு போட்டு மறைந்தோடினதுக்கு வேறை ஏதோ காரணம் இருக்க வேண்டும்.

கடைசியா அவனைக் கண்டது யாழ்ப்பாண நூல்நிலைய மேல் மாடியில் 77 கலவரம் பற்றிய சன்சோனி கொமிசன் விசாரணை தொடக்க நாளிலைதான் நான் போயிருந்தன்... ஆனா, அங்க அவங்கள் கதைச்ச இங்கிலிஸ் விளங்காமல் இறங்கி வெளியில் வாற நேரம் சிமியோன் அங்க நிண்டான். அவனும் என்னுடன் சேர்ந்து வந்து நூல் நிலைய வெளிவாசலிலை நிண்ட மரத்துக்குக் கீழ நின்று கனநேரம் கதைச்சுக் கொண்டிருந்தம்.

அவன் என்ர அப்பாவின்ரை ஊரவன். வறுமையான குடும்பத்தை சேந்தவன் என்றதைத் தவிர, அவனைப் பற்றிய பெரிய பின்னணிகள் எதுவும் தெரியாது. தமிழரசுக் கட்சி கூட்டங்களிலை ஒரு தொண்டனாக நிற்பான். தமிழரசுக் கட்சி தமிழ் விடுதலைக் கூட்டனியாய் மாறினபோது இன்னும் தீவிர தமிழ் தேசிய ஆதரவளனாய் மாறினாலும் தமிழரசுக் கட்சியின் மாறாத் தொண்டன்.

அதனால் எனக்கு அவனுக்கு இடையே ஒரு சின்ன நெருக்கம் வந்தது. அந்த நெருக்கம் ஒரு அடிபாட்டிலை இன்னும் இறுகியது.

தமிழரசுகட்சிக் கூட்டம் ஓர் ஊரில் நடை பெற்றுக்கொண்டிருந்தது. அந்த ஊர் பெரிதாக தமிழரசுக்கட்சிக்கு சார்பான ஊர் இல்லை.

கூட்டத்திலை நியாயமான சனம். அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களே, அண்ணன் சிவசிதம்பரம் அவர்களே, அடலேறு ஆலாலசுந்தரம் அவர்களே, கோப்பாய் கோமான் கதிரவேள்பிள்ளை அவர்களே, அக்கா மங்கையர் அரசி அவர்களே. சிறை மீண்ட செம்மல் மதி முக ராசா... என நீண்ட டாப்பு வாசிச்சுப் பேசுகின்ற உள்ளூர்க் கச்சேரிக்காறர் முடிய, எனக்கு விருப்பமான அமிர்தலிங்கத்தின்ர பேச்சுக்குக் காத்திருந்தன்.

நேரம் இரவு பத்துமணிக்கு மேலாயிற்று. அதற்கிடையிலை, வந்த சனம் மங்கையற்கரசியும் பேசுவேணும் எண்டு கத்த, அமிர்தலிங்கத்தின் மனைவி மங்கையற்கரசி பேசுறத்துக்கு வந்தா.

நேரம் பத்துமணி தாண்டியதால் அவர் வணக்கம் சொல்லிவிட்டு நேரம் போகின்ற படியால் ஒரு சிறிய பேச்சு பேசவா அல்லது கட்சிப் பாட்டு ஒன்று பாடவா? எண்டு கேக்க, சனம் அமைதியாய் இருக்க நடுச்சனத்துக்கை இருந்து ஒரு குரல் திடீரெண்டு 'நீ பேசவும் வேண்டாம் பாடவும் வேண்டாம் நீ ஆடு' என்றது.

கூட்டத்துக்கு நடுவிலை ஓடிப்போய் அப்படி சொன்னவனைப் முதல் பிடிச்சது சிமியோன்தான். இன்னும் இரண்டு மூன்று இளைஞர்களும் சேர்ந்து போய் குரல் எழுப்பினவனை அடிச்சாங்கள்.

சொன்னவன் அந்த ஊர்காறன். கொஞ்சம் கலவரமாய் போயிற்று. விடுப்பு பார்க்க போன எனக்கும் ஓர் அடி விழுந்தது.

சிமியோனை வெளியிலை இழுத்துக் கொண்டு வாறது கஸ்ரமாய் இருந்தது. என்னர சைக்கிளிலைதான் ஏத்திக் கொண்டு வந்து பஸ்ஸ்ராண்டிலை விட்டன்.

யாழ். நூல் நிலைய வாசலிலை இருந்த மரத்தின்ர நிழலிலை நிண்டு சிமியோன் சொன்னது இப்ப ஞாபகம் வந்தது. 'மச்சான் இனியும் அமிர்தலிங்கம் ஆட்களை நம்பி பிரையோசனம் இல்லை.'

நான் அவன்ரை கால் புண்கள் எப்படியிருக்குது எண்டு கேட்டன். களிசானை தூக்கி காலைக் காட்டினான். இரண்டு கால்களும் முழுங்காலுக்கு கீழே அவிந்த மாதிரிக் கிடந்தது.

நாலைந்து மாசங்களுக்கு முதல்ல நடந்த கர்த்தாலில ஓடிக்கொண்டிருந்த ஒரு இலங்கைப் போக்குவரத்துச் சேவை பஸ்சைக் கடத்திக் கொண்டு போய் பண்ணை வெளியிலை வைச்சு இரண்டு மூன்று இளைஞர்கள் கொளுத்தினாங்கள். அதிலை சிமியோனும் ஒருவன். பஸ்சை எரிக்க அந்தரப் பட்டதிலை சிமியோன் காலிலையும் பெட்ரோல் பட்டதை உணர தெரியாமல் பஸ்சைக் எரிக்க... சிமியோன் காலும் எரிஞ்சு போச்சு. இரண்டு மூன்று மாத சிகிச்சைக்கு பிறகுதான் ஆள் உலாவத் தொடங்கினான். நானும் போய் பார்த்தனான்.

இப்ப இன்னொரு கதையைச் சொன்னான், இன்ஸ்பெக்டர் பஸ்ரியாம்பிள்ளை தன்னைக் கூட்டிக்கொண்டு போய் ஒரு கிழமை பொலிஸ் ஸ்ரேசனிலை வைச்சு சாம்பல் அடி அடிச்சார் எண்டு.

நீ பஸ் எரிக்க போனது தெரிஞ்சிட்டுதோ எண்டு நான் கேக்க, 'அது இல்லை... ஒரு பாங் கொள்ளையிலை தன்னர பெயரை யாரோ சொன்னாங்களாம் எண்டுதான் அடிச்சவன். உண்மையிலேயே எனக்கும் அதுக்கும் ஒரு சம்பந்தம் இல்லை. பஸ்ரியாம் பிள்ளைக்கும் அது தெரியும். ஒரு துவக்கு கைமாறிய விடயத்திலை என்னிலை அவன் சந்தேகப்படுறான். ஆனால் அவனுக்கு முழுமையான விபரம் தெரியாமல் தடுமாடுறான்' என்று சொல்லிச் சிரித்தான்.

'பிறகு உன்னை எப்படி விட்டவன்' எண்டு கேக்க,

என்னை விடேக்கை பெரிய மரியாதையாத் தான் விட்டவன். 'பரடைஸ் கபே'யில புரியாணி வேண்டித் தந்து, காசும் பத்து ரூபா தந்துதான் விட்டவன்.

'நீ கிரிஸ்ரியன். கோயிலுக்குத்தான் போக வேணும். அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் எண்டு அவங்கடை சொல்லைக்கேட்டு அழிஞ்சு போகாதேங்கோ. அவங்கடை பிள்ளைகள் எல்லாம் நல்லாப் படிச்சு வெளிநாடு போய்விடுவாங்கள். உங்களை மாதிரி பெடியள்தான் கஸ்டப்படுவீங்கள். தமிழ் ஈழம் என்று சொல்லித்திரியிற நட்டா முட்டிப் பெடியள் பற்றி என்ன தகவல் தெரிஞ்சாலும், தனக்கு சொல்ல வேணும்' என்று சொல்லித்தான் அனுப்பினார் எண்டான்.

ஒவ்வொரு பொலிஸ் ஸ்ரேசனாய் உடைச்சுத் தள்ளவேணும் மச்சான். அதற்குப் பெரிய தமிழ் இரானுவத்தைக் கட்டவேணும் மச்சான். ஏதொ யோசிச்சு போட்டு உன்னட்டை ஒரு 25 ரூபா இருக்கோ, கையிலை ஐந்து சதக் காசில்லை' எண்டான்.

நான் பொக்கெற்றுக்கை வச்சிருந்த 25 ரூபாவை அவனட்டை கொடுத்துவிட்டு 'ஒரு துவக்கு தேடறதுக்கு இவ்வளவு அடி வேண்டினனி எண்டு சொல்லுறாய்... பிறகு, ஒவ்வொரு பொலிஸ் ஸ்ரோனாய் உடைத்து தள்ளவேணும் எண்டும் சொல்லுறாய் மச்சான்' எண்டு நக்கலாய்ச் சொன்னன்.

அவன் கொஞ்சம் கோபப்பட்டு என்னையும் என்னைப் போன்றவர்களையும் கொண்டு போய் வதைக்கிற உந்த யாழ்பாணப் பொலிஸ் ஸ்ரேசனை ஒரு நாளைக்குத் தரைமட்டமாக்குவோம் எண்டான். நான் மனசுக்குள்ள சிரிச்சாலும் ஒன்றும் பறையாமல் கேட்டுக்கொண்டு நிண்டன் அந்த மரநிழல் உரையாடலுக்குப் பிறகு இப்பத் தான் அவனைப் பார்க்கிறன்.

ஒருநாள் காலையிலை வீட்டிலை இருந்து வாடிக்கு போய்கொண்டிருக்க, மரியகொறற்றி இடையில மறித்து தங்கடை கோயில் சபையில இருக்கிற ஒரு இளைஞர் பிரிவான டொன் பொஸ்கோ சபையில் சேர முடியுமா? எண்டு கேட்டா. அப்பதான் அவவை வடிவாய் பார்த்தேன் அந்த ஊருக்குரிய செந்நிறமும் அகன்ற தோழும் பொன்னிற மேனியும் என்டு வேறு ஓர் உலகத்தை சேந்தவள் போல் இருந்தாள். வானும் றைவரும் வேலைக்காறரும் எண்டு திரியிற என்னைப் பாத்து படித்த பணக்காறன் என்டு நினைத்திருக்கலாம்.

'நான் வேறை ஊர் ஆள். அதெல்லாம் உங்களுக்கு பிரச்சினை வரும்' எண்டன். அவ சிரிச்சுக்கொண்டு பங்குத்தந்தையே வேறை ஊர் ஆள்தான். நீங்கள் சரியான பயந்த ஆள். எல்லா யாழ்பாணத்தாரும் அப்படித்தான். எண்டு சொல்லிச் சிரிச்சா.

இன்னொரு நாள்... நல்ல மாலை வெயில். கடற்கரை காற்று சுகமாக வீசிக்கொண்டிருந்தது. வீட்டு கேற்றடியில் இருந்தவொரு கல்லில் குந்தியபடி வாசிகசாலையிலை இருந்து எடுத்து வந்த ஜானகிராமனின் மோகமுள் நாவலை படிச்சுக்கொண்டிருந்தன்.

அந்த வழியாலை வந்த மரியகொறற்றியும் டெய்சியும் எனக்குக் கிட்ட வந்து என்ன பைபிளோ படிக்கிறீங்கள் எண்டு கேக்க, நான் இல்லை எண்டன். கொறற்றி வில்லங்கமாய் புத்தகத்தைப் பறித்துப் பார்த்தா. மோகமுள் என்ற தலைப்பைப் பார்த்ததும் 'கெட்ட புத்தகம்' எண்டு டெய்சிக்குச் சொல்லிச் சிரித்தபடி என் தலையிலை இடிச்சுப்போட்டு போனா.

எப்படித்தான் தவிர்த்தாலும் ஏதோ ஒரு வகையில் கொறற்றி என் கண்ணில் பட்டு கொண்டே இருந்தா.

பத்மினியின் நினைவு, பங்குத்தந்தையின் எச்சரிக்கை... இவைகளையும் மீறி மனம் சலனப்பட்டது உண்மைதான்.

சிமியோன் இங்கைதான் எங்கையோ இருக்கிறான். அவன் இண்டைக்கு என்னைத் தவிர்த்தது பக்கத்தில் போன மற்றவருக்காய் இருக்க வேணும். எப்படியோ அவன் என்னை தேடிக் கண்டு பிடிப்பான் எண்டு நான் நினைச்சன்.

உண்மையிலை நான் யாழ்பாணத்தை விட்டு வெளிகிட்டதுக்கு பத்மினியின்ர பிரச்சினை மட்டும் காரணமில்லை. தமிரசுக்கட்சி அரசியலை தாண்டி, ஆயதப் போரட்ட ஆயுத்தங்கள் நடக்கத் தொடங்கியதை நான் உணரத் தொடங்கினன். காலமும் வயதும் சூழலும் சாதகமாக அமைய, எனக்கும் அதோட ஒரு மெல்லிய தொடர்பு இருந்தது. அத்தோட நானும் சேர்ந்து இறுகி விடுவேனோ எண்டும் அச்சப்பட்டன்.

பொலிசார் தமிழ் இளைஞர்களை கொண்டு போய் சித்திரைவதை செய்வதும் கொல்வதும் தொடங்கியிருந்தது.

இளைஞர்கள் தரப்பாலும் வங்கிக் கொள்ளைகள், துரோகிகள் எண்டு பொலீஸ்மார் கொல்லப்படுவதுவும் ஆரம்பமாகியிருந்தது.

போரும் காதலும் என்னை மாற்றி விடுமோ எண்டு பயந்தன். இதுகளுக்குள்ளாலை இருந்து தப்ப யாழ்பாணத்திலை இருந்து மன்னாருக்கு போவது ஒரு நல்லூழ் எண்டுதான் நினைச்சன். ஆனா, அப்படியில்லைப் போல இருக்கு.

ஒரு கதை ஞாபகம் வந்தது.

மக்கா நகரிலை ஒரு இளைஞனை மரண தேவதை பின்னாலை கலைச்சுக் கொண்டு போனதாம். அவன் பயந்து ஒடிப்போய் தான் வேலை செய்யும் கடை முதலாளியிட்டை 'ஐயோ உங்கடை குதிரையைத் தாங்கோ... என்னை மரண தேவதை கலைக்குது. நான் தப்பி மதினாவுக்கு போகப் போறன்' எண்டு சொல்லி விட்டு, மதினாவுக்குக் குதிரையிலை வேகமாகச் சென்று விட்டான். அடுத்த நாள் கடை அருகாலை போன மரண தேவதையைக் கண்ட கடை முதலாளி, 'ஏன் நேற்று அந்தப் பெடியனைக் கலைச்சனி?' என்று கேட்ட போது மரண தேவதை சொல்னாள்... 'இண்டைக்கு அவன் மதினாவிலை நிற்க வேண்டியவன்... ஏன் இன்னும் மக்காவிலை நிற்கிறாய் எண்டு சொல்லத்தான் கலைச்சனான்' எண்டதாம்.

(தொடரும்...)

selvam.a@thaiveedu.com

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker

Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER

MORTGAGE SOLUTIONS

SAVE UPTO 75% REFINANCE

MONTHLY SAVING

$2,409

		Before	After
Mortgage Payment	$320,000 @ 2.90%	$1,498.02	-
Auto Loan	$21,000 @ 7.50%	$764.25	$0.00
Line of Credit - 1	$16,000 @ 6.50%	$566.67	$0.00
Line of Credit -2	$12,500 @ 7.00%	$447.92	$0.00
Credit Card -1	$ 8,800 @12.00%	$352.00	$0.00
Credt Card - 2	$ 5,200 @ 19.00%	$238.34	$0.00
Store Card	$ 3,000 @ 24.00%	$150.00	$0.00
New Mortgage	$386,500 @ 2.9%		$1,605.00
Total Debt		$ 386,500.00	$ 386,500.00
Total Payment		$4,014.20	$1,524.55

KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

Prime + 1% Lower Rate

$50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

நீங்கள் ஒரு பிறைவேட் மோட்கேஜ் கொடுப்பவரா?

உங்கள் முதலீட்டை மீள பெற சிக்கலாக உள்ளதா?

அப்படியானால் இப்படிப்பட்ட சில சிக்கல்களை எதிர்கொள்கிறீர்களா?

அடமானம் எடுத்தவர்கள் மாதாந்த கட்டுப்பணம் செலுத்த தவறுதல்.

மற்றைய மோட்கேஜ்களுக்கு ஒழுங்காக பணம் செலுத்த தவறுதல்.

வீட்டுக் காப்புறுதி கட்டணம் ஒழுங்காக செலுத்த தவறுதல்.

கொண்டோ காசு, புறப்பட்டி ரக்ஸ் செலுத்த தவறுதல்.

வேறு மோட்கேஜ் கொடுத்தவர்கள் பவர் ஒப் சேல் நோட்டீஸ் அனுப்பி இருப்பது.

அடமானம் பெற்றவர்கள் மீளத்தர முடியாமல் மறுக்கும் நிலைமை.

வருமுன் காப்பதே சிறந்தது

தயா PK கந்தையா BAS, LLB (Hons)

வழக்கறிஞர்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

416-333-1001

(மெசேஜ்சிலை விடுங்கோ, கட்டாயம் திருப்பி உங்களுக்கு போன் அடிப்பேன்)



COURT FILE NO.:

ONTARIO
SUPERIOR COURT OF JUSTICE

BETWEEN:

[redacted] Plaintiff

- AND -

[redacted] Defendant

STATEMENT OF CLAIM (MORTGAGE ACTION - FORECLOSURE)

TO THE DEFENDANTS

A LEGAL PROCEEDING HAS BEEN COMMENCED AGAINST YOU by the Plaintiff. The claim made against you is set out in the following pages.

IF YOU WISH TO DEFEND THIS PROCEEDING, you or an Ontario lawyer acting for you must prepare a statement of defence in Form 18A prescribed by the Rules of Civil Procedure, serve it on the Plaintiff's lawyer or, where the Plaintiff does not have a lawyer, serve it on the Plaintiff, and file it, with proof of service in this court office, WITHIN TWENTY (20) DAYS after this Statement of Claim is served on you, if you are served in Ontario.

If you are served in another province or territory of Canada or in the United States of America, the period for serving and filing your Statement of Defence is 40 days. If you are served outside Canada and the United States of America, the period is 60 days.

SPECIMEN

NOTICE OF SALE UNDER CHARGE

TO: THE PARTIES SHOWN ON SCHEDULE "A" ATTACHED HERETO

TAKE NOTICE that default has been made respecting payments and other covenants under a certain charge of land made between [redacted] as chargor and [redacted] as chargee, on the security of:

[redacted], METROPOLITAN TORONTO CONDOMINIUM [redacted] PT BLK 43 66M2331, PTS 15, 16, 17, 18 & 19 64R15503 AS DESCRIBED IN SCHEDULE "A" OF DECLARATION SB203234 SCARBOROUGH, CITY OF TORONTO

PIN [redacted] Toronto, Ontario

Municipally known as [redacted] M1V 5E3.

and registered in the Land Registry Office for the Land Titles Division of Toronto (No. 80), on the 20th day of December, 2017 as Instrument No. [redacted] (the "Charge").

AND [redacted] hereby gives you notice that the amounts now due on the Charge for principal, interest and costs, are as follows:

Principal Balance	$70,000.00
Interest to October 22, 2019	$6,928.00
Pre-Payment Interest Penalty	$2,598.00
NSF Fee	$1,200.00
Administration Fee	$1,500.00
Statement Preparation Fee	$475.00
Legal Fees and Disbursements to be charged to this matter	$2,500.00
TOTAL	**$85,201.00**

SPECIMEN

(such amount for costs being up to and including the service of this notice only, and thereafter such further costs and disbursements will be charged as may be proper), together with interest at the rate of 13.00% per annum, on the principal, interest and costs hereinbefore mentioned, from May 15, 2019.

AND UNLESS the said sums are paid on or before June 20, 2019, the undersigned shall sell the property covered by the said Charge under the provisions contained in it.

THIS NOTICE is given to you as you appear to have an interest in the charged property and may be entitled to redeem the same.

DATED at Toronto, Ontario on May 14, 2019.

[redacted]
By its solicitors

[redacted]
Barrister & Solicitor

[redacted]

Thaya PK Kandiah BAS, LLB (Hons)
Barrister, Solicitor & Notary Public

KANDIAH LAW

PROFESSIONAL CORPORATION

T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002

Credit Recovery - Mortgage Enforcement - Real Estate Law - Family Law

Legal Advise - Legal Research - Legal Analysis - Legal Referrals - Document Review - Document Drafting

NO MEDICAL
UP TO $500,000

- ✓ $0 first month's premium
- ✓ No medical exams
- ✓ Simple and straightforward
- ✓ 18-80 years can apply

MEDICAL INUSRANCE FOR SUPER VISA

100% REFUND IF VISA DENIED

Sritharan Thurairajah

Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist

Direct: **416.918.9771**

Business: **416.321.2500**

MDRT Member of Million Dollar Round Table

Life100 INSURANCE & INVESTMENTS INC.

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6

Web: www.life100.ca, E-mail: info@life100.ca

La Capitale | iA Financial Group | Canada Protection Plan Simply Peace of Mind

Are you getting Million Dollar advice

- digi Media -

Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available

Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation

Call me more details...

வீட்டுக்கடன்
வியாபாரக்கடன்
முதலீட்டுக்கடன்

வருமான உத்தரவாதம்
இல்லாமலே
பெற்றுக் கொடுக்கப்படும்

கடன் தேவையா?
என்னை அழையுங்கள்
ரம்போ தர்மலிங்கம்

KAPITAL CARE MORTGAGE INC. Lic#13623

Rambo Tharmalingam

Mortgage Agent Licence # M08008479

5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5

647-290-3416 / 416-543-1111

LIFEPLAN INVESTMENTS

Abilan Balachandran, CFP, CLU, CHS, EPC
Founder and CEO

WE CAN HELP BUILD YOUR FUTURE
Insurance • Investments • Tax and Estate Planning
905 294 PLAN (7526) | www.lifeplaninvestments.ca | 416 894 2009
Download Free MyLIFEPLAN App
App Store | Google Play

COURTYARDS
Vaughan நகரில் புதியதோர் பல் வைத்திய நிலையம்

Dr. Annahvathany Sivakumaran, DMD
Dr. வதனி சிவகுமாரன்
Tel: 905-553-5266 | courtyardsdental@gmail.com
அனைத்து காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
All Procedures including:
• Braces • Cosmetic Dentistry • Root Canal Treatment
• Implants • Wisdom Tooth Extraction • Oral Diseases
2396 Major Mackenzie Dr. W., Unit #6, Vaughan,
(Keele & Major Mackenzie) Parking available

Mega Financial Group
உங்கள் அனைத்து விதமான காப்புறுதித் தேவைகளுக்கும்.
Call Now
Raj Nadarajah
President & C.E.O.
416-666-1120
PH28 - 4168 Finch ave. E., Scarborough, ON M1S 5H6

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chari, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
301-111 Grangeway Ave, Toronto, Ontario, M1H 3E9 tel: 416-284-5555

CUSTOM BUILT HOMES COMING SOON
2019 SUMMER CLOSING • DETACHED HOMES
MEADOWVALE RD AND ELLESMERE RD
2 CAR GARAGE • 4 BEDROOMS • 4 WASHROOMS
NO HOMES AT THE BACK • 4 CAR PARKING
30 MINS WALK TO U OF TORONTO SCARBOROUGH
MORE INFO CALL 416-670-6467

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
nandakandasamy@gmail.com

RE/MAX ACE REALTY INC., BROKERAGE

உங்கள் இல்லக் கனவுகளை நிஜமாக்கிட ...
GAJAN
MAHAKANAPATHY
416.999.2777

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Realtorgajan.com
905.239.9222 info@realtorgajan.com

DENTAL CLINIC

Dr. Iru Vijayanathan BDS, MFDS, RCSD
3150 Eglinton Ave E, Unit-5
Scarborough
Markham & Eglinton
416.264.3232
8351 Markham Rd, Unit 129
Scarborough
Markham & Steeles(Red Building)
416.609.2022

Rathiga Thillaivannan BCom
Sales Representative
Buying / Selling/ Leasing/ Investing
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com
Homelife/Future Realty Inc.,Brokerage*
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
205-7 Eastvale Dr, Markham ON. L3S 4N8
*Independently owned And Operated

Kugaraj Ratnasabapathy
Sales Representative
Dir: 416-786-3332
RE/MAX ACE
BROKERAGE
Independently owned and operated
416-270-1111
3-1286 Kennedy Road, Toronto, ON M1P 2L5

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Dir: 416-276-9999
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,
Brokerage* 31 Progress Ave, Suite 210,Toronto ON, M1P 4S6

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
CHANDRAN RASALINGAM CHS
President & CEO

iNFORCE LIFe Financial Services Inc.
10 Milner Business Court, Suite 707
Scarborough, ON M1B 3C6
Dir: 416-909-0400 Bus: 416-321-6000 x400
career@inforcelife.com www.inforcelife.com
QUALITY ADVICE YOU CAN TRUST

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario
Cell: 416 505 8532
Office: 416 321 6969
Fax: 416 321 6963
tharma11@yahoo.com
5215 Finch Ave. E., Suite: 203, Toronto, Ontario

YA Smiles Dental Clinic
DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
7475 MCCOWAN RD, MARKHAM, ON L3S 3J6
WWW.YASMILES.CA

உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான RE/MAX முதல் தடவையாக யாழ் மண்ணில்

RE/MAX NORTH REALTY
077 566 0000
www.remaxnorth.lk
info@remaxnorth.lk
83 Kasthuriyar Road, Jaffna
LATHAN VARATHARAJAH
Broker Owner
+94 76 493 3331
+1 416 230 7007
lathan@remaxnorth.lk